# THANK YOU. ස්තුතියි. நன்றி

ஆண்டறிக்கை 2020/21

PEOPLE'S LEASING
පීපල්ස් ලීසිං | பீப்பள்ஸ் லீசிங்
THE TRUSTED LEADER

# THANK YOU. ස්තූතියි. நன்றி

எமது ஆண்டினை விவரணப் படுத்தும் ஓர் உணர்வுமிக்க சிந்தனை ...... பரவலான எமது வலையமைப்பை உருவாக்கியது மட்டுமல்லாது, தங்கள் நம்பிக்கையையும் எதிர்பார்ப்புகளையும் எங்கள் திறன்கொட கரங்களில் வைத்த பலதரப்பட்டோருக்கு எமது தாழ்மையானதும் உண்மையானதுமான பாராட்டுகளை தெரிக்கின்றோம். எமது பங்குதாரர்களுடன் ஒண்டிணைந்து கடந்த 25 வருடங்களுக்கும் மேலான அற்புதமான நினைவுகளோடு நம் கடந்த ஆண்டினை மீள்நோக்குவதோடு எதிர்வரும் பல தசாப்தங்கள் மற்றும் அதற்கு அப்பால் செல்ல புத்துணர்வும் வலிமையுமாக அவர்களை நம் மதிக்கின்றோம். எமது பயணத்தில் முன்னோக்கிச் செல்லும் நாம் உங்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் மாபெரும் ஆதரவின்றி நாம் பீபிள்ஸ் லீசிங் ஆக இருந்திருக்க மாட்டோம்.

# நாம் உங்களை பாராட்டுகிறோம்

COVID பெருக்கம் உலகத்தையே அசைவிளக்கச் செய்தபோது, எமது பங்குதாரர்கள் தொடர்ந்தும் எம்மீது நம்பிக்கை வைத்து, எங்கள் பயணம் தொடர்வதை உறுதிச் செய்வதன் மூலம் சுடரை பிரகாசமாக ஒளிரவைத்தனர.



ஒரு முக்கிய மைல்க்கல்லான ஆண்டில் எங்களை உற்ச்சாகப்படுத்தும் வகையில், பல இன்னல்களை பொருட்படுத்தாது, தமது நிதி தீர்மானங்களில் பங்காளியாக எம்மை தேர்ந்தெடுத்த நாடு முழுவதிலுள்ள இலங்கைவாழ் மக்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்

ස්තූතියි

THANK YOU



# உங்களுக்கு எமது நன்றிகள்

கடந்த 25 ஆண்டுகளாக எங்கள் கதையின் ஒரு பகுதியாக இருந்த எமது வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் நன்றி செலுத்துகின்றோம். உங்கள் அளவற்ற ஆதரவு, நாம் மேலோங்கிச் செல்வதற்கான படிகளாக அமைந்துள்ளது.



எல்லா மட்டங்களிலிருந்தும், உங்கள் உற்சாகமான நம்பிக்கையை பெறுபவர்களாக நாம் பெருமிதம் அடைவதோடு தொடர்ந்தும் உங்கள் தேவைகளை தடையின்றி நிறைவேற்றும் பிரகாசமான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

# WE ARE GRATEFUL

# THANK YOU



# අපගේ ප්‍රණාමය

எங்கள் மதிப்புக்கள் மற்றும் நெறிமுறை வழிகாட்டுதல்களுக்கு உண்மையாக நடந்துகொள்ளும் அதே சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு நாளும் நாம் மிகச் சிறந்ததை வழங்குவதை உறுதிச் செய்து வளர்ச்சியின் பாதையில் எம்மை இட்டுச்சென்ற எமது பங்குதாரர்கள் அனைவரையும் நாம் பாராட்டுகின்றோம்.



நாடு முழுவதிலுமுள்ள எமது குழு எம் நிறுவனச் சின்னத்தை அதிகமான இலங்கைவாழ் மக்களிடையே கொண்டுசெல்வதில் ஆற்றல்மிக்கதாக செயல்படுகின்றது. எங்கள் வியாபாரத்தின் உயிர்நாடியானது அவர்களின் தைரியமும் அர்ப்பணிப்பும் என்பதை நாம் கௌரவமாக தெரிவிக்கொன்றோம்.



# உங்களுக்கு எமது பாராட்டுக்கள்

# THANK YOU

# உள்ளடக்கம்



9 இந்த அறிக்கை பற்றி
11 எம்மை பற்றி
14 கால் நூற்றாண்டுப் பயணம் ...
16 நிறுவனச் செயல்திறன் முன்னிலைப்படுத்தல்கள்
17 தலைவரின் செய்தி
20 தலைமை நிர்வாகஅதிகாரியின் செய்தி

மதிப்பு உருவாக்கல் மாதிரி
26 மதிப்பு உருவாக்கல் மாதிரி
28 பங்குதாரர் ஈடுபாடு
30 செயற்பாட்டுச் சூழல்
32 COVID-19 க்கான எமது பதிலளிப்பு
34 பொருள்சார் விடயங்களை கண்டறிதல்
38 எமது மூலோபாயங்கள்

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
41 குழுமத்தின் வணிக நிரல் மீளாய்வு
53 நிதி மூலதனம்
59 உற்பத்திச் செய்யப்பட மூலதனம்
63 அறிவுசார் மூலதனம்
70 மனித மூலதனம்
79 சமூக மற்றும் தொடர்பு மூலதனம்
91 இயற்கை மூலதனம்
97 எமது சமூக பொருளாதார தாக்கம்

பொறுப்புத்தன்மை
100 பணிப்பாளர் சபை
104 கூட்டாண்மை முகாமைத்துவம்
108 இணக்கப்பாட்டு அபாய முகாமைத்துவம்
111 கூட்டாண்மை ஆளுமை
139 நிறுவன விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை
144 சபையின் கணக்காய்வு குழுவின் அறிக்கை
146 மனித வள, ஊதிய மற்றும் நியமனக் குழுவின் அறிக்கை
148 தொடர்புடைய தரப்பினர் பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழு அறிக்கை
150 சபையின் ஒன்றிணைக்கப்பட்ட அபாய முகாமைத்துவ குழு அறிக்கை
153 அபாய முகாமைத்துவ மீளாய்வு

நிதி அறிக்கைகள்
163 நிதியியல் நாட்காட்டி
164 நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்கள் பொறுப்பு
165 நிதி அறிக்கை மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த சுயாதீன உத்தரவாத அறிக்கை
166 நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்கள் கூற்று
167 பிரதம நிர்வாக அதிகாரி மற்றும் பிரதம நிதியியல் அதிகாரியின் பொறுப்புகளிலான கூற்று
168 சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
172 நிதி அறிக்கை - உள்ளடக்கம்
173 லாபம் அல்லது நாட்டம் தொடர்பானகூற்று
174 விரிவான வருமான அறிக்கை
175 நிதி நிலைமை கூற்று
176 பங்குடைமை மாற்றங்களின் கூற்று
178 நிதிபாய்ச்சல் அறிக்கை
179 அறிக்கைகள் தொடர்பான குறிப்புகள்

துணை அறிக்கைகள்
309 முதலீட்டாளர் உறவுகள்
317 காலாண்டு மீளாய்வு
319 பத்து ஆண்டு சுருக்கம்
321 இலாப நட்டக் கூற்று அமெரிக்க டொலர்களில்
322 நிதி நிலைமைக் கூற்று அமெரிக்க டொலர்களில்
323 நிலைத்தன்மை அறிக்கை குறித்த சுயாதீன உத்தரவாத அறிக்கை
324 புகஜ உள்ளடக்க அட்டவணை
326 சுருக்கக் குறியீடுகள்
328 விகிதங்களின் அடிப்படை
329 கூட்டாண்மை தகவல்
330 கூட்டம் பற்றிய அறிவித்தல்
333 பதிலாள் படிவம்
335 பதில் கருத்து படிவம்

17
தலைவரின் செய்தி

20
தலைமை நிர்வாக அதிகாரியின் செய்தி

162
நிதி அறிக்கைகள்

# இந்த அறிக்கையை பற்றி



GRI 102-10, 102-12, 102-45, 102-46, 102-48, 102-49 ,102-50, 102-51, 102-52, 102-53, 102-54, 102-56




பீப்பல்ஸ் லீசிங் ரு பைனான்ஸ் பீஎல்சி யின் 8 வது ஆண்டறிக்கையான இவ் அறிக்கையானது 2021 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டின் அதன் செயல்திறன் தொடர்பாக ஒரு சமநிலையான மீளாய்வாகும். இந்த அறிக்கையானது குழுமத்தின் முன்னேற்றம் தொடர்பான முந்தய வெளிக்காட்டான 2020 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த ஆண்டறிக்கையை அடிப்படையில் அதன் கூட்டாண்மை அறிக்கையிடலுக்கான சர்வதேச சிறந்த நடைமுறைகளை தொடர்ந்து பின்பற்றும் வழிமுறையில் ஆக்கப்பட்டுள்ளது.

## தயாரிப்பின் அடிப்படை

### பரப்பெல்லை மற்றும் எல்லைகள்

நிதி அறிக்கையிடல் எல்லையில் கூட்டாக "குழுமம்" என்று அழைக்கப்படும் பீப்பள்ஸ் லீசிங் பிஎல்சி மற்றும் சட்டரீதியான ஆறு நிறுவனங்கள் உள்ளங்குகின்றன.

நிலைத்தன்மை அறிக்கையிடல் எல்லையில் "நிறுவனம்" என்று அழைக்கப்படும் அடிப்படை நிறுவனமான பீப்பள்ஸ் லீசிங் பிஎல்சி இன் செயல்பாடுகள் உள்ளடங்கிக்கின்றன.

### ஒழுங்குவிதி கட்டமைப்புகள் மற்றும் தரணியமங்கள்

- 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டம்
- 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம்
- இலங்கை பட்டாயா கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை நிதி அறிக்கையிடல் தரணியமங்கள்
- பதிவுச் செய்யப்பட்ட நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களுக்கான வழிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்
- கொழும்பு பங்குச் சந்தை பட்டியல் விதிகள்
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய

### தன்னார்வமாக பின்பற்றப்பட்ட கட்டமைப்புகள்

- சர்வதேச ஒண்டிணைந்த அறிக்கையிடல் சபையினால் வழங்கப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் <IR, கட்டமைப்பு
- உலகளாவிய அறிக்கையிடல் முன்முயற்சித் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள ஜிஆர்ஐ (GRI) தரணியமங்கள்
- நிலைத்தன்மை தொடர்பான சிஎஸ்இ (CSE) பரிந்துரைகள்
- இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள கூட்டாண்மை ஆளுமை தொடர்பான நடைமுறை விதிகள்
- ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

இந்த அறிக்கையானது ஜிஆர்ஐ தரணியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது - அடிப்படை தெரிவு.

## உத்தரவாதம்

இலங்கை கணக்காய்வாளர் நாயகத்தினால் நிதி அறிக்கை மீதான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதோடு அவரது அறிக்கை 168 முதல் 171 வரையிலான பக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மை ஆளுமை வழிகாட்டுதலுக்கான நிறுவனத்தின் இணக்கப்பாடு தொடர்பான வெளிப்புற உத்தரவாதத்தையும் அவர் மத்திய வங்கிக்கு வழங்கியுள்ளார். நிதி அறிக்கைகள் மீதான உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று கணக்காய்வாளர் நாயகத்தினால் மீளாய்வுச் செய்யப்பட்டு அது தொடர்பான கருத்துக்கள் 165 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது. GRI தேவைப்பாடுகளுக்கான இணக்கப்பாடு பற்றிய உத்தரவாதம் Ernst & Young நிறுவனத்தினால் வழங்கப்பட்டு அவர்களின் அறிக்கை 323 ஆம் பக்கத்தில் இடப்பட்டுள்ளது.

# இந்த அறிக்கையை பற்றி

### நிலைத்தன்மை தகவல்

இந்த அறிக்கையின் உள்ளடக்கம் நிறுவனத்தில் நிருவப்பட்டுள்ள மனிதவள தகவல் தொகுதி, சுற்றாடல் முகாமைத்துவ கட்டமைப்பு உள்ளடங்கிய முகாமைத்துவ தகவல் தொகுதியில் இருந்து மற்றும் பங்குதாரர்களின் கருத்துக்களை கண்டறிவதற்கான செயல்பாடுகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஒண்டிணைந்த சிந்தனை மற்றும் அறிக்கையிடலை ஊக்குவிக்கும் வகையில், பொருளாக்கமாக கண்டறியப்பட்ட செயல்முறை மற்றும் பொருத்தமான நிலைத்தன்மை முன்முயற்சிகளுக்காக அவற்றை உள்ளீடுகளாக பயன்படுத்தப்பட்டன.

### ஆண்டின் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மற்றும் மீளக் குறிப்பிடுதல்கள்

நிறுவனத்தில் அல்லது அதன் வழங்கள் சங்கிலியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இல்லை மற்றும் அறிக்கையிடலுக்கான காலப்பகுதியினுள் நிதியியல் அல்லது நிலைத்தன்மை தகவல்களில் மீளக்குறிப்பிடுதல்கள் தேவையான குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்படவில்லை.

2019ஃ20 நிதி ஆண்டுவரை பீப்பல்ஸ் லீசிங் பீஎல்சி தமது ஆண்டறிக்கைகளை தயாரிப்பதில் முழுமையான தெரிவாக GRI தரணியமங்களை பயன்படுத்தியது. பல குறிகாட்டிகள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் முடக்குதல் நடவடிக்கைகள் காரணமாக தேவையான தகவல் சேகரிப்பதில் எமக்கு ஏற்பட்ட தடங்கல்களினால் 2019/20 நிதி ஆண்டில் இது நிறுத்தப்பட்டது. இவ் அறிக்கை தயாரிக்கப்படும் காலப்பகுதியிலும் தொற்றுநோயின் மூன்றாம் அலை காரணமாக போக்குவரத்து கட்டுப்பாடுகள் தொடரும் நிலையில் இவ் ஆண்டில் GRI தரணியமங்களை அடிப்படை தெரிவாக மீண்டும் அறிமுகபடுத்தவுள்ளோம்.

### முன்னோக்கிய கூற்றுகள்

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்னோக்கி பார்க்கும் கூற்றுக்கள் உணரப்பட்ட விடயங்கள், கருத்துக்கள் மற்றும் தற்போதைய உள்ளக மற்றும் வெளிப்புற தகவலைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் மாறுபட்ட அளவுகளில் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மைகளைக் கொண்டுள்ளதாகவும் அவை எதிர்கால நிகழ்வுகளோடு தொடர்புடையதால் அவற்றின் துல்லிய தன்மையை நிகழ்ந்த பின்னரே மதிப்பிட முடியுமாகவும் இருந்தாலும், அவற்றை குழுமத்தின் எதிர்கால செயல்திறனை மதிப்பிடுவதற்காக வழங்கப்பட்டுள்ளன. விளைவுகளும் தாக்கங்களும் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும். அறிக்கையிடல் காலப்பகுதியிலும் கூட

COVID-19 தொற்றுநோயின் சமூக பொருளாதார தாக்கங்களினால் மேல்குறிப்பிட்ட சாதாரண நிலைகளை விட நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கப்பட்டுள்ளதோடு தகவல்கள் மிகவும் வலுவற்றதாகவும், நிலையற்றதாகவும் காணப்படுவதனால் இவ் அறிக்கைகளை பயன்படுத்துபவர்கள் தாமாகவே முடிவுகளுக்கு வாழுமாறு அறிவிக்கப்படுகிறது. இவ் ஆண்டறிக்கையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அதிகபட்ச நிலையற்றத்தன்மை காரணமாக அதனை தயாரித்ததவர்களுக்கோ அல்லது பணிப்பாளர் சபையினருக்கோ அத் தகவல்கள் தொடர்பாக எந்தவிதமான இக்கட்டான நிலையோ அல்லது பொறுப்போ ஏற்பட மாட்டாது.

### பதில் கருத்துகள் மற்றும் விசாரணைகள்

உங்கள் கருத்துக்களை நாம் மதிப்பதோடு, ஆரம்பித்திருக்கும் நிதி ஆண்டின் ஆண்டறிக்கையை மேம்படுத்துவதில் அவை பயன்படுத்தப்படும்.ஆண்டறிக்கை தொடர்பான விசாரணைகளுக்கு தயவுச் செய்து பின்வரும் நபரைத் தொடர்பு கொள்ளவும:

பிரதம முகாமையாளர் - நிதி
**பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பிஎல்சி**
இல1161, மரதான வீதி,
கொழும்பு 8, இலங்கை.
**அஞ்சல் குறியீடு:** 00800
**தொலைபேசி:** +94 11 263 1631

### ஏற்றுக்கொள்ளுதல்

இவ் அறிக்கையில் உள்ளடங்கும் சகல தகவல்களும் முகாமைத்துவத்தினால் உள்ளக ரீதியாக மீளாய்வுச் செய்யப்பட்டுள்ளது மற்றும் இவ் அறிக்கையின் "கூட்டாண்மை ஆளுமை" பகுதியில் வழங்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் முறைமைகளுக்கு அமைவாக சுயாதீனமாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

ஆண்டறிக்கை மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் தொடர்பான ஏற்றுக்கொள்ளுதல் பணிப்பாளர்களின் ஆண்டறிக்கையில் உள்ளடங்குகிறது. ஒருங்கிணைந்த அறிக்கையின் நியாயமானத்தன்மை தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்வதோடு 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பீப்பல்ஸ் லீசிங் அண்ட்பைனான்ஸ் பீஎல்சி இன் 2021 ஆண்டின் ஆண்டறிக்கை<IR> கட்டமைப்புக்கு அமைவாக வழங்கப்பட்டுள்ளது என்பது அவர்களின் கருத்தாக அமைகின்றது.

**சுஜீவ ராஜபக்ஷ**
பணிப்பாளர் சபை தலைவர்

**ஷமிந்திர மெர்சலின்**
பிரதம நிறைவேற்று அதிகாரி




This report is available in printed form and online at www.plc.lk

GRI 102-4, 102-16

பீப்பல்ஸ் லீசிங் பீஎல்சி (பீப்பல்ஸ் லீசிங் ஃ நிறுவனம்) இலங்கையின் முன்னணியிலுள்ள வாங்கியல்லாத நிதியியல் நிறுவனமாவதோடு நாட்டின் மிகப்பெரிய அரச வங்கியான மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனமாகும். ஒரு சிறப்பு லீசிங் நிறுவனமாக 1996 இல் செயல்பாடுகளை ஆரம்பித்த பீப்பல்ஸ் லீசிங் நிறுவனம் 2011 ஆம் ஆண்டில் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டது. பீப்பல்ஸ் லீசிங் நிறுவனமானது பன்முகப்படுத்தப்பட்ட வங்கி அல்லாத நிறுவனமாக பங்களாதேஷில் ஒரு துணிகரம் உற்பட ஆறு துணை நிறுவனங்களுடன் வளர்ச்சியணைந்துள்ளது..

# எமது தூரநோக்கு

வாடிக்கையாளர் நட்புறவுமிக்க புத்தாக்கமான மற்றும் முழுமையான தீர்வு வழங்குநராக நிதியியல் சேவைத் துறையில் புகழ்பெற்று விளங்குதல்

# எமது பணி

நிலையான போட்டித்தன்மையின் நன்மைகளை பேணிக்கொள்வதுடன் நிறுவனத்தின் சேவை மிகச் சிறந்த நிலையை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் பேருமதி சேர்க்கப்பட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்குதல்




ரூ. 24.98 பில்லியன்
வட்டி வருமானம்

ரூ. 4.03 பில்லியன்
வரிக்குப் பின் லாபம்

ரூ. 164.55 பில்லியன்
மொத்த சொத்துக்கள்

ரூ. 34.34 பில்லியன்
தேரிய சொத்துக்கள்

ரூ. 20.11 பில்லியன்
சந்தை மூலதனமயமாக்கல்

A+
கண்ணோட்டம் : நிலையானது
தரம்

ரூ. 8.13 பில்லியன்
வர்த்தகச் சின்ன பெறுமதி

## சந்தை பங்களிப்பு

13.39%
வைப்புகள்

13.33%
கடன் மற்றும் முற்பணம்

11.82%
மொத்த சொத்துக்கள்

## தொடர்புடையன

104
கிளைகள்

2,343
ஊழியர்கள்

353,414
வாடிக்கையாளர்கள்

**சிறந்த கூட்டாண்மை குடிமக்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட தோழிகளுக்கான நிவாரணங்கள் பொருளாதார மீளெழுச்சிக்கு பங்களித்தன | தொடர்புகள் துண்டிக்கப்பட்ட ஒரு சந்திப்பதிலும் அத்தியாவசிய சேவையாக தொடர்ந்து செயல்படுதல் | தொடர்ச்சியான ஊழியர் ஈடுபாட்டுடன் பாதுகாப்பான வழிகளில் பணியாற்றுவதை உறுதிச் செய்தல் | இக்கட்டான சூழ்நிலைகளில் சமூகத்தின் எதிர்நோக்கு சக்தியை அதிகரிப்பதற்காக தொடர்ச்சியான முதலீடு செய்தல் | சுற்றுச்சூழல் தாக்கத்தை அளவிட கார்பன் தடம் மெய்நிகர் கண்காணிப்பு |

GRI 102-5

## ஒரு நிதி வலுசக்தி மையம்

பீப்பல்ஸ் லீசிங் ஆரம்பத்திலிருந்தே நிதியியல் ரீதியான உள்ளடங்களை கொண்ட வர்த்தக மாதிரி ஒன்றுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவதுடன் அதன் துணை நிறுவனங்கள் சந்தையின் எதிர்பார்ப்புகளையும் அதே போன்று எமது வியாபார தேவைகளும் பூர்த்திச்செய்யும் தனிப்பட்ட உற்பத்திகளை கொண்டு அந்த அபிலாஷ'களுக்கு ஆதரவு வழங்குகின்றன. இதன் மூலம் எமது தாய் நிறுவனத்தின் உள்நாட்டு பிரதிநிதுத்துவத்தையும் நிதி வலுவையும் தாமாகவே மேம்படுத்துவதற்கான அடித்தளத்தை வழங்குகின்றது.




| துணை நிறுவனம் | பீப்பல்ஸ் இன்சுவரன்ஸ் பி.எல்.சி. | பீப்பல்ஸ் மைக்ரோ-காமர்ஸ் லிமிடெட். | பீப்பல்ஸ் லீசிங் ஃப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிடெட். | பீப்பல்ஸ் லீசிங் ப்ரோபெர்டி மேனேஜ்மென்ட் லிமிடெட். | பீப்பிள்ஸ் லீசிங் ஹேவ்லாக் ப்ரோபெர்டீஸ் லிமிடெட். | லங்கன் எலயன்ஸ் ஃபைனான்ஸ் லிமிடெட். |
|---|---|---|---|---|---|---|
| உரிமம் | 75% | 100% | 100% | 100% | 100% | 51% |
| முதன்மை செயல்பாடுகள் | பொது காப்புறுதி சேவைகளை வழங்குதல் | பாரம்பரிய வங்கிகள் மற்றும் நுண் நிறுவனங்களுக்கு அணுகல் இல்லாத நபர்களுக்கு வங்கி சாராத நிதி சேவைகளை வழங்குதல் | வாகன முகாமைத்துவம், வாகன மதிப்பீடு, வாகன விற்பனை, காப்புறுதி மதிப்பீடு மற்றும் வாகன பழுது பார்த்தல் | கலப்பு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வது | அலுவலக தொகுதியொன்றை நடத்திச் செல்லுதல் | அசையும் மற்றும் அசையாச் சொத்துகளுக்கு குத்தகை மற்றும் கடன் வசதிகள் வழங்குதல் |
| இணைக்கப்பட்ட நாடு | ளுசை டுயமெய | ளுசை டுயமெய | ளுசை டுயமெய | ளுசை டுயமெய | ளுசை டுயமெய | பங்காளதேசம் |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 624 | 188 | 104 | 7 | 2 | 36 |
| வரிக்கு பின் இலாபத்துக்கான பங்களிப்பு | 21.5% | 2.4% | 0.7% | 0.6% | 2.7% | 0.1% |
| பிரிவின் சொத்துக்கள் | ரூ.11,133.86 மில்லியன் | ரூ. 2,684.03 மில்லியன் | ரூ. 443.77 மில்லியன் | ரூ. 2,601.21 மில்லியன் | ரூ. 2,660. 04 மில்லியன் | ரூ. 6,327.94 மில்லியன் |

10

# OUR CORPORATE GUIDING PRINCIPLES AS A PURPOSEFUL BUSINESS

## යහපත් ව්‍යාපාර අරමුණු සහිත ආයතනික පුරවැසියකු වශයෙන් අපගේ ආයතනික නියාමන මූලධර්ම

## நன்னோக்கம் கொண்ட வியாபாரம் தொடர்பான எமது நிறுவன வழிகாட்டுதல் கோட்பாடுகள்

1 **Our purpose is to promote financial inclusivity, and to provide advisory solutions to empower businesses and support livelihoods, including those of small and medium entrepreneurs.**

**අපගේ ව්‍යාපාරයේ මුඛ්‍ය අරමුණ වන්නේ සුළු හා මධ්‍ය පරිමාණ ව්‍යවසායකයින්ගේ ව්‍යාපාර සහ ජීවනෝපායන් සවිබල ගැන්වීම සඳහා අවශ්‍ය පූර්ණ මූල්‍ය සේවා සහ මූල්‍ය උපදේශණ සේවා ලබා දීමයි.**

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உள்ளிட்ட வியாபாரங்கள் மற்றும் வாழ்வாதாரத் தொழில்களுக்கு வலுவூட்டுவதற்காக விரிவான நிதிச் சேவைகளையும் ஆலோசனைச் சேவைகளையும் வழங்குவதே எமது நிறுவனத்தின் பிரதான “நோக்கம்” ஆகும்.

2 **We have an inclusive governance system that safeguards transparency and accountability as we deliver on our purpose.**

**අපගේ එම ව්‍යාපාර අරමුණ සාක්ෂාත් කිරීම සඳහා විනිවිදභාවය සහ වගවීම ආරක්ෂා කරන ආයතනික යහපාලනයක් අප සතුව ඇත.**

இந்த வியாபார நோக்கத்தை அடைவதற்காக, வெளிப்படைத் தன்மை மற்றும் பதில் சொல்லும் பொறுப்பைப் பாதுகாக்கும் வகையில் அனைத்தையும் உள்ளடக்கும் சிறந்த ஆளுகை முறையை எமது நிறுவனம் கொண்டுள்ளது.

3 **We are committed to achieving our purpose by providing responsible, ethical and inclusive financial solutions, and by ensuring equitable returns to our stakeholders.**

**අපගේ පාර්ශවකරුවන් හට සාධාරණ වූ ප්‍රතිලාභ සහතික කරමින් ව්‍යාපාර ආචාරධර්ම වලට අනුකූලව සහ වගකීම්සහගතව පූර්ණ මූල්‍ය විසඳුම් ලබා දෙමින් අපි අපගේ ව්‍යාපාර අරමුණ සඳහා කැපවී සිටින්නෙමු.**

எமது பங்காளிகளுக்கு நியாயமான பிரதிபலன்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பொறுப்புணர்வுள்ள, நெறிமுறையான மற்றும் உள்ளடக்கும் நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் எமது நோக்கத்தை அடைவதில் நாம் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம்.

4 **Economic viability, environmental responsibility and social accountability stand as the core values inherent in all our business operations.**

**ආර්ථික ශක්‍යතාවය, පාරිසරික වගකීම සහ සමාජ වගවීම අපගේ ව්‍යාපාර අරමුණ සක්‍රීය කරන මූලික වටිනාකම් වේ.**

பொருளாதாரச் சாத்தியத் தன்மை, சூழல் ரீதியான பொறுப்புணர்வு, சமூக ரீதியான பதில் சொல்லும் பொறுப்பு என்பனவே எமது வியாபாரச் செயற்பாடுகளை நெறிப்படுத்தும் அடிப்படை விழுமியங்களாகும்.

5 **We ensure that our core values are embedded into our management processes, contributing towards a culture of good corporate citizenship.**

**අපගේ මූලික වටිනාකම් කළමනාකරණ ක්‍රියාවලීන් තුළට අන්තර්ග්‍රහණය කරමින් යහපත් ආයතනික පුරවැසිභාවයක් සහිත ආයතනික සංස්කෘතියක් අපි සහතික කරමු.**

சிறந்த நிறுவனப் பிரஜை என்ற கலாசாரத்தை நோக்கிய எமது முகாமைத்துவ நடைமுறைகளில் எமது அடிப்படை விழுமியங்கள் உள்ளடங்கியிருப்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

6 **We strive to minimize our impact on the environment through sustainable resource optimization and responsible lending.**

**තිරසාර සම්පත් ප්‍රශස්ථකරණයෙන් සහ වගකීම්සහගත මූල්‍ය සේවා ලබා දීම තුළින් අපි පරිසරයට අපෙන් සිදුවන බලපෑම අවම කිරීමට කටයුතු කරමු.**

மூலவளங்களின் நிலைபெறு தன்மையுள்ள உபயோகம் மற்றும் பொறுப்புணர்வுள்ள கடன் வழங்கல் மூலம் சுற்றாடல் மீதான எமது தாக்கத்தை இயன்றளவு குறைக்க நாம் முயற்சி செய்கின்றோம்.

7 **We secure our social license to operate by responding to stakeholder concerns identified through year round effective stakeholder engagement.**

**වසර පුරා අපගේ පාර්ශවකරුවන්ගේ ගැටලු සඳහා ප්‍රතිචාර දක්වමින් අපගේ සමාජ බලපත්‍රය අපි තහවුරු කර ගන්නෙමු.**

ஆண்டு முழுவதும் எமது பங்காளிகளுடன் பயன்முனைப்பான தொடர்புகளைப் பேணி, அவர்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுப்பதன் மூலம் செயற்படுவதற்கான எமது சமூக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்கின்றோம்.

8 **We build our staff capacity, including digital literacy, to ensure that they deliver a superior service experience.**

**ඩිජිටල් සාක්ෂරතාවය සමඟින් උසස් සේවා අත්දැකීමක් තහවුරු කිරීම සඳහා නිරතුරුව අප අපගේ කාර්ය මණ්ඩලයේ ධාරිතාවය ඉහළ නංවන්නෙමු.**

எமது அலுவலர்கள் உன்னதமான சேவை அனுபவத்தை வழங்குவதற்கு உதவும் பொருட்டு நாம் அவர்களின் டிஜிட்டல் தொழில்நுட்ப அறிவு உள்ளிட்ட ஆற்றலைக் கட்டியெழுப்புகின்றோம்.

9 **We celebrate our purposeful business growth by evaluating individual and team contributions of our employees in meeting our purposefully defined business targets.**

**අපගේ ව්‍යාපාර අරමුණට අනුකූලව අර්ථ දක්වා ඇති ව්‍යාපාරික ඉලක්ක සපුරා ගැනීම සඳහා අපගේ කාර්ය මණ්ඩලයේ පුද්ගල සහ කණ්ඩායම් දායකත්වය සාධාරණ ලෙස අගයමින් ඔවුන් හා එක්ව සමරන්නෙමු.**

நன்னோக்கத்துடன் நிர்ணயிக்கப்பட்ட எமது வியாபார இலக்குகளை அடைவதற்கு எமது ஊழியர்கள் தனித்தனியாகவும் அணியாகவும் வழங்கும் பங்களிப்பை நியாயமான முறையில் மதிப்பீடு செய்வதன் மூலம் நாம் எமது நன்னோக்க வியாபாரத்தின் வளர்ச்சியைக் கொண்டாடுகின்றோம்.

10 **We support the advancement of national and global frameworks that promote sustainable development.**

**තිරසාර සංවර්ධනය ප්‍රවර්ධනය කරන ජාතික හා ගෝලීය රාමුවල ප්‍රගමනයට අපි සහය ලබා දෙන්නෙමු.**

நிலைபெறு தன்மையுள்ள அபிவிருத்தியை ஊக்குவிக்கும் தேசிய மற்றும் உலகளாவிய கட்டமைப்புகளின் முன்னேற்றத்திற்கு நாம் உதவுகின்றோம்.

Shamindra Marcelline
Chief Executive Officer / General Manager

# ஒரு கால்நூற்றாண்டு பயணம்...



நம்பகமான முதலீட்டாளர்கள், திருப்திகரமான வாடிக்கையாளர்கள், உற்சாகமுள்ள ஊழியர்கள், திருப்திகரமான வியாபார பங்காளர்கள், கட்டுப்பாட்டாளர்களுடனான நல்லுறவு மற்றும் சமூகத்தின் மீதும் சுற்றாடல் மீதுமான நேர்மறையான தாக்கம் என்பவற்றினால் நிதிச் சேவைகள் வழங்குவதில் கடந்த இரண்டு தசாப்தங்களாக நாம் பங்குதாரராகள் மீது நாம் ஏற்படுத்திய உண்மையான தாக்கம் தெளிவாகுகின்றது.

**1995**
தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பெனியாக பதிவுச் செய்யப்பட்டது

**1997/98**
லட்சிய வளர்ச்சித் திட்டங்களின் முதல் படியாக கண்டியில் முதல் கிளை ஆரம்பிக்கப்பட்டது

**2007/08**
மக்கள் வங்கி கிளைகளில் ஜன்னல் அலுவலக தனித்துவமான எண்ணக்கரு செயற்படுத்தப்பட்டது



**1996**
மக்கள் வங்கியின் முழு உரித்துடன் துணை நிறுவனமாக 31 மே 1996 அன்று வியாபார நடவடிக்கைகளைத் ஆரம்பித்தல்

3 பணியாளர் கிளை

வலையமைப்பு - **கிளைகள் இல்லை**

மொத்த பங்கு - **ரூ. 10 மில்லியன்**

வைப்பு - **ஏற்றுக்கொள்ளப்படவில்லை**

பல்வகைப்படுத்தல் - **எந்த துணை நிறுவனங்களும் இல்லை**

தயாரிப்பு வரம்பு - **லீசிங் மற்றும் ஹயர் பார்ச்சஸ் மாத்திரம்**

**2002/03**
செயல்பாடுகளை ஆரம்பித்து ஏழு ஆண்டு காலப்பகுதிக்குள் லீசிங் துறையின் சந்தை தலைவராகுதல்

**2008/09**
புதிய வணிக முயற்சிகளில் பன்முகப்படுத்தப்பட்டு, பீப்பிள்ஸ் லீசிங் ஃப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிடெட் மற்றும் பீப்பிள்ஸ் லீசிங் ப்ரொபேர்ட்டி மேனேஜ்மேண்ட் லிமிடெட் என இரண்டு துணை நிறுவனங்களை நிறுவுதல்

## சுமூகத்தீற்குர்னு ஏமுது புஞ்குளீப்பு

115,119 பேருந்துகளை வழங்குவதன் மூலம் போக்குவரத்து வலையமைப்பை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு.

113,099 லாரிகளை வழங்குவதன் மூலம் நம்பிக்கையின் உயிர்நாடியை ஏற்படுத்தல்

115,119 முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சாதனை

207,847 புதிய வாகன உரிமையாளர்களை உருவாக்கிய பெருமை

## புயுணும் முழுவுதுமுர்னு முக்தீயு வீருதுகுளு முற்றும் புர்ருர்டுடுகுளு

### சிஎஸ்ஆர்

- சிறந்த கூட்டாண்மை குடிமக்கள் நிலைத்தன்மை விருதுகள் - 2012, 2014 - முதல் 2019 ஆகிய 7 ஆண்டுகளில் இலங்கை வர்த்தக சம்மேளனம் வழங்கும் பத்து சிறந்த கார்ப்பரேட் குடிமக்கள் விருதுகளில் ஒன்று
- 2015 (சிறப்பு), 2016 (வெள்ளி), 2017 (சிறப்பு) இயான்டியாஸ் அபேசிங்க ஞாபகார்த்த JASTECA சிஎஸ்ஆர்ஃ நிலைத்தன்மை விருது

### வர்த்தகச்சின்ன அந்தஸ்து

- SLIM நீல்சன் - ஆண்டின் சிறந்த நிதிச் சேவை வழங்குநர் - 2012/13 முதல் 2015/16 வரை நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக
- Business Today - சிறந்த 30 பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை நிறுவனங்கள் - 20 நிறுவனங்களுக்கிடையே 2013/14 முதல் இன்றுவரை முதல்
- Brands Annual - நிதி துறையில்/ குத்தகை துறையில் மிகவும் மதிப்புமிக்க நுகர்வோர் சின்னம் மற்றும் மிகவும் விரும்பப்பட்ட சின்னம் - 3 ஆண்டுகள்

### இணக்கப்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மை

- இலங்கையில் பட்டியலிடப்பட்ட முதல் 50 நிறுவனங்களை மதிப்பிடும் ட்ரான்ஸ்பரன்சி கார்ப்பரேட் ரிப்போர்டிங் (TRAC) தரப்படுத்தலில் 03 ஆம் இடம்.
- STING கன்சல்டன்ட்ஸ் இன் கூட்டாண்மை பொறுப்புக்கூறல் மதிப்பீடு - 2009 (தங்கம்), 2010 (வெள்ளி), 2011-2018 (தங்கம்) வகைப்படுத்தல

### கூட்டாண்மை அறிக்கையிடல்

- 2013/14 ஆண்டறிக்கையானது CA Sri Lanka ஆண்டறிக்கை விருதுகளில் ஒட்டுமொத்த நிதி அறிக்கைக்கான வெள்ளி விருதை வென்றது
- CA Sri Lanka ஆண்டறிக்கை விருதுகளில் 2008/09 முதல் 2016/17 வரை தொடர்ச்சியாக ஒன்பது ஆண்டுகளாக துறைக்கான தங்க விருதை வென்றது
- 2016/17 ஆண்டறிக்கையானது இலங்கையின் சிறந்த ஆண்டறிக்கைக்கான கிராண்ட் விருதை வென்றது (31 ஆவது சர்வதேச Arc விருதுகள்)
- CMA Sri Lanka மிகச் சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகளில் ஆண்டறிக்கை 2016/17 மற்றும் 2017/18 லீசிங் மற்றும் நிதி துறைக்கான முறையே ஒட்டுமொத்த மூன்றாம் இடத்தை மற்றும் தங்க பதக்கத்தை வென்றது

### மனிதவளம்

- நிறுவனம் இலங்கையின் சிறந்த பணியளிப்பவர் சின்னங்களுக்கான விருதுகள் 2017 இல் உலக மனிதவள மேம்பாட்டு காங்கிரஸ் மற்றும் பணியளிப்பவர்களின் வர்த்தக நிறுவனத்தால் இலங்கையின் சிறந்த பணியளிப்பவர் சின்னங்களில் ஒன்றாக தெரிவுச்செய்யப்பட்டது
- SLITAD (இலங்கை) இல் மனிதவள பிரிவு தங்க பதக்கத்தை வென்றது

## 2009/2010

பன்முகப்படுத்தப்பட்ட நிதி சேவை வழங்குநராக நிறுவனத்தின் நிலையை ஒருங்கிணைக்கப்பட்டு பீப்பல்ஸ் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனம் முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமாக உருவாக்கப்பட்டது

## 2011/12

பணச் சந்தை வரலாற்றில் இரண்டாவது மிகப்பெரிய ஆரம்ப பங்கு விற்பனையின் மூலம் கொழும்பு பங்குச் சந்தையின் பிரதான பலகையில் பட்டியலிடப்பட்டது

## 2012/13

2011 ஆம் யயனௌை 42 ஆம் இலக்க நிதித் தொழில்ச் சட்டத்தின் கீழ் நிதித தொழில் மேற்கொள்வதற்கான அனுமதி பத்திரம் பெற்றது

## 2013/14

அதன் துணை நிறுவனமான பீப்பல்ஸ் பைனான்ஸ் பிஎல்சி உடனான அதன் ஒன்றுசேர்த்தலை வெற்றிகரமாக நிறைவேற்றல்

## 2015/16

கடன்கள் மற்றும் வருமதிகள் தொகை ரூ .100 பில்லியன் எல்லையை தாண்டியது

## 2016/17

20 வது ஆண்டுவிழா கொண்டாட்டம் ஃ பங்களாதேசில் ஒரு துணிகரத்திற்கான அடிப்படை வேலைகளைத் ஆரம்பித்தல் ஃ100 வது கிளையை நிறுவுதல்

## 2017/18

"பிஎல்சி ஆன் லைன் ஆப்" மற்றும் பங்களாதேசத்தில் செயல்பாடுகளை ஆரம்பித்தல்

## 2021

2,343 ஊழியர்கள்

கிளை வலையமைப்பு - 104 கிளைகள் மற்றும் 99 சேவை நிலையங்கள்

மொத்த பங்கு - ரூ.34,341 மில்லியன்

வைப்புத்தொகை - டேகுஜ (வங்கி அல்லாத நிதி நிறுவன துறையில்) மிகப்பெரிய வைப்புத் தொகை - ரூ.101,503 மில்லியன்

பல்வகைப்படுத்தல் - 6 துணை நிறுவனங்கள் (பொது மேற்கோள் நிறுவனம் மற்றும் வெளிநாட்டு துணை நிறுவனம் உட்பட)

தயாரிப்பு வரம்பு - கடன் வழங்கும் தயாரிப்புகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது
நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு
இஸ்லாமிய கடன் கருவிகள்
இஸ்லாமிய வைப்பு கருவிகள்

மொத்த கடன் மற்றும் முட்பன தொகை ரூ.141,388 மில்லியன்



விவசாய குடும்பங்களை சார்ந்த 15,786 பேரின் வாழ்க்கையை வளமூட்டுதல்

### தகவல் தொழில்நுட்பம்

- APICTA 2017 இல் "செல்ப் இ கே'" தயாரிப்பு நிதி தொழில் பிரிவில் தங்க பதக்கத்தை வென்றது. இந்த விருதை வென்ற ஒரே நிதி நிறுவனம் பீப்பிள்ஸ் லீசிங் ஆகும்
- 6 அக்டோபர் 2017 அன்று நடைபெற்ற 19 வது தேசிய சிறந்த தரமான மென்பொருள் விருதுகள் (டேஞுளுயு) 2017 இல் பீப்பிள்ஸ் லீசிங் தகவல் தெடர்பாடல் தொழில்நுட்ப குழு இரண்டு விருதுகளைப் வென்றது.
  - "விளிம்பு வர்த்தக முறைமை" க்கான நிதி தொழில் மென்பொருளுக்கான ஒரு சிறப்பு விருது
  - "ஞநடக ந ஊயளா" உள்ளக - மென்பொருளுக்கான தங்க விருது

**குறிப்பு:** பீப்பிள்ஸ் லீசிங் தனது 25 ஆண்டுகால கூட்டாண்மை பயணத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் பல விருதுகளையும் பாராட்டுகளையும் வென்றுள்ளது, அவற்றில் சில முக்கிய விருதுகள் மாத்திரமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

# செயற்திறன் முன்னிலைப்படுத்தல்கள்

GRI 102-7

| | 2020/21 | 2019/20 | 2018/19 |
|---|---|---|---|
| **நிதி மூலதனம்** | | | |
| தேறிய வட்டி வருவாய்(ரூ. பில்லியன்) | **11.92** | 15.67 | 15.19 |
| வரிக்கு பிந்திய இலாபம் (ரூ. பில்லியன்) | **4.03** | 2.94 | 4.42 |
| குறைபாடு கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் (ரூ. பில்லியன்) | **1.14** | 4.75 | 1.95 |
| மொத்த சொத்துக்கள் (ரூ. பில்லியன்) | **164.55** | 171.66 | 172.54 |
| பங்குதாரர்களின் நிதி (ரூ. பில்லியன்) | **34.34** | 30.25 | 28.60 |
| வைப்புகள் (ரூ. பில்லியன்) | **101.50** | 106.70 | 88.37 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் (ரூ. பில்லியன்)) | **141.39** | 147.75 | 151.71 |
| சந்தை மூலதனமயப்படுத்தல் (ரூ. பில்லியன்) | **20.11** | 19.86 | 21.17 |
| ஒரு பங்குக்கான தெரியச் சொத்துக்கள் (ரூ.) | **20.15** | 18.58 | 18.10 |
| ஒரு பங்குக்கான இறுதிச் சந்தை விலை (ரூ.) | **11.80** | 12.20 | 13.40 |
| பங்குலாபம் செலுத்திய விகிதம் (மூ) | **24.22** | 65.57 | 44.72 |
| **தயாரிக்கப்பட்ட மூலதனம்** | | | |
| கிளைகள் (எண்ணிக்கை) | **104** | 103 | 103 |
| சேவை நிலையங்கள் (எண்ணிக்கை) | **99** | 101 | 101 |
| **அறிவுசார் மூலதனம்** | | | |
| வர்த்தகச் சின்ன பெறுமதி (சுள.டிடைடழைடெ) | **8.13** | 8.79 | 8.72 |
| தொட்டுணர முடியாதச் சொத்துக்கள்(சுள.அடைடழைடெ) | **146.45** | 257.58 | 324.91 |
| ஊழியர்களின் ஒட்டுமொத்த சேவை (ஆண்டுகள்) | **Over 17,000** | Over 15,000 | Over 13,000 |
| **மனித மூலதனம்** | | | |
| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | **2,343** | 2,401 | 2,329 |
| தங்கியிருக்கும் விகிதம் (மூ) | **93.80** | 90.82 | 88.90 |
| புதிதாக ஆள்சேர்ப்புக்கள் எண்ணிக்கை | **81** | 334 | 492 |
| **சமூக மற்றும் உறவுகள் மூலதனம்** | | | |
| கடன் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை | **117,773** | 126,715 | 121,129 |
| வைப்பு வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை | **291,319** | 282,944 | 248,587 |
| மீண்டும் வரும் வாடிக்கையாளர்கள் (மூ) | **29.92** | 44.22 | 43.47 |
| வாகன வழங்குநர்கள் (எண்ணிக்கை) | **31,665** | 32,406 | 28,661 |
| பெற்றுக்கொண்ட வாகன வழங்குநர்கள் மொத்த பெறுமதி (ரூ. பில்லியன்) | **51.09** | 60.62 | 66.80 |
| உள்ளூர் சமூகங்களில் முதலீடுகள் (ரூ. மில்லியன்) | **20.38** | 55.53 | 120.29 |
| சமூக பொறுப்புணர்வு முயற்சிகளின் எல்லைகள் (எண்ணிக்கை) | **63** | 79 | 155 |
| **இயற்கை மூலதனம்** | | | |
| பயிற்சியளிக்கப்பட்ட புதிய ஊழியர்கள் | **316** | 334 | 492 |
| கார்பன் அடிச்சுவடு ($tCO_2e$) | **3,833.50** | 5,836.46 | 5,337.96 |
| பசுமைக் கடன் தொகை (ரூ. பில்லியன்) | **1.17** | 1.87 | 5.48 |
| சுற்றுடல் முன்முயற்சிகள் (எண்ணிக்கை) | **6** | 12 | 31 |
| இயற்கை சூழல் மீதான முதலீடுகள் (ரூ. மில்லியன்) | **2.77** | 3.32 | 1.94 |

# தலைவரின் செய்தி



GRI 102-14

அன்புள்ள பங்குதாரர்களேஇ

பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் நிறுவனத்தினால் முன்நிகழ்ந்திராதவாறு தமது வாடிக்கையாளர்களுக்கு சலுகைகள் வழங்கிய ஒரு ஆண்டினை கடந்து வந்துள்ளதோடு 2021 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டினுள் ரூ.5,596.33 மில்லியன் இலாபத்தை ஈட்டி குழுமத்தின் வரலாற்றில் அதிகூடிய இலாபத்தை ஈட்டிய சவாலை வென்றது. பங்குதாரர்களின் வர்த்தக சூழல் தொடர்பான மூலோபாய மறுசீரமைத்தல்களை அடித்தளமாகக் கொண்ட ஒரு நோக்கு கணிக்கப்படாத ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தொற்றுநோய் நிலைமையின் ஆரம்பக் கட்டத்திலேயே தமது வாடிக்கையாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கும் ஆதரவளிக்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உறுதிப்படுத்தி ஆண்டினுள் முகச் சிறந்த செயல்திறனை அடைவதற்க்கும் மூலகாரணி இதுவேயாகும்..

## ஒரு இயல்பான நிலை இல்லாமை

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பாதிப்புகளிலிருந்து நாடு இன்னமும் மீண்டு வரும் ஒரு நிலையில், COVID-19 தொற்றுநோயின் காரணமாக நாடு முழுவதும் முடக்குதல் அமுலிலுள்ள காலப்பகுதியிலேயே இந்த நிதியாண்டு ஆரம்பித்தது. பயணிகள் போக்குவரத்து செயல்பாடுகளுக்கு திடீரென்று நீடித்த தடை ஏற்பட்டதோடு, மூன்றாம் அலை காரணமாக அந்நிலைமை இதனை எழுதும் சந்தர்ப்பத்திலும் தொடர்கின்றது. என்றுமில்லாதவாறு அமுல்படுத்தப்பட்ட எல்லை மூடல்களினால் நாட்டின் முக்கிய அந்நிய செலாவணி மூலமான சுற்றுலாத்துறை கடுமையாக பாதிக்கப்பட்டதோடு குறிப்பிடத்தக்க அளவில் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளும் பாதிக்கப்பட்டன. தொற்றுநோய் பரவுதலை கட்டுப்படுத்துவதற்காக உலகெங்கும் மக்கள் சமூக இடைவெளியினை பேணும் ஒரு வாழ்க்கைமுறையை பின்பற்ற ஆரம்பித்ததனால் ஒரே இரவில் ஆன்லைன் வேலை, கற்றல் மற்றும் சமூகமயமாக்குதல் வழக்கமாகிவிட்டது. இலங்கையின் அதிகமான தொழிலாளர்கள் தினசரி சம்பளம் பெறும் நிலையற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆவதால், இந்த நிலை அதிகளவிலான குடும்பங்களின் பொருளாதார இன்னல்களுக்கு காரணமாகியது. சாதாரண வேலைவாய்ப்பு துறைகளிலும்கூட ஆட்குறைப்பு மற்றும் சம்பள குறைப்புகளை நாமும் காணக்கூடியதாக இருந்தது.

இந்த தீவிர நிச்சயமற்ற தன்மையுடன் கூடிய காலகட்டத்தில் அரசாங்கத்தின் இசைவுபடுதல் நிலைப்பாடு தொழில்களுக்கு ஆறுதலளித்தது. பாதிக்கப்பட்ட தொழில்த்துறைகளுக்கு வங்கித் துறை மூலம் விரிவான கடன் பிற்போடுதல வசதிகள் வழங்கப்பட்டதோடு ஆண்டுக்கான தொடர்ச்சியான நிதி பாய்ச்சலுக்கு வசதியளிப்பதற்க்க கொள்கை விகிதங்கள் கீழ்நோக்கி நிறுத்தப்பட்டன. வர்த்தகத்தில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் கட்டண பற்றாக்குறை என்பவற்றை முகாமைத்துவம் செய்வதற்காக இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இது மாறுபட்ட அளவுகளில் நேர்மறை மற்றும் எதிர்மறை தாக்கங்களை கொண்டிருந்தாலும் உள்நாட்டு துறை உற்பத்தியாளர்கள் ஒட்டுமொத்தமாக பயன்பெற்றனர். தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டிலும் வாகன இறக்குமதிகள் குறைவடைந்ததனால் குழுமத்தின் லீசிங் தொகுதி வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்பட்டது. ஒரு நேர்மறை குறிப்பாக, 2020 ஆம் ஆண்டு 3 ஆவது காலாண்டில் பொதுத் தேர்தல் மூலம் ஏற்பட்ட அரசியல் நிலைத்தன்மை 2 ஆவது காலாண்டில் ஏற்பட்ட வீழ்ச்சியை தாண்டி ஒரு நேர்மறையான பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாகியது. இலக்குப்படுத்திய கொள்கை எல்லைகளோடு பணவீக்கமும் இவ் ஆண்டில் அதே நிலையில் இருந்தது.

## செயல்திறனை சீரமைத்தல்

ஆரம்பத்தில் இருந்தே நாம் வியத்தகு முறையில் மாறுபட்டதொரு செயல்பாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றதாக எமது மூலோபாய இலக்குகளை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தோம். பங்குதாரர்களின் உடனடி தேவைகளை பூர்த்திச் செய்தல், நெகிழ்வுத்தன்மை மற்றும் பனப்பாய்ச்சல் முகாமைத்துவம் ஆகியவை முக்கிய கட்டாயங்களாக இருந்ததோடு அதற்கேற்ப எமது வளங்களை மீளொழுங்குச் செய்ய வேண்டியிருந்தது. எமது ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிச் செய்யும் அதே நேரம் வாடிக்கையாளர்களின் பண தேவைகளை பூர்த்திச் செய்வதற்காக முடக்கல் காலத்திலும் தொடர்ந்து செயல்படும் தேவை ஏற்பட்டது..

பணியிடத்தின், எமது ஊழியர்களின் மற்றும் அவர்கள் குடும்பங்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, ஒரு முக்கிய முன்னுரிமை தேவையானதோடு சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டலுங் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட வியாபார துறைகளில் ஏற்பட்ட வேலை இழப்புகள், சம்பளக்குறப்புகள் போன்றவற்றை செயல்படுத்தியதன் காரணமாக எமது சபையினால் ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் வாழ்வாதார கவலைகளை போக்குதல் போன்றவற்றுக்கான வாக்குறுதியை வழங்கியதோடு எமது இந்த மக்கள் மூலோபாயமே எமது வெற்றிக்கு முக்கிய காரணியாகியது. எமது ஊழியர் குழுவினரின் விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் வென்று வாடிக்கையாளர்கள், பங்குடமையாளர்கள் போன்ற எமது வெளிப்புற பங்குதாரர்களுக்கு மதிப்பினை வழங்க இதுவே முக்கிய காரணியாக அமைந்தது என்பது உறுதியாகுகின்றது..

பீப்பல்ஸ் லீசிங் மூலம் கடன் பிற்போடுதலகளுக்கான 57,000 வாடிக்கையாளர் விண்ணப்பங்களை செயல்முறைப்படுத்தியதோடு அவற்றினால் எமது கடன் தொகுதிக்கு ஏற்பட்ட பாதிப்பு ரூ.67.96 பில்லின் ஆகும். அதற்க்கு மேளதிகமாக வாடிக்கையாளர்களின் நிதியியல் நெரிசல்களை கவனமாக நோக்கி பீப்பல்ஸ் லீசிங் மூலம் இரண்டாம் கட்டத்தில் ரூ.25.36 பில்லியன் பெறுமதியான 15,722 கடன் வசதிகளுக்காக மேலும் பிற்போடுதல சலுகைகள் வழங்கப்பட்டது. அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு மீட்டுவருவதற்காக போதிய காலத்தை வழங்கும் நோக்கத்தில் மீளச்செலுத்த தவறிய கடன் வட்டி தொகைகளை தள்ளுபடி செய்வதை ஆறு மாதத்திலிந்து ஒன்பது மாதம் வரை நீடிக்க பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியது. இந்த தீர்மானத்தினை மீளச் செலுத்த படத்தை வட்டி தொகை 70.77மூ விகிதத்தினால் குறைவடைந்ததோடு மீளச் செலுத்த தவறிய கடன்களின் விகிதம் துறைசார் வழக்கத்திற்கு கீழ் தங்கியிருந்தது.

வீட்டிலிருந்து பணியாற்றுதல் பல்வேறு மட்டங்களில் ஒரே தீர்வாக மாறியதால் தொழில்நுட்ப மாற்றங்களுக்காக வளங்களை ஈடுபடுத்துவது அவசர தேவையாகியது. அதி முக்கியமான விடயங்களை கலந்துரையாடுவதற்கான கூட்டங்களை பாதுகாப்பான மெய்நிகர் தலங்களுக்கு தேவைகள் ஏற்பட்டன. வீட்டிலிருந்து பணிபுரியும் முயற்சிகளின்போது நிறுவனத்தின் தகவல்துறை வளங்களையும் தொகுதிகளையும் பாதுகாக்க சைபர் பாதுகாப்பினை விரிப்படுத்தும் தேவையும் எமக்கு ஏற்பட்டது. மக்கள் வங்கியின் பண வைப்பு இயந்திரங்கள் மூலம் பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்திற்கு பண வைப்புக்களை விடுவதற்கான வசதிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காக குமத்தின் இணைப்பு தடைகள் அகற்றப்பட்டன.

**"ஆண்டினுள் ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இரு பிரதம நிறைவேற்று அதிகாரிகளின் தலைமையில் அதிசிறந்த செயல்திறனை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடனும் ஒத்துழைப்புடனும் பணியாற்றிய பீப்பல்ஸ் லீசிங் ஊழியர் குழுவினருக்கு எனது நன்றியை தெரிவிக்கின்றேன்."**

### குழுமத்தின் செயல்திறன்

வட்டி வீதங்களின் வீழ்ச்சி மற்றும் ஒன்பது மாதங்களுக்கான மீளச் செலுத்த தவறிய வட்டி தொகைகளை தள்ளுபடிசெய்தல் என்பவற்றை பொருட்படுத்தாது வரிக்கு முந்திய இலாபம் ரூ.9இ104.64 மில்லியன் என்ற வகையில் குழுமத்தின் செயல்திறன் முன்னேற்றம் காணலாம். மீள் அரவிடுதைகளை வலுப்படுத்தல் மூலம் ஒதுக்கீட்டு ஏற்பாடுகளை மீண்டுவருதல் மற்றும் ஒழுக்கமான செலவு முகாமைத்துவம் மூலம் விளிம்பு எல்லைகள் அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் பீப்பல்ஸ் லீசிங் 72மூ வரிக்கு பிந்திய இலாபத்தை காட்டியுள்ளது. பீப்பல்ஸ் காப்புறுதி நிறுவனமும் 21.5மூ வரிக்கு முந்திய இலாப பங்களிப்பின் மூலம் தனது வலுவான செயல்திறனை காட்டியுள்ளார் அதே நேரம் ஏனைய துணை நிறுவனங்களின் பங்களிப்பு 6.5மூ ஆகும்.

முழு குழுமத்தில் செயல்பாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றதாக எமது செயல்பாடுகளை நெறிப்படுத்தியதன் காரணமாக ஐந்தொகை சுருக்கமடைந்தது. வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் கடன் வழங்குதலில் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கைகள் காரணமாக குத்தகைகள், கடன்கள் மற்றும் இஸ்மாத்த மிதித்த தொகுதிகள் வீழ்ச்சியடைந்தது. அதற்கு அமைவாக 1 ஆம் மட்ட மற்றும் மொத்த முதலீட்டு விகிதங்கள் முந்தய வருடத்தின் 15.12மூ மற்றும் 15.99மூ முதல் முறையே 17.72மூ மற்றும் 18.58மூ ஆக முன்னேற்றம் அடைந்தது. இலங்கையின் மிகப்பெரிய நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களில் ஒன்றான 2021 மார்ச் இறுதி ஆகும்போது வாங்கியல்லாத நிதி துறையில் 11.82மூ பிரதிநிதித்துவம் கொண்ட மற்றும் பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தின் சொத்துக்களின் தரத்தை சவாலுக்கு உள்ளாக்கக்கூடிய அதிக அபாயமுள்ள கடன் பெருநர்களுக்கும் சமநிலையான வெளிப்பாடுள்ள பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தின் நிலையானதன்மையை வெளிப்படுத்தும் வகையில் Fitch Ratings Lanka Ltd. மூலம் பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தின் தரத்தை A+(lka) தரமாக உறுதிப்படுத்தியது.

### அசாதாரண நேரங்களுக்கான தலைமை

இக்கட்டான ஒரு ஆண்டில் பயணிப்பதற்காக அபாய முகாமைத்துவம் மீதான நம்பகத்தன்மை மற்றும் வினைத்திறனான உள்ளக கட்டுபாட்டுச் செயல்பாடுகள் அதிகரிக்கும் வகையில் பணிப்பாளர் சபை தமது மேற்பார்வை செயல்பாடுகளை கடுமையாக்கியது. செயல்பாட்டுச் சூழலை மற்றும் பங்குதாரர்களின் ஆர்வங்களை புரிந்துக்கொண்டு கொள்கைகளை மீள் நெறிப்படுத்தி சொத்துக்கள் மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டமை மாற்றங்களை ஆதரித்து செயல்திறனுக்கு வசதியாகியது. மேலும், தற்போதைய செயல்பாட்டுச் சூழலுக்கு ஏற்றதாக அன்றாட செயல்பாடுகளுக்கு வழிகாட்டும் வகையில் பணிப்பாளர் சபை பல்வேறு கொள்கைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் மாற்றியமைத்தல் மேற்கொண்டது..

பெறப்பட்ட செயல்திறனை கவனத்தில் கொண்டு பங்கொன்றுக்கு ரூ.0.60 பெறுமதியான பங்குச் சான்றிதழ்களை (ளஉசipவ னiஎனைநனெ) வழங்க பணிப்பாளர் சபையினால் 2020 டிசம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்டது. மேலும், பங்கொன்றுக்கு ரூ.0.75 பங்குலாபம் செலுத்துவதற்காக வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது பங்குடமையாளர்களின் அனுமதியை பெறுவதற்காக சபை பரிந்துரைக்கின்றது. இதன் மூலம் பங்கொன்றுக்கு ரூ.1.35 பெறுமதியை அடையும் வாய்ப்பை பங்குடமையாளர்கள் பெறுவார்கள்.

ஒரு அனுபவம்வாய்ந்த வாங்கியாளரான திரு ஷமின்திற மெர்சலின் அவர்களை 2020 நவம்பர் மாதத்தில் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமித்ததன் மூலம் பீப்பல்ஸ் லீசிங் தமது தலைமைத்துவத்திலும் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தியது. கடந்த மூன்று ஆண்டுகளாக பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தினை நிறுவகித்த திரு சப்ரி இப்ராகீம் அவர்களின் பதவி விலகலை தொடர்ந்தே அந்த நியமனம் வழங்கப்பட்டது. திரு இப்ராகீம் அவர்களின் விலைமதிப்பற்ற சேவைக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்..

மேலும் 2020 ஜுன் மாதம் எம்மோடு இணைந்த மக்கள் வங்கியின் தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான திரு ரஞ்சித் கொடிதுவக்கு அவர்களையும் பணிப்பாளர் சபைக்கு அன்புடன் வரவேற்கின்றோம். இந்த நியமனம் இதற்க்கு முன் பதவி வகித்த திரு ரசித்த குணவர்தன அவர்களின் பதவி விலகலை அடுத்து நிகழ்ந்ததோடு அவருக்கும் தனது மதிப்புமிக்க ஈடுபாடுகள் மற்றும் பங்களிப்புகளுக்காக எமது நன்றிகள்..

### வளர்ச்சிக்கான பங்காளர்

2020 இல் எதிர்பார்க்கப்பட்டதை விட சிறியளவிலான வீழ்ச்சி, ஆதரவளிக்கக்கூடிய கொள்கைகள், தடுப்பு மருந்துகள் தொடர்பான செயல்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் தழுவல் என்பவற்றின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியம் தமது எதிகூறல்களை 0.8மூ இருந்து 6மூ வரை மேல்நோக்கி மாற்றியமைத்ததன் காரணமாக உலகளாவிய நோக்குகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அயல்நாடுகளோடு நாமும் பல வகைகளைக் கொண்ட மூன்றாம் அலையை எதிர்நிகியுள்ளதால் இலங்கையின் நிலை மென்மேலும் கேள்விக்குறியாகவே உள்ளது. அனாலும் தடுப்பு மருந்து வழங்கும் செயல்பாடுகள் மீதான அதிகரித்த நோக்கு மீட்டுதலுக்கு ஆதரவளிக்கும் என்பதோடு அரசாங்கம் தனது வளர்ச்சி கொள்கை நிலைப்பாட்டினை தொடர்ந்து கொண்டுச் செல்வதை நாம் எதிர்பார்க்கின்றோம்.. ஒரு தீவிர காரணியான தொற்றுநோயின் காலப்பகுதியுடன் இவ் அபாயங்கள் எதிர்மையாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு கடன்தொகை அதிகரிப்பு மற்றும் கடன் மீளச்செலுத்தும் இயலுமை தொடர்பான கவனங்கள் நாணய பெறுமதி, வட்டி விகிதங்கள், பணவீக்கம் என்பவை மீது பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தும். அப்படியானாலும், 2021 முதலாம் காலாண்டில் ஏற்றுமதி அதிகரிப்பு மற்றும் எதிநோக்குத் தன்மையுடன் தழுவிய பொருளாதார செயல்பாடுகள் என்பவற்றை நேர்மறையான குறிகாட்டிகளாக குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்ட சாதகமற்ற காரணிகளை மனதில் கொண்டு எதிர்வரும் ஆண்டிற்கான எமது திட்டம் 2021 கவனமான நேர்மறை நோக்குடன் அமைக்கப்படும்.

ஒரு மீண்டுவரும் பொருளாதாரத்தில் பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தின் பங்களிப்பானது பாதிக்கப்பட்ட துறைகளுக்கு வீழ்ச்சியடையாது இருக்க உதவும் அதே நேரம் எழுந்துவரும் துறைகளுக்கு ஆதரவு வழங்குவதாகும். குழுமத்தின் அபாயம் தாங்கும் கொள்ளளவுக்கு ஏற்ப எமது கடன் மீள அரவிடுதல் மற்றும் கடன் வழங்குதல் செயல்பாடுகள் வலுவாக்கப்பட்டுள்ளன. குறையற்ற மற்றும் தொடர்ச்சியான நிதியிடலுக்கும் வெவ்வேறு சந்தை பகுதிகளுக்கு புரிந்துணரக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட விரிவான படைப்புகள் மூலம் பல்வேறு சமூகங்களை மற்றும் பொருளாதார துறைகளை மேம்படுத்தவும் நாடு முழுவதிலுமான வலையமைப்பு ஆதரவளிக்கின்றது. ஒரு வலுவான ஐந்தொகை பத்திரம் குழுமத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் அதே நேரம் முக்கியமாக மனிதவள அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பம் போன்ற கொள்கைரீதியான மாற்றங்களுக்கு இடமாளிக்கின்றது..

### ஏற்றுக்கொள்ளுதகள்

ஆண்டினுள் ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இரு பிரதம நிறைவேற்று அதிகாரிகளின் தலைமையில் அதிசிறந்த செயல்திறனை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடனும் ஒத்துழைப்புடனும் பணியாற்றிய பீப்பல்ஸ் லீசிங் குழுமத்தின் ஊழியர் குழுவினருக்கு எனது நன்றியை தெரிவிக்கின்றேன். ஒரு சுமூகமான மாறுதலுக்காகவும் ஆண்டினுள் இக் குழுமத்திற்கு வழங்கிய தலைமைத்துவத்திற்காகவும் திரு இப்ராகீம் மற்றும் திரு மெர்சலின் ஆகிய இருவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.

எமது வெளிப்புற பங்குதாரர்களின் தொடர்ச்சியான நம்பிக்கைக்கும் செழிப்பு பகிர்வுக்கொண்ட ஒரு பயணத்திற்கான அர்ப்பணிப்புக்கும் பணிப்பாளர் சபை சார்பாக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் எமக்கு வழிகாட்டல்களும் தெளிவுகளையும் வழங்கிய இலங்கை மத்திய வாங்கி அதிகாரிகளுக்கு குறிப்பாக அதன் வாங்கியல்லாத நிதி நிறுவனங்கள் பிரிவு அதிகாரிகளுக்கு இச் சந்தரத்தில் எனது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கின்றேன். தொடர்ந்து எம்மீது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கொண்டுள்ள எமது பங்குடமையாளர்களுக்கு நன்றி தெரிவித்து இச் செய்தியினை நிறைவுச் செய்கின்றேன்.



**சுஜீவ ராஜபக்ஷ**
*தலைவர்*

2021 ஜுலை 07

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி



**"பீப்பல்ஸ் லீசிங் குழுமமானது வரலாற்றில் அதிகூடிய வரிக்கு பின்னர் இலாபமான 5,596.33 மில்லியன் ரூபாவை அடைந்துள்ளதோடு ஆண்டில் ஏற்பட்ட சவால்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை பொருட்படுத்தாது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 55.81% வளச்சியாகும். பீப்பல்ஸ் லீசிங் இதற்கு முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளதோடு பீப்பல்ஸ் காப்புறுதி நிறுவனமும் குறிப்பிடத்தக்க செயல்திறனை காட்டியுள்ளது."**

அன்புள்ள பங்குதாரர்களே,

பீப்பல்ஸ் லீசிங் குழுமமானது 2021 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக இதுவரை ஈட்டிய தனது அதிகூடிய இலாபமான 5,596.33 மில்லியன் ரூபாவை அடைந்துள்ளது. குறிப்பிட்ட நிதி ஆண்டானது, COVID - 19 தொற்றுநோய் காரணமாக ஏற்பட்ட எதிர்பாராத சவால்களை எதிர்நோக்குவதற்காக ஒன்றிணைந்து செயல்பட்டதனால் அதி கூடிய சலுகைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு ஆண்டாகும். இது நிச்சயமாக நிறுவனத்தின் வரலாற்றில் அதிகூடிய சவால்களை எதிர்கொண்ட ஆண்டவதோடு கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் மூலம் பங்குதாரர்களுக்கான எமது அப்பணிப்பு மற்றும் மிகச் சிறந்த செயல்திறனை வழங்குவதற்கான எமது குழுவினரின் உண்மையான உழைப்பு பிரதிபலிக்கின்றது. இந்த கடினமான ஆண்டில் தொடர்ச்சியாக தமது ஒத்துழைப்பை வழங்கிய எமது அனைத்து பங்குதாரர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியை தெரிவிக்கின்றேன். எமது வர்த்தக செயல்பாடுகளில் 25 ஆண்டுகள் பூர்த்தியாகும் இச் சந்தர்ப்பத்தில் பல வருடங்களாக கட்டியெழுப்பப்பட்ட திடமான அடித்தளத்தையிட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு இந்த அற்புதமான மற்றும் எதிநோக்கு வலுமிக்க நிறுவனத்தை முன்னோக்கி நடத்திச் செல்ல எனக்கு கிடைத்த கௌரவத்தையிட்டு நான் பெருமைகொள்கின்றேன்..

### மாற்றமடைதல்

எதிர்காலத்தை நோக்கும்போது, ஒரு அலையினால் உயர்த்தப்படும் படகுகளை போன்று முக்கிய பங்குதாரர்கள் அனைவரும் நன்மையடையும் வகையிலான ஒரு குறையற்ற டிஜிட்டல் மாற்றமொன்றின் தேவை தெளிவாகக் காணப்படுகின்றது. இந்த ஆண்டில் உலகம் முழுவதும் வியத்தகு முறையில் டிஜிட்டல் தளங்களுக்கு செல்வதை காணப்பட்டதோடு இலங்கையிலும், பாவனையாளர்கள் சமூக இடைவெளி பேணுதல் கெற்கொண்டதால் கற்றல் மற்றும் வீட்டிலிருந்து பணியாற்றுதல் அதேபோன்று ந - வர்த்தக நடவடிக்கைகளுக்கு இது ஆதரவளித்தது. பிராட்பேண்ட் (டிசழயனடியனெ) ஈடுபாடுகளின் 79.9மூ அதிகரிப்பு பங்குதாரர்களுக்கு ஓர் டிஜிட்டல் சூழலுக்கு செல்வதற்கு ஆதரவளித்தது. இந்த போக்கு எமது தனிப்பட்ட எதிர்காலத்திற்கும் அதே போன்ற டிஜிட்டல் தளங்களினூடாக செயல்பட முயற்சி செய்யும் டிஜிட்டல் அறிவாற்றல்மிக்க சந்ததியினருக்கும் முக்கிமானதாகும். எதிநோக்கிச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலீடு செய்யும் அவசர தேவை காணப்படுகின்றது. டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்துதல் உள்ளக மற்றும் வெளிப்புற ரீதியாக மேற்கொள்ள வேண்டும் என்பதோடு பொருளாதார நடவடிக்கைகளின் இந்த மாற்றங்கள் வாடிக்கையாளர்களுக்கு தமது தொழில்களை மேற்கொள்ள இலகுவானதாக இருக்க வேண்டும்.

தொகுதிகளின் இணைப்பு வர்த்தகர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் உள்ளடங்கலாக விரிவான பெறுமதி சங்கிலிகளை உருவாக்குவதனால் அதற்கான தடையற்ற உதவிச் செயல்பாடுகளை முன்னோக்கிச் செல்லும் வழிமுறைகளாக ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் மற்றும் தொழில்துறையினர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும்..

தொறுநோய்க்கு பின்வரும் காலப்பகுதியானது இயற்கையான வளர்சிக்கான வாய்ப்புகளை வரையறுக்கும். ஆகவே உண்மையான பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில் புதிய வணிகர்களை உருவாக்குதல் மற்றும் வினைத்திறனாக வழிநடத்தல் அவசியமாகும். இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் போட்டித்தன்மையின் தீவிர அதிகரிப்பு காரணமாக எமது நடுத்தர மற்றும் நீண்ட கால இலக்குகள் விலகிச் செல்வதால், இப் புதிய வாய்ப்புகள் மீது கவனம் செலுத்துவது பீப்பல்ஸ் லீசிங் பங்குதாரர்களுக்காக நிலையான வளைச்சி மற்றும் மதிப்பு உருவாக்குதல் என்பவற்றுக்காக மிக முக்கிய விடயமாகும். வருமானங்களை பல்வகைப்படுத்தி அத்துடன் ஒரு குருகிவரும் சந்தையில் தீவிரமாக போட்டியிடுவதை விட லீசிங் மீதான கவனத்தை குறைத்துக்கொண்டு ஒரு மாற்றத்தின் மூலம் நாம் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்..

பங்களாதேசத்தில் எமது துணை நிறுவனமான டுயமெயெ யுடடஇைெ குயெஇெ இச் சந்தையில் உள்ள வாய்ப்பினை வெளிப்படுத்தும் வகையில் 2020 ஆண்டிலும் வளர்ச்சியை காட்டியுள்ளது. வலயத்தின் கொரிடோர் இணைப்புக்காகவும் ஒரு தளமாக அல்லது மாதிரியாக இதனை பயன்படுத்தலாம். படைப்புகள் மற்றும் சந்தைகளை பன்முகப்படுத்துதல் எமது குழுவினருக்கு உற்சாகமான வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குகின்றதோடு நாட்டின் பல பாகங்களுக்கு இடமாற்ற வசதியளித்தல் மூலம் பல்வேறு பொருளாதாரங்கள் மற்றும் கலாச்சாரங்களுக்கு அவர்களை வெளிப்படுத்தி எமது வளர்ச்சி எதிர்பார்ப்புகளுக்கு உதவுகின்ற வலுவான ஆற்றல்களை வழங்குகின்றது.

உயர்மட்டத்திலான எமது நேர்மை, வெளிப்படைத்தன்மை, மற்றும் வகைக்கூறல் என்வவற்றை தொடர்ந்து பேணுவதை உறுதிச் செய்வதற்காக ஆளுமையை வலுப்படுத்துவது எமது மாற்றமடையும் பயணத்திற்கு அவசியமானதொரு அம்சமாகும். எமது நோக்கத்திற்கு பொருத்தமான அத்துடன் சுற்றாடல் மற்றும் சமூக பரிமாணங்களை அமைவான ஒரு வலுமிக்க கொள்கை கட்டமைப்பொன்று எதிர்வரும் சில மாதங்களில் நிறுவப்படும். வியாபார மாற்றத்திற்கும் டிஜிட்டல்மயமான ஒரு புதிய சாதாரண நிலையுடன் இணையாவதற்கும் இந்த மாற்றம் ஒரு சிறந்த தளமாக அமையும்..

பீப்பல்ஸ் லீசிங் இன் எதிர்காலமானது விடயங்களை வித்தியாசமான முறையில் நோக்குதல், டிஜிட்டல் திறன்களை மேம்படுத்தல் மற்றும் பங்குதாரர்களின் மதிப்பினை பேணிச்செல்வதை நோக்கமாகக் கொண்ட எமது கலாச்சாரத்தின் மாற்றம் என்றவகையில் அமையும்.

### கொள்கை சீரமைத்தல்

தொற்றுநோய் பரவலின் ஆரம்பத்தோடு, மாற்றமடையும் பங்குதாரர்களின் ஆர்வங்கள் மற்றும் செயல்படும் சூழலுக்கு பதிலளிப்பதற்காக கொள்கைகள் நெகிழ்வுத்தன்மையாக இருக்க வேண்டுமென்ற தெளிவான புரிதல் இருந்தது. அதன்படி 1 ஆம் காலாண்டின் எமது கவனம் வாடிக்கையாளர்களுக்கு தடைகளற்ற சேவையை வழங்குதல் மற்றும் ஊழியர்களையும் வாடிக்கையாளர்களையும் பாதுகாப்பதற்காக கடுமையான சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளை செயல்படுத்தல் என்பவற்றின் மீது தங்கியிருந்தது. இரண்டாம் காலாண்டில் நாம், கடன் பிற்போடுதல வழங்கும் செயல்பாடுகளை தீர்மானித்தல் மற்றும் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தொழில்களை மீண்டும் கட்டியெழுப்ப உதவிபுரிதல் என்பவற்றில் கவனம் செலுத்தினோம். புதிய சாதாரண நிலைக்கு மாற்றமடைவதற்காக உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்தல் 3 ஆம் காலாண்டின் எமது கவனமாக இருந்ததோடு தலைமைத்துவதிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டு அதனை நான் கையெடுத்தேன். திடமான கடன் செயல்பாடுகளை வலுப்படுத்தி துரிதமான தொழில் வளர்ச்சியை பெறுவதற்காக குழுவினரின் மனவலிமையை மேம்படுத்துவது தொடர்பாக 4 ஆம் காலாண்டில் கவனம் செலுத்தப்பட்டது. எமது வரலாற்றில் நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் அதிகூடிய காலாண்டு இலாபத்தை சாதிப்பதற்கு இது சாதகமாக அமைந்தது.

ஊழியர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்காக நாம் செயல்படுத்திய புதிய முயற்சிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட செயல்திறன் மேல்பார்வை மூலம் கிளைகளின் முயற்சிகளையும் வெற்றிகளையும் கண்டறிதல் காரணமாக குழுமத்தின் மக்கள் கொள்கை அதன் செயல்திறனுக்கு அடிக்கல்லாக அமைந்துள்ளது. நிர்வாக கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக கொள்கைகள் தொகுப்பொன்று

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி



அறிமுகப்படுத்தப்பப்பட்டதோடு, மாறுபட்ட வர்த்தகச் சூழல், வலுவலான பணி நெறிமுறைகள் மற்றும் வர்த்தக செயல்பாடுகள் தொடர்பான எமது பொறுப்புகளுக்கு ஏற்ப அவை சீரமைக்கப்பட்டது.

## எமது வாடிக்கையாளர்களை ஆதரித்தல்

தொற்றுநோய் காலத்தின் ஆரம்பத்திலிருந்தே எமது வாடிக்கையாளர்களின் பண தேவைகளை பூர்த்திக் செய்வதற்காக நாம் தொடர்ச்சியாக திறந்து இருந்தோம். அரசாங்கத்தினால் கடன் பிற்போடுதல சலுகைகளை அறிவித்ததன் பின் பீப்பல்ஸ் லீசிங் தகுதியான கடன் வசதிகளுக்கு சலுகை வழங்கும் செயல்பாடுகளை ஆரம்பித்து அதன் நன்மைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கியதோடு தொடர்ந்து நெகிழ்வுத்தன்மையுடன் செயல்பட்டது. இச் செயல்பாடுகள் எம்மால் உரிய காலஎல்லைகளில் பூர்த்திக் செய்யப்பட்டதோடு இலங்கை மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட இறுதி திகதிக்கு பின்னரும் நாம் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். வங்கிகளுக்கு பிற்போடுதல சலுகைகள் வழங்குவதற்காக மறுநிதியளிப்புகள் வழங்கப்பட்டாலும், பீப்பல்ஸ் லீசிங் தனது சொந்த செலவீனத்திலேயே பிற்போடுதல சலுகைகளை வழங்கியது. முதலாம் கட்டத்தில் கடன் பிற்போடுதல் சலுகைகள் 57,253 விண்ணப்பங்களுக்கு வழங்கப்பட்டதோடு அவற்றின் பெறுமதி ரூ.67.96 பில்லியன் ஆகும். இரண்டாம் கட்டத்தில் கடன் பிற்போடுதல் சலுகைகளுக்காக 15@722 விண்ணப்பங்கள் தகுதிபெற்றது. இதற்க்கு தகுதிபெறாத வாடிக்கையாளர்களுக்கு தமது காசுபாய்ச்சல் முற்கணிப்பின்படி கடன் வசதிகளை மறுசீரமைக்கும் தெரிவு வழங்கப்பட்டது.

மேலும், வாடிக்கையாளர்களுக்கு மீண்டுவருவதற்கு அவகாசம் வழங்குவதற்காக மீள்செலுத்தாத வட்டி தொகைகளுக்கு ஒன்பது மாத தள்ளுபடி சலுகைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய மீள்செலுத்தாத மொத்த வட்டித்தொகை 2019/20 நிதியாண்டின் ரூ.2322.58 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது 2020/21 நிதி ஆண்டில் ரூ.678.89 மில்லியன் மாத்திரமே காணப்பட்டது..

## அசாதாரண நிலைமைகளில் செயல்திறன்

பீப்பல்ஸ் லீசிங் குழுமமானது வரலாற்றில் அதிகூடிய வரிக்கு பின்னர் இலாபமான 5,596.33 மில்லியன் ரூபாவை அடைந்துள்ளதோடு ஆண்டில் ஏற்பட்ட சவால்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை பொருட்படுத்தாது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 55.81% வளர்ச்சியாகும். பீப்பல்ஸ் லீசிங் இதற்கு முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளதோடு பீப்பல்ஸ் காப்புறுதி நிறுவனமும் குறிப்பிடத்தக்க செயல்திறனை காட்டியுள்ளது.

குழுமத்தின் உயர் மட்டம் குறைந்த வியாபார அளவிகளினால் பாதிக்கப்பட்டாலும், வட்டி விகிதங்கள் குறைவடைதல், செலுத்தப்படாத வட்டி மீளப்பெறுதல், வலுமிக்க மீண்டுவரும் முயற்சிகள் காரணமாக 2021 மார்ச் மாதத்தில் குறிப்பிடத்தக்க அளவில்வழுக்குன்றல்கள்மீளப்பெறுதல் வலுவான கீழ்மட்ட வளர்ச்சிக்கு ஆதரவளித்தது. செயல்திறனுக்கான புதிய அளவுகோல்களை அமைத்ததன் காரணமாக சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்கு முதலீடு மீதான வருவாய் முறையே 4.26% மற்றும் 14.83% விகிதங்களால் வளர்ச்சியடைந்தது..

**கடன்கள், லீசிங் மற்றும் ஹயர் பர்ச்சஸ்** – முதல் மூன்று காலாண்டுகளில் காணப்பட்ட சவால்கள், பின்னடைவுகள் மற்றும் வீழ்ச்சியடையும் போக்குக்கு மாறாக நான்காவது காலாண்டில் இந்த முக்கிய வியாபார துறைகளில் குறிப்பித்தக்க வர்ச்சி காரணமாக 2021 மார்ச் மாதம் ரூ.10.90 பில்லியன் கடன் வசதிகள் வழங்கி புதியதொரு மயில்கல்லை எட்டியது. கடன்களை தரம் தொடர்பாக நாம் செலுத்தும் தீவிர கவனத்தினால் செயல்படாத கடன் தொகை (NPA) குறைவந்துள்ளமை முன்னேற்றமான NPA விகிதம் மூலம் காணக்கூடியதாக உள்ளது. இந்த எதிர்நோக்கு சக்தியைக்கொண்ட அத்துடன் சந்தையின் முதன்மை இடத்தை வகிக்கும் சந்தைப்பிரிவு வாங்கியல்லாத நிதி நிறுவனங்களின் கடன் தொகுதிகளில் அதிகூடிய பங்கை கொண்டுள்ளது..

ஆண்டினுள் விளிம்பு வர்த்தக துறையும் குறிப்பிடத்தக்க வர்ச்சியை வெளிப்படுத்துவதோடு கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) மீளெழுச்சியே இதற்க்கு காரணமாகும். தங்கக்கடன் தொகுதியானது 2020 மார்ச் மாதத்தின் ரூ.895.70 மில்லியன் அளவோடு ஒப்பிடும்போது இவ் ஆண்டிறுதியில் அது இருமடங்குக்கும் மேலாக ரூ.1993.51 மில்லியன் வரை வார்ச்சியடைந்துள்ளது.

**வைப்புகள் –** NBFI துரையின் மிகக்கூடிய வைப்புத்தொகையான பீப்பல்ஸ் லீசிங் இன் வைப்புத்தொகை ரூ.101.50 பில்லின் ஆவதுடன் இது நிறுவனத்தின் எதிர்கூறப்பட்ட வர்த்தக தேவைகளுக்கான திரவத்தன்மை போதுமானதாக இருந்ததால் 4.87மூ விகிதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. குறைந்த வட்டி விகிதம் காரணமாக துறையில் நம்பிக்கையற்ற தன்மை நிலவினாலும் அத்துடன் நிலையான வைப்புகள் தொகையும் குறைவடைந்தாலும் இவற்றை பொருட்படுத்தாது சந்தையின் திரவத்தன்மை மிகுதி காரணமாக மதிப்புக்கு உள்ளாகும் ஆண்டிற்குள் சேமிப்பு வைப்புகள் ரூ.6.77 பில்லியனில் இருந்து ரூ.8.50 பில்லியன் வரை 25.59% விகிதத்தினால் அதிகரித்துள்ளது.

**இஸ்லாமிய நிதியிடல் -** இஸ்லாமிய நிதி தொழில்துறையும் கடந்த ஆண்டினைவிட 7.19மூ வளர்ச்சியை காட்டியதுடன் ரூ.338.49 மில்லியன் துறைசார் இலாபத்தை ஈட்டியது..

**பீப்பல்ஸ் காப்புறுதி –** தொற்றுநோய் பரவல் காலத்தில் செயல்படுத்தப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாடுகள் மற்றும் முடக்கல் நடவடிக்கைகள் காரணமாக குறைவடைந்த காப்புறுதி உரிமைகோரல்கள் காரணமாக இந்த துணை நிறுவனம் வரலாற்றில் மிகச் சிறந்த காப்புறுதி மற்றும் இலாப பெறுபேறுகளை பதிவுச் செய்தது.

**பீப்பல்ஸ் மைக்ரோ காமர்ஸ் –** இந்த முக்கிய தொழில்த் துறைக்கான வழிகாட்டல்கள் அல்லது ஒழுங்குவிதைகள் இல்லாவிட்டாலும், தொற்றுநோய் நிலமையால் பாதிக்கப்பட்ட தமது வாடிக்கையாளர்களுக்கு “ஆடு கடன் பிற்போடுதல் சலுகைகளை வழங்கியது. இந்த முற்போக்கு இறுதி நாங்கு மாதங்களில் அதன் செயல்திறனை மாற்றியமைத்ததோடு, கடினமான எட்டு மாதங்களுக்கு பின்னர் கடன் மீள பெறுவதை வலுப்படுத்துவதற்கு செயல்படுத்தப்பட்ட மூலோபாயங்களின் மூலம் அதன் மிகச் சிறந்த சாதனையான ரூ.133.26 மில்லியன் இலாபத்தை பதிவுச் செய்தது.

**லங்கன் அல்லியன்ஸ் பைனான்ஸ் –** இந்த நிறுவனம் பங்களாதேஷில் COVID-19 தாக்கங்களையும் தாண்டி கடன்கள் மற்றும் முதலீடுதல் அத்துடன் வைப்புகளின் வளர்ச்சி காரணமாக குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை பதிவுச் செய்து ரூ.142.07 மில்லியன் வரிக்கு பின்னர் இலாபத்தை ஈட்டியது.

**ஏனைய தொழில் துறைகள் –** சவாலான ஒரு சூழலில் ஆண்டிற்குள் எமது சொத்துக்கள் வியாபாரம் பின்னடைவை காட்டினாலும், பீப்பல்ஸ் பிளீட் மேனேஜ்மென்ட் ரூ.46.05 மில்லியன் வரிக்கு பின்னர் இலாபத்தை ஈட்டி முன்னேற்றத்தை காட்டியது.

## அபாயங்களை முகாமைத்துவம் செய்தல்

ஆண்டின் இறுதியில் செயல்படாத கடன் தொகை விகிதத்தை குறைப்பதற்காக எமது கடன் தொகுதியின் அபாயங்களை குறைப்பதற்கு இந்த ஆண்டினுள் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி கடன் மீளப்பெறும் முயற்சிகளை வலுப்படுத்தியதால் கடன் தொகுதியின் தரம் உயர்த்தப்பட்டு 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி ஆகும்போது செயல்படாத கடன் தொகை விகிதத்தை வெற்றிகரமாக 9.21மூ எல்லைக்குள் கட்டுப்படுத்தல் சாத்தியமானது. சந்தையில் வாகன விலைகள் தீவிரமாக அதிகரித்து வந்ததால் மதிப்பு குமிழ்கள் (Air Bubbles) மூலம் ஏற்படக்கூடிய அபாயத்தை தவிர்ப்பதற்காக வாகன கடன் வழங்கும்போது வாகனங்களை மதிப்பித்துவதற்கான விதிமுறைகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

COVID-19 தொற்றுநோய் பரவுதலை தடுப்பதற்காக முழுமையான நெறிமுறைகளை நிறுவுதல், அவற்றை அமுல்படுத்தல், முன்னேற்றத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் அவசர பதிலளிப்பு முறைமையொன்றை உருவாக்குதல் என்பவற்றுக்கு பொறுப்பான COVID-19 விசேட செயலணியின் வழிகாட்டலுடன் தொற்றுநோய் பரவுதல் அபாயத்தை முகாமைத்துவம் செய்வதற்காக சகல வர்த்தக நிறுவனங்களிலும் கடுமையான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப் பட்டது. வணிக தொடர்ச்சிநிலை திட்டமிடல் ஒரு முக்கிய கவனமாக இருந்ததோடு, அதன் மூலம் தடையற்ற வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கான தொடர்ச்சியான செயல்பாடுகளை ஆதரிக்கப்பட்டது. மூன்றாம் அலையின் பொது வீட்டிலிருந்து பணியாற்றும் செயல்பாடுகளை உயர் மட்டத்தில் மேற்கொள்வதற்காக அத்திட்டம் மேலும் தரமுயர்த்தப்பட்டது. அதிகரித்துவரும் டிஜிட்டல் பரிமாற்றங்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டிலிருந்து பணியாற்றும் வசதிகளை கவனத்தில் கொண்டு தகவல் தொழில்நுட்ப அபாயங்கள் உட்பட சைபர் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

ஆண்டு இறுதியில் நிறுவனத்தின் மட்டம் 1 மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் முறையே 17.72% மற்றும் 18.58% ஆக அதன் அபாய தாங்கு இயலளவு மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு வசதியான அளவில் இருந்தன. தற்போதைய நிச்சயமற்ற நிலையின் அடிப்படையில் எமது ஐந்தொகை பாத்திரத்தை வலுப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்தியதால் நிறுவனத்தை மூலதன நிதிகளுக்கு ஒப்பீட்டாக வைப்புகள் விகிதம் 33.83மூ எனும் சுமுகமான அளவில் இருந்தது..

## ஒரு குழு முயற்சி

பணியாற்றுவதற்கான புதிய வழிமுறைகளை பின்பற்றிக்கொண்டு மற்றும் பணியிடத்திலும் வதிவிடத்திலும் ஏற்படும் சவால்களை வென்று, பார்த்துமிக்கதொரு செயல்திறனை வழங்கி நெருக்கடி நிலைமைக்கு பதிலளிப்பதற்காக குழுவானது ஒன்றிணைந்து முன்வந்தது. நேர்மறையானசிந்தனை, கடினமான உழைப்பு மற்றும் தொடர்ச்சியான

முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்பு மூலம் வெற்றிகண்ட பல்வேறு சிரமங்கள் மத்தியில் என்றுமில்லாத ஒரு பணிச்சுமை நிறைவேற்றப்பட்டது. டிஜிட்டல்மயமாக்கல் தொடர்பான துரிதமான தழுவல் விசேடமாக முடக்குதல் காலங்களில் வீட்டிலிருந்து பணியாற்றும் செயல்பாடுகளை ஊக்குவித்து அதற்கு வசதியளித்தது. மேல்குறிப்பிட்டது போல சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்கி எமது ஊழியர்களுக்கு பாதுகாப்பானதொரு சூழலை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் நிலைநாட்டப்பட்டன.

முடக்குதல் காலங்களின்போது எமது ஊழியர்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை குறைப்பதற்காக போக்குவரத்து வசதிகளும் வழங்கப்பட்டன. அடிப்படைகளை சரியாக செய்வதற்கான ஒரு வலியுறுத்தல் மற்றும் மதிப்புகளால் வழிநடத்தப்படும் ஒரு கூட்டாண்மை கலாச்சாரத்தால் ஆதரவளிக்கும் செயல்திறன் அத்துடன் பிரிவுகளுக்கு இடையிலான ஈடுபாடுகள் மற்றும் குளுச்சிந்திப்பு சேவை வழங்கலை மேம்படுத்துகிறது. நிறுவனத்தின் வளர்ச்சிக்கான தூண்டுதலை புனருத்தாரணம் செய்தல் மற்றும் அதன் போட்டித்தன்மையை உயத்துவதற்கும் இறுதி நான்கு மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக முறைச்சிகளை முக்கியமாக குறிப்பிட வேண்டியுள்ளதோடு அவை சாதிக்கப்பட்ட சிறப்பான செயல்திறனுக்கு முக்கிய காரணிகளாகும்..

ஊழியர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் தொழில் எதிர்பார்ப்புகளை ஆதரிப்பதை நோக்கமாகக்கொண்ட பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி செயல்பாடுகள் தொற்றுநோய் காரணமாக மெய்நிகர் தளங்களுக்கு மாற்றப்பட்டன. பிரதம நிறைவேற்று அதிகாரியினால் நிலை கூட்டங்களை தவிர்த்து டவுன்ஹால் அமர்வுகள் (Town Hall sessions) நடத்தப்பட்டமை ஊழியர்களின் ஈடுபாட்டின் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி அவர்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தியது. இந்த ஆண்டில் நிறுவனத்தின் மூலோபாய திட்டமிடல் செயல்பாட்டில் ஒரு மெய்நிகர் தளத்தின் மூலமாக நிறுவனத்தின் பல்வேறு ஊழியங்களின் பங்களிப்பை பெற்றுக்கொண்டதோடு, இதன் மூலம் மாறுபட்ட திறன்மிக்க புத்தி கூர்மைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. எமது குழுவினருக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கற்றல் முகாமைத்துவ தொகுதியொன்றை ஏற்படுத்தல் இந்த ஆண்டின் முக்கிய கவனங்களில் ஒன்றாவதோடு இவற்றின் சிறந்த பயன்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன..

## சமூகங்களுக்கு அர்ப்பணிப்பு

சமூகத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ள ஒரு வர்த்தக நிறுவனம் என்ற வகையில், எமது முதல் முன்னுரிமையாவது மேலே குறிப்பிட்டுள்ளவாறு இந்த நெருக்கடியான நிலையில் எமது வாடிக்கையாளர்களுக்கு ஆதரவு அளிப்பதேயாகும். எமது பொதுநலன்மிக்க மூலோபாய முயற்சிகள் கல்வித்துறை மீது கவனம் செலுத்தி இவ் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. புலமைப்பரிசில் பெரும் மாணவர்களுக்கு தமது ஒன்லைன் கற்றல் செயல்பாடுகளுக்காக மின்னணு கருவிகள் வழங்கப்பட்டதோடு, ஊழுஏஐனு முன்னாயத்த செயல்பாடுகளுக்காக கல்வி அமைச்சுக்கு எமது ஆதரவுகள் வழங்கப்பட்டன.

கார்பன் தொடர்பான உணர்வுள்ள கூட்டாண்மை என்ற வகையில், பீபிள்ஸ் லீசிங் காகிதமற்ற செயல்பாடுகள் மூலம் வளங்களின் உச்சமட்ட பயன்பாட்டிற்கு தொடர்ச்சியாக தம்மை அர்ப்பணித்துள்ளது. அதன்படி காகிதமற்ற செயல்பாடுகளுக்கும் கழிவு உற்பத்தியை குறைப்பதற்கும் பல்வேறான டிஜிட்டல் ஆவணங்களை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும், முக்கிய சுற்றாடல் குறிகாட்டிகளை ஆராய்வதற்காக சுற்றாடல் செயல்திறன் முகாமைத்துவ தொகுதியொன்றை நாம் நிறுவியுள்ளோம். அதேபோன்று சிக்கன முகாமைத்துவ வளக்கங்கள், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் கடன் வழங்குதலை சீரமைத்தல் என்பவற்றுன்மூலம் பூஜ்ஜிய உமிழ்வு நிலைக்குச் செல்ல நாம் செயல்படுகின்றோம். முக்கியமாக உமிழ்வு குறைத்தலை ஊக்குவிக்கும் வழங்குவதன் மூலம் ஒரு குறைந்த கார்பன் எதிர்காலத்திற்காக நாம் பங்கேற்பு வழங்குகின்றோம்..

சமூக பொறுப்புடைய கூட்டாண்மையாக தேசிய முன்னுரிமைகளுக்கு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அமைவாக தொடர்ச்சியாக நாம் பயன்மிக்க பங்களிப்புகளை வழங்குவதோடு நாம் செயல்படும் சமுகத்தின் முதலீடுகளை மேற்கொள்ளுவோம்..

## 2020 க்கு அப்பால்
### இயங்குகின்ற சூழல்

2020 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டில் முடக்குதல் நடவடிக்கைகளுக்கு பின்னர் பொருளாதார மீளெழுச்சி உற்சாகமாக இருந்ததோடு அறிமுகப்படுத்தப் பட்ட கொள்கைகள் 2021 இன் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாக அமையும் என்பது எமது நம்பிக்கையானது. வட்டி விகிதங்கள் மற்றும் பணவீக்க விகிதங்கள் நிலையானத்தன்மை 2021 ஆம் ஆண்டின் தனியார் துறை கடன் வளர்ச்சிக்கு சாதகமாக அமையுமென நாம் எதிர்பார்த்தோம். முன்மொழியப்பட்டுள்ள துறைசார் ஒருங்கிணைத்தல்களில் பலவீனமான முயற்சியாளர்கள் ஒன்றிணைவதை அல்லது வெளியேறுவதை காணலாம் என்பதுடன் எமது எதிர்பார்ப்புகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு குறிப்பிடத்தக்க தாக்கங்கள் ஏற்படுமென நாம் எதிர்க்கவில்லை என்றாலும் இதன் மூலம் ஆற்றல்மிக்க துறைசார் போட்டியாளர்களின் மாறுதல்கள் ஏற்படும் . தொற்றுநோயின் மூன்றாம் அலைக்கு நாம் முகம்கொடுத்துள்ள நிலையில் ஒரு நிலையான கடன் மீளப்பெறுவதயும், தற்போது செயல்பாட்டிலுள்ள தடுப்பு மருந்து திட்டங்களை விரிவாக்குவதையும்நாம் எதிர்பார்க்கின்றோம். தொற்றுநோயின் காலப்பகுதி நாட்டின் மீளெழுச்சிக்கான முக்கிய காரணியாகும். ஆகவே, மேலும் வழங்கக்கூடிய கடன் பிற்போடுத்தல்கள் தேவைப்படலாம். ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களும் துறைகளின் வடிவமைப்புக்கு தேவையாக இருக்கலாம்.

### பீப்பல்ஸ் லீசிங

எமது திட்டங்கள் கடந்த 25 ஆண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட வலுவான உள்நாட்டு பிரதிநிதித்துவத்தை மேலும் வலுப்படுத்தி இலங்கையின் முன்னணி டீேகுஜ ஆக எமது நிலையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்களை மையமாகக்கொண்ட எமது உற்பத்தி மூலோபாயங்கள், ஒரு டிஜிட்டல் யுகத்திற்கு செல்வதற்கான ஆதரவை அவர்களுக்கு வழங்கி வளர்ச்சிக்கான எமது எதிர்பார்ப்புகளை ஆதரிக்கும் அடித்தளமாக அமைகின்றது. அபாய முகமைத்தின் கவனம் செலுத்தப்பட்ட



# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி



முன்னேற்றங்கள் காரணமாக மேம்படுத்தப்பட்ட சொத்துக்களின் தரம், பாதுகாப்பான தொகுதிகள் மற்றும் வினைத்திறனான மற்றும் செயல்திறனான செயல்முறைகள் என்பவற்றின் மூலம் நிலையான வளர்ச்சியை நோக்கி நாம் வழிநடத்தப் படுகின்றோம். ஒரு டிஜிட்டல் யுகத்தில் செழித்து விளங்க எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் ஆதரவளிப்பதால் மக்கள் மற்றும் டிஜிட்டல் செயல்படுத்தல்கள் நிறுவனத்தை மாற்றியமைக்கும் குறுக்குவெட்டு கருப்பொருள்களாக அமைகின்றது. எமது சுற்றாடல், சமூக மற்றும் ஆளுமை கொள்கைகள், பங்குதாரர்களுக்கான நீண்டகால பெறுமதி உருவாக்குதலுக்காக ஆதரவளிக்கும் கட்டுப்பாடு மற்றும் சமநிலைப்படுத்தலை (checks and balances) வழங்குகின்றது.

பீப்பிள்ஸ் லீசிங் இன் நீண்டகால இலக்கானது முழுமையான நிதித்துறையில் முன்னிற்கும் நிலையான மற்றும் புகழ்பெற்ற வர்த்தக முன்மாதியாக திகழ்வதேயாகும். செயலாற்றும் சூழலின் நிச்சயமற்ற தன்மைகள், செயலாற்று ரீதியான மற்றும் இணக்கப்பாடு வழக்கங்கள் உற்பட நிதியல்லாத அபாய முகாமைத்துவம் தொடர்பாக மேற்பட்ட கவனத்தை செலுத்தும் தேவைப்பாட்டை ஏற்படுத்துவதோடு இது அபாய முகாமைத்துவத்தின் வேகமாக வளர்ந்துவரும் ஒரு அம்சமாகும். நடத்தை நெறிக்கோவை மற்றும் சமூக, சுற்றாடல் அபாயங்கள் தொடர்பாக முக்கிய வழங்குநர்களை திரையிடல் செயல்படுத்தப் பட்ட பின்னர் பொறுப்புடைய மூலங்களை உள்ளடக்குவதற்காக நிலைத்தன்மை விரிவாக்கப் படுகின்றது. பீப்பிள்ஸ் லீசிங் நிலைத்தன்மையான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவு வழங்குவதற்காக தமது இணைநிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துனர்களுடன் ஒன்றிணைந்து வாங்கியல்லாத நிதி துறையில் பயனுள்ள கடன் கொள்கைகளை மேம்படுத்த கூட்டுமுயற்சிகளை மேற்கொள்வதுடன், நிலையான நிதியிடலுக்கான வழிகளை கண்டறிய சக நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகின்றது. துறைசார் ஒருங்கிணைப்புகள் மூலம் இணைப்புகளுக்கும் கைப்பற்றுதல்களுக்கும் சந்தர்ப்பமளிக்கும். ஆகவே இது தொடர்பாக நாம் விழிப்பாகவே செயல்படுகின்றோம். கடன் சார்பான அபாயம், சுகாதார மற்றும் பாதுகாப்பு உற்பட செயலாற்று அபாயம் மற்றும் தகவல் தொழில்நுப்ப மற்றும் சைபர் அபாயம் ஆகியவை எதிரும் ஆண்டிலும் தொடர்ந்து அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதோடு அறிக்கையிடும் ஆண்டின் அனுபவங்களால் எம்மை வலுப்படுத்தி குறிப்பிட்ட அபாயங்களை முகாமைப்படுத்த எமது செயல்முறைகளை வலுப்படுத்தியுள்ளோம்.

### ஏற்றுக்கொள்ளுதகள்

பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நான் அடியெடுத்து வைத்த அசாதாரணமான காலப்பகுதியில் அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட விலைமதிப்பற்ற வழிகாட்டல்களுக்காக நான் நன்றி தெரிவிக்கின்றேன். ஒரு சுமூகமான பதவி மாற்றத்தை உறுதிச் செய்த மற்றும் முதல் எட்டு மாதங்களில் நிறுவனத்தை வழிநடத்திய முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு சப்பிரி இப்ராகீம் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். மேலும் எம்மீது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் காட்டிய எமது வாடிக்கையாளர்களுக்கும், எமது பங்காளர்கள் ஆதரவுக்கும், எமது முதலீட்டாளர்களின் நம்பிக்கை மற்றும் நாணயத்திற்கும்இ

அதேபோன்று இந்த சவாலான ஆண்டிலே காவல்துறையினர் பற்றும் ஆயுத படையினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன். இலங்கை மத்திய வங்கியின் மற்றும் அதன் வாங்கியல்லாத நிதிநிறுவங்களை மேற்பார்வை செய்யம் பிரிவின் அதிகாரிகளும் எமக்கு வழங்கிய ஆதரவுகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டல்களுக்காக நான் நன்றி தெரிவிக்கின்றேன். வரலாற்றின் மிகச் சிறந்த பெறுபேறுகளை அடைவதற்காக ஒரு கடினமான ஆண்டில் அயராது உழைத்த எமது பீப்பிள்ஸ் லீசிங் புத்துணர்ச்சிமிக்க குழுவினருக்கு விசேட விதமாக நன்றி தெரிவிக்கின்றேன். ஒவ்வொரு நெருக்கடி நிலைமையும் ஒரு வாய்ப்பாகும். எமது 25 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், எதிர்வரும் ஆண்டின் சவால்களை வென்று செயல்திறனில் இன்னுமொரு மயில்கல்லை அடைவதற்காக சகல பங்குதாரர்களின் ஒத்துழைப்பையும் நான் எதிர்பார்க்கின்றேன்.



**ஷமிந்திர மெர்சலின்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர்*

2021 ஜுலை 07

THANK YOU
ස්තූති நன்றி

# மதிப்பு உருவாக்கல் மாதிரி

26 மதிப்பு உருவாக்கல் மாதிரி
28 பங்குதாரர் ஈடுபாடு
30 செயற்பாட்டுச் சூழல்
32 COVID-19 க்கான எமது பதிலளிப்பு
34 பொருள்சார் விடயங்களை கண்டறிதல்
38 எமது மூலோபாயங்கள

# மதிப்பு உருவாக்கும் மாதிரி

தொற்றுநோய்

அரச கொள்கை:: சுகாதார, சமூக, நிதி மற்றும் நாணய

செயல்படும் சூழல்

எமது தூரநோக்கு — எமது பணி

## எமது வளங்கள் (உள்ளீடுகள்)

### நிதி மூலதனம்
நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மூலம் உருவாக்கப்பட்ட காசுபாய்ச்சல்கள், கடன் மற்றும் வங்கி வசதிகளுக்கான அணுகல்

மொத்த சொத்துக்கள்: **ரூ.171.66 பில்லியன்**
மொத்த கடன்கள்: **ரூ.141.41 பில்லியன்**
பங்கு மூலதனம்: **ரூ.30.25 பில்லியன்**
புதிய கடன்: **ரூ.1.00 பில்லியன்**

### மனித மூலதனம்
எங்கள் மக்கள்

**2,401** ஊழியர்கள்

### சமூக மற்றும் உறவு மூலதனம்
எங்கள் வாடிக்கையாளர்கள், வர்த்தக பங்காளர்கள், வழங்குநர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் நாங்கள் செயல்படும் சமூகங்கள்

கிட்டத்தட்ட **400,000** வாடிக்கையாளர்கள்
**40,910** வர்த்தக பங்காளர்கள்
**8,634** பங்குதாரர்கள்
உள்ளூர் சமூகங்களில் முதலீடு **ரூ.20.38** மில்லியன்

### அறிவுசார் மூலதனம்
எமது வர்த்தகச் சின்னம், மென்பொருள், நிறுவன வடிவமைப்புகள், கொள்கை கட்டமைப்புகள், தொகுதிகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் எமது அணியின் நுண்ணறிவுத்திறன்.

வர்த்தகச் சின்ன மதிப்பு: **ரூ.8.79 பில்லியன்**
மென்பொருள்: **ரூ.36.76 மில்லியன்**
நிறுவப்பட்ட தொகுதிகள் மற்றும் செயல்முறைகள்
தாய் நிறுவனத்தின் வலிமை
சான்றிதழ்கள் மற்றும் விருதுகள்
நிறுவன கலாச்சாரம்

### உற்பத்தி மூலதனம்
கிளை வலையமைப்பு மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றால் குறிப்பிடப்படும் அறுவைச் சொத்துக்கள்.

**103** கிளைகள்
2020/21 ,ல் மூலதனச் செலவுகள் (Capex) **ரூ.104.69** மில்லியன்

### இயற்கை மூலதனம
எமது வர்த்த செயல்பாடுகளின்போது பயன்பத்தப்பட்ட இயற்கை வளங்கள்

சக்தி **2.03 x $10^{13}$** (ஜூல்ஸ்)
தொற்றுநோய் காரணமாக தொலைநிலை பணியாற்றல் பணிகளை தன்னியக்கப்படுத்தல் செய்வதற்கான முதலீடு

பங்குதாரர்களின் ஈடுபாடு

மூலோபாயம்

## முக்கிய செயல்பாடுகள் மற்றும் செயல்படுத்துபவர்கள்

வாடிக்கையாளர்களுக்கு வட்டி ஈட்டித்தரும் சேமிப்பு தயாரிப்புகள் மூலம் வைப்புகளை திரட்டுதல்

முதலீடு, தொழில்பாட்டு மூலதனம் மற்றும் நுகர்வு தேவைகளுக்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வட்டி அல்லது அதற்கு நிகரான ஒரு கட்டணத்துடன் வாடிக்கையாளர்களுக்கு நிதி மூலதனத்தை வழங்குதல்.




குறைநிரப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் முதலீடு செய்வதன் மூலம் வாடிக்கையாளர் மதிப்பு தெரிவுகளை விரிவுபடுத்தல்

பல்வேறு வழிமுறைகளின் சலுகை கடன் வசதிகளை அணுகுவதற்கு வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளித்து மூலம் அவர்களின் வளர்ச்சிக்கு வசதியளித்தல்

## வெளியீடு

### நோக்கம் கொண்ட தயாரிப்புகள்
- லீசிங்
- கடன்கள்
- வைப்புகள்
- விளிம்பு வர்த்தகம்

### எதிர்பாராத துணை தயாரிப்புகள்
- உமிழ்வு
- மின் கழிவு
- காகித கழிவு
- பிற கழிவுகள்

மெய்நிகர் கூட்டங்கள் மற்றும் பணியிடம்

பின்னடையும் பொருளாதாரம் மற்றும் நிச்சயமற்ற தன்மை

மதிப்புகள்

## பயன்கள்

### நிதி மூலதனம்
+ வலுவான ஐந்தொகை
+ வரிக்குப் பிறகு லாபம்
+ பங்கு முதலீடு அதிகரிப்பு ரூ.34.34 பில்லியன்

### மனித மூலதனம
+ ஊழியர்களின் திருப்தி
+ உற்பத்தித்திறன்
+ நுண் அறிவு

### சமூக மற்றும் உறவு மூலதனம்
முதிர்ச்சி மாற்றம்

நம்பிக்கை

பயனாளி சமூகங்கள்

### அறிவுசார் மூலதனம்
+ வர்த்தகச் சின்ன பெறுமதி: ரூ .8.13 பில்லியன்
+ நுண்ணறிவு அதிகரித்தல்
+ நுண்ணிய மற்றும் திறமையான தொகுதிகள்

### உற்பத்தி மூலதனம்
– உற்பத்தி மூலதனத்தின் தேய்மான பெறுமதி முதலீடுகளை மீறுகிறது

### இயற்கை மூலதனம்
+ 238,891 எண்ணிக்கையான டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள்
+ அலுவலக பணிகளை தன்னியக்கமயமாக்குதலின் விளைவாக யு4 தாள் பாவனை 32மூ குறைவடைந்து (500 கட்டுகள்)
+ நிறுவனத்தின் கார்பன் அடிச்சுவடு 2,002.96 $tCO_2$ வரை குறைவடைந்து

## விளைவுகள்

### வாடிக்கையாளர்கள
- ரூ. 50.88 பில்லியன் கடன்கள் வழங்கப்பட்டன
- 55,000 க்கும் மேற்பட்ட பிற்போடல்கள்
- 15,000 க்கும் மேற்பட்ட பிற்போடல் நீட்டிப்புகள்
- செலுத்தப்படாத வட்டி தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டது
- இணையற்ற வசதிகள்

### ஊழியர்கள்
- பயிற்சி மற்றும் அபிவிருத்திக்காக ரூ.1.56 மில்லியன்
- நிதி மற்றும் பிற நன்மைகள்
- தொழில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்
- வலுவூட்டல்

### வர்த்தக பங்காளர்கள்
- மொத்த வழங்குநர்கள் 38,890
- வெளிப்படைத்தன்மை
- நீண்டகால சகலரும் வெற்றிபெறும் உறவுகள்

### முதலீட்டாளர்கள்
- வரிக்குப் பின் லாபம் ரூ .4.03 பில்லியன்
- வலுவான ஐந்தொகை
- முதலீட்டு வாய்ப்புகள்

### அரசாங்கம்
- ரூ. 4,203.03 மில்லியன் வரிகள்
- நிதித்துறை நிலைப்புறுதித்தன்மை
- திறமையான மூலதன உருவாக்கம்
- வறுமையை குறைத்தல்

### உள்ளூர் சமூகங்கள்
- மேம்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்
- தேசிய முன்னுரிமைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல்
- 2,343 நபர்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்பு

### சுற்றுச்சூழல்
- காகிதமற்ற வேலைச் சூழலுக்கான கலாச்சார மாற்றம்
- டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள் 144,504 ஆக அதிகரித்தல்
- பணிகளை தன்னியக்கமயமாக்குதல் அதிகரித்தல்

நிலையான மதிப்பு உருவாக்கல்

எமது செயற்பாடுகளுக்குரிய நிலையான அபிவிருத்தி இலக்குகள்

கீழ் மூன்று மட்டங்கள்

# பங்குதாரர் ஈடுபாடு

GRI 102-40 , 102-42, 102-43, 102-44

நிறுவனத்தின் பெயரில் குறிக்கப்பட்டுள்ளபடி, எங்கள் வர்க்கமானது மக்களின் வர்த்தகமாக நாங்கள் கருதுகிறோம், இந்த ஆண்டு பங்குதாரர்களின் தேவைகளுக்கு அவசர பதிலளித்து வழங்கும் வகையில் பங்குதாரர்கள் மீது கவனம் செலுத்தி வடிவமைக்கப்பட்டது. பங்குதாரர்களின் தேவைகள் தொடர்பான கருத்துக்களை பெறுவதற்கும், அவர்களின் எதிர்கால நோக்குகளை புரிந்துகொள்வதற்கும் நன்றாக வடிவமைக்கப்பட்ட செயல்முறை, சகல மட்டங்களிலும் தீர்மானங்களை எடுப்பதற்கு அடித்தளமாக அமைந்ததோடு, காலத்திற்கு ஏற்ற கவனமான சமநிலையை உறுதிப்படுத்தியது. ஆண்டின் வியத்தகு மாற்றங்கள் இந்த சமநிலையை காலத்துக்கு காலம் மறுபரிசீலனை செய்யும் தேவையை

## பங்குதாரர்கள்

வாடிக்கையாளர்கள் | முதலீட்டாளர்கள் | ஊழியர்கள்

## பொதுவான ஈடுபாட்டு வழிமுறைகள்

இணையத்தளம் → ஊடக வெளியீடுகள் → காலாண்டு நிதி கூற்றுகள் → ஆண்டறிக்கை

## விசேட ஈடுபாட்டு வழிமுறைகள்

**வாடிக்கையாளர்கள்**
- அழைப்பு நிலையம்
- கிளை வலையமைப்பு
- தொடர்பு இல்லாத / டிஜிட்டல் தளங்கள்
- வாடிக்கையாளர் சந்திப்புகள்

**முதலீட்டாளர்கள்**
- கொழும்பு பங்குச் சந்தையில் அறிவிப்புகள்
- இணையதளத்தில் அர்ப்பணிக்கப்பட்ட முதலீட்டாளர் உறவுகள் பக்கம்
- வருடாந்த பொதுக் கூட்டம்
- வீதி பிரசாரங்கள்

**ஊழியர்கள்**
- இணையம், மின்னஞ்சல்கள் மற்றும் குறிப்புகள்
- புதிய கொள்கைகள் மற்றும் கொள்கை திருத்தங்கள்
- கிளை விஜயங்கள்
- மெய்நிகர் கூட்டங்கள்
- மூலோபாய திட்டமிடல் அமர்வு
- மக்களின் அறிவு மையம்
- மனிதவள போர்டல்
- தொழிலாளர் சங்கம்
- குறை தீர்க்கும் வழிமுறை
- டோஸ்ட்மாஸ்டர்ஸ் சங்கம்
- செயல்திறன் மதிப்பீடுகள்

## பொது ஆர்வங்கள்

நியாயமான பரிமாற்றங்கள் → நிலையான வருவாய் வளர்ச்சி → தொழில் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி

## கண்டறிந்த ஆர்வங்கள்

**வாடிக்கையாளர்கள்**
- தொற்றுநோய் காலத்தின் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு கடன் பிற்போடல்
- சலுகைகள்
- அணுகல் மற்றும் வசதிகள்
- பாதுகாப்பான பரிமாற்றங்கள்
- கடன் வாங்குவதற்கான செலவு ஃ முதலீட்டுக்கான வருவாய்
- தயாரிப்பு மற்றும் சேவை கண்டுபிடிப்புகள்
- தெளிவான தயாரிப்பு தகவல்கள்
- நிதி நிலைப்புத்தன்மை
- சேவை திறன்
- பரிவுணர்வு மற்றும் நட்புறவுமிக்க சேவை
- வியாபாரம் செய்வதில் இலகுவானத்தன்மை

**முதலீட்டாளர்கள்**
- நிலையான கீழ்நிலை
- வணிகத்தின் தொடர்ச்சித்தன்மை
- நிதி வலிமை மற்றும் நிலையுறுதித்தன்மை
- பொறுப்பு மற்றும் சமநிலையான வணிக நடத்தை
- சரியான நேரத்தில் விலை உணர்வுபூர்வமான தகவல்களை வெளிப்படுத்துதல்
- வெளிப்படைத்தன்மை
- வர்த்தகச் சின்ன நற்பெயர்
- நுளுபு கவனிப்புகள்
- புதிய இயல்புநிலை திட்டங்கள்

**ஊழியர்கள்**
- வர்த்தக தொடர்ச்சித்தன்மை
- கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு மாற்றங்கள்
- தன்னியக்கமயமாக்கப்பட்ட சுபணிச்சூழல்களுக்கு இடம்பெயர்தல்
- சுகாதார மற்றும் பாதுகாப்பு அபாயங்கள்
- சுகாதார நலன்கள் உள்ளிட்ட ஊதியம் மற்றும் நன்மைகள்
- தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு
- முழுமையான பணியிடம்
- பணியாளர் திறன் மேம்பாடு
- தொடர்ச்சியான ஊழியர்கள் ஈடுபாடு
- ஆக்கபூர்வமான கருத்து தெரிவிப்புகள்
- ரகசியத்தன்மை
- நிலையான வளர்ச்சிக்கான திட்டங்கள

## எமது பதிலளிப்பு

**வாடிக்கையாளர்கள்**
- தொற்றுநோய் நிலைமையை பொருட்படுத்தாது தொடர்ந்து பாதுகாப்பான சேவை அனுபவத்தை வழங்குதல்
- தொடர்பு நிலையங்களின் COVID பாதுகாப்பு நெறிமுறைகள்
- டிஜிட்டல் முறைமைகளுக்கு இடம்பெயர்வதை ஊக்குவித்தல்
- மக்கள் வங்கி வலையமைப்பினூடாக சிடிஎம் (CDM) பரிமாற்றங்களை மேற்கொள்ளும் வசதியாய் ஏற்படுத்தல்
- கடன் பிற்போடல்களுக்கு வாடிக்கையாளர்களுக்கு உதவுதல்
- கடன் வசதிகள் மறுசீரமைக்கப்படுத்தல்
- செலுத்தப்படாத வட்டி தொகைகளை தள்ளுபடி செய்தல்
- "பிஎல்சி ஆன்லைன்" உள்ளிட்டநேரடி தொடர்பு இல்லாத தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியது
- நேரடி தொடர்பற்ற செயல்முறைகள் அறிமுகப்படுத்தி ஊக்குவிக்கப்பட்டன
- டிஜிட்டல் பரிமாற்றங்கள் மற்றும் ஞசு குறியீடு செயல்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டன
- வாடிக்கையாளர் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன
- சமூக ஊடகங்களில் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டது

**முதலீட்டாளர்கள்**
- இடைக்கால பங்குலாபம் செலுத்துதல்
- சிறந்த நிதி செயல்திறன்
- வலுவான ஐந்தொகை
- ஒருங்கிணைந்த செயல்திறன் தகவல்களை வெளியிடுதல்
- நெறிமுறை ரீதியான கடன் வழங்கல்
- 'நிலைத்தன்மையான நிதிநிலை
- விவேகமான அபாய முகாமைத்துவம்
- கூட்டாண்மை ஆளுகை
- சுயாதீன நிறுவனங்கள் / முகவர் நிறுவனங்களின் கௌரவித்தல் / தரவரிசை படுத்தல்
- நிலையான பெறுமதி வழங்கும் மூலோபாயங்கள்
- ஈ-மெமோ தொகுதி மூலம் சேவை வழங்குவதற்கான நேரம் குறைவடைதல்

**ஊழியர்கள்**
- பலப்படுத்தப்பட்ட ஆளுகை
- தொற்றுநோய் நிலைமையினால் பாதிக்கப்படாத வேலை பாதுகாப்பு
- விரைவான தீர்வுகளுக்கு COVID விசேட செயலணி
- நெறிமுறைகளுடன் கூடிய பாதுகாப்பான பணியிடம்
- வீட்டிலிருந்து பணியாற்றும் ஏற்பாடுகள் (WFH)
- இலவச ஊழியர் போக்குவரத்து
- நிச்சயமற்ற நிலைமையினால் பாதிக்கப்படாத சம்பளம்
- ஆன்லைன் பயிற்சி மற்றும் அறிவு பகிர்வு
- தொழிலாளர் சங்கத்துடன் ஆக்கபூர்வமான ஈடுபாடு
- மூலோபாய திட்டமிடலுக்கான மெய்நிகர் யோசனை உருவாக்கம்
- தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம்
- ஊழியர்களுக்கான பாராட்டு திட்டங்கள்
- பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் "டவுன்ஹால்" அமர்வுகள்
- "Coffee With CEO" தொடர்
- பணியாளர்கள் நலன்புரி செயல்பாடுகள்

ஏற்படுத்தியது. இந்த சுகாதார மற்றும் பொருளாதார இரட்டை நெருக்கடிகளால் ஏற்பட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எதிர்கொள்ள நாம் மேற்கொண்ட முன்னாயத்தமான அணுகுமுறை முக்கிய பன்தாரர்களுடனான எமது எமது உறவை பலப்படுத்த உதவியது. எமது பங்குதாரர் ஈடுபாட்டு வழிமுறைகள், அவர்களின் கரிசனைகள் மற்றும் அவற்றுக்கான எமது பதில்கள் கீழே சாராம்சப்படுத்தியுள்ளன.

| அரசு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் | வாழங்குநர்கள் மற்றும் வர்த்தக பங்காளர்கள் | உள்ளூர் சமூகம் மற்றும் சுற்றாடல் |
|---|---|---|

**கூட்டங்கள்** ▶ **சமூக ஊடகம்** ▶ **தொலைபேசி** ▶ **எழுத்துமூல தொடர்பாடல** ▶ **மின்னனு ஊடகம்**

| அரசு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் | வாழங்குநர்கள் மற்றும் வர்த்தக பங்காளர்கள் | உள்ளூர் சமூகம் மற்றும் சுற்றாடல் |
|---|---|---|
| • சுற்றறிக்கைகள்<br>• வழிகாட்டுதல்கள் | • கேள்வி விலை அறிவித்தல்கள்<br>• வருடாந்த வழங்குநர் பதிவுகள்<br>• காலா விஜயங்கள்<br>• மேசை மீளாய்வுகள் | • சமூகங்களுடனான குறிப்பிட்ட ஈடுபாட்டு நடவடிக்கைகள்<br>• நடமாடும் கல்வி பிரச்சாரங்கள்<br>• வீதி காட்சிகள்<br>• வழங்கப்படும் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்களை சரியான நேரத்தில் பொருத்தமாக வழங்குதல் |

**நிதி நிலையுறுதித்தன்மை** ▶ **செயல்திறன்** ▶ **இணங்கியொழுகுதல்**

| அரசு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் | வாழங்குநர்கள் மற்றும் வர்த்தக பங்காளர்கள் | உள்ளூர் சமூகம் மற்றும் சுற்றாடல் |
|---|---|---|
| • வணிக தொடர்ச்சி<br>• வாடிக்கையாளர்களுக்கு தொற்று நிவாரணம்<br>• பணமில்லாத பரிமாற்றங்களை ஊக்குவித்தல்<br>• ஒழுங்கு விதிகளுக்கு இணங்குதல்<br>• ஒழுங்குமுறைப்படுத்துனருடன் கூட்டாக மேகுஜ துறையை மீளாய்வுச் செய்தல் | • பொறுப்பான பெறுகை<br>• வெளிப்படைத்தன்மை<br>• சரியான நேரத்தில் கட்டணம் செலுத்துதல்<br>• போட்டித்தன்மையான விலை<br>• போட்டித்தன்மையான ஏலம்<br>• நியாயமான ஒப்பந்தங்கள்<br>• ஞஆறு க்களுக்கான வணிக வாய்ப்புகள் | • பொறுப்பான வணிக நடத்தை<br>• வளங்களை மேம்படுத்தல்<br>• எங்கள் செயல்பாடுகளினால் ஏற்படும் நேரடி சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல்<br>• உள்ளூர் சமூகங்களை வலுவூட்டுதல் |

| அரசு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் | வாழங்குநர்கள் மற்றும் வர்த்தக பங்காளர்கள் | உள்ளூர் சமூகம் மற்றும் சுற்றாடல் |
|---|---|---|
| • இணக்கம் மற்றும் அபாய முகாமைத்துவத்தால் பலப்படுத்துதல்<br>• ஒரு நிலைத்தன்மை மீளாய்வை மேற்கொள்ளுதல்<br>• QR குறியீடு ஊக்குவிப்புக்காக CBSL உடன் ஒத்துழைத்தல்<br>• செலுத்த வேண்டியவற்றை சரியான நேரத்தில் செலுத்துதல்<br>• அறிக்கைகளை சரியான நேரத்தில் கோவைப்படுத்தல்<br>• ஒழுங்குமுறை மாற்றங்களை பின்பற்றுதல் | • வெளிப்படையான பெருக்கை செயல்முறைகள்<br>• வருடாந்த வழங்குநர் பதிவு<br>• பற்றுசீட்டுகளற்ற பரிமாற்றங்கள்<br>• ஆன்லைன்' ஏலம்<br>• SME களை சப்ளையர் தொகுதியில் சேர்த்தல் | • தேசிய பதிலளித்து நடவடிக்கைகளை ஆதரிப்பதற்காக COVID நிதியத்திற்கான பங்களிப்பு<br>• தொற்றுக்கு பின்னரான தேசிய பதிலளிப்பை ஆதரிக்க சமூக பொறுப்புணர்வு (CSR) முயற்சிகள்<br>• பணிகளை தன்னியாகமயமாக்குதல் மூலம் உயரிய வள பயன்பாடு<br>• COVID தடுப்பு மற்றும் வணிக மறுமலர்ச்சி பற்றிய கல்வி<br>• அளவிடப்பட்ட கார்பன் அடிச்சுவடு<br>• சமூகங்களை வலுவூட்டுவதற்கான சமூக பொறுப்புணர்வு (CSR) முயற்சிகள்<br>• சுற்றாடல் பாதுகாப்புக்கான சமூக பொறுப்புணர்வு (CSR) முயற்சிகள் |

# செயலாற்றும் சூழல்



2020/21 நிதி ஆண்டில் COVID-19 தொற்றுநோய் காரணமாக வர்த்தகச் சூழல் குறிப்பிடத்தக்க வகையில் மாற்றமடைததனால் சர்வதேச எல்லை மூடுதல், முடக்குதல், விநியோக சங்கிலி இடையூறுகள் மற்றும் பரந்த அளவிலான நுகர்வோர் செலவின பழக்கவழக்க மாற்றங்கள் போன்ற நெருக்கடி நிலைகள் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் வணிகர்களுக்கு குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. அது தொடர்புடைய விளக்கப்படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதனால் அதிகளவிலானோர்களின் பொருளாதாரத்தை சீர்குலைத்தும் வகையில் ஏற்பட்ட பரந்தளவிலான வேலை இழப்புகள் மூலம் பொருளாதாரங்களில் ஏற்பட்ட காயங்கள் கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் காணக்கூடியதாக இருந்தது. முதல் காலாண்டில் சுற்றுலாத்துறை, ஓய்வுத்துறை மற்றும் மற்றும் அதன் துணை சேவைகள் முதல் காலாண்டில் பூஜ்ஜிய விருந்தினர் வருகையினாலும் அதனை அடுத்து அவற்றின் கொள்ளளவு மிகவும் குறைவாகவே பயன்படுத்தப் பட்டமையாலும் அத்துறைகள் சீரழிவுக்கு உள்ளாகின. அவற்றை வாழ்வாதாரமாக நம்பியிருந்தவர்கள் கடும் பொருளாதார இன்னல்களுக்கு முகம்கொடுத்தனர். விமான, தரை, மற்றும் கடல் போக்கோவரத்து உட்பட பயணிகள் போக்குவரத்துச் சேவைகளும் சமூக இடைவெளி பேணுதல் காரணமாக பெருமளவு குறைந்த கொள்ளளவு பயன்பாட்டினால் இன்றுவரையும் அதேபோன்று பாதிக்கப்பட்டுள்ளது. சுகாதார மற்றும் பாதுகாப்பு கரிசனைகள் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மக்களின் அணுக்கள் முறைகளிலும், அவர்கள் வேலை செய்யும் வழிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நிகழ்நிலை கூட்டங்கள் மற்றும் ஒன்லைன் கூட்டு தளங்கள் மூலம் ஒன்லைன் தலங்களுக்கு இடம்பெயருதல் துரிதமாகியுள்ளது..

## இலங்கை

இலங்கை பொருளாதாரம் அதன் தவிர்க்க முடியாதது கடன் தேவை மீதான தாக்கத்தினால் 2019 ஆண்டின் 2.3மூ வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது உண்மையான சொற்களில் 3.6மூ சுருக்கம் பதிவு செய்யப்பட்டது

பணவீக்கம் ஆண்டு முழுவதும் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் இருந்தது மற்றும் குறைந்த எரிபொருள் விலைகள் கணிசமாக அதிகரித்த உணவுப்பொருட்கள் விலையை இலகுவாக்கியது.

குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட வியாபாரங்கலுக்கான கடன் பிற்போடல் வசதிகளுடனான உள்வாங்கும்தன்மையான நாணயக் கொள்கைகள் மிகவும் தேவைப்பட்ட நிவாரணங்களை வழங்கி தொடர்ந்து இரண்டாவது ஆண்டிலும் தங்களை காத்துக்கொள்ள அவர்களுக்கு ஆதரவளித்தது. ஆண்டில் மூலதன வெளியேற்றங்கள் மற்றும் இறையாண்மை தரமிறக்குதல் நாணயத்தின் மீது அழுத்தம் ஏற்படுத்தி நிதியாண்டின் பிற்பகுதியில் கணிசமாக அதனை குறைமதிப்பீட்டுக்கு உள்ளாக்கின..

### வட்டி விகிதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி விகிதம்




மூலம்: சர்வதேச நாணய நிதியம்

### நாணய விகிதம் மற்றும் வர்த்தகம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### பணவீக்கம் - CCPI




மூலம்: விலைகள் மற்றும் ஊதியப் பிரிவு, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம்.

மேலே உள்ள அனைத்து பணவீக்க விகிதங்களும் 12 மாத நகரும் சராசரிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டன

### புதிய மோட்டார் வாகன பதிவுகள்




மூலம்: மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

## NBFI துறை

இந்த ஆண்டில் பல காரணிகளால் மேகுஜ துறை வருவாய் அதிகரித்து 2021 மார்ச் மாதமாகும்போது அவற்றின் நிதிநிலைகள் வலுவடைந்தது. முதல் காலாண்டில், வாடிக்கையாளர்களுக்கு கடினமான காலப்பகுதிக்கு முகம்கொடுக்க ஆதரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டு, இரண்டாவது காலாண்டில் வளர்ச்சியடைவதற்காக மீட்டுதல் செயல்முறைகளை வலுவூட்டுவதில் கவனம் செலுத்தப்பட்டது. துறையின் 57மூ கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு பங்களிக்கும் லீசிங் தொகையின் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக மிதமான வளர்ச்சியினால் கடன் மற்றும் முற்பண மொத்த தொகை குறைவடைந்து. அத்துடன் ஊழுஏஐனு-19 முடக்குதல் நடவடிக்கைகளின் தாக்கத்தினால் வியாபார துறையில் சுருக்கம் ஏற்பட்டது.

### வருவாய்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### சொத்துக்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### நிதியிடல்




*Source: Central Bank of Sri Lanka*

| | மார்ச்-19 | மார்ச்-20 | மார்ச்-21 |
|---|---|---|---|
| மொத்த கடன்களுக்கான மொத்த செயல்படாத கடன்கள் (%) | 7.71 | 11.37 | 11.30 |
| மொத்த கடன்களுக்கான தேறிய செயல்படாத கடன்கள் (%) | 2.29 | 3.79 | 2.82 |
| மொத்த சொத்துகளுக்கான மொத்த தேறிய கடன்கள் (%) | 77.95 | 77.25 | 76.22 |
| ஒதுக்கீடு அளவு விகிதம் (%) | 58.77 | 54.72 | 64.16 |

## மேற்பார்வை

2021 ஏப்ரல் மாதத்தில், சாதகமான நிதியியல் கொள்கைகளின் காரணமாக பொருளாதார செயற்பாடுகள் எழுச்சி பெற்று வந்தமையாலும், மக்கள் சமூக இடைவெளியை பேணும் ஒரு வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டதாலும் அத்துடன் தடுப்பு மருந்து வழங்கும் செயல்பாடுகள் துரிதமாக நடைபெறுவதாலும் சர்வதேச நாணய நிதியம் தனது கணிப்புகளை மேல்நோக்கி மாற்றியமைத்தது. இலங்கையும் 2021 இல் 4மூ வளர்ச்சியை கணித்திருந்தது. எனினும், 2021 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தெற்காசியாவின் பெரும்பதிகளில் பரவிவந்த புதிய அலைகள் மற்றும் சிரமங்களும் காரணமாக மே மாதத்தின் பிற்பகுதியில் நாடு பூட்டப்பட்ட நிலையில் முன்கணிப்புகள் பங்கப்பட்டிருக்கலாம். பீப்பிள்ஸ் லீசிங் செயல்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும், கேள்விக்குறியாக நிலையிலுள்ள சில மாறிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| குறிகாட்டி | பீப்பிள்ஸ் லீசிங் க்கான தாக்கம் |
|---|---|
| **பணவியல் கொள்கை மற்றும் வட்டி விகிதங்கள்** | தற்காலிகமாக இறக்குமதியை நிறுத்துதல் இல்லாவிட்டால் குறைக்கப்பட்ட கடன் செலவுகள் காரணமாக மோட்டார் வாகனங்களுக்கான கேள்வி அதிகரிக்கும். மேலும், இது வைப்பு திரட்டல் செலவை நேரடியாக பாதிக்கிறது |
| **கடன் வளர்ச்சி** | தனியார் கடன் வளர்ச்சியைக் குறைவடைதல் அடிப்படையாக சொத்துக்கள் வளர்ச்சியில் வரவிருக்கும் சவால்களின் ஒரு முன்னனி அறிகுறியாகும் |
| **பணவீக்கம்** | அதிக பணவீக்கம் குறிப்பாக அத்தியாவசியமற்ற பொருட்களில் நுகர்வோர் செலவினங்களை அதைரியப்படுத்தும் சாத்தியம் உள்ளது |
| **வணிக பற்றாக்குறை** | மோட்டார் வாகன தற்காலிக இறக்குமதிகள் இடைநிறுத்தல் எதிர்கால கடன் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படலாம். |
| **ரூபாய் தேய்மானம்** | அமெரிக்க டாலர் மற்றும் யூரோவுக்கு எதிராக ரூபாயின் தேய்மானம் புதிய வாகனங்கள் இறக்குமதி விலையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் மற்றும் பயன்பத்தப்பட்ட வாகன சந்தையில் மோட்டார் வண்டிகளுக்கான கேள்வியே கடன் வளர்ச்சிக்கு முக்கிய காரணியானது. அதன் மூலமும் விலையனால் தூண்டப்பட்ட பணவீக்கம் ஏற்படும் வாய்ப்புள்ளதால் உண்மையான பொருளாதார ஸ்வரூபத்துக்கு ஏற்படும் விளைவுகளை கட்டுப்படுத்தும் அழுத்தம் மத்திய வங்கிக்கு ஏற்பட்டு வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்படலாம் |
| **இலங்கை சர்வதேசம் இறையாண்மை முறிகளின் வருமானம்** | SLISB களில் அதிகரிக்கும் வருவாய் புதிய டாலர் கடன் வழங்குதல் மற்றும் அதன் மூலம் வெளிநாட்டு கடன் கொடுப்பனவுகளில் வரவிருக்கும் மீள செலுத்தல்களுக்கு சமிக்ஞை செய்கிறது. அதன் மூலம் வெளிப்படுவதாவது, வட்டி விகிதங்களில் தாக்கங்களைக் கொண்ட உள்நாட்டு மூலங்களிலிருந்து குறைநிரப்பு நிதியிடலின் பெரும்பாலான பங்கை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். இதில் பெரும்பாலும் வட்டி விகிதங்கள் அதிகரிப்பதற்கான அழுத்தங்கள் இருக்கலாம். |

# COVID-19 க்கு எமது பதில்



GRI 403-1, 403-3, 403-7

ஏப்ரல்-20 | மே-20 | ஜுன்-20 | ஜுலை-20 | ஆகஸ்ட-20 | செப்ட-20

First Wave




- அரசாங்கத்தால் மார்ச் இல் நாடு முழுவதும் முடக்குதல் விதிக்கப்பட்டது
- முடக்குதலின் பொது சமூக பொருளாதார பிரச்சினைகள் எழுந்தது
- அரசினால் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகள் வழங்குவதற்கான விதிமுறைகள் வழங்கப்பட்டது
- சமூக இடைவெளியை பேணிக்கொண்டு தமது பணியிடங்களில் பணிபுரிய மக்கள் அனுமதிக்கப்பட்டனர்
- பொதுக்கூட்டங்கள் தடைசெய்யப்பட்டது
- மக்களுக்கு புதியதொரு சாதாரண வாழ்கை வழக்கமாகியது

**பீப்பிள்ஸ் லீசிங் மீதான பாதிப்புக்கு**

- கிளைகள் மூடப்படல்
- புதிய வியாபாரங்களை செயலாக்குவதில் சிரமங்கள்
- வாடிக்கையாளர்கள் COVID ஆல் பாதிக்கப்படுவதால் சேகரிப்பு சிக்கல்கள்
- செயல்படாத கடன் (NPA) விகிதம் அதிகரித்தல்
- வர்த்தக செயல்பாடுகள் வரையறுக்கப்பட்டதால் திரவத்தன்மை அதிகரித்தல்
- ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தேவைகள்

**எமது பதில்**




### வாடிக்கையாளர்களுக்கு

- மனிதர்களால் இயக்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட கிளைகள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் மூலம் தடையற்ற சேவையை வழங்குதல்
- சரியான நேரத்தில் வட்டி செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குதல்
- மக்கள் வங்கியுடன் இணைந்து நடமாடும் யுவுஆ பணம் மீளப்பெறும் வசதிகள் வழங்குதல்.

### ஊழியர்களுக்கு

- ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிச் செய்தல்
- ஊழுஏஐனு-19 விசேட செயலணி உருவாக்கப்பட்டது
- ரோஸ்டர் திட்டங்கள், றுகுர் வசதிகள், போக்குவரத்து வசதிகள்
- சம்பள குறைப்பு அல்லது பணிநீக்கங்கல் இல்லை

### வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் அரசாங்கத்துக்கு அளவு வழங்குவதற்காகவும்

COVID-19 தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணிகங்கள்க்கு நிவாரணம் வழங்கும் அரசாங்க முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குதல்

- 50மூ க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் 1 வது கடன் பிற்போடலுக்குத் தகுதி பெற்றனர்
  - **கடன் வசதிகளின் எண்ணிக்கை** - 57,253
  - **மொத்த கடன் தொகை** - ரூ.67.96 பில்லியன்
- செலுத்தப்படாத வட்டித் தொகைகள் ஒன்பது மாதங்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டன
- ரூ. 8.13 பில்லியன் மதிப்பைக்கொண்ட 4,362 பேருந்துகளுக்கு 4மூ வட்டி சலுகை வழங்கப்பட்டது

### வழங்குநர்களுக்கு

SLIP முறைமை மற்றும் பணப்பரிமாற்றங்கள் மூலம் சரியான நேரத்தில் பணம் செலுத்தப்பட்டது

### உள்ளூர் சமூகங்களுக்கு

- சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு மேம்படுத்தலுக்காக "இட்டுகம கோவிட் -19 நிதிக்கு" நன்கொடையாக ரூ.5 மில்லியன் வழங்கப்பட்டது - முதல் சில நிறுவனங்களில் ஒன்று
- 53 "செனெஹச" புலமைப்பரிசில் பெருநர்களுக்கு அருகிலுள்ள பீப்பிள்ஸ் லீசிங் கிளைகள் மூலம் ஆன்-லைன் முறையில் கல்வியைத் தொடர மின்னணு சாதனங்கள் வழங்கப்பட்டது
- திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனைக்கு 10 ஐகெசயசநன வெப்பமானிகளின் வழங்கப்பட்டது
- COVID 19 தயார்நிலையை அதிகரிப்பதற்காக 21 அரச பாடசாலைகளில் கை கழுவுதல் மற்றும் தனிமைப்படுத்தல் அலகுகள் நிறுவப்பட்டன

| அக்டோ-20 | நவம்பர்-20 | டிசம்பர்-20 | ஜனவரி-21 | பிப்ரவரி-21 | மார்ச்-21 |
|---|---|---|---|---|---|




- செப்டம்பர் 23 முதல் மினுவாங்கொடை மற்றும் தீவுலபிட்டிய கொத்து
- தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பகுதிகளின் தேவை அடிப்படையில் விதிக்கப்பட்டது
- தடுப்பூசி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது
- நிலைமை படிப்படியாக கட்டுப்படுத்தப்பட்டு நாளாந்தம் கண்டறியும் நோயாளர் எண்ணிக்கை 2021 சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு வரை குறைவடைந்து.

**பீப்பிள்ஸ் லீசிங் மீதான பாதிப்புக்கு**

- கம்பஹா மாவட்டத்தில் பல கிளைகள் மூடப்பட்டன
- கம்பஹா மாவட்டத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டவர்கள்
- கடுமையாக பாதிக்கப்பட்டனர்
- புதிய வியாபாரங்களை மேம்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டன
- சில ஊழியர்களுக்கு வைரஸ் பற்றிக்கொண்டதால் நாடு முழுவதும் பல கிளைகள் மூடப்பட்டன
- காப்பு திட்டங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் ஆதரவு மூலம் தடையில்லா சேவை உறுதிச்செய்யப்பட்டது

**எமது பதில்**




**வாடிக்கையாளர்களுக்கு**

- வர்த்தக அளவுகள் அதிகரிக்கப்பட்டன.
- வர்த்தக பங்காளர்களுடனான பல திட்டங்களால் வாடிக்கையாளர்கள் பயனடைந்தனர் - இந்திரா ட்ரேடேர்ஸ்/புஞ்சி கார் நிவஸ

**ஊழியர்களுக்கு**

- ஊழியர்களுடன் ஈடுபாடு டிஜிட்டல் தளங்கள் மூலம் மேம்படுத்தப்பட்டது
- ஊழியர்களின் மன உறுதியை அதிகரிக்க - மெய்நிகர் மூலோபாய மன்றம் /பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் டவுன் ஹால் கூட்டம்
- பாதிக்கப்படக்கூடிய ஊழியர்களுக்கு திடீர் பிசிஆர் சோதனைகள் / ராபிட் ஆன்டிஜென் சோதனைகள் நடத்தப்பட்டன
- சாதாரண கையொப்பத்துக்கு பதிலாக டிஜிட்டல் கையொப்பத்துடன் மின்னணு ஆவணங்களை அறிமுகம் செய்தல்
- வட்டி இல்லாத கடன் வசதியை வழங்குதல்
- பாதிக்கப்பட்டஊழியர்களின் குடும்பங்களுக்கு அத்தியாவசிய வீட்டு பொருட்களை வழங்குதல்

**வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் அரசாங்கத்துக்கு அளவு வழங்குவதற்காகவும்**

- ரூ. 25.36 பில்லியன் மதிப்புடைய 15,722 கடன் வசதிகளுக்காக இரண்டாவது கடன் பிற்போடுதல் சலுகை வழங்கப்பட்டது
- பயணிகள் போக்குவரத்து / சுற்றுலாததுறை வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கப்பட்டது

**வழங்குநர்களுக்கு**

- SLIP முறைமை மற்றும் பணப்பரிமாற்றங்கள் மூலம் சரியான நேரத்தில் பணம் செலுத்தப்பட்டது

**உள்ளூர் சமூகங்களுக்கு**

- கண்டிதேசிய மருத்துவமனைக்கு 05 வயர்லெஸ் ஸ்டெதாஸ்கோப்புகள் வழங்கப்பட்டன
- மிகவும் கடுமையான COVID நோயாளிகளுக்காக ஒரு எடுத்துச் செல்லக்கூடிய (ிழசவயடிடந) எக்கோ அல்ட்ராசவுண்ட் இயந்திரம், 110 உணவளிக்கும் பைகள் மற்றும் தீவிர சிகிச்சைகளை மேம்படுத்த ஒரு குழந்தை ஸ்டெதாஸ்கோப் வழங்கப்பட்டன

**COVID நெருக்கடிக்கு மத்தியில் பீப்பல்ஸ் லீசிங் ஆண்டு இறுதி சாதனைகள்**

- மார்ச் 2021 இல் மாதத்திற்கு வரலாற்றில் மிக உயர்ந்த வணிகத் அளவுகள்
- மார்ச் 2021 இல் மாதத்திற்கு வரலாற்றில் மிக அதிகமான சேத இழப்பு மீளப்பெறுதல்
- கடந்த காலாண்டில் வரலாற்றில் மிக உயர்ந்த காலாண்டு லாபம்
- வரலாற்றில் மிக உயர்ந்தது குழுமத்தின் லாபம்

# பொருள் விடயங்களை தீர்மானித்தல்

GRI 102-46

ஒரு நிச்சயமற்ற சூழலினூடாக பயணிப்பதற்காக எமது பொருள் விடயங்களை கண்டறிந்து அவற்றை முன்னுரிமை பத்தும் தேவையை ஆண்டின் செயல்படும் சூழல் கோடிட்டு காட்டுகின்றது. நீண்டகால மதிப்பை உருவாக்குவதற்கான குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்டகால முன்னுரிமைகள் பற்றிய உயர் மட்ட கலந்துரையாடல்கள் மூலோபாயங்களையும் வளங்களையும் சீரமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. நிறுவப்பட்ட நிலையணைத்தன்மை கட்டமைப்புகள் மற்றும் எமது மதிப்புகள், தீர்மானங்களுக்கான குறிப்பு கட்டமைப்பாக அமையும் விவாதங்களுக்கு அடித்தளமாகும்.

கவனத்திற்கொள்ளும் ஆண்டினுள் தற்போதைய பொருள்தன்மை மதிப்பீட்டை மீளாய்வு செய்வதற்காக ஒரு வெளிப்புற ஆலோசகர் நிறுவனத்தின் சேவையை நம் போற்றுக்கொண்டதோடு, ருமுு பொறுப்புக்கூறல் தரணியமங்கள் AA1000 மற்றும் GRI தரணியமங்களின் அடிப்படையில் இந்த மதிப்பீட்டு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. சாத்தியமான பொருள் விடயங்களின் ஒரு நீண்ட பட்டியல் உருவாக்கப்பட்டு, பின்னர் எமது திருத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் பங்குதாரர்கள் ஈடுபட்டு செயல்முறைகள் மூலம் உள்ளீடுகள் வடிகட்டப்பட்டு, நிலைத்தன்மையான அபிவிருத்தி விளக்குகளுடன் வரைப்படம் ஆக்கப்பட்டது. மூன்றாம் காலாண்டின் முடிவில் சீரமைப்பை உறுதிச் செய்ய இது உதவியது.

ஆண்டி இறுதியில், தற்போது நிலவும் வணிகச் சூழலை கவனத்தில்கொண்டு, தற்போதுள்ள முன்னுரிமைகளுக்கு ஏற்றதாக சீரமைப்பதற்காக, பொருள் விடயங்களை முகாமைத்துவத்தினால் உள்ளக ரீதியாக மீண்டும் மீளவுச் செய்யப்பட்டது. அதன் செயல்முறை மற்றும் முடிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**பீப்பல்ஸ் லீசிங்**

- ஐ.நா. இன் நிலைத்தன்மையான அபிவிருத்தி இலக்குகள்
- தொடர்பாடல் நிலைத்தன்மை தொடர்பான ஊளுநு பரிந்துரைகள்
- புசுஐ தரநிலைகள்
- கூட்டாண்மை ஆளுமைக்கான சிறந்த வழக்கங்கள் குறியீடு

**நீண்ட பட்டியல்**

- செயலாற்றும் சூழ்நிலை
- பங்குதாரர் கவனங்கள்
- மூலோபாய முன்னுரிமைகள்
- எமது நுளுபு கட்டமைப்பு

**வடிப்பான்கள்**

- தொற்றுநோய் காரணமான வரம்புகள்
- மூலோபாய இலக்குகளில் தாக்கம்
- பங்குதாரர்கள் மீதான பாதிப்பு
- ஒழுங்குமுறை மற்றும் இணக்க தேவைகள்
- சேவை விநியோக தாக்கம்

**பொருள் விடயங்களை**



GRI 102-49

நடத்தப்பட்ட வருடாந்த மீளாய்வின்போது போது, 2018/19 நிதியாண்டில் அடையாளம் காணப்பட்ட பொருள் தலைப்புகளின் பட்டியலிலிருந்து பின்வரும் பத்து GRI தலைப்புகள் விலக்கப்பட்டன மற்றும் நான்கு தலைப்புகள் சேர்க்கப்பட்டன.தொடர்புடைய GRI தலைப்புகளைத் தவிர்ப்பதற்கும் சேர்ப்பதற்கும் விளக்கங்கள் பின்வருமாறு.

| GRI தலைப்பு | GRI தலைப்புகளைத் தவிர்ப்பதற்கும் சேர்ப்பதற்கும் விளக்கங்கள் |
|---|---|
| **தவிர்க்கப்பட GRI** | |
| **GRI 202:**<br>சந்தை இருப்பு | பீப்பிள்ஸ் லீசிங் தமது சிரேட்ட முகாமைத்துவ பதவிகளில் வெளிநாட்டினரை நியமிக்கவில்லை. நிறுவனத்தின் ஆரம்ப நிலை ஊதியங்கள் குறைந்தபட்ச ஊதியத்திற்கு மேலாகவும் மற்றும் இணையான வங்கி / நிதி வல்லுநர்கள் நுழைவு நிலை ஊதியங்களுடன் இணையாகவும் உள்ளன. |
| **GRI 203:**<br>நேரடியற்ற பொருளாதார பாதிப்புகள் | நிறுவனத்திற்கு pro-bono அல்லது சமூக கருணை முதலீடுகள் தொடர்பான எந்தவித கொள்கையும் இல்லை. உள்கட்டமைப்பு முதலீடு பொறுப்பு குறித்த குறிப்பிடத்தக்க எதிர்பார்ப்பு எதுவும் சமூகம், அரசியல் கட்சிகள் அல்லது உள்ளூர் அதிகாரிகளுக்கு இல்லை. இருப்பினும், சில பொது உள்கட்டமைப்பு திட்டங்கள் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு முயற்சிகளின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படுகின்றன. |
| **GRI 204:**<br>பெறுகை நடைமுறைகள் | பெறுகை நடைமுறைகளுடன் தொடர்புடைய நேரடி நிதி தாக்கம் இருந்தாலும், எழுதுபொருள், கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் மின்னணு பொருட்கள் வழங்குநர்கள் மற்றும் வெளிப்புற சேவை வழங்குநர்கள் முக்கியமற்ற வலைகளுக்கு மாத்திரமே. அவற்றுக்கான எதுவித குறிப்பிட்ட ஒழுங்குமுறை தேவைகளும் காணப்படவில்லை. |
| **GRI 206:**<br>போட்டி எதிர்ப்பு நடத்தை | மிகவும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உள்ளாகும் ஒரு தொழில்துறையாக இருப்பதனால், உள்ளக கொள்கைகள், அரசாங்கத்தின் நேரடியற்ற பங்குடைமை மற்றும் ஏனைய விதிமுறைகள் காரணமாக போட்டி எதிர்ப்பு நடத்தைகள் எழுவதற்கான வாய்ப்புகள் இல்லை. நாட்டின் சட்டதிட்டங்கள், ஒழுங்குமுறைபடுத்தல் அமைப்பின் வழிகாட்டுதல் மற்றும் பட்டயல்படுத்தல் தேவைகளும் காணப்படுகின்றன. தொடர்புடைய அபராதங்கள் மற்றும் சட்ட கட்டணங்களுக்கான நேரடி நிதி தாக்கம் ஏற்படலாம். |
| **GRI 301:**<br>பொருட்கள் | பீப்பிள்ஸ் லீசிங் ஒரு சேவை வழங்குநராக இருப்பதால் பொருட்கள் மூலம் ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க நேரடி நிதி தாக்கம் இல்லை. கொள்வனவு செய்யும் முக்கிய பொருட்களாவது காகிதம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உபகாரணங்களாகும். வளங்களின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் சுற்றாடல் அடிச்சுவடுகளை குறைப்பதற்கும் வளங்களின் நிலையான பயன்பாடு பீப்பிள்ஸ் லீசிங் நிறுவன அளவிலான முன்னுரிமை ஆகும். |
| **GRI 304:**<br>உயிரின பல்வகைத்தன்மை | உயிரின பல்வகைத்தன்மையை பாதுகாக்க சட்டங்களும் விதிமுறைகளும் நடைமுறையில் உள்ளன. ஆனாலும், உயிரின பல்வகைத்தன்மை மீது நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகள் மூலம் எந்தவித நேரடி தாக்கமும் இல்லை. உயிரின பல்வகைத்தன்மையுடைய பகுதிகள் அருகாமையில் நிறுவனத்திற்கு கிளைகள் இல்லை என்பதுடன் பொறுப்பான கடனை ஊக்குவிக்கிறது. |
| **GRI 402:**<br>தொழிலாளர் உறவுகள் | கூட்டு பேரம் பேசுதல்/தொழிற்சங்க நடவடிக்கை மீது நாட்டின் விதிமுறைகள் உள்ளன. நிறுவனம் முக்கியமாக லுவலக நேரங்களில் மாத்திரம் இயங்குவதனால் குறிப்பிடத்தக்க நேரடி தாக்கம் எதுவும் இல்லை. |
| **GRI 408:**<br>சிறுவர் தொழிலாளி | ஒரு நிதி சேவை வழங்குநராக இருப்பதால், சிறுவர் தொழிலாளர் நிகழ்வுகள் இடம்பெற எந்தவகையிலும் சாத்தியமில்லை. நிறுவனம், சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை வெளிப்புற மனிதவள சேவை நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்வதுடன் பணியமர்த்தப்படும் அனைத்து ஊழியர்களும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பதை உறுதி செய்கிறது. |
| **GRI 409:**<br>கட்டாயப்படுத்தப்பட்ட, கட்டாய ஊழியர்கள் | ஒரு நிதி சேவை வழங்குநராக இருப்பதால், நிறைவேற்று மட்டத்திலுள்ளவர்கள் தேவைப்படும்போது அதிக நேரம் வேலை செய்தாலும், கட்டாய உழைப்பு நிகழ்வுகள் எந்தவகையிலும் சாத்தியமில்லை. |
| **GRI 412:**<br>மனித உரிமைகள் மதிப்பீடு | மனித உரிமைகள் தொடர்பாக நாட்டின் விதிமுறைகள் உள்ளன மற்றும் உள்ளடக்கம் "பாகுபாடு இல்லாத" எனும் தலைப்பின் கீழ் உள்ளது. |
| **சேர்க்கப்பட்ட GRI தலைப்புகள்** | |
| **GRI 207:**<br>வரி | வரிவிதிப்பு தொடர்பான நாட்டின் சட்டங்கள் உள்ளன. வரிவிதிப்பின் விளைவாக நேரடி நிதியியல் பாதிப்புகள் காணப்படுகின்றன. நிறுவனம் வரி தொடர்பான அனைத்து விதிமுறைகளையும், அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளையும் கடைபிடிக்கவும் சரியான நேரத்தில் உள்நாட்டு இறைவரை திணைக்களத்துக்கு வரி செலுத்தவும் கடமைப்படுள்ளது. பாரிய அளவிலான கூட்டாண்மைகள் சரியான நேரத்தில் உரிய வரிகளை செலுத்துதல் தொடர்பாக சமூக எதிர்பார்ப்பும் உள்ளது. |
| **GRI 306:**<br>கழிவுகள | கழிவு முகாமைத்துவம் தொடர்பாக நாட்டின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன. மின் கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக கழிவு முகாமைத்துவ சட்டங்களில் உள்ளடங்குவதுடன் நிலத்தை நிரப்புவதற்காக அவற்றை அகற்றுவதற்கு அனுமதி இல்லை. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சான்றுபெற்ற கழிவு மீள்சுழற்சி சேவை வழங்குநர்கள் மூலம் காகிதம் மற்றும் மின் கழிவுகள் மீது சிறியளவிலான நேரடி நிதி நன்மைகளை அடையும் சாத்தியமுள்ளது. உள்ளூர் சமூகங்கள் மற்றும் சுற்றாடல் நேயமிக்க குழுக்கள் குழுக்கள் பொறுப்பான கழிவு முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பாக எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளனர். வங்கிகள் மற்றும் பாரியளவிலான மேகுஐ கள் காகித மீள்சுழற்சி மற்றும் பொறுப்பான மின் கழிவு அகற்றுதல் முகாமைத்துவம் தொர்பாக அறிக்கையிட பொறுப்பேற்றுள்ளன. |
| **GRI 407:**<br>ஒன்றுசேர்தல் மற்றும் கூட்டு பேரம் பேசும் சுதந்திரம் | தொழிற்சங்கங்கள் தொடர்பாக நாட்டின் விதிமுறைகள் நடைமுறையில் உள்ளத்துடன் நிறுவனத்தின் கொள்கைகள் எந்தவொரு ஊழியரும் தொழிற்சங்கத்தில் சேருவதை தடுக்கவில்லை. ஊழியர்கள் வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்புக்கொள்வதனால் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மேலெழும் எந்தவொரு கருத்து வேறுபாடும் சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பதனால் நேரடி நிதி பாதிப்பு ஏற்படலாம். |
| **GRI 416:**<br>வாடிக்கையாளர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | பாதுகாப்பிற்கான பொதுவான எதிர்பார்ப்புகளுக்கு மேலதிகமாக, தொற்றுநோய் நிலைமையினால் வாடிக்கையாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கான முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. COVID தடுப்பு தொடர்பான பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் தயார்நிலையை பேணுதல் அவசியமானதால் இதன் மூலம் நிறுவனத்திற்கு நேரடி நிதி தாக்கம் உள்ளது. |

# பொருள் விடயங்களை தீர்மானித்தல



GRI 102-47,103-1, 207-2

| முன்னுரிமை தரவரிசை 2020/21 | பொருள் தலைப்பு | விளக்கங்கள் | GRI பொருள் தலைப்பு பெயர் மற்றும் குறிப்பு எண் |
|---|---|---|---|
| 1 | சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | புதிய அலைகள் மற்றும் வைரஸின் மாறுபடும் தன்மை தொற்றுநோயின் காலம் மற்றும் தாக்கம் குறித்து கவனத்தை ஈர்ப்பதனால் எங்கள் ஊழியர்களின் மற்றும் வாடிக்கையாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முக்கிய முன்னுரிமையாக மேலும் விளங்குகின்றது. | GRI 403 - தொழில்சர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு<br>GRI 410 - பாதுகாப்பு நடைமுறைகள்<br>GRI 416 - வாடிக்கையாளர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு |
| 2 | நிலையான நிதியிடல் மூலம் நிலையான வளர்ச்சி | எமது பங்குதாரர்களுக்கு பகிரப்பட்ட மதிப்பை உருவாக்குவதால் நிலையான வணிக வளர்ச்சியை நாம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. காலநிலை மாற்றங்களின் பாதகமான விளைவுகளை தழுவுதல் மற்றும் குறைப்பதற்கான நிதியிடலானது எதிர்நோக்கு சக்தியை கட்டியெழுப்ப முக்கியமானது மற்றும் அது ஒரு வணிக வாய்ப்பாகவும் அமைகின்றது. | GRI 201 - பொருளாதார செயல்திறன் |
| 3 | முழுமையான நிதியிடல் | இது இருப்புக்கான எங்கள் பகிரப்பட்ட நோக்கம் மற்றும் நாட்டின் முழுமையான வளர்ச்சியை நோக்கிய ஒரு முக்கிய படியாகும். | |
| 4 | வாடிக்கையாளர் அனுபவம் | ஒரு நேர்மறையான வாடிக்கையாளர் அனுபவமானது, விசுவாசத்தை ஊக்குவிக்கிறது, எமது வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்ள உதவுகிறது, மற்றும் எமது வர்த்தகச் சின்னத்தின் நிலையை உயர்த்துகிறது. | GRI 417 - சந்தைப்படுத்தல் மற்றும் அடையாளப்படுத்தல் |
| 5 | நெறிமுறைகள், ஒருமைப்பாடு மற்றும் இணக்கம் | பயன்மிக்க வர்த்தக முயற்சிகளுக்கான வழிகாட்டுதல் கோட்பாடுகளுக்கு எங்கள் தன்னார்வ பின்பற்றுதல் மற்றும் உரிய சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் தரநிலைகளுக்கான ,ணக்கம் என்பன மூலம் செயல்படுவதற்கான எங்கள் சமூக உரிமத்தை பாதுகாக்கப்படும். | GRI 205 - ஊழல் எதிர்ப்பு<br>GRI 207 - வரி<br>GRI 307 - சுற்றாடல் இணக்கம்<br>GRI 308 - வழங்குநர் சுற்றாடல் மதிப்பீடு<br>GRI 414 - வழங்குநர் சமூக மதிப்பீடு<br>GRI 419 - சமூக, பொருளாதார இணக்கம்<br>GRI 413 - உள்நாட்டு சமூகம் |
| 6 | மனித திறமை வளர்ச்சி | எமது ஊழியர்கள் எமது சேவைகளின் தூதுவர்களானதோடு பயிற்சிகள் மூலம் அவர்களின் செயல்திறன், ஈடுபாடு, தக்கவைத்தல் மற்றும் வளர்ச்சி என்பவற்றை மேம்படுத்துகிறது. | GRI 401 - வேலைவாய்ப்பு<br>GRI 404 - பயிற்சி மற்றும் கற்றல்<br>GRI 405 - பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்பு<br>GRI 406 - பாகுபாடு இல்லாமை<br>GRI 407 - ஒன்றுசேர்தல் மற்றும் கூட்டு பேரம் பேசும் சுதந்திரம |
| 7 | வளங்கள் தரமுயர்த்தல் | இது சிறந்த வருவையாய் பெறுவதற்க்காக செலவினங்களைக் குறைக்க உதவுகிறது | GRI 302 - வலுசக்தி<br>GRI 306 - கழிவு<br>GRI 305 - உமிழ்வுகள் |
| 8 | டிஜிட்டல்மயமாக்குதல் | இது செயல்திறனை மேம்படுத்தவும், சிறந்த அணுகல், வசதி மற்றும் நேர்மறை வாடிக்கையாளர் அனுபவம் என்பவையுடனான எதிர்காலத்துக்கு பொருந்தும் வர்த்தகத்தை உருவாக்கவும் உதவுகிறது. | |
| 9 | பாதுகாப்பான மற்றும் பத்திரமான பரிவர்த்தனைகள் (சைபர் எதிர்நோக்குத்தன்மை மற்றும் | ஜவ எரீழசவள கயெநெஉயைட எவயடிடைவைல மக டிரளைநௌளநள யனெ எவசநபெவாநளெ வசரளவ றவைா முரச உரளவழஅநசள யயயனௌவ கசயரன யனெ முவாநச எநஉரசவைல வைளரநள. | GRI 418 - வாடிக்கையாளர் இரகசியத்தன்மை |
| 10 | புத்தாக்கம் | இது எமது நேரத்தையும் ஏனைய வளங்களையும் சேமிக்க உதவுதல் மூலம் எமக்கு சாதகமான போட்டித்தன்மையையும், வாடிக்கையாளர்களுக்கு எம்முடன் ஒரு சிறந்த அனுபவத்தையும் வழங்கிகின்றது. | |

**Stakeholder:**

ஊழியர் ■ வாடிக்கையாளர ■ வழங்குநர் ■ உள்நாட்டு சமூகம ■ சுற்றாடல் ■ பொருளாதாரம்

பொருள் தலைப்புகள் மற்றும் 2019/20 இன் முன்னுரிமை தரவரிசை மாற்றமடையாமல் இருந்தது. தொற்றுநோய்களின் மீள் எழுச்சி காரணமாக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முதன்மை முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டது. மேலும், பொருள் GRI தலைப்புகளும் 2020/21 இல் பொருள் தலைப்புகளின் பட்டியலில் தொகுக்கப்பட்டுள்ளன.

| SDG களுக்கு சீரமைப்பு | மூலோபாய கட்டாயங்கள் | மூலதன ஈடுபாடு | அபாய வகை |
|---|---|---|---|
| 3 GOOD HEALTH AND WELL-BEING<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS | ○ நிலையான வளர்ச்சியைத் தொடருதல்<br>○ வாடிக்கையாளர் அனுபவங்களை பெருக்குதல்<br>○ சுற்றாடல் மற்றும் சமூக காரணிகளை ஒருங்கிணைத்தல் | ○ நிதி மூலதனம்<br>○ மனித மூலதனம்<br>○ சமூக மற்றும் உறவு மூலதனம்<br>○ இயற்கை மூலதனம் | ○ செயல்பாட்டு அபாயம்<br>○ மனிதவள அபாயம்<br>○ கடன் அபாயம் |
| 8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE | ○ நிலையான உட் தொடருதல்<br>○ வாடிக்கையாளர் அனுபவங்களை பெருக்குதல்<br>○ எங்கள் மக்கள் மூலம் பன்முகப்படுத்தல் | ○ நிதி மூலதனம்<br>○ மனித மூலதனம்<br>○ சமூக மற்றும் உறவு மூலதனம்<br>○ அறிவுசார் மூலதனம்<br>○ இயற்கை மூலதனம் | ○ கடன் அபாயம்<br>○ மூலோபாய அபாயம் |
| 1 NO POVERTY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE | ○ வாடிக்கையாளர் அனுபவங்களை பெருக்குதல் | ○ சமூக மற்றும் உறவு மூலதனம் | ○ கடன் அபாயம்<br>○ மூலோபாய அபாயம் |
| 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS | ○ வாடிக்கையாளர் அனுபவங்களை பெருக்குதல் | ○ சமூக மற்றும் உறவு மூலதனம் | ○ நற்பெயர் அபாயம் |
| 1 NO POVERTY<br>5 GENDER EQUALITY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>10 REDUCED INEQUALITIES<br>16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS<br>17 PARTNERSHIPS FOR THE GOALS | ○ பொறுப்பேற்றல்<br>○ சுற்றாடல் மற்றும் சமூக காரணிகளை ஒருங்கிணைத்தல் | ○ சமூக மற்றும் உறவு மூலதனம்<br>○ இயற்கை மூலதனம் | ○ செயல்பாட்டு அபாயம் |
| 4 QUALITY EDUCATION<br>5 GENDER EQUALITY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>10 REDUCED INEQUALITIES | ○ எங்கள் மக்கள் மூலம் பன்முகப்படுத்தல் | ○ மனித மூலதனம் | ○ செயல்பாட்டு அபாயம்<br>○ மனிதவள அபாயம் |
| 3 GOOD HEALTH AND WELL-BEING<br>6 CLEAN WATER AND SANITATION<br>7 AFFORDABLE AND CLEAN ENERGY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES<br>12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION<br>13 CLIMATE ACTION<br>14 LIFE BELOW WATER<br>15 LIFE ON LAND | ○ சுற்றாடல் மற்றும் சமூக காரணிகளை ஒருங்கிணைத்தல் | ○ சமூக மற்றும் உறவு மூலதனம்<br>○ இயற்கை மூலதனம் | ○ செயல்பாட்டு அபாயம் |
| 1 NO POVERTY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE | ○ நிலையான வளர்ச்சியைத் தொடருதல்வாடிக்கையாளர் அனுபவங்களை பெருக்குதல் | ○ அறிவுசார் மூலதனம்<br>○ சமூக மற்றும் உறவு மூலதனம் | ○ செயல்பாட்டு அபாயம் தகவல் தொழில்நுட்ப அபாயம் |
| 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS | ○ வாடிக்கையாளர் அனுபவங்களை பெருக்குதல்<br>○ பொறுப்பேற்றல் | ○ சமூக மற்றும் உறவு மூலதனம்<br>○ உற்பத்தி மூலதனம்<br>○ அறிவுசார் மூலதனம் | ○ செயல்பாட்டு அபாயம் தகவல் தொழில்நுட்ப அபாயம் |
| 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE | ○ நிலையான வளர்ச்சியைத் தொடருதல்<br>○ வாடிக்கையாளர் அனுபவங்களை பெருக்குதல்<br>○ நிலையான வளர்ச்சியைத் தொடருதல் | ○ அறிவுசார் மூலதனம்<br>○ சமூக மற்றும் உறவு மூலதனம்<br>○ நிதி மூலதனம் | ○ நற்பெயர் அபாயம் |

# எமது மூலோபாயம்

GRI 416-1

COVID-19 தொற்றுநோயின் தாக்கம் ஒரே இரவில் மாற்றப்பட்ட இயக்க சூழலுக்கு ஏற்றதாக எங்கள் மூலோபாயங்களை மறுபரிசீலனை செய்து அதனை மாற்றியமைக்கு தேவையை ஏற்படுத்தியது. கடன் மீள்செத்துதலை பிற்போடுதல் மற்றும் மேலதிக நிதி தேவைகளுக்காக அணுகுதல் வசதிகளை வழங்கி அவர்களின் பொருளாதார பாதுகாப்பு மற்றும் மீளெழுச்சிக்கு ஆதரவு வளங்கள் எமது ஆரம்பகட்ட பதிலளிப்பாக அமைந்தது. அதற்கு பின்னர் எமது மூலோபாய குறிக்கோள்களையும் முன்முயற்சிகளையும் மறுபரிசீலனை செய்து அவற்றை அசாதாரணத்திற்கு ஏற்றவாறு நெகிழ்வுத்தன்மையுடன் மீளமுன்னுரிமைப்படுத்தி நீண்டகால மூலோபாய குறிக்கோள்களில் சிலவற்றை விரைவு படுத்தி ஏனையவற்றை தள்ளிவைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இலக்குகள் தவறினாலும், அறிக்கையிடல் மற்றும் வெளிப்படைத்தன்மையின் ஒருமைப்பாட்டைப் பராமரித்து செயல்திறன் மதிப்பெண் அட்டை உருவாக்கப்பட்டுள்ளது. கீழே உள்ள அட்டவணை அதன் சுருக்கமான நிலைப்பாட்டை வழங்குகிறது.

## COVID-19 பதில்

பணிப்பாளர் சபையானது, நிறுவனத்தின் சுற்றாடல் மூலோபாயத்தை உருவாக்குவதோடு, அதன் நிலைத்தன்மை முயற்சிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான பொறுப்பை பீப்பிள்ஸ் லீசிங் சுற்றாடல் மூலோபாயங்களை வழிநடத்தும், நிலைத்தன்மையை நிர்வகிப்பதற்கான வழிநடத்தல் குழுவிற்கு ஒப்படைத்துள்ளது. கூட்டாண்மை முகாமைத்துவ குழுவின் தலைமையில், பிரதான அலுவலகத்தின் பிரிவுகள் மற்றும் கிளை வலையமைப்பு பசுமை செயல்திறனை கொண்டுச் செல்கின்றன. பசுமை வணிகத்தை ஊக்குவிக்க மேற்கொண்ட தொழில்நுட்ப உட்செலுத்துதல் மூலம் குறிப்பிடத்தக்க முடிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சுற்றாடல் தொடர்பான சட்ட விதிமுறைகளுடன் இறங்குதல், பொறுப்பான மூலாதாரங்கள், வளர்ச்சியை நோக்கிய கவனமான அணுகல் மற்றும் புதிய தயாரிப்புகளையும் சேவைகளையும் வழங்குதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புக்கான ஊளுசு முன்முயற்சிகள் சுற்றாடல் செயல்திறனுக்கு பங்களித்துள்ளன. சுற்றாடல் தொடர்பான சட்ட விதிமுறைகளை மீறுதல் பற்றிய குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் ஏதேனும் அறிக்கையிடப்படவில்லை.

எங்கள் சுற்றாடல் மூலோபாயம் நான்கு தூண்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது, இது ஊழியர்களிடையே பசுமை விழிப்புணர்வை ஏற்படுத்தலோடு ஆரம்பித்து பின்னர் விநியோகச் சங்கிலி வரை நீட்டிக்கப்படுகிறது. எங்கள் செயல்பாடுகளின் சுற்றாடல் அடிச்சுவடுகளை மற்றும் எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மறைமுக சுற்றாடல் தாக்கத்தை குறைக்க நாம் கவனமுடன் முயற்சி செய்கிறோம். சுற்றாடலை பாதுகாப்பது மற்றும் இயற்கை வளங்களை மீளுருவாக்கம் செய்ய உதவுவது போன்ற சமூகத்தை அறிவூட்டும் ஊளுசு திட்டங்கள் எமது சுற்றாடல் பாதுகாப்பு முயற்சிகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்

உள் சுற்றாடல் முகாமைத்துவ அமைப்பானது (EMS) முக்கிய சுற்றாடல் சரக்குகளின் நிகழ்நேர கண்காணிப்பை ஆதரிக்கிறது. ISO 14064:2018 க்கு இணங்க கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வுகளின் அளவை மதிப்பிடுவதற்கு இது தரவுகள் பயன்படுகின்றன.

GRI 305-1, 305-2, 305-3

## கார்பன் அடிச்சுவடு பதிப்பீட்டின் பரப்பெல்லை

### நேரடி உமிழ்வுகள்

நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள், நிலையான எரிப்பு (காத்திருநிலை ஜெனரேட்டர்கள்), தீயணைக்கும் கருவி நிரப்புதல்ஃ மாற்றுதல், குளிர்பதன கசிவுகள், நிறுவனத்தால் செலுத்தப்படும் ஊழியர் பயணம் - , வர்த்தக பயணம் (தரை), நிறுவனத்தால் செலுத்தப்பட்டது வாடகை வாகனங்கள்

### நேரடியற்ற உமிழ்வுகள்

மத்திய விநியோக மின்சாரம், பரிமாற்றம் மற்றும் விநியோக இழப்புகள், ஊழியர் பயணம் ( நிறுவனத்தால் செலுத்தப்படாத), கழிவு அகற்றல், நகராட்சி நீர் நுகர்வு, வர்த்தக (விமான) பயணம் , வாடகை வாகனங்கள் (நிறுவனத்தால் செலுத்தப்படாத), குத்தகை வாகனங்கள், கழிவு போக்குவரத்து, உள்நாட்டு கொள்வனவு பொருட்கள் போக்குவரத்து.

2020/21 நிதி ஆண்டில் குழுமத்தின் மற்றும் நிறுவனத்தின் கார்பன் அடிச்சுவடு முறையே 4,404.28t$CO_2$e மற்றும் 3,833.50t$CO_2$e அளவுகளில் இருந்தன

### நான்கு தூண்கள் கொண்ட சுற்றாடல் மூலோபாயம்

**பசுமை விழிப்புணர்வு**
மதிப்பு சங்கிலி முழுவதும் பசுமை உணர்வை ஊக்குவித்தல்

அர்ப்பணிப்பு

சுற்றுச்சூழல் ரீதியாக உணர்வுமிக்க ஊழியர்களை மற்றும் விநியோகச் சங்கிலி ஒன்றை உருவாக்குவதற்காக –
- தொடர்ச்சியான பசுமை பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு வழங்குதல்களை மேற்கொள்ளல்

**பசுமை செயல்பாடுகள்**
சுற்றாடல் மீதுள்ள எமது நேரடி நேர்மறையான தாக்கத்தை நிர்வகித்தல் மற்றும் மேம்படுத்தல்

அர்ப்பணிப்பு

கார்பன் அடிச்சுவடுகளை குறைப்பதற்காக –
- பசுமை நடைமுறைகள்
- செயல்திறன் மேம்பாடுகள்
- மற்றும் பொறுப்பான கழிவு முகாமைத்துவம்
- பசுமை தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல்
- கனினி தொகுதி மேம்பாடுகள்

**பொறுப்பான நிதி வழங்கல்**
எமது பொருட்கள் மற்றும் சேவைகளின் பசுமை தாக்கத்தை மேம்படுத்தி, மறைமுக எதிர்மறை தாக்கத்தை குறைத்தல்

அர்ப்பணிப்பு

எங்கள் வணிகத்தின் மையமாக பொறுப்பான நிதி நலன்களை உட்பொதிப்பதற்காக –
- பொறுப்பான, நெறிமுறையான மற்றும் வெளிப்படையான நிதி சேவைகளை வழங்குதல்
- பசுமை நிதி வழங்கல்
- பொறுப்பான பெறுகை செயல்பாடுகள்
- கடன்களுக்கான நுளுபு பரிசோதனை திரையிடல்

**பசுமை வெளியேற்ற CSR**
சுற்றாடலை பாதுகாத்தல்

அர்ப்பணிப்பு

எமது சுற்றாடல் பாதுகாப்பு முயற்சிகளை மேம்படுத்துவதற்காக –
- காடு வளர்ப்புஃநீண்ட கால நடவு மேற்கொள்ளல்
- பசுமை ஊளுசு முயற்சிகளில் ஊழியர்களின் தன்னார்வ பங்கேற்பு
- பங்குதாரர்களை அறிவூட்டுதல்
- சுற்றுச்சூழல் ஆராய்ச்சிகளை ஆதரித்தல்



### பசுமை விழிப்புணர்வு

பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனமான எமது சுற்றாடல் கொள்கையின் அடித்தளமாவது, எமது சுற்றாடல் முன்னுரிமைகள் தொடர்பாக ஊளியர்களையும் ஏனைய முக்கிய பங்குதாரர்களையும் அறிவூட்டுவதே ஆகும். தனி நபராகவும் மற்றும் குழுவாகவும் சுற்றாடல் தொடர்பான பொறுப்புக்களை வலியுறுத்தும் வகையில் பயிற்சி நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

நிறுவனத்தின் செயல்திறன் அளவீடுகளுக்கு சுற்றாடல் KPI களை உட்பொதித்தல், சுற்றாடல் இலக்குகள் தொடர்பாக எமது நிறுவனத்தின் ராணிப்பு மீது ஊழியர்களில் குறிப்பிடத்தக்க அறிவை ஏற்படுத்தியுள்ளது, மற்றும் அது மீண்டும் சுற்றாடல் மூலோபாயங்களை செயல்படுத்துவதில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். கூட்டாண்மை முகாமைத்துவத்தின் மற்றும் கிளை முகாமையாளர்களின் வழிநடத்துதலில், நிலைத்தன்மை முதன்மையாளர்களால் பொறுப்பான வளங்கள் பயன்பாடு, சுற்றாடல் KPI களின் அளவை கண்காணித்தல் போன்ற பீப்பிள்ஸ் தீர்மானங்களை எடுக்கும் முக்கிய செயல்பாட்டை கொண்டுசெல்ல படுகின்றது.

பசுமை நடைமுறைகளில் மேலும் ஊழியர்களை வழிநடத்த ஆண்டினுள் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- நிலைத்தன்மை தலைப்புகள் சார்ந்த தொடர்பாடல்களை நிறுவனத்தின் நிலைத்தன்மை முதன்மையாளர்களுடன் தொடரப்பட்டது
- ஷ்ரீஜ களின் கண்காணிப்பை ஆதரிக்கும் ஒரு சுற்றாடல் முகாமைத்துவ அமைப்பு நிறுவப்பட்டது
- ஐஊவு குழுவினம் முன்னெடுக்கப்பட்ட காகிதமற்ற முயற்சிகள் பற்றிய தகவல் தொடர்புமேலும் தன்னியக்கமயமான செயல்பாடுகளை நோக்கி நிறுவனத்தை விரிவாக செயல்படுத்தியது
- பொருள் சார்ந்த தலைப்புகள், கொள்கைகள் தொடர்பான இடைநிலை சமநிலை
- பொருள் தலைப்புகள் தொடர்பான ஒரு சுயாதீன நிலைத்தன்மை ஆய்வு செய்யப்பட்டது மற்றும் ஏற்கனவே உள்ள ஷ்ரீஜ கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிறுவனத்தின் கூட்டாண்மை மூலோபாயங்களில் நிலைத்தன்மையை மேலும் உட்பொதிக்க ஒரு இடைவெளி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது..

### பசுமை செயல்பாடுகள்

நிறுவனத்தின் சுற்றாடல் அடிச்சுவடுகளை குறைப்பதற்காக, தானியக்க செயல்பாடுகளை மேலும் உள்ளடக்குதல், மூலோபாய ரீதியாக அடையாளம் காணப்பட்ட செயல்பாடுகளை வீட்டிலிருந்து பணியாற்றும் (WFH) செயல்முறையில் மேற்கொள்ளுதல், செயல்திறன் மற்றும் அமைப்பு மேம்பாடுகள், பொறுப்பான வளமூலங்கள், கழிவுகளை அகற்றல் மற்றும் பசுமை தொழில்நுட்பத்தில் மேலும் முதலீடு செய்தல் போன்ற நடவடிக்கிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவை, எமது பசுமை செயல்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. எமது வருடாந்த வழங்குநர் பதிவுச் செய்யும் செயல்பாட்டின்போது, குறிப்பிடத்தக்க சுற்றாடல் தாக்கங்களை மேற்கொள்ளும் வழங்குநர்கள் வெளியீட்டப்படுவார்கள். எனினும், 2020/21 நிதியாண்டில், திரையிடப்பட்ட புதிய வழங்குநர்கள் அறிவிக்கப்படவில்லை.

| | சுற்றாடல் கணிப்பு | அளவீட்டு அலகு | 2020/21 மதிப்பு (குழுமம்) |
|---|---|---|---|
| | கழிவு | டோன்கள் | 91.08 |
| | வலுசக்தி (எரிபொருள் மற்றும் மின்சாரம்) | ஜூல்ஸ் | $2.03x10^{13}$ |
| | GHG உமிழ்வுகள் (கார்பன் அடிச்சுவடு) | $tCO_2e$ | 4,404.28 |

### *டுஊ யை மாற்றத்திற்கு கொண்டுச்செல்லும் நிலைத்தன்மையின் முதன்மையாளர்கள்



ஒரு நிலைத்தன்மை முதன்மையூயாளராக இருப்பது எனது அன்றாட வேளைகளில் வரும் விடயங்களை நான் எதிர்கொள்ளும் முறையை மாற்றியுள்ளது. நிலைத்தன்மை உள்நிலைப்படுத்த என்னாலான சிறந்த முயற்சியினை மேற்கொள்கிறேன். ஒரு முறிவு அல்லது கசிவு குழாய் விரைவாக கவனிக்கப்படுகிறது. மின்சார கட்டணம் எமது கிளை கூட்டங்களில் ஒரு முக்கிய கலந்துரையாடல் தலைப்பாகும். சேவை வழங்குநர்கள் ஒப்புக்கொண்டுள்ள குறிப்பிட்ட நேரத்தில் சேவைகளை மேற்கொள்கின்றனர். எங்கள் கிளையில் திடக்கழிவு அமைப்பு வெற்றிகரமாக பிரிக்கப்பட்டது. எமது கிளை முகாமையாளரின் வழிநடத்தலின் கீழ், அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்திடுவதற்காக அனைவரது பங்களிப்பையும் பெறுவதற்கு என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்கிறேன். கணினி தொகுதி சார்ந்த சுற்றாடல் முகாமைத்துவ தொழிலில் ஈடுபடும் வேளையில் எம்மை சுற்றாடலோடு மீண்டும் தீவிரமாக இணைக்கச் செய்கின்றது. எனக்கு வரும் ஒவ்வொரு அறிவு பகிர்தல் ஈ இடுகை மூலமும், எனது அறிவை வளர்க்க நிறுவனம் எனக்கு செயல் ரீதியாக உதவுகின்றதை உணர்கின்றேன். கார்பன் கவனம் தொடர்பாக எமது கிளை பெற்ற சான்றிதழுடன், குறைந்த கார்பன் அடிச்சுவடுகளை நோக்கி ஒன்றிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்தோம். ஒரு நிலைத்தன்மையின் முதன்மையாளராக இருப்பது அளவிடக்கூடிய மாற்றத்தை ஏற்படுத்த தன்னையே ஊக்குவிக்கும் விடயமாவதோடு, நமது உலகத்தை காப்பதற்காக நான் பங்களிக்கின்றேன் எனும் சிறப்பான உணர்வை அது எனக்கு அளிக்கின்றது.

**ஸ்டான்லி திசேரா**
*பண உத்தியோகத்தர்*
பீப்பிள்ஸ் லீசிங் ரு /பைனான்ஸ் பிஎல்சி
குளியாபிட்டிய கிளை

### ஒரு பசுமை ஆளுமையை நோக்கிய ஒரு காகிதமற்ற தளம்



ஒரு தாக்கமுள்ள கூட்ட முகாமைத்துவத்தை நோக்கி நாம் காகிதமற்ற பணிப்பாளர் சபை கூட்டங்களை அரமித்தோம். காகிதம் மற்றும் செலவீனத்தை மிகுதி படுத்துவதற்காக கடின நகல்களின் பயன்பாட்டை நீக்கப்பட்டமையினால் யு4 காகிதப் பொதிகளின் தேவை இனி ஏற்படமாட்டாது. கைவிரல் நுனிக்கே ந - பத்திரங்கள் செல்வதனால் வீடு வாசல்வரை பணிப்பாளர் சபை பத்திரங்கள் விநியோகம் தேவையற்று போனது. அத்துடன், டிஜிட்டல் முறையில் இப்பத்திரங்கள் உறுப்பினர்களின் சாதனங்களில் சேமிக்கப்படுவதனால், தேவைப்படும்போது அவற்றை மீண்டும் பரிசீலனை செய்யும் வசதியும் ஏற்பட்டது. இந்த காகிதமற்ற தளத்தின் காரணமாக எமது வருடாந்த யு4 பாவனையில் 55,440 காகிதங்கள் குறைவடைந்ததுடன், குறைந்த காகித மற்றும் எரிபொருள் பாவனை மூலம் நிறுவனத்தின் கார்பன் அடிச்சுவடு அளவும் குறைவடைந்து. நிச்சயமற்ற நிலைமைகளின்போது பணிப்பாளர் சபை கூட்டத்தை நடத்த வேண்டிய சாந்தப்பங்களில் நிகழ்நிலையில் அல்லது சில உறுப்பினர்கள் தொலைதூரத்தில் கலந்து கொள்ளும் கட்டாயம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இந்த முறைமை மிகவும் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மின் கையொப்பம் மற்றும் கடன் ஒப்புதல் வசதிகள் மிகச் சிறந்தவையாகும். செயல்முறை மேம்பாடு மார்ச் 2021 முதல் நடைமுறைக்கு வந்ததோடு, சம்பந்தப்பட்ட பிரிவினால் சுயாதீனமாக உள்நுழைந்து சரியான நேரத்தில் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பத்திரங்களை சமர்ப்பிப்பதன் மூலம் பணிப்பாளர் சபை பத்திரங்களை தரவேற்ற கூடியமையினால் இது செயல்முறை முகாமைத்துவத்திற்கு பெரிதும் உதவியது. பணிப்பாளர் சபை கூட்டங்களை முகாமைத்துவம் செய்வது இதுபோன்றதொரு மகிழ்ச்சியான அனுபவமாக எப்போதும் இருந்ததில்லை என்று நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

**லக்மினி கோட்டெகெ**
*நிறுவன செயலாளர்*

GRI 302-1, 305-1, 305-2, 305-3, 306-3




| உமிழ்வுகள் | குழுமம் |
|---|---|
| நேரடி (பரப்பெல்லை 1) புர்பு உமிழ்வு (tCO2e) | 791.93 |
| மறைமுக (பரப்பெல்லை 2) புர்பு உமிழ்வு (tCO2e) | 2,325.99 |
| ஏனைய மறைமுக (பரப்பெல்லை 3) புர்பு உமிழ்வு (tCO2e) | 1,286.36 |
| மொத்த உமிழ்வுகள் (tCO2e) | 4,404.28 |
| பைங்குடில் வாயு (புர்பு) உமிழ்வு குறைப்பு | 2,365.04 |
| உமிழ்வுகள் | 0.16 |

2020/21 இல், பீப்பிள்ஸ் லீசிங் இன் மொத்த கார்பன் அடிச்சுவடு 3>833.50 வஊழு2ந என கணக்கிடப்பட்டது. இது 2002.96 tCO2e அளவில்குறைந்துள்ளது. நிறுவனத்திற்கான GHG உமிழ்வு தீவிரம் 0.14 (ஒரு ஊழியருக்கு) என அறிக்கையிடப்பட்டுள்ளது.

பீப்பிள்ஸ் லீசிங் குழுமம் முழுவதுமாக ஒரு பிரிக்கப்பட்ட கழிவு முகாமைத்துத்தை நடைமுறைப்படுத்துவதோடு 2020/21 ஆண்டின் கழிவுகள் வகை மற்றும் அகற்றும் முறை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| கழிவு வகை | அளவு (kg.) |
|---|---|
| மறுசுழற்சி செய்யப்பட்ட காகிதம் | 9,116 |
| மறுசுழற்சி செய்யப்பட்ட மின்னணு கழிவுகள் | 56 |
| கால்நடை தீவனமாக மீண்டும் பயன்படுத்திய உணவு கழிவுகள் | 4,924 |

## பொறுப்பான நிதி வழங்கல்

எங்கள் கடன் முடிவுகளை எடுக்கும்போது வாடிக்கையாளர்களின் தொழில் செயல்பாடுகளின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் எதிர்மறை தாக்கங்களை குறைப்பதற்காக அவர்களை அறிவூட்டுதல் மற்றும் அவர்களுடன் இணைந்து செயல்படுதல் உற்பட, சுற்றாடல் சமூக ஆளுமை (ESG) கவனங்களை அதிகளவில் ஊக்குவிக்கிறோம். நோக்கமுள்ள ஒரு வர்த்தக நிறுவனம் என்ற வகையில் எமது நிறுவன வழிகாட்டல் கொள்கைகளில் பொருளாதார நம்பகத்தன்மை, சுற்றாடல் பொறுப்பு மற்றும் சமூக பொறுப்புணர்வு என்பவை உள்ளடங்குகின்றது. ஏனெனில், எமது சகல வர்த்தக நடவடிக்கைகளிலும் முக்கிய மதிப்புகள் உள்ளடங்கியுள்ளதுடன், பொறுப்புள்ள கடன் வழங்குதலின் மூலம் சுற்றாடல் மீது எமது தாக்கத்தை குறைக்க முயற்சிக்கிறோம்..

| | 2020/21 | 2019/20 |
|---|---|---|
| பசுமை வெளிப்பட்டு CSR செயல்பாடுகள் (எண்) | 6 | 12 |
| பசுமை வெளிப்பட்டு முதலீடு (ரூ.மில்லியன்) | 2.77 | 3.32 |

### பசுமை வெளியீடு CSR

ஆண்டில் நிலவிய நிச்சயமற்றதன்மை, சுகாதார மற்றும் பாதுகாப்பு கவனங்கள் காரணமாக, பல வெளியீட்டுச் செயல்பாடுகளும், ஊழியர் ஈடுபாடுகளும் குறைவடைந்து. முக்கிய முயற்சிகளில் கீழ்வருபவையும் உள்ளடங்குகின்றது:

**“வாழ்க்கை”**

***ஒப்பாதயில் உள்ள கண்ணெலியா வனப்பகுதியை ஒட்டிய சீரழிந்த ஃபெர்ன் நிலத்தை மீட்டெடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பு***

ஒப்பாத, ஹால்கஹவெள, கன்னெலிய வன பாதிப்பு பகுதியை ஒட்டிய ஒரு ஹெக்டயர் பரப்பளவைக்கொண்ட சீரழிந்த ஒரு நிலப் பகுதியை மீட்டெடுப்பதற்கான தனது உறுதியினை பீபிள்ஸ் லீசிங் தொடர்ந்து 3 ஆவது ஆண்டிலும் செயல்படுத்தியது. இந்த பூர்வீக தாழ்வான மழைக்காடு தாவரங்களை மீட்டெடுப்பதன் மூலம் இலங்கைக்கான ஒரு பல்லுயிர் புள்ளி திரட்டல் முறைமையொன்று நாட்டில் முதலாவதாக ஆரம்பிக்கப்படும். இக் கருத்திட்டமானது, வன பாதுகாப்பு திணைக்களத்தின் வழிநடத்துதலின் கீழ் BIODIVERSITY Sri Lanka நிறுவனத்தால் செயலமறைப்படுகின்றது. இதற்கான தொழில்நுட்ப அனுசரணை சுற்றாடல் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) மூலம் வழங்கப்படுவதோடு இன் நிறுவனமானது, இலங்கையின் ஈர வலயத்தின் சீரழியப்பட்ட நிலங்களை மீட்டெடுப்பதற்காக, 10 முக்கிய கூட்டாண்மைகளின் ஈடுபாட்டுடன் நகலெடுக்கக்கூடிய மறுசீரமைப்பு மாதிரியொன்றை உருவாக்கியுள்ளது. 2020/21 ஆண்டில் வன இடைவெளிகளில் மீள்நடுகைக்கான அபிவிருத்தித் திட்டத்தின் நிறைவடைந்தது. நிழல் செடிகள் நடுகை, வன உயிரினங்கள் மற்றும் மண் பாதுகாப்பு, அவ்வப்போது புல்வெளியில் ஏற்படும் தீப்பிடிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான தீ தடுப்பு பகுதியொன்றை ஏற்படுதல் என்பவையும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், தாவர அடர்த்தியை 8,000 க்கும் மேற்பட்ட தனிப்பட்ட தாவரங்களால் அதிகரித்தது மறுசீரமைப்பு பகுதியில் ஆண்டின் போது 300 கிளிசிடியா குச்சிகள் உட்பட 4,905 கன்றுகள் நடப்பட்டன.

**மர நடுகை**

நாவலப்பிட்டி கிளையில் லீசிங் மற்றும் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கான மர நடுகை முயற்சியொன்று செயல்படுத்தப்பட்டது. ஹரன்களை வலைய கல்வி அலுவலகம் மற்றும் மத்திய மாகாண விவசாயத் திணைக்களம் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியது.

**வெளிப்புற ஊழியர்களை பாராட்டுதல்**

துப்புரவு பணியாளர்களின் பொறுப்புள்ள அலுவலக பராமரிப்பு நடைமுறைகள் தொடர்ந்து ஏழாவது ஆண்டிலும் பாராட்டப்பட்டது. 41 வெளிப்புற ஊழியர்கள் உயர் முகாமைத்து உறுப்பினர்கள் பங்கேற்ற ஒரு நிகழ்வின்போது பணம் மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டனர்.

**PLC "ஹரித்த சித்துவம்"**

PLC "ஹரித்த சித்துவம்" நாடளாவிய போஸ்டர் சித்திர போட்டியின் பிராந்திய வெற்றியாளர்கள் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்புடைய ஆறு துணை கருப்பொருள்கள் மீது கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டனர். கடந்த ஆண்டின் தொடர்ச்சியாக ரூ.1.17 மில்லியன் இந்த ஆண்டில் PLC இதற்காக முதலீடு செய்தது. சிறுவர்களின் படைப்பாற்றலைக் கொண்டாடுவதில் மற்றும் அவர்களுக்கு சுற்றாடல் உணர்வை ஏற்படுத்துவதில் மொத்தம் ரூ. 2.38 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

### கண்ணோட்டம்

**குறுகிய கால : 2021/22**

- தன்னியக்க செயல்முறைகள் மூலம் எமது ஊழியர்களின் டிஜிட்டல் திறன்களை உயர்த்துதல்
- எமது டிஜிட்டல் நிதி தேர்வுகளை பயன்படுத்த வாடிக்கையாளர்களை செயல்படுத்தல்
- புதுப்பிக்கத்தக்க மூலங்களுக்கான சாத்தியக்கூறு மதிப்பீட்டை நடத்துதல்
- நோக்கமுள்ள வர்த்தக கூறுகள் உட்பொதித்தலுக்கான வலுவூட்டப்பட்ட நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ கட்டமைப்புகள்

**நடுத்தர காலம் 3 ஆண்டுகள்**

- உயர்ந்த செயல்திறனுக்காக மறுசீரமைக்கப்பட்ட மற்றும் மேலும் தன்னியக்கமயமான செயல்முறைகள்
- வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் வசதிகள் மேம்பாட்டுக்காக முதலீடுகள்
- மின் உற்பத்திக்காக புதுப்பிக்கத்தக்க வலுசக்திகளை அறிமுகப்படுத்துதல்
- சுற்றாடல் உணர்திறன் துறைகள் உள்ளடங்கிய சுற்றாடல் அபாய-விழிப்புணர்வு கலாச்சாரத்தை ஏற்படுத்துதல்

**நீண்ட கால**

- நுண்ணியமான மற்றும் சுறுசுறுப்பான இயக்க மாதிரியை நிறுவுதல்
- டிஜிட்டல் ரீதியாக செயல்படுத்தப்பட்ட தரவு அறிவார்ந்த வணிகமாக முன்னேறுதல்
- தேவையான மின்சாரத்தின் 75% புதுப்பிக்கத்தக்க வலுசக்திகளினால் உருவாக்கப்படுவதை உறுதிச் செய்தல்
- சுற்றுச்சூழல் நடத்தை விதிகள், புதிய வழங்குநர்களுக்கான சப்ளையர் சரிபார்ப்பு பட்டியல் என்பவை தொடர்பாக வழங்குநர்களை அறிவூட்டுவதன் மூலம் பொறுப்பான வளமூலங்களை சீரமைத்தல்

### இயற்கை மூலதன வர்த்தகங்கள்

**நிதி மூலதனம்**

- வியாபார தொடர்ச்சி மற்றும் புதிய இயைபு நிலையில் நேரடி தொடர்பற்ற செயல்பாடுகளின் அபிவிருத்தி மற்றும் கொள்வனவுகளுக்கான நிதி முதலீடுகள்

**உற்பத்தி மூலதனம**

- வியாபார தொடர்ச்சி மற்றும் புதிய இயைபு நிலையில் நேரடி தொடர்பற்ற செயல்பாடுகள் தொடர்பான அபிவிருத்தி மற்றும் சொத்துக்கள் கொள்வனவுச் செய்தல்

**அறிவுசார் மூலதனம்**

- புதிய இயல்பு நிலையில் தொழில் தொடர்ச்சிக்காக ஒரு பொறுப்பான வர்த்தகச் சின்னமாக மதிப்பை விரிவாக்குதல்

**மனித மூலதனம்**

- தொலைதூர பணியாற்றும் ஊழியர்களின் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துதல்
- தொற்றுநோய் காரணமான வரம்புகளினால் சேவை மையங்களில் பணியாளர்கள் எண்ணிக்கை குறைந்தது

**சமூக மற்றும் உறவுகள் மூலதனம்**

- கோவிட் நிவாரணம், ஆலோசனை மற்றும் நேரடி தொடர்பற்ற செயமுறை மூலம் தொடர்ச்சியானான் சேவை வழங்குதல் தொடர்பான வாடிக்கையாளர் திருப்தி

# எமது சமூக பொருளாதார தாக்கம்

GRI 307-4

## நாட்டின் முன்னணி வங்கி சாரா நிதி நிறுவனமாக, எமது செயல்பாடுகள் நாட்டின் மீதானகுறிப்பிடத்தக்க அளவில் தாக்கம் கொண்டுள்ளது.

### NBFI துறையின் மீதான தாக்கம்

**13%**
NBFI துறையின் மொத்த கடன்களில் 13.33%

**13%**
NBFI துறையின் மொத்த வைப்புகளில் 13.39%

**12%**
NBFI துறையின் மொத்த சொத்துக்களில் 11.82%

**14%**
NBFI துறையின் வரிக்கு பின் மொத்த இலாபத்தில் 13.59%

GRI 201-1

## உருவாக்கப்பட்ட பொருளாதார மதிப்பு

சராசரி 365 நாள் திறைசேரி பத்திர விகிதத்துக்கு சமமான பொருளாதாரக் கட்டணம் மற்றும் 2மூ அபாயக் கட்டணத்தை கருத்தில் கொள்ளும்போது, 2020ஃ21 நிதியாண்டில் பீப்பிள்ஸ் லீசிங் மூலம் சேர்க்கப்பட்ட பொருளாதார மதிப்பு ரூ.1,492.32 மில்லியன் ஆகும். மூலதனத்தின் பொருளாதார செலவை விட மேலதிகமான வருவாயை ஈட்டி பங்குதாரர்களை திருப்திபடுத்தும் வகையில்பொருளாதார வருவாய் விகிதத்துக்கு மேலாக பங்குதாரர்களுக்கான மதிப்பை நாங்கள் உருவாக்கியுள்ளோம் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

### சேர்க்கப்பட்ட பொருளாதார மதிப்பு

| | 2020/21 ரூ.மில்லியன் | 2019/20 ரூ.மில்லியன் |
|---|---|---|
| பங்குதாரர்களின் நிதி | 34,341.43 | 30,246.63 |
| கூட்டு: சேத இழப்பு கட்டணங்களுக்கான திரட்டப்பட்ட ஏற்பாடுகள் | 9,267.94 | 8,750.24 |
| கூட்டு: ஒட்டுமொத்த சந்தை உருவாக்கல் செலவுகள் | 560.43 | 696.75 |
| குறைத்தல்: பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் | (415.84) | (376.29) |
| | 43,753.96 | 39,317.33 |
| பங்குதாரர்களுக்கான இலாபம் | 4,033.02 | 2,942.51 |
| கூட்டு: ஆண்டிற்கான சந்தை உருவாக்கல் செலவுகள் | 39.06 | 196.56 |
| கூட்டு: சேத இழப்பு ஏற்பாடுகள் | 517.70 | 3,805.90 |
| கூட்டு: ஆண்டிற்கான பிற்போடப்பட்ட வரி கட்டணங்கள் | (69.51) | (1,213.52) |
| | 4,520.27 | 5,731.45 |
| பொருளாதார செலவு மூ (சராசரி திறைசேரி பத்திர விகிதம் ு 2 மூ அபாய கட்டணம்) | 7.29% | 10.22% |
| பொருளாதார செலவு | 3,027.95 | 3,768.68 |
| **பொருளாதார மதிப்பு சேர்த்தல்** | **1,492.32** | **1,962.77** |

### சேர்க்கப்பட்ட சந்தை மதிப்பு

சந்தை மூலதனமயமாக்கல் தெரிய சொத்துகளின் மதிப்பை விட குறைவாக உள்ளதன் காரணமாக நிறுவனத்தால் சேர்க்கப்பட்ட சந்தை மதிப்பு எதிர்மறையாக உள்ளது.

| | 2020/21 ரூ.மில்லியன் | 2019/20 ரூ.மில்லியன் |
|---|---|---|
| சந்தை மூலதனம் ஃ பங்கு முதலீட்டின் சந்தை மதிப்பு | 20,114.31 | 19,857.98 |
| குறைத்தல்: பங்குதாரர்களின் நிதி | 34,341.43 | 30,246.63 |
| **சேர்க்கப்பட்ட / (குறைக்கப்பட்ட) சந்தை மதிப்பு** | **(14,227.12)** | **(10,388.65)** |

### சேர்க்கப்பட்ட மதிப்பின் விநியோகம்

ஆண்டின் வட்டி வருமானத்தில் குறைவு காரணமாக உருவாக்கப்பட்ட பொருளாதார மதிப்பு சரிந்தது. இதன் விளைவாக, 2020ஃ21 நிதியாண்டில் சகல பங்குதாரர்களுக்கும் விநியோகிக்கப்பட்ட மதிப்பும் குறைவடைந்து. எனினும், கீழே வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பங்குதாரர்களிடையே விநியோகிக்கப்பட்ட மதிப்பு மற்றும் தக்கவைக்கப்பட்ட மதிப்பு மாற்றமடைந்துள்ளது:

#### பொருளாதார மதிப்பு விநியோகம்



# எமது சமூக பொருளாதார தாக்கம்

கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட பொருளாதார மதிப்பை விட பொருளாதார மதிப்பு விநியோகம் அதிகமாக இருந்தாலும், மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டில் உருவாக்கப்பட்ட பொருளாதார மதிப்பில் 10.95மு நிறுவனத்தால் தக்கவைக்கப்பட்டது. 2019ஃ20 ஆண்டுடன் ஒப்பிடும்போது 2020ஃ21 ஆம் ஆண்டில் வைப்புத்தொகையாளர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பின் பகுதி 37.74மு ஆக அதிகரித்துள்ள அதேநேரம், வட்டி விகிதம் குறைவடைதல் மற்றும் கடன் வாங்கல்கள் குறைவடைதல் காரணமாக கடன் வழங்குநர்களுக்கு விநியோகிக்கப்பட்ட மதிப்பு குறைந்துள்ளது. வரி விகிதங்கள் தாழ்த்தப்பட்டமையால் இலங்கை அரசாங்கத்திற்கு விநியோகிக்கப்பட்ட மதிப்பு குறைந்துள்ளது. அதிகரிக்கப்பட்ட நிச்சயமற்ற நிலைமையை கவனத்தில் கொண்டு ஐந்தொகையை பலப்படுத்துவதற்காக பங்குதாரர்களுக்கான பங்குலாபம் குறைக்கப்பட்டது. ஆயினும், வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது, பங்குதாரர்களின் ஒப்புதலோடு பங்குகள் வடிவத்தில் செலுத்தப்படவுள்ள ரூ.0.75 வீதமான ஆண்டிறுதி பங்குலாபம் இவ் மதிப்பு சேர்த்தல் அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. தொற்றுநோய் இல்லாமையினால், சமூகம் தொடர்பான செயல்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டன. எனவே, 2020ஃ21 ஆண்டில் சமூகத்திற்கான மதிப்பு விநியோகத்தில் வீழ்ச்சி காணப்படுகின்றது

| | 2020/21 ரூ.மில்லியன் | 2019/20 ரூ.மில்லியன் |
|---|---|---|
| **நேரடி பொருளாதார மதிப்பு உருவாக்கல்** | | |
| வட்டி வருமானம் | 24,983.45 | 31,459.11 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 1,818.68 | 1,694.01 |
| ஏனைய செயல்பாட்டு வருமானம் | 301.68 | 446.20 |
| **உருவாக்கப்பட்ட பொருளாதார மதிப்பு** | **27,103.81** | **33,599.32** |
| **மூலதன வழங்குநர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பொருளாதார மதிப்பு** | | |
| பங்குதரர்களுக்கான இலாப பங்கு | 976.62 | 1,929.32 |
| கடன்களுக்கான வட்டி | 2,835.85 | 4,255.98 |
| வைப்புதாரர்களுக்கான வட்டி | 10,228.46 | 11,530.60 |
| | **14,040.93** | **17,715.90** |
| **ஊழியர்களுக்கு** | | |
| சம்பளம் மற்றும் பிற நன்மைகள் | 3,465.37 | 3,701.39 |
| | **3,465.37** | **3,701.39** |
| **அரசாங்கத்துக்கு** | | |
| வருமான வரி செலவுகள் | 1,909.08 | 2,822.84 |
| நிதி சேவைகள் மீதான வரி | 1,222.63 | 2,002.46 |
| ஏனைய வரி கட்டணங்கள் | 18.37 | 266.54 |
| | **3,150.08** | **5,091.84** |
| **சமூகத்திற்கு** | | |
| கூட்டாண்மை சமூக பொறுப்பு ஊளுசு மற்றும் நன்கொடை | 23.15 | 58.85 |
| | **23.15** | **58.85** |
| **செயல்பட்டுச் செலவு** | | |
| தேய்மானம் மற்றும் கடன்தொகுப்பு | 722.99 | 717.02 |
| கடன்கள் மற்றும் வரவுகள் மற்றும் பிற இழப்புகளுக்கான சேத இழப்பு கட்டணங்கள் | 1143.05 | 4751.8 |
| ஏனைய செயல்பாட்டு செலவுகள் | 1,590.08 | 1808.64 |
| | **3,456.12** | **7,277.46** |
| **விநியோகிக்கப்பட்ட பொருளாதார மதிப்பு** | **24,135.65** | **33,845.44** |
| **தக்கவைக்கப்பட்ட பொருளாதார மதிப்பு** | **2,968.16** | **(246.12)** |

## நிதிக்கான அணுகல்

எங்கள் முக்கிய நோக்கம் ளுஆநு க்கள் , நுண் தொழில்முயற்சியாளர், கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் போன்ற பல்வேறு தொழில்துறைகளை சார்ந்தவர்களுக்கு நிதி அணுகலை ஏற்படுத்தி, அவர்களின் அபிலாஷகளை அடைவதற்கு ஆதரவளிப்பதாகும். எமது வடிக்கையாளர்களால் இலகுவாக புரிந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகள் மூலம் வாழ்க்கை சுழற்சி முழுவதும் அவர்களுக்கு உதவியளிப்பது எமது இலக்காகும். ஆண்டினுள் நாம் மொத்தம் ரூ.50,881.01 மில்லியன் மதிப்புடைய 36,780 எண்ணிக்கையான கடன்களை வழங்கினோம்.

### தொழில்துறைகள் மத்தியில் கடன் தொகை விநியோகம்




### மதிப்புக்கான ஒரு பாதுகாவலர்

ஒரு நிதி நிறுவனமாக, ஒரு நம்பகமான பாதுகாவலர் மற்றும் வருவாய் தேவையான மக்களுக்கு நாம் முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகிறோம்.டீேகுஐ துறையில் ஒரு நம்பகமான போட்டியாளராக இருப்பதுடன், சுமார் 300,000 வாடிக்கையாளர்களின் ரூ.101,502.93 மில்லியன் பெறுமதியுள்ள வைப்புகளுக்கு பாதுகாவலராக செயல்படுகின்றது.

### நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு

பீப்பிள்ஸ் லீசிங் 2,343 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளதுடன், செயல்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தல் காரணமாக, ஏற்பட்ட இயற்கையான குறைபாடு மூலம் வருடத்தில் குறைவடைந்தது. குறிப்பிட்ட ஆண்டில், ஏனையவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 35,000 -க்கும் அதிகமான வர்த்தக பங்காளர்கள் எங்கள் செயல்பாடுகளினால் தொடர்ந்து ஆதரவு பெற்றனர். மன அழுத்தம் உள்ள வாடிக்கையாளர்களுக்கு ரூ.71.42 பில்லியன் கடன் பிற்போடுதல் வசதிகள் மூலம் உதவியதோடு, பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள 4,362 பேருந்துகளுக்காக 4மு சலுகை வட்டி விகிதமும், செலுத்தப்படாத வட்டித்தொகைகளுக்கு சலுகைகளும் ஆண்டிற்குள் வழங்கப்பட்டமையினால், ஆண்டிற்கான செலுத்தப்படாத வட்டி வருமானம் ரூ.678.89 மில்லியன் வரை குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை அடைந்தது. இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மற்றும் நாட்டின் மறைமுக வேலைவாய்ப்புகளையும் ஆதரிப்பதற்கான எமது உறுதிப்பாடு பிரதிபலிக்கிறது.

THANK YOU

# பொறுப்புத்தன்மை

100 பணிப்பாளர் சபை
104 கூட்டாண்மை முகாமைத்துவம்
108 இணக்கப்பாட்டு அபாய முகாமைத்துவம்
111 கூட்டாண்மை ஆளுமை
139 நிறுவன விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை
144 சபையின் கணக்காய்வு குழுவின் அறிக்கை
146 மனித வள, ஊதிய மற்றும் நியமனக் குழுவின் அறிக்கை
148 தொடர்புடைய தரப்பினர் பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழு அறிக்கை
150 சபையின் ஒன்றிணைக்கப்பட்ட அபாய முகாமைத்துவ குழு அறிக்கை
153 அபாய முகாமைத்துவ மீளாய்வு

# பணிப்பாளர் சபை


1


2


3


4


5


6

## 1. திரு சுஜீவ ராஜபக்ஷ

*தலைவர்/நிர்வாகமல்லாத, சுயாதீனமல்லாத பணிப்பாளர்*

திரு சுஜீவ ராஜபக்ஷ நிறுவனத்தின் தலைவராக பிப்ரவரி 19, 2020 அன்று நியமிக்கப்பட்டார்

### தகுதிகள்

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் (FCA) ஒரு உறுப்பினரும், இலங்கையின் பட்டய முகாமைகணக்காளர் நிறுவனத்தின் (FCMA) உறுப்பினருமான திரு ராஜபக்ஷ ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக முதுகலை இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட் (PIM) இலிருந்து வணிக முகாமைத்துவ முதுகலை (MBA) பெற்றுள்ளார்.

### வகித்த பதவிகள்ஃஅனுபவம்

ஏறக்குறைய நான்கு தசாப்தங்களாக நீடித்த அவரது தொழில் வாழ்க்கையில், இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் (CA இலங்கை) தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சில் உறுப்பினர் (தேர்ந்தெடுக்கப்பட்டவர்), CA இன் கணக்காய்வுத் தரக் குழுவின் முன்னாள் தலைவர், இலங்கை பயிற்சி கணக்காளர் மன்றத்தின் தலைவர், இலங்கை கிரிக்கெட்டின் பொருளாளர், கிரிக்கெட் உலகக் கோப்பை 2011 இன் பொருளாளர், சபை உறுப்பினர் மற்றும் தெற்காசிய கணக்கியல் கூட்டமைப்பின் (SAFA) தொழில்நுட்ப ஆலோசகர், ஆசிய பசிபிக் கணக்காளர்களின் கூட்டமைப்பின் தொழில்நுட்ப ஆலோசகர் (CAPA மேலும் அவர் தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி, என்டிபி கேபிடல் லிமிடெட் - பங்களாதேஷ், த பைனான்ஸ் கம்பெனி பிஎல்சி, யுனிதில் பேக்கேஜிங் லிமிடெட் மற்றும் யூனிதில் பேக்கேஜிங் அண்ட் சொலுஷன்ஸ் லிமிடெட் எனும் நிறுவனங்களின் பணிப்பாளர் பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

### தற்போதைய நிலைகள்

திரு சுஜீவா ராஜபக்ஷ BDO கூட்டாளர்களின் நிர்வாக பங்குதாரர் ஆவார், மேலும் BDO இன் உள ஊர் பிரதிநிதியாக உள்ளார் - இது உலகின் ஐந்தாவது பெரிய கணக்கியல் வலையமைப்பாகும். தற்போது அவர் மக்கள் வங்கியின் தலைவராக பணியாற்றுகிறார், ஒரு சுதந்திரம் அல்லாத நிர்வாகமல்லாத பணிப்பாளராக உள்ளார் ர்யலஉயசடி பிஎல்சி, முற்றிலுமாக ஸ்தம்பித்துள்ளது தயாரிப்பு பிஎல்சி, ஹேலீஸ் எக்ரி ஹோல்டிங்ஸ் லிமிடெட், யுனி தில் பேக்கேஜிங் லிமிடெட், யுனி தில் பேக்கேஜிங் அண்ட் சொல்யூஷ'ன்ஸ் லிமிடெட் மற்றும் சாப்டோலாஜிக் லைஃப் இன்சூரன்ஸ் பி.எல்.சியின் துணைத் தலைவராக பணியாற்றுகிறார். திரு ராஜபக்ஷ ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கவுன்சில் உறுப்பினர் மற்றும் பணிப்பாளர் - லங்கா அலையன்ஸ் ஃ பைனான்ஸ் லிமிடெட், பங்களாதேஷ் என்பற்றிலும் பங்காற்றுகிறார்.

இவரது நிபுணத்துவத்தில் அனைத்து கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் தரங்கள் மற்றும் நடைமுறைகள், நிதித் துறைகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான அரச விதிமுறைகள், மனித வள முகாமை மற்றும் ஒட்டுமொத்த முகாமை நடைமுறைகள் மற்றும் தனியார் மற்றும் பொதுத் துறைகளில் உள்ள கொள்கைகள் ஆகியவை அடங்கும்.


7


8


9


10

## 2. திருமதி கொரலி பீட்டர்ஸ்

*நிர்வாகமல்லாத சிரெட்ட சுயாதீன பணிப்பாளர்*

கொரலி பீட்டர்ஸ் அவர்கள் 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி சபையின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட்டார். நியமனத்தின் நடைமுறை திகதி 2020 மார்ச் 31 ஆம் திகதியாகும்.

### தகுதிகள்

பீட்டர்ஸ் அவர்கள் இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் ஆவதுடன் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் மற்றும் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினரும் ஆவார். அவர் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் இயற்பியலில் பிஎஸ்சி (ஹானர்ஸ்) பட்டதாரி ஆவதுடன் எடின்பர்க் ஹெரியட்-வாட் பல்கலைக்கழகத்தில் எம்பிஏ பட்டதாரி ஆவார்.

### வகித்த பதவிகள்/அனுபவம

திருமதி பீட்டர்ஸ் 2010 இல் பின்லேஸ் கொலோம்போ நிறுவனத்தின் நிதி பணிப்பாளராக சேர்ந்தார். அத்துடன் ஹபுகஸ்தென்ன பிளான்டேஷன்ஸ் பிஎல்சி மற்றும் உடபுஸ்செல்லாவ பிளான்டேஷன்ஸ் பிஎல்சி நிறுவனங்களின் நிதி இயக்குநராகவும் நியமிக்கப்பட்டு 2016 முதல் 2020 வரை செயலாற்றினார். மேலும், ரிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் பிரதம நிதி உத்தியோகத்தராகவும் நே'ன்ஸ் டிரஸ்ட் வங்கியின் பிரதம நிதி உத்தியோகத்தராகவும் கடமையாற்றினார்.

### தற்போதைய நிலைகள்

செலான் வங்கி பிஎல்சி மற்றும் போகல கிராபைட் லங்கா பிஎல்சி, கொம்பாஸ் ஆலோனைக் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் தம்பபன்னி அகாடமிக் பப்ளி'ர்ஸ் (தனியார்) லிமிடெட் ஆகிவற்றன் பணிப்பாளராக உள்ளார். மேலும் அவர் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் கவுன்சில் உறுப்பினராகவும் உள்ளார்.

## 3. திரு ரோஹான் பதிரகே

*நிர்வாகமல்லாத, சுயாதீனமல்லாத பணிப்பாளர்*

திரு ரோஹன் பதிரகே 2019 ஜுலை 07 ஆம் திகதிசபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### தகுதிகள்

ஒரு வழக்கறிஞர், திரு பதிரகே அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பட்டம் பெற்றவர் மற்றும் நியூசிலாந்தின் மாஸ்ஸி பல்கலைக்கழகத்தில் வங்கி நிர்வாகத்தில் முதுகலை பட்டம் பெற்றவர் ஆவார். மேலும் வங்கித்துறையின் பட்டபடிப்புக்கு பின்னரான டிப்ளமோ பெற்றவர் ஆவார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

மக்கள் வங்கியின் சிரேட்ட பொது முகாமையாளராக மனிதவள, சட்டம் மற்றும் நிர்வாக பிரிவுகளில் இவர் 26 ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தை பெற்றுள்ளார். 10,000 க்கும் மேலான ஒரு வலுவான பணியாள் தொகுதியின் முகமத்துவத்தை மேற்கொண்ட இவர் வங்கியின் மனிதவள தேவைகளுக்கு ஏற்றதாக உயர் நிர்வாக பதவிகளுக்கான ஆள்சேர்ப்பு செயல்பாடுகளிலும் செயலாற்றியுள்ளார். மேலதிகமாக 70 உறுப்பினர்களைக் கொண்ட வங்கியின் சட்ட குழுவிற்கும் இவர் தலைமை வகிக்கின்றார். மேலும், உதவி பொது முகாமையாளர் - செயலாளராக ஆகஸ்ட் 2010 முதல் மார்ச் 2019 வரை மக்கள் வங்கி பணிப்பாளர் சபையில் செயலாற்றிய இவர் சபையின் மற்றும் அதன் துணை குழுக்களின் சகல செயல்பாடுகளிலும் நிர்வாக ஆதரவுகளை வழங்கியுள்ளார். மக்கள் வங்கி பணிப்பாளர் சபை செயலாளராக செயலாற்றிய காலத்தில், சிறந்த ஆளுமை நடைமுறைகளை செயல்படுத்த முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளார்.

### தற்போதைய நிலைகள்

திரு பத்திரகே தற்போது மக்கள் வங்கியின் சிரேட்ட உதவி பொது முகாமையாளர் - வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் பதவியை வகிப்பதோடு வங்கியின் வெளிநாட்டு பண பரிமாற்றங்கள் மற்றும் அந்நிய செலாவணி கணக்குகளை மேற்பார்வையிடுகிறார். தலைவர் - பீபள்ஸ் லீசிங் ஹேவ்லாக் பிராபர்டீஸ் லிமிடெட், பணிப்பாளர் - பீப்பள்ஸ் மைக்ரோ காமர்ஸ் லிமிடெட், பணிப்பாளர் லங்கா அலையன்ஸ் / பைனான்ஸ் லிமிடெட், பங்களாதேஷ் பணிப்பாளர் - பீப்பிள்ஸ் டிராவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட். பதில் பணிப்பாளர் - இலங்கை வங்கியாளர் நிறுவனம் ஆகிய பதிவிகளையும் வகிக்கிறார்.

## 4. திரு சுதர்சன் அஹுங்கம

*நிர்வாகமல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர்*

திரு சுதரஷன் அஹுங்கம சபையின் பணிப்பாளராக 2020 பிப்ரவரி 19, அன்று நியமிக்கப்பட்டார்.

### தகுதிகள்

திரு சுதர்சன் அஹுங்கம இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் சக உறுப்பினராக உள்ளார.

### வகித்த பதவிகள்/அனுபவம்

அவர் MAS ஹோல்டிங்ஸ் குழுமத்தில் குழு நிதி பணிப்பாளராக பணியாற்றினார். இல் நிதி செயல்பாட்டிற்கான பொறுப்புகள் அவருக்கு இருந்தன. பல பிராந்தியங்களில் 17 நாடுகள் உள்ளடக்கியதாக இருந்தது. இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல், எல்லை தாண்டிய பரிவர்த்தனைகள், துணிகர மூலதன முதலீடுகள் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு பணிகள் ஆகியவற்றில் அவர் விரிவான அனுபவத்தைக் கொண்டுள்ளார். அதற்கு முன்பு அவர் ஜான் கீல்ஸ் குழுமத்துடன் 14 ஆண்டுகள் இருந்தார். அவர் ஜான் கீல்ஸ் பங்கு தரகர்களின் நிர்வாக பணிப்பாளராக பணியாற்றினார் மற்றும் பல நிதி சேவை வாரியங்களில் உறுப்பினராக இருந்தார். ஜான் கீல்ஸ் குழு. ஜான் கீல்ஸில் மென்பொருள் அவுட்-சோர்சிங் மற்றும் செயல்பாடுகளை அமைப்பதற்கும் அவர் பொறுப்பேற்றார்.

### தற்போதைய நிலைகள்

மக்கள் வங்கி- பணிப்பாளர், லங்கன் அலையன்ஸ் / பைனான்ஸ் லிமிடெட், பங்களாதேஷ்இ பணிப்பாளர் - ஆசிரி ஹொஸ்பிடல் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மாஸ் குழும நிறுவனங்களில் பல பணிப்பாளர் பதவிகளை வகிக்கின்றார்.

## 5. திரு ரஞ்சித் கொடிதுவாக்கு

*நிர்வாகமல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர்*

திரு கொடிதுவாக்கு 2020 ஆகஸ்ட் 13 ஆம் திகதி பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்

### தகுதிகள்

திரு கொடிதுவாக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத்தில் நிபுணத்துவ முதுகலை பட்டம் பெற்றுள்ளார், மேலும் இவர் ஐக்கிய இராச்சியத்தின், நியூ பக்கிங்ஹாம்ஷ'யர் பல்கலைக்கழகத்தில் சட்ட இளங்கலை (கௌரவ) பட்டதாரி ஆவார். இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தில் இணை உறுப்பினர் ஒருவரும் மற்றும் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் ஒரு சான்றளிக்கப்பட்ட உறுப்பினரும் ஆவார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

1982 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியில் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த திரு கொடிதுவாக்கு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு துறைகளில் பல்வேறு நிலைகளில் செயலாற்றி ஏராளமான அனுபவங்கள் பெற்று முன்னேறியதுடன், அது அவருக்கு கிளை வங்கியியல், நுகர்வோர் வங்கியியல், வர்த்தக வங்கியியல், கார்ப்பரேட் வங்கியியல், வெளிநாட்டு வங்கியியல், சர்வதேச வங்கியியல், கருத்திட்ட நிதியியல், மீட்டெடுப்புகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற துறைகளில் பாரிய அறிவாற்றலை பெறுவதற்கான வாய்ப்பை அளித்தது.

தொழில்துறையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் மாறு பொறியியல் வர்த்தக செயமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வணிகத் தேவைகளை டிஜிட்டல் தளத்திற்கு கொண்டு வருவதிலும், வங்கியை டிஜிட்டல்மயமாக்குவதிலும் அவர் ஒரு முக்கிய நபராக செயல்பட்டார். இதன் மூலம் சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் வங்கிக்கு பல்வேறு மதிப்புமிக்க விருதுகளும் அங்கீகாரங்களும் கிடைக்கப்பெற்றன.

### தற்போதைய நிலைகள்

அவர் 19 ஜுன் 2020 முதல் மக்கள் வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக பணியாற்றுகிறார். அவர் வஃப இலங்கை நிதி குறைதீர்ப்பு ஆணையத்தின் (உத்தரவாதம்) தலைவராகவும், பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் பிஎல்சி, பீப்பிள்ஸ் டிராவல்ஸ் லிமிடெட், பீப்பிள்ஸ் மெர்ச்சன்ட் பைனான்ஸ் பிஎல்சி, லங்கா அலையன்ஸ் /பைனான்ஸ் லிமிடெட் பங்களாதே', இலங்கை கொடுக்கடன் தகவல் பணியகம், லங்கா கிளியர் (பிரைவேட்) லிமிடெட், தேசிய கொடுப்பனவுகள் சபை, வஃப இலங்கை வங்கிகள் சங்கம் (உத்தரவாதம்), லங்கா நிதிச் சேவைகள் பணியகம் மற்றும் இலங்கையின் வங்கியாளர்கள் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் பதவிகளிலும் செயலாற்றுகின்றார்.

## 6. திரு சானுர விஜேதிலக

*நிர்வாகமல்லாத சுயாதீன பணிப்பாளர்*

திரு சானுர விஜேதிலக 9 பிப்ரவரி 2020 அன்று சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார.

### தகுதிகள்

திரு விஜேதிலக இலங்கையின் வங்கியாளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினராகவும், சர்வதேச நிபுணத்துவ முகாமையாளர்கள் சங்கத்தின் (UK) இணை உறுப்பினராகவும் உள்ளார். இந்தியாவின் ICFAI பல்கலைக்கழகத்தில் துவ முகாமைத்துவ டிப்ளோமாவும் பெற்றுள்ளார.

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு சானுர விஜேதிலகவிற்கு வங்கித் துறையில் 35 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது, இதில் மொத்தம் 14 ஆண்டுகள் கொமர்ஷல் வங்கி- இலங்கை பி.எல்.சியில் சிரேட்ட முகாமைத்துவம் மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவம் ஆகியவற்றில் கடன், இணக்கம் மற்றும் கிளை நிர்வாகம் ஆகிய துறைகளை உள்ளடக்கியது. வங்கியில் இடர் அடிப்படையிலான இணக்க கட்டமைப்பையும் இடர் அடிப்படையிலான இணக்க தணிக்கை முறையையும் செயல்படுத்துவதில் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

வங்கியின் 2 பெரிய பிராந்தியங்களில் விற்பனை மற்றும் இலாப வளர்ச்சியை அதிகரிக்க உத்திகளை வெற்றிகரமாக உருவாக்கி செயல்படுத்தியுள்ளார். ஐந்து 5 ஆண்டுகளுக்கும் மேலாக கிளை மேலாளர்கள் மற்றும் கடன் வழங்குவதற்கான கடன் அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட பயிற்சி திட்டங்களுக்காக வங்கியின் உள் வள பீடத்தில் உறுப்பினராக இருந்து கொமர்ஷல் வங்கி பி.எல். சி.யில் தனது நீண்ட தொழில் வாழ்க்கையில் வங்கியை பிரதிநிதித்துவப்படுத்திய அவர் சிங்கப்பூர், பங்களாதேஷ், சீனா மற்றும் ஜெர்மனியில் பல பயிற்சி திட்டங்களில் பங்கேற்றார். கொமர்ஷல் வங்கி பி.எல்.சியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் சிறிது காலம் சா/ப்ட்லோஜிக் / பைனான்ஸ் பி.எல்.சியில் இணக்க உதவி பொது முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார..

### தற்போதைய நிலைகள்/ ஈடுபாடுகள்

திரு. விஜேதிலக தற்போது இலங்கை மத்திய வங்கியின் வங்கி ஆய்வுகள் மையத்தால் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்களில் வள நபராக ஈடுபட்டுள்ளார்.

## 7. திரு அசோகா பண்டார

*நிர்வாகமல்லாத சுயாதீன பணிப்பாளர்*

திரு அசோக பண்டார பெப்ரவரி 19, 2020 அன்று சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார.

### தகுதிகள்

அவர் சந்தைப்படுத்த தொடர்பான பட்டபடிப்புக்கு பின்னரான டிப்ளோமா (CIM - UK) மற்றும் MBA (கொழும்பு பல்கலைக்கழகம்) தகுதிகளை பெற்றுள்ளார்

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு அசோக பண்டார MNC மற்றும் முன்னணி உள்ளூர் நிறுவனங்களில் தேவை உருவாக்கும் செயல்பாடு மற்றும் வணிக மேம்பாட்டில் 30 ஆண்டு நிபுணத்துவம் கொண்டவர். அவர் நெஸ்லே லங்கா பி.எல்.சியின் மேன்காம் உறுப்பினராகவும், டெல்மேஜ் /போர்சைத் குழும நிறுவனங்களின் குழு நிர்வாக பணிப்பாளராகவும் இருந்துள்ளார். பிராண்டட் வணிகங்களை உருவாக்குதல் மற்றும் வணிக அணிகளின் மேம்பாடு ஆகியவை அவரது முக்கிய திறன்களில் அடங்கும்.

### தற்போதைய நிலைகள்

லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட், லிட்ரோ கேஸ் டெர்மினல் லங்கா பிரைவேட் லிமிடெட், பில்ட்மார்ட் லங்கா (பிரைவேட்) லிமிடெட். தற்போது முன்னணி நிறுவனங்களுக்கான முகாமைத்துவ ஆலோசனை வழங்குபவராகவும் பயியாற்றுகிறார். ஒரு பயிற்சியாளராக, அவர் குழு திரு அசோக பண்டார நிர்வாகமல்லாத சுயாதீன பணிப்பாளர்

தலைமை மற்றும் ஆளுமை வளர்ச்சியை வளர்ப்பதில் நிபுணத்துவம் பெற்றவர் மற்றும் தலைமைத்துவம், மூலோபாய மேலாண்மை மற்றும் மேம்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மேலாண்மை ஆகியவற்றில் MBA கற்பித்தல் மூலம் தனது அறிவை வழங்குகிறார். முன்னணி தொழில்துறை அமைப்புகளின் எதிராக முக்கிய பங்குதாரர்களுக்கு தனது பிரச்சினை மேலாண்மை திறன்களை மேம்படுத்துவதன் மூலம் ஒரு முக்கிய பேச்சுவார்த்தையாளராகவும் அவர் செயற்படுகிறார அவர் இலங்கை பால் உற்பத்திச் சங்கத்தின் துணைத் தலைவராகவும், இலங்கை தின்பண்ட வகைகள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் குழு உறுப்பினராகவும் மற்றும் இலங்கை வர்த்தக மன்றத்தின் F&B குழுவின் குழு உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

## 8. திரு கிளைவ் பொன்சேகா

*நிர்வாகமல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர்*

திரு கிளைவ் பொன்சேகா பிப்ரவரி 19, 2020 அன்று சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### தகுதிகள்

திரு கிளைவ் பொன்சேகா இலங்கையின் வங்கியாளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராக உள்ளார் மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ முதுகலை நிறுவனத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலை பட்டம் பெற்றார். அவர் ஏ.சி.ஐ. டிலிங் சான்றிதழினையும் பெற்றுள்ளதுடன் திறைச்சேரி முகமத்துவத்தில் 27 வருடங்களுக்கும் மேலான அனுபவம் கொண்டுள்ளார். அவர் ஆஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் சான்றளிக்கப்பட்ட உறுப்பினர் (CMA) ஆவார.

### வகித்த பதவிகள்/அனுபவம்

அவர் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி மற்றும் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியில் பணியாற்றினார். அவர் 2018 முதல் 2020 வரையிலான காலகட்டத்தில் ஆரம்ப வர்த்தகர்களின் சங்கத்தின் தலைவராக செயல்பட்டுள்ளார் மற்றும் தேசிய கட்டண கவுன்சில், நிதி அமைப்பு நிலைத்தன்மை ஆலோசனைக் குழு, மற்றும் இலங்கை மத்திய வங்கியின் புதிய மாற்று வரைகோடு வட்டி விகிதங்களை ஆய்வு செய்து வடிவமைப்பதற்கான பணிக்குழு என்பவற்றில் உறுப்பினராக மேல்குறிப்பிட்ட காலப்பகுதியில் செயலாற்றியுள்ளார். மேலும் அவர்ன் இலங்கையின் ஐயுடீகுஃ னுயுடீகு தேர்வுகள் வங்கியாளர்களின் நிறுவனத்திற்கான தலைமை தேர்வாளராக செயல்பட்டுள்ளார்.

### தற்போதைய நிலைகள்

தற்போது மக்கள் வங்கியில் திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கியின் தலைவராக உள்ளார். முதன்மை விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவராக 2018 ஜூலை மாதம் நியமிக்கப்பட்ட அவர் தற்போது இந்த நிலையில் செயல்படுகிறார். திரு கிளிவ் பொன்சேகா நிர்வாகமல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர் அவர் இலங்கை மத்திய வங்கியின் தேசிய கொடுப்பனவு கவுன்சில் மற்றும் நிதி அமைப்பு ஸ்திரத்தன்மை ஆலோசனைக் குழுக்களில் உறுப்பினராக உள்ளார். பீப்பள்ஸ் லீசிங் புரபர்டி டெவலொப்மென்ட் லிமிடெட் தலைவராகவும் உள்ளார். இலங்கை கொடுக்கடன் தகவல் பணியகம் தொடர்பாக மக்கள் வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளருக்கு மாற்று பணிப்பாளராக செயலாற்றுகின்றார்

## 9. திரு அஸ்ஸாம் யு. அஹமத்

*நிர்வாகமல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர*

திரு அஸ்ஸாம் யு. அஹமத், 2019 டிசம்பர் 30 ஆம் திகதி பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் "டுஊ யின் பணிப்பாளர் ஒருவராக பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

### தகுதிகள்

அவர் பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனத்தின் (யுனைடெட் கிங்டம்) சக உறுப்பினராகவும், பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (யுனைடெட் கிங்டம்) சக உறுப்பினராகவும் மற்றும் இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்கியல் நிறுவனத்தின் ஒரு சக உறுப்பினராகவும் செயல்படுகிறார். அவர் இன்ஸ்டிடியூட் ஆப் ரிஸ்க் மேனேஜ்மென்ட் (யுனைடெட் கிங்டம்), ஒரு தொழில்நுட்ப வல்லுநர் ஆவதுடன் சான்றளிக்கப்பட்ட பயிற்சி கணக்காளர்கவும் (AUST) பட்டய பத்திரங்கள் மற்றும் முதலீட்டு நிறுவனத்தின் (யுனைடெட் கிங்டம்) உறுப்பினராகவும் உள்ளார்

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு அஹ்மத், மூலோபாய நிதி மேலாண்மை, மாற்று முதலீடுகள் மற்றும் ஆபத்து துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் 18 ஆண்டுகளுக்கு மேலான அனுபவங்களை கொண்டுள்ளார். அவரின் முந்தய தொழில் வழங்குநர்களில் சில பன்னாட்டு தொழில்வல்லுநர் சேவை நிறுவனங்களும் மற்றும் அந்தந்த சந்தைகளில் அடுக்கு 1 சேவை வழங்குநர்களும் உள்ளடங்குகின்றனர்.

### தற்போதைய நிலைகள்

திரு அஹமத் 3 ஜனவரி 2017 முதல் மக்கள் வங்கியின் நிதித் தலைவராக செயல்படுகிறார். இவர் பங்களாதேஷின் லங்கா அலையன்ஸ் /பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் பணிப்பாளராகவும் உள்ளார்.

## 10. திருமதி லக்மினி கோட்டேகொட

*நிறுவனத்தின் செயலாளர்*

திருமதி லக்மினி கோட்டேகொட சபையின் நிறுவன செயலாளராக 30 ஜூலை 2018 இல் நியமிக்கப்பட்டார.

### தகுதிகள்

சட்டத்தில் இளங்கலை பட்டம் பெற்ற வழக்கறிஞர்.

### வகித்த பதவிகள்

பீப்பள்ஸ் இன்ஷ்ரன்ஸ் பி.எல். சி., பீப்பள்ஸ் லீசிங் ஃப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிடெட், பீப்பள்ஸ் லீசிங் பிராபர்ட்டி டெவலப்மென்ட் லிமிடெட், பீப்பள்ஸ் லீசிங் ஹேவ்லாக் பிராபர்டீஸ் லிமிடெட் மற்றும் பீப்பள்ஸ் மைக்ரோ காமர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் செயலாளர்.

# கூட்டாண்மை முகாமைத்துவம்


1


2


3


4


5


6

### 1. திரு ஷமிந்திர மெர்சலின்

*(பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்)*

2020 நவம்பர் மாதம் பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் PLC உடன் இணைந்தார்

#### தகுதிகள்

B.Sc. (Hons) சிட்டி பல்கலைக்கழகம், ருமு 1996, நிதியியல் ஆலோசகர்களுக்கான சர்வதேச தகைமை (குயுஜஒ), பட்டய காப்புறுதி நிறுவனம், ருமு 2008.

#### வகித்த பதவிகள்

DFCC வங்கியின் சிரேட்ட உதவி தலைவர்/கூட்டாண்மை வங்கியியல் தலைவர், DFCC வங்கியின் நிறைவேற்று முகாமைத்துவ குழு (EXCO) உறுப்பினர். நாட்டுக்கான தலைவர் HSBC மாலத்தீவுகள். நிதி நிறுவனங்களின் குழு மற்றும் பொதுத்துறை தலைவர் - HSBC இலங்கை மற்றும் அண்ட் முகாமையாளர் - வள முகாமைத்துவம் மற்றும் காப்புறுதி - HSBC இலங்கை.

#### அனுபவம்

கார்ப்பரேட் மற்றும் உலகளாவிய வங்கியியல், முதலீட்டு வங்கியியல், சில்லறை வங்கியியல், கடன் நிர்வாகம் மற்றும் செயல்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான 23 ஆண்டு அனுபவம். ர்ளுடீஊ குழுமத்தினுள் தயாரிப்பு மேம்பாடு, ஆலோசனை, கட்டமைப்பு மற்றும் நிதியிடல், கடன் நிர்வாகம், கிளைகள் மற்றும் வெளிநாட்டு வங்கியியல் தொடர்பான செயல்பாடுகள் என்பவை பற்றிய அனுபவம். புதிய வணிகர்களை வடிவமைத்து செயல்படுத்தல் மற்றும் கூட்டாண்மை இலக்குகளுக்கு அமைவாக நிறுவனத்தின் ஒட்டுமொத்த வினைத்திறனை மேம்படுத்தல் என்பவற்றுக்கான நிபுணத்துவம்.

#### தற்போதைய நிலைகள்

பீப்பள்ஸ் இன்ஷுரன்ஸ் பி.எல். சி., பீப்பள்ஸ் லீசிங் ஃப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிடெட், பீப்பள்ஸ் லீசிங் பிராபர்ட்டி டெவலப்மென்ட் லிமிடெட், பீப்பள்ஸ் லீசிங் ஹேவ்லாக் பிராபர்டீஸ் லிமிடெட் மற்றும் பீப்பள்ஸ் மைக்ரோ காமர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் செயலாளர் மற்றும் லங்கன் அல்லயன்ஸ் பைனான்ஸ் லிமிடெட், பங்களாதேஷ் எனும் நிறுவனங்களின் பணிப்பாளர்


7


8


9


10

**2. திரு சஞ்சீவ பண்டாரநாயக்க**

*சிரேஷ்ட துணை பொது முகாமையாளர்*

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 2007 ஜுலை இல் இணைந்தார்.

**தகுதிகள்**

FCA,FCMA (இலங்கை), FCMA (ஆஸ்திரேலியா), CIMA(UK) வெற்றியாளர்

**வகித்த பதவிகள்**

இலங்கை லீசிங் சங்கத்தின் தலைவர், ஆசிய நிதிச்ச சேவைகள் சங்க (AFSA) உப தலைவர், இலக்கை வர்த்தக சம்மேளனத்தின் குழு உறுப்பினர் மற்றும் இலங்கை கடன் முகாமைத்துவ நிறுவனத்தின் (SLICM) கவுன்சில் உறுப்பினர். பீப்பல்ஸ் மெர்ச்சண்ட் பைனான்ஸ் பீஎல்சி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் மத்திய வங்கியின் நிதி அமைப்பு நிலைத்தன்மை தொடர்பான ஆலோசகர் குழு உறுப்பினர்

**அனுபவம்**

தகுதிக்கு பிந்தைய 27 ஆண்டுகளுக்கும் மேலான நிதித்துறையின் உயர்மட்டங்களின் அனுபவம்.

**தற்போதைய நிலைகள்**

இலங்கை லீசிங் சங்கத்தின் மற்றும் இலக்கை கொடுக்கடன் தகவல் பணியகத்தின் பணிப்பாளர். லங்கை நிதி நிறுவனங்களின் சங்க குழு உறுப்பினர் மற்றும் பீப்பல்ஸ் லீசிங் ப்ரொபேர்ட்டி டெவெலப்மெண்ட் லிமிடெட் இல் பணிப்பாளர்.

### 3. திரு லயனல் பெர்னாண்டோ
*சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர்*

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 1995 இல் இணைந்தார்.

**தகுதிகள்**

ACA, இலங்கை வாங்கியாளர் நிறுவனத்தின் துணை உறுப்பினர், தொழில் மற்றும் நிதி நிர்வாகம் தொடர்பான பட்டபடிப்புக்கு பின் டிப்ளமோ (CA Sri Lanka), இலங்கை சான்றுபெற்ற முகாமைத்துவ கணக்காளர் சங்க (ACMA) துணை உறுப்பினர்.

**அனுபவம்**

மக்கள் வங்கி உற்பட வங்கி மற்றும் நிதி தொழில் துறையில் 31 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்..

**தற்போதைய நிலைகள்**

பீப்பல்ஸ் லீசிங் ஹவ்லொக் ப்ரொபேர்ட்டிஸ் லிமிடெட் பணிப்பாளர்/பொது முகாமையாளர், அல் சபா இஸ்லாமிய நிதி சேவைகள் பிரிவின் தலைவர், தங்கக் கடன் செயல்பாடுகளுக்கான பொறுப்பதிகாரி, பணிப்பாளர் - தேசிய புகையிரத நூ தனசாலை (உத்தரவாதம்) லிமிடெட்.

### 4. திரு ரோஹான் தென்னகோன்
*பிரதி பொது முகாமையாளர் - இடர் மற்றும் கட்டுப்பாடு*

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 1998 இல் இணைந்தார்.

**தகுதிகள்**

MBA (கொழும்பு), MSc (Mgt.) - (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர), டீஐஉ - வணிக முகாமைத்துவம் (2 ஆம் வகுப்பு மேல்ஃஸ்ரீ ஜெயவர்தனபுரா), AIB (இலங்கை) மற்றும் APBSL, உரிமம் CA இலங்கை உறுப்பினர்.

**வகித்த பதவிகள்**

இலங்கை நிதி நிறுவனங்களின் சங்கத்தின் (FHA) உப தலைவர், 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு துணைக்குழுவின் கருத்திட்ட தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் FHA ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவில் பணியாற்றுதல். அல்-சஃபா இஸ்லாமிய நிதி சேவைகள் பிரிவின் தலைவராக பணியாற்றுதல்

**அனுபவம்**

குத்தகை துறையில் சேருவதற்கு முன்பு கணக்கு, உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வங்கியியல் துறைகளிலும் அதன் பின்னர் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக மேம்பாடு, கிளை செயல்பாடுகள், கடன், மற்றும் தற்போது இடர் மற்றும் கட்டுப்பாட்டு துறை மற்றும் சட்ட, ஆவணங்கள் மற்றும் டிஎம்டி ஒருங்கிணைப்பு பிரிவில் மேற்பார்வை போன்ற 31 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம்.

**தற்போதைய நிலைகள்**

பீப்பல்ஸ் காப்புறுதி பீஎல்சி இல் நிர்வாகமல்லாத, சுயாதீனமல்லாத பணிப்பாளர். இலங்கை கொடுக்கடன் தகவல் பணியகத்தின் இணக்கப்பாட்டு அதிகாரி. கணடந்த ஆறு வருடங்கள் தொடர்த்தியாக SLIM - NASCO வின் தேர்வுக்கு குழுவில் செயலாற்றுதல்.

### 5. திரு தமித் மலவிதந்த்தில
*பிரதி பொது முகாமையாளர் - மீட்டெடுப்புகள் மற்றும் நிர்வாகம்*

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 1996 இல் இணைந்தார்.

**தகுதிகள்**

சிஐ இலங்கை முதலிடம் மற்றும் ஐபிஎஸ்எல்லின் இடைநிலை பெற்றவர்

**அனுபவம்**

வங்கி மற்றும் நிதித் துறைகளில் 35 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் மற்றும் கணக்காய்வு மற்றும் கணக்குத் துறையரில் பல வருட அனுபவம். பீப்பள்ஸ் லீசிங் பிளீட் மேனேஜ்மென்ட் லிமிடெட் இல் பொது முகாமையாளராக ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக பாமயற்றியுள்ளார். மேலும் பத்து ஆண்டுகளுக்கு மேலாக பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி இல் கடன் மீளரவிடுதல் பிரிவில் தலைவராக செயலாற்றி, பின்னர் நாடு முழுவதிலுமுள்ள கிளைகளை கையாள்பவராக 2007 இல் கிளை செயல்பாடுகளில் இணைந்தார். தற்போது அவர் மீட்பு மற்றும் நிர்வாகத் தலைவராக செயல்படுகிறார்.

**தற்போதைய நிலைகள்**

பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் ஃபைனான்ஸ் பிஎல்சியின் முழு சொந்தமான துணை நிறுவனமாகிய பீப்பிள்ஸ் லீசிங்ஃ ப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிடெட் இல் பணிப்பாளராக செயல்படுகிறார்.

### 6. திரு லக்சந்த குணவர்தன
*பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்துதல்*

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 2002 இல் இணைந்தார்.

**தகுதிகள்**

AICM – SL மூலோபாய சந்தைப்படுத்துதல் துறையில் MBA, MSc, SLICM; மற்றும் CMA (ஆஸ்திரேலியா) வின் கடன் முகாமைத்துவ டிப்லோமா. சான்றுபெற்ற உறுப்பினர், SLID இன் உறுப்பினர், இலங்கை CPM இன் உறுப்பினர்.

**வகித்த பதவிகள்**

கூட்டாண்மை லீசிங் துறவி 10 ஆண்டுகள் செயலாற்றியுள்ளார்.

**அனுபவம்**

கூட்டாண்மை மற்றும் SME நிதியிடல் தொடர்பான கடன், சந்தைப்படுத்தல், மீட்பு, கிளை அபிவிருத்தி மற்றும் செயல்பாடுகள் துறைகளில் 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

**தற்போதைய நிலைகள்**

பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் ஃபைனான்ஸ் பிஎல்சியின் முழு சொந்தமான துணை நிறுவனமாகிய பீப்பிள்ஸ் மைக்ரோ கமெர்ஸ் லிமிடெட் இல் பணிப்பாளராக செயல்படுகிறார.

### 7. திரு பிரபாத் குணசேன
பிரதி பொது முகாமையாளர் - *ICT* (குழுமம்)

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 1999 இல் இணைந்தார்.

MBA (மேற்கு சிட்னி பல்கலைக்கழகம்), கணினி தொகுதி வடிவமைப்பு டிப்ளோமா – NIBM Sri Lanka. தகவல் தொகுதி கருத்திட்ட முகாமைத்துவம், தொகுதிகள் அறிவியல் நிறுவனம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்.

**அனுபவம்**

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 22 ஆண்டுகள்.

**தற்போதைய நிலைகள்**

பிரிட்டிஷ் கணினி சங்கத்தின் உறுப்பினர். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை தலைவர் - பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி.

### 8. திரு உதேஷ் குணவர்தன

பிரதி பொது முகாமையாளர் -
உள்துறை தணிக்கை

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 1999 இல் இணைந்தார்.

**தகுதிகள்**

ACA, ACMA (இலங்கை), திறைச்சேரி, முதலீடு மற்றும் அபாய முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா (IBSL), ஆஸ்திரேலியா கணினி சங்கத்தை உலக முதலாமிடம்பெற்ற்றவர்

**வகித்த பதவிகள்**

லங்கன் அல்லயன்ஸ் பைனான்ஸ் லிமிடெட், பங்களாதேஷ் நிறுவனத்தின் பிரதம நிதி உத்தியோகத்தராக இரண்டாம் நிலை அடிப்படையில் செயலாற்றியுள்ளார்

**அனுபவம்**

நிதித்துறையில் முக்கிய உயர் பதவிகளில் முக்கியமாக கணக்கியல், கணக்காய்வு, நிதி முகாமைத்துவம் மற்றும் திறைச்சேரி செயல்பாடுகளில் குறிப்பிட்ட முக்கியத்துவம் கொண்ட 21 ஆண்டு அனுபவம் பெற்றுள்ளார்.

**தற்போதைய நிலைகள்**

பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி இன் பணிப்பாளர் சபை கணக்காய்வு குழுவின் செயலாளர்.

### 9. திரு ரனில் பெரேரா

*உதவி பொது முகாமையாளர் -*
*மீள அரவிடுதல்*

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 1999 இல் இணைந்தார்.

**தகுதிகள்**

பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் MA பட்டதாரி (கொழும்பு), MBA (மணிப்பால்), பொருளாதார அபிவிருத்தி பின் பட்டப்படிப்பு டிப்ளோமா (கொழும்பு), B.Com (விசேட) சர்வதேச வர்த்தகம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர), பகுதி தகுதிகள் CIM (UK) மற்றும் CA இலங்கை.

**அனுபவம்**

பீப்பள்ஸ் லீசிங குழுமத்துடன் 21 ஆண்டுகள.

### 10. திருமதி சுஜீவா ரணசிங்க

*உதவி பொது முகாமையாளர்*
*மனிதவழ்ங்கள்*

பீப்பள்ஸ் லீசிங அன்ட் பினான்ஸ் பிஎல்சி யுடன் 2021 பெப்ரவரி மாதத்தில் இணைந்தார்.

**தகுதிகள்**

LL.B- கொழும்பு பல்கலைக்கழகம்.

**வகித்த பதவிகள்**

கமர்ரீயல் பேங்க் சிலோன் பிஎல்சியின் மனித வள தலைவராக செயலாற்றியுள்ளார்.

**அனுபவம்**

மனிதவள முகாமைத்துவதில் 22 ஆண்டு உற்பட ஒரு தனியார் வர்த்தக வங்கியில் 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

**2021 மார்ச் 31 இல் கூட்டாண்மை முகாமைத்துவம்*

# இணக்கப்பாட்டு அபாய முகாமைத்துவம்

பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி (பீப்பிள்ஸ் லீசிங்) பரந்த அளவிலான நிதி சேவைகளை வழங்குகிறது மற்றும் அதன் விலையாக ஒரு உயரிய ஒழுகுமுறைகளை கொண்ட சூழலில் இயங்குகின்றது. பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள், தரநிலைகள், நிறுவனத்திற்கு பொருந்தும் உள்ளக கொள்கைகள்ஃநடைமுறைகள் மற்றும் நடத்தை நெறிமுறைகள் பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தின் அதி உயரிய முன்னுரிமைகள் ஆகும். எமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பராமரித்தல் மற்றும் எமது பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பது முதன்மை முக்கியத்துவம் கொண்டுள்ளது.

நிறுவனம் முழுவதும் இணக்க அபாய முகாமைத்துவத்திற்கான கோற்பாடுகள் மற்றும் தரநிலைகளை வகுக்கும் வலுவான இணக்கப்பாட்டுக் கொள்கையொன்றை பீப்பல்ஸ் லீசிங் ஏற்படுத்தியுள்ளது. நேர்மை மற்றும் நாணயத்தை வலியுறுத்தும் கூட்டாண்மை கலாச்சாரத்தின் ஒரு பாகமாக வினைத்திறனான வழிமுறைகளின் மூலம் பீப்பல்ஸ் லீசிங் இன் ஒவ்வொரு பிரிவிலும் இணக்கப்பாட்டை மேம்படுத்துவது அதன் நோக்கமாகும். ஒட்டுமொத்த இணக்கப்பாடு நிதி நிறுவனத்தில் அனைவரையும் கவனத்திற்கு உள்ளாக்குவதோடு வர்த்தக நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக கருதப்படுகின்றது.

கொள்கை வடிவமைப்பானது, அடிப்படை சட்டங்கள், சட்டபூர்வ அதோகரங்கள் மற்றும் ஒழுகுமுறைப்படுத்துனர்கள்ஃ கண்காணிப்பாளர்களால் வழங்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் தரநிலைகள், சந்தை மரபுகள், தொழில்துறை சங்கங்களால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறை விதிகள், உள்ளக கொள்கையால்ஃசெயல்முறைகள் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களுக்குரிய நடத்தை ஒழுகுவித்துகள் போன்ற பல மூலங்களினாலான சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் தரநிலைகளின் தேவைகளை பூர்த்திக் செய்வதற்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## எமது இணக்கப்பாட்டுத் தத்துவம்

வர்த்தக செயப்பாடுகளை மேற்கொள்ளும்போது நிறுவனம் தன்னை உயர் தரத்தில் பேணுவதுடன், எந்நேரமும் பொருத்தமான சரிபார்த்தல் மற்றும் சமநிலைப்படுத்தல் (உாநஉமள யனெ டியடயெஉநள) முறையை பராமரித்தல் மூலம் ஆர்வத்தையும் சட்டத்திற்கு இணங்குதலையும் கவனிப்பது கவனம் செலுத்துகின்றோம். இணக்கப்பாட்டிற்கான நிறுவனத்தின் தத்துவங்களின் முக்கிய கூறுகள் பின்வருமாறு

- **இணக்கப்பாட்டின் பொறுப்புரிமம்** இணக்கத்தின் தொனி உச்ச நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இணக்கப்பாட்டு அபாய முகாமைத்துவத்தை மற்றும் இணக்கப்பாட்டு அபாய முகாமைத்துவ கட்டமைப்பை நிறுவனம் முழுவதிலும் நடைமுறைப்படுத்தலை கண்காணிப்பது பீப்பல்ஸ் லீசிங் பணிப்பாளர் சபையினரின் பொறுப்பாகும்.
- **பகிரப்பட்ட இணக்கப்பாட்டு பொறுப்பு** இணக்கப்பாட்டானது நிறுவனத்தின் ஒவ்வொரு நபரினதும் பொறுப்பாவதுடன் உரிய சட்ட விதிமுறைகள் தொடர்பாக சகல ஊழியர்களும் அறிந்திருப்பதும் அவற்றை பின்பற்றுவதும் அவசியமாகும்.
- **இணக்கப்பாட்டுக் கலாச்சாரம்**: பீப்பல்ஸ் லீசிங் தனது வர்த்தகச் செயல்பாடு முழுவதிலும் பொருத்தமான இணக்கப்பாட்டுக் கலாச்சாரமொன்றை பராமரிப்பதற்காக இணக்கப்பாட்டு பொறுப்புகள் மற்றும் நெறிமுறை மதிப்புகள் தொடராக அறிவூட்டுகின்றது. இணக்கப்பாட்டானது அதற்காகவுள்ள பிரிவை சார்ந்த ஒரு செயல்பாடு அல்ல, மாறாக நிறுவனம் முழுவதிலும் பரவலாக்க வேண்டிய ஒரு கலாச்சாரமாகும்.
- **சுதந்திரத்தன்மை**: இணக்கப்பாட்டு பிரிவானது ஒரு சுதந்திரமான செயல்முறை ஆவதோடு, ஏனைய இணக்கப்பாடு தொடர்பான செயல்பாடுகளின் மற்றும் தொழில் நடவடிக்கைகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பிட்டு அதன் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக புறநிலையாக செயல்படும் ஆற்றலை கொண்டுள்ளது.
- **தொடர்பாடல்**: பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தில் மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய திறந்த தொடர்பாடல் வழிகள் உள்ளன. ஆகவே, பதவிநிலையை பொருட்படுத்தாது, நிகழ்ந்த அல்லது நிகழக்கூடிய இணக்கப்பாடு மீறல்கள் தொடர்பாக குரலெழுப்புவதக்கு ஊழியர்களுக்கு அது வாய்ப்பளிக்கிறது.
- **ஏனைய பிரிவுகள் மற்றும் கிளைகளுடன் ஒருங்கிணைத்தல்**: வினைத்திறனாகவும் இணைக்கப்பட்டு அபாயங்களை முகாமைத்துவம் செய்வதற்காக இணக்கப்பாட்டு பிரிவு ஏனைய பிரிவுகள் மற்றும் கிளைகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் செயல்படுகின்றது.
- **இணக்கப்பாட்டு செயல்திறன் மதிப்பீடு**: பீப்பல்ஸ் லீசிங் தனது ஊழியர்களுக்கான ஒட்டுமொத்த செயத்திறன் மதிப்பீடு மதிப்பெண் அட்டையில், இணக்கப்பாடு தொடர்பான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை ஒருங்கிணைத்துள்ளது. எனவே, சகல ஊளியர்களாலும் இணக்கப்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## இணக்கப்பாட்டுக் கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்கள்.

பீப்பல்ஸ் லீசிங் பணிப்பாளர் சபை மற்றும் அதன் உயர் முகாமைத்துவம் எல்லா நேரங்களிலும் இணக்கப்பாடு மற்றும் நெறிமுறையான தொழில் நடைமுறைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இணக்கப்பாட்டுக்கான தொனியை உருவாக்குகின்றனர். இணக்கப்பாட்டு தேவைகளை பூர்த்திக் செய்வதற்காக வளர்ச்சியடைந்து வரும் சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புக்கு ஏற்றதாக உள்ளக கொள்கைகளும் செயல்முறைகளும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு நிறுத்தப்படுகின்றன.

மீளாய்வுச் செய்யப்படும் ஆண்டினுள், பல உள்ளக கொள்கைகளும் செயல்முறைகளும் மீளாய்வுச் செய்யப்பட்டு இற்றைப்படுத்தப் பட்டத்துடன் பல புதிய உள்ளக கொள்கைகளும், செயல்முறைகளை மற்றும் வழிகாட்டல்களும் செயலபடுத்தி இணக்கப்பாட்டு தரங்களை வலுப்படுத்துவதற்காக வழங்கப்பட்டன. தயவுச் செய்து ஆண்டினுள் அறிமுகப்படுத்திய புதிய கொள்கை விவரங்களுக்காக 122 ஆம் பக்கத்தை பார்க்கவும்.

ஆண்டினுள், பண்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட இணக்கப்பாட்டு ள்கையின் மூலம் இணக்கப்பாட்டுக் கலாச்சாரம் வலுவாக்கப்பட்டது. மேலூ ம் நிறுவனத்தின் இணக்கப்பாட்டு கொள்கையின் ஒரு பகுதியாக, இணக்கப்பாட்டு திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் காலாண்டு அடிப்படையில் அதனை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தல் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டது. இந்த திட்டத்தில் இணக்கப்பாட்டு சோதனை, பயிச்சி மற்றும் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு சோதனையின் மூலம் கண்டறியப்பட்ட இடைவெளிகளை சீரமைத்தல் என்பவை உள்ளடங்குகின்றன.

இணக்கப்பாட்டு தேவைகளை பின்பற்றுதல், பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தின் வெகுமதி வழங்கும் சட்டகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சகல ஊழியர்களுக்கான இணக்கப்பாட்டு தொடர்பான முக்கிய செயல்திறன் குறிகாட்டி (மூீஜ) மூலம், கவனம் செலுத்துதல் மற்றும் பொறுப்பேற்பதன் மூலம் இணக்கப்பாட்டு தரங்களை பாதுகாப்பதற்கான அவர்களின் அர்ப்பணிப்பு அளவு மேலும் விரிவாக்கப்படும்.

நெறிமுறையான நடத்தை மற்றும் ஒருமைப்பாடு நிறுவனத்தை சகல ஊழியர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப் படுகின்றது. பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்தின் தொழில் நடத்தை விதிமுறைகள் மற்றும் விசில் ஊதும் கொள்கை (றூளைவடந டீடழறநச 'ழடஉை) நிறுவனத்தின் தொழில்செயல்பாடுகளில் நெறிமுறையான நடைமுறைகளை மேம்படுத்துகின்றன.

மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டினுள் இணக்கப்பாடு மீறல்கள் தொடர்பாக ஒழுங்குமுறை படுத்துனர்களால் விதிக்கப்பட்ட அபாரதங்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் இல்லது பீப்பிள்ஸ் லீசிங் ஒரு தூய்மையான நிலையை பேணியுள்ளது.



GRI 205-1

**இணக்க செயல்பாடு மற்றும் அதன் மூலோபாயம்**

இணைக்க செயல்பட்டானது பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவிற்கு (BIRMC) நேரடியாக அறிக்கையிடும் சிரேட்ட முகாமையாளர் ஒருவரால் (இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்) வழிநடத்தப்படும்.

மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டினுள் இணக்கப்பாட்டு பிரிவின் கட்டமைப்பு மீளாய்வுச் செய்யப்பட்டு இணைக்க செயல்பாட்டின் தரத்தை மேம்படுத்துவதற்காக மூன்று மேலதிக ஊழியர்கள் அதன் கட்டமைப்புக்கு சேர்க்கப்பட்டனர் (ஐந்து உறுப்பினர்களை கொண்ட ஒரு பிரிவு)

பீப்பிள்ஸ் லீசிங்கின் இணக்க மூலோபாயம் கீழே தொகுக்கப்பட்டுள்ளது

**இணக்க மூலோபாயம்**

**இணக்க திட்டத்தை / நிகழ்ச்சியை உருவாக்குதல்**

பொருந்தக்கூடிய விதிகள், சட்டங்கள், பணிப்புரைகள், வழிகாட்டுதல்கள்

| தலைமைத்துவம் | சோதனை | உள்ளக கட்டுப்பாடுகள் | பயிற்சியும் தொடர்பாடல்களும் | கண்காணிப்பு | அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| தொனி உச்சத்தின் உச்சத்துக்கு | இணக்கத் பிரிவு மூலம் தொடர்ச்சியான இணக்க சோதனை | உள்ளக கொள்கைகள், கையேடுகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள் | தொடர்ச்சியான இணக்கப்பாட்டு பயிற்சி | பின்பற்றுதல் தணிக்கைகள் | குறைபாடுகளை அறிக்கையிடுதல் |
| இணக்கத்திற்கு போதுமான நிதி மற்றும் பணியாளர்களை வழங்குதல் | உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் உள்ளக கணக்காய்வுகள் | கணினி கட்டுப்பாடுகள் | இணக்கத் தேவைகள் பற்றி ஊழியர்களை அறிவூட்டுதல் | அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளில் போக்குகளை அடையாளம் காணுதல் | எடுக்கப்பட்ட சரிசெய்தல் நடைமுறைகளை அறிக்கையிடுதல் |
| செயல்திறன் மதிப்பீடு | கணினி தணிக்கைகள் | கணினி சோதனை | தொழில்துறை தொடர்பான புதிய சட்டரீதியான முன்னேற்றங்களுடன் வாரியத்தையும் பணியாளர்களையும் புதுப்பித்த நிலையில் வைத்திருத்தல் | திருத்த நடவடிக்கையை உறுதி செய்தல் | இணக்க கட்டமைப்பின் புதிய முன்னேற்றங்கள் தொடர்பாக வாரியத்தைப் அறிவூட்டுதல் |

**சுதந்திரத்தன்மை, நெறிமுறைகள், ஒருமைப்பாடு**

இணக்கப்பாட்டுத் திட்டம் - பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட திட்டமொன்றுக்காக இணக்கப்பாட்டு பிரிவு செயல்படுகின்றது.

தலைமைத்துவம் - ஆதரவு மற்றும் தலைமைத்துவம் கூட்டாண்மை முகாமைத்துவம், சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை எனும் தரப்பினர்களால், கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பொருள் இணக்கப்பாடு தொடர்பான செலவுகளை முறையே மீளாய்வு, பரிந்துரை மற்றும் அனுமதித்தல் மூலம் வழங்கப் படுகின்றன.

சோதனை - இயக்க நடைமுறைகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிய இணக்கப்பாட்டுப் பிரிவு இணக்கச் சோதனையை மேற்கொள்கிறது.

உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் வருடாந்த இணக்கப்பாட்டு தணிக்கையொன்று மேற்கொள்ளப்படுவதோடு, விசாரணை நடவடிக்கைகள், இணக்கப்பாட்டு கண்காணிப்பு மற்றும் ஆன்லைன் சோதனைகள் உட்பட திடீர் சோதனைகளை தொடர்ச்சோயாக மேற்கொள்கிறது. இந்த நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகள், குறிப்பிட்ட பிரிவுகளின் தலைவர்களால் செயல்படுத்தப் படுவதோடு, ஒழுக்காற்று நடவடிக்கைக்கு வழிவகுக்கும் பரிந்துரைகள், மனிதவள பிரிவு மற்றும் முகாமைத்துவதினால் கையாள படுகின்றது.

உள்ளக கட்டுப்பாடுகள் - ஒவ்வொரு பிரிவும் தமது செயல்பாட்டுப் பரப்பிள்ளையினுள் இணக்கப்பாடுகளை உறுதிச் செய்வதற்காக, சட்ட ரீதியான கட்டமைப்புக்குள் தமக்குரிய உள்ளக கொள்கைகள் மற்றும் கையேடுகளை உருவாக்கிக்கொள்வது, அந்தந்த பிரிவின் பொறுப்பாகும்.

பீப்பிள்ஸ் லீசிங்கின் பிரிவுத் தலைவர்கள் தமது பிரிவுகளில், உள்ளக கொள்கைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள், ஒழுங்குமுறை உத்தரவுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் மற்றும் அவர்களுடைய செயல்பட்டு பரப்பெல்லைகளுக்குரிய உள்ளூர் சட்டங்களும் கடைபிடிக்கப் படுவது தொடர்பாக பொறுப்புடையவர்கள் ஆவர். ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் அவர்கள் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவது அவசியமானதுடன் ஏதேனும் கொள்கைகளை விட்டு விலகல்கள் மற்றும் சட்டங்கள்ஃ ஒழுங்குமுறைகளை மீறல்கள் தொடர்பாக BIRMC யை அறிவுறுத்த வேண்டும்.

கணினி தொகுதி கட்டுப்பாடு - இணக்கப்பாட்டு மீறுதல்களை தடுப்பதற்காக முடிந்தவரை கணினி கட்டுப்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன மற்றும் வழமையான தணிக்கைகளுக்கு மேலதிகமாக, கணினி கட்டுப்பாடு மீறல்கள் அல்லது பிழைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த கணினி தணிக்கைகள் நடத்தப்படுகின்றன.

கண்காணித்தல் - கண்டறியப்பட்ட குறைகளை நிவர்திச் செய்வதற்கு பொருத்தமான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பட்டமையை உறுதிச் செய்வதற்காக பின் தொடரும் தணிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. குறைபாடுகள் மற்றும் இடைவெளிகளின் போக்கை கண்டறிந்து, திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவை ஆராய படுகின்றன.

நிறுவனத்தின் இணக்கப்பாட்டு நிலை தொடர்பான அறிக்கையொன்று, ஒவ்வொரு கூட்டத்தின் பொது குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், அறிக்கையொன்று மாதாந்த பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது இணக்கப்பாடு உத்தியோகத்தரால் பணிப்பாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படும்.

**இணக்கப்பாட்டை கண்காணிப்பதற்கான அமைப்புகள்**

தற்போதைய தொழில் நடைமுறைகளுக்கு அமைவாக, தகவல் சேகரித்தல், கண்காணிப்பு, வாடிக்கையாளர் திரையிடல் மற்றும் இணக்க கட்டுப்பாடு என்பவற்றுக்காக தொழில்நுட்பம் பயன்படுகின்றது. ஆண்டினுள், பீப்பல்ஸ் லீசிங் தனது வாடிக்கையாளர் திரையிடுதல் தொகுதியை, நிகழ்நேர திரையிடல் தொகுதியாக மேம்படுத்தியதுடன், பயங்கரவாத நிதியிடல் மற்றும் பண தூய்மையாக்கள் நடவடிக்கைகளை தடுக்க, சந்தேகமான பரிவர்த்தனைகளை அடையாளம் காணுவதற்காக தொகுதியொன்றை உள்ளடக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**இணக்கப்பாட்டுப் பயிச்சிகள்**

சமூக ஒன்றுகூடல்கள் ஆற்றுப்படுத்தப்பட்ட கோவிட் 19 தொற்றுநோய்க்கு மத்தியில் தொடர்புகளை பேணுவதற்காக ஒன்லைன் தொழில்நுட்ப பயன்பாடு அதிகரித்ததோடு, பீப்பல்ஸ் லீசிங் தனது இணக்கப்பாடு முன்னேற்றங்கள் தொடர்பாக முகாமைத்துவம் உற்பட தனது ஊழியர்களையும் மற்றும் பணிப்பாளர் சபையினரையும் புதுப்பித்த நிலையில் அறிவூட்டுவதற்கு இணைய பயன்பாடுகளை பயன்படுத்தியது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள், முகாமைத்துவம் மற்றும்பணிப்பாளர் சாமை ஒன்லைன் மூலம் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்வுகளில் கலந்துகொண்டதுடன், பண தூ ய்மையாக்கள் தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதிவழங்குதல்களை தடுத்தல் மற்றும் உரிமம் பெற்ற நிதி நிர்வனங்களுக்குரிய புதிய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை அறிக்கை தேவைகள் போன்ற தலைப்புகள் அவற்றில் உள்ளடங்கி இருந்தது. அதற்க்கு மேலதிகமாக புதிதாக ஆள்சேர்க்கப்பட்ட சகல ஊழியர்களும் ஆரம்ப பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டதோடு, அது அவர்களுக்கு நிறுவனத்தின் செயல்முறைகளை அறிவதற்கு வாய்ப்பளித்தது.

## பீப்பிள்ஸ் லீசிங் அண்ட்/பைனான்ஸ் பிஎல்சி (பீப்பிள்ஸ் லீசிங்) உறுதி செய்யப்பட்டுள்ளது உயர்ந்த நிர்வாக தரநிலைகள், நேர்மை மற்றும் தொழில்முறை மற்றும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளை என்பவற்றை உறுதி செய்யப்பட்டுள்ளது. சிறந்த ஆளுமை வளர்ச்சியின் அடித்தளம் என்பது நிறுவனத்தை நம்பிக்கை ஆவதோடு, வாடிக்கையாளர் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வலுப்படுத்தியுள்ளது. தொனியை உச்சத்தில் வைத்து சபை உதாரணத்தால் வழிநடத்துகிறது.

### 1.1 ஆளுமைக்கான எமது அணுகல்

கூட்டாண்மை ஆளுமையின் பொறுப்பாளர்களாக, சிறந்த கூட்டாண்மை ஆளுமை கோட்பாடுகளுக்கு ஏற்ப, அதன் நற்பெயர், மதிப்புக்கள் மற்றும் சொத்துக்களை பாதுகாத்துக்கொண்டு அதேநேரம், பங்குதாரர் கவனங்களையும் சமநிலை படுத்திக்கொண்டு நிறுவனம் அதன் மூலோபாய இலக்குகளை அடைவதை சபை உறுதிச் செய்கின்றது. முக்கிய மதிப்புக்களுடன் சீரமைக்கப்பட்டு மற்றும் மேம்படுத்தப்பட்ட பொறுப்பு, வலுவான ஆபத்து மற்றும் செயல்திறன் முகாமைத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் பயனுள்ள மற்றும் நெறிமுறையான தலைமை என்பவற்றுடன் கூடிய கலாச்சாரமொன்றை நோக்கி கொண்டுச் செல்லும் ஒரு வலுவான ஆளுமை கட்டமைப்பை சபையினால் நிறுவியுள்ளது. உள்ளக மற்றும் வெளிவாரி முன்னேற்றங்களுக்கு ஏற்ப சிறந்த நடைமுறையை வளர்ப்பதற்காக இக் கட்டமைப்பு தொடர்ந்து மீளாய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

### 1.2 பங்குதாரர் மதிப்பை வழங்குதல்

பகிரப்பட்ட மதிப்புகளை வாங்குவதில் பங்குதாரர்களின் கவனங்களையும் மற்றும் எதிர்பார்ப்புகளையும் புரிந்துகொண்ட அவற்றுக்கு பதிலளிப்பதற்கு பீப்பல்ஸ் லீசிங் உறுதிபூண்டுள்ளது. பக்கம் 32 இல் விவரித்துள்ளவாறு தொற்றுநோய் நிலைமையில் எமது பதிலளிப்பு மற்றும் எமது ஊழியர்கள் அவர்களின் குடும்பங்கள் மற்றும் எம்முடன் தொடர்புடையவர்கள் போன்ற அனைவரின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலனோம்பு தொடர்பான எமது முன்னுரிமை வழங்குதல் இதற்க்கு சாட்சியளிக்கின்றது.

பணிப்பாளர் சபையானது, அதன் மூலோபாயங்கள் வகுத்தலின் பொது சுற்றாடல், சமூக மற்றும் ஆளுமை (நுளுபு) காரணிகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த அணுகலை பின்பற்றுகின்றது. மற்றும் நிறுவனத்தின் முன்னேற்றம் பொறுப்பானதும் நிலையானதும் என்பதை உறுதிச் செய்க்கின்றது. வாடிக்கையாளர் ஈடுபட்டு வழிமுறைகள் மூலமான கருத்துக்கள், மூலோபாய வகுத்தலில் முக்கிய உள்ளீடுகளை வழங்குகிறது.

**கூட்டாண்மை ஆளுகை இணக்கப்பாட்டு சாராம்சம்**

| சட்டம் / விதிமுறை | தழுவல் | கடைபிடித்தல் | வெளிப்படுத்தும் அட்டவணை |
|---|---|---|---|
| கொழும்பு பங்குச் சந்தை (CSE) பட்டியலிடல் விதிகள் | கட்டாய ஏற்பாடுகள் | முழுமையாக இணக்கமானது | பக்கம்123 மற்றும் 143 |
| 2008 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, 2013 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மற்றும் 2020ழு ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணிப்புரைகளால் திருத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் (CBSL) 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரை. | கட்டாய ஏற்பாடுகள் | முழுமையாக இணக்கமானது | பக்கம்127 முதல் 138 |
| இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் (CA SriLanka) வழங்கிய கூட்டாண்மை ஆளுகை குறித்த சிறந்த நடைமுறைக் குறியீடு | கட்டாய ஏற்பாடுகள் | முழுமையாக இணக்கமானது | பக்கம்125 முதல் 127 |

** கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையின் இணக்கப்பாட்டு தேவைகளை பூர்த்திச் செய்வதற்காக இலங்கை பட்டாயா கணக்காளர் நிறுவனம் வழங்கியுள்ள இலங்கையின் தொடர்புடைய சேவைகளின் நடைமுறை கூற்றில் (ளுடுசுளுளு 4752) வழங்கியுள்ள செயல்முறைகளை, கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட எர்ன்ஸ்ட் மற்றும் யங் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்டது.*

**சிறப்பம்சங்கள்-2020/21**

- கோவிட் -19 சர்வதேச பரவல் மூலம் நிறுவனத்திற்கு ஏற்படும் தாக்கத்தையும் அபாயங்களையும் தொடர்ந்து மதிப்பாய்வு செய்தல்.
- தொற்றுநோயின் தாக்கத்தை கருத்தில் கொண்டு குழுமத்தின் நீண்டகால பார்வையை மற்றும் நோக்கங்களுக்கு ஏற்ப மறு மதிப்பீடு மேற்கொள்ளும் மூலோபாயம். ஒருங்கிணைந்த சூழல், சமூக மற்றும் ஆளுகை அம்சங்கள்.
- இலங்கை மத்திய வங்கியின் உயர்த்தப்பட்ட AML/CFT கண்காணிப்பு நடவடிக்கைகளை கடைப்பிடித்து, சகல விதிமுறைகள் மற்றும் அறிக்கை தேவைகளுக்கும் இணங்கப்பட்டன
- பயனுள்ள கண்காணிப்பு, முகாமைத்துவம் மற்றும் தாமதமான கடன் மீட்பு என்பவற்றை தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட்டன.
- திரு 'மிந்திரா மார்சலின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் பதவிக்கு 25 நவம்பர் 2020 முதல் நியமிக்கப்பட்டார்.
- திரு ரஞ்சித் கொடிதுவாக்கு நிறைவேற்று அல்லாத பணிப்பாளராக 13 ஆகஸ்ட் 2020 முதல் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.
- திரு. ரசித குணவர்தன 2020 ஜுன் 25 அமலுக்கு வரும்படி ராஜினாமா செய்தார்.
- ஒரு ஸ்கிரிப் டிவிடெண்ட் வடிவத்தில் இடைக்கால பங்குலபம் அங்கீகரித்து அனுமதிக்கப்பட்டது.

## 1.3 ஆளுகை கட்டமைப்பு

**சபையின் முக்கிய ஆளுகை பணிகள் மற்றும் பொறுப்புக்கள்**

- மூலோபாய திசையை நடத்தும் அமைப்பு அங்கீகாரம். உயர்ந்த சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை தரநிலைகள் மீது கவனம் செலுத்துகிறது
- கொள்கை மற்றும் மூலதன திட்டமிடல் அங்கீகரித்தல் மூலோபாயத்திற்கு விளைவை வழங்குகிறது. வழிகாட்டல், வள ஒதுக்கீடு மற்றும் ஆபத்து தாங்கு சக்தியை ஏற்படுத்துகிறது
- மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நிர்வாகத்தால் செயல்படுத்தல்
- அறிக்கை மற்றும் வெளிப்படுத்துதல் மற்றும் ஈடுபாடு மூலம் நிறுவன செயல்திறனை உறுதி செய்கிறது

பணிப்பாளர் சபை பீப்பல்ஸ் லீசிங்க்கு வழிகாட்டுதலையும் தலைமைத்துவத்தையும் வழங்குவதோடு, அதன் ஒட்டுமொத்த நிர்வாகம், செயல்திறன், மூலோபாயம் மற்றும் நிறுவனத்தின் விவகாரங்களுக்காக கூட்டுப் பொறுப்பை ஏற்கிறது. கூட்டாண்மை ஆளுகை ஆவணம் சபையின் முடிவுகளுக்காக குறிப்பாக ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களின் முறையான அட்டவணையை கொண்டுள்ளது.

சபையினால் நிறுவப்பட்ட ஆளுகை கட்டமைப்பானது, நிறுவனம் நன்கு நிர்வகிக்கப்படுவதையும் கட்டுப்படுத்தப்படுவதையும் உறுதி செய்வதற்கான வலுவான நிறுவன அமைப்பு, ஒரு விரிவான கொள்கை கட்டமைப்பு, அறிக்கை வழிமுறைகள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அபாய முகாமைத்துவ செயல்முறைகள் என்பவற்றை கொண்டுள்ளது.

ஆளுகை கட்டமைப்பானது பல வெளிவாரி மற்றும் உள்ளக இயக்கக் கருவிகளால் பிணைக்கப்பட்டுள்ளது.

**முக்கிய ஆளுகை இயக்கக கருவிகள்**

**உள்ளக**

- சங்கத்தின் கட்டுரைகள்
- கூட்டாண்மை ஆளுகை ஆவணம்
- வணிகக் நடத்தை மற்றும் நெறிமுறைகள்குறியீடு
- செயல்பாட்டு கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் கையேடுகள்
- விசில் ஊதுபவர் பாதுகாப்பு கொள்கை
- அபாய முகாமைத்துவ நடைமுறைகள்
- உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள்
- பண தூய்மையாக்கள் எதிர்ப்பு மற்றும் KYC கொள்கை

**வெளிவாரி**

- 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி தொழில்ச் சட்டம்
- 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டம்
- 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் பேரவைச் சட்டம் (திருத்தப்பட்ட)
- கொழும்பு பங்குச் சந்தையின் (ஊளுநு) இன் பட்டியல் விதிகள்
- ஊயு இலங்கை வழங்கிய கூட்டாண்மை ஆளுகை குறித்த சிறந்த நடைமுறைக்கு குறியீடு
- ஊடீளுடு வழங்கிய நிதி நிறுவனங்கள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரை
- புசுஐ நிலைத்தன்மை வழிகாட்டுதல்கள்

### முழுமையான கொள்கை கட்டமைப்பு

நிறுவனத்தின் விரிவான கொள்கை அமைப்பு, அமைப்பின் அனைத்து நிலைகளிலும் நடத்தை மற்றும் முடிவெடுப்பதற்கு வழிகாட்டியாக செயல்படுகிறது. கட்டமைப்பு, பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அபாயங்களை முகாமைத்துவம் செய்யும் அதேநேரம், சட்ட விதிமுறைகளுடன் இணங்க உதவுகிறது.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கொள்கை கட்டமைப்பை மீளாய்வுச் செய்கிறது. வருடத்தில், வர்த்தக நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான கொள்கை மற்றும் தகவல் பாதுகாப்பு நடைமுறை பற்றிய கொள்கை உட்பட 12 புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. விசில் ஊதுதல் கொள்கை மற்றும் வணிக தொடர்ச்சி கொள்கை உட்பட மேலும் 12 கொள்கைகள் நிறுவனத்தின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.

**2020/21 இல் வகுக்கப்பட்ட புதிய கொள்கைகள்**

- கடன் வளங்களுக்கு பின் மீளாய்வு
- விலைக் கொள்கை
- மார்ஜின் வர்த்தகத்துக்கான ஒதுக்கீட்டுக் கொள்கை
- குயஉவழசபைெ ஒதுக்கீட்டுக் கொள்கை
- நிலையான சொத்துக்கள் நிர்வாக கையேடு
- பங்கு வர்த்தகக் கொள்கை
- வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கான கொள்கை
- கையடக்க தொலைபேசி பயன்பட்டுக் கொள்கை
- ஊழியர்களுக்கான சமூக ஊடகக் கொள்கை
- தொலைநிலை அணுகல் கொள்கை
- தகவல் பாதுகாப்பு நடைமுறை கொள்கை
- பரிசுகளை ஏற்றுக்கொள்வது மற்றும் முதுபோக்கு கொள்கை கையேடு
- இணக்கப்பாட்டுக் கொள்கை கையேடு
- தகவல் இரகசியத்தன்மை

**2020/21 இல் மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்ட கொள்கைகள்**

- விசில் ஊதுபவர் கொள்கை
- வெளிவாரி கணக்காய்வாளர்களை கணக்காய்வு அல்லாத சேவைகளில் ஈடுபத்துவது பற்றிய கொள்கை
- பண தூய்மையாக்கள் எதிர்ப்பு (AML) மற்றும் உங்கல் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் (KYC) கொள்கை
- மார்ஜின் வர்த்தக கடன் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்கள்
- ஆபத்து சகிப்புத்தன்மை கூற்று
- மன அழுத்த சோதனை கொள்கை
- அபாய முகாமைத்துவ கொள்கை
- குயஉவழசபைெ கடன் கொள்கை
- வணிக தொடர்ச்சி கொள்கை
- செயலற்றவை தொடர்பான கொள்கை
- செயலற்ற நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு கணக்கு கொள்கை
- கடன் கொள்கை
- அசையா சொத்துக்களை பார்வையிடுதல் மற்றும் மதிப்பிடுதல் பற்றிய கொள்கை
- வெளிவாரி சேவைகளை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான கொள்கை
- வாடிக்கையாளர் முறையீடு மற்றும் குறைகளை கையாளுதல் கொள்கை

## தொற்றுநோய் நிலமைக்குள் ஆளுகை

- COVID-19 தொற்றுநோய், ஊழியர்கள் மற்றும் தொழில்களின் நலனுக்கான சவால்களை எதிர்கொள்ள நிறுவனம் முழுவதும் சுறுசுறுப்பு மற்றும் தழுவல் தேவைகள் ஏற்படுவதற்கான முன்னெப்போதும் இல்லாத மாற்றத்தை உருவாக்கியுள்ளது.
- மார்ச் 2020 இல் தொற்றுநோய் பரவல் ஆரம்பித்தபோது, ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளித்தல், நிச்சயமற்ற மற்றும் பயத்தின் காலத்தில் வாடிக்கையாளர்களை ஆதரித்தல், நிதி எதிநோக்கு சக்தியை உறுதிச் செய்தல் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு உதவுதல் என்பவற்றை மேற்கொள்ளும் அதேநேரம், தொழில் தெளிவுத்தன்மை மற்றும் உறுதியளிப்பதற்காக CEO/GM, சபையுடன் தொடர்ச்சியாக தொடர்பு கொண்டார்..
- தொற்றுநோய்க்கு நிறுவனம் பயனுள்ள மற்றும் சரியான நேரத்தில் எதிர்வினையாற்றுவதை உறுதி செய்யவும் சகல பங்குதாரர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் நிறுவனத்தின் கிளைகள் மற்றும் பிரிவுகள் முழுவதும் தொற்றுநோயைக் கண்காணிக்கும் பொறுப்புடைய ஒரு COVID-19 செயல்பாட்டு பணிக்குழுவை நிறுவுதற்கு பணிப்பாளர் சபை முகாமைத்த்துவத்துக்கு ஆதரவை வழங்கியது. தொடர்புடைய செயல்பாட்டு அளவீடுகளின் அறிக்கையொன்று வாரியத்திற்கு வழங்கப்படுகிறது.



தொலைதூர பார்வை மற்றும் நோக்கத்துடன் நிறுவனத்தின் மூலோபாய முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்வதில் சபை தலைமை வகிப்பதனால் பணிப்பாளர் சபையின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கணிசமாக அதிகரித்துள்ளது. அபாய முகாமைத்துவம், குறிப்பாக இணைய பாதுகாப்பு, மோசடி, திருட்டு மற்றும் கடன் அத்துடன் மீள அரவிடுதல் மற்றும் உள்ளக கட்டுப்பாடு முக்கிய முன்னுரிமைகளாக உள்ளன.

நீண்டகால எதிநோக்கு சக்தி மற்றும் வணிகத்தின் வலிமை, தொற்றுநோயின் கொந்தளிப்பிலிருந்து வெளிப்படும் வாய்ப்புகளை பயன்படுத்துவதற்காக வணிகத்தை நிலைநிறுத்துதல் என்பவற்றை உறுதி செய்வதில் சபை கவனமாக இருந்தது.

- இந்த சவால்களை எதிர்கொள்ள தேவையான நேரத்தை ஒதுக்கவும் மற்றும் குழு மேற்பார்வை பயனுள்ளதாக இருப்பதை தொடர்ந்து உறுதி செய்யவும் சபை அடிக்கடி ஒன்றுகூடியது
- பணிப்பாளர் சபை வளர்ந்து வரும் வணிக நிலப்பரப்பை மற்றும் வணிகத்தைத் தக்கவைக்க நிறுவனத்தால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணித்து மதிப்பாய்வு செய்கிறது.

GRI 102-18

### 1.4 ஆளுகை அமைப்பு

சபையினால், கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதன் ஆணைக்கு ஏற்ப நான்கு துணை குழுக்களுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டிய செயல்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாளாந்த நிறுவன முகாமைத்துவம் மற்றும் அதன் மூலோபாய திட்டத்தை நடைமுறைப்படுத்தல் CEO/GM வினால் வழிநடத்தப்படும் கூட்டாண்மை முகாமைத்துவத்துக்கு ஒப்படைக்க பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் பயனுள்ள கட்டுப்பாட்டுகளை தம்வசம் வைத்துக்கொண்டு அதிகார பகிர்தல் கட்டமைப்புக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிகாரத்தை ஒப்படைப்பது இயக்குநர்களின் பொறுப்பை மற்றும் அவர்களின் சட்டப்பூர்வமாக நிறைவேற்றும் பொறுப்பைக் குறைக்காது என்பதை சபை ஒப்புக்கொள்கிறது. முக்கிய விïயங்களில் தொடர்ச்சியான அறிக்கையிடல் பயனுள்ள மேற்பார்வைக்கு உதவுகிறது.

முக்கிய முகமைத்தவ பணியாளர்கள் (KMP) அவர்களின் கடமைகளை நிறைவேற்ற தேவையான திறன், அறிவு மற்றும் அனுபவம் கொண்ட திறமையானவர்கள் ஆவர் மூலோபாய ரீதியாக சீரமைக்கப்பட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPI), செயல்திறனை வழிநடத்தி இலக்குகளை அடைய ஆதரவளிக்கும்.

#### அறிக்கையை வழிநடத்துதல்

நிறுவனம் ஏற்றுக்கொண்ட நடைமுறைகளை எடுத்தக்காட்டும் வகையில் கூட்டாண்மை ஆளுகை அறிக்கை பின்வரும் கோற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்டுள்ளது.

| | | பக்கம்/ பக்கங்கள் |
|---|---|---|
| 1.1 | ஆழுகைக்கான எங்கள் அணுகுமுறை | 111 |
| 1.2 | பங்குதாரர் மதிப்பை வழங்குதல் | 111 |
| 1.3 | நிர்வாக கட்டமைப்பு | 112 |
| 1.4 | நிர்வாக அமைப்பு | 113 |
| 1.5 | ஒரு வினைத்திறனான சபை | 114 |
| 1.6 | பொறுப்பு மற்றும் நியாயமான ஊதியம் | 120 |
| 1.7 | பாலின சமத்துவம் | 120 to 121 |
| 1.8 | புத்தாக்க ஆளுகை | 121 |
| 1.9 | தகவல் தொழில்நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்பு ஆளுகை | 121 |
| 1.10 | நிலைத்தன்மையான ஆளுகை | 121 |
| 1.11 | பணிப்பாளர் சபையின் பொறுப்பு | 121 to 122 |
| 1.12 | பங்குதாரர்களுடனான உறவு | 122 to 123 |




## 1.5 ஒரு பயனுள்ள பணிப்பாளர் சபை

பங்குதாரர்களின் மதிப்பு உருவாக்கத்தை பாதுகாக்க ஒரு வலுவான மற்றும் பயனுள்ள கட்டுப்பாடுகளின் கட்டமைப்புக்குள் பணிப்பாளர் குழிவினால் தொடர்ந்து நெறிமுறையான மற்றும் பயனுள்ள தலைமைத்துவம் வழங்க படுகின்றது

அடுத்து வரும் குழு அமைப்பு 1.5.1 முதல், தடர்ச்சி திட்டமிடல் 1.5.13 வரையிலான பிரிவுகள், சபையின் பங்களிப்பின் திறன் மற்றும் நெறிமுறையை உறுதிப்படுத்துவதற்காக பின்பற்றிய சிறந்த ஆளுகை நடைமுறைகளை எடுத்துக்காட்டுகின்றன.

### பணிப்பாளர் சபையின் முக்கிய பொறுப்புகள்

- மூலோபாய வழிகாட்டகளை வழங்குதல்
- மூலோபாயத்தை செயல்படுத்துவதை கண்காணித்தல்
- கூட்டாண்மை மதிப்புகளை அமைத்தல் மற்றும் நெறிமுறை நடத்தைகளை ஊக்குவித்தல்.
- அபாயமுகாமைத்துவ முறைமைகளை நிறுவுதல், உள்ளக கட்டுப்பாடு மற்றும் இணக்கப்பாடு.
- சமூகத்தின் தேவைகளுக்கு பதிலளித்தல்
- பங்குதாரர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் அவர்களின் கவனங்களை நியாயமான முறையில் சமநிலைப்படுத்துதல்.
- நிறுவனத்தின் நிலை மற்றும் வாய்ப்புகள் தொடர்பான ஒரு சமநிலையான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய மதிப்பீட்டை வழங்குதல்
- சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் முறையான பயன்பாட்டை உறுதி செய்தல்.
- எந்த இடையூறும் இல்லாமல் செயல்பட தொடர்ச்சி திட்டமிடல் மற்றும் அதன் தொடர்ச்சியான திறனை உறுதி செய்தல்.

### 1.5.1 பணிப்பாளர் சபையின் அமைப்பு

ஒரு சமநிலையான மற்றும் பன்முகமான சபை.

சபை ஒன்பது உறுப்பினர்களை கொண்டுள்ளது அனைவருமே நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள் ஆவர்.

நிறைவேற்று அல்லாத சுயாதீன பணிப்பாளர்களை தவித்து ஏனைய பணிப்பாளர்கள் தாய் நிறுவனமான மக்கள் வங்கியினால் பரிந்துரைக்கப்பட்டு வருடாந்த பொது கூட்டத்தில் பங்குதாரர்களால் சங்கத்தின் கட்டுரைகள் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆவர். சுயாதீன பணிப்பாளர்கள் அவர்களின் துறைகளில் புகழ்பெற்ற வல்லுநர்கள் ஆவர்.

பணிப்பாளர்களின் ஒன்றிணைந்த பின்னணி சபையின் பணிகள் மற்றும் பொறுப்புகளை புறநிலை மற்றும் திறம்பட நிறைவேற்ற தேவையான திறன்கள் மற்றும் அனுபவங்களின் சிறந்ததொரு கலவையை வழங்குகின்றது. கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதற்காக குழுவில் ஆக்கபூர்வமான விவாதங்களில் ஈடுபடுவதற்கு அவர்களின் முன் வைக்கப்பட்ட விடயங்களின் புறநிலை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு அனைத்து இயக்குநர்களும் சுயாதீனமான தீர்ப்பைப் பயன்படுத்துகின்றனர்.

சிரேட்ட சுயாதீன பணிப்பாளரின் நியமனம், பணிப்பாளர் சபையின் சுயாதீனத்தை மேலும் பலப்படுத்துகின்றது. மக்கள் வங்கியின் (தாய் நிறுவனத்தின்) தலைவராகவும் செயலாற்றும் திரு சுஜீவ ராஜபக்ச அவர்கள் சுயாதீனமல்லாத தலைவராக நியமிக்கப்பட்டதை அடுத்து, 2020 மார்ச் 01 ஆம் திகதி திருமதி கொரளி பிட்ர்ஸ் அவர்கள் ஒரு சிரேட்ட சுயாதீன பணிப்பாளராக நியமிக்க பட்டார்..

பணிப்பாளர் சபையின் நியமனக் குழு மூலமாக சபை அதன் கலவையை ஒரு முன்னோக்கிச் செல்லும் அடிப்படையில் மீளாய்வுச் செய்கின்றது.

தலைவர் உற்பட நான்கு பணிப்பாளர்கள் நிதி வல்லுநர்கள் அவதால் சபையினுள் போதுமான நிதியியல் நுண்ணறிவு உறுதிச் செய்ய படுகின்றது.

| சபையின் அமைப்பு | |
|---|---|
| நிறைவேற்று அல்லாத சுயாதீன பணிப்பாளர்கள் | 3 |
| நிறைவேற்று அல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர்கள் (தலைவர் உற்பட) | 6 |

பாலின வேறுபாடு




சபையின் அளவு




ஒரு பொருத்தமான பணிப்பாளர் சபை அளவு, பொறுப்புக்கூறலை மேம்படும் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு, ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான விவாதங்களையும் மற்றும் முடிவெடுப்பதையும் மேற்கொள்ள ஊக்குவிக்கும்

அனுபவத்தின் பன்முகத்தன்மை




சுயாதீனத்தன்மை




சபை 33% சுயாதீனமானது

வயது பன்முகத்தன்மை




**நாம் கோவிட் -19 தொடர்புடைய சவால்கள் மற்றும் வாய்ப்புகள் மத்தியில் செல்லும்போது எமது பணிப்பாளர் சபையினரின் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தின் வரம்பு மற்றும் ஆழம் விலைமதிப்பற்றதாக வெளிப்பட்டது.**

### 1.5.2 பணிப்பாளர் சபை துணைக்குழுக்கள்

பணிப்பாளர் சபையினால் முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய சில பொறுப்புகளை மேற்பார்வை பொறுப்பை ஏற்று சபையின் துணை குழுக்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது. இதன் மூலம் தீர்மானங்கள் எடுப்பதற்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களுக்காக போதுமான நேரத்தை ஒதுக்க சபைக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. பகிரப்பட்ட விடயங்களுக்காக போதிய கவனம் செலுத்தப்படும் அதே நேரம், முக்கியமாக மூலோபாயங்கள் மற்றும் எதிர்கால நோக்குகளை கொண்ட நிரப்படுத்தப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதக்கு இதனால் வாய்ப்பு ஏற்படுகின்றது. குழுவானது பயன்மிக்கதாக செயல்படுவதும், அதன் செயல்பாடுகள் தொடர்பாக சபைக்கு தொடர்ச்சியாக அறிக்கையிடுவதும் குழு தலைவர்களின் பொறுப்பாகும். குழு கட்டளைகள் தொடர்ந்து மீளாய்வுச் செய்யப்படுகின்றன.

| சபையின் குழு | மேற்பார்வை பரப்பெல்லை | தொகுப்பு | மேலதிக தகவல் |
|---|---|---|---|
| **சபையின் கணக்காய்வு குழு (BAC)** | ○ நிதி அறிக்கையின் நேர்மை மற்றும் வெளிப்பாடுகள்<br>○ உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் உள்ளக கணக்காய்வு<br>○ வெளிவாரி கணக்காய்வு<br>○ இணக்கப்பாடு | ○ குழுவின் தலைவர் உற்பட இரண்டு சுயாதீன நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள்<br>○ ஒரு நிறைவேற்று அல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர் | BAC குழு அறிக்கை பக்கம் 144 முதல் 145 வரை |
| **சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு (BIRMC)** | ○ விரிவான அபாய முகாமைத்துவ கட்டமைப்பு<br>○ அபாய அளவீடு, கண்காணிப்பு மற்றும் முகாய்த்துவம்<br>○ ஒழுங்குமுறை மற்றும் உள்ளக நுண்ணறிவு தேவைகளுடன் இணக்கம் | ○ ஒரு நிறைவேற்று அல்லாத சுயாதீன பணிப்பாளர், குழு தலைவர்<br>○ இரண்டு நிறைவேற்று அல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர்கள்<br>○ ஊநுழுஃபுஆ<br>○ இரண்டு ஏனுபுஆ கள் - செயல்பாடுகள்<br>○ னுபுஆ - அபாய மற்றும் கட்டுப்பாடு | BIRMC குழு அறிக்கை பக்கம் 150வழ முதல் 152 வரை |
| **மனித வளம், ஊதியம் மற்றும் நியமனக் குழு (HRRNC)** | ○ பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரிஃபொது முகாமையாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ பணியாளர்கள் தேர்வு மற்றும் நியமனம்.<br>○ நிபுணத்துவ இடைவெளிகள், தொடர்ச்சித்தன்மை மற்றும் மறுதேர்தல்<br>○ சபையின் கூட்டாண்மை ஆளுகை<br>○ ஊதியம் உள்ளிட்ட மனிதவள கொள்கைகள்.<br>○ நிறுவன மதிப்புகள் மற்றும் நடத்தை விதிமுறைகள்<br>○ தொழிலாளர் சட்டங்களுடன் இணங்குதல்<br>○ மனிதவள அமைப்புகள் உட்பட செயல்திறன் மதிப்பீடு, திறன்கள் முகாமைத்துவம், தொடர்ச்சித்தன்மை | ○ குழுவின் தலைவர் உற்பட இரண்டு சுயாதீன நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள்<br>○ ஒரு நிறைவேற்று அல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர் | HRRNC குழு அறிக்கை பக்கம் 146 முதல் 147 வரை |
| **தொடர்புடையவர்களின் பரிவர்த்தனைகள் ஆய்வு குழு (RPTRC)** | தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளின் மீளாய்வு | ○ குழுவின் தலைவர் உற்பட இரண்டு சுயாதீன நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள்<br>○ ஒரு நிறைவேற்று அல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர் | RPTRC குழு அறிக்கை பக்கம்148 முதல் 149 வரை |

### 1.5.3 தெளிவான பணிகள் மற்றும் பொறுப்புகள்

பணிகள் மற்றும் பொறுப்புகள் கட்டளைகளால் தெளிவாக வரையறுக்கப்படுகின்றன, அதனூடாக அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு பொறுப்புக்கள் நிறுவப்பட்டுள்ளன. தலைவரின் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பணிகள், தீர்மானம் எடுக்கும் செயல்பாட்டினை வலுப்படுத்தும் வகையில் வேறுபட்டவைகளாக உள்ளன. பணிப்பாளர் சபையின், தலைவரின், CEO / GM இன் மற்றும் சிரேட்ட சுயாதீன பணிப்பாளரின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள், நிறுவனத்தின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

| தலைவர் | CEO/GM |
|---|---|
| **பணிகள்** | **பணிகள்** |
| பணிப்பாளர் சபையை வழிநடத்துதல், சிறந்த கூட்டாண்மை ஆளுகையை பாதுகாத்தல் மற்றும் சபை திறம்பட செயல்படுவதை உறுதி செய்தல். | மூலோபாயத் திட்டத்தை செயல்படுத்து மற்றும் செயல்திறனை நடத்திச்செல்வது பொறுப்புக்களாகும் |
| **பொறுப்புகள** | **பொறுப்புகள** |
| ○ நிறுவன செயலாளரின் ஆலோசனைகளுடன் சபையின் வருடாந்த வேலைத் திட்டம் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை தயாரித்தல்<br>○ பங்குதாரர்களின் நம்பிக்கையை மற்றும் நம்பகத்தன்மையை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>○ பணிப்பாளர் சபை கூட்டங்களில் சகல உறுப்பினர்களின் வினைத்திறனான பங்கேற்பை உறுதி செய்தல்<br>○ சபையின் செயல்திறனைக் கண்காணித்தல். | கூட்டாண்மை ஆளுகை குழுவின் சிறந்த தொடர்ச்சித்தன்மை திட்டமிடல் மற்றும் அவர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்தல்.<br>○ சபையின் கவனத்திற்கும் அனுமதிக்கும் ஏற்றதாக நிறுவனத்தின் மூலோபாயத்தை உருவாக்குதல் கருத்தில் கொள்ள<br>○ நிறுவனத்தின் நீண்ட கால மூலோபாயங்களை ஆதரித்து சபையின் வரவு செலவுத் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் பரிந்துரைத்தல்<br>○ இருவனத்தின் செயல்திறன் தொடர்பாகவும் உரிய சட்டங்கள் மற்றும் கூட்டாண்மை ஆளுகை கோற்பாடுகளுக்கு நிறுவனத்தின் இணக்கம் தொடர்பாகவும் கண்காணித்தல் மற்றும் சபைக்கு அறிக்கையிடுதல்.<br>○ மூலோபாயத்தை செயல்படுத்த ஏற்றதாக நிறுவனத்திற்கான நிறுவன அமைப்பொன்றை நிறுவுதல்<br>○ நிறுவனத்திற்கான நிறுவன அமைப்பை நிறுவுதல்<br>○ மூலோபாயத்தை செயல்படுத்த ஏற்றது.<br>○ நிறுவனத்தின் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கலாச்சாரத்தை உறுதி செய்தல்.<br>○ அங்கீகரிக்கப்பட்ட அபாய சகிப்புத்தன்மை வரம்புகளுக்குள் நிறுவனம் செயல்படுவதை உறுதிச் செய்தல். |

### *1.5.3.1 சிரேட்ட சுயாதீன பணிப்பாளர் (SID)*

சபையின் சுதந்திரம் SID யினால் மேலும் பலப்படுத்தபடுகின்றது மேலும் அவர் ஏனைய பணிப்பாளர்களுக்கு நம்பகமான இடைத்தரகராக செயல்படுகிறார். SID தலைவருக்கு ஆதரவை வழங்குவதுடன் பங்குதாரர்களுக்கு ஏதேனும் கவனங்களை எழுப்புவதற்கு மேலதிக வழிமுறையாகும்.

### 1.5.4 பணிப்பாளர் சுயாதீனத்தன்மை

நிறுவனத்தின் சகல சுயாதீன நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களின் சுதந்திரத்திற்கான அளவுகோல்கள் கீழ்வருமாறு.

**வரையறை**

- இலங்கை மத்திய வங்கியின் 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரை மற்றும் அதன் நிறுத்தங்களில் வரையறுக்கப்பட்ட அளவுகோல்கள் உட்பட சட்டங்களுக்கு அமைவாக சுதந்திரம் தீர்மானிக்கப் படுகின்றது.

**மதிப்பீடு**

- பணிப்பாளர்களின் சுயாதீன மதிப்பீடு வருடாந்த கூற்றுக்கள் மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்படும் ஏனைய தகவல்களின் அடிப்படையில் ஆண்டுதோறும் சபையினால் நடத்தப்படுகின்றது.

**விளைவு**

- மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டில் பணிப்பாளர்களின் சுயாதீனத்தன்மையை பாதிக்கும் அல்லது பாதிக்கக்கூடியதாக தென்படும் சாத்தியமான உறவுகள் அல்லது சூழ்நிலைகள் இல்லையென சபை திருப்தி அடைகின்றது

### 1.5.5 கூட்டங்கள் மற்றும் வருகை

பணிப்பாளர் சபை கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்படும் மற்றும் நெகிழ்வுத்தன்மையுடன் , தேவைக்கேற்ப இவற்றுக்கு மேலதிகமாக தற்காலிகக் கூட்டங்களை ஏற்பாடு செய்யப் படுகின்றன. ஆண்டிற்குள் 14 கூட்டங்கள் நடத்தப்பட்டன மற்றும் வீடியோ கான்பரன்சிங் வசதிகளைக் கொண்ட கலப்பின மாதிரியொன்று பயன்படுத்தப்பட்டது.

#### சபை கூட்டங்களை திட்டமிடுதல்

அடுத்த பணிப்பாளர் சபை கூட்டத்திற்கான திகதி கடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களால் கூட்டாக தீர்மானிக்க படுவதுடன், பின்னர் அனைத்து உறுப்பினர்களுக்கும் அது அறிவிக்கப்படும்

கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் பத்திரங்கள் அதற்கு குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். பத்திரங்களை அறிந்து, தமது அவதானிப்புகளை மேற்கொண்டு எதிர்வரும் கூட்டத்திற்கு தயாராகும் சந்தர்ப்பம் இதன் மூலம் உறுப்பினர்களுக்கு கிடைக்கின்றது

நிறுவன செயலாளரின் உதவியுடன் தலைவரால் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும்

நிறுவனத்திற்கு மிக முக்கியமான விடயங்களான அதன் வெற்றி அதேபோன்று இணக்கப்பாடு, அபாயங்கள் மற்றும் நிர்வாக விடயங்கள் தொர்பாக கூடிய நேரத்தை செலவிடுவதை உறுதிப்படுத்த கவனம் செலுத்தப்படுகின்றது




சபைக்கான வருகை, செயலாக்கமான ஈடுபாட்டினை நிரூபிக்கிறது.

#### சபையின் முக்கிய கவனப் பகுதிகள் –2020/21

**மூலோபாயம் மற்றும் வர்த்தகம்**

- கூட்டாண்மை மூலோபாய திட்டத்திற்கு அனுமதியளித்தல்
- வர்த்தக செயல்பாடுகள் மீதான தொற்றுநோய் தாக்கங்களை கவனத்தில் கொண்டு திட்ட செயற்பாட்டினை தொடர்ந்து மீளாய்வு செய்தல் தொடர்ந்து வெளிப்படுத்துதல்

**அபாயம் மற்றும் மேற்பார்வை**

- செயல்பாட்டுச் சூழல்களின் தாக்கங்களை மீளாய்வு செய்தல்
- குழுமத்தின் செயல்திறனை மீளாய்வு செய்தல்
- அபாய மீளாய்வு

**ஆளுகை**

- சபையின் மதிப்பீடு 2020/21 மற்றும் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான செயலாற்றுத் திட்டம்
- கொள்கை கட்டமைப்பு மீளாய்வு
- தொடர்ச்சித்தன்மை திட்டமிடல்

**பங்குதாரர் ஈடுபாடு**

- பங்குதாரர் தொடர்பாடல் மீளாய்வு மற்றும் மூலோபாயங்களை ஏற்படுத்தல் மற்றும் வர்த்தகச் சின்னத்தை மேம்படுத்துவதில் அவர்களின் ஈடுபாட்டை மதிப்பிடுதல்
- இலாபப்பங்கு செலுத்துவதற்கான அனுமதி

**நிதி செயல்திறன்**

- இயக்கச் சூழல் நிலைமைகள் காரணமான நிதி தாக்கம்
- 2019/20 நிதி அறிக்கைகள் மற்றும் ஆண்டு அறிக்கை அனுமதித்தல்
- 2021/22 வரவு செலவு அனுமதித்தல்

# கூட்டாண்மை ஆளுகை

| பணிப்பாளரின் பெயர் | பணிப்பாளர் நிலை | கூட்டங்களுக்கான வருகை - வருகை:தகுதி | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சபை | சபையின் கணக்காய்வு குழு | சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு | மனித வளம், ஊதியம் மற்றும் நியமனக் குழு | தொடர்புடையவர்களின் பரிவர்த்தனைகள் ஆய்வு குழு |
| சுஜீவ ராஜபக்ச (தலைவர்) | NINED | 14/14 | | | | |
| கோரலி பீட்டர்ஸ் (SID) | INED | 14/14 | C-14/14 | | 5/5 | |
| ரோஹன் பத்திரகே | NINED | 12/14 | | | 5/5 | |
| அஸ்ஸாம் அலி அஹமத் | NINED | 13/14 | 12/14 | 4/4 | | |
| சுதர்சன அகங்கம | NINED | 12/14 | | | | 2/4 |
| கிளைவ் ஃபோன்சேகா | NINED | 14/14 | | 4/4 | | |
| சானுற விஜேதிலக | INED | 14/14 | | C-4/4 | | C-4/4 |
| அசோக பண்டார | INED | 14/14 | 13/14 | | C-5/5 | 4/4 |
| ரஞ்சித் கொடித்துவக்கு (ஆகஸ்ட் 1320 நியமிக்கப்பட்டார்) | NINED | 9/9 | | | | |
| NINED- நிறைவேற்று அல்லாத சுயாதீனமல்லாத பணிப்பாளர் | INED- நிறைவேற்று அல்லாத சுயாதீன பணிப்பாளர் | | | C- தலைவர் | | |

## புழக்கத்தின் மூலம் தீர்மானங்கள்

- வர்த்தக விசயங்கள் தொடர்பான தீர்மானங்கள் விதிமுறைகளுக்குள் சுழற்சி மூலம் நிறைவேற்றப்படலாம்
- இருப்பினும், தனி ஒரு பணிப்பாளர் அது புழக்கத்தின் மூலம் அல்ல, ஒரு கூட்டத்திலேயே முடிவு செய்யப்படுவது அவசியம் என்று கருதினால், தலைவர் அதனை கூட்டமென்றால் தீர்மானிக்க ஏற்பாடு செய்வது அவசியம்..

## தகவல் வழங்கல்

- கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதில், துல்லியமான, பொருத்தமான தகவல்கள் சரியான நேரத்தில் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுவதுடன், அவர்களின் தீர்மானங்கள் அவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது
- கூட்டத்தின்போது பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர், வர்த்தக நடவடிக்கைகள்,நிதி செயல்திறன், தொழில்துறை போக்குகள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பாக சபைக்கு விளக்கமளிப்பர். பிரிவுத் தலைவர்கள் / முஅஓ, அவர்களுக்குரிய துறைகளின் விடயங்களை கலந்தாலோசிப்பதற்காக, கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள். முகாமைத்துவம் பணிப்பாளர் சபையுடன் திறந்த மற்றும் வெளிப்படைத்தன்மையாக நடந்துகொள்வதோடு, கவனத்திற்குரிய விடயங்களை காலத்திற்குரிய வகையில் அவர்கள் முன்வைப்பார்கள்.

## பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கைகள்

- பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கை கூட்டம் இடம்பெற்று இரண்டு வாரங்களுக்குள் தலைவரால் அனுமதிக்கப்பட்டு, அடுத்த கூட்டத்திற்கான தொகுப்புகளுடன் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும்.
- ரகமானதாக தீர்க்கப்படாத விடயங்கள் தொடர்பாக உரிய பணிப்பாளர்களால் கூட அறிக்கையில் குறிப்புகளை பதிவுச் செய்யவேண்டும்
- கடந்த சபை பத்திரங்கள் மற்றும் அறிக்கைகளை பணிப்பாளர்கள் மின்னனு வழிமுறைகளில் அணுகலாம்

## பின்தொடர்தல் நடவடிக்கை கண்காணித்தல்

- தேவையான சகல பின்தொடர்தல் நடவடிக்கைகளும் நிறுவன செயலாளரால் அட்டவணைப்படுத்தப்பட்டு, தேவையான நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட பிரிவுகளுக்கு அல்லது குழுக்களுக்கு அனுப்பப்படும்
- நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு ஒரு முறையான முன்னேற்ற அறிக்கை தொகுக்கப்பட்டு, அதனை அடுத்த சபை கூட்டத்திற்கான தொகுப்பில் சேர்க்கப்படும்.

## SID தலைமையிலான சுயாதீன பணிப்பாளர்கள் கூட்டம்

பணிப்பாளர் சபையின் சுதந்திரம் மற்றும் செயல்திறனை வலுப்படுத்தலுக்காக, நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த ஆளுகை நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு, ஆளுகை தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்கு நிறுவனத்தின் சுயாதீன பணிப்பாளர்களை SID 2021 மார்ச் மாதத்தில் சந்தித்தார். அதிலிருந்து எழுந்த விடயங்கள் சபை தலைவரிடம் முவைக்கப்பட்டதுடன் அவர் அது தொடர்பாக அதுத பணிப்பாளர் சபை கூட்டத்தில் விளக்கமளித்தார்.

### 1.5.6 நிறுவனச் செயலாளர்

நிறுவனத்தின் செயலாளர் அலுவலகம் பணிப்பாளர் சபையின் பயனுள்ள செயல்பாட்டிற்காக ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. சபை அதன் கடமைகளை நிறைவேற்றுதல், சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக நிறுவன செயலாளரினால் பணிப்பாளர் சபை வழிகாட்டப் படுகின்றது. குறிப்பிட்ட பொறுப்புக்களாவது

- சங்கத்தின் கட்டுரைகளுக்கு மற்றும் தொடர்புடைய சட்டங்களுக்கு ஏற்றதாக பணிப்பாளர் சபை மற்றும் பொதுக் கூட்டங்களை நடத்துவதை உறுதி செய்தல்
- சட்ட ரீதியான பதிவேடுகள் மற்றும் சபையின் கூட அறிக்கைகளை பேணுதல்
- ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் உடனடி தொடர்பாடல்கள்
- சட்டபூர்வமான அறிக்கைகளை தாக்கல் செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையின் அறிவுரைகளுடன் சட்ட ஆலோசனைகளை அணுக்களுக்கான வசதிகளை ஏற்படுத்தல்.

சகல பணிப்பாளர்களுக்கும் நிறுவனத்தின் செயலாளர், சட்ட வழக்கறிஞர் திருமதி லக்மினி கோட்டெகோட வின் ஆலோசனைகள் மற்றும் சேவையை பெறுவதற்கான அணுகல் உள்ளது. நிறுவனச் செயலாளரை நியமித்தல் மற்றும் அகற்றல் பணிப்பாளர் சபைக்குரிய விடயமாகும்.

### 1.5.7 பணிப்பாளர் சபை புதுப்பித்தல்

பணிப்பாளர் சபையானது புதிய நியமனங்கள், ஓய்வு, ராஜினாமா மற்றும் மீண்டும் தேர்வுச் செய்தல் மூலம் காலத்துக்கு காலம் புதுபிக்கப் படுகின்றது. புதுப்பித்தல்கள் மூலம் மதிப்புமிக்க தொழிற்துறை அறிவை தக்கவைத்து, தொடர்ச்சியை பராமரிக்கும் தேநேரம், புதிய திறன்கள், நுண்ணறிவு மற்றும் முன்னோக்குகள் கொண்ட உறுப்பினர்கள் அறிமுகமாகும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

**நியமனங்கள்**

- திரு ரஞ்சித் கொடித்துவக்கு 13 ஆகஸ்ட் 2020 முதல் நடைமுறைக்கு வருமாறு.

**ராஜினாமாக்கள்**

- திரு ஜி பி ஆர் பி குணவர்தன, 25 ஜுன் 2020 முதல் நடைமுறைக்கு வருமாறு.

**மறு தெரிவு/மறு நியமனம்**

- திரு. ரஞ்சித் கொடிதுவாக்கு, ஆகஸ்ட் 05, 2021 அன்று நடைபெறவுள்ள வருடாந்த பொது கூட்டத்தில் மீண்டும் தெரிவுச் செயப்படுவதற்காக தாமாகவே முன்னிற்பார்

**நியமனங்கள்**

- HRRNC குழு, நிறுவனத்தின் மூலோபாய திட்டங்கள் மற்றும் அதன் இடைவெளிகள் தொடர்பாக சபையின் ஒருங்கிணைந்த அறிவு, அனுபவம் மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பணிப்பாளர்களாக நியமிக்கப்படக்கூடிய சாத்தியமான நபர்கள் தொடர்பாக பரிந்துரைகளை சபைக்கு வழங்குகிறது. பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்டவர்களின் பெயர்கள், "பொருத்தமான மற்றும் சரியான" நபர், எனும் இலங்கை மத்திய வங்கியின் (ஊடீளுடு) அனுமதிக்காக வழங்கப்படுகின்றன. அதன்பின்னர், பணிப்பாளர்களாக நியமிக்கப்படவுள்ள நபர்களின் பெயர்கள் வருடாந்த பொது கூட்டத்தில் பங்குதாரர்களின் அனுமதிக்காக பணிப்பாளர் சபையினால் பரிந்துரைக்கப்படும்
- நியமனங்கள் ஊடக வெளியீடுகள் மூலம் பணிப்பாளரின் சுருக்கமான விவரக்குறிப்புடன் கொழும்பு பங்குச் சந்தை (ஊஸுநு) மற்றும் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.

**மறு தெரிவு/மறு நியமனம்**

- நிறுவனத்தின் சங்கத்தின் கட்டுரைகளுக்கு இணங்க நியமிக்கப்பட்ட பணிப்பாளர் அடுத்த பொதுக்கூட்டம் வரை பதவியில் இருப்பதுடன் அடுத்த பொதுக் கூட்டத்தின்போது பங்குதாரர்களால் மீண்டும் தெரிவு செய்வதற்காக முன்னிற்க தகுதியுடையவர் ஆவார்.
- ஊடீளுடு மற்றும் அடுத்த பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் அனுமையின் அடிப்படையில் பணிப்பாளர்களை மீண்டும் தெரிவுச் செய்வதற்காக சபையின் பரிந்துரை வழங்கப்படும்.

**ஓய்வு/ராஜினாமா மற்றும் பணிப்பாளர்கள் காலம்**

- இலங்கை மத்திய வங்கியின் 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரை மற்றும் அதன் நிறுத்தங்களின ஏற்பாடுகளுக்கு அமைய, பணிப்பாளர் பதவிக்காலம் அதிகபட்சம் ஒன்பது (9) ஆண்டுகள் மற்றும் வயது எல்லை எழுபது (70) ஆண்டுகள் வரை ஆவதோடு இதில் முதலி நிகழ்வது நடைமுறைக்கு வரும்
- இயக்குநர்களின் நியமனங்கள், ராஜினாமாக்கள் அல்லது நீக்கம், இருந்தால் உடனடியாக கொழும்பு பங்குச் சந்தையில் (ஊஸுநு) வெளிப்படுத்துதல் வழியாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்

### 1.5.8 பணிப்பாளர்கள் ஆர்வங்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள்

பணிப்பாளர்கள் தமது வர்த்தக ஆர்வங்களை நியமனத்தில் போதும் அதற்கு பின்னர் காலாண்டு அடிப்படையிலும் அறிவிக்கின்றனர். இந்த தகவல்கள் பதிவு புத்தகமொன்றில் பராமரிக்கப் படுவதோடு காலாண்டுக்கு ஒருமுறை தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் மீளாய்வு குழுவிடம் முன்னிலைப்படுத்தப்படும். அக் குழுவினூடாக பணிப்பாளர் சபைக்கும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். இப் பதிவு கம்பெனிகள் சட்டத்தின்படி பரிசோதனைக்காக பேணப்படும். இங்கே 275 முதல் 276 வரை பக்கங்களில் குறிப்பிட்டுள்ள ஆர்வங்களை தவிர்த்து நிறுவனமுடனான தற்போதைய அல்லது உத்தேச ஒப்பந்தங்கள் தொடர்பான எதுவித நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வங்கள் இல்லை.

தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் மீளவு குழுவானது, அனுமதி தேவையான அனைத்து பரிவர்தனைகளையும், தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் கொள்கை மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு இணங்கும் வகையில், பீப்பிள்ஸ் லீசிங்கின் சிறந்த ஆர்வங்களை மற்றும் நியாயத்தன்மையை உறுதிச் செய்யும் வகையில் கவனத்தில் கொள்கின்றது. தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனை தகவல்கள் இவ் அறிக்கையின் 275 முதல் 279 வரையிலான பக்கங்களில் நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகள் எண் 58 இல் வழங்கப்பட்டுள்ளன.

சகல பணிப்பாளர்களும் தமது கடமைகளை மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக போதுமான நேரத்தை ஒதுக்குகின்றனர் என பணிப்பாளர் சபை திருப்தி அடைகிறது.

### 1.5.9 ஆர்வங்களின் முரண்பாடுகள்

ஒரு பணிப்பாளர் அல்லது KMP நிதி மூலமாகவோ அல்லது வேறு வழியாகவோ, கணக்கு அல்லது வேறொரு மூன்றாம் தரப்பினருக்கு நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை பெறுவதற்காக, தனது பதவியை, இரகசிய தகவல்களை அல்லது விலை உணர்திறன்மிக்க தகவல்களை பயன்படுத்துவதை பீப்பிள்ஸ் லீசிங்கின் வர்த்தக நடத்தை விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள், தனக்குள்ள ஏதேனும் முரண்பாடுகள் தொடர்பான வர்த்தக விடயங்கள் அல்லது ஏனைய பணிப்பாளர் பதவிகள் தொடர்பாக உடனடியாக சபைக்கு அறிவிக்க வேண்டும். ஏதேனும் முரண்பாடுகள் எழக்கூடுமென பணிப்பாளர் சபை கருத்தும் கூட்டங்களில் குறிப்பிட்ட பணிப்பாளர் கலந்துக்க கொள்ளலாகாது.

### 1.5.10 தகவலறிந்த முடிவெடுத்தல்

சிறந்த முடிவு எடுப்பதற்கு மிகவும் பொருத்தமான அறிவாற்றல் அவசியமாகும். பீப்பிள்ஸ் லீசிங் அறிக்கை மற்றும் தகவல் அமைப்புகள் தொடர்புடைய மற்றும் குறிப்பான தகவல், சரியான நேரத்தில்.சபைக்கு கிடைப்பதை உறுதிச் செய்கின்றது.

### *1.5.10.1* தகவல் வழங்கல்

வழமையாக பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு 7 நாட்களுக்கு முன்பாக வழங்கப்படும் சபைக்கான தகவல் தொகுப்பு (The Board Pack), கூட்டத்தின்பொது எழுப்பப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான விரிவான, தரமான மற்றும் போதுமான அளவு தகவல்களை வாங்குகிறது. மேலும், கூட்டாண்மை முகாமைத்துவ மற்றும் வெளிவாரி நிபுணர்களை கொண்டு, வர்த்தகச் சூழல், கொள்கை மற்றும் நிறுவனத்தின் செயற்படுங்கள் தொடர்பான விளக்கக்காட்சிகள் நடத்தப்படுகின்றது. அத்துடன் நிறுவனத்திற்கு தாக்கம் ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றங்கள் தொடர்பாக சபையை அறிவூட்டுவது அவசியமாகும்.

### *1.5.10.2* தகவலுக்கான அணுகல்

பணிப்பாளர்கள் தமது கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதற்காக, நிறுவனம் சார்ந்த தகவல் மற்றும் வளங்களுக்காக அவர்களுக்கு தடைகளற்ற அணுகல் வழங்கப்பட்டுள்ளது. தமக்கு தேவையான சுயாதீன தொழில்முறை ஆலோசனைகளை, நிறுவனச் செயலாளரின் ஒருங்கிணைப்பில், நிறுவனத்தின் செலவில் பெறுவதற்கு பணிப்பாளர்களுக்கு உரிமையுண்டு. அவ்வாறு பெறப்படும் ஆலோசனைகளின் இரண்டு பிரதிகள் அதனை கோரும் இரண்டு பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

### *1.5.10.3* அறிவு மேம்பாடு

பொருந்தக்கூடிய சட்டம் மற்றும் ஒழுங்குமுறை, தொடர்புடைய துறை முன்னேற்றங்கள்,அபாயம் மற்றும் பொது வர்த்தக மாற்றங்கள் என்பவை தொடர்பாக முன்னோக்கிச் செல்லும் அடிப்படையில் பணிப்பாளர்கள் தொடர்ச்சியாக அறிவூட்டப்படுவார்கள். பணிப்பாளர்களுக்கு ஏற்படும் தேவை அடிப்படையில் பயிற்சி மற்றும் தொழில்முறை வளர்ச்சி வசதிகள் வழங்கப்படுவதோடு, அதற்கான ஏற்பாடுகள் நிறுவனச் செயலாளரினால் ஒருங்கிணைக்கப்படும்.

**2020/21 இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பயிற்சித் திட்டங்கள்**

- CBSL மூலம், உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் பணிப்பாளர் சபையினர் மற்றும் சிரேட்ட முகாமைத்துவ உறுப்பினர்களுக்காக நடத்தப்பட்ட, பண தூய்மையாக்கள் மற்றும் பயங்கரவாத செயல்பாடுகளுக்கு நிதியளித்தல் என்பவற்றை தடுப்பதற்கான பொறுப்புக்கள் தொடர்பான உயர் மட்ட இணையத்தள மாநாடு.
- நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களுக்கான லண்டன் பங்குச் சந்தை குழு பீடத்துடன் இணைந்து நடத்தப்பட்ட உயர்மட்ட பயிற்சி நிகழ்வு

### 1.5.11 சபை மற்றும் துணைக்குழு மதிப்பீடு

| உள்ளடங்கும் பரப்பெல்லை |
|---|
| மூலோபாயத்தின் வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் செயல்படுத்தலுக்கான பங்களிப்பு |
| வலுவான மற்றும் பயனுள்ள ஆபத்து முகாமைத்துவதை உறுதி செய்வதற்கான பங்களிப்பு. |
| முகாமைத்துவதுடன், ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களுடனான உறவுகளை தரம் |
| சபையின் துணைக்குழுக்கள் முறையாக இயங்குவதை உறுதிசெய்வதற்கான பங்களிப்பு |

நிறுவனத்தின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, பணிப்பாளர் சபை மற்றும் அதன் துணை குழுக்களின் வினைத்திறனை மதிப்பிடுவதற்காக வருடாந்திர மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. சபை தலைவரின் தலைமைத்துவத்தில் மற்றும் நிறுவனச் செயலாளரின் நிர்வாகத்தின் கீழ் பணிப்பாளர்கள் ஒன்றிணைந்து, செயல்திறனின் முக்கிய இயக்கிகளின் அடிப்படையில் அவர்களின் கூட்டு செயல்திறன் மதிப்பீடு செய்யப்படும். ஒருங்கிணைந்த முடிவுகள், சபையின் முன்னேற வேண்டிய விடயங்கள் தொடர்பாக பரிந்துரைகளை வழங்கும் சேர்சுஊ க்கு வழங்கப்படும்

2020/21 மதிப்பீடுகள் 2021 மார்ச் மாதம் நடத்தப்பட்டதுடன் அதன் கண்டுபிடிப்புகள் 2021 மே மாதத்தில் பணிப்பாளர் சபையில் முன்வைக்கப்பட்டது. மதிப்பீட்டின் வெளியீடுகள் மூலம், சபை மற்றும் அதன் துணை குழுக்கள், குறிப்பிட்ட ஆண்டில் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் வினைத்திறனாக செயல்பட்டுள்ளமை காணப்பட்டது.

### 1.5.12 CEO/GM வின் மதிப்பீடு

ஆண்டின் தொடக்கத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் (CEO/GM) ஒப்புக்கொண்டவாறு, பீப்பிள்ஸ் லீசிங்கின் குறுங்கால, நடுக்கால மற்றும் நீண்டகால நோக்கங்களுடன் சீரமைக்கப்பட்ட அளவுகோல்களை பயன்படுத்தி, பணிப்பாளர் சபையினால் CEO/GM இன் செயல்திறன் ஆண்டுதோறும் மதிப்புக்கு உள்ளாக்க படுகின்றது. நிதி ஆண்டின் முடிவில் மேற்கொண்ட மதிப்பீட்டின் பொது செய்யப்படும் சூழலின் சரிவு மற்றும் வருவாயின் குறைவடைதல் கவனத்திற்கொள்ளப்பட்டது.

செயல்தின் அடிப்படையில் திருத்தப்பட்ட வருவாய் அளவை பரிந்துரைத்து RNHRC மதிப்பீட்டு செயல்பாட்டிற்கு உதவி வழங்கியது.

### 1.5.13 தொடர்ச்சித்தன்மை திட்டமிடல்

தலைமைத்துவத்தின் தொடர்ச்சியினை மற்றும் சபையின் சிறப்பான திறன் மற்றும் அனுபவங்களின் கலவையை உறுதிச் செய்வதற்கும், நிறுவனத்தின் கொள்கை திட்டத்தின் விநியோகத்தை ஆதரிப்பதற்கு ஏற்றவாறு தலைவர் மற்றும் CEO/GM பதவிகளுக்கான தொடர்ச்சி திட்டத்தை உருவாக்குவதற்கு மற்றும் பொருத்தமான நபர்களை தெரிவு செய்வதற்கு மனிதவள, சம்பளங்கள் மற்றும் நியமனக் குழு (HRRNC) பணிப்பாளர் சபைக்கு உதவுகின்றது. தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் முக்கிய நிலைகளின் பொறுப்புக்களை ஏற்பதற்கான ஒரு திறன் களஞ்சியத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்தி, தற்போதுள்ள தொடர்ச்சி திட்டத்திடை அடிப்படையாகக் கொண்டு KMP களுக்கான ஒரு முழுமையான தொடர்ச்சித் திட்டத்தை உருவாக்கும் செயல்பாட்டில் குழு ஈடுபட்டுள்ளது. இந்த திட்டங்களை செயற்படுத்துவது மனிதவள பிரிவின் பொறுப்பாகவுள்ளது.

## 1.6 பொறுப்பான மற்றும் நியாயமான ஊதியம்

ஊதியம் நியாயமானது, பொறுப்பு மற்றும் வெளிப்படையானது என்பதை உறுதிப்படுத்த சபை முயற்சிக்கிறது. பீப்பிள்ஸ் லீசிங் சம்பள கொள்கைக்கு அமைவாக மற்றும் ஒப்புக்கொண்டுள்ள விதிமுறைகளுக்கு உற்பட்டு KMP க்களின் ஊதியங்களை பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைப்பது HRRNC குழுவின் பொறுப்பாகும். KMP க்கான ஊதியத் தொகுப்புகள், தேவையான திறன்கள் மற்றும் அனுபவம்கொண்ட சிறந்த நிபுணர்களை ஈர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. வேலையில் உள்ள செயல்திறனையும் அபாயக் காரணிகளையும் மற்றும் கூட்டாண்மை மற்றும் தனிநபர் செயல்திறன்களை கவனத்தில்கொண்டு ஊதியங்கள் வடிவமைக்கப்படுகின்றன. ர்சுசுஊ குழு அறிக்கைக்காக பக்கங்கள் 146 முதல் 147 வரை பார்க்கவும்.

சபை கூட்டங்களில் மற்றும் துணைக் குழு கூட்டங்களில் அமர்வுகளுக்காக மாதாந்த கொடுப்பனவொன்றை பெரும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களின் (NED) ஊதியங்கள் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும். NED களுக்கான ஊதியங்கள் சந்தை நடைமுறைகளின்படி அவர்களின் நேரம் மற்றும் பொறுப்புக்களை பிரதிபலிப்பதாக உள்ளது. செயல்திறன் தொடர்பான ஃ ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் எதுவும் அவர்களால் பெறப்படுவதில்லை

2020/21 நிதியாண்டில் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த ஊதியம் ரூ.3.86 மில்லியன் ஆகும்.

## 1.7 பாலின சமத்துவம்

| | பெண் பிரதிநிதித்துவம் |
|---|---|
| பணிப்பாளர் சபை | 1 |
| சிரேட்ட முகாமைத்துவம் | 4 |
| செயலணி | 552 |

பாலின ரீதியாக வேறுபட்ட பணியாளர்களை ஈடுபடுத்துதல் காரணமாக உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையில் ஏற்பட்ட நேர்மறையான தாக்கப்பட்ட சபை பாராட்டுகிறது.பீப்பிள்ஸ் லீசிங்கின் சமமான வாய்ப்பை ஊக்குவிக்கும் கொள்கைகள், ஒரு பாதுகாப்பான பணியிடம் மற்றும் நெகிழ்வான வேலை ஏற்பாடுகள் பெண் ஊழியர்களுக்கு அவர்களின் தொழில் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள உதவுகின்றது.

## 1.8 புத்தாக்க ஆளுகை

பீப்பிள்ஸ் லீசிங்கின் தொடர்ச்சியான புத்தாக்க திறன், வாடிக்கையாளர்களின் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் மாறுபடும் தேவைகளுக்கு பொருந்தக்கூடியதாக நிலைத்திருப்பதற்கு முக்கியமானதாகும். நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவம் புத்தாக்க ஆளுகை தொடர்பான தனது பங்கை நன்றாக அறிந்துள்ளதோடு, இந்த நோக்கத்திற்காக, ஒப்புக்கொண்டுள்ள அபாய சகிப்புத்தன்மை எல்லைகளை பாதுகாத்துக்கொண்டு, புத்தாக்க சிந்தனைகளுக்கு வழிவகுக்கும் படைப்பாற்றல் மற்றும் நெகிழ்வுத்தன்மையை ஊக்குவிக்கின்றது. ஆண்டினுள் பீப்பிள்ஸ் லீசிங் வாடிக்கையாளர்களை ஆதரிப்பதற்காக புத்தாக்கமான டிஜிட்டல் தேர்வுகளை செயல்படுத்தியதோடு, தொற்றுநோய் சவால்களுக்கு மத்தியில் சேவை வழங்குதலை விரிவாக்கியது.

## 1.9 தகவல் தொழில்நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்பு ஆளுகை

டிஜிட்டல் தளங்கள் வழங்கும் புத்தாக்கம், சுறுசுறுப்பு மற்றும் அளவிடுதல் நன்மைகளை சபை நன்றாக அறிந்திருப்பதுடன் அதி சிறந்த வாடிக்கையாளர் மற்றும் ஊழியர் அனுபவங்களை வழங்கும் ஒரு பயனுள்ள மற்றும் சரியாக வளமளிக்கப்பட்ட தொழில்நுட்ப மூலோபாயத்தின் செயலாக்கத்தை உறுதி செய்கின்றது. நிறுவனத்தின் தகவல் சொத்துக்களை மற்றும் செயல்பாட்டு தொகுதிகளை பாதுகாக்கவும், சைபர் அபாய முகாமைத்துவ தொகுதிகளில் அதிகளவில் முதலீடு செய்யவும் பணிப்பாளர் சபை சமமாக பொறுப்பேற்கின்றது

IT கொள்கையினை உற்புகுத்தல் மற்றும் சைபர் ஆபத்துகளுக்கு எதிரான பாதுகாப்பு உள்ளிட்ட டிஜிட்டல் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தல் IT பிரிவின் பொறுப்பாகும். அதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர், தகவல் பாதுகாப்பு அதிகாரியாக (ISO) நியமிக்கப்பட்டுள்ளார். ஆண்டினுள், நிறுவனத்தின் கணினி தொகுதிகள், தொழில்நுட்பம் மற்றும் பீப்பிள்ஸ் லீசிங் தொலைதூர அணுக்கள் முறைமையுடன் இணைந்துள்ள தகவல் அபாயங்கள் என்பவற்றின் அபாயத்தன்மை தொடர்பாக குழுவினரால் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்பு ஆளுகை BIRMC மீது சுழற்சியாக வரும் விடயங்களாகும். அபாயம், தாக்கம் மற்றும் ஏனைய முக்கிய அளவுகோல்களை கவனத்திகொண்டு தேவையென தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில், விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு முன்னிலைப்படுத்தப் பட்டன.

## 1.10 நிலைத்தன்மை ஆளுகை

நிறுவனத்திற்கும் மற்றும் அதன் முக்கிய பங்குதாரர்களுக்கும், பீப்பிள்ஸ் லீசிங் மதிப்பு உருவாக்குவதை உறுதிப்படுத்துவதற்காக, நிலையான அபிவித்திக்கு சபை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளிக்கிறது. சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை (ESG) அளவீடுகள் வர்த்தக மாதிரியில் இணைக்கப்பட்டமை பணிப்பாளர் சபையை திருப்திப்படுத்துகிறது. மதிப்பை உருவாக்குதல் வருடாந்திர அறிக்கையின் கீழே குறிப்பிட்டுள்ள பகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பொருளாதார நிலைத்தன்மை | நிதி மூலதனம் | பக்கம் 53 முதல் 58 |
| சுற்றாடல் | இயற்கை மூலதனம் | பக்கம் 91 முதல் 98 |
| தொழிலாளர் நடைமுறைகள் | மனித மூலதனம் | பக்கம் 70 முதல் 78 |
| சமூகம் | சமூக மற்றும் உறவுகள் மூலதனம் | பக்கம் 79 முதல் 90 |
| வாடிக்கையாளர் திருப்தி | சமூக மற்றும் உறவுகள் மூலதனம் | பக்கம் 79 முதல் 90 |
| பங்குதாரர் அடையாளம், ஈடுபாடு மற்றும் பயனுள்ள தொடர்பாடல் | முதலீட்டாளர் உறவுகள் | பக்கம் 309 முதல் 316 |

## 1.11 பணிப்பாளர் சபையின் பொறுப்பு கூறல்

### 1.11.1 இணக்கப்பாடு

பண தூய்மையாக்கள் மற்றும் பயங்கரவாத நிதியிடல் (AML & CFT) என்பவற்றை தடுப்பதற்காக இலங்கை மத்திய வாங்கி விதித்துள்ள தடைகள் காரணமாக மற்றும் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளையும், அறிக்கையிடல் முறைமைகளையும் பலப்படுத்தியதன் காரணமாக பீப்பல்ஸ் லீசிங் நிறுவனம் தனக்குரிய சகல சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கியுள்ளது. இணக்கப்பாடு செயல்முறையை நிறுவுதல் உற்பட நியாயமான இணக்கப்பாட்டு உறுதியாய் வழங்குவதற்காக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நேரடியாக BIRMC க்கு அறிக்கையிடும் ஒரு தனித்துவமான இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் இச் செயல்பாட்டுக்கு தலைமைத்தாங்குவார். காலாண்டு அடிப்படையில் இணக்கப்பாட்டு அறிக்கையொன்றினை இணக்கப்பாட்டு உத்தியோகத்தரால் குழுவிற்கு சமர்பிக்கப் படுவதோடு, தேவையான சூழல்களில் கவனத்திற்குரிய விடயங்கள், தேவையான நடவடிக்கைக்காக பணிப்பாளர் சபைக்கு முன்னிலை படுத்தப்படும்.

மேலும், வர்த்தக நடவடிக்கைகளை கொண்டுச் செல்வதற்காக பீப்பல்ஸ் லீசிங்கின் கொள்கைகள், மதிப்புக்கள், தரணியமங்கள், நடத்தை விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகளினால் பணிப்பாளர் சபை வழிநடத்தப்படும்.

### 1.11.2 அபாய முகாமைத்துவம்

அபாய முகாமைத்துவத்தை கண்காணிக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியதாவதுடன், சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு, அபாய முகாமைத்துவ கட்டமைப்பின் (RMF), போதுமான மற்றும் பயன்படுத்த தன்மைகளை தொடர்ந்து மீளவிக்கும் மதிப்பீட்டுக்கும் உற்படுத்துகின்றது. அபாயங்களைக் கண்டறிதல், அபாய மூலோபாயங்களை உருவாக்குதல், கொள்கைகளை வகுத்தல், நடைமுறைகளை ஏற்படுத்தல், வரம்புகளை நிறுவுதல், மற்றும் வெளிப்பாடுகளை சமாளித்தல் RMF இல் உள்ளடக்கின்றது.

| | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்படி, கணக்காய்வு நாயகமான தானே அல்லது தன்னால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபர் கணக்காய்வை மேற்கொள்ளலாம் என கணக்காய்வு நாயகத்தினால் அறிவிக்க பட்டுள்ளது. அத்துடன் இதற்காக எர்னஸ்ட் அண்ட் யுங் பட்டய கணக்காளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், 2021 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணம் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் கணக்காய்வு நாயகத்தினால் அறிவிக்க பட்டுள்ளது.<br><br>எனவே, வெளிப்புற தணிக்கையாளரின் ஈடுபாட்டில் குழுவுக்கு எந்தப் பங்கும் இல்லை.<br><br>வாரிய தணிக்கை குழு அதன் கூட்டங்களில் தொடர்புடைய கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் தரநிலைகள் பயன்பாடு தொடர்பாக கலந்தாலோசிக்கின்றது. | |
| d) | வெளிப்புற கணக்காய்வாளரின் சுதந்திரத்தை மதிப்பாய்வு செய்து கண்காணித்தல் | ✓ |
| | நிறுவனத்தின் கணக்காய்வாளர், அரசியலமைப்பின் கீழ் கணக்காய்வு நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளதனால், இந்த தேவை ஏற்பட மாட்டாது. | |

| விதி குறிப்பு. | கோட்பாடு மற்றும் இணக்கம் | இணக்க நிலை |
|---|---|---|
| e) | வெளிப்புற கணக்காய்வாளரால், கணக்காய்வு அல்லாத சேவைகளை வழங்குதல் | ✓ |
| | நிறுவனத்தின் கணக்காய்வாளர் ஆவது, கணக்காய்வாளர் நாயகமாவதால் இது பொருத்தமற்றது. எவ்வாறாயினும், கணக்காய்வாளர்களால் வழங்கும் கணக்காய்வற்ற சேவைகளின் காரணமாக நிறுவனத்தின் சுயாதீனத்துக்கு அல்லது நிக்கங்களுக்கு எதுவித சேதமும் ஏற்படாது என்பதை உறுதிச் செய்வதற்காக குழுவினால் கொள்கையொன்று உருவாக்கப்பட்டுள்ளது | |
| f) | வெளிப்புற கணக்காய்வின் பரரப்பெல்லையை தீர்மானித்தல் | ✓ |
| | கணக்கைவின் நோக்கம் மற்றும் பரப்பெல்லை கணக்காய்வாளர் நாயகத்தல் தீர்மானிக்கப்படுகிறது. எனினும், இந்த நோக்கத்திற்காக வெளிப்புற கணக்காய்வாளர்களை நாடியது. | |
| g) | நிறுவனத்தின் நிதி தகவலைகள் கணக்காய்வுக் குழுவால் மீளவுச் செய்தல் | ✓ |
| | நிதி அறிக்கைகளின் மற்றும் ஏனைய நிதி வெளிப்படுத்தல்களின் ஒருமைப்பாட்டை கண்காணிப்பதற்காக சபையின் கணக்காய்வுக் குழுவினால் நிறுவனத்தின் நிதி தகவல்கள் மீளாய்வுச் செய்யப்படுகின்றது<br><br>வெளிப்படுத்தலுக்காக தயாரிக்கப்பட்ட நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதி அறிக்கைகள் சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட முன்னர் குழுவினால் மீளாய்வுச் செய்யப்பட்டது.. | |
| h) | இடைக்கால மற்றும் இறுதி கணக்காய்வுகளிலிருந்து மேலெழும் பிரச்சினைகள், சிக்கல்கள் மற்றும் ஒதுக்குங்கள் தொடர்பாக வெளிப்புற கணக்காய்வாளருடன் கலந்துரையாடல் | ✓ |
| | மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டிற்குள், சபையின் கணக்காய்வுக் குழு, வெளிப்புற கணக்காய்வாளர்களை சந்தித்து,கணக்காய்வின் மூலம் மேலெழும் பொருள் ரீதியான சிக்கல்கள், பிரச்சுனைகள் அல்லது ஒதுக்குங்கள் தொடர்பில் கலந்துரையாட வாய்ப்பளித்தது. இதில், முக்கிய முகாமைத்துவ பணியாளர்கள் பங்கேற்கவில்லை.. | |
| i) | வெளிப்புஞ் கணக்காய்வாளர்களின் கடித்தை மீளாய்வுச் செய்தல் மற்றும் முகாமைத்துவத்தின் பதில் | ✓ |
| | ஆண்டினுள் வெளிப்புற கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தை மற்றும் அதற்கான முழுமைத்துவத்தின் பதிலை சபையின் கணக்காய்வுக் குழு மீளாய்வுச் செய்தது. | |
| j) | உள்ளக கணக்காய்வு செயல்பாடுகளை மீளாய்வுச் செய்தல் | ✓ |
| | உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பரப்பெல்லை, அதன் செயல்பாடுகள் மற்றும் வளங்கள் தொடர்பாக சபையின் கணக்காய்வுக் குழு மீளாய்வு மேற்கோடந்ததோடு, தமது பணிகளை மேற்கொள்ளவதற்கு போதுமான அதிகாரம் பிரிவிற்கு உள்ளதென குழு திருப்தி அடைந்தது.<br><br>குழுவின் மேலும், உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு செயல்பாடுகளின் முடிவ்களையும் மீளாய்வுச் செய்து, உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பரிந்துரைகளின் பேரில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தியது.<br><br>உள்ளக கணக்காய்வு பிரிவின் தலைவர் மற்றும் அதன் பணியாளர்களின் செயல்திறன் குழுவினால் மதிப்பீடுச் செய்யப்பட்டது.<br><br>சபையின் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையுடன் தகவல் தொகுதி கணக்காய்வு சிரேட்ட முகாமையாளர், நியமிக்கப்பட்டுள்ளார். உள்ளக கணக்காய்வு பிரிந்த தலைவர், மூத்த ஊழியர்கள் பதவி நீக்கங்களோ அல்லது வெளிப்புற சேவை வழங்குநர்களின் சேவை பெற்றுக்கொள்ளுதல்களோ ஆண்டினுள் காணப்படவில்லை.<br><br>சபையின் கணக்காய்வுக் குழுவுக்கு நேரடியாக அறிக்கை செய்வதனால், உள்ளக கணக்காய்வுச் செயல்பாடு சுயாதீனமானதாகும். ஆண்டிற்குள் மீளாய்வுச் செய்யப்பட்ட உள்ளக கணக்காய்வுச் சாசனத்திலும் இந்த சுயாதீனதன்மையை குறிப்பிட்டுள்ளது. கணக்காய்வு பணிகள் பாரபட்சமின்றி, திறமை மற்றும் உரிய தொழில்முறை கவனங்களுடன் மேற்கொண்டுள்ளமை குறிப்பிட்ட சாசனம் மேலும் உறுதிச் செய்கின்றது. | |
| k) | உள்ளக விசாணைகளின் முக்கிய கண்டறிதல்கள் மற்றும் முகாமைத்துவத்தி பதில் | ✓ |
| | முக்கிய கணக்காய்வு கண்டறிதல்களை மற்றும் அவற்றுக்கான முகாமைத்துவத்தின் பதில்கள், உள்ளக கணக்காய்வு பிரிவு சற்பித்துள்ள அறிக்கைகளின் அடிப்படையில், சபையின் கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றன. | |
| l) | கணக்காய்வுக் குழு கூட்டங்களில் பங்கேற்பவர்கள் | ✓ |
| | பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் பிரதம நிதி உத்தியோகத்தர் குலுக்கி கூட்டங்களில் பங்கேற்கின்றனர். பிரதம நிறைவேற்று அதிகாரி, இணக்கப்பாட்டு உத்தியோகத்தர், வெளிப்புற கணக்காய்வாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் குழுவின் அழைப்பின் பேரில் ஏனைய பணியாளர்கள் கூட்டத்திற்கு வருகை தருவார்கள். சபையின் காக்காய்வுக் குழுவில் நிறைவேற்று பணிப்பாளர்கள் எவரும் இல்லை.. | |

| விதி குறிப்பு. | கோட்பாடு மற்றும் இணக்கம் | இணக்க நிலை |
|---|---|---|
| m) | கணக்காய்வுக் குழுவின் வளங்கள் மற்றும் அதிகாரங்கள் | ✅ |
| | பணிப்பாளர் சபை அனுமதித்த குழுவின் குறிப்பு விதிமுறைகள், எந்தவொரு விடயத்தையும் அதன் குறிப்பு விதிமுறைகளுக்குள் விசாரணை செய்வதற்கான மிகத் தெளிவாவன அதிகாரத்தை வழங்குவதோடு, அதற்க்கு தேவையான வளங்கள், தகவலுக்கான முழுமையான அணுகல் மற்றும் தேவையான வெளிப்புற நிபுணத்துவ ஆலோசனைகளை பெறுதல் என்பவற்றுக்கான அதிகாரங்களையும் வழங்கப்பட்டுள்ளது. | |
| n) | கணக்காய்வுக் குழு கூட்டங்கள் | ✅ |
| | சபையின் கணக்காய்வுக் குழு மீளாய்வுச் செய்யப்படும் நிதி ஆண்டில் 14 முறை கூடியுள்ளது. | |
| o) | ஆண்டறிக்கையில் வெளியீடுகள் | ✅ |
| | சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை விவரங்கள்<br>○ கணக்காய்வுக் குழுவின் ஆண்டிற்கான செயல்பாடுகள்<br>○ ஆண்டில் நடைபெற்ற சபையின் கணக்காய்வுக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை<br>○ குழுவின் கூட்டங்களில் உறுப்பினர்களின் வருகை<br><br>மேலதிக தகவல் மற்றும் குழுவின் செயல்பாடுகளுக்கு "சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை" பக்கங்கள் 144 முதல் 145 வரை பார்க்கவும். | |
| p) | கூட்ட அறிக்கைகளை பதிவுச் செய்தல் மற்றும் பராமரித்தல் | ✅ |
| | குறிப்பு விதிமுறைகளுக்கு அமைவாக, நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவின் தலைவர் இக் குழுவின் செயலாளராக செயல்படுவதுடன், போதுமான தகவல்களுடன் குழுவின் கூட்ட அறிக்கைகள் அவரால் பேணப்படும். | |
| q) | விசில் ஊதும் கொள்கை மற்றும் வெளிப்புற கணக்காய்வாளர்களுடனான உறவு | ✅ |
| | நிறுவனத்தின் ஊழியர்கள் நம்பிக்கையுடன், சாத்தியமான முறைகேடுகள் பற்றிய கவனங்களை மேலெப்பக்கூடிய ஏற்பாடுகளை குழு ஆய்வு செய்தது<br><br>விசில் ஊதுபவர் பாதுகாப்பு கொள்கை, சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறை மீறல்கள் அல்லது ஒழுக்கமற்ற நடத்தை போன்றவற்றை ஊழியர்களுக்கு நம்பிக்கையுடன் சபையின் கணக்காய்வு குழுவிற்கு அறிவிக்க உதவுகின்றது. குறிப்பிட்ட மீறல்களை அறிக்கையிடுபவர்களின் ரகசியத்தன்மை உறுதி படுத்தப்படுவதுடன், அவர்கள் எந்தவிதமான பாரபட்சமான செயலுக்கும் உட்படுத்தப்படமாட்டார்கள். அனைத்து ஊழியர்களின் தகவலுக்காக இக் கொள்கை, நிறுவனத்தின் இன்றானெட் இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.<br><br>வெளிப்புற கணக்காய்வாளருடனான நிறுவனத்தின் உறவுகளை மேற்பார்வையிடுவதற்கான முக்கிய பிரதிநிதி அமைப்பாக கணக்காய்வு குழு செயல்படுகிறது மற்றும் இந்த செயல்பாட்டை நிறைவேற்றுவதற்காக வெளிப்புற கணக்காய்வாளர்களுட இணைந்து செயலாற்றுகிறது. | |
| **8 (3)** | **ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு** | |
| a) | ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவின் அமைப்பு | ✅ |
| | ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவானது, மூன்று நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரிஃபொது முகாமையாளர், இரண்டு சிரேட்ட பிரதி பொது முகாமையாளர்கள் என்பவர்களை கொண்டு அமைந்துள்ளதுடன் கடன், சந்தை, பணப்புழக்கம், செயல்பட்டு மற்றும் கொள்க போன்ற விரிவான அபாய வகைகள் பிரதி பொது முகாமையாளர் - (அபாய மற்றும் கட்டுப்பாடு) இனால் மேற்பார்வை செய்ய படுகின்றது.<br><br>உள்ளக கணக்காய்வு தலைவர், துணை நிறுவனங்களின் அபாய விவகாரங்களுக்கு பொறுப்பானவர்கள், மற்றும் இணக்கப்பாட்டு உதோயோகத்தர் ஆகியோர் அழைப்பின் அடிப்படையில் இக் கூடநாளில் பங்கேற்பார்கள்.<br><br>மேலதிக தகவல்கள் மற்றும் குழுவின் செயல்பாடுகள் பற்றிய தகவல்களுக்கு பக்கங்கள் 150 முதல் 152 வரை "சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு அறிக்கை" பகுதியை பார்க்கவும். | |
| b) | அபாய மதிப்பீடு | ✅ |
| | ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவினால், கடன், சந்தை, பணப்புழக்கம், செயல்பாட்டு மற்றும் மூலோபாய அபாயங்கள், நிறுவனத்திற்கு மற்றும் துணை நிறுவனங்களுக்கு பொருத்தமான அபாய குறிகாட்டிகள் மூலம் அனைத்து அபாயங்களையும் மதிப்பிட படுகின்றது. சாத்தியமான சந்தர்ப்பங்களில், நிறுவன அடிப்படையில் மற்றும் குழு அடிப்படையிலும் அபாய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகிறது.<br><br>ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவினால், நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் ஆபத்து டாஷ்-போர்டு (னுயளா டீழயசன) அறிக்கைகள் மற்றும் அபாய குறிகாட்டி அறிக்கைகளை பகுப்பாய்வுச் செய்து அவற்றில் காணப்படும் அபாயங்களில் சகிப்புத்தன்மை விகிதத்தை மீறிச் செல்லும் அபாயங்கள் காணப்பட்டால் அவற்றின் அபாயத் தன்மைகளை தணிப்பதற்காக உடனடி திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |

| விதி குறிப்பு. | கோட்பாடு மற்றும் இணக்கம் | இணக்க நிலை |
|---|---|---|
| c) | சகல நிறைவேற்று மட்டத்திலான குழுக்களின் பொதுமணத்தன்மை மற்றும் வினைத்திறன்களை மீளாய்வுச் செய்தல் | ✓ |
| | நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு (ALCO) ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட அபாய சகிப்புத்தன்மை அளவுகளை (அபாய எல்லைகளை) அடிப்படையாகக்கொண்டு, சந்தை மற்றும் பணப்புழக்க அபாயங்களை மேற்பார்வை மற்றும் மீளாய்வுச் செய்கின்றது. அதன் குறிப்புவிதிமுறைகளில் ஏற்படுத்தியுள்ள நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு, யுடுஊழு வின் செயல்திறன் மற்றும் வினைத்திறன் மதிப்பீடொன்றை குழு வருடாந்தம் மேற்கொள்கின்றது.<br><br>கடன் வசதிகளின் அபாயங்கள் மற்றும் பெறுமதி அடிப்படையில் வாடிக்கையாளர் விண்ணப்பங்களை பதிப்பிடுவதற்காக, பரிந்துரைக்கப்பட்ட கடன் அனுமதி வழங்கும் எல்லைகளுடனான கடன் அதிகார எல்லைகள் நிறுவனத்தினால் ஏற்படுத்த பட்டுள்ளன. | |
| d) | குழுவால் நியமிக்கப்பட்ட விவேகமான அளவுகளை மீறும் அபாயங்கள் தாக்கங்களை தனிப்பதற்கான திருத்த செயல்பாடுகள் | ✓ |
| | ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவினால் அபாய சகிப்புத்தன்மை அளவுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது மற்றும் குழுவின் கூட்டங்களின்போது கிறிப்பிட்ட அபாய சகிப்புத்தன்மை அளவுகளின் அடிப்படையில் நிறுவனத்தின் அபாய சுய விவரக்குறிப்புகளின் ஒவ்வொரு அபாய வகையை மீளாய்வு செய்யப்பட்டது. மேலும், நிறுவப்பட்ட அபாய எல்லைகளை மீறியுள்ளதாக அவதானிக்கப்பட்டு சந்தர்ப்பங்களில் ஆதாரமான மீட்பு நடவடிக்கைகளை குழு வழங்கியுள்ளது. | |
| e) | கூட்டங்களின் இடைவெளி | ✓ |
| | 2020ஃ21 நிதியாண்டில் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு நான்கு முறை ஒன்றுகூடியது.<br><br>COVID - 19 சூழ்நிலை காரணத்தால், சகல பங்கேற்பாளர்களினதும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அபாயத்தை நிர்வகிக்கும் மற்றும் குறைக்கும் கோக்கத்துடன் வீடியோ மற்றும் டெலி கான்பரன்சிங் மூலம் குழு கூட்டங்கள் தேவையான சந்தர்ப்பனலில் மின்னணு முறையில் நடத்தப்பட்டன. | |
| f) | குறிப்பில் ஒரு அபாயத்தை அடையாளம் காண மற்றும் உடனடி திருத்த நடவடிக்கை மேற்கொள்ள தவறிய உத்தியோகத்தல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் | ✓ |
| | அபாயங்களை அடையாளம் காணுதல், ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய தீர்மானங்களும் கூட்டாகவே எடுக்க படுகின்றது. | |
| g) | அபாய மதிப்பீடு அறிக்கைகளை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தல் | ✓ |
| | சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு கூட்டம் நடைபெற்று ஒரு வாரத்துக்குள் உடனடியாக அபாய மதிப்பீட்டு அறிக்கைகள் பணிப்பாளர் சபைக்கு கூட்டத்தில் சமர்ப்பிக்க படுகிறது.. | |
| h) | இணக்க செயல்பாடொன்றை நிறுவுதல் | ✓ |
| | சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களுடன் நிறுவனத்தின் இணக்கத்தை மதிப்பிடுவதற்கு குழுவினால் இணக்க செய்லபாடொன்று நிறுவப்பட்டுள்ளது.<br><br>சட்டங்கள், விதிமுறைகள், பணிப்புரைகள், விதிகள், ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடன் நிறுவனத்தின் இணக்கம் தொடர்பாக ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவிற்கு நேரடியாக அறிக்கையிடும் அனுபவம் வாய்ந்த சிரேட்ட முகாமையாளர் ஒருவர் மூலம் இணக்க செயல்பாடு தலைமை வகிக்கப்படுகிறது. | |
| **H** | **தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள்** | |
| **9 (2)** | **ஆர்வங்கள் முரண்பாடுகளை தவிர்த்தல்** | ✓ |
| | நிறுவனத்தால் செயல்படுத்தியுள்ள தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் (RPT) கொள்கையானது "தொடர்புடைய தரப்பினர்" என கருத்தப்படவேண்டிய நபர்களை வகைப்படுத்தியுள்ளது. RPT கொள்கைக்கு அமைவாக, ஒவ்வொரு பணிப்பாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ பணியாளர்களிடம் சுய வெளிப்பாடுகளை பெற்றுக்கொள்ளப் படுவதுடன், அவர்களுடன் தொடர்புடைய தரப்பினர்களை அடையாளம் காண்பது அதன் நோக்கமாகும். குறிப்பிட்ட வெளிப்பாடுகளில் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனத்தின் ஒட்டுமொத்த வலையமைப்பிலிருந்து, தொடர்புடைய தரப்பினர்களின் பரிமாற்றங்கள் தொடர்பான தரவுகளை நிறுவனத்துக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.<br><br>நிறுவனத்தின் வணிக நடத்தை விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள் ("விதிகள்") மூலம் ஒவ்வொரு பணிப்பாளர் சபை உறுப்பினரும் , அவரது சுயாதீன தீர்ப்புகளில் தாக்கம் ஏற்படுத்தக் கூடிய, உறவுகள், வெளிப்புற அமைப்புகள்,மற்றும் பொருள் விடயங்களின் ஆர்வங்கள் என்பவற்றுநல் எழும், தற்போதய அல்லது ஏற்படக்கூடிய ஆர்வங்கள் முரண்பாடுகள் தனக்கு உள்ளதா என்பதை தீர்மானிக்க கேட்டுக்கொள்ள படுகின்றனர். அவ்வாறான ஆர்வங்களின் தற்போதுள்ள அல்லது ஏற்படக்கூடிய முரண்பாடுகளுள்ள பணிப்பாளர்கள், அதனை கண்டறிந்ததும் உடனடியாக அதனை பணிப்பாளர் சபையினரின் கவனத்துக்கு கொண்டுவர "விதிகள்" தேவையை ஏற்படுத்துகின்றது.<br><br>தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை மீளாய்வுச் செய்யும் குழு, தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் தொடர்பாக பயனுள்ள முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துகின்றது.<br><br>மேலதிக தகவல்கள் மற்றும் குழுவின் செயல்பாடுகள் பற்றிய தகவல்களுக்கு பக்கங்கள் 148 முதல் 149 வரை " தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை மீளவுச் செய்யும் குழு அறிக்கை" பகுதியை பார்க்கவும். | |

| விதி குறிப்பு. | கோட்பாடு மற்றும் இணக்கம் | இணக்க நிலை |
|---|---|---|
| **9 (3)** | **பணிப்புரையில் உள்ளடங்கியுள்ள தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள்** | ✓ |
| | அவற்றின் இயல்பு மற்றும் மதிப்பை பொருட்படுத்தாமல் தொடர்புடைய தரப்பினர்களின் சகல பரிவர்த்தனைகளும் நிறுவனத்தின் தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனை கொள்கை உள்ளடங்கியுள்ளது | |
| **9 (4)** | **ஒரு தரப்பினருக்கு "மேலும் பக்கசார்பான உபசரனை" வழங்கக்கூடிய தொடர்புடைய தரப்பினர்களுடன் பரிவர்த்தனைகளில் ஈடுபடுவதைத் தடைசெய்தல்** | ✓ |
| | சபையினால் அனுமதிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர்களின் பரிவதனைகள் கொள்கை, ஒரு தரப்பினருக்கு "மேலும் பக்கசார்பான உபசரனை" வழங்கக்கூடிய தொடர்புடைய தரப்பினர்களுடன் பரிவர்த்தனைகளில் நிறுவனம் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்தும் செயல்முறைகளை கொண்டுள்ளது..<br><br>தொடர்புடைய ந்தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் செயல்பாட்டுக்கு வசதியளிக்கும் மற்றும் அது தொடர்பான தரவுகளை நிறுவனத்தின் ஒட்டுமொத்த வலையமைப்பிலிருந்து பெறுக்கொள்ளக்கூடிய தற்போதைய ஒன்லைன் தடுப்பு பொறிமுறை இதனை மேலும் வலுவூட்டுகிறது. | |
| **I** | **வெளிப்பாடுகள்** | |
| **10 (1)** | **நிதிநிலை அறிக்கைகளை வெளிப்படுத்துதல்** | ✓ |
| | 2020/21 நிதி ஆண்டுக்கான நிறுவனத்தின் வருடாந்த கணக்காய்வுக்கு உற்படுத்தப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அவ்வப்போது தயாரிக்கப்படும் நிதிநிலை அறிக்கைகள், ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை அதிகாரங்களினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கு அமைவாக மற்றும் பொருத்தமான கணக்கியல் தரணியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு வெளியிட பட்டதென பணிப்பாளர் சபை உறுதி படுத்தியது.<br><br>மேலே உள்ள விதி 10 (1) (ய) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சுருக்கப்பட்ட வடிவத்தில் வெளியிடப்பட்டன என்பதை பணிப்பாளர் சபை உறுதி படுத்தியது.. | |
| **10 (2)** | **வருடாந்த அறிக்கையில் பொருத்தமான வெளிப்பாட்டை உறுதி செய்வதற்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு** | ✓ |
| a) | வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் பொருத்தமான கணக்கியல் தரணியமங்களுக்கு மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு ஏற்றதாக அத்துடன் குறிப்பிட்ட வெளிப்பாடுகளை உள்ளடக்கியதாக தயாரிக்க பட்டமை தொடர்பான கூற்று | ✓ |
| | வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் பொருத்தமான கணக்கியல் தரணியமங்களுக்கு மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு ஏற்றதாக அத்துடன் குறிப்பிட்ட வெளிப்பாடுகளை உள்ளடக்கியதாக தயாரிக்க பட்டதாக பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.<br><br>நிதி அறிக்கைக்கான இயக்குனரின் பொறுப்பு தொடர்பான கூடுதல் நுண்ணிய தகவல்களுக்காக பக்கங்கள் 168 முதல் 171 வரை சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையை பார்க்கவும் | |
| b) | நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான அறிக்கை | ✓ |
| | நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை தொடர்பான நியாயமான உத்தரவாதம் வழங்கும் வகையில் நிதி அறிக்கை அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் நிதி அறிக்கைகள் தயாரித்தல், பொருந்தக்கூடிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை நிறுவனத்தின் பணிப்பளார் சபை உறுதி செய்கிறது.<br><br>மேலதிக நுண்ணறிவு தகவல்களுக்கு பக்கம் 166 இல் நிதி அறிக்கை மீதான உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்கள் அறிக்கையை பார்க்கவும். | |
| c) | உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் செயல்திறன் தொடர்பான வெளிப்புற கணக்காய்வாளரின் சான்றிதழ் | ✓ |
| | சபையினால், நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடு தொடர்பான வெளிப்புற கணக்காய்வாளர்களிடமிருந்து உத்தரவாத அறிக்கையைப் பெற்றுள்ளது. | |
| d) | நிறுவனத்துடன் பரிவர்த்தனைகள், பெயர்கள், உள்ளடங்கலாக பணிப்பாளர்கள் விவரங்கள் | ✓ |
| | பணிப்பாளர்களின் பெர்யகள், நிறுவனத்துடனான பரிவர்த்தனைகள் உற்பட பணிப்பாளர்கள் தகவல்கள் போதுமான அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன<br><br>சபை உறுப்பினர்களின் விவரங்கள் 100 முதல் 103 வரை பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.<br><br>KMP மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் பரிவர்த்தனைகள் - நிதிநிலை ற்கைகளுக்கான குறிப்பு 58.2 ஐப் பார்க்கவும். | |
| e) | மொத்தமாக பணிப்பாளர்களுக்கு நிறுவனம் செலுத்திய கட்டணங்கள் / ஊதியங்கள் | ✓ |
| | பணிப்பாளர் சபையினருக்கு செலுத்தப்பட்ட ஊதிய விவரங்கள் போதுமான அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன<br><br>நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் 58.2.1 ஐப் பார்க்கவும் - KMP க்களுக்கான ஊதியம். | |

| விதி குறிப்பு. | கோட்பாடு மற்றும் இணக்கம் | இணக்க நிலை |
|---|---|---|
| f) | நிறுவனத்தின் மூலதன நிதியின் சதவீதமாக தொடர்புடைய தரப்பினர்களின் ஒவ்வொரு வகையினருக்கான வசதி வழங்குதல்களின் தேறிய இருப்பு நிலை. | ✓ |
| | தொடர்புடைய தரப்பினர்களின் ஒவ்வொரு வகையினருக்கான வசதி வழங்குதல்களின் தேறிய இருப்பு நிலைகள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுக்கான மொத்தமான வசதி வழங்குதல்களின் தேறிய இருப்பு நிலைகள் நிறுவனத்தின் மூலதன நிதியின் சதவீதங்களாக போதுமான அளவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.<br><br>நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் 58.3 ஐப் பார்க்கவும் - தேறிய வசதிகள் தொகை மற்றும் மூலதன நிதியின் சதவீதமாக தேறிய வசதிகள் | |
| g) | செலுத்தப்பட்ட ஊதியங்களின் மொத்த மதிப்பு மற்றும் KMP உடன் பரிவர்த்தனைகள். | ✓ |
| | 2020/21 நிதி நிதியாண்டில் நிறுவனத்தால் தனது முக்கிய முகாமைத்துவ பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த ஊதியங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ பணியாளர்களுடனான நிறுவனத்தின் பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல்கள் போதுமான அளவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. | |
| h) | இணக்கப்பாடு தொடர்பான சான்றிதழ் | ✓ |
| | 2020/21 ஆம் ஆண்டில் விவேகமான தேவைகள், விதிமுறைகள், சட்டங்கள் மற்றும் உள் கட்டுப்பாடுகள் தொடர்பான நிறுவனத்தின் இணக்கம் பற்றிய விவரங்கள் அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.<br><br>இந்த அறிக்கையில் மற்றும் நிறுவனத்தின் விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர்கள் அறிக்கையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவிடயத்தை வெளிப்படுத்தப்பட்ட அளவுக்கு மேலதிகமாக விவேகமான தேவைகள், விதிமுறைகள், சட்டங்கள் மற்றும் உள் கட்டுப்பாடுகள் தொடர்பாக 2020ஃ21 காலத்தில் நிறுவனத்தை பாதிக்கும் பொருள் ரீதியான இணக்கப்பாடற்ற தன்மைகள் இல்லை.<br><br>மேலும் நுண்ணியமான தகவல்களுக்கு, நிறுவனத்தின் கூட்டாண்மை ஆளுகை அறிக்கை விவகாரங்கள் பற்றிய பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை - பக்கங்கள் 139 முதல் 143 வரை பார்க்கவும். | |
| i) | இணக்கமற்றமை தொடர்பான அறிக்கை | ✓ |
| | நிறுவனத்தின் அபாய முகாமைத்துவ அமைப்பில் ஏற்பட்ட குறைபாடுகள் தொடர்பான மேற்பார்வை கவனங்கள் அல்லது அதனால் ஏற்பட்ட நிதி வணிகச் சட்டம், விதிமுறைகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்காமை தொடர்பான மற்றும் நாணயச் சபையின் தேவைகளுக்கு அமைவாக பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப் படவேண்டிய குறிப்பிடத்தக்க கவனங்கள் எதுவும் இல்லை. | |
| j) | இணக்கப்பாட்டிற்கான வெளிப்புற கணக்காய்வாளரின் சான்றிதழ் | ✓ |
| | இந்த விதிமுறைகளின் தேவைகளுடன் இணக்கத்தின் அளவு தொடர்பாக வெளிப்புற கணக்காய்வாளர்களால் உண்மையான கண்டறிதல்கள் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. | |
| **J** | **இடைக்கால ஏற்பாடுகள்** | |
| **11** | **இடைநிலை மற்றும் ஏனைய ஏற்பாடுகள்** | ✓ |

# நிறுவனத்தை விவகாலங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

நிறுவனத்தின் விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையானது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவின் தேவைப்பதாகும். மேலும் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டம், மற்றும் அதன் கீழ் வழுங்கப்பட்ட பணிப்புரைகள், இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தால் (ஊயு ளுசை டுயமெய) வழுங்கப்பட்ட கூட்டாண்மை ஆழுகைக்கான சிறந்த நடைமுறைக் குறியீடு மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடும் விதிகள் என்பவற்றின் தகவல் மற்றும் தேவைகளும் பூர்த்திக் செய்கின்றது.

## 1. பொதுவானவை

பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி நிறுவனத்தி பணிப்பாளர் சபையானது, தமது பங்குதாரர்களுக்கு இந்த ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையை சமர்பித்தலில் மகிழ்ச்சி அடைகின்றது. மேலும், கனகாவுக்கு உற்படுத்தப்பட்ட நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள், 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கனகாவுக்கு உற்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த குழுவின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அனைத்து சட்டரீதியான தேவைகளுக்கும் இணங்குகிறது எனும் உறுதி உள்ளிட்ட இந்த ஆண்டறிக்கைகள் தொடர்பான கணக்காய்வாளர்களின் அறிக்கை இத்துடன் சமர்பிக்கப் படுகின்றன. இந்த அறிக்கை 2021 ஜூலை 7 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

## 2. தொழிலின் தன்மை

*2007 இந்த 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டம் (பிரிவு 168 (1) (ய))*

**நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் வணிகத்தின் தன்மை மற்றும் கணக்கீட்டு காலத்துக்குள் அவற்றின் மாற்றங்கள்.**

### 2.1 நோக்கு, பணி மற்றும் கூட்டாண்மை நடத்தை

நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணி இவ் ஆண்டறிக்கையின் 11 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளன. இதனை அடைவதற்காக பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்கள், நிறுவனத்தின் தொழில் நடத்தை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு, மிக உயர்ந்த மட்டத்திலான நெறிமுறை தரநிலைகள் மற்றும் ஒருமைப்பாட்டுடன் தங்கள் செயல்பாடுகளை நடைமுறை படுத்துகின்றனர்.

### 2.2 தொழில் செயல்பாடுகளின் கோட்பாடுகள்

நிறுவனத்தின் பிரதான தொழில் நடவடிக்கைகளில், லீசிங் வசதிகள், தவணைக் கடன்கள், இஸ்லாமிய நிதி, மார்ஜின் வர்த்தகம், பாக்டரிங், தங்கக் கடன்கள் மற்றும் கடன் பத்திரங்கள் வழங்குதல் அத்துடன் பொது மக்களின் வைப்புகளை திரட்டுதல் ஆகியவை உள்ளடங்குகின்றது.2021 மார்ச் 31 நிலவரப்படி நிறுவனத்திற்கு ஆறு துணை நிறுவனங்கள் உள்ளத்துடன் அவற்றின் தோளில் செயல்பாடுகள் 11 முதல் 17 ஆம் பக்கங்களிலுள்ள எம்மை பற்றி எனும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டில் நிறுவனம் அல்லது அதன் துணை நிறுவனங்கள், எந்தவொரு சட்ட விதிமுறைக்கும் முரணான செயல்பாடுகளில் ஈடுபடவில்லை.

### 2.3 குழும அமைப்பின் மாற்றங்கள்

கவனத்திற்கொள்ளப்படும் ஆண்டினுள் குழுமத்தை அமைப்பில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை.

### 2.4 கிளை வலையமைப்பு

31 மார்ச் 2021 இல் நிறுவனத்தின் மொத்த கிளை வலையமைப்பு 104 சகல வசதிகளையும் கொண்ட கிளைகள் மற்றும் 99 சேவை மையங்கள்.

### 2.5 செயல்பாடுகளின் மீளாய்வு

2020/21 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் செயல்திறன் மீதான ஒட்டுமொத்த மதிப்பீடு, நடைபெற்ற சிறப்பு நிகழ்வுகள் மற்றும் நிதி பற்றிய கருத்துகளுடன், இவ் அறிக்கையின் 17 முதல் 19 வரை பக்கங்களிலுள்ள தலைவரின் செய்தி, 20 முதல் 24 வரை பக்கங்களிலுள்ள பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி மற்றும் 40 முதல் 98 பக்கங்களிலுள்ள முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் மீளாய்வு எனும் பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள், நிறுவனத்தின் விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர்களி ஆண்டறிக்கையின் ஒருங்கிணைப்பு பகுதியாக செயல்படுகின்றன. குழுமத்தின் வருவாய்க்கான துறைசார் பங்களிப்பு, பலன்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் இந்த ஆண்டு அறிக்கையின் பக்கங்கள் 273 முதல் 274 வரையுள்ள நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 56 இல் வெளிப்படுத்தியுள்ளன.

### 2.6 எதிர்கால கண்ணோட்டம்

உலக சந்தை மற்றும் இலங்கை சானதாயின் சவால்கள், வாய்ப்புகள் மற்றும் அபிவிருத்தங்களை அடிப்படையாகக்கொண்ட நிறுவனத்தின் எதிர்கால கண்ணோட்டம், இவ் ஆண்டறிக்கையின் பக்கம் 31 இல் மூலோபாயங்கள் பிரிவு மற்றும் ஒவ்வொரு மூலதன அறிக்கையின் முடிவிலும் வழங்கப்பட்டுள்ளது.

## 3. நிதி அறிக்கைகள்

*(பிரிவு 168 (1) (ஆ) மற்றும் (2))*

**நிறைவடைந்த கணக்கிய காலத்துக்கான நிறுவனம் மற்றும் குழுமத்தின் கையெழுத்திடப்பட்ட நிதி அறிக்கைகள்.**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்கி, இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வகுத்துள்ள கணக்கியல் தரணியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு, நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் ஒருவரின் அனுமதியுடன், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி முகாமையாளர் என்பவர்களால் முறையாக சான்றளிக்கப்பட்ட நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் நிதி அறிக்கைகள், இவ் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 162 முதல் 307 வரை காணப்படுகின்றன.

### 3.1 நிதி அறிக்கையிடலுக்கான இயக்குனர்களின் பொறுப்பு

2007 ஆம் ஆம்ண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தி 150 (1), 151,152 மற்றும் 153 (1) மற்றும் (2) பிரிவுகளுக்கு அமைவாக, குழுமத்தின் மற்றும் நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் செயல்திறன் உண்மையாக மற்றும் நியாயமாக பிரதிபலிக்கும் வகையில், நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் நிதி அறிக்கைகளை தயாரிப்பது நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் பணிப்பாளர் சபையினரின் பொறுப்பாகும். இதன்படி, 1995 ஆம்ண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரணியமங்கள் சட்டம், 2007 ஆம் ஆம்ண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி தொழில்ச் சட்டம் மற்றும் அதன் கீழான பணிப்புரைகள், மற்றும் இலங்கை பட்டய கனக்கலகின் நிருணத்தால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆழுகைக்கான சிறந்த நடத்தை விதிகள் என்பவற்றின் தேவைகளுக்கு இணக்கப்பாட்டுடன், நிறுவனத்தின் இலாபம்ஃநட்டம் தொடர்பான அறிக்கை, நிதி நிலை அறிக்கை, பங்கு மாற்றங்களின் அறிக்கை மற்றும் காசு பாய்ச்சல் அறிக்கை என்பவை தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் சபையினர் உறுதிப்படுத்துகின்றனர்.

நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்கள் பொறுப்பு தொடர்பான அறிக்கை 164 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளதோடு, இந்த அறிக்கையின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக அமைகிறது.

### 3.2 நிதி முடிவுகள் மற்றும் ஒதுக்கீடுகள்

**வட்டி வருமானம்**

2021 மார்ச் 31 இல் முவடைந்த ஆண்டில் நிறுவனம் மற்றும் குழுமத்தன் மொத்த வட்டி வருமானம் முறையே ரூ. 24,983.45 மில்லியன் (ரூ.31,459.11 மில்லியன் 2019/20 இல்) மற்றும் ரூ. 26,821.84 மில்லியன் (ரூ.2019/20 இல் 33,282.88 மில்லியன்) ஆக இருந்தது. வட்டி வருமானத்திற்கான மேலும் விளக்கமான பகுப்பைவொன்று 189 ஆம் பக்கத்தில் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்பு 6.1 மற்றும் 6.1.1 கீழ் வழங்கப்பட்டுள்ளது.

**செயல்திறன் மற்றும் ஒதுக்கீடுகள்**

நிறுவனம் மற்றும் குழுமம் 2020/21 நிதியாண்டில் முறையே ரூ.4,033.02 மில்லியன் மற்றும் ரூ.5,596.33 மில்லியன் தேறிய இலாபத்தை பதிவுச் செய்தது (2019/20 ஆண்டில் ரூ.2,942.51 மில்லியன் மற்றும் ரூ.3,591.75 மில்லியன்). இது முந்தைய வருடத்துடன் ஒப்பிடுகையில் நிறுவனம் மற்றும் குழுமத்தின் தேறிய லாபத்தில் முறையே 37.06மூ மற்றும் 55.81% அதிகரிப்பை வெளிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் லாபத்தை ஒதுக்கிடுதல் பற்றிய விவரங்கள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

# நிறுவனத்தை விவகாலங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

| நிறுவனம் | 2020/21 ரூ.மில்லியன் | 2019/20 ரூ.மில்லியன் |
|---|---|---|
| வரிக்கு முன்னதாக லாபம் | 5,872.59 | 4,551.83 |
| வருமான வரி செலவு | (1,839.57) | (1,609.32) |
| ஆண்டிற்கான இலாபம் | 4,033.02 | 2,942.51 |
| கடந்த ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட இலாபம் | 14,227.99 | 13,361.81 |
| ஒதுக்கீடுகளுக்கான இலாபம் | 18,261.01 | 16,304.31 |
| | | |
| **ஒதுக்கீடுகள்** | | |
| கடந்த.ஃஇந்த ஆண்டுக்கான ,லாபப்பங்கு செலுத்துதல் | (976.62) | (1,929.32) |
| ஏனைய முழுமையான வருமானம் | 77.04 | 0.12 |
| ஒதுக்கீடுகளுக்கான பரிமாற்றங்கள் | (201.65) | (147.12) |
| மொத்த ஒதுக்கீடு | (1,101.23) | (2,076.32) |
| ஒதுக்கப்படாத ,லாபம் முன்கொண்டு செல்லுதல் | 17,159.78 | 14,227.99 |

GRI 207-1

### வரிகளுக்கான ஒதுக்கீடுகள்

2020 ஜனவரி 20 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின் gb (PN/ DRL/ 2020-01) நிதிச் சேவைகளின் வழங்கல் மீது மதிப்பு கூட்டல் சுமையாக இருந்த 7மூ கடன் திருப்பிச் செலுத்தும் வரியை 1 ஜனவரி 2020 முதல் நடைமுறைக்கு வருமாறு அரசாங்கம் ரத்து செய்தது. இது வங்கிகள் மற்றும் மேகுஜ களின் விளிம்புகளில் சாதகமான தாக்கத்தை ஏற்பத்தியதுடன், பீப்பிள்ஸ் லீசிங்கின் இலாபத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தினாலும் 2019/20 நிதியாண்டின் மீதும் ஓரளவு தாக்கம் இருந்தது.

ஆண்டினுள் ஈட்டப்பட்ட இலாபத்தின் மீதான வருமான வரி விகிதம் 24மூ ஆக இருந்தது. மீளாய்வுக்கு உள்ளாகும் கால பகுதியில் நிதிவஹ் சேவைகள் மிதவை VAT ①கிதம் 15மூ ஆக இருந்தது (2019/20 இல் 15 மூ). அதன்படி , நிறுவனத்தின் இந்த வருடத்திற்கான வருமான வரி செலவு ரூ.1,839.57 மில்லியன் ஆவதுடன், நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் வருமான வரி செலவு மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள்/ பொறுப்புகள் மீதான விரிவான குறிப்பு, நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் முறையே 17 மற்றும் 44 இல் வெளியிடப்பட்டுள்ளது.

### சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள், சொத்துக்கள் பயன்பாட்டு உரிமை மற்றும் தொட்டுணர முடியாத சொத்துக்கள்

2021 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் சொத்து, ஆலை ,ஆற்றும் உபகாணங்கள் மீதான நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் மூலதன செலவுத்தொகை முறையே ரூ.104.69 மில்லியன் மற்றும் ரூ.152.32 மில்லியன் ஆகும் (2019/20 இல் ரூ.213.93 மில்லியன் மற்றும் ரூ.284.22 மில்லியன்).

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிருவத்தின் மற்றும் குழுமத்தின் சொத்து பயன்பாட்டு உரிமை அதிகரிப்பு முறையே ரூ.858.51 மில்லியன் மற்றும் ரூ.292.31 மில்லியன் ஆக இருந்தது (2019/20 இல் நிறுவனம் மற்றும் குழுமம் ஆகிய இரண்டிற்கும் ரூ.206.94 மில்லியன்).

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் நிறுவனம் மற்றும் குழுமம் தொட்டுணர முடியாத சொத்துக்களை அடைவதற்காக முறையே ரூ.0.36 மில்லியன் மற்றும் ரூ.11.66 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது (2019/20 இல், நிறுவனம் மற்றும் குழுமம் ஆகிய இரண்டுக்கும் ரூ.15.12 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது).

நிறுவனத்தின் மற்றும் துணை நிறுவனங்களின் நிலையான சொத்துக்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இல்லையென பணிப்பாளர்கள் உறுதி செய்தனர். பக்கம் 244 இல் 32.4 வெளியிடப்பட்டுள்ளவாறு காணிகளின் சந்தை விலை மற்றும் எட்டுபெறுமதி என்பவற்றுக்கு இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டது.

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள், சொத்துக்கள் பயன்பாட்டு உரிமை மற்றும் தொட்டுணர முடியாத சொத்துக்கள் பற்றிய விவரங்கள், 241, 244, 245 மற்றும் 246 முதல் 247 வரை பக்கங்களில் நிதி அறிக்கைக்கான குறிப்புகள் 32, 33 மற்றும் 34 இல் வழங்கப்படுகின்றன.

### இறையிலி நிலம் மற்றும் கட்டிடம்

பரப்பளவுகள், அமைவிடங்கள், மதிப்பீடுகள் மற்றும் நிறுவனத்தின் நிலம் பரப்புகளில் கட்டிடங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு அறிக்கையின் 244 ஆம் பக்கத்தில் குறிப்பு 32.4 இல் விவரிக்கப்பட்டுள்ளது. 2021 மார்ச் 31 ஆம் திகதியில் நிலவரப்படி, நிறுவனம் மற்றும் குழுமத்துக்கு சொந்தமான இறையிலி நிலங்கள் மற்றும் கட்டிடங்களில் எட்டுப்பெறுமதி நிதி அறிக்கைகளில் வழங்கியுள்ளவாறு முறையே ரூ.570.61 மில்லியன் மற்றும் ரூ.3,155.67 மில்லியன் ஆகும.

CBSL யினால் வழங்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க "அசையாச் சொத்துக்களை மதிப்பீடு செய்தல்" பணிப்புரை மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்களுக்கு அமைவாக, நிறுவனம் அதன் இறையிலி நிலங்கள் மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக சுயாதீன தொழில்முறை மதிப்பீட்டாளர்களை ஈடுபடுத்துகிறது.

கடன் வசதிகளுக்கு பிணைகளாக பெறப்பட்ட அசையா சொத்துக்களின் மதிப்பீடுகள் CBSL யினால் வழங்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க "அசையாச் சொத்துக்களை மதிப்பீடு செய்தல்" பணிப்புரை மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்கள் தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட பணிப்புரையின் தேவைகளுக்கு அமைவாக இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்தல் சுயாதீன தொழில்முறை மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ள படுகின்றது.

CBSL யினால் வழங்கப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 03 இலக்க பணிப்புரை மற்றும் அடுத்தடுத்த திருத்தங்களின்படி, அசையா சொத்துக்களின் பதிப்பிடப்பட்ட நியாயமான பெறுமதி, மோசமான மற்றும் சந்தேகத்துக்குரிய கடன்களுக்கான ஒழுங்குமுறை ஒதுக்கீடு அளவிடுதலுக்கு கவனத்திற்கொள்ளப்படவில்லை.

### முதலீடுகள

நிறுவனத்தின் முதலீடுகள் தொடர்பான தகவல்கள், 212 முதல் 216 மற்றும் 234 முதல் 238 வரை பக்கங்களில் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 22, 23, 24, 27, 28 மற்றும் 29 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### பங்கு முதலீடு

#### கூறப்பட்ட மூலதனம்

2021 மார்ச் 31 ஆம் திகதியில் நிலவரப்படி, நிறுவனம் மற்றும் குழுமத்தின் கூறப்பட்ட மூலதனம் ரூ.14,892.04 மில்லியன் என கணக்கிடப்பட்டது. இது 2021 மார்ச் 31 ஆம் திகதியில் நிலவரப்படி ரூ.13,915.41 மில்லியன் ஆகும். பத்திரப்பங்கு மூலமான 2020/21 இடைக்கால இலாபப்பங்கு செலுத்தப்பட்டதை தொடர்ந்து கூறப்பட்ட மூலதனம் ரூ.976.63 மில்லியன்களால் அதிகரித்துள்ளது.

#### ஒதுக்கீடுகள்

2021 மார்ச் 31 ஆம் திகதி நிலவரப்படி நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் மொத்த ஒதுக்கீடுகள் முறையே ரூ.19,449,40 மில்லியன் மற்றும் ரூ.23,568.38 மில்லியன் ஆக இருந்தது. மீளாய்வுக்கு உள்ளாகும் நிதி ஆண்டில் ரூ.201.65 மில்லியன் தக்கவைக்கப்பட்ட வருவாயிலிருந்து சட்டப்பூர்வமாக ஒதுக்கீடுகளுக்கு மாற்றப்பட்டது. ஒதுக்கீடுகளின் நகர்வு பற்றிய தகவல், பக்கங்கள் 176 முதல் 177 வரை "பங்கு முதலீடு மாற்றங்களின் கூற்று" மற்றும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 46 முதல் 48 வரை என்பவற்றில் வழங்கப்பட்டுள்ளது.

### கடன் பத்திரங்கள் வழங்குதல்

கடன் பத்திரங்கள் வழங்குதல் தொடர்பான விவரங்கள் 37 ஆம் குறிப்பில் வழங்கப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் பத்திரங்கள் தொடர்பான விரிவான பகுப்பைவொன்று, நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 37.2 இல் வழங்கப்பட்டுள்ளது.

### மூலதன போதுமை

2018 ஆம் ஆண்டில் 03 ஆம் இலக்க மூலதன போதுமை தேவைப்பாடுகள் தொடர்பான நிதித்தொழில் சட்டப் பணிப்புரைக்கு அமைவாக கணிக்கப்பட்ட நிறுவனத்தின் அடுக்கு 1 மூலதன விகிதம் மற்றும் மொத்த மூலதன விகிதம் முறையே 17.72மூ மற்றும் 18.58மூ ஆக இருந்தது. குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடு தொடர்பான தகவல் இவ் ஆண்டறிக்கையின் 57 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.

## 4. வெளிப்புற கணக்காய்வாளர்கள்

மேலே பகுதிகளில், நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை, நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் கணக்காய்வாளர்களுக்கு செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் மற்றும் கணக்காய்வுக்கு உட்பட்ட கால பகுதியில் வழங்கப்பட்ட ஏனைய சேவைகளுக்கான கட்டணங்கள் தொடர்பான தனிப்பட்ட வெளிப்பாடு ஒன்றுடன், நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனங்களுடன் கணக்காய்வாளரின் உறவுகள் அல்லது ஏனைய ஆர்வங்கள் என்பவற்றை விவரிக்கப்பட்டுள்ளது.

### 4.1 கணக்காய்வாளர்கள் மற்றும் அவர்களின் சுதந்திரம்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிக்கை சட்டத்துக்கு இணங்க, பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி, "கணக்காய்வுக்கு உள்ளாகும் நிறுவனம்" என்ற வரையறையின் கீழ் வருவதுடன், கணக்காய்வாளர் நாயகம் அல்லது கணக்காய்வாளர் நாயகத்தினால் அதிகாரம் வழங்கப்படும் எந்தவொரு நபர் நிறுவனத்தின் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டும். நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான அவர்களின் பொறுப்புகள், 168 முதல் 171 வரை பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள "சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை" யில் வழங்கப்பட்டுள்ளன.

### 4.2 கணக்காய்வாளர்களின் அறிக்கை

நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை, 168 முதல் 171 வரை பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளது.

### 4.3 கணக்காய்வாளர்களின் ஊதியம்

கணக்காய்வு மற்றும் தொடர்புடைய சேவைகள் மற்றும் கணக்காய்வு அல்லாத வரி தொடர்பான சேவைகள் உற்பட்ட சேவைகளுக்காக கணக்காய்வாளர்களுக்கு பின்வரும் தொகை நிறுவனத்தால் மற்றும் குழுமத்தால் செலுத்தப்பட்டது:

| கட்டணம் | நிருவனம் | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2020/21 ரூ.மில்லியன் | 2019/20 ரூ.மில்லியன் | 2020/21 ரூ.மில்லியன் | 2019/20 ரூ.மில்லியன் |
| கணக்காய்வு மற்றும் தொடர்புடைய சேவைகள் | 7.38 | 7.38 | 13.32 | 13.49 |
| கணக்காய்வு அல்லாத சேவைகள் | 1.89 | 1.64 | 2.22 | 4.91 |

### 4.4 கணக்காய்வாளர்களை நியமித்தல்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிக்கை சட்டத்தின் 55 ஆம் பிரிவிற்கு இணங்க, பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி, “கணக்காய்வுக்கு உள்ளாகும் நிறுவனம்“ என்ற வரையறையின் கீழ் வருவதுடன், கணக்காய்வாளர் நாயகம் அல்லது கணக்காய்வாளர் நாயகத்தினால் அதிகாரம் வழங்கப்படும் எந்தவொரு நபர் அடுத்து வரும் நிதி ஆண்டிற்க்கான நிறுவனத்தின் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டும்.

## 5. வருடத்தில் கணக்கியல் கொள்கைகள் மற்றும் மாற்றங்கள்

*(பிரிவு 168(1)(d)*

வெளிப்படுத்தல் சுமையை மற்றும் குழப்ப நிலைகளை குறைப்பதற்காக கணக்கியல் கொள்கைகளை வழங்குவதில் மாற்று வடிவமொன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கைகள், “நிதிநிலை அறிக்கைகள் வழங்கல்“ தொடர்பான இலங்கை கணக்கியல் தரணியமங்களின் தேவைகள் - LKAS 1 மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிச் சட்டத்தின் பிரிவு 168 (1) (ன) என்பவற்றுடன் இணங்கியுள்ளது.

நிதி அறிக்கைகளை தயாரிக்கும்போது பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் 179 முதல் 307 வரை பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன. நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கியலில் கொள்கைகளின் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் அவை 183 முதல் 184 வரை பக்கங்களில் 3.4 குறிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

## 6. பணிப்பாளர்கள் சபை

*(பிரிவு 168(1)(e),(f),(h))*

கணக்கியல் காலப்பகுதியில் நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் ஆர்வங்கள் பதிவேடுகளில் பதிவு விபரங்கள், கணக்கியல் காலப்பகுதியில் நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட ஊதியங்கள் மற்றும் ஏனைய சலுகைகள் மற்றும் கணக்கியல் காலப்பகுதியிலும் அதன் முடிவிலும் நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் பணிப்பாளர்களின் தகவல்கள் என்பவற்றை கீழே உள்ள பிரிவுகள் வரையறுக்கின்றன.

### 6.1 சுயவிவரங்கள்

பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்களுடன், அவர்களின் திறன்கள் மற்றும் அன்பாவங்கள் உள்ளிட்ட சுய விவரங்கள் இவ் ஆண்டறிக்கையின் 100 முதல் 103 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

### 6.2 சபையின் செயல்திறனை மதிப்பீடு செய்தல்

பணிப்பாளர் சபையின் செயல்திறன் மதிப்பீட்டுக்கு பயன்படுத்தப்பட்ட முறை பக்கம் 120 இல் உள்ள கூட்டாண்மை ஆளுகை பகுதியில் வழங்கப்பட்டுள்ளது.

### 6.3 ஏனைய பணிப்பாளர் பதவிகள் / பணிப்பாளர்களின் குறிப்பிடத்தக்க பதவிகள்

நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர்களின் ஏனைய பணிப்பாளர் பதவிகள்ஃபணிப்பாளர்களின் குறிப்பிடத்தக்க பதவிகள் தொடர்பான தகவல்கள் 100 முதல் 103 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

### 6.4 ராஜினாமா மற்றும் நியமனங்கள்

திரு ஜி பி ஆர் பி குணவர்த்தன தனது நிறைவேற்றல்லாத, சுயாதீனமல்லாத பணிப்பாளர் பதவியிலிருந்து 25 ஜூன் 2020 முதல் அமலுக்கு வரும்படி பதவி விலகினார். மேலும், திரு ரஞ்சித் கொடிதுவாக்கு அவர்கள் நிறைவேற்றல்லாத, சுயாதீனமல்லாத பணிப்பாளராக 2020 ஆகஸ்ட் 13 முதல் அமலுக்கு வரும்படி நியமிக்கப் பட்டார்

### 6.5 பணிப்பாளர்களின் ஊதியங்கள்

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் பணப்பலர்களின் கட்டணம் மற்றும் செலுத்திய ஊதியங்கள் முறையே ரூ.3.86 மில்லியன் மற்றும் ரூ.முறையே 7.92 மில்லியன் ஆகும். ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள் நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 58.2.1 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 6.6 ஆர்வங்கள் பதிவேடு / பரிவர்த்தனைகளில் பணிப்பாளர்கள் ஆர்வம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்திற்கு இணங்கி, நிறுவனம் பரிசோதனைகளுக்கு உட்படுத்த கூடியதாக ஆர்வங்கள் பதிவேடு ஒன்றை பராமரித்து வருகின்றது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 192 (2) பிரிவின்படி நிறுவனத்தின் பணிப்பாளர்கள் நிறுவனத்தின் பரிவர்த்தனைகள் மீது தமக்குள்ள ஆர்வங்கள் தொடர்பாக பொதுவான வெளிப்பாடுகளை வழங்கியுள்ளனர். அவ்வாறு வெளியிடப்பட்ட பரிவர்த்தனைகளின் தகவல்கள் பக்கங்கள் 275 முதல் 276 வரையிலுள்ள தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் எனும் தலைப்பின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரையின் வெளிப்பாட்டுத் தேவைகளுக்கேற்ப, நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தலைவர், பணிப்பாளர் சபையினாலே, நிறுவனத்தை பிரதம நிறைவேற்று அதிகாரி, ஆகியோர் அவர்களுக்கிடையே நிதி, தொழில், குடும்ப அல்லது வேறேது, பொருள் ரீதியான உறவும் இல்லையென பொதுவான வெப்படுத்தலொன்றை வழங்கியுள்ளனர்.

### 6.7 பங்குகளின் மீது பணிப்பாளர்கள் ஆர்வம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 200 ஆம் பிரிவுக்கு இணங்கி, நிறுவனத்தில் அவர்களின் பங்குடைமை, அதற்க்கு பின்னரான கைப்பற்றல்கள் அல்லது அகற்றல்கள் தொடர்ப்க பணிப்பாளர்களினால் பணிப்பாளர் சபைக்கு வெளீப்படுத்தப் பட்டுள்ளன நிறுவனத்தில் பணிப்பாளர்கள் தனிப்பட்ட பங்குடைமை அத்துடன் பிரதம நிறைவேற்று அதிகாரியின் தனிப்பட்ட பங்குடைமை, இவ் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 314 மற்றும் 315 இல் “முதலீட்டாளர் உறவுகள்“ தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

### 6.8 கூட்டங்கள்

சபையின் மற்றும் அதன் துணை குழுக்களின் கூட்டங்களின் விவரங்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 117 முதல் 118 வரையிலான கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன.

## 7. Share Information

குறிப்பிடத்தக்க பங்குதாரர் தகவல் உடன் கணிசமான பங்குதாரர் விவரங்கள் மற்றும் ஏனைய பங்கு தொடர்பான தகவல்கள் இவ் ஆண்டறிக்கையில் 309 முதல் 316 வரையிலான பக்கங்களில் “முதலீட்டாளர் உறவுகள்“ எனும் தலைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

### 7.1 பங்குதாரர்களை சமத்துவமாக மதித்தல்

நிறுவனமானது எல்லா சந்தர்ப்பங்களிலும் சகல பாங்குதாரர்களும் சமக நடத்தப்படுவதை உறுதி செய்கின்றது.

### 7.2 சாதாரண பங்குகளில் பங்குலபம்

2020 / 21 நிதியாண்டுக்காக இடைக்கால பங்குலபமொன்றை பத்திரப்பங்கு மூலமாக செலுத்துவதற்கு 2020 டிசம்பர் 24 ஆம் திகதி நிறுவனம் அறிவித்தல் விடுத்தது. மேலும், அது தொடர்பாக 1: 21.1666668487 என்ற விகிதத்தில் பத்தரங்குகளுக்கு இணங்க 2020 டிசம்பர் 24 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிறுவனத்தின் 76,899,372 சாதாரண வாக்குப் பங்குகள் பட்டியலிடப்பட்டன.

வுாந னுசைநஉவழசள 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒரு பங்கிற்கு ரூ.0.75 வீதம் ஆண்டிறுதி பங்குலாப கொடுப்பனவு ஒன்றை செலுத்துவதற்கும் பணிப்பாளர்கள் பரிந்துரைத்துள்ளனர். இதுவும் பத்திரப்பங்கு வடிவத்தில் வழங்கவுள்ளது. மேலும், நிறுவனத்தின் சங்கத்தின் கட்டுரைகளுக்கு இணங்கி, இந்த முன்மொழிவுக்கு 2021 ஆகஸ்ட் 05 ஆம் திகதி இடம்பெறவுள்ள வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களின் அங்கீகாரத்தை பெறவுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 56 (3) பிரிவிற்கு இணங்க மற்றும் ஊளுநு இன் பட்டியலுடன் விதிகளுக்கு இணங்க, இடைக்கால பங்குலாபம் செலுத்திய பின்னரும், அதன் 56 (2) பிரிவிற்கு இணங்க இறுதி பங்குலாபம் செலுத்திய பின்னரும் நிறுவனம் கரைத்திறன் சோதனை தேவையை பூர்த்திக் செய்யேமென பணிப்பாளர்கள்

# நிறுவனத்தை விவகாலங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

உறுதிச் செய்வதோடு, குறிப்பிட்ட சட்ட விதிமுறை ஏற்பாடுகளுக்கு இணங்க கரைத்திறன் கூற்று மீதான கணக்காய்வாளர் சான்று ஒன்றையும் பணிப்பாளர்கள் பெற்றுள்ளனர்.

## 8. நன்கொடைகள்

*(பிரிவு 168 (1) (g))*

> கணக்கியல் காலப்பகுதியில் நிறுவனத்தால் வழங்கப்பட்ட நன்கொடைகளின் மொத்த பெறுமதி.

2020/21 நிதி ஆண்டில், இறுதியாக இடம்பெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க நிறுவனம் ரூ.23.15 மில்லியன் நன்கொடைகள் வழங்கியது (2019/20 இல் ரூ.58.85 மில்லியன்). நிறுவனத்தின் கூட்டாண்மை சமூக புறுப்புணர்வு (ஊஎுசு) முயற்சிகள் மற்றும் செயல்பாடுகள், அதன் ஊஎுசு பிரிவினால் கையாளப்படுகின்றன. நிறுவனத்தின் ஊஎுசு நடவடிக்கைகள், முறையே பக்கங்கள் 79 முதல் 90 வரை மற்றும் பக்கங்கள் 91 முதல் 96 வரையிலுள்ள "சமூக மற்றும் உறவுகள் மூலதனம்" மற்றும் "அறிக்கை மூலதனம்" தலைப்புகளில் வழங்கப்பட்டுள்ளன.

## 9. கூட்டாண்மை ஆளுகை

*(சிறந்த நடத்தை விதிமுறைகள் D.6,D.6.1,D.2,D.1.4)*

நிறுவனத்தின் சிறந்த நடத்தை விதிமுறைகளை மேம்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை கட்டுப்பட்டுள்ளதுடன், அமைப்பு முழுவதிலும் உயர்ந்த கூட்டாண்மை ஆளுகை கோற்பாடுகளை பேணுவதை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையினர், பங்குடமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் போன்ற வெவ்வேறு தரப்பினரை ஆளக்கூடிய செயமுறைகள் மற்றும் செயல்பாடுகள் உள்ளடங்கிய கூட்டாண்மை ஆளுகை சாசனமொன்றை செயல்படுத்தியுள்ளது.

மேல்குறிப்பிட்ட கூட்டாண்மை ஆளுகை சாசனத்தை நடைமுறை படுத்துவதற்காக, இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம் (ஊயு ஸ்ரீலங்கா) வழங்கியுள்ள கூட்டாண்மை ஆழுகைக்கான சிறந்த நடத்தை விதிமுறை பரிந்துரைகள், கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) பட்டியலிடல் விதிகள் மற்றும் 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரைகள் என்பவற்றுடன் நிறுவனத்தின் இணக்கப்பாட்டை சபை உறுதிச் செய்கின்றது.

**வணிக நடத்தை விதிகள் மற்றும் நெறிமுறைகள் மீதான தலைவரின் உறுதிமொழி**

பீப்பல்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி, வணிக நடத்தை விதிகள் மற்றும் நெறிமுறைகளை தனது நிறுவனம் முழுவதிலும் அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் அதனை பரவலக்குதல், கண்காணித்தல் மற்றும் அத்துடன் இணங்குதல் என்பவற்றுக்காக செயல்முறைகள் ஏற்படுத்தியுள்ளது என நிறுவன தலைவர் உறுதிமொழி வளங்குகின்றார்.

**பணிப்பாளர்கள் வெளிப்படுத்துவதாவது:**

1. நிறுவனம் சட்டங்களை மற்றும் ஒழுங்குமுறைகளை மீறும் வகையிலான எந்தவொரு செயலிலும் ஈடுபடவில்லை.
2. பங்குதாரர்களை சமத்துவமாக நடத்துவதை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.
3. வணிகம் இயங்கும் தன்மையிலுள்ளது
4. உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அபாய முகாமைத்துவத்தை வினைத்திறனாகவும் வெற்றிகாலமாகவும் பின்பற்ற நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இவ் ஆண்டறிக்கையின் 111 முதல் 138 வரையிலான பக்கங்களில் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.
5. அவர்களின் சிறந்த விழிப்புணர்வின்படி நிறுவனத்தின் வணிக நடத்தை விதிகள் மற்றும் நெறிமுறைகளில் எந்தவிதமான மீறலும் காணப்படவில்லை.

**வணிக நடத்தை விதிகள் மற்றும் நெறிமுறைகள் மீதான KMP க்களின் உறுதிமொழி**

அவர்களின் சிறந்த விழிப்புணர்வின்படி நிறுவனத்தின் வணிக நாதத்தை விதிகள் மற்றும் நெறிமுறைகளில் எந்தவிதமான மீறலும் காணப்படவில்லை.

### 9.1 சபையின் துணை குழுக்கள்

சபையின் கணக்காய்வுக் குழு, சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு, மனித வளங்கள், ஊதியங்கள் மற்றும் நியமனக் குழு, தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை மீளவுச் செய்யும் குழு சபையின் துணை குழுக்களாக இயங்குவதோடு தேவையான தகைமை மற்றும் அனுபவம்வாய்ந்த பணிப்பாளர்கள் இவற்றில் செயலாற்றுகின்றனர். மேற்கூறிய குழுக்கள் அமைந்துள்ள முறை இவ் ஆண்டறிக்கையில் உள்ளடக்கியுள்ள குறிப்பிட்ட குழுக்களின் அறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ளன.

### 9.2 சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணக்கம்

பணிப்பாளர்களின் சிறந்த விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கையின் படி சட்டங்கள் மற்றும் ஒழுங்குவித்தகளை மீறும் எந்தவொரு செயலிலும் நிறுவனம் அல்லது குழுமம் ஈடுபடவில்லை.

### 9.3 சட்டரீதியான கட்டணங்கள்

பணிப்பாளர்களின் சிறந்த விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கையின் படி அரசாங்கத்திற்கு மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களுக்கு செலுத்தவேண்டிய மற்றும் ஊழியர்கள் தொடர்பான சகல சட்டரீதியான கட்டணங்களும் சரியான நேரத்தில் செலுத்தப்பட்டதென அவர்கள் திருப்தி அடைகின்றனர்.

### 9.4 சுற்றாடல் பாதுகாப்பு

பணிப்பாளர்களின் சிறந்த விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கையின் படி, சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயல்பாட்டிலும் நிறுவனமோ அல்லது குழுமமோ ஈடுபடவில்லையென அவர்கள் உறுதியளிக்கின்றனர்.

### 9.5 ESG அறிக்கையிடல்

நிறுவனத்திற்கு அதன் தொழில் மூலோபாயங்களை செயல்படுத்துவதிலும், மதிப்பை உருவாக்குவதிலும் சுற்றாடல்,சமூக மற்றும் ஆளுகை (நுளுபு) கவனங்கள் தாக்கத்தை ஏற்படுத்தலாம். . பக்கம் 121 இல் கூறப்பட்டுள்ளவாறு, நுளுபு அபாயங்கள் தொடர்பான போதுமான தகவல்கள் ஆண்டறிக்கையில் உள்ளடங்கிய வேண்டியதுடன், வாய்ப்புகளை கண்டறிதல், முகாமைத்துவம் செய்தல், அளவிடுதல் மற்றும் அறிக்கையிடுதல் இதில் உள்ளடங்கவேண்டும்.

## 10. ஏற்றுக்கொள்ளுதல்

*(பிரிவு 168 (1) (k))*

> இவ் அறிக்கையின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்ளுதல், பணிப்பாளர் சபை சார்பாக இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் நிறுவனத்தின் செயலாளர் கைச்சாத்திடல்.

பக்கம் 143 இல் வெளிப்படுத்தியுள்ளவாறு, பணிப்பாளர் சபை, இவ் ஆண்டறிக்கையில் உள்ளடங்கல்களை ஏற்றுக்கொள்கிறது.

## 11. பங்குதாரர் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த அறிக்கையிடல்

நிறுவனம் தனது மதிப்பு உருவாக்கல் செயல்பாட்டை சித்தரிக்கும் வகையில், தனது வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், முதலீட்டாளர்கள், வழங்குநர்கள், மற்றும் சமூகம் எனும் விலைமதிப்பான பங்குதாரர்களை முகாமைத்துவம் செய்வதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அறிக்கையிடும் செயல்பாட்டின்போது பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக தாக்கங்கள் போன்ற அம்சங்களும் போதுமான அளவில் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மூலதன முகாமைத்துவ அறிக்கைகள், இவ் ஆண்டறிக்கையில் பக்கங்கள் 40 முதல் 98 வரையிலுள்ள முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் மீளாய்வு பகுதியில் வழங்கப்பட்டுள்ளன.

## 12. தீர்க்கப்படாத சட்ட நடவடிக்கைகள்

நிறுவனத்தின் வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசித்து பணிப்பாளர்களால் உருவாக்கப்பட்ட கருத்துப்படி, நிறுவனத்திற்கு எதிரான தற்போதைய தீர்க்கப்படாத சட்ட நடவடிக்கைகள், நிறுவனத்தின் நிதி பெறுபேறுகளுக்கோ அல்லது எதிர்கால நடவடிக்கைகளுக்கோ எந்தவித பொருள் ரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தாது. நிறுவனத்துக்கு எதிரான தீர்க்கப்படாத சட்ட நடவடிக்கைகள் தொடர்பான தன்கால்கள் பக்கம் 270 இல் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 53.1.1 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 13. மனித வளங்கள்

நிறுவனம் பாலினம், இனம் அல்லது மதம் என்பவற்றை பொருட்படுத்தாது ஒவ்வொரு தனி நபரையும் மதிக்கும் மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்கும் முற்றிலும் பாரபட்சமற்ற வேலைவாய்ப்பு கொள்கை ஒன்றை பின்பற்றுகின்றது. 31 மார்ச் 2021 நிலவரப்படி நிறுவனத்தில் மொத்தம் 2,343 நபர்கள் ( 31 மார்ச் 2020 நிலவரப்படி 2,401 நபர்கள்) வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டிருந்தனர்.

## 14. விடயங்களை இணைய மயமாக்கல் மற்றும் சைபர் பாதுகாப்பு

*(சிறந்த நடத்தை விதிமுறைகள் G.1,G.2,G.3)*

அனுபவம்மிக்க மற்றும் அதிகாரம் வழங்கப்பட்ட தொழில்வல்லுநர் ஒருவரை தகவல் பாதுகாப்பு உத்தியோகத்தராக (ஐஎழ) நியமித்து, சபை கூட்டங்களில் சைபர் பாதுகாப்பை முகாமைத்துவம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு வழமையான பற்றும் போதுமான நேரத்தை நிகழ்ச்சி நிரலில் ஒதுக்கப்பட்டு உள்ளதாக சபை உறுதியளிக்கின்றது. தொடர்புடைய தகவல்கள் பக்கம் 121 இல் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது-

## 15. அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் பக்கம் 307 இல் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்பு இலக்கம் 60 வழிபடுத்தப்பட்டுள்ளது.

**16. ஆண்டறிக்கையின் உள்ளடக்கத்திற்கான பட்டியல் விதிகளின் விதிகள் 7.6 மற்றும் 9.3.2 இன் தேவைகளுடன் இணங்குதல்**

| விதி குறிப்பு | வெளியிட வேண்டிய தகவல் | இணக்க நிலை | பக்க குறிப்பு |
|---|---|---|---|
| 7.6 (i) | நிதி ஆண்டில் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக இருந்தவர்களின் பெயர்கள் | ✓ | 100-103 |
| 7.6 (ii) | நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் முக்கிய செயல்பாடுகள் | ✓ | 11-12 |
| 7.6 (iii) | ஆண்டின் இறுதியில் 20 பெரிய பங்குடமையாளர்கள் பற்றிய தகவல்கள் | ✓ | 314 |
| 7.6 (iv) | பொதுமக்கள் வைத்திருக்கும் சதவீதம் | ✓ | 313 |
| 7.6 (v) | பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் பங்குகள் | ✓ | 314-315 |
| 7.6 (vi) | எதிர்பார்க்கக்கூடிய பொருள் ரீதியான அபாய காரணிகள் தொடர்பான தகவல்கள் | ✓ | 153-161 |
| 7.6 (vii) | ஊழியர்கள் மற்றும் தொழில்துறை உறவுகள் தொடர்பான பொருள் ரீதியான சிக்கல்களின் விவரங்கள் | மீளாய்வுக்குள்ளாகும் காலப்பகுதியில் ஊழியர்கள் மற்றும் தொழில்துறை உறவுகள் தொடர்பான பொருள் ரீதியான சிக்கல்கள் எதுவும் ஏற்படவில்லை | |
| 7.6 (viii) | ஆண்டின் இறுதியில் கட்டிடங்கள் ஃ நில உடைமைகள் மற்றும் முதலீட்டு சொத்துக்கள் பற்றிய தகவல்கள் | ✓ | 244 |
| 7.6 (ix) | ஆண்டின் இறுதியில் கூறப்பட்ட மூலதனத்தைக் குறிக்கும் பங்குகளின் எண்ணிக்கை | ✓ | 311 |
| 7.6 (x) | ஒவ்வொரு தரத்திலான பத்திரங்கள் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையின் மற்றும் தொடர்புடைய தகவல்களின் விநியோக அட்டவணை | ✓ | 312 |
| 7.6 (xi) | பங்கு முதலீடு, கடன், கடன் மதிப்பீட்டில் மாற்றம் குறித்த விகிதங்கள் மற்றும் சந்தை விலை தகவல்கள் | ✓ | 309, 310, 313, 315, 316 |
| 7.6 (xii) | நிறுவனத்தின் அல்லது துணை நிறுவனங்களின் நிலையான சொத்துக்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் | ✓ | 242-243 |
| 7.6 (xiii) | பொதுப் பங்கு வெளியீடு, உரிமைப்பங்கு வெளியீடு மற்றும் தனியார் பங்கு வெளியீடுகள் மூலம் திரட்டப்பட்ட நிதி விவரங்கள் | பொதுப் பங்கு வெளியீடு, உரிமைப்பங்கு வெளியீடு மற்றும் தனியார் பங்கு வெளியீடுகள் மூலம் நிதி திரட்டப்படவில்லை. | |
| 7.6 (xiv) | ஊழியர் பங்கு உரிமை அல்லது பங்கு விருப்பத் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் | ஊழியர் பங்கு உரிமை அல்லது பங்கு விருப்பத் திட்டங்கள் நிறுவனத்தில் காணப்படவில்லை | |
| 7.6 (xv) | பட்டியல் விதிகளின் பிரிவு 7 இன் விதிமுறைகள் 7.10.0,7.10.5உ மற்றும் 7.10.6 உ இன் விதிமுறைகளில் கூட்டாண்மை ஆளுகை நடைமுறை தொடர்பான வெளிப்பாடு | ✓ | 123-124 |
| 7.6 (xvi) | பங்கு முதலீட்டில் 10மூ அல்லது நிறுவனத்தின் மொத்த சொத்துக்களில் 5மூ தாண்டிய தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் | 2016 ஜனவரி 01 அன்று ரத்து செய்யப்பட்டது | |
| 9.3.2 (a) | பங்கு முதலீட்டில் 10மூ அல்லது நிறுவனத்தின் மொத்த சொத்துக்களில் 5மூ இதில் எது குறைவாக உள்ளதோ அதற்கிணையான தொடர்புடைய தரப்பினர்களின் மீண்டும் நிகழாத பரிவர்த்தனைகள் | 2020/21 நிதியாண்டில் வரம்பை மீறிய தொடர்ச்சியான பரிவர்த்தனைகள் இல்லை | |
| 9.3.2 (b) | மொத்த வருவாயில் 10மூ க்கு அதிகமான தொடர்ச்சியாக நிகழும் தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் | 2020/21 நிதி ஆண்டிற்கான மீண்டும் நிகழும் வரம்பை மீறிய பரிவர்த்தனைகள் பற்றிய விவரங்கள் | 279 |
| | | நிதி அறிக்கைகள் குறிப்பு 58.5 கீழ் வெளிப்படுத்தப்பட்டது | |

**17. தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள்** *(CSE பட்டியலிடல் விதிகள் பிரிவு 9)*

CSE இன் பிரிவு 9 க்கு இணங்க தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைகள் தொடர்பான விதிகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன என்று பணிப்பாளர்கள் வெளியிட்டனர்.

**18. இயங்கும் தன்மை** *(சிறந்த நடத்தை விதிமுறைகள் D1.4)*

குழுமத்தின் முகாமைத்துவம், அதன் தொடர்மது இயங்கக்கூடிய தன்மை தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டதுடன், எதிர்காலத்தில் வியாபாரத்தில் தொடர தேவையான வளங்கள் கொண்டுள்ளமை தொடர்பாக திருப்தி அடைந்துள்ளது. மேலும், தொடர்ந்து செல்லும் தன்மை தொடர்பான குழுவின் திறன் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருள் ரீதியான நிச்சயமற்ற தன்மை தொடர்பாக முகாமைத்துவம் அறியவில்லை. எனவே, நிதிநிலை அறிக்கைகள் தொடர்ந்து இயங்கும் தன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

31 மார்ச் 2021 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான அடிப்படையைத் தீர்மானிப்பதில், குழு நிறுவனங்களின் மீது கோவிட் -19 இன் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை மற்றும் கிடைக்கப்பெறும் தகவலின் அடிப்படையில், இயங்கும் தன்மையின் அடிப்படையின் பயன்பாட்டின் சரியான தன்மை மரசவைாரஅ முகாமைத்துவம் மதிப்பீடு செய்துள்ளது

குறைந்த நிகழக்கூடிய சாத்தியமுள்ள தாக்கத்துடன் வணிகங்கள் தொடர்வதை உறுதி செய்வதைக்காக, எதிர்பார்க்கப்படும் வருமானம், செலவு மேலாண்மை, லாபம், அத்தியாவசியமற்ற மூலதனச் செலவுகளைத் தடுக்கும் திறன், பயன்படுத்தப்படாத கடன் திட்டங்கள் மற்றும் சேவைகளைத் தொடர்ந்து வழங்கும் திறன் போன்ற விரிவான பரப்பெல்லையை கொண்ட, பல்வேறான அழுத்த சோதனை நிலைகளில் குழுமமானது தொழில்களின் எதிர்நோக்கு வலுவை மதிப்பீடு செய்தது. அடிப்படை நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு குழுவின் ஒவ்வொரு தொழிற்துறையின் கண்ணோட்டத்தையும் முன்வைத்து, முகாமைத்துவத்தால் மேற்கூறியவற்றின் பிந்தைய மதிப்பீட்டை மேற்கொண்டு, முடிவுகளின் வரம்பு மற்றும் சாத்தியக்கூறுகளை சரியான முறையில் கவனத்தில்கொண்டு, நோக்கக்கூடிய எதிர்காலத்தில் செயல்பாட்டு இருப்பில் தொடர நிறுவனத்திற்கு போதுமான வளங்கள் உள்ளதென முகாமைத்துவம் திருப்தி அடைவதுடன் இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து வழங்குவதில் தொடர்ந்து இயங்கும் தன்மை அடிப்படையை பின்பற்றியது.

**19. வருடாந்த பொதுக் கூட்டம்**

25 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமானது, 2021 ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு, மரத்தான, இல.1161 இல் அமைந்துள்ள பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி பிரதான அலுவலகத்தின் 10 ஆம் மாடியில் பணிப்பாளர் சபை அறையில் நடைபெறவுள்ளது. 25 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல் இவ் ஆண்டறிக்கையின் 330 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,



**கோரலி பிட்ர்ஸ்**
*பணிப்பாளர்*



**சுஜீவ ராஜபக்ஷ**
*பணிப்பாளர்*



**லக்மினி கோட்டெகொட**
*நிறுவன செயலாளர்*

07 ஜுலை 2021
கொழும்பு

# சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை



சபையின் கணக்காய்வு குழு ("காக்காய்வு குழு" அல்லது "குழு") 2021 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டின் தமது அறிக்கையை சமர்ப்பித்தது. இவ்வறிக்கை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்க பட்டது.

### குழுவின் அமைப்பு மற்றும் கூட்டங்கள்

சபையின் கணக்காய்வு குழு பீப்பிள்ஸ் லீசின் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி யின் பணிப்பாளர் சபையினால் நியமிக்க பட்டதாகும். 2021 மார்ச் 31 நிதி ஆண்டு முடிவில் சபையின் கணக்காய்வு குழு தனது உறுப்பினர்களாக கீழ்வரும் நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களை கொண்டிருந்தது

| உறுப்பினரின் பெயர் | கூட்டங்களுக்கான வருகை |
|---|---|
| **திருமதி கொரலி பீட்டர்ஸ் - குழுவின் தலைவர்**<br>சுயாதீன நிறைவேற்றல்லாத பணிப்பாளர் | 14/14 |
| **திரு யு எல் அசோக டபிள்யூ பண்டார**<br>சுயாதீன நிறைவேற்றல்லாத பணிப்பாளர் | 13/14 |
| **திரு அஸ்ஸாம் அ அஹமத்**<br>சுயாதீனமல்லாத நிறைவேற்றல்லாத பணிப்பாளர் | 12/14 |

உள்ளக கணக்காய்வு பிரிவின் தலைவர் திரு உதேஷ் பண்டார, சபையின் கணக்காய்வு குழுவின் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

### குழுவின் சாசனம்

பணிப்பாளர் சபை அங்கீகரித்த டீயுஊ யின் (குழுவின்) சாசனம், அதன் குறிப்பு விதிமுறைகளை தெளிவாக வரையறுக்கிறது. குழு செயல்பாடுகளில் மற்றும் கவனங்களில் ஏதேனும் முன்னேற்றங்களுக்காக அதன் சாசனம் ஆண்டுதோறும் மீளாய்வுச் செய்யப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் ஒத்துழைப்புடன் குழுவின் சாசனம் இறுதியான 2021 பெப்ரவரி மாதம் மீளாய்வுச் செய்யப்பட்டது.

சபையின் கணக்காய்வு குழுவின் நோக்கமாவது, செயல்பாடு அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு அமைப்பு, உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வு தொடர்பான செயல்பாடுகள் என்பவற்றின் மீதான பொதுவான மேற்பார்வை மற்றும் சட்ட ஒழுங்குவிதிகளுடன் நிறுவனத்தின் இணக்கப்பாட்டை மதிப்பிடுவதில் பணிப்பாளர் சபைக்கு உதவுவதாகும்.

எந்தவொரு விடயத்தையும் விசாரணை செய்வதற்கு, எந்தவொரு ஊழியரையும் குழுவின் கூட்டமொன்றில் விசாரணைக்கு அழைப்பதற்கு எந்தவொரு தகவலையும் அணுகுவதற்கு, நிறுவனத்தின் செலவில் வெளிப்புற நிபுணத்துவ ஆலோசனைகளை பெறுவதற்கு மற்றும் துணை குழுவிற்காக அதிகார பகிர்வு துணை குழு ஒன்றை ஏற்படுத்துவதற்கு குழுவிற்கு மிகத் தெளிவான அதிகாரம் உள்ளது.

### 2020/21 நிதி ஆண்டில்குழுவின் செயல்பாடுகள்

2021 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் குழு 14 கூட்டங்களை நடத்தியுள்ளது. இக் கூட்டங்களின் செயல்பாடுகள், கலந்துரையாடப்பட்ட விடயங்களின் போதுமான தகவல்களுடன் பணிப்பாளர் சபைக்கு தொடர்ந்து அறிக்கையிடப் படுகின்றது. வெளிப்புற கணக்காய்வாளர்களான அர்னஸ்ட் அண்ட் யங் நிறுவனத்தின் பிரதிநிதிகள் இவ் ஆண்டில் மூன்று கூட்டங்களில் கலந்துக்கொண்டனர். தேவையின் அடிப்படையில் காலத்துக்கு காலம் விடுக்கப்பட்ட அழைப்புகளின் பேரில் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் உயர்மட்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் இக் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

### நிதி அறிக்கையிடல்

குழுவானது, நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் சாதனை அளவுகளுக்கு அமைவாகவும், இலங்கை கணக்கியல் தரணியமங்களுக்கு அமைவாகவும், இலங்கை கணக்கியல் அறிக்கையிடல் தரணியமங்களுக்கு அமைவாகவும் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி தொழில் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமச்சட்டம், கொழும்பு பங்குச் சந்தை, இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆணைக்குழு, மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகள் என்பவற்றின் சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கவும் காலாண்டு மற்றும் வருடாந்த நிதிநிலை அறிக்கைகளை தயாரிக்கும் பணிப்பாளர் சபையின் பொறுப்பை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவியளிக்கின்றது குழுவினால் வருடாந்த மற்றும் இடைக்கால நிதிநிலை அறிக்கைகள் மீளாய்வுச் செய்யப்பட்டு, அவற்றின் கணக்கியல் கோட்பாடுகள், முக்கிய கணிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றின் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மையை பதிப்பிட்டது, அத்துடன் மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் டுமுயுளுஃளுடுகுசுளு அடிப்படையில் அதன் இலாபம் மற்றும் இலாபப்பங்கு அறிவிப்பின் தாக்கம், விவேகமான விகிதங்கள் மீளாய்வுச் செய்யப்பட்டதுடன், அதன் மூலம் தனது மேற்பார்வை பொறுப்புக்களை நிறைவேற்றியது.

இயக்குனர்களின் அறிக்கை நிதி மீதான உள் கட்டுப்பாடு அறிக்கை, ஆண்டு அறிக்கை இயக்குநர்கள் குழுவின் நிறுவனத்தின் விவகாரங்கள், இயக்குனர்களின் பொறுப்பு நிதி அறிக்கை மற்றும் வாரியம் தணிக்கை குழு அறிக்கை இருக்க வேண்டும் வருடாந்திர அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது மேலும், நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடு தொடர்பான அறிக்கை, நிறுவனத்தின் விவகாரங்கள் பற்றிய பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை, நிதி அறிக்கையிடல் தொடர்பான பணிப்பாளர்கள் பொறுப்பு மற்றும் ஆண்டறிக்கையில் வெளியிடுவதற்கான கணக்காய்வு குழு அறிக்கை என்பவை குழுவினால் மீளாய்வுச் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

### SLFRS களை செயல்படுத்துதல்

நிறுவனம் பின்பற்றும் SLFRS 9 - "நிதி கருவிகள் " தர நியமங்களின் கீழ், எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் (ECL) கணிப்பீடு உற்பட கொள்கைகள் மற்றும் வாழ்முறைகளை ஆராய்ந்து கடன் சேத இழப்பு கொள்கை கையேட்டை மீளவு செய்தது. சேத இழப்பு கணிப்பீடு முறைமை விரிவாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், அதன் மேம்பாட்டுக்காக குழு மேலும் ஆலோசனைகளை வழங்கியது. நிறுவனத்தின் சேத இழப்பு கணிப்பீடு தொடர்பாகவும், கடன் பிற்போடுதல் மீதான வருவாயை கண்டறியவும் நுண்ணறிவு வழங்கப்பட்டது.

### வெளிப்புற கணக்காய்வு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கமைய, கணக்காய்வாளர் நாயகத்தினால் அல்லது அவர் அதிகாரம் அளிக்கும் நபரொருவரால் கணக்காய்வு மேற்கொள்ளப்படுமென கணக்காய்வாளர் நாயகம் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளார்.
அதன்படி, 2020/21 நிதி ஆண்டின் கணக்காய்வை மேற்கொள்ள கணக்காய்வாளர் நாயகத்திற்கு துணையாக ஏர்னெஸ்ட் அண்ட் யங் நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டனர். அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்படி, நிறுவனத்தின் வெளிப்புற கணக்காய்வாளர், கணக்காய்வாளர் நாயகமாக இருப்பதனால், வெளிப்புற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்தல் தொடர்பாக மேற்கொள்ள கடமைகள் எதுவும் நிறுவனத்துக்கு இல்லை.

வருடாந்த கணக்காய்வை ஆரம்பிப்பதற்கு முன்னராக, கணக்காய்வுக் குழு நிதி ஆண்டினுள் மூன்று முறை வெளிப்புற கணக்காய்வாளர்களை சந்தித்து, கணக்காய்வு திட்டம், பரப்பெல்லை, மற்றும் கணக்காய்வை மேற்கொள்வதில் பின்பற்றுவதற்கு முன்மொழியப்படும் வழிமுறைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. முக்கிய முகாமைத்துவ பணியாளர்களின் பங்கேற்பு இல்லாமல், பொருள் ரீதியான சிக்கல்கள், பிரச்சினைகள் மற்றும் மேலும் கலந்துரையாட வேண்டிய ஒதுக்கீடுகள் தொடர்பாக கேள்வி எழுப்புவதற்கு வெளிப்புற கணக்காய்வாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது

வெளிப்புற கணக்காய்வாளர்களால் வழங்கப்பட்ட கணக்காய்வு அல்லாத சேவைகள் தடை செய்யப்பட்ட எல்லைக்குள் வராத சேவைகள் என்பதையும், அத்தகைய சேவைகளை வழங்குதல் கணக்காய்வாளர் நாயகத்தினால் அவருக்கு துணையாக நியமிக்கப்பட்ட வெளிப்புற கணக்காய்வாளர்களின் சுதந்திரம் மற்றும் நோக்கங்களை பாதிக்காது என்பதனையும் உறுதிச் செய்வதற்காக கணக்காய்வாளர்களால் வழங்கப்பட்ட கணக்காய்வு அல்லாத சேவைகள் கணக்காய்வு குழுவினால் மீளாய்வுச் செய்யப்பட்டது. அதன்படி, வெளிப்புற கணக்காய்வாளர்களின் கட்டணங்களை செலுத்துவது தொடர்பான அளவுகோல்கள் மற்றும் கணக்காய்வில் ஈடுபடுவதற்கு முன்னதாக கணக்காய்வாளர் நாயகத்திடம் அனுமதி பெறுவதற்கான நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டன.

வெளிப்புற கணக்காய்வாளர்களின் முகாமைத்துவ கடிதம், அரசியலமைப்பின் பிரிவு 154 (6) இன் கீழ் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதில் என்பவை குழுவினால் மீளாய்வுக்கு உற்படுத்தப்பட்டது. மேலும், முகாமைத்துவ கடிதம் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக குழுவினால் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டது.

## உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வுகளை மேற்கொண்டு குழுவிற்கு அறிக்கையிடுவதற்காக ஒரு பிரத்தியேக கணக்காய்வு பிரிவொன்று நிறுவனத்தில் உள்ளது. உள்ளக கணக்காய்வு செயல்ப்டுகள் சுயாதீனமாவை எனவும், தனது செயல்பாடுகளை சுயாதீனமாக மேற்கொள்வதற்காக பிரிவுக்கு தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வு குழு உறுதிப்படுத்துகின்றது.

நிதி ஆண்டினுள், உள்ளக கணக்காய்வு செயல்முறையின் வினைத்திறனையும், நோக்கங்களையும் மேம்படுத்துவதற்காக கணக்காய்வுக் குழு உள்ளக கணக்காய்வு சாசனம் மற்றும் கையேட்டினை மேலாய்வுக்கு உற்படுத்தியது. மேலதிக கவனம் செலுத்தும் பகுதிகள், செயல்முறை முன்னேற்றங்கள் மற்றும் நிறுவனம் மற்றும் தொழித்துறை போக்குகளை பிரதிபலிக்கும் வகையில், கணக்காய்வு தரமிடல் முறைமை மற்றும் உள்ளக கணக்காய்வு மீளாய்வுச் செய்யப்பட்டது.

நிறுவனத்தின் தகவல் தொகுதி கணக்காய்வுக்கு வசதி வழங்கும் வகையில், ஒரு அனுபவம்வாய்ந்த தகவல் தொகுதி கணக்காய்வாளரை ஆள்சேர்ப்பு செய்து, தகவல் தொகுதி கணக்காய்வு அலகு ஒன்றை உருவாக்கப்பட்டது. உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொண்ட துணை மீளாய்வுகளின் பரப்பெல்லையை மதிப்பிட்டு, துணை மீளாய்வு கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் நிதி ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டம் மற்றும் கொள்கையை குழு மீளாய்வுச் செய்து அனுமதி வழங்கியது. நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் துணை நிறுவனங்கள் உற்பட தொழில்கூறுகளில் ஒன்லைன் மற்றும் களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் மற்றும் பொதுவான கண்டுபிடிப்புகள் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதோடு, காரணிகளை கண்டறியவும், திருத்தச் செயல்பாடுகளை மேற்கொள்ளவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. குழுவானது, கடன் மீளாய்வு அறிக்கைகள், தகவல் தொகுதி கணக்காய்வுகள், மற்றும் உள்ளக விசாரணைகளை மதிப்பீடு செய்ததுடன், அதனை அடிப்படையாகக் கொண்டு உள்ளக கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதனை உறுதிச் செய்வதற்காக பொருத்தமான முன்மொழிவுகளையும் வழிகாட்டல்களையும் முகாமைத்துவத்திற்கு வழங்கியது. மேலு கணக்காய்வுக் குழு, நிறைவேற்று முகாமைத்துவத்தின் பங்கேற்பின்றி உள்ளக கணக்காய்வாளர்களை சந்தித்தது

## ஒழுங்குமுறை இணக்கம்

நிதி அறிக்கையிடல் தேவைப்பாடுகள், கம்பெனிகள் சட்டம், நிதி தொழில்சட்டம் மற்றும் ஏனைய நிதி அறிக்கையிடல் ஒழுங்குவிதிகளின் (SLAS/IFRS போன்றவை) தகவல் தேவைப்பாடுகள் என்பவற்றுடனான நிறுவனத்தின் இணக்கப்பாட்டினை குழு மதிப்பீடு செய்துள்ளது. அத்தகைய சட்ட, ஒழுங்குவிதி தேவைப்பாடுகளுடன் இணங்குதல் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்காக இணக்கப்பாட்டு அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை குழு பகுப்பாய்வு செத்தது

இலங்கை மத்திய வங்கியின் சட்டபூர்வமான ஆய்வு அறிக்கைகள் அத்துடன் முகாமைத்துவத்தின் பதில் என்பவற்றின் பரிந்துரைகளை செயல்படுத்தல் தொடர்பான முன்னேற்றத்தையும் குழு மேற்பார்வை செய்தது.

## உள்ளக கட்டுப்பாடுகள்

இந்த தேவைகளுடனான இணக்கப்பாட்டிற்கான நியாயமான உத்தரவாதம் வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட நடைமுறைகளை கண்காணிப்பதற்காக உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வாளர் குழுவிற்கு உதவுகின்றனர். ஒத்திசை படுத்தப்படாத கணக்குகளை கண்காணித்து அவற்றை ஒத்திசை படுத்துவதற்காக பல்வேறு கொள்கைகளை பரிந்துரைக்கப்பட்டு குழுவின் மூலம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பட்டு அமைப்பு பற்றிய அறிக்கை குழுவினால் மீளாய்வு செய்து மற்றும் அங்கீகரிக்கப்பட்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## விசில் ஊதுதல்

நிறுவனத்தின் விசில் ஊதுபவர் பாதுகாப்புக் கொள்கையின் மூலம் மோசடி அபாயம் தொடர்பான கூட்டாண்மை முகாமைத்துவத்திற்காக விரிவானதொரு வழிமுறையை ஏற்படுத்த எதிர்பார்க்கப் படுகின்றது. விசில் ஊதுபவர் பாதுகாப்புக் கொள்கை மீளாய்வு செய்யப்பட்டு, நிறுவனத்தின் இன்றானெட் இணையத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் விசில் ஊதுபவரின் இரகசியத்தன்மை தீவிரமாக பாதுகாக்க படுவதற்கான உத்தரவாதத்தை வழங்குகின்றது.

ஏதேனும் முறைகேடான அல்லது சட்டவிரோதமான செயல்பாடு அல்லது நெறிமுறையற்ற நடைமுறைகள் நிறுவனத்தில் இடம்பெறுவதை கவனிக்கும் அல்லது அதுபோன்ற நிகழ்வு தொடர்பான நம்பகமான தகவல் பெறப்படும் ஊழியர்கள், விசில் ஊதுதல் கொள்கையினை நடைமுறைப்படுத்த ஊக்குவிக்கப் படுகின்றனர். இந்த செயல்முறையை பயன்படுத்தவும், அவர்களின் உண்மையான கவனகளை எழுப்பவும் ஊழியர்கள் அறிவூட்ட படுகின்றனர்.

நிறுவனத்தின் ஊழியர்கள், நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களில் சாத்தியமான முறைகேடுகள்ன் தொடர்பான அவர்களின் கவனங்களை நம்பிக்கையுடன் எழுப்பக்கூடிய வகையில் ஏற்பாடுகளை குழு மேலும் முன்னேற்றியுள்ளது.

விசில் ஊதும் செயல்முறை அல்லது வேறேதும் வழிமுறைகளில் பெறப்படும் நிகழ்வுகளை சுயாதீனமாக விசாரிப்பதற்கு பொருத்தமான சகல செயல்முறைகளும் தயார் நிலையில் உள்ளன.

## குழுவின் மதிப்பீடு

சபையின் கணக்காய்வு குழு, அதன் குறிப்பு விதிமுறைகளின் கட்டாய அதிகார பரப்பெல்லையினுள், அதன் பொறுப்புகளை நிறைவேற்றுகிறது. இந்த பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாக குழு ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டதுடன், நிதி ஆண்டில் அதன் பொறுப்புகளை திருப்திகரமான வகையில் நிறைவேற்றப்பட்டதென முடிவுக்கு வந்தது.



**கோரலி பிட்ரஸ்**
*சுயாதீன பணிப்பாளர் / தலைவர்*
சபையின் கணக்காய்வுக் குழு

07 ஜுலை 2021

# மனித வளங்கள், ஊதியங்கள் மற்றும் நியமனக் குழு அறிக்கை

### குறிப்பு விதிமுறைகள்

நிதி ஆண்டானுள் மனித வளங்கள், ஊதியங்கள் மற்றும் நியமனக் குழுவின் கிரிப்பு விதிமுறைகள் (TOR) மனித வள விடயத்தை குழுவின் விடய பரப்பெல்லைக்குள் உள்ளடக்குவதற்காக மாற்றியமைக்க பட்டத்துடன், நிறுவனத்தில் மனிதவள படையணியின் மேற்பார்வையாய் பலப்படுத்துவது இதன் நோக்கமாகும். நிறுவனத்தின் ஊழியர்களின் நலனுக்காக தொலைநோக்குடன் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு குழுவின் விரிவாக்கப்பட்ட குறிப்பு விதிமுறைகள் சாதகமாக அமைந்தது.

### குழுவின் அமைப்பு மற்றும் கூட்டங்கள்

குழு மூன்று பணிப்பாளர்களை கொண்டுள்ளதுடன், அவர்க அனைவரும் நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் ஆவர். அதி தலைவர் உற்பட இரண்டு பேர் சுயாதீனமானவர்கள் ஆவர்.

மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டில் குழுவானது ஐந்து முறை ஒன்றுகூடியதோடு, மனித வளங்கள் தொடர்பான விடயங்களில் விரிவான ஆலோசனைகள் நிறுவனத்தின் மனித வள முகாமைத்துவத்தை முறைப்படுத்த பங்களிக்கும் அதே நேரம், ஊழியர்களின் திருப்தியையும் அதிகரித்தது.

பன்முகப்படுத்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை கொண்ட குழுவின் உறுப்பினர்கள், இந்த முக்கியமான குழுவின் மேற்பார்வைக்குள் வரும் விடயங்களின் மதிப்பை உருவாக்குவதற்கு பங்களித்தனர்.

### கூட்டங்களுக்கான உறுப்பினர்கள் வருகை

| பணிப்பாளர் பெயர் | சபையின் நிலை | உறுப்பினத்துவம் | பங்களித்த கூட்டங்கள் |
|---|---|---|---|
| திரு அசோக பண்டார | நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர் | தலைவர் | 5/5 |
| திருமதி கொரலி பீட்டர்ஸ் | நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர் | உறுப்பினர் | 5/5 |
| திரு ரோஹன் பத்திரகே | நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர் | உறுப்பினர் | 5/5 |

31 மார்ச் 2021 இல்மனிதவளங்கள், ஊதியம் மற்றும் நியமனக் குழு உறுப்பினர்களின் சுருக்கமான சுயவிவரங்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 100 முதல் 103 வரை வழங்கப்பட்டுள்ளன.

### 2020/21 ஆண்டின் சிறப்பம்சங்கள்.

- நிறுவனத்தின் மனிதவளங்கள் தொடர்பான விடயங்களின் மேற்பார்வையில் விரிவானதொரு பரப்பெல்லையை உள்ளடக்குவதற்காக குழுவி குறிப்பு விதிமுறைகளின் திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டன
- 2020 டிசம்பர் மாதத்தில் இலாப வேகவளர்ச்சித் திட்டமொன்று பரிந்துரைக்கப் பட்டத்துடன், அதற்க்கு இணையாக ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக இலாப இலக்குகளை அடைவோருக்கு வெகுமதி வழங்கும் திட்டமொன்றும் ஏற்படுத்தப் பட்டது.
- இலாப வேகவளர்ச்சித் திட்டத்தின் சாதித்தவர்களை பாராட்டி, இலாபத்தை அடைய அவர்களின் பங்களிப்புக்கு உரிய அங்கீகாரம் வழங்கி தகுதியான ஊழியர்களுக்கு வெகுமதி அளிக்க பரிந்துரைக்க பட்டது.
- திருத்தப்பட்ட நடத்தை ஒழுங்குவிதிகள் மற்றும் நடத்தை விதிக்க கோவை பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டது

### குழுவின் விடய பரப்பெல்லை

#### அதிகாரம் - மனித வளங்கள் தொடர்பான அதிகாரபூர்வ விடயங்கள்

சபையின் அனுமதிபெற்ற வுழுசு மூலம் முகாமைத்துவ எல்லைகளுக்கு அப்பாலான ஆலோசனை தேவர்களுடைய விடயங்களை மேலெழுப்பு தளமொன்றை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறான மீளாய்வு மற்றும் பரிந்துரைகள்

- பணியாளர் கொள்கைகள்.ஆட்சேர்ப்பு நடைமுறைகள், ஊழியர்களின் முன்னேற்றம் மற்றும் ஊக்குவிப்பு
- KMP கள் ஆட்சேர்ப்பு தேவைகள் மற்றும் தொடர்புடைய நியமனங்கள்
- KMP க்களுக்கான சம்பளம், கொடுப்பனவுகள், நன்மைகள் மற்றும் ஏனைய சகல வடிவங்களிலுமான ஊதியங்கள் .
- KMP களின் தொடர்ச்சித்தன்மை மூலோபாயம்
- பதவி/நிலை மாற்றம், வணிக காரணங்களினால் முன்பே அடையாளம் காணப்பட்ட ஊழியர்களின் தரங்கள்/நிலை/பங்கு
- கூட்டாண்மை முகாமைத்துவத்தின் சம்பளம் மற்றும்நன்மைகளை கட்டமைத்தல் மற்றும் தீர்மானித்தல்
- முன்பே அடையாளம் காணப்பட்ட தரங்களின் ஊழியர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள்
- கூட்டாண்மை முகாமைத்துவ பணியாளர் மற்றும் ஆலோசகர்களுக்கான நிலையான கால வேலைவாய்ப்பு ஒப்பந்தங்கள்
- கூட்டாண்மை முகாமைத்துவ பணியாளர்களின் சேவை நீட்டிப்புகள்
- அடையாளம் காணப்பட்ட தரங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கான வருடாந்த பதவி உயர்வுகள்
- பணம் அல்லாத நன்மைகள் உற்பட வருடாந்திர ஊதியங்கள் மற்றும் நன்மைகள் அதிகரிப்புகள்
- போனஸ் மற்றும் சம்பள திருத்தங்கள்.

ஊழியர் கடன்களை மற்றும் ஊழியர் நன்மை திட்டங்களை அனுமதிக்கவும் KMP களின் இலக்குகளை நிர்ணயிக்கவும் குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

#### ஆணை – நியமனம் தொடர்பான விடயங்கள்

சபையின் கட்டமைப்பு, அளவு மற்றும் அமைப்பு தேவையான சந்தர்ப்பங்களில் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு பரிந்துரைகளை வழங்கியதோடு, சபைக்கான உறுப்பினர்களை தெரிவுச் செய்வதற்கு ஆலோசனைகளையும் வழங்கியது உறுப்பினர்கள் தமது சொந்த நியமனம் தொடர்பாக முடிவெடுப்பதில் பங்கேற்பிலிருந்து தடுக்கப்பட்டனர்.

#### ஆணை – பணிப்பாளர்களின் ஊதியம் தொடர்பான விடயங்கள்

ஊதியங்கள் மற்றும் நியமனக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் மூலம் நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் ஊதியங்கள் தீர்மானிக்க படுகின்றன. சபையின் மற்றும் குழுக்களின் கூட்டங்களில் கலந்து கொண்டமைக்காக நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களுக்கு நிலையான கொடுப்பனவொன்று வழங்கப்படுகின்றது. நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களுக்கு செலுத்தப்படும் கட்டணங்கள் செயல்திறன் அல்லது ஓய்வூதிய அடிப்படையானவை அல்ல.

பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டண விவரங்கள் இந்த ஆண்டு அறிக்கையின் 275 வது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

#### அதிகாரம்

பணிப்பாளர் சபையின் இறுதி முடிவுக்காக பரிந்துரைகள் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. தேவையான நேரங்களில் நிறுவனத்தின் செலவில் நிபுணத்துவ ஆலோசனைகளை பெறுவதற்கு குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு அதற்கான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள் நிறுவன செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

### ஊதியக் கொள்கை

#### வெகுமதி மூலோபாயம்

ஊழியர்கள் தமது செயல்திறன், திறமைகள், அனுபவம் மற்றும் பொறுப்புத்தன்மை என்பற்றின் அடிப்படையில் வெகுமதி பெறுவதை உறுதி செய்வதற்காக, வெகுமதி மூலோபாயங்களை கேளு மேற்பார்வை செய்கின்றது. இது நிறுவனத்திற்கு தமது மூலோபாயங்களை செயல்படுத்துவதற்கு பொருத்தமானவர்களை தக்கவைக்க உதவுகின்றது.

சிறந்த ஆளுகை கொள்கைகளுடன் ஒன்றிணைந்த எமது ஊதியக் கொள்கை, நாம் விரும்பும் கலாச்சாரத்தை வலுவூட்டுகிறது மற்றும் எமது மதிப்புகளுடன் ஒத்துப்போகும் நடத்தையை ஊக்குவிக்கிறது. அதேவேளை, எமது மூலோபாய முன்னிரிமைகளை அடைவதற்காக, உயர் மட்டத்திலான செயல்திறனை வழங்கி அதில் நிலைத்திருப்பதற்கு ஊழியர்களை ஊக்குவிக்கின்றது.

### ஊதியத் தொகுப்பு மற்றும் ஏனைய நன்மைகள்

குழுவினால் ஊழியர்களின் ஊதியத் தொகுப்பு மீளாய்வுச் செய்யப்படுவதோடு அதற்காக, ஸ்ரீஜ களுடன் ஒப்பீட்டாக நிறுவனத்தின் மற்றும் முகாமைத்துவத்தின் தனிப்பட்ட நபர்களின் செயல்திறன், இணையான நிறுவன குழுமங்களின் ஊதியங்கள், நிறுவன வழிகாட்டல்கள் மற்றும் தொழில்துறை நிபுணத்துவ ஆலோசகர்களின் அறிக்கைகள் கவனத்திற்கொள்ள படுகின்றன.

ஊழியர் கடன் திட்டங்கள், ஊழியர்களின் உடல்நலக் காப்புறுதி, தீவிர நோய் பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதி போன்ற நன்மைகள் மூலம் ஊழியர்களின் தனிப்பட்ட நலனை பேரணுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

### குழுவின் செயல்திறனை மதிப்பீடு செய்தல்

ஒட்டுமொத்த குழுவின் செயல்திறன் மற்றும் வினைத்திறன் பணிப்பாளர் சபையின் மூலம் பணிப்பாளர்களின் வருடாந்த சுய மதிப்பீட்டின் ஒரு பாகமாக மேற்கொள்ளப்படுகின்றது. அதன் விவரங்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 120 இல் காணலாம்.

### ஊழியர் பங்கு விருப்பத்தேர்வுத் திட்டங்கள்

ஊழியர் பங்கு விருப்பத்தேர்வுத் திட்டங்கள் தற்போதைக்கு நடைமுறையில் இல்லை.

**அசோக பண்டார**
*தலைவர்*
*ஊதியம் மற்றும் நியமனக் குழு*

07 ஜுலை 2021

# தொடர்புடையவர்களின் பரிவர்த்தனைகள் மீளாய்வு குழு அறிக்கை

நிறுவனத்தின் தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை மீளாய்வுச் செய்யும் குழு, பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கான தொடர்புடைய தரப்பினர்களி பரிவர்த்தனைகள் தொடர்பான சட்ட விதிமுறைகளுடன் கடுமையான இணக்கத்தை உறுதிப்படுத்தும் சபை அனுமதிக்கப்பட்ட குறிப்பு விதிமுறைகளுக்குள் (TOR) செயல்படுகிறது.

## அமைப்பு மற்றும் குழு கூட்டங்கள்

தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை மீளாய்வுச் செய்யும் குழு மூன்று நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களைக் கொண்டு அமைந்துள்ளது, அதில் தலைவர் உட்பட இரண்டு பேர் சுயாதீன பணிப்பாளர்கள் ஆவர்.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர், இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதம முகாமையாளர் - நிதி, ஆகியோர் குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். கூட்டத்தின் நடவடிக்கைகள் பணிப்பாளர் சபைக்கு மற்றும் அதன் தலைவருக்கு அறிக்கையிட படுவதோடு சபையின் ஆலோசனைகள் தேவையான முக்கிய விடயங்கள் தொடர்பாக சபைக்கு விளக்கமளிக்கப்படும்.

குழுவானது ஆண்டினுள் நன்கு முறை ஒன்றுக்கூடியதோடு, இக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய தரப்பினர்களின் சகல பரிவர்தனைகளையும் மீளாய்வுக்கு உற்படுத்தியது. தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை ஆளுகை செய்யும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்ய செய்வதற்காக குழு உறுப்பினர்கள் விரிவாக கலந்துரையாடினர்.

குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் குழுவின் கருத்துகள் மற்றும் அவதானிப்புகளுடன் தொடர்ச்சியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப் படுகின்றன.

### நிதி ஆண்டில் கூட்டங்களுக்கான வருகை

| பணிப்பளார் பெயர் | பணிப்பளார் நிலை | பங்களித்த கூட்டங்கள்/தகைமை |
|---|---|---|
| திரு சனுரா விஜேதிலக (தலைவர்) | நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர் | 4/4 |
| திரு அசோக பண்டார | நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர் | 4/4 |
| திரு சுதர்சன் அஹுங்கம | நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர் | 2/4 |

தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனை மீளாய்வுக் குழு உறுப்பினர்களின் 2021 மார்ச் 31 நிலவரப்படி சுருக்கமான சுயவிவரங்கள் இந்த ஆண்டு அறிக்கையின் 100 முதல் 103 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 2020/21 ஆண்டின் சிறப்பம்சங்கள்

- பணிப்பாளர்களுக்கும், முஆீ களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் நிறுவனத்தின் பத்திரங்களை கையாளும் முறை தொடர்பாக வழிகாட்டல் வழங்கும் பங்கு வர்த்தக கொள்கை பணிப்பாளர்கள் சபையின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்க பட்டது.
- நிறுவனத்தின் தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்தனைகளுக்காக மேலும் வெளிப்படைத்தன்மையுடைய படிவமொன்று அறிமுகப்படுத்தபட்டது
- மீளாய்வுக்கு உலகு காலப்பகுதியில் சகல தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்தனைகளும் மீளாய்வுக்கு உற்படுத்தப்பட்டன

## குழுவின் விடய பரப்பெல்லை

### ஆணை

வுழுசு இல் வெளிப்படையாக விடுவிக்கப்பட்ட, கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடும் விதிகளுடன் இணைக்கும் பரிவர்த்தனைகள் தவிர்த்து ஏனைய முன்மொழியப்பட்ட தொடர்புடைய தரப்பினர்களின் சகல பரிவர்த்தனைகளும் குழுவினால் முன்கூட்டியே மீளாய்வுச் செய்யப்பட்டன.

**கமிட்டியின் செயல்பாடுகளில் உள்ளடங்குபவை ஆவது**

- இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆணைக்குழுவின் மூலம் 2013 டிசம்பர் மாதம் வழங்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் தொடர்பான சிறந்த நடத்தை விதிகளை மூலம் வெளிப்படையாக விடுவிக்கப்பட்ட பரிவர்த்தனைகள் தவிர்த்து, சகல தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்தனைகளையும் முக்கூட்டியே மீளாய்வு செய்தல்.
- தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்தனைகளை மீளாய்வு செய்வதற்காக கொள்கைகளையும் செயல்முறைகளையும் உருவாக்குதல் மற்றும் தற்போதைய கொள்கைகளையும் செயல்முறைகளையும் மேற்பார்வை செய்தல்.
- பட்டியல் விதிகள் 9.4 இல் பிரிவு 9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, குறிப்பிட்ட பரிவர்த்தனை நிகழ்வதற்கு முன்னதாக, விசேட தீர்மானம் ஒன்றின் மூலம் பங்குதாரர்களின் அனுமதி பெறப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அதற்க்காக முழுமையான பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்தல்.
- இயங்கிக்கொண்டிருக்கும் தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் தொடர்பாக நிறுவனத்தின் ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை தப்பித்தல்
- அழுத்தம் ஏற்படுத்துவதை மற்றும் வாக்களிப்பதை தவிர்த்து தேவையான தகவல் வழங்குவதற்கு பாத்திரம் தெடர்புடைய பணிப்பாளரிடம் கேட்டுக்கொண்டாள் தவிர, தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்தனைகளின் ஒரு தரப்பினராக இருக்கும் எந்தவொரு பணிப்பாளரும் அது தொடர்பான கலந்துரையாடல்களிலிருந்து விலகி இருத்தலை உறுதிப்படுத்த வேண்டும்
- பொருத்தமான விதிகள்/ விதிமுறைகளின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, சரியான நேரத்தில் மற்றும் போதுமான அளவில், உடனடி சந்தை வெளிப்படுத்தல் மற்றும் ஆண்டறிக்கையில் வெளிப்படுதலை உறுதிச் செய்தல்.
- நிறுவனம் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுக்கு இடையில், ஏற்படக்கூடிய அவங்களின் முரண்பாடுகளின் தாக்கங்களை தணிக்கும் அல்லது தவிர்க்கும் வகையில் அவற்றை மேற்கொள்ளப்படுவதை உறுதிச் செய்வதற்காக தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் இருப்பின் அவற்றை மேற்பார்வை செய்தல்.
- வுழுசு மூலம் எல்லா நேரங்களிலும் தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளை வேபடுத்துவதை உறுதிச் செய்வதற்காக அதனை காலத்துக்கு காலம் மீளாய்வுச் செய்தல்
- குழு தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையானதும் பொருத்தமானதும் என கருதும் ஏனைய செயல்பாடுகளை நிறைவேற்றல் மற்றும் காலத்துக்கு காலம் பணிப்பாளர் சபையின் மூலம் ஒப்படைக்கப் படும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு செயல்படுதல்.

### அதிகாரம்

தேவையான சந்தர்ப்பங்களில் விடயங்களுக்கான இறுதி தீர்மானம் எடுப்பதற்காக குழுவின் பரிந்துரைகள் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படுகின்றன. தேவையான நேரங்களில் நிறுவனத்தின் செலவில் நிபுணத்துவ ஆலோசனைகளை பெறுவதற்கு குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு அதற்கான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள் நிறுவன செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

## தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் மீதான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

### கொள்கை

"தொடர்புடைய தரப்பினர்" என வகைப்படுத்த வேண்டிய நபர்கள் தொடர்பான வரையறை, இலங்கை கணக்கியல் தரணியமங்கள் LKAS 24 மற்றும் பட்டியலிடல் விதிகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் கொள்கையில் உள்ளடங்கியுள்ளது.

தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனை கொள்கை ஒவ்வொரு பணிப்பாளர் மற்றும் முஆீ களிடம் இருந்தும் பெறப்படவேண்டிய மற்றும் அவர்களின் தொடர்புடைய தரப்பினர்களை அடையாளம் காணக்கூடிய சுய வெளிப்பாடுகள் தேவையை ஏற்படுத்துகின்றது.

நிறுவனத்தின் வணிக நடத்தை விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள் மூலம் ஒவ்வொரு பணிப்பாளர் சபை உறுப்பினரும் , அவரது சுயாதீன தீர்ப்புகளில் தாக்கம் ஏற்படுத்தக் கூடிய, உறவுகள், வெளிப்புற அமைப்புகள்,மற்றும் பொருள் விடயங்களின் ஆர்வங்கள் என்பவற்றுநல் எழும், தற்போதய அல்லது ஏற்படக்கூடிய ஆர்வங்கள் முரண்பாடுகள் தனக்கு உள்ளதா என்பதை தீர்மானிக்க கேட்டுக்கொள்ள படுகின்றனர். அவ்வாறான ஆர்வங்களின் தற்போதுள்ள அல்லது ஏற்படக்கூடிய முரண்பாடுகளுள்ள பணிப்பாளர்கள், அதனை கண்டறிந்ததும் உடனடியாக அதனை பணிப்பாளர் சபையினரின் கவனத்துக்கு கொண்டுவரும் தேவையை ஏற்படுத்துகின்றது.

### நடைமுறைகள்

தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் செயல்பாட்டுக்கு வசதியளிக்கும் மற்றும் அது தொடர்பான தரவுகளை நிறுவனத்தின் ஒட்டுமொத்த வலையமைப்பிலிருந்து பெறுக்கொள்ளக்கூடிய தற்போதைய ஒன்லைன் தடுப்பு பொறிமுறை இதனை மேலும் வலுவூட்டுகிறது..

### தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் 2020/21

நிறுவனம் 2020 ஏப்ரல் 01 முதல் 2021 மார்ச் 31 வரை காலப்பகுதிக்கான தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளை குழு மீளாய்வுச் செய்ததுடன், CSE இன் பட்டியல் விதிகள் பிரிவு 9 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகள் தொடர்பான விதிகளுடன் இணங்கியது. CSE யின் பட்டியலிடும் விதிகளின் பிரிவு 9.1.1,9.1.2 மற்றும் 9.3.2 (அ) ஆகியவற்றில் உள்ளபடி நிறுவனம் எந்த பரிவர்த்தனைகளிலும் ஈடுபடவில்லை. பட்டியலிடும் விதிகளின் பிரிவு 9.3.2 (டி) இன் கீழ் வரும் அனைத்து பரிவர்த்தனைகளும் நிதிநிலை அறிக்கைகள் குறிப்பு 58.5 இல் பக்கம் 279 இல் வெளியிடப்பட்டுள்ளன.

### பிரகடனம்

2020/21 ஆண்டில் நிறுவனம் பட்டியல் விதிகளின் வரம்புக்குள் வரும் தொடர்புடைய தரப்பினர்களின் பரிவர்த்தனைகளில் உள்நுழையவில்லை எனும் பணிப்பாளர் சபையின் பிரகடனம் பக்கம் 143 இல் பணிப்பளார் சபையின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கின்றது.

**சானுர விஜேதிலக்க**
*தலைவர்*
*தொடர்புடைய தரப்பினரலின்*
*பரிவர்த்தனை மீளாய்வுக் குழு*

07 ஜுலை 2021

# சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு அறிக்கை

ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ முயற்சிகளுக்கான அடிப்படை பொறுப்பைக்கொண்ட பீபிள்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பீஎல்சி யின் பணிப்பாளர் சபை, 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரையின் பிரிவு 8 (3) ன் அடிப்படையில், நிருவமத்தின் மற்றும் குழுமத்தின் அபாய சுயவிவரகுறிப்பின் பொதுமை மற்றும் வினைத்திறனை மீளாய்வுச் செய்து மதிப்பிடுவதற்காக சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவிற்கு "BIRMC" அல்லது குழு) தனது பொறுப்பை பகிர்தளித்துள்ளது.

## குறிப்பு விதிமுறைகள் (TOR)

மேல்குறிப்பிட்ட பணிப்புரைக்கு இணங்க குருவின் கலவை, பொறுப்புகள், கூட்டங்களின் இடைவெளி மற்றும் கோரம், குழுவின் அறிக்கை மற்றும் ஏனைய நடைமுறைகள் தொடர்பாக குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை TOR தெளிவாக விளக்குகின்றது.

## அமைப்பு

2020/21 நிதி ஆண்டில் BIRMC கீழ்வரும் உறுப்பினர்களை கொண்டிருந்ததுடன் அவர்களின் சுய விவரங்கள் 102 முதல் 106 வரை பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன:

| BIRMC உறுப்பினரின் பெயர் | பணிப்பாளர் நிலை |
|---|---|
| திரு சனுர விஜேதிலக | குழுவின் தலைவர் (நிறைவேற்றல்லாத, சுயாதீன பணிப்பாளர்) |
| திரு அஸ்ஸாம் அஹமத் | குழு உறுப்பினர் (நிறைவேற்றல்லாத, சுயாதீனமல்லாத பணிப்பாளர்) |
| திரு கிளைவ் பொன்சேகா | குழு உறுப்பினர் (நிறைவேற்றல்லாத, சுயாதீனமல்லாத பணிப்பாளர்) |
| திரு ஷமிந்திர மர்சலின் (பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்) | இயக்குநர் அல்லாத 25.11.2020 முதல் நியமிக்கப்பட்ட |
| திரு ஏ எஸ் இப்ராகிம் (பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்) | இயக்குநர் அல்லாத 25.11.2020 முதல் ஓய்வுபெற்ற |
| திரு சஞ்சீவ பண்டாரநாயக்க (SDGM - செயல்பாடுகள்) | இயக்குநர் அல்லாத |
| திரு லியோனல் பெர்னாண்டோ (SDGM - செயல்பாடுகள்) | இயக்குநர் அல்லாத |
| திரு ரோஹான் தென்னகோன் (DGM - அபாய சூ கட்டுப்பாடு) | இயக்குநர் அல்லாத |

## அழைப்பின் மூலம் வழக்கமான பங்கேற்பாளர்கள்

- பிரதி பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல்
- பிரதி பொது முகாமையாளர் - கடன் மீட்பு மற்றும் நிர்வாகம்
- பிரதி பொது முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு
- இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்
- பீப்பிள்ஸ் லீசிங் துணை நிறுவனங்களின் முக்கிய முகாமைத்துவ பணியாளர்கள்
  - தலைமை நிர்வாக அதிகாரி -பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் பிஎல்சி (பிஜ)
  - தொழில்நுட்ப ஆலோசகர் - பிஜ (டிசம்பர் 2020 வரை)
  - பிரதம இயக்க அதிகாரி- பிஜ
  - (பிப்ரவரி 2021 முதல்)
  - சிரேட்ட முகாமையாளர் - தலைவர் - பீப்பிள்ஸ் மைக்ரோ -காமர்ஸ் லிமிடெட்
  - வரையறுக்கப்பட்ட பீப்பிள்ஸ் லீசிங் பிளீட் மேனேஜ்மென்ட் பொறுப்பதிகாரி
  - பிரதம நிறைவேற்று அதிகாரி - லங்கன் அலையன்ஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்

## குழுவின் செயலாளர்

திரு அகில சமரசிங்க - பிரதி முகாமையாளர் - அபாய மற்றும் கட்டுப்பாடு

## கூட்டங்கள்

குழுவானது மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டில் நான்கு (04) காலாண்டு கூட்டங்களை நடத்தியது. அவற்றுக்கான குழுவின் உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு.

| பெயர் | பங்கேற்ற/தகுதிபெற்ற |
|---|---|
| திரு.சானுர விஜேதிலக (தலைவர்) | 4/4 |
| திரு அஸ்சாம் அஹமத் | 4/4 |
| திரு கிளைவ் /போன்சேகா | 4/4 |
| திரு. ஷமிந்திர மெர்சலின் | 2/2 |
| திரு.ஏ.எஸ்.இப்ராஹிம் | 2/2 |
| திரு. சஞ்சீவ பண்டாரநாயக்க | 4/4 |
| திரு. லயனல் பெர்னாண்டோ | 4/4 |
| திரு ரொஹான் தென்னகோன் | 4/4 |

## பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடல்

கலந்துரையாடல்கள் மற்றும் எட்டப்பட்ட முடிவுகள் உள்ளடங்கிய குழுவின் கூட அறிக்கைகள், உறுதி படுத்துதலுக்காகவும், நடைமுறைப்படுத்துவதற்காகவும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க படுகின்றன. கூட்டத்தின் சகல அறிக்கைகளும் குழுவின் தலைவரால் முறையாக அங்கீகரிக்கப்பட்டு அவ் அறிக்கைகளும் அவர்களின்கருத்துக்கள், இணக்கம் மற்றும்/அல்லது குறிப்பிட்ட வழிகாட்டல்களுக்காக BIRMC கூட்டம் நடைபெற்று ஒரு வாரத்துக்குள் சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.

## செயல்பாடுகள்

நிறுவனத்தின் தொழில் செயல்பாடுகளை நடத்திச் செல்லும்போது எதிர்நோக்கும் உள்ளக மற்றும் வெளிப்புற அபாயங்களை மேற்பார்வை செய்வதற்காக ஊஜசுஆஊ வினைத்திறனாக சபைக்கு வினைத்திறனாக துணைபுரிந்தது. மாதாந்த குழு கூட்டங்களின் பொது மீளாய்வுக்கு உற்படுத்தப்பட்ட முக்கிய அபாய குறிக்கட்டிகள் மூலம் முக்கிய அபாயங்கள் கண்டறியப்பட்டன.

### முக்கிய கலந்துரையாடல் பகுதிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட நேரம்




- விரிவான அபாய மீளாய்வு - PLC துணை நிறுவனங்கள்
- ALCO தொடர்புடைய
- EIRMC தொடர்புடைய
- இணக்கம் தொடர்புடைய
- கொள்கை மீளாய்வு
- குறிப்பிட்ட அபாயங்கள் தொடர்புடைய

## ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவம்

- வருடாந்த மீளாய்வி செயப்பாடுகளின் ஒரு பகுதியாக, 2020 ஜூன் மாதத்தில் அபாய சகிப்புத்தன்மை அறிக்கையை குழு மீளாய்வுச் செய்தது. பீபிள்ஸ் லீசிங்கின் அபாய சுயவிவரக்குறிப்புகள் காலாண்டு தோறும் குறிக்கப்பட்ட அபாய சகிப்புத்தன்மையுடன் மேலவுச் செய்யப்படும்.
- ICT அபாய கணிப்பு முறைமையை மீளாய்வுச் செய்து பரிந்துரைகள் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டது
- பீபிள்ஸ் லீசிங் மற்றும் துணை நிறுவனங்களின் காலாண்டு அபாய அறிக்கைகளை (அபாய டேஷ் போர்டு / அபாய குறிகாட்டி அறிக்கைகள்) மீளாய்வுக்கு உற்படுத்தப்பட்டது.

## முகாமைத்துவ நிலை குழுக்களின் மதிப்பீடு

- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் (ALCO) குழுவின் வுழுசு அடிப்படையில் அதன் வருடாந்த மதிப்பீட்டை மேற்கொண்டு மற்றும் அதன் கூட்ட அறிக்கைகளை ஆராய்ந்து அதன் செயல்பாடுகளின் வினைத்திறனையும் பொதுமையையும் மீளாய்வுச் செய்யப்பட்டது..
- முக்கியமாக கடன் மற்றும் செயப்பாட்டு அபாய தகவல் உள்ளடங்கிய நிறைவேற்று ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழுவின் (EIRMC) கூட்ட அறிக்கைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் குழுவின் செயல்பாடுகளின் வினைத்திறன் மதிப்பிடப்பட்டது.

### கடன் அபாயம்

- COVID-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு எதிர்கொண்ட சமூக பொருளாதார சவால்களுக்கு மத்தியில் தொழில்துறையின் கடன் தரத்தின் சீரழிவு தொடர்பாக குழு முக்கியமாக கவனம் செலுத்தியது
- துறை வாரியாக கடன் செறிவு மற்றும் தனிப்பட்ட நபருக்கான கடன் வரம்புகளுக்கு இணங்குதல் போன்ற ஏனைய கடன் ஆபத்து குறிகாட்டிகளோடு சொத்துக்கள் மற்றும் தயாரிப்புகளின் அடிப்படையில் இயங்கா கடன் பகுப்பாய்வு மூலம் கடன் தொகுதியின் தரம் மீளாய்வுச் செய்யப்பட்டது.
- நிறுவனத்தின் சொத்துக்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக குழு விரிவாக கலந்தாலோசித்தது.
- நிறுவனத்தின் மார்ஜின் வர்த்தக தயாரிப்பு தொடர்பான கடன் கொள்கை மற்றும் செயல்முறை மீளாய்வுக்கு உற்படுத்தப்பட்டன.
- கடன் அபாய முகாமைத்துவம் தொடர்பாக EIRMC மேற்கொண்ட கலந்துரையாடல்கள் மீளாய்வுச் செய்யப்பட்டன..

### பணப்புழக்கம் மற்றும் சந்தை அபாயம்

- பேணப்படும் திரவ சொத்துக்களின் பொதுமை மற்றும் பொருத்தமற்ற முதிர்வு நிலை, உணர்திறன் பகுப்பாய்வு, மற்றும் வட்டி விகிதங்கள் விலைமதிப்பு இடைவெளிகள் என்பவை மீளாய்வுச் செய்யப்பட்டது.
- திரவத்தன்மை அழுத்த சோதனை மற்றும் அவசர நிலை நிதிவழங்களின் பொதுமை மீளாய்வுச் செய்யப்பட்டது.
- பணப்புழக்க மற்றும் சந்தை அபாயங்கள் முகாமைத்துவத்தின் வினைத்திறன் மதிப்பீட்டுக்காக வழங்கப்பட்ட ALCO குழுவின் கூட்டறிக்கைகளை மீளாய்வுச் செய்தல்..

### செயல்பாட்டு அபாயம்

- மனிதவள மற்றும் மோசடிகள் தொடர்பாக நிறுவப்பட்டுள்ள அபாய குறிகாட்டிகளை மீளாய்வுச் செய்தல்.
- உள்ளக கட்டுப்பாடு அமைப்பின் வலிமையின் அடிப்படையில் தேமணிக்கப்பட்ட திருப்தியற்ற கணக்காய்வு தரப்படுத்தல்களை கொண்ட நிலைகளை மீளாய்வுச் செய்தல்.
- தொற்றுநோய் மற்றும் சைபர் பாதுகாப்பு கவனங்கள் காரணமாக செய்யப்பட்டு அபாயங்கள் மீதான கவனம் அதிகரிக்கப்பட்டது.

### தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு அபாயங்கள்

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பாக நிறுவப்பட்டுள்ள முக்கிய செயல்பட்டு அபாய குறிகாட்டிகளை மீளாய்வு செய்தல்.
- வீட்டிலிருந்து பணியாற்றும் செயல்பாட்டிற்கு உடனடியாக மாற்றமடைதல் மற்றும் சைபர் பாதுகாப்பு அபாயங்களை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகாணும் திட்டங்களின் செயல்திறன் மற்றும் பொதுமை தொடர்பாக எழும் அபாயங்களை மீளாய்வுச் செய்தல்.
- ICT செயல்பாடுகள் தொடர்பான சொத்துக்கள் வகைகளின் எண்ணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ICT அபாய மதிப்பீட்டினை மேலாய்வுச் செய்தல்.

### வணிக தொடர்ச்சி

- வணிக தொடர்ச்சி திட்டத்தை செயல்கள் மற்றும் அனர்த்த மீட்பு திட்டங்களின் பொதுமை தொடர்பாக மீளாய்வுச் செய்தல்.
- நிறுவனத்தை நேர முக்கிய தொழில் செயல்பாடுகள் உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்ட டீஊீ செயல்முறை பயிற்சிகளின் முன்னேற்றத்தை கண்காணித்தல்.

### ஒழுங்குமுறை மற்றும் இணக்கப்பாட்டு அபாயம்

- ஒழுங்குமுறை தேவைகளுடன் நிறுவனத்தின் இணக்கத்தை மதிப்பிடுவதற்கு இணக்க செயல்பாட்டின் செயல்திறன் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன், அபாய சகிப்புத்தன்மை நிலைகளுக்கு அமைவாக கண்காணிக்கப்படுகிறது.
- சட்டங்கள், விதிமுறைகள், ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள், உள் கட்டுப்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் செயல்பாடுகள் தொடர்பான சகல பகுதிகளிலும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடனான நிறுவனத்தின் இணக்கப்பாடு தொடர்பாக மதிப்பிடுவதற்காக இணக்கப்பாட்டு உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கப்பாட்டு அறிக்கைகளை மீளாய்வுச் செய்தல்.
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சமீபத்திய பணிப்புரைகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களை மீளாய்வுச் செய்தல்.
- நிறுவனத்தின் தயாரிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பண தூய்மையாக்கள் மற்றும் பயங்கரவாத நிதியிடல் அபாய மதிப்பீட்டினை மேலவுச் செய்து பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- வருடாந்த கூட்டாண்மை இணக்கப்பாட்டு திட்டத்தை மீளாய்வுச் செய்து, பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக சமர்ப்பித்தல்

### மூலோபாய அபாயம்

- வணிகச் சூழலின் மாற்றங்களுக்கு பதிலளிப்பதற்காக நடைமுறை படுத்தப்பட்ட மூலோபாயங்களின் செயல்திறனை மீளாய்வுச் செய்தல்.
- நிர்ணயிக்கப்பட்ட அபாய சகிப்புத்தன்மை அளவுகளுக்கு இணையாக, மூலோபாய அபாய குறிகாட்டிகளை மீளாய்வுச் செய்தல்..

### துணை நிறுவனங்களின் அபாய விவரங்களை மதிப்பீடு செய்தல்

மேலாய்வுக்கு உள்ளாகும் ஆண்டில், 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரையின் 8 (3) (டி) பிரிவுக்கு அமைவாக பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் ஒவ்வொரு துணை நிறுவனங்களின் மற்றும் அதன் ஒட்டுமொத்த குழுமத்தின் அபாய விவரங்களை மீளாய்வுக்கு உற்படுத்துவதற்கு வசதியளிக்கும் முகமாக, கீழ்வரும் துணை நிறுவனங்கள் தமது அபாய டேஷ் போர்டு ஃ முக்கிய அபாய குறிகாட்டி அறிக்கைகளை டீஐசுஆஊ க்கு சமர்ப்பித்துள்ளது. துணை நிறுவனங்களின் மீளாய்வுகளின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு.

### பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் பீஎல்சி (PI)

- குழுவினால் காப்புறுதி தரம், முதலீடு அவதானிப்புகள், அத்துடன் தவணை செலுத்தாமை அபாயம், செயல்பட்டு அபாயம், மூலோபாய அபாயம், இணக்கப்பாடு அபாயம் என்பவை காலாண்டு அடிப்படையில் மீளவும் உற்படுத்தப் பட்டன.
- இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை படுத்தல் ஆணைக்குழுவினால் (முன்னாள் இலங்கை காப்புறுதிச் சபை) அபாய அடிப்படையிலான மூலதன மாதிரியுடன் இணக்கப்பாட்டை குழு மீளாய்வுவ்ஹ் செய்தது.
- நிறுவனத்தின் எதிர்கால மூலோபாயங்களை குழு கலந்தாலோசித்து மீளாய்வுக்கு உற்படுத்தியது.

### பீப்பிள்ஸ் மைக்ரோ கமெர்ஸ் லிமிடட் (PML)

- பல்வகையான அபாய சூழ்நிலைகளில் இயங்கும், குறைந்த வசதிகளைக் கொண்ட, கிராமிய மற்றும் நகர்ப்புற மக்களின் நிதியிடல் வசதிகளை உறுதிசெய்து, அவர்களுக்கு நுண்நிதி வசதிகளை வழங்கும் செயல்பாட்டில் PML ஈடுபட்டுள்ளது..
- நிர்ணயிக்கப்பட்ட அபாய சகிப்புத்தன்மை அளவுகளுடன் நிறுவனத்தின் அபாய விவரங்களை குழு காலாண்டு அடிப்படையில் மீளாய்வுச் செய்கின்றது.
- நிறுவனத்தின் எதிர்கால மூலோபாயங்களை குழு கலந்தாலோசித்து மீளாய்வுக்கு உற்படுத்தியது.

### பீப்பிள்ஸ் லீசிங் பிளீட் மேனேஜ்மென்ட லிமிடட் (PLFML)

- வாகன இயக்க குத்தகைகள், மதிப்பீட்டு சேவை மற்றும் வாகன வாடகை சேவை PLFML நிறுவனத்தின் சேவைகளில் உள்ளடங்குகின்றது.
- PLFML யினால் வழங்கப்பட்ட அபாய டாஷ்போர்டு மற்றும் முக்கிய அபாய குறிகாட்டி அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் BIRMC மீளாய்வுச் செய்தது.
- நிறுவனத்தின் எதிர்கால மூலோபாயங்களை குழு கலந்தாலோசித்து மீளாய்வுக்கு உற்படுத்தியது.

### லங்கா அல்லயன்ஸ் பைனான்ஸ் லிமிடெட் (LAFL) - (பீப்பிள்ஸ் லீசிங் பங்களாதேீ துணை நிறுவனம்)

- LAFLனால் வழங்கப்பட்ட அபாய டாஷ்போர்டு மற்றும் முக்கிய அபாய குறிகாட்டி அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் டீஐசுஆஊ மீளாய்வுச் செய்தது.
- LAFL பிரதம நிறைவேற்று அதிகாரி வீடியோ கான்பரன்சிங் மூலம் கூட்டங்களில் கலந்துகொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் அபாய தணிப்பு மூலோபாயங்கள் தொடர்பாக விளக்கமளித்தார்.

### சொத்து அபிவிருத்தி துணை நிறுவனங்கள்

- பீபிள்ஸ் லீசிங் ப்ரொபேர்ட்டி டெவெலப்மெண்ட் லிமிடெட் மற்றும் பீப்பிள்ஸ் லீசிங் ஹவ்லொக் ப்ரொபேர்ட்டிஸ் லிமிடெட் நிறுவனங்கள் சமர்ப்பித்த அபாய குறிகாட்டி அறிக்கைகளை குழு மீளாய்வுச் செய்தது
- இந்த நிறுவனங்களின் குடியிருப்பு விவரங்கள் உற்பட்ட செயல்பாடுகள் குழுவினால் மீளாய்வுக்கு உட்படுத்த பட்டன.

# சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு அறிக்கை

அபாய மற்றும் கட்டுப்பாடு பிரிவு மேல்குறிப்பிட்ட துணை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பல்வேறு அபாய குறிகாட்டிகள் மூலம் பெறப்பட்ட தகவல்களையும் மேலதிக விவரங்களையும் குழுவிற்கு தெளிவு படுத்தியது.

## ஏனைய தகவல்கள்

- கூட்டாண்மை முகாமைத்துவம், உயர் முகாமைத்துவம் மற்றும் முக்கிய முகாமைத்துவ பணியாளர்களுடன் நெருக்கமாக செயல்பட்டு, பரந்தளவிலான அபாய வகைகளை (கடன், சந்தை,
- பணப்புழக்கம், செயல்பாட்டு மற்றும் மூலோபாய அபாயங்கள்) கண்காணித்ததுடன், வழங்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் அதிகார எல்லைகளினுள் பணிப்பாளர் சபை சார்பாக தீர்மானங்களை மேற்கொண்டது.
- அபாய முகாமைத்துவ மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் தொடர்பான ஒருங்கிணைந்த அபாய முழுமைத்துவ பொறுப்புகள் செயல்முறைகமை கண்காணித்தல்.
- நிறுவன கொள்கைகள், ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை தேவைகளின் அடிப்படையில் நிறுவப்பட்ட அபாய சகிப்புத்தன்மை வரம்புகளை மீறும் குறிப்பிட்ட அபாய தாக்கங்களை தணிக்கும் திருத்த செயல்பாடுகளை பரிந்துரைத்தல்..

மீளாய்வுக்கு உள்ளாகும் ஆண்டில், நிறுவனத்தின் மற்றும் குழுமத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கீழ் மட்டத்தின் மற்றும் மேல் மட்டத்தினாலான அபாயங்களை வலியுறுத்தும் ஒட்டுமொத்த தொழில் மூலோபாயங்களின் மூலம் அபாய சகிப்புத்தன்மையை உருவாக்குவதில் BIRMC தனது ஆதரவுகளை வழங்கியது..

## பாராட்டுக்கள்

கடந்த பல வருடங்களாக எமது குழுவிற்கு தனது மதிப்புமிக்க பங்களிப்பை வழங்கிய திரு சபரி இப்ராஹிம் அவர்களுக்கும் மற்றும் திரு திரு நிமல் பெரேரா (டிசம்பர் 2020 இல் ஓய்வு பெற்ற தொழில்நுட்ப ஆலோசகர்) அவர்களுக்கும் சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது.



**சானுர விஜேதிலக்க**
*தலைவர்*
*சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு*

07 ஜூலை 2021

# அபாய முகாமைத்துவ மீளாய்வு

GRI 102-15

## கண்ணோட்டம்

நிகழக்கூடிய அச்சுறுத்தல்களை அடையாளம் காணுதல், அபாய தணிப்பு மூலோபாயங்களை வரையறுத்தல், மற்றும் இந்த மூலோபாயங்களின் வினைத்திறனை மேற்பார்வை செத்தல் என்னு செயமுறைகளை விரிவாக வெளிப்படுத்தும் அபாய முகாமைத்துவ கட்டமைப்பொன்றை பீப்பிள்ஸ் லீசிங் கொண்டுள்ளது. கணிக்கப்படும் அபாயங்களை அனுமானித்தல், துல்லியமாக தயாரிப்புகளுக்கு விலை நிர்ணயித்தல் மற்றும் அபாய தொகுப்பை விவேகமாக முகாமைத்துவம் செய்தல் என்பவற்றுக்காக வினைத்திறனான அபாய முகாமைத்துவம் மிகவும் முக்கியமாகும்.




ஒரு நிதி நிறுவனமாக பீப்பல்ஸ் லீசிங், உள்ளக மற்றும் வெளிப்புற சூழல்களிலிருந்து மேலெழும் கடன், பணப்புழக்கம் சந்தைமற்றும் செயல்பட்டு போன்ற அபாயங்களை அடிப்டையாகவே வெளிப்படுகின்றது. இந்த ஆண்டு எம் அனைவருக்கும் ஒழுங்கற்ற ஒரு ஆண்டாக அமைந்ததுடன் உலகளாவிய தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் வாடிக்கையாளர்களுக்கு எமது சேவைகளை வழங்குவதற்காக எம்மையே சீரமைத்துக்கொள்ளும் தேவை ஏற்பட்டது. இலங்கையின் நிலைமை மேலும் தீவிரமாகும் போக்கு காணப்பட்டதனால், 2020 மார்ச் மாதத்தில் அரசாங்கம் நாடளாவிய முடக்கல் ணடவடிக்கையினை அறிவித்தது. மந்தமான பொருளாதார மீளெழுச்சிக்கு வழிவகுத்த, 2020 மே மாதத்தில் இது தார்த்தப்பட்டது. ஆனாலும் 2020 நவம்பர் இல் இலங்கை ஊழுஏஐனு - 19 இரண்டாம் அலைக்கு முகம்கொடுத்ததுடன், இதன் விளைவாக ஒருளாதார வளர்ச்சியை தாக்கும் வகையில் மேல் மாகாணம் உற்பட நாட்டின் பல பாகங்கள் மீண்டும் முடக்கப்பட்டது. 2021 ஜனவரி மதத்திலிருந்து வணிகங்கள் இழப்புகளை மீளப்பெறுவதை ஆரம்பித்து. முடக்கல் நடவடிக்கைகள், சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் போக்குவரத்துக்கு கட்டுப்பாடுகள் நேரடியாக வாடிக்கையாளர்களையும் அதனூடாக எம்மையும் பாதிப்புக்கு உள்ளாக்கியது. ஒன்லைன் மற்றும் சமூக வளையங்களின் மூலம் வாடிக்கையாளர்கள் அணுகுவதற்கும், ஒன்லைன் மூலம் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுவதற்கும் வசதிகளை வழங்கி எமது செயல்பாடுகளை நாம் மாற்றியமைத்தோம். எமது ஊழியர்கள் வீடுகளிலிருந்து பணியாற்றினார். கடன் செயல்பாடுகள் மாற்றமடைந்து சவாலான நிலையில் எமது வாடிக்கையாளர்களுக்கு துணைநிற்பதற்காக கடன் சலுகைகள் மற்றும் பிற்போடுத்தல்கள் மீது எமது கவனம் திரும்பியது. இந்த மாற்றங்களின் காரணமாக புதிய அபாயங்கள் கண்டறியப்பட்டன. அத்துடன் ஏற்கனவே இருந்த அபாயங்கள் மீளாய்வுக்கு உற்படுத்தப் பட்டன.




## முக்கிய அபாயங்களின் கண்ணோட்டம்

| அபாய வகை | கடன் குறிகாட்டி | அலகு | அதிகபட்ச அபாய சகிப்புத்தன்மை வரம்பு | 31.03.2021 இல் நிலை | 31.03.2020 இல் நிலை |
|---|---|---|---|---|---|
| கடன் அபாயம் | செயல்படாத கடன் விகிதம் (மொத்த)ழூ | % | <5 | 8.62 | 7.62 |
| | மூன்று மாத தாமத விகிதம் (மொத்த) | % | <10 | 11.13 | 20.34 |
| | லாபம் மற்றும் இழப்பு கட்டண விகிதம் (லாபத்தில்) | % | <20 | 20.56 | 58.61 |
| கடன் செறிவு அபாயம் | ஒற்றைஃகுழு கடன் வரம்பு | ரூ.பில்லியன் | CBSL படி | இணங்கியது | இணங்கியது |
| | ர்ர்ஜ மதிப்பெண் | புள்ளிகள் | <0.40 | 0.22 | 0.22 |
| பணப்புழக்க அபாயம் | திரவ சொத்து விகிதம் | % | >100 | 194.90 | 110.59 |
| | முதிர்வு பொருந்தாத விகிதம் (ஒரு வருடம் வரை) | % | >-45 | -31.93 | -21.94 |
| | நிலையான மூலங்களிலிருந்து வழங்கப்படும் வசதிகள் | % | <150 | 106.71 | 105.29 |
| | திரவ சொத்துக்களுக்கு குறுகிய கால பொறுப்பு விகிதம் | % | >30 | 155.40 | 203.57 |
| | அதிகபட்ச ஒற்றை வைப்புத்தொகை செறிவு | % | <5 | 4.11 | 4.20 |
| | மொத்த வைப்புகளுக்கு வெளிப்பாடு (ரூ. 50 மில்லியனுக்கும் மேல்) | % | <20 | 21.61 | 24.17 |
| சந்தை அபாயம் | வட்டி விகிதங்கள் உறுதிப்பாடு | % | <6 | -0.43 | 0.29 |
| | விலை இடைவெளி விகிதம் (மூன்று மாதங்கள் வரை) | % | >-20 | 1.72 | 4.13 |
| செயல்பாட்டு அபாயம் | கண்டறியப்பட்ட மோசடிகள் (செயல்பாட்டுச் செலவினங்களின் மதிப்பு) - FY2020/21 | % | <0.5 | 0.18 | Nil |
| | திருப்தியற்ற தணிக்கைகள் (மொத்த தணிக்கை மதிப்புரைகளின் விகிதமாக) | % | <15 | Nil | 8.70 |
| | வருமான விகிதத்திற்கான செலவு | % | <50 | 41.32 | 36.53 |
| | ஊழியர்களின் வருவாய் விகிதம் (ஆண்டு) | % | <15 | 6.52 | 9.18 |
| ஒழுங்குமுறை அபாயம் | மூலதன போதுமான விகிதங்கள் | | | | |
| | அடுக்கு மூலதன விகிதம் | % | >6 | 17.72 | 15.12 |
| | மொத்த மூலதன விகிதம் | % | >12.5 | 18.58 | 15.99 |
| | மூலதன நிதி விகிதம் | % | >12.5 | 33.83 | 28.35 |
| மூலோபாய அபாயம் | ஈக்விட்டி விகிதத்தில் வருமானம் | % | >15 | 12.49 | 10.00 |
| | சொத்து விகிதத்தின் மீதான வருவாய் | % | >3.5 | 3.49 | 2.64 |
| | நிகர வட்டி விளிம்பு | % | >7.5 | 7.58 | 9.68 |
| | கியர் விகிதம் (மொத்தகடன்களுக்கான மொத்த சொத்துக்கள்) | Times | <7 | 3.55 | 4.38 |

*எதிர்கால வட்டி அடங்கும்

### அபாய பரப்பெல்லை

COVID 19 தொற்றுநோய் மூலம் கொண்டுவரப்பட்ட முன்னர் எப்போதுமே நிகழாத அதேபோன்று நிச்சயமற்ற தன்மையின் சவால்கள் இந்த நிதி ஆண்டு பூராகவும் காணப்பட்டது. உள்நாட்டில் COVID-19 பரவுதல் உற்பட ஒன்றிணைந்த காரணிகள் காரணமான உலகளாவிய அளவிலான முடக்கல் நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார மந்தநிலை, நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும், எமது செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கும், ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மேலோங்குவதற்கும் , மற்றும் வாடிக்கையாளர்களின் அத்துடன் ஊழியர்களின் சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பாக தீர கவனம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுவதற்கும் காரணமாகியது. இந்த நிலைமைகளினால் எழுந்த அபாயங்கள் மற்றும் அவற்றுக்காக எடுக்கப்பட்ட தணிப்பு நடவடிக்கைகளு கீழ்வருமாறு

### வெளிப்புறமாக இயக்கப்படும் அபாயங்கள்

| அபாயம் | தாக்கம் | தணிப்பு நடவடிக்கைகள் |
|---|---|---|
| **COVID - 19 தொற்றுநோய் பரவுதலை தடுப்பதற்காக செயல்படுத்தப்பட்ட நாடளாவிய முடக்கல் மற்றும் பயண கட்டுப்பாடு நடவடிக்கைகள் எமது வெளியீடுகள் மற்றும் செயத்திறனை எதிர்மறையாக பாதித்தது** | ○ கூட்டாண்மை துறையின் குறைந்த லாபம் குடும்பங்களின் வருமானத்தை பாதித்தது<br>○ கடன் மீள செலுத்துவதற்கான கூட்டாண்மைகளின் மற்றும் தனி நபர்களின் இயலளவு குறைவடைந்து | ○ CBSL வழிகாட்டல்களுக்கு ஐ வட்டி அமைவாக பாதிக்கப்பட்ட தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் கூட்டாண்மைகளுக்கு கடன் பிற்போடுதல் மற்றும் சலுகை வட்டி விகிதங்களில் கடன் வசதிகள் வழங்கப்பட்டன.<br>○ CBSL இன் கட்டாய சலுகைகளுக்கு தகுதிபெறாதவர்களுக்கு பீப்பிள்ஸ் லீசிங் தனிப்பட்ட சலுகைகளை வழங்கியது |
| **எங்கள் ஊழியர்களின் மற்றும் வாடிக்கையாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை கோவிட் -19 பரவுதலுடன் சமரசம் செய்யப்படலாம்** | ○ வாடிக்கையாளர்களுடன் குறைந்தபட்ச தொடர்பு காரணமாக தனிப்பயனாக்கப்பட்ட நேருக்கு நேர் சேவைகள் பாதிக்கப்பட்டன<br>○ நிறுவனம் குறைந்தபட்ச ஊழியர்களுடன் செயல்பட வேண்டியதாக இருந்தது | ○ தடைகளற்ற வாடிக்கையாளர் சேவை வழங்குதலுக்காக ஒன்லைன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டன<br>○ நுகர் கொள்கையின்படி நுகர் ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன், ஊழியர்கள் சேவைக்கு சமூகமளிப்பதற்காக சுழற்சி முறைமையொன்றை அறிமுகப்படுத்தப் பட்டது |
| **நிதி சேவையால் துறை மிகவும் அழுத்தத்துக்கு உள்ளாகியது.** | ○ கடன் தொங்கி வளர்ச்சி குறைந்தது<br>○ NPL கள் மற்றும் சேத இழப்பு ஒதுக்கீடுகள் அதிகரித்தன | ○ தொழில் வளர்ச்சிக்காக மூலோபாயங்களை செயல்படுத்துதல் மற்றும் கடன் மீள பெறுவதற்கான நடவடிக்கைகளை வலுப்படுத்தல்<br>○ கடுமையான முன் கடன் அனுமதி மற்றும் பின் கடன் கண்காணிப்பை பின்பற்றுதல் |
| **கொள்கை ரீதியாக வட்டி விகிதங்களை மற்றும் கட்டாய ஒதுக்கு விகிதத்தை குறைப்பதன் மூலம் பொருளாதார மீளெழுச்சிக்காக மத்திய வாங்கி பின்பற்றிய அனுசரணையான நிதி கொள்கை காரணமாக பண வைப்புகளின் வட்டி விகிதங்கள் குறிப்பிடத்தக்கதாக வீழ்ச்சியடைந்தது.** | ○ வைப்பாளர்கள் கூடுதல் வருமானம் ஈட்டுவதற்காக வைப்புகளை பெற்றுக்கொள்ளும் அனுமதியற்ற நிறுவனங்களை நோக்கி அல்லது பங்குச் சந்தையை நோக்கி சென்றனர்.<br>○ குறைந்த வட்டி விகிதங்களினால் விளிம்புகள் மீதான அழுத்தம். | ○ சந்தை வட்டி விகித அசைவுகளை தீவிரமாக கண்காணித்த, வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக எமது தயாரிப்புகளை அதற்கேற்ப மறு விலை நிர்ணயம் செய்தல் |
| **மத்திய வங்கியினால் குறைந்தபட்ச ஒதுக்கீட்டு தேவைகளை குறைத்ததனால் பேகுஜ துறையில் கூடுதல் பணப்புழக்கம் ஏற்பட்டது.** | ○ பீப்பிள்ஸ் லீசிங்கில் அதிக பணப்புழக்கம் எதிர்மறை முன் கொண்டுசெல்லலை உருவாக்குகிறது | ○ வைப்பு வெளியேற்றத்தை ஊக்குவித்தல்<br>○ தொழில் விரிவாக்கலுக்காக முதலீடு செய்ய கொள்கை ரீதியான தீர்மானமொறை எடுக்கப்பட்டதுடன் அதன் விளைவாக தொழில் அளவுகள் அதிகரிப்பு ஏற்படும் |
| **பொருளாதார வளர்ச்சியில் மந்தநிலை** | ○ சாதகமற்ற கடன் சூழல்<br>○ கடன் கேள்வி குறைவு | ○ பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்படுகின்ற துறைகளுக்கு கடன் வழங்குவதில் எச்சரிக்கையுடன் செயல்படுதல் |
| **மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கான அரசாங்க கட்டுப்பாடுகள்** | ○ உள்ளூர் சந்தையில் வழக்கத்திற்கு மாறான வாகன விலை உயர்வு | ○ ஊழியர்கள் மத்தியில் உண்மையான வாகன விலைகள் பற்றிய விழிப்புணர்வை கட்டியெழுப்புதல் (வாகன விலைமதிப்பு டாஷ்போர்டு)<br>○ அகற்றல் மூலம் இழப்புகளைக் குறைப்பதற்கான வாய்ப்பைப் பயன்படுத்துதல் |
| **தொற்றுநோய்க்கு முந்தைய நடத்தையிலிருந்து வாடிக்கையாளர்களின் தேவை முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம்** | ○ இணையதள மற்றும் கையடக்க தொலைபேசி மூலமான வங்கியிலுக்கான வாடிக்கையாளர் விருப்பம் சமூக இடைவெளி பேணுதலுக்கு வசதியளித்தது. | ○ 'பிஎல்சி ஆன்லைன்' ஊக்குவிக்கப்பட்டது |

## அபாய முகாமைத்துவத்திற்கான ஒரு கட்டமைப்பு

### அபாய ஆளுகை

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் சபை அளவிலான குழுக்கள் | **சபையின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு (BIRMC)**<br>பங்கு : நிறுவனத்தின் ஃ குருவின் ஒட்டுமொத்த அபாய விவரங்களை மதிப்பாய்வு செய்தல் | **சபையின் கணக்காய்வு குழு (BAC)**<br>பங்கு: நிதி நடிகைகளை மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை மேற்பார்வை செய்தல். மேலும், கணக்காய்வாளர்களின் சுதந்திரத்தை கண்காணித்தல். |
| முகாமைத்துவ அளவிலான குழுக்கள் | **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவ குழு (ALCO)**<br>பங்கு: நிறுவனத்தின் திறைச்சேரி, சொத்து மற்றும் பொறுப்பு செயல்பாடுகளை மீளாய்வுச் செய்தல் | **நிறைவேற்று ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவ குழு (EIRMC)**<br>பங்கு: கடன் தொடர்புடைய மற்றும் செயல்பாட்டு அபாயங்களை மீளாய்வுச் செய்தல் |

### கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்

**பணிப்பாளர் சபை**

**1 வது பாதுகாப்பு வரி**

நாளாந்த அபாய முகாமைத்துவம்
- பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவம்
- தலைமை அலுவலக பிரிவுகள்
- கிளை நிலை செயல்பாடுகள்

**2 வது பாதுகாப்பு வரி**

அபாய முகாமைத்துவம்
- BIRMC
- EIRMC
- ALCO
- அபாய பிரிவு தலைவர்
- இணக்க அதிகாரி

**3 வது பாதுகாப்பு வரி**

சுயாதீன உத்தரவாதம்
- BAC
- உள்ளக கணக்காய்வு
- வெளிப்புற கணக்காய்வு

### அபாய முகாமைத்துவ செயல்முறை

**அபாய மதிப்பீடு**

சூழலை நிறுவுதல் → அபாயத்தை அடையாளம் காணுதல் → அபாயத்தை பகுப்பாய்வு செய்தல் → அபாயத்தை மதிப்பிடுதல் → அபாய சிகிச்சை → கண்காணிப்பு மற்றும் மீளாய்வு

| கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் | அபாய சகிப்புத்தன்மை | அபாய கலாச்சாரம் |
|---|---|---|
| ஒரு வலுவல கொள்கை கட்டமைப்பை நிறுவுதல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். ஆண்டினுள் சபையினால் பல புதிய கொள்கைகள் உருவாக்கப்பட்டு அனுமதிக்க பட்டன. செயல்பாட்டு மற்றும் ஒழுங்குமுறைச் சூழல்களின் மாற்றங்கள் காரணமாக தற்போதுள்ள கொள்கைகள் மீளாய்வுக்கு உற்படுத்தி ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் அவற்றுக்காக சபையின் அனுமதியை பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டன. | அபாய சகிப்புத்தன்மையை நிர்ணயிப்பது சபையின் பொறுப்பாகும். அதை செயல்படுத்தப் படுவது முகாமைத்துவத்தால் உறுதிப்படுத்துகின்றது. தமது தொழில் நோக்கங்களை அடைவதற்காக நிறுவனம் தாங்கிக்கொள்ளும் அபாய அளவு, அபாய சகிப்புத்தன்மையை மற்றும் தாங்கிக்கொள்ளும் எல்லைகளையும் தீர்மானிக்கின்றது. மூலோபாய நோக்கங்கள், இயங்கும் சூழல், ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் மூலதனத் திட்டங்களின் மாற்றங்களுக்கு ஏற்ப அபாய தாங்கிக்கொள்ளு அளவை குறைந்தபட்சம் ஆண்டிற்கு ஒருமுறை மஜசுஆஉஊ மீளாய்வுக்கு உற்படுத்துகின்றது. | ஒரு திடமான அபாய கலாச்சாரம், ஊழியர்களின் அபாய விழிப்புணர்வு மற்றும் அபாயம் தொடர்பான தகவலறிந்த தீர்மானங்களின் மூலம் வெளிப்படுகின்றது. பீப்பிள்ஸ் லீசிங்கின் அபாய கலாச்சாரமானது, அதன் அபாய ஆளுகை கட்டமைப்பு, அபாய சகிப்புத்தமை, அபாய கொள்கை, அபாய முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் மீது கட்டியமைக்கப் பட்டுள்ளது. நிறுவனத்தை அபாய மற்றும் கட்டுப்பாடு பிரிவு ஊழியர்களுக்கு தேவையான பயிற்சி மற்றும் விழிப்புணர்வை வழங்குகிறது. |

## குழுக்களின் செயல்பாடுகள்

| பணிப்பாளர் சபை மட்டத்தில் | |
|---|---|
| **BIRMC** | **BAC** |
| தலைமைத்துவம் : நிறைவேற்றல்லாத, சுயாதீன பணிப்பாளர் | தலைமைத்துவம் : நிறைவேற்றல்லாத, சிரேட்ட சுயாதீன பணிப்பாளர் |
| **உறுப்பினர்கள் :**<br>இரண்டு நிறைவேற்றல்லாத, சுயாதீனமல்லாத பணிப்பார்கள், CEO/GM, இரண்டு சிரேட்ட பிரதி பொது முழுமையாளர்கள், பிரதி பொது முகாமையாளர் - அபாய மற்றும் கட்டுப்பாடு .<br>வழமையாக அழைக்கப்படுபவர்கள் : பிரதி பொது முழுமையாளர் - சந்தைப்படுத்தல், பிரதி பொது முழுமையாளர் - கடன் மீட்பு மற்றும் நிர்வாகம், பிரதி பொது முழுமையாளர் - உள்ளக கணக்காய்வு, பீப்பிள்ஸ் லீசிங் துணை நிறுவன பிரதிநிதிகள். | **உறுப்பினர்கள்:**<br>மூன்று நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள்.<br>அழைக்கப்படுபவர்கள் : முக்கிய முகாமைத்துவ பணியாளர்கள், வெளிப்புற கணக்காய்வாளர்கள் |
| **பிரதான செயல்பாடுகள்**<br>நிறுவனம்ஃகுழுவின் ஒட்டுமொத்த அபாய சுயவிவரத்தை மதிப்பாய்வு செய்தல் | **பிரதான செயல்பாடுகள்**<br>நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு மேற்பார்வை ,மற்றும் கணக்காய்வாளர் சுதந்திரத்தை கண்காணித்தல் |
| **கூட்ட இடைவெளி :**<br>காலாண்டு | **கூட்ட இடைவெளி :**<br>காலாண்டு |
| **அறிக்கையிடல்:**<br>BIRMC கூட்ட அறிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தல்<br>*(BIRMC யின் விரிவான அறிக்கை பக்கங்கள் 150 முதல் 152 வரை கொடுக்கப்பட்டுள்ளது)* | **அறிக்கையிடல்:**<br>BAC கூட்ட அறிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தல்<br>*(BAC யின் விரிவான அறிக்கை பக்கங்கள் 150 முதல் 152 வரை கொடுக்கப்பட்டுள்ளது)* |
| **முகாமைத்துவ மட்டத்தில்** | |
| **ALCO** | **EIRMC** |
| தலைமைத்துவம் *CEO/GM* | தலைமைத்துவம் : பிரதி பொது முகாமையாளர் - அபாய மற்றும் கட்டுப்பாடு |
| **உறுப்பினர்கள் :**<br>இரண்டு சிரேட்ட பிரதி பொது முகாமையாளர்கள் - செயல்பாடுகள், பிரதி பொது முகாமையாளர்– அபாய மற்றும் கட்டுப்பாடு, பிரதி பொது முகாமையாளர் –கடன் மீட்பு மற்றும் நிர்வாகம், பிரதி பொது முகாமையாளர் – சந்தைப்படுத்துதல், பிரதம முகாமையாளர் – நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு, பிரதம முகாமையாளர்– நிதி மற்றும் திறைசேரி | **உறுப்பினர்கள்:**<br>கூட்டாண்மை முகாமைத்துவ உறுப்பினர்கள் பிரதம முகாமையாளர் - செயல்பாடுகள், சிரேட்ட முகாமையாளர் - செயல்பாடுகள், செயல்பாட்டு துறைகளின் அபாய நிர்வாகிகள் |
| **பிரதான செயல்பாடுகள்**<br>நிறுவனத்தின் திறைச்சேரி மற்றும் சொத்துக்கள் - பொறுப்புக்கள் செயல்பாடுகளை மீளாய்வு செய்தல். | **பிரதான செயல்பாடுகள்**<br>கடன் தொடர்பான மற்றும் செயல்பாடுகள் தொடர்பான அப்பையன்களை மீளாய்வுச் செய்தல் |
| **கூட்ட இடைவெளி :**<br>மாதாந்தம், அவசர விடயங்களுக்காக விசேட கூட்டங்கள் | **அறிக்கையிடல் :**<br>காலாண்டு |
| **அறிக்கையிடல் :**<br>கூட்ட அறிக்கைகள் - பணிப்பாளர் சபைக்கு<br>அதன் சிறப்பம்சங்கள் காலாண்டு அடிப்படையில் BIRMC க்கு | **Reporting:**<br>பரிந்துரைகள் - பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளருக்கு<br>கூட்ட அறிக்கைகள் BIRMC க்கு |

## கடன் அபாயம்

COVID-19 தொற்றுநோயினால் தனிப்பட்ட நபர்களுக்கு மற்றும் வணிகங்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் கடன் அபாயத்தின் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தின. பொருளாதார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தமையால் வாடிக்கையாளர்களின் கடன் மீள செலுத்தும் இயலாமை மற்றும் கவனமான செலவு முறைகள் கடன் வளர்ச்சி குறைவடைவதற்கும், செயல்படாத கடன் தொகை (NPA) மற்றும் சேத இழப்பு ஒதுக்கீடுகள் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது. கடன்ஃலீசிங் வசதிகளுக்கான பிரிப்போடுதல் வசதிகள், சலுகை வட்டியில் செயல்பாட்டு மூலதனக் கடன்களை வழங்குதல் போன்ற பொருளாதார மீளெழுச்சிக்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பங்காளித்துடன் நாமும் எமது கடன் மீள அறவிடும் செயல்பாடுகள் மற்றும் முன் கடன் மற்றும் பின் கடன் கால மேற்பார்வைகளை வலுப்படுத்தினோம்..

### கண்ணோட்டம்

| வரையறை | கடன் அபாய கூறுகள் |
|---|---|
| ஒரு நிதி கருவியின் வாடிக்கையாளர் அல்லது எதிர் தரப்பினர் அதன் ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றத் தவறினால், நிறுவனத்திற்கு நிதி இழப்பு ஏற்படும் அபாயம். | ○ கடன் செலுத்தப்படாமை ஆபத்து<br>○ செறிவு ஆபத்து<br>○ மீள அறவிடும் ஆபத்து |

| கணக்காய்வு<br>ரூ.மில்லியன் | 2020/21 | 2019/20 |
|---|---|---|
| **அதிகபட்ச கடன் வெளிப்பாடு** | | |
| மொத்த கடன்கள் மற்றும் பெறத்தக்கவை | 150,656 | 156,498 |
| **சேத இழப்பு ஏற்பாடுகள்** | | |
| தனிப்பட்ட சேத இழப்பு | 1,168 | 1,316 |
| கூட்டு சேத இழப்பு | 8,100 | 7,434 |
| **தேறிய கடன்கள் மற்றும் பெறத்தக்கவை** | 141,388 | 147,748 |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் நியாயமான மதிப்பு | 163,635 | 155,825 |

**மொத்த NPA விகிதம்***




** எதிர்கால வட்டி கூறு உள்ளடக்கியது*

**மொத்த செயல்படாத காண்டலுக்கு ஒப்பீடாக சேத இழப்பு ஏற்பாடுகள்**




**தயாரிப்பு வாரியாக NPA விகித ஒப்பீடு**




**குறிப்பு:**

நிறுத்தப்பட்ட தயாரிப்பு என்பதால் வாடகை கொள்முதல் *NPA* விகிதம் இங்கு சித்தரிக்கப்படவில்லை.

**2020/21 இல் முக்கிய முன்னேற்றங்கள்**

**சௌபாடுகளை வலுவூட்டல்**

- உயர் மதிப்பு கடன் வசதிகளின் மீளாய்வு உட்பட செயல்படும் மற்றும் அகற்றல் இழப்புகளை கொண்ட கடன் வழங்கப்பட்ட பின்னரான மீளாய்வுகளையும், கடன் முன்மொழிவுகளையும் சுஊனு சுயாதீனமாக மதிப்பீடு செய்தது..
- சொத்துக்கள் தர விகிதங்களின் எதிர்மறை போக்குகளை நுஐசுஆஊ கண்காணித்ததுடன், சமீபத்திய கடன் வழங்கல்களின் நிலுவை நிலைகள் கணக்கீடுகள் மூலமான பாதிப்பு விகிதங்களையும் மதிப்பீடு செய்தது. அத்துடன் கடன் செயல்முறை சிக்கல்களை கலந்தாலோசித்து, நடவடிக்கை மேற்கொண்டு கண்காணிக்கப்பை மேற்கொண்டது..
- வாடிக்கையாளர் மதிப்பீட்டிற்காக ஊசுஐடீ மதிப்பெண் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தற்போதுள்ள கடன் அபாயக் கொள்கைகள் மீளாய்வுச் செய்யப்பட்டதோடு, பல புதிய கடன் அபாய கொள்கைகள் உருவாக்கப்பட்டு, மீளாய்வுச் செய்து அனுமதிக்க பட்டன.
- கடன் தகுதி மதிப்பெண்அடிப்படையில் கடன் அதிகார வரம்புகளை மீளாய்வு செய்தல். கடன் ஆய்வு மற்றும் கடன் தரத்தை மேம்படுத்த நாம் கவனம் செலுத்தியத்தால், ஆண்டிலுள் கிளைகளின் கடன் ஒப்புதல் அதிகாரம் திரும்பப் பெறப்பட்டு தலைமை அலுவலகத்தில் மையமாக வழங்கப்பட்டது.
- சொத்துக்கான பிணை மதிப்பீடுகளை மேற்கொள்ளவதற்காக மதிப்பீட்டாளர்கள் குழுவொன்று பராமரிக்கப்பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வாகன மதிப்பீட்டாளர்கள் தொகுப்பொன்று எமது கணினி தொகுதியில் உஐவாக்கப்பட்டது.

**மதிப்பாய்வு செய்யப்பட்டகடன் அபாயக் கொள்கைகள்**

- கடன் கொள்கை
- மார்ஜின் வர்த்தக கடன் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்கள்
- Factoring கடன் கொள்கை
- அசையா சொத்துக்களின் மதிப்பீடு மற்றும் ஆய்வு பற்றிய கொள்கை

**கடன் அபாயம் தொடர்பான புதிய கொள்கைகள்**

- பிந்தைய விநியோக மீளாய்வுக் கொள்கை
- மார்ஜின் வர்த்தகத்திற்கான ஒதுக்கீடு கொள்கை
- Factoring யஒதுக்கீடு கொள்கை

**கடன் வழங்கும் செயல்முறை**

**கடன் மதிப்பீடு**
கடன் கொள்கைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப கடன் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன

**அபாய சிகிச்சை மற்றும் விலை நிர்ணயம்**
காசு பாய்ச்சல் மற்றும் பிணையம் ஆகியவை ஆராயப்படுகின்றன. தொழில்முறை மதிப்பீடுகள்பெறப்பட்டது. சொத்து மற்றும் பொறுப்பு விலை நிர்ணயத்திற்கு ALCO பொறுப்பேற்கின்றது

**கடன் ஒப்புதல்**
வழங்கப்பட்ட அதிகார நிலைகளுக்கு ஏற்ப கடன் ஒப்புதல்கள்

**கடன் வழங்குதல்**
அங்கீகரிக்கப்பட்ட வசதிகள் தலைமை அலுவலகத்தின் கட்டண அலகு மூலம் வழங்கப்படுகிறது

**கடன் அபாய கண்காணிப்பு மற்றும் மீளாய்வு**
RCD கடன் அபாயத்தை கண்காணித்து CEO/GM மற்றும் நுஐசுஆஊ க்கு அறிக்கையிடுகின்றது

**கடன் அபாய குறைப்பவைகள்**

- கடன் அபாய கொள்கை மற்றும் நடைமுறைகள்
- கடன் அபாய வரம்புகள்
- கடன் அதிகார வரம்புகள்

### பணப்புழக்க அபாயம்

மந்தமான கடன் வளர்ச்சி மற்றும் மத்திய வங்கியினால் தாழ்த்தப்பட்ட மேகுஜ க்களின் சந்தையில் குறைந்தபட்ச பணப்புழக்க தேவை காரணமாக சந்தையின் பணப்புழக்கம் தேவைக்கு அதிகமான அளவில் காணப்பட்டது. 2020 டிசம்பர் முடிவில் மேகுஜ துறையினால் பெனிச்சென்ற பணப்புழக்க அளவுகள், ஒழுங்கிமுறை அளவைவிட மிக அதிகமாகவே இருந்தன. இத்துறையில் மொத்த திரவ சொத்துக்கள், ஒழுங்குமுறை குறைந்தபட்சமான ரூ.50.7 மில்லியன் அளவை விட ரூ.89 பில்லியன் அதிகமாக காணப்பட்டதுடன் இது 2020 டிசம்பர் இறுதியில் 13.0% ஆக காணப்பட்டது. பீபிள்ஸ் லீசிங் நிறுவனமும் இந்த நிலைக்கு முகம்கொடுத்ததுடன், வர்த்த அளவுகளின் அதிகரித்தல் மற்றும் வைப்புகளின் வெளியேற்றத்தை ஊக்குவித்தல் மூலம் இறுதி காலாண்டில் இந்த நிலையிலிருந்து மீள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

### கண்ணோட்டம்

| வரையறை | பணப்புழக்க அபாயக் கூறுகள் | கடன் மதிப்பீடு |
|---|---|---|
| நிறுவனத்தின் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்படும்போது அல்லது, அவ்வாறான கடமைகளை நிறைவேற்றுவதற்கு மேலதிக செலவை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்போது, ஏற்படும் பணப்புழக்க குறைவீனம் காசுபாய்ச்சல் நேரங்கள் பொருத்தமின்மையால் ஏற்படுகின்றது | ○ மத்திய வங்கி பணப்புழக்க அபாயம்<br>○ நிதியிடல் பணப்புழக்க அபாயம்<br>○ சந்தை பணப்புழக்க அபாயம் | A+(lka) / பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா |

### திரவ சொத்துக்கள் மற்றும் திரவ சொத்துக்கள் விகிதம்




*சிபிஎஸ்எல் பணிப்புரையின் படி திரவ சொத்துக்கள் / திரவ சொத்துக்கள் தேவை.

### நிதியிடல் பல்வகைப்படுத்தல்




### 31 மார்ச் 2021 இல் நிதிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் முதிர்வு விவரம்




### மூலதன போதுமை




### திரவ சொத்துக்களுக்கான அழுத்த சோதனை (வைப்புகளை உடனடியாக திரும்பப் பெறுதல்)

| சூழல் | 1 (%) | 2 (%) | 3 (%) |
|---|---|---|---|
| அதிர்ச்சியின் அளவு | 10 | 15 | 20 |
| திரவ சொத்து விகிதம்மு | 58.20 | (20.86) | (108.64) |
| திரவ சொத்து விகிதம்மு - தற்செயல் நிதிகளுக்கான திருத்தங்களின் பின்னர் | 389.12 | 327.34 | 258.76 |

*CBSL பணிப்புரையின் படி திரவ சொத்துக்கள் / திரவ சொத்துக்கள் தேவை.

**பயனுள்ள செயல்முறைகள்**

| திறைச்சேரி | ALCO | BIRMC | சபை |
|---|---|---|---|
| ○ தினசரி பணப்புழக்கம் ALCO ஆல் நிர்ணயிக்கப்பட்ட அளவுருக்களுக்குள் முகாமைத்துவம் செயதல்.<br>○ ஒழுங்குமுறை தேவைக்கு மேல் திரவ சொத்துக்கள் பராமரிக்கப்படுகின்றன.<br>○ அனைத்து வெளியேற்ற பொறுப்புகளுக்கும் போதுமான பயன்படுத்தப்படாத வசதிகளை பயன்படுத்தல்.<br>○ அழுத்த சோதனை முடிவுகள் RCD யால் BIRMC க்கு காலாண்டு ரீதியில் அறிக்கையிடப் படுகின்றன.<br>○ ALCO/BIRMC க்கு அறிக்கையிடல். | ○ முதிர்வு பொருத்தமற்ற தன்மையை பகுப்பாய்வு, திரவ சொத்துக்களின் விகிதம், மூலர்க போதுமை போன்ற பணப்புழக்க அபாயக் குறிக்கட்டிகளை மாதாந்தம் மீளாய்வுச் செய்தல்.<br>○ பணப்புழக்க அபாயங்களை கட்டுப்படுத்தல்/ தணித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பவற்றுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடல் பற்றும் பரிந்துரைத்தல்.<br>○ ஒழுங்குமுறை அளவுகளோடு இணங்குவதற்காக, எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கான மூலதன போதுமை விகிதங்களை கணித்தல். | ○ மேற்கொள்ளப்பட்ட அழுத்த சோதனைகளை காலாண்டு அடிப்படையில் மீளாய்வுச் செய்தல்.<br>○ அபாய அறிகுறிகள் மற்றும் மூலதன போதுமை விகிதங்களை காலாண்டு அடிப்படையில் மீளாய்வுதல். | மாதாந்தம் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் ALCO கூட்ட அறிக்கைகளை மீளாய்வுச் செய்தல் |

## 2020/21 இல் முன்னெற்றங்கள்

NBFI க்கள் பேணிச் செல்லவேண்டிய குறைந்தபட்ச பணப்புழக்கத்தை CBSL தாழ்த்தப்பட்டமையினால் பீப்பல்ஸ் லீசிங்கின் நிதிகள் தேவைக்கு அதிகமாக காணப்பட்டதோடு அதனால் எதிர்மறையான முக்கொண்டுச் செல்லல் நிலையொன்று உருவானது. இந்த நிலையை ALCO மீளாய்வுச் செய்து, சூழல் பகுப்பதிவொன்றின் அடைப்படையில் மாற்று வாய்ப்புகளில் முதலீடுச் செய்ய முடிவெடுக்க பட்டது.

கோவிட் -19 க்கு முந்திய நிலைக்கு திருத்தப்பட்டாலும், அந்த பணப்புழக்க அள்வுகளையும் பராமரிக்கப் படுவதை உறுதிச் செய்துகொண்டு, மேலதிக நிதியினை எமது கடன் மற்றும் லீசிங் வசதிகளின் மூலம் வியாபார வளர்ச்சிக்கிக்காக பயன்படுத்தப் பட்டது.

மேலும் விவேகமாக இருப்பதற்காகவும், விகிதங்கள் குறைந்தபட்ச ஒழுங்குமுறை தேவையை அடைவதற்கு முன்னதாக தூண்டுதல்களை உறுதி செய்யவும் அபாய சகிப்புத்தன்மை எல்லைகள் ஒழுங்குமுறை தேவைகளுக்கு மேலாக அமைக்கப்பட்டன.

## AWPLR அசைவுகள் (சாராசரி)




## சந்தை அபாயம்

எமது பல்வேறான சந்தை அபாய கூறுகளில், வட்டி விகித அபாயத்திற்கு பீப்பிள்ஸ் லீசிங் கூடுதலாக வெளிப்படுகின்றதுடன் ஏனைய அபாயங்கள் குறைவாகவோ, அற்பமாகவோ உள்ளன. பொருளாதார மறுமலர்ச்சிக்காக ஊடீஞடு பராமரித்த அனுசரணையான கொள்கையினால் இந்த ஆண்டு குறைந்த வட்டி விகிதங்களைகொண்ண்ட ஒரு ஆண்டாக வகைப்படுத்தப்பட்டது. எமது இலாப விளிம்புகளை பராமரிக்கும் அதேநேரம், வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக எமது வைப்புகளின் மற்றும் கடன்களின் வட்டி விகிதங்களை மீள விலைப்படுத்தும் நோக்கத்துடன் சந்தையின் வட்டி விகித அசைவுகள் எம்மால் தீவிரமாக கண்காணிக்கப்பட்டன.

## திறைச்சேரி பத்திர விலை (சாராசரி)




### கண்ணோட்டம்

<table>
<tr><th>வரையறை</th><th>சந்தை அபாயத்தின் கூறுகள்</th></tr>
<tr><td>அந்நிய செலாவணி விகிதங்கள், வட்டி விகிதங்கள், பங்கு விலைகள் மற்றும் பொருட்களின் விலைகள் போன்ற சந்தை காரணிகளின் இயக்கங்கள் நமது சந்தை மதிப்பு அல்லது வருவாயைக் குறைக்கும் அபாயம்</td><td>
<table>
<tr><th>அபாய வகை</th><th>அபாய வெளிப்பாடு</th></tr>
<tr><td>வட்டி விகித அபாயம்</td><td>உயர்</td></tr>
<tr><td>நுகர்வு பொருட்களின் விலை அபாயம்</td><td>குறைந்த</td></tr>
<tr><td>பங்கு முதலீட்டு அபாயம்</td><td>அலட்சியமானது</td></tr>
<tr><td>அந்நிய செலாவணி அபாயம்</td><td>அலட்சியமானது</td></tr>
</table>
</td></tr>
</table>

## தங்கவிலை அசைவுகள்




### வட்டி விகித அதிர்ச்சியில் NII (தெரிய வட்டி வருமானம்) மீதான அழுத்த சோதனை

| ஜேஜ மீதான தாக்கம் ரு. 000 | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | அதிகரிப்பு | குறைவு | அதிகரிப்பு | குறைவு |
| 1% | (76,837) | 76,837 | (52,577) | 52,577 |
| 3% | (153,675) | 153,675 | (105,154) | 105,154 |
| 5% | (230,512) | 230,512 | (157,732) | 157,732 |

# அபாய முகாமைத்துவ மீளாய்வு

### பயனுள்ள செயல்முறைகள்

| திறைச்சேரி | ALCO | BIRMC | சபை |
|---|---|---|---|
| **வட்டி விகித அபாயம்** | | | |
| ○ வட்டி விகித சூழல்களையும் முக்கிய வட்டி விகித குறிக்கட்டிகளையும் (உதா் யுஸீடுசு மற்றும் திறைசேரி பத்திர விகிதம்) திறைசேரி தொடர்ந்து கண்காணித்தது.<br>○ தேவையான விளிம்புகளை பராமரிப்பதற்கான கடன் மற்றும் வைப்புகளின் வட்டி விகிதங்களை தீர்மானிப்பதற்கு ALCO க்கு அறிக்கையொனறு வழங்கப்பட்டது. | ○ வட்டி விகித இடைவெளி பகுப்பாய்வை மீளாய்வுச் செய்தல்<br>○ வட்டி விகிதங்களில் 1மூ மாற்றத்தினால் ஜேஜ மீது ஏற்படும் தாக்கத்தை தீர்மானிப்பதற்காக உணர்திறன் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.<br>○ வட்டி சூழலை மீளாய்வுச் செய்து, தேவையான விளிம்புகளை பராமரிக்கப் படுவதை உறுதிச் செய்வதற்க்காக கடன் மற்றும் வைப்புகளின் வட்டி விகிதங்கள் தீர்மானிக்கப்பட்டது. | ○ ஏற்கனவே நிறுவப்பட்ட அபாய சகிப்புத்தன்மை அளவுகளோடு வட்டி விகித உணர்திறன் மற்றும் விகிதங்களை இடைவெளிகளுக்கான மீள் விலையிடல்களை மீளாய்வுச் செய்தல்.<br>○ தேறிய வட்டி வருமானம் மற்றும் இலாபம் மீதான வட்டி விகிதங்கள் தாக்கத்தை அளவுடுவதற்கான உணர்திறன் சோதனையை மீளாய்வுச் செய்தல். | மாதாந்தம் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் ALCO கூட்ட அறிக்கைகளை மீளாய்வுச் செய்தல் |
| **பொருட்களின் விலை அபாயம்** | | | |
| ○ கிளை வலையமைப்பின் தங்க கடன் அலகுகள் மத்திய தலத்தில் நிறுவப்பட்டுள்ள தங்க கடன் பிரிவினால் கண்காணிக்கப் படுகின்றன.<br>○ RCD மூலம் நாளாந்த தங்க விலை மற்றும் தங்க விலை நிலையற்ற தன்மை கண்காணிக்க படிகின்றன | ○ தங்க விலை அசைவுகள், விலையின் நிலையற்றத்தன்மை மற்றும் தங்க கடன் தயாரிப்பின் செயல்தின் என்பவற்றை கண்காணித்தல்.<br>○ எதிர்மறையான தங்க விலை அசைவுகளின்போது உடனடியாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | | பீப்பல்ஸ் லீசிங்கின் ஒருங்கிணைந்த அபாய முகாமைத்துவத்துக்கான அடிப்படை பொறுப்பை வகித்தல் |
| **மூலதன முதலீட்டு அபாயம்** | | | |
| ○ பங்கு விலைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பங்குச் சந்தை விலைகள், பரந்த பொருளாதாரம் நிலைமைகள் மற்றும் அரசியல் சூழல் என்பவற்றை மார்ஜின் வர்த்தக பிரிவு தொடர்ச்சியாக கக்கணிக்கின்றது. | ○ பங்கு முதலீட்டு அறிக்கை மீதான விரிவான மாதாந்திர மீளாய்வு.<br>○ பங்கு முதலீடு, இழப்பை தடுக்கும் வரம்பை தாண்டுவது தொடர்பான நடவடிக்கைகளை தீர்மானித்தல். | | பங்கு முதலீட்டு கொள்கை மற்றும் பங்கு வர்த்தக கொள்கையை சபை அங்கீகரித்தது |
| **அந்நிய செலாவணி அபாயம்** | | | |
| ○ வருடத்தில் வெளிநாட்டு நாணயம் திறந்த நிலையில் வைக்கப்படவில்லை | | | |

## செயல்பாட்டு அபாயம்

நாம் வணிகத்தை நடத்திச்சென்ற விதம் மற்றும் நாம் பணியாற்றிய விதம், COVID 19 தொற்றுநோயினால் மேலெழுந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளினால் மாற்றமடைந்தது. புகுர் ஏற்பாடுகள், ஒன்லைன் வழிமுறைகளில் பரிவர்த்தனைகளை மேற்க்கொல்வதற்கான வாடிக்கையாளர்களின் விருப்பம் என்பவை தகவல் பாதுகாப்பு அபாயத்தை அதிகரித்தன. வணிக தொடர்ச்சித் திட்டமிடல் மிகவும் முக்கியமான தேவையாகியதுடன், ஒரு வெற்றிகரமான டீஊீ சோதனை செயல்படுத்தியமை, COVID 19 இன் சவால்களுக்கிடையில் எமது வர்த்தக நடவடிக்கைகளை பயனுள்ள வகையில் மாற்றியமைக்க மிக முக்கியமாக இருந்தது.

### கண்ணோட்டம்

**வரையறை:** குறைவான மற்றும் பொருத்தமற்ற உள் செயல்முறைகள், வழிமுறைகள் மற்றும் நபர்கள் அல்லது வெளிப்புற நிகழ்வுகள் காரணமாக செயல்பாட்டு அபாயம் ஏற்படுகின்றது.

**செய்யப்பட்டு அபாயத்தை தனித்தல்**

**தகவல் தொகுதி பாதுகாப்பு**

- ISO 27001:2013 சான்றுபெற்ற பீப்பா்ஸ் லீசிங் நிறுவனமாகிய நாம், எமது தகவல் தொகுதி பாதுகாப்பு முறைமையை நிறுவுதல், செயல்படுத்துதல், பராமரித்தல் மற்றும் தொடர்ச்சி என்பவற்றுக்கான தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும், தகவல் தொகுதி பாதுகாப்பு அபாயங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றுக்கு தீர்வுகாணுதல் தொடர்பாக உறுதிச் செய்கின்றோம்.
- சகல வன்பொருள், மென்பொருள், தகவல் மற்றும் மனித வளங்கள் மீதான தொழில்நுட்ப அபாயங்களுக்கான ஆண்டுதோறும் மீளாய்வுச் செய்யப்படும் அபாய மதிப்பீட்டு முறைமையை சபை அனுமதித்தது.
- IT அபாய முகாமைத்துவ செயல்முறை ICT பிரிவின் பொறுப்பாகும்.




- 2020/21 ஆம் ஆண்டில், RCD, இரண்டாவது வரிசையாக, ICT யால் மேற்கொள்ளப்பட்ட IT ஆபத்து மதிப்பீட்டை சுயாதீனமாக மீளாய்வுச் செய்யத் ஆரம்பித்தது RCD யால் மேற்கொள்ளப்பட்ட இந்த மீளாய்வுகள் தொடர்பாக அறிக்கைகள் BIRMC க்கு காலாண்டு தோறும் வழங்கப்பட்டது..

**வணிக தொடர்ச்சித் திட்டம் (BCP)**

- பீப்பல்ஸ் லீசிங் BCP அபாய மதிப்பீடு மற்றும் வணிக தாக்க பகுப்பாய்வு ஒன்றை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- ஆண்டினுள் BCP பரிசோதனை, அழைப்பு தொடரை மற்றும் மீள அரவிடுதல் குழுக்களை இற்றைப்படுத்தல் அத்துடன் நேர முக்கியமான செயல்முறை பயிற்சிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டது
- இப் பரிசோதனைகளின் முடிவுகளின் அடிப்படையில் எந்தவொரு அவசர நிலையிலும் தயார்நிலையில் நிற்பதற்கு ஏற்றவாறு எமது வணிக தொடர்ச்சி உள்கட்டமைப்புகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. COVID-19 தொற்றுநோயால் ஏற்பட்ட முன்பு எப்போதுமே ஏற்படாத வணிக இடையூறுகளுக்கான எமது பதில்செயலை வகுப்பதற்கு இந்த அனுபவம் விலைமதிப்பற்றதாக இருந்தது
- பிராந்திய அளவில் அவசர பதிலலிப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டு, COVID-19 ஆல் பாதிக்கப்பட்ட கிளைகளுக்கு அனுப்பப்பட்டது. எ.கா. ஊழியாகள் கோவிட் -19 பாதிக்கப்பட்டதால் மூடப்பட வேண்டியிருந்த கிளைகள்.

**ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு**

- கோவிட் -19 தொற்றுநோய்க்கான அனைத்து அரசு கட்டாய சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளையும் பின்பற்றுதல்
- சாத்தியமான இடங்களில் றுகுர் ஏற்பாடுகளுக்கு வசதியளிக்கப்பட்டது
- நிறுவனத்தின் INTRANET இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுவதன் முக்கியத்துவம் தொடர்பாக ஊளியர்களை அறிவூட்டப்பட்டது.

**WFH (வீட்டிலிருந்து பணியாற்றுதல்)**

- WFH செயற்படுங்கள் காரணமாக சைபர் பாதுகாப்பு, களவு மற்றும் மோசடி போன்ற அபாயங்கள் அடையாளம் காணப்பட்டன. WFH மற்றும் தொலைதூர அணுகல் தொடர்பாக பணிப்பாளர் சபை அனுமதித்த கொள்கைகள் செயல்படுத்தப்பட்டன.
- ஊழியர்களுக்கு லேப்டாப் வழங்கப்பட்டதனால் மோசடி மற்றும் களவு அபாயங்கள் அதிகரித்தன. லேப்டாப் பெறப்பட்ட ஊழியர் அதற்க்கு பொறுப்பேற்கும் முறைமையொன்று ஏற்படுத்தி, தனிப்பட்ட ஊழியர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடும் ஏற்பாடுகளின் மூலம் இந்த அபாயம் தனிக்கப்பட்டது.
- பாயர்வேள் மூலம் பாவனையாளரை அனுமதிக்கும் VPN அணுகல், VPN கொள்கை, கடவுச்சொல் கொள்கை, VPN அணுகல் அறிக்கை, உள்நுழைவு கட்டுப்பாடு பொறிமுறைகள் என்பவற்றின் மூலம் சைபர் பாதுகாப்பு அபாயம் தனிக்கப்பட்டது.

**காப்புறுதி ஏற்பாடுகள்**

- RCD மூலம் நிறுவனத்தின் காப்புறுதி ஒப்பந்த பட்டியல் பராமரிக்க படுகின்றது
- காப்புறுதி ஒப்பந்தங்கள் சரியான நேரத்தில் புதுப்பிக்கப்பட்டு மற்றும் செய்யப்பட்டு நிலையில் உள்ளமையை உறுதிச் செய்வதற்காக சகல காப்புறுதி ஒப்பந்தங்களும் RCD மூலம் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

**வெளிவாரி சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்**

- பீப்பல்ஸ் லீசிங்கின் அவுட்சோர்சிங் கொள்கை ஆண்டினுள் மதிப்பாய்வு செய்யப்பட்டு திருத்தங்கள்2021 மார்ச் இல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது
- அவுட்சோர்சிங்கிலிருந்து எழும் குறிப்பிடத்தக்க அபாயங்களை அடையாளம் கண்டு வினைத்திறனாக அவற்றை தொடர்ச்சியாக முகாமைத்துவப்படுத்தும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் நிறுவப்பட்டுள்ளன.

**செயல்பாடு அபாயங்கள் மீளாய்வு**

- கிளை மட்டத்தில் அபாய நிகழ்வுகளை கண்டறியும் செயல்பாடு இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அதன் விளைவுகள் ஒரு சட்டகத்தின் மூலம் முகாமைத்துவத்திற்கு சமர்பிக்கப்பட்டன.
- செயல்பாட்டு அபாயங்களை குறைப்பதற்காக பொருத்தமான தணிப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன.
- செயல்பாட்டு அபாயங்களை குறைப்பதற்காக முக்கிய செயல்முறைகளில் விசேட கட்டுப்பாடுகள் சேர்க்கப்பட்டன.

**ஏனைய அபாயங்கள்**

பீப்பல்ஸ் லீசிங், இணக்கப்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை அபாயம், சட்ட ரீதியான அபாயம், மூலோபாய அபாயம், புகழ் தொடர்பான அபாயம், மற்றும் குழுமத்தை சார்ந்த அபாயம் போன்ற பலவகையான அபாயங்களை சந்திக்கின்றது இணக்கப்பாடு செயல்முறை தொடர்பான விவரமான அறிக்கையொன்று 108 முதல் 110 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளது. அனுபவம்மிக்க பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்தல், பணிப்பாளர் சபை வரையிலான பல்வேறு முகாமைத்துவ மட்டங்களில் மேற்பார்வை மற்றும் மீளாய்வுகள் மேற்கொள்ளல் மற்றும் நேர்முறையான தொழில் நடவடிக்கைகளுக்கான எமது அர்ப்பணிப்பு என்பற்றின் மூலம் ஏனைய அபாயங்கள் கணிக்க படுகின்றது.

THANK YOU

# நிதி அறிக்கைகள்

163 நிதியியல் நாட்காட்டி
164 நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்கள் பொறுப்பு
165 நிதி அறிக்கை மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த சுயாதீன உத்தரவாத அறிக்கை
166 நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்கள் கூற்று
167 பிரதம நிர்வாக அதிகாரி மற்றும் பிரதம நிதியியல் அதிகாரியின் பொறுப்புகளிலான கூற்று
168 சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
172 நிதி அறிக்கை - உள்ளடக்கம்
173 லாபம் அல்லது நாட்டம் தொடர்பானகூற்று
174 விரிவான வருமான அறிக்கை
175 நிதி நிலைமை கூற்று
176 பங்கு முதலீடு மாற்றங்களின் கூற்று
178 நிதிபாய்ச்சல் அறிக்கை
179 அறிக்கைகள் தொடர்பான குறிப்புகள

# நிதியியல் நாள்காட்டி

| | | 2020/21 | 2021/22 |
|---|---|---|---|
| இடைக்கால நிதிக் கூற்றுக்களின் வெளியீடு | Q1 ஜூன் 30 இல் நிறைவடைவது | 14 செப்டம்பர் 2020 | 15 ஆகஸ்ட் 2021 க்கு முன்னர் |
| | Q2 செப்டம்பர் 30 இல் நிறைவடைவது | 03 நவம்பர் 2020 | 15 நவம்பர் 2021 க்கு முன்னர் |
| | Q3 டிசம்பர் 31 இல் நிறைவடைவது | 12 பெப்ரவரி 2021 | 15 பெப்ரவரி 2022 க்கு முன்னர் |
| | Q4 மார்ச் 31 இல் நிறைவடைவது | 25 மே 2021 | 30 மே 2022 க்கு முன்னர் |
| நிதிக் கூற்றுக்களின் வெளியீடு | 30 செப்டம்பர் 2020 இல் நிறைவடைந்த ஆறு மாதங்களுக்கானது | 24 நவம்பர் 2020 | |
| | 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 29 ஜூன் 2021 | |
| | 30 செப்டம்பர் 2021 இல் நிறைவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | 31 டிசம்பர் 2021 க்கு முன்னர் |
| | 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | | 30 ஜூன் 2022 க்கு முன்னர் |
| ஆண்டறிக்கை வெளியீடு | ஆண்டறிக்கையின் வெளியீடு | ஆகஸ்ட் 2021 | ஜூன் 2022 |
| ஆண்டுப் பொதுக் கூட்டம் | ஆண்டுப் பொதுக் கூட்டம் | 25ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 5 ஆகஸ்ட் 2021 | 26 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் ஜூன் 2022 க்கு முன்னர் |
| பங்கிலாபக் கொடுப்பனவு | இடைக்கால பங்கிலாபம் - பத்திரப்பங்கிளலாபம் 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான பத்திரப்பங்கிலாபம் | 15 டிசம்பர் 2020 | |

# நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி (கம்பனி) இன் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளது (குழுமம்) ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களது பொறுப்பானது இந்த கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

31 மார்ச் 2021 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த நிதியாண்டிற்கான நிதிச் செயற்திறன் என்பவற்றை உள்ளடக்கிய கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் ஓர் மெய்யான மற்றும் நியாயமான பார்வையினை வழங்குகின்றன என பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துவதுடன் அவற்றை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் முன்வைக்கின்றார்கள். இந்த நிதிக் கூற்றுக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- நிதி நிலைமைக் கூற்று
- இலாபம் அல்லது நட்டக் கூற்று
- விரிவான வருமானக் கூற்று
- உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று
- காசுப் பாய்ச்சல்கள் கூற்று
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இந்த ஆண்டறிக்கையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் நேர்மை மற்றும் சார்பற்ற நிலைக்கு பணிப்பாளர் சபையானது பொறுப்பேற்கின்றது. இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பின்வருவனவற்றை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள்;

- பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஓர் சீரான விதத்தில் தெரிவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், ஏதேனும் கணிசநிலை பிறழ்வுகள் காணப்படின் அவை வெளிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன;
- பொருத்தமானவாறு இயைபுள்ள அனைத்து கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டுள்ளன ; மற்றும்
- நியாயமான மற்றும் விவேகமான தீர்வுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 150 (1), 151, 152 மற்றும் 153 (1) மற்றும் (2) இன் ஏற்பாடுகளுக்கமைய கம்பனி மற்றும் குழுமத்தின் பணிப்பாளர்கள் கம்பனியும் குழுமமும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் ஒழுங்கான கணக்குப் புத்தகங்களை வைத்திருப்பதனை உறுதிசெய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளார்கள்.

இந்த நிதிக் கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பிரயோகிப்பதனை நியாயப்படுத்துவதற்காக கம்பனி செயற்பாட்டினை தொடர்வதற்கு போதுமான வளங்களை கொள்டுள்ளது எனவும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள். மேலும், கம்பனியின் நிதி நிலைமையினை நியாயமான துல்லியத்துடன் வெளிப்படுத்துவதற்கு கம்பனி போதுமான கணக்கீட்டு பதிவுகளை பராமரித்துள்ளது என உறுதிப்படுத்துவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாளியாயுள்ளார்கள்.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 150 (1) (பி), மற்றும் 152 (1) (பி) இன் தேவைப்பாடுகளுக்கமைய நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பொறுப்பாயுள்ள உத்தியோகத்தரான, கம்பனியின் பிரதம நிதியியல் அதிகாரியினால் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் சான்றளிக்கப்பட்டுள்ளன. இதற்கும் மேலாக, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 150 (1) (சி), மற்றும் 152 (1) (சி) இன் தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கேற்ப கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இரண்டு பணிப்பாளர்களினால் 4 ஜூன் 2021 இல் கையொப்பமிடப்பட்டன.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 148 (1) இற்கு இணங்க கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களை விளக்கும் மற்றும் ஓர் குறிப்பிட்ட நேரத்தில் கம்பனியின் நிதி நிலைமையினை நியாயமான துல்லியத்துடன் தீர்மானிப்பதற்கு துணைபுரிவதற்காக முறையான கணக்கீட்டுப் பதிவுகள் கம்பனியினாலும் குழுமத்தினாலும் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். இது நிதிக் கூற்றுக்களது தயாரிப்பினை இயலுமையாக்குவதுடன் மேலும் நிதிக் கூற்றுக்கள் உடனடியாகவும் முறையாகவும் கணக்காய்வு செய்யப்படுவதனையும் இயலுமையாக்குகின்றது. இந்த ஆண்டறிக்கையில் தயாரித்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள 2020/21 வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் உள்ளார்ந்த புத்தககங்களுடன் ஒத்ததாகக் காணப்படும் வேளை பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதியியல் வணிகச் சட்டம் மற்றும் அவற்றின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினால் வழங்கப்பட்ட பட்டியலிடல் விதிகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவத்தினால் (இ.ப.க.) கம்பனி ஆளுகையில் வழங்கப்பட்ட சிறந்த நடைமுறைகள் என்பவையாகும்.

பணிப்பாளர் சபையானது நிதியியல் அறிக்கையிடல் முறையினை அதன் வழக்கமான கூட்டங்களில் நேரடியாக மீளாய்வு செய்வதுடன் சபை கணக்காய்வு குழுவினது அறிக்கையூடாகவும் மீளாய்வு செய்கின்றது. கம்பனி மற்றும் குழுமம் முறையான கணக்குப் புத்தகங்களை பராமரிப்பதனை உறுதிப்படுத்தும் இந்த அறிக்கையானது பக்கங்கள் 144 முதல் 145 வரை வழங்கப்பட்டுள்ளது. கம்பனி மற்றும் குழுமத்தினால் வெளியிடப்படும் இடைக்கால நிதிக் கூற்றுக்களும் சபை கணக்காய்வு குழுவினது (சககு) மீளாய்வினைத் தொடர்ந்து சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றன.

கம்பனி மற்றும் குழுமத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இது தொடர்பில் கம்பனி மற்றும் குழுமத்தில் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கான ஓர் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் நிறுவுதலுக்கும் உரிய கவனத்தினை வழங்குகவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாளியாயுள்ளார்கள். “நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டில் பணிப்பாளர்களது கூற்றானது" பக்கம் 166 இல் வழங்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 56 (2) இன் கீழான தேவைபாடுகளுக்கமைய பணிப்பாளர் சபையானது பத்திரப்பங்கிலாபமாக இடைக்கால பங்கிலாபத்திற்கு அதிகாரமளித்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்த விரும்புகின்றது. 1:21.1666668487 என்ற விகிதாசாரத்தில் வழங்கப்பட்ட பத்திரப் பங்கிலாபத்திற்கேற்ப 24 டிசம்பர் 2020 முதல் 76,899,372 சாதாரண பங்குகள் பட்டியலிடப்பட்டன. பணிப்பாளர் சபையானது குறித்த இடைக்கால பங்கிலாபத்தினையும் முன்மொழியப்படும் இறுதி பங்கிலாபத்தினையும் அங்கீகரித்துள்ளது. இது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 57 இன் பிரகாரம் அத்தகைய பங்கிலாபங்களது விநியோகத்தினைத் தொடர்ந்து உடனடியாக கடன் தீர் ஆற்றல் பரிசீலனையை சந்தித்ததன் பின்னர் ஆகும். அத்துடன் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் தொடர்பாக வெளிவாரி கணக்காய்வாளரிடமிருந்து கடன் தீர் ஆற்றல் சான்றிதழ்களையும் பெற்றுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 166 (1) மற்றும் 167 (1) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர்கள் சபையானது ஆண்டறிக்கையினை நேரகாலத்துடன் தயாரித்துள்ளார்கள் மற்றும் அதன் பிரதியொன்று ஒவ்வொரு பங்குதாரருக்கும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் விதி இலக்கம் 7.5 (ஏ) மற்றும (பி) இன் தேவைப்பாடுகளுக்கமைய அனுப்பிவைக்கப்படுவதனை உறுதிப்படுத்தியுள்ளார்கள் என்பதனை பணிப்பாளர் சபையானது உறுதிப்படுத்த விரும்புகின்றது. பணிப்பாளர்கள் ஒவ்வொரு வகுப்பிலான பங்குதாரர்களும் பாரபட்சமற்ற விதத்தில் ஆரம்ப வழங்கல் ஏற்பாடுகளுக்கமைய கவனிக்கப்படுவதனை உறுதிப்படுத்துகிறார்கள்.

பணிப்பாளர்கள் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு வேண்டப்படுவதுடன் கணக்காய்வாளருக்கு எவ்விதமான நடவடிக்கையினையும் மேற்கொள்வதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தினையும் மற்றும் அவர்களது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கு அவர்களை இயலுமையாக்கும் பொருத்தமானது என அவர்கள் கருதும் ஏதேனும் பரிசீலனைகளை பொறுப்பேற்பதற்கும் வசதியளித்தல் வேண்டும். பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி “கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம்" எனும் வரைவிலக்கணத்தின் கீழ் வருவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் நபர் கம்பனியின் கணக்காய்வினை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அவர்களது பொறுப்புக்கள் பக்கங்கள் 168 முதல் 171 வரை காணப்படும் “சுயாதீன கணக்காய்வாளரது அறிக்கையில்“ குறிப்பிடப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் அவர்களது அறிவிற்கு எட்டியவரையில் கம்பனி மற்றும் குழுமத்தினால் செலுத்தப்படவேண்டிய அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் கம்பனி மற்றும் குழுமத்தின் பணியாட்கள் தொடர்பாக செலுத்தவேண்டிய அனைத்து பங்களிப்புகள், கட்டணங்கள் மற்றும் வரிகள் மற்றும் கம்பனி மற்றும் குழுமம் தொடர்பாக ஏனைய சட்டரீதியான அங்கங்களுக்கு செலுத்தவேண்டியவைகள் அறிக்கையிடப்படும் திகதியல் செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமானவிடத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என உறுதிப்படுத்துகின்றார்கள். இதற்கமைய, இந்தக் கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு அதன் பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளார்கள் என பணிப்பாளர் சபையானது கருதுகின்றது.

சபையின கட்டளையின் பிரகாரம்,

லக்மினி கோட்டேகொட
சபையின் காரியதரிசி

07 ஜூலை 2021
கொழும்பு

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAF/D/PLF/2021/03
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 29 June 2021

தலைவர்
பீபள்ஸ் லீசிங் அன்ட்
வைனான்ஸ் பிஎல்சி

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்றில் பணிப்பாளர் சபைக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிமொழி அறிக்கை.

### அறிமுகம்

இந்த அறிக்கையானது பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (கம்பனி)இன் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றிலான (கூற்று) உறுதிமொழியினை 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான ஆண்டறிக்கையில் வழங்குவதற்காகும்.

### முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட "உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனி / நிதிக் குத்தகைக் கம்பனி ஆகியவற்றின் பணிப்பாளர்களுக்கு உள்ளகக் கட்டுப்பாட்டிலான பணிப்பாளர்களது கூற்றில்" 2008 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரையின் பிரிவு 10 (2) (பி) /2009 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நிதிக் குத்தகை (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரையின் பிரிவு 10 (2) (பி) இற்கு இணங்க கூற்றின் தயாரிப்பு மற்றும் காட்சிப்படுத்தலுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

### எனது பொறுப்பு மற்றும் SLSAE 3051 உடனான இணக்கப்பாடு

எனது பொறுப்பானது பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் துணையளிக்கப்படும் கூற்றானது கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் கடைப்பிடிக்கப்பட்ட பணிப்பாளர்களின் செயல்முறையானது பொருத்தமாக பிரதிபலிக்கின்றதா என்று மதிப்பிடுவதாகும்.

நான் எனது ஈடுபாட்டினை உறுதிமொழி ஈடுபாடுகளிலான இலங்கை நியமம் (SLSAE)3051, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனி / நிதிக் குத்தகைக் கம்பனிகளுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான உறுதிமொழி அறிக்கை என்பவற்றுக்கு அமைவாக நடாத்தினேன்.

இந்த நியமமானது, அனைத்து கணிசமான விடயங்களிலும், முகாமைத்துவமானது உள்ளகக் கட்டுப்பாடுகளிலான கூற்றினை தயாரித்துள்ளதா என்ற வரையறுத்த உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதற்காக நான் செயல்முறைகளை திட்டமிட்டு செயலாற்றல் வேண்டும் என்ற தேவைப்பாட்டினைக் கொண்டுள்ளது.

இந்த ஈடுபாட்டின் நோக்கத்திற்காக, ஏதேனும் அறிக்கைகளை இற்றைப்படுத்துவதற்கோ அல்லது மீள்வழங்குவதற்கோ நான் பொறுப்பாளியல்ல என்பதுடன் இந்த ஈடுபாட்டின்போது நிதியியல் தகவல்களின் கணக்காய்வு அல்லது மீளாய்வினையோ நான் செயற்படுத்தவில்லை.

### செயற்படுத்திய பணியின் சுருக்கம்

பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் கூற்றானது துணையளிக்கப்பட்டுள்ளதா மற்றும் கம்பனியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மீளாய்வு செய்யும்பொது பணிப்பாளர்களினால் கடைப்பிடிக்கப்பட்ட செயல்முறையானது பொருத்தமானவாறு பிரதிபலிக்கின்றதா என்பதை மதிப்பீடு செய்வதற்காக நான் எனது ஈடுபாட்டினை நடாத்தினேன்.

செயலாற்றப்படட செயல்முறைகள் பிரதானமாக கம்பனியின் ஆளணியினருடனான விசாரணைகள் மற்றும் ஓர் மாதிரி அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செயல்முறைகளுக்கு துணையளிக்கும் ஆவணங்கள் காணப்படுவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

SLSAE 3051 கூற்றானது அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்றதா அல்லது கம்பனியின் இடர்நேர்கை மற்றும் கட்டுப்பாட்டு செயல்முறைகளின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயத்தினை உருவாக்கும் தேவையையோ கொண்டிருக்கவில்லை. SLSAE 3051 ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் கணிசநிலை சிக்கல்களது கணிசநிலை உள்ளகக் கட்டுப்பாட்டு அம்சங்களுடன் விவரிக்கப்பட்ட செயல்முறைகள் சிக்கல்களை தீர்க்குமா என நான் கருதும் தேவைப்பாட்டினை கொண்டிருக்கவில்லை.

கம்பனியின் தன்மை, நிகழ்வு அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கூற்றானது தயாரிக்கப்பட்டுள்ளது என்பவற்றில் எனது புரிந்துணர்வினை கவனத்திற்கொண்டு தெரிவுசெய்யப்பட்ட செயல்முறைகள் எனது நிதானிப்பில் தங்கியுள்ளது.

எனது தீர்மானத்திற்கான ஓர் அடிப்படையினை வழங்குவதற்கு போதுமானதும் மற்றும் பொருத்தமானதுமான சான்றுகளை நான் பெற்றுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### முடிவு

செயலாற்றப்பட்ட செயல்முறைகளின் அடிப்படையில், ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்றானது, கம்பனியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மை என்பவற்றின் மீளாய்வின்போது பணிப்பாளர் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செயல்முறைகளிலான எனது புரிந்துணர்வுடன் முரண்பட்டுள்ளது என நான் நம்பும் விதமாக எதுவும் எனது கவனத்திற்கு வரவில்லை.

டபிள்யு பி சி விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

# நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களின் கூற்று

## பொறுப்பு

2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளின் பணிப்புரையின் பிரிவு 10 (2) (பி) 2013 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கூட்டாண்மை ஆளுகை - திருத்தியமைப்பு) பணிப்புரையினால் திருத்தியமைக்கப்பட்டவாறு அதற்கேற்ப பணிப்பாளர் சபையானது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டிலான இந்த அறிக்கையினை சமர்ப்பிக்கின்றது.

பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி (கம்பனி) இல் காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மை என்பவற்றுக்கு பணிப்பாளர்கள் சபையானது (சபை) பொறுப்பாளியாயுள்ளது.

சபையானது கம்பனியினால் முகங்கொடுக்கப்படும் கணிசநிலை இடர்நேர்கைகளை இனங்காணுதல், மதிப்பிடுதல் மற்றும் முகாமைப்படுத்தல் என்பவற்றுக்கு ஓர் தொடர்ச்சியான செயல்முறையினை நிறுவியுள்ளது. இச்செயல்முறையானது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை உள்ளடக்குவதுடன், இது மாற்றமடையும் வணிகச் சூழல்கள் மற்றும் முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளை கணக்கிலெடுத்து சபையினால் தவறாமல் மீளாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்படுகின்றது.

சபையானது நிதியியல் அறிக்கையிடல் மீது காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு திடமானது மற்றும் போதுமானது என கருதுவதுடன் மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைவாக காணப்படுகின்றன.

முகாமைத்துவமானது இடர்நேர்கை மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக சபையின் கொள்கைகள் மற்றும் செயல்முறையின் அமுலாக்கத்திற்கு பின்வருவனவற்றினூடாக சபைக்கு உதவுகின்றது. முகங்கொடுக்கும் இடர்நேர்கைகளை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடுசெய்தல் மற்றும் இந்த இடர்நேர்கைகளை குறைப்பதற்கான மற்றும் கட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல் என்பனவாகும்.

## நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மை ஆகியவற்றை பிரயோகித்தல் மற்றும் மீளாய்வு செய்வதில் கடைப்பிடிக்கப்படும் செயல்முறைகளின் முக்கிய சிறப்பம்சங்கள்.

நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமை மற்றும் நேர்மை என்பவற்றை மீளாய்வு செய்வதில் நிறுவப்பட்ட முக்கிய பொறிமுறைகள் பின்வருமாறு:

- கம்பனியின் நாளாந்த செயற்பாடுகளின் வினைத்திறன், கூட்டாண்மை குறிக்கோள்கள், மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த பாதீடு அத்துடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வணிகச் செயல்முறைகள் என்பவற்றுக்கமைய அத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு துணைபுரிவதற்காக சபையானது பல உப குழுக்களை நியமித்துள்ளது.
- கம்பனியின் முக்கிய செயற்பாட்டு பிரிவுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் /சாசனங்களினால் ஆளுகை செய்யப்படுகின்றன. சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள் சபையின் அங்கீகாரம் பெறுவதற்கு முன்னர் அத்தகைய் கொள்கைகள் /சாசனங்களை மீளாய்வு செய்து பரிந்துரை செய்கின்றன. அத்தகைய கொள்கைகள் / சாசனங்கள் ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றன.
- ஓர் தொடர்ச்சியான அடிப்படையில் மாதிரிகள் மற்றும் சுழற்சி செயல்முறைகளை பயன்படுத்தி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள்/ தகவல் முறைமைக் கட்டுப்பாடுகளது வினைத்திறன் மற்றும் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளுடன் இணக்கப்பாட்டிற்காக கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சரிபார்க்கப்படுகின்றன. இது இணக்கப்பாடின்மையின் கணிசநிலை கண்டுபிடிப்புகளை எடுத்துக்காட்டுவதற்கு துணைபுரிகின்றது. கணக்காய்வுகள் வருடாந்த கணக்காய்வு திட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுவதுடன் இவை சபை கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன. வணிக அலகுகள் / செயல்முறைகளின் கணக்காய்வுகளது நிகழ்வெண் மற்றும் வகை என்பன மதிப்பீடு செய்யப்படும் இடர்நேர்கை மட்டத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன் இது ஓர் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற அறிக்கையினை வழங்குவதற்காகும். உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் இனங்காணப்பட்ட அனைத்து கணிசநிலை கண்டுபிடிப்புகளும் சபை கணக்காய்வு குழுவுக்கு (சககு)சமர்ப்பிக்கப்படுகின்றன.
- உள்ளகக் காணக்காய்வுப் பிரிவு, முறைமைப்படுத்தல் அதிகாரிகள், வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் முகாமைத்துவத்தினால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு சிக்கல்களை மீளாய்வு செய்கின்றது. ச.க.கு. உள்ளகக் கணக்காய்வின் நோக்கம் மற்றும் சுயாதீனத்தன்மை மற்றும் வளங்களுக்கு குறிப்பான முக்கியத்துவத்துடன் உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டின் பயனுறுதித்தன்மையினையும் மதிப்பீடு செய்கின்றது. சபை கணக்காய்வுக் குழு கூட்டங்களின் கூட்ட நடவடிக்கை சுருக்கக் குறிப்புக்கள் ஓர் காலாகால அடிப்படையில் சபைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. சபை கணக்காய்வுக் குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகளது விபரங்கள் சபை கணக்காய்வு குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பிடுவதில் கம்பனியின் இனங்காணப்பட்ட உத்தியோகத்தர்கள் கம்பனியின் நிதிக் கூற்றுக்களது வெளிப்படுத்தல்கள் மற்றும் கணிசநிலை கணக்குகளுடன் தொடர்புபட்ட அனைத்து செயல்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை சீராக ஒழுங்குசெய்தார்கள். இவை ஓர் தொடர்ச்சியான அடிப்படையில் வடிவமைப்பின் பொருந்துமை மற்றும் நிறைவேற்றத்திற்காக கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் அவதானிக்கப்பட்டு சரிபார்க்கப்படுகின்றன.

SLFRS மற்றும் LKAS போன்றவற்றை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை கடைப்பிடிக்கின்றது. அங்கீகாரம், அளவீடு, வகைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக செயல்முறைகளில் முற்போக்கான மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் நிதியியல் அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவ தகவல்களின் செயல்முறைகளில் மேலும் பலப்படுத்தல்கள் தொடரும்.

சபையானது SLFRS 9 “நிதியியல் கருவிகள்” இன் தேவைப்பாடுகளுக்கு உரிய கவனத்தினை செலுத்தியுள்ளது. அவசியமான கூறுகள் அமுல்படுத்தப்பட்டதுடன் செயல்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் முற்போக்கான மேம்படுத்தல்கள் செய்யப்பட்டவண்ணமுள்ளன. இவை கூறுகளது செல்லுபடியாக்கல் மற்றும் SLFRS 9 உடனான இணக்கப்பாட்டிற்கு தேவையான முகாமைத்துவ தகவல் முறைமைகள் அறிக்கைகள் ஆகியவற்றிலான கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகளை பலப்படுத்துவதற்காகும்.

## உறுதிப்பாடு

மேற்குறிப்பிட்ட செயல்முறைகளின் அடிப்படையில் பணிப்பாளர் சபையானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றது. கம்பனியின் நிதியியல் அறிக்கையிடல் முறைமையானது நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக ஓர் நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக என உறுதிப்படுத்துகின்றது.

## வெளிவாரி கணக்காய்வாளரினால் இக்கூற்றின் மீளாய்வு

வெளிவாரி கணக்காய்வாளர் 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பாளர்களது கூற்றினை மீளாய்வு செய்துள்ளதுடன், கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செயல்முறையானது அவர்களது புரிந்துணர்வுடன் கூற்றானது முரண்பட்டுள்ளது என நம்புவதற்கு எதுவும் அவர்களது கவனத்திற்கு வரவில்லை என சபைக்கு அறிக்கையிட்டுள்ளார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்

கொரலி பியட்டர்ஸ்
தலைமை
சபை கணக்காய்வு குழு

சுஜீவ ராஜபக்ஷ
தலைவர்

ரொஹான் பத்திரகே
பணிப்பாளர்

29 ஜூன் 2021
கொழும்பு

# பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதியியல் அதிகாரி ஆகியோரது பொறுப்புக்கூறல் கூற்று

31 மார்ச் 2021 இல் உள்ளவாறான, பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (கம்பனி)இன் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் ஒன்றிணைக்கப்பட்ட (குழுமம்) நிதிக் கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன:

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் (இலங்கை ப.க.)வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ;
- 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் ;
- 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் ;
- 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதியியல் வணிகச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள் ;
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள், மற்றும்
- இலங்கை ப.க. இனால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறை நியமம்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியிடல் விதிகளுக்கு இணங்க குழுமமானது அதன் பங்குதாரர்களுக்கு ஓர் காலாண்டு அடிப்படையில் இடைக்கால நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கின்றது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதும் தொடர்ச்சியாக குழுமத்தினால் பிரயோகிக்கப்பட்டதாகும். விதந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களிலிருந்து அவற்றின் கடைப்பிடிப்பில் எவ்வித விலகள்களும் இல்லை. ஒப்பிடப்படும் தகவல்கள் நடைமுறை காட்சிப்படுத்தலுடன் இணங்குவதற்காக அவசியமானபோது மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் ஏதேனும் விலகல்கள் காணப்பட்டால் அவை வெளிப்படுத்தப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளன. உயர்ந்த மட்டத்திலான அனுமானம் மற்றும் சிக்கல் தன்மையினை உள்ளடக்கிய கணிசநிலை கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகள் கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளர் மற்றும் சபை கணக்காய்வுக் குழுவுடன் கலந்துரையாடப்பட்டது.

நிதிக் கூற்றுக்களின் நேர்மை மற்றும் நடுநிலைத்தன்மைக்கு பணிப்பாளர்கள் சபை மற்றும் முகாமைத்துவம் பொறுப்பினை ஏற்கின்றது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் ஓர் நியாயமான மற்றும் விவேகமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன; நிதிக் கூற்றுக்கள் ஓர் மெய்யான மற்றும் நியாயமான விதத்தில் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக ; கொடுக்கல் வாங்கல்களின் வடிவம் மற்றும் சாரம் மற்றும் கம்பனியின் அலுவல்களின் நிலைமை நியாயமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பனவாகும். குழுமமானது செயற்பாட்டினை தொடர்வதற்கு போதுமான வளங்களைக் கொண்டுள்ளது மற்றும் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படை பிரயோகிக்கப்ட்டுள்ளது என நாம் உறுதியளிக்கின்றோம்.

இதனை உறுதிப்படுத்துவதற்காக கம்பனி மற்றும் குழுமமானது ஓர் உள்ளகக் கட்டுப்பாட்டு மற்றும் கணக்கீட்டு பதிவுகள் முறைமையினை நிறுவுவதில் ஒழுங்கான மற்றும் போதுமான கவனத்தினை எடுத்துள்ளது. அத்துடன் மோசடிகள் அதேபோன்று ஏனைய முறைகேடுகளை தடுப்பதற்காகவும் கண்டுபிடிப்பதற்காகவும் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காவும் இவை மீளாய்வு செய்யப்பட்டு, மதிப்பிடப்பட்டு மற்றும் ஓர் தொடர்ச்சியான அடிப்படையில் இற்றைப்படுத்தப்படுகின்றன.

கம்பனி மற்றும் குழுமத்தின் நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் என்பன தொடர்ச்சியாக பின்பற்றப்படுவதில் நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது காலாகால கணக்காய்வுகளை நடாத்தியுள்ளது. எவ்வாறாயினும், ஏதேனும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்கீடுகளினால் வழங்கப்படும் உறுதிமொழியினை அளவிடுவதில் காணப்படும் உள்ளார்ந்த வரையறைகள் அறிந்துகொள்ளப்படல் வேண்டும்.

சபை கணக்காய்வுக் குழுவானது பின்வருவனவற்றை மீளாய்வு செய்தது: அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு மற்றும் பரிசீலனை திட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் செயல்முறைகளின் செயற்திறன், கணக்கீட்டுக் கொள்கைகளின் தரம் மற்றும் சட்டரீதியான மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அவற்றின் பின்பற்றல், வெளிவாரி கணக்காய்வுத் திட்டம் மற்றும் முகாமைத்தவக் கடிதங்கள் மற்றும் சட்டரீதியான கணக்காய்வின்போது எழுப்பப்பட்ட ஏதேனும் சிக்கல்களின் பின்தொடர் நடவடிக்கை என்பனவாகும். இவற்றின் விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 144 மற்றும் 145 இல் காணப்படும் "சபை கணக்காய்வுக் குழு அறிக்கை" இல் வழங்கப்பட்டுள்ளன. கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் குழுமத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் அவரது அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 168 முதல் 171 வரை வழங்கப்பட்டுள்ளது.

நாம் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்;

- குழுமமானது இயைபுள்ள அனைத்து சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் விவேகமுள்ள தேவைப்பாடுகளுடன் இணக்கம் கண்டுள்ளது, எவ்விதமான கணிசநிலை இணக்கப்பாடின்மையும் காணப்படவில்லை;
- இந்த ஆண்டறிக்கையின் நிதிக் கூற்றுக்களில் பக்கம் 270 இல் குறிப்பு 53.1.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர குழுமத்திற்கு எதிராக எவ்விதமான கணிசநிலை வழக்காடல்களும் நிலுவையில் இல்லை.

குழுமத்தினால் 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் பணியாட்கள் தொடர்பாகவும் அவர்கள் சார்பிலும் அனைத்து பங்களிப்புகள், கட்டணங்கள் மற்றும் செலுத்தவேண்டிய வரிகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமானவிடத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமிந்திர மார்சிலீன்
பிரதம நிறைவேற்று அதிகாரி

ஓமல் சுமனசிறி
பிரதம முகாமையாளர் - நிதி

07 ஜுலை 2021
கொழும்பு

# சுயாதீன கணக்காய்வாளரது அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAF/D/PLF/2021/01 — ඔබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 07 June 2021

தலைவர்
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ்
பிஎல்சி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் ஏற்பாடுகளுக்கமைய 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான கணக்காய்வாளர் அதிபதி அவர்களின் அறிக்கை.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி ("கம்பனி") இன் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் (குழுமம் ) ஒருங்கிணைக்கப்பட்ட 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளது சுருக்கம் உள்ளடங்களான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றிலான கணக்காய்வானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமைய எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொது நடைமுறையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் ஒன்று எனக்கு துணையளித்தது.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம், கம்பனி மற்றும் குழுமத்தின் 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்திறன் மற்றும் காசுப்பாய்ச்சல்கள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் மெய்யானதும் மற்றும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 முக்கிய கணக்காய்வு விடயங்கள்

எனது தொழில்சார் தீர்மானத்தின் படி முக்கிய கணக்காய்வு விடயங்கள் என்பன நடைமுறை காலத்தில் நிதிக் கூற்றுக்களிலான எனது கணக்காய்வில் மிகவும் கணிசமாகக் காணப்பட்டவையாகும். இந்த விடயங்கள் நிதிக் கூற்றுக்களிலான முற்றான எனது கணக்காய்வின் சூழலில் விளித்துரைக்கப்பட்டதுடன், மற்றும் இவற்றிலான எனது அபிப்பிராயத்தினை உருவாக்குவதில், மற்றும் இந்த விடயங்களில் நான் தனியான அபிப்பிராயத்தினை வழங்கவில்லை.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

<table>
<tr><th>முக்கிய கணக்காய்வு விடயம்</th><th>முக்கிய கணக்காய்வு விடயத்தினை எவ்வாறு எனது கணக்காய்வு விழித்துரைத்தது</th></tr>
<tr><td>கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் தள்ளுபடிகள்<br><br>31 மார்ச் 2021 இல் உள்ளவாறான குழுமத்தின் மொத்த சொத்துக்களில் 82% ஆனவை கடன்கள் மற்றும் வருமதிகளை உள்ளடக்குவதுடன் இது ரூபா 149,342 மில்லியனாக (குறிப்பு 25), வலுக்குன்றல் தள்ளுபடியாக ரூபா 9,882 மில்லின் (குறிப்பு 25) கழிக்கப்பட்டதன் பின்னர் காணப்பட்டது.<br><br>குறிப்பு 25.7 இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு, பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்ட அத்தகைய நிதிச் சொத்துக்களிலான வலுக்குன்றல் தள்ளுபடிகள் இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 நிதியியல் கருவிகள் (SLFRS 9) இற்கமைய தீர்மானிக்கப்படுகின்றது.<br><br>இது பின்வருவனவற்றிற்காக ஓர் முக்கிய கணக்காய்வு விடயமாக காணப்படுகின்றது:<br><br>○ அறிக்கையிடப்பட்ட வலுக்குன்றல் தள்ளுபடியின் கணிசநிலையானது விரிதாள் கணிப்பீடுகளை உள்ளடக்குகின்றது ; மற்றும்<br>○ கணிப்பீடுகளுடன் இணைந்துள்ள அனுமானங்கள், தீர்வுகள் மற்றும் மதிப்பீடுகளது அளவின் நிச்சயமற்றதன்மை.<br><br>முகாமைத்துவத்தினால் வலுக்குன்றல் தள்ளுபடிகளை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படும் கணிசநிலை தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களது முக்கிய பிரிவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:<br><br>○ கோவிட்-19 இன் சாத்தியமான தாக்கங்கள் மற்றும் தொடர்பான துறைசார் பதில்கள் (உதாரணம். அரசாங்க ஊக்குவிப்பு பொதிதொகுப்புகள் மற்றும் குழுமத்தினால் வழங்கப்பட்ட கடன் காலம் தாழ்த்தித் தீர்க்கும் நிவாரண வழிமுறைகள்);<br>○ முன்னோக்கிய பாரியபொருளாதார காரணிகள், அபிவிருத்தி மற்றும் பாரியபொருளாதார சூழ்நிலைக்காட்சிகளை ஒருங்கிணைத்தல் உள்ளடங்கலாக, கோவிட்-19 இலிருந்தான பரந்த சாத்தியமான பொருளாதார விளைவுகள் மற்றும் நிகழக்கூடிய தாக்கங்கள் எதிர்கால எதிர்பார்க்கும் கடன் நட்டங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.</td><td>நான் குழுமத்தின் எதிர்பார்க்கும் கடன் நட்ட கணிப்பீடுகள் மற்றும் SLFRS 9 தேவைப்பாடுகளுடன் உள்ளார்ந்த முறைகளது சீரமைவினை மதிப்பீடு செய்தேன். அத்துடன் எனது அறிக்கையின் திகதி வரைக்குமாக கிடைக்கக்கூடிய சிறந்த தகவல்களின் அடிப்படையில் தொடர்புடைய துறையினது பதிலையும் மதிப்பீடு செய்தேன்.<br><br>கணக்காய்வு செயல்முறைகள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:<br><br>○ கடன்கள் மற்றும் வருமதிகளது வலுக்குன்றல் மதிப்பீடுகள் மீதான பொருத்தமானவிடத்து நான் கட்டுப்பாடுகளது வடிவமைப்பு பயனுறுதித்தன்மையினை மதிப்பீடு செய்தேன். இது மேற்பார்வை மட்டத்தினை மதிப்பிடுதல், கடனுக்கான ஏற்பாட்டின் மீளாய்வு மற்றும் அங்கீகாரம் மற்றும் சபை மற்றும் முகாமைத்துவத்தின் வலுக்குன்றல் கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் என்பவற்றை உள்ளடக்கின.<br>○ கணிப்பீடுகளில் பயன்படுத்தப்பட்ட உள்ளார்ந்த தரவுகளின் பூரணத்துவம் மற்றும் துல்லியம் என்பவற்றை கம்பனியின் மூல ஆவணங்கள் மற்றும் கணக்கீட்டு பதிவுகளுடன் கணிசமான விபரங்களுடன் உடன்படுவதன் மூலமாக நான் பரிசீலித்தேன்.<br>○ உள்ளார்ந்த கணிப்பீடுகளை நான் மாதிரிஆய்வு செய்தேன்.<br>○ மேற்குறிப்பிட்டவற்றிற்கும் மேலாக பின்வரும் முன்னிறுத்தப்பட்ட செயல்முறைகள் செயலாற்றப்பட்டன:<br><br>வலுக்குன்றலுக்காக ஓர் மாதிரி கடன்கள் மற்றும் வருமதிகள் மதிப்பீடு செய்வதற்காக :<br><br>○ வலுக்குன்றலுக்கான ஏதேனும் குறிகாட்டிகள் காணப்படுகின்றதா என முகாமைத்துவம் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தும் வரன்முறைகளது பொருந்துதன்மையினை மதிப்பீடு செய்தல்; மற்றும்<br>○ வலுக்குன்றல் குறிகாட்டிகள் காணப்படும்போது, ஓர் மாதிரி அடிப்படையில் அரசாங்கத்தின் நிவாரண வழிமுறைகள், கழிவிறக்க வீதங்கள் மற்றும் வைத்திருக்கும் பிணைச்சொத்தின் பெறுமதி என்பவற்றை கருத்திற்கொண்டு எதிர்பார்க்கும் எதிர்கால காசுப் பாய்ச்சல் உள்ளடங்கலான முகாமைத்துவத்தின் எதிர்பார்க்கும் எதிர்கால மீட்டல்களின் நியாயத்தன்மையினை நான் மதிப்பீடு செய்தேன்.<br><br>வலுக்குன்றலுக்காக கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான கூட்டான மதிப்பீடு:<br><br>○ முன்னோக்கிய தகவல்கள் மற்றும் சூழ்நிலைக்காட்சி ஆகியவற்றின் நியாயமானதன்மை உள்ளடங்கலாக முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் நியாயமானதன்மையினை மதிப்பீடு செய்தல்; மற்றும்<br>○ கோவிட்-19 தொற்றின் நிகழக்கூடிய விளைவுகளை கருத்திற்கொண்டு மேலும் சுமத்தல்களை தீர்மானிப்பதற்காக முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட அடிப்படை மற்றும் தரவுகளை பொருத்தமானவாறு மதிப்பீடு செய்தல்.<br>○ குறிப்புகள் 11 மற்றும் 25 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்களது போதுமையினை நான் மதிப்பீடு செய்தேன்.</td></tr>
<tr><td>நிதியியல் அறிக்கையிடலுக்கு பொருத்தமான த.தொ. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்<br><br>குழுமமானது அதன் செயற்பாடுகளில் பன்முகமான த.தொ. முறைமைகளை பயன்படுத்துகின்றது. நிதியியல் அறிக்கையிடலுக்கு பொருத்தமான த.தொ.முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை ஓர் முக்கிய கணக்காய்வு விடயமாக பின்வருவனவற்றிற்காக நான் தெரிவுசெய்தேன்:<br><br>○ குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடும் செயல்முறையானது அதன் த.தொ. முறைமைகளிலிருந்து பெறப்படும் தகவல்களில் பெரிதும் தங்கியுள்ளது மற்றும்<br>○ பன்முகமான முறைமையினது பயன்படுத்தலை உள்ளடக்கிய் முக்கிய நிதிக் கூற்று வெளிப்படுத்தல்கள்<br>– உருவாக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் அவற்றிலான கணிப்பீடுகள்<br><br>○ அதிகரித்த தொலைநிலை அணுகலைக் கொண்டு ஓர் மாற்றமடைந்த தொழிற்படும் சூழல்</td><td>எனது கணக்காள்வு செயல்முறைகள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:<br><br>○ தொலைநிலை அணுகலது அதிகரிப்புடன் நிதியியல் அறிக்கையிடலுக்கு பொருத்தமான த.தொ. முறைமைகள் மீதான பாதுகாப்பு கண்காணிப்பு செயல்முறைகளை புரிந்துகொள்ளல்.<br>○ நிதிக் கூற்றுக்களது வெளிப்படுத்தல்களுக்காக கணிசநிலை தகவல்களை கணிப்பிடுவதில் மற்றும் பன்முகமான முறைமை அறிக்கைகளை உருவாக்குதல் மீதான முகாமைத்துவத்தினால் அமுலாக்கப்பட்ட முக்கிய தன்னியக்கமயமாக்கப்பட்ட, ெ.தொ இல் தங்கிய மற்றும் மானிட கட்டுப்பர்டுகளின் வடிவமைப்பு மற்றும் செயற்பாட்டு செய்றதிறனை புரிந்துகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>○ கணிசநிலை வெளிப்படுத்தல்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் அறிக்கைகளின் மூலத் தரவுகளின் துல்லியம் மற்றும் பூரணத்துவத்தினை சரிபார்த்தல்;<br>○ முகாமைத்துவத்தின் பொதுப் பேரேட்டு கணக்கிணக்க செயல்முறைகளின் நியாயத்தன்மையினை மதிப்பீடு செய்தல். இது முறைமை அறிக்கைகள் மற்றும் பொருத்தமானவிடத்து மூலத் தரவுகளை குறுக்குச் சோதனையினையும் உள்ளடக்கும்.</td></tr>
</table>

# சுயாதீன கணக்காய்வாளரது அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| முக்கிய கணக்காய்வு விடயம் | முக்கிய கணக்காய்வு விடயத்தினை எவ்வாறு எனது கணக்காய்வு விழித்துரைத்தது |
|---|---|
| **வட்டி வருமான அங்கீகாரத்தில் கடன் காலந்தாழ்த்தித் தீர்க்கும் வசதி மற்றும் ஏனைய நிவாரண நடவடிக்கைகளின் தாக்கம்.**<br><br>கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு குழுமத்தினால் கடன் காலந்தாழ்த்தித் தீர்க்கும் வசதி மற்றும் ஏனைய நிவாரண நடவடிக்கைகள் வழங்கப்பட்டன.<br><br>கடன் மற்றும் வருமதிகளிலான வட்டி வருமான அங்கீகாரத்தில் கடன் காலந்தாழ்த்தி தீர்க்கும் வசதி மற்றும் ஏனைய நிவாரண நடவடிக்கைகளின் தாக்கமானது பின்வரும் காரணத்திற்காக ஓர் முக்கிய கணக்காய்வு விடயமாக காணப்பட்டது :<br><br>○ வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் அத்தகைய கடன் காலந்தாழ்த்தி தீர்க்கும் வசதி மற்றும் ஏனைய நிவாரண நடவடிக்கைகள் கணிசமானளவு திருத்தங்களை விளைவித்துள்ளதா அல்லது இல்லையா என்பதனை தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்களவு தீர்மானங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.<br>○ காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட வருவாய் தொகையில் அத்தகைய கடன் காலந்தாழ்த்தி தீர்க்கும் வசதி மற்றும் ஏனைய நிவாரண நடவடிக்கைகளின் தாக்கங்களை அளவிடுவதற்காக முகாமைத்துவத்தினால் விரிதாள் அடிப்படையிலான கணிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டன. | ஏனையவற்றுக்கிடையில், எனது கணக்காய்வு செயல்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன்<br><br>○ வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் காலந்தாழ்த்தித் தீர்க்கும் வசதி மற்றும் ஏனைய நிவாரண நடவடிக்கைகளை வழங்குவதற்கு, பதிவுசெய்வதற்கு மற்றும் கணக்கீடு செய்வதற்கு குழுமத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட செயல்முறையில் நான் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொண்டேன்.<br>○ வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில், ஓர் மாதிரி அடிப்படையில், கடன் காலந்தாழ்த்தி தீர்க்கும் வசதி மற்றும் ஏனைய நிவாரண நடவடிக்கைகள் கணிசமானளவு திருத்தங்களை விளைவித்துள்ளதா அல்லது இல்லையா என்பதனை தீர்மானிப்பதில் முகாமைத்துவத்தினால் பிரயோகிக்கப்பட்ட தீர்மானங்களின் நியாயத்தன்மையினை நான் மதிப்பீடு செய்தேன். இது வட்டி வருவாய் அங்கீகாரத்திற்கான கணக்கீட்டு கொள்கைக்கு ஏற்றாற்போல் திருத்தியமைக்கப்பட்ட ஒப்பந்தங்களிலான வட்டி வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்ற மதிப்பீட்டினையும் உள்ளடக்குகின்றது<br>○ உள்ளார்ந்த விரிதாள் அடிப்படையிலான கணிப்பீடுகளின் துல்லியத்தினை நான் பரிசீலனை செய்தேன். எனது செயல்முறைகள், அத்தகைய விரிதாள் அடிப்படையிலான கணிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட தரவுகளின் பூரணத்துவம் மற்றும் துல்லியத்தின் பரிசீலிப்பினை உள்ளடக்கியதுடன், ஓர் மாதிரி அடிப்படையில் மூல ஆவணங்கள் மற்றும் கடன் காலந்தாழ்த்தி தீர்க்கும் வசதி வழங்கப்பட்ட வாடிக்கையாளர்களது விபரத்திரட்டுடன் உடன்படுதல் என்பவற்றையும் உள்ளடக்கின. |

## 1.4 குழுமத்தின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வு அறிக்கை தவிர்ந்த தகவல்கள் குழுமத்தின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்களாகும் என்பதுடன் இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் நான் அவற்றிலான எந்த விதமான உறுதியினையும் தெரிவிக்கவில்லை..

நிதிக் கூற்றுக்களிலான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை எனக்கு கிடைக்கும்போது வாசித்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதில், ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் கணிச நிலையில் முரண்படுகின்றதா எனக் கருதுதல் அல்லது கணக்காய்வில் பெற்றுக்கொண்ட எனது அறிவு அல்லது இல்லையெனில் கணிச நிலையில் தவறாகக் கூறப்பட்டுள்ளதாக தோன்றுமாயின், நான் செயலாற்றிய வேலையின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்களில் ஓர் கணிச நிலை பிறழ்கூற்று காணப்படுகின்றதா என கருதுதல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்கு பொறுப்பானவர்களின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை வழங்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்தினதாகும். அத்துடன் மோசடி அல்லது பிழையின் காரணமாக நிதிக் கூற்றுக்கள் எவ்விதமான கணிசநிலை பிறழ்கூற்றுக்களின்றி தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு முகாமைத்துவம் அவசியம் என தீர்மானிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கும் பொறுப்பாளியாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக செயல்படுவதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடும் பொறுப்பானது முகாமைத்துவத்தினதாகும் என்பதுடன், நிறுவனச் செயல்நிலை தொடர்நிலை தொடர்பாக பொருத்தமானவிடத்து விடயங்களை வெளிப்படுத்துவதுடன் முகாமைத்துவம் குழுமத்தினை கலைக்கும் நோக்கத்தினை அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கு அல்லது எவ்வித யதார்த்தமான மாற்றுவழியின்றி அவ்வாறு செய்யவேண்டும் என்று ஏற்பட்டாலொழிய நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி கணக்கீட்டின் அடிப்படையினை பயன்படுத்தலாம்.

ஆளுகைக்கு பொறுப்பாயுள்ளோர்கள் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்சு சட்டத்தின் பிரிவு 16 (1) இன் பிரகாரம், குழுமத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்காக, குழுமமானது அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றிற்கு முறையான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு வேண்டப்படுகின்றது.

## 1.6 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வாளரது அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு காணப்படுமாயின், இனங்காணும் என்ற உத்தரவாதமல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்ற சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கணிச நிலையாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான் :

- ○ நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- கம்பனி மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான கம்பனி மற்றும் குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவு செய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த காட்சியளிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான காட்சியளிப்பினை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுகை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கணக்காய்வின் திட்டமிட்ட நோக்கம் மற்றும் கணக்காய்வின் நேரம் மற்றும் கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

**2.1** 2018 ஆம் ஆண்டின் 19ஆம்இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

**2.1.1** கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) (டி) இன் தேவைக்கேற்ப கம்பனியானது முறையான கணக்கீட்டுப் பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தினை வழங்குகின்றது.

**2.1.2** கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 151 இன் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது.

**2.1.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (டி) (iii) இன் தேவைப்பாட்டிற்கமைய காட்சிப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

**2.1.4** 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (டி) (iv) இன் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

**2.2** செயலாற்றப்பட்ட செயல்முறைககள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை

**2.2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (டி) இன் தேவைக்கேற்ப வழக்கமான வணிகங்களுக்கு அப்பால் கம்பனியினது ஆளுகை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் கம்பனியினால் செய்துகொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.

**2.2.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எவ் ) இன் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், கம்பனியின் ஆளுகை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொது மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு கம்பனி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு

**2.2.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஜி) இன் தேவைக்கேற்ப கம்பனியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு

**2.2.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எச் ) இன் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு இணங்க கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.

டபிள்யு பி சி விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதிக் கூற்று - உள்ளடக்கங்களது அட்டவணை


| | | பக்கம் இல. |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்கள் | | |
| | இலாபம் அல்லது நட்டக் கூற்று | 173 |
| | விரிவான வருமானக் கூற்று | 174 |
| | நிதி நிலைமைக் கூற்று | 175 |
| | உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று | 176 |
| | காசுப் பாய்ச்சல் கூற்று | 178 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | | |
| 1. | கூட்டாண்மை மற்றும் குழுமத் தகவல்கள் | 179 |
| 2. | தயாரிப்பின் அடிப்படை மற்றும் ஏனைய முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் | 179 |
| 3. | பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள் | 182 |
| 4. | வழங்கப்பட்ட நியமங்கள் ஆனால் இன்னமும் பயனுக்கு வராதவை | 186 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்று | | |
| 5. | மொத்த வருமானம் | 188 |
| 6. | தேறிய வட்டி வருமானம் | 188 |
| 7. | தேறிய உழைத்த காப்புறுதி தவணைப்பணம் | 190 |
| 8. | கட்டண மற்றும் தரகு வருமானம் | 191 |
| 9. | நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபம்/ (நட்டம்) - இ.ந.ஊ.நி.பெ. | 192 |
| 10. | ஏனைய செயற்பாட்டு வருமானம் | 192 |
| 11. | கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் கட்டணம் மற்றும் ஏனைய நட்டங்கள் | 193 |
| 12. | ஆளணிச் செலவினங்கள் | 196 |
| 13. | பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதிகுறைப்பு | 196 |
| 14. | நலன்கள், கோரல்கள் மற்றும் காப்பீட்டுச் செலவினம் | 197 |
| 15. | ஏனைய செற்பாட்டு செலவினங்கள் | 198 |
| 16. | நிதிச் சேவைகளிலான வரி | 198 |
| 17. | வரமான வரிச் செலவினம் | 199 |
| 18. | சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை / நீர்த்த உழைப்பு | 202 |
| 19. | பங்கொன்றிற்கான பங்கிலாபம் | 203 |
| நிதி நிலைமைக் கூற்று - சொத்துக்கள் | | |
| 20. | அளவீட்டு அடிப்படையில் நிதியியல் கருவிகளின பகுப்பாய்வு | 203 |
| 21. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதி | 205 |
| 22. | காசும் காசுக்குச் சமனானவைகளும் | 212 |
| 23. | வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான மீதி | 213 |
| 24. | நிதியியல் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 214 |
| 25. | கடன்கள் மற்றும் வருமதிகள் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | 216 |
| 26. | காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வருமதிகள் | 233 |
| 27. | நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினுடாக நியாயப் பெறுமதியில் | 234 |
| 28. | கடன் கருவிகள் - பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் | 236 |
| 29. | துணைக்கம்பனிகளிலான முதலீடுகள் | 236 |
| 30. | முதலீட்டு ஆதனம் | 238 |
| 31. | ஏனைய சொத்துக்கள் | 240 |
| 32. | ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 241 |
| 33. | பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 245 |
| 34. | நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 246 |
| நிதி நிலைமைக் கூற்று - பொறுப்புக்கள் | | |
| 35. | வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 248 |
| 36. | வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 251 |
| 37. | வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 252 |
| 38. | ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 255 |
| 39. | காப்புறுதிப் பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | 255 |
| 40. | குத்தகை பொறுப்புக்கள் | 257 |
| 41. | நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 258 |
| 42. | ஏனைய பொறுப்புக்கள் | 259 |
| 43. | ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 259 |
| 44. | ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | 262 |
| நிதி நிலைமைக் கூற்று - உரித்துவம் | | |
| 45. | கூறப்பட்ட மூலதனம் | 264 |
| 46. | சட்டரீதியான ஒதுக்க நிதியம் | 265 |
| 47. | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் | 266 |
| 48. | ஏனைய ஒதுக்கங்கள் | 266 |
| 49. | கட்டுப்பாடற்ற அக்கறை | 268 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | | |
| 50. | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுக்கான கணக்கிணக்கம் | 268 |
| 51. | செயற்பாட்டு சொத்துக்களிலிருந்தான மாற்றம் | 269 |
| 52. | செயற்பாட்டு பொறுப்புகளிலிருந்தான மாற்றம் | 269 |
| ஏனைய நிதியியல் வெளிப்படுத்தல்கள் | | |
| 53. | ஐயப்பாடான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் | 270 |
| 54. | சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் | 271 |
| 55. | நடைமுறை/நடைமுறையற்ற பகுப்பாய்வு | 272 |
| 56. | பிரிவுவாரியான நிதியியல் அறிக்கையிடல் | 273 |
| 57. | பிணையீடு செய்யப்பட்ட சொத்துக்கள் | 275 |
| 58. | தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல் | 275 |
| 59. | இடர்நேர்கை முகாமைத்துவம் | 280 |
| 60. | அறிக்கையிடப்படும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள் | 307 |

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | கம்பனி மாற்றம் % | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 | குழுமம் மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 5 | 188 | 27,103,798 | 33,599,314 | (19.33) | 33,645,265 | 40,054,830 | (16.00) |
| வட்டி வருமானம் | 6.1 | 189 | 24,983,445 | 31,459,108 | (20.58) | 26,821,838 | 33,282,879 | (19.41) |
| கழி: வட்டிச் செலவினம் | 6.2 | 189 | 13,064,310 | 15,786,586 | (17.24) | 13,375,197 | 16,110,935 | (16.98) |
| தேறிய வட்டி வருமானம் | 6 | 188 | 11,919,135 | 15,672,522 | (23.95) | 13,446,641 | 17,171,944 | (21.69) |
| தேறிய உழைத்த காப்புறுதி தவணைப்பணம் | 7 | 190 | - | - | - | 5,028,549 | 5,202,030 | (3.33) |
| கட்டண மற்றும் தரகு வருமானம் | 8 | 191 | 1,818,675 | 1,694,014 | 7.36 | 1,198,054 | 1,165,632 | 2.78 |
| நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபம் / (நட்டம்)- இ.ந.ஊ.நி.பெ. | 9 | 192 | 162,616 | 11,017 | 1,376.05 | 228,258 | 19,586 | 1,065.41 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 10 | 192 | 139,062 | 435,175 | (68.04) | 368,566 | 384,703 | (4.19) |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | | | 14,039,488 | 17,812,728 | (21.18) | 20,270,068 | 23,943,895 | (15.34) |
| கழி: கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்ககுன்றல் கட்டணம் மற்றும் ஏனைய நட்டங்கள் | 11 | 193 | 1,043,837 | 4,646,683 | (77.54) | 1,352,489 | 4,901,902 | (72.41) |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களுக்கான வலுக்குன்றல் கட்டணம் | 33 | 245 | - | 36,965 | (100.00) | - | 36,965 | (100.00) |
| நன்மதிப்பிற்கான வலுக்குன்றல் கட்டணம் | 34 | 246 | 99,209 | 68,145 | 45.59 | 99,209 | 68,145 | 45.59 |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | | | 12,896,442 | 13,060,935 | (1.26) | 18,818,370 | 18,936,883 | (0.63) |
| கழி: செலவினங்கள் | | | | | | | | |
| ஆளணிச் செலவுகள் | 12 | 196 | 3,465,373 | 3,701,385 | (6.38) | 4,354,636 | 4,561,026 | (4.53) |
| பொறுமானத்தேய்வு மற்றும் பெறுமானக்குறைப்பு | 13 | 196 | 722,994 | 717,021 | 0.83 | 647,693 | 635,998 | 1.84 |
| நலன்கள், கோரல்கள் மற்றும் காப்பீட்டுச் செலவினம் | 14 | 197 | - | - | - | 2,663,347 | 3,441,937 | (22.62) |
| ஏனைய செயற்பாட்டுச செலவுகள் | 15 | 198 | 1,612,859 | 2,088,244 | (22.76) | 2,048,058 | 2,565,073 | (20.16) |
| மொத்த செயற்பாட்டு செலவினங்கள் | | | 5,801,226 | 6,506,650 | (10.84) | 9,713,734 | 11,204,034 | (13.30) |
| நிதிச் சேவைகளிலான வரிகளுக்கு முந்திய செயற்பாட்டு இலாபம் | | | 7,095,216 | 6,554,285 | 8.25 | 9,104,636 | 7,732,849 | 17.74 |
| கழி: நிதிச் சேவைகளிலான வரி | 16 | 198 | 1,222,628 | 2,002,460 | (38.94) | 1,273,966 | 2,030,532 | (37.26) |
| வருமான வரிச் செலவினத்திற்கு முந்திய இலாபம் | | | 5,872,588 | 4,551,825 | 29.02 | 7,830,670 | 5,702,317 | 37.32 |
| கழி: வருமான வரிச் செலவினம் | 17 | 199 | 1,839,568 | 1,609,317 | 14.31 | 2,234,336 | 2,110,568 | 5.86 |
| வருடத்திற்கான இலாபம் | | | 4,033,020 | 2,942,508 | 37.06 | 5,596,334 | 3,591,749 | 55.81 |
| பின்வருவனவற்றிற்கு உடைமையாக்கத்தக்க இலாபம் | | | | | | | | |
| கம்பனியின் உரித்துவ உடைமையாளர்களுக்கு | | | 4,033,020 | 2,942,508 | 37.06 | 5,294,015 | 3,408,670 | 55.31 |
| கட்டுப்பாடற்ற அக்கறை | 49 | 268 | - | - | - | 302,319 | 183,079 | 65.13 |
| வருடத்திற்கான இலாபம் | | | 4,033,020 | 2,942,508 | 37.06 | 5,596,334 | 3,591,749 | 55.81 |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை /நீர்த்த உழைப்பு (ரூபா) | 18 | 202 | 2.37 | 1.73 | 36.99 | 3.11 | 2.00 | 55.50 |
| சாதாரண பங்கொன்றிற்கான பங்கிலாபம் (ரூபா) | 19 | 203 | 0.60 | 1.20 | (49.88) | | | |

பக்கங்கள் 179 முதல் 307 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பாகமாயுள்ளன.

# விரிவான வருமானக் கூற்று



| மார்ச் 31 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | கம்பனி மாற்றம் % | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 | குழுமம் மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருடத்திற்கான இலாபம் | | | 4,033,020 | 2,942,508 | 37.06 | 5,596,334 | 3,591,749 | 55.81 |
| ஏனைய விரிவான வருமானம், வரி நிகராக | | | | | | | | |
| அடுத்து வரும் வருடங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தவேண்டிய உருப்படிகள் (வரி நிகர்): | | | | | | | | |
| வெளிநாட்டு துணைக்கம்பனியின் நிதிக் கூற்றுக்களை மாற்றுவதிலிருந்து எழும் தேறிய இலாபம் /(நட்டம்) | 48.4 | 267 | - | - | - | 141,728 | 139,129 | 1.87 |
| அடுத்து வரும் வருடங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்பட்ட தேறிய உருப்படிகள் | | | - | - | - | 141,728 | 139,129 | 1.87 |
| அடுத்து வரும் வருடங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படக்கூடாத உருப்படிகள் (வரி நிகர்): | | | | | | | | |
| நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலான தேறிய காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் / (நட்டங்கள்) | | | | | | | | |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்கள் | 43.2 | 260 | 107,003 | 172 | 62,111.05 | 106,891 | 1,225 | 8,625.80 |
| காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்களிலான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | 44.1 | 263 | (29,961) | (49) | (61,044.90) | (27,690) | (91) | (30,328.57) |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் மீள் அளவீட்டிலான இலாபம் /(நட்டம்) | 48.3 | 267 | (15,263) | (49,372) | 69.09 | (5,512) | (61,300) | 91.01 |
| அடுத்துவரும் வருடங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தக்கூடாத தேறிய உருப்படிகள் | | | 61,779 | (49,249) | 225.44 | 73,689 | (60,166) | 222.48 |
| வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானம், வரி நிகர் | | | 61,779 | (49,249) | 225.44 | 215,417 | 78,963 | 172.81 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | 4,094,799 | 2,893,259 | 41.53 | 5,811,751 | 3,670,712 | 58.33 |
| பின்வருவனவற்றிற்கு உடைமையாக்கத்தக்கவை: | | | | | | | | |
| கம்பனியின் உரித்துடையாளர்களுக்கு | | | 61,779 | (49,249) | 225.44 | 212,979 | 82,278 | 158.85 |
| கட்டுப்பாடற்ற அக்கறைகள் | 49 | 268 | - | - | - | 2,438 | (3,315) | 173.54 |
| வருடத்திற்கான விரிவான வருமானம், வரி நிகர் | | | 61,779 | (49,249) | 225.44 | 215,417 | 78,963 | 172.81 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | 4,094,799 | 2,893,259 | 41.53 | 5,811,751 | 3,670,712 | 58.33 |

பக்கங்கள் 179 முதல் 307 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பாகமாயுள்ளன.

# நிதி நிலைமைக் கூற்று

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | கம்பனி மாற்றம் % | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 | குழுமம் மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | 22 | 212 | 2,703,031 | 7,164,139 | (62.27) | 3,844,694 | 7,693,032 | (50.02) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான மீதிகள் | 23 | 213 | 5,399,071 | 3,207,440 | 68.33 | 8,231,101 | 6,661,407 | 23.56 |
| நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 24 | 214 | 109,787 | 1,031,719 | (89.36) | 1,281,753 | 1,198,592 | 6.94 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | 25 | 216 | 141,387,907 | 147,747,511 | (4.30) | 149,342,332 | 154,134,934 | (3.11) |
| காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வருமதிகள் | 26 | 233 | - | - | - | 1,024,461 | 1,194,933 | (14.27) |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 27 | 234 | 309,118 | 324,381 | (4.71) | 735,494 | 1,455,702 | (49.47) |
| கடன் கருவி - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | 28 | 236 | 6,994,206 | 4,106,963 | 70.30 | 8,593,386 | 4,813,439 | 78.53 |
| துணைக்கம்பனிகளிலான முதலீடுகள் | 29 | 236 | 3,213,788 | 3,213,788 | - | - | - | - |
| முதலீட்டு ஆதனம் | 30 | 238 | - | - | - | 820,664 | 1,131,652 | (27.48) |
| ஏனைய சொத்துக்கள் | 31 | 240 | 575,220 | 1,147,001 | (49.85) | 932,018 | 1,235,329 | (24.55) |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 32 | 241 | 1,049,250 | 1,143,929 | (8.28) | 4,034,265 | 3,998,370 | 0.90 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 33 | 245 | 2,242,444 | 1,939,450 | 15.62 | 1,591,297 | 1,639,482 | (2.94) |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | 44 | 262 | 415,841 | 376,291 | 10.51 | 594,495 | 471,841 | 25.99 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 34 | 246 | 146,446 | 257,581 | (43.15) | 265,506 | 368,574 | (27.96) |
| மொத்த சொத்துக்கள் | | | 164,546,109 | 171,660,193 | (4.14) | 181,291,466 | 185,997,287 | (2.53) |
| **பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 35 | 248 | 6,439,310 | 7,938,185 | (18.88) | 9,003,873 | 10,978,046 | (17.98) |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 36 | 251 | 101,502,931 | 106,701,027 | (4.87) | 103,743,716 | 107,685,592 | (3.66) |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 37 | 252 | 13,825,553 | 18,479,260 | (25.18) | 13,684,516 | 18,338,039 | (25.38) |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 38 | 255 | 4,131,671 | 3,014,117 | 37.08 | 4,110,795 | 2,829,708 | 45.27 |
| காப்புறுதி பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | 39 | 255 | - | - | - | 5,015,885 | 5,065,220 | (0.97) |
| குத்தகை பொறுப்புக்கள் | 40 | 257 | 2,286,386 | 1,909,098 | 19.76 | 1,614,660 | 1,594,245 | 1.28 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 41 | 258 | 362,450 | 1,803,309 | (79.90) | 883,900 | 2,077,418 | (57.45) |
| ஏனைய பொறுப்புக்கள் | 42 | 259 | 1,069,120 | 975,694 | 9.58 | 1,156,822 | 1,052,756 | 9.89 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 43 | 259 | 587,257 | 592,871 | (0.95) | 657,778 | 647,929 | 1.52 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 44 | 262 | - | - | - | 297,568 | 418,132 | (28.83) |
| மொத்த பொறுப்புக்கள் | | | 130,204,678 | 141,413,561 | (7.93) | 140,169,513 | 150,687,085 | (6.98) |
| **உரித்துவம்** | | | | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 45 | 264 | 14,892,036 | 13,915,414 | 7.02 | 14,892,036 | 13,915,414 | 7.02 |
| சட்டரீதியான ஒதுக்க நிதியம் | 46 | 265 | 2,406,995 | 2,205,344 | 9.14 | 2,464,951 | 2,235,077 | 10.28 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் | 47 | 266 | 17,159,777 | 14,227,988 | 20.61 | 20,682,106 | 16,517,824 | 25.21 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 48 | 266 | (117,377) | (102,114) | 14.95 | 421,319 | 285,103 | 47.78 |
| கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க மொத்த உரித்துவம் | | | 34,341,431 | 30,246,632 | 13.54 | 38,460,412 | 32,953,418 | 16.71 |
| கட்டுப்பாடற்ற அக்கறை | 49 | 268 | - | - | - | 2,661,541 | 2,356,784 | 12.93 |
| மொத்த உரித்துவம் | | | 34,341,431 | 30,246,632 | 13.54 | 41,121,953 | 35,310,202 | 16.46 |
| மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரித்துவம் | | | 164,546,109 | 171,660,193 | (4.14) | 181,291,466 | 185,997,287 | (2.53) |
| ஐயப்பாடான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் | 53 | 270 | 10,998,111 | 5,316,892 | 106.85 | 11,045,100 | 5,350,615 | 106.43 |
| சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி (ரூபா) | 54 | 271 | 20.15 | 18.58 | 8.42 | 22.56 | 20.25 | 11.45 |

இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நாம் சான்றளிக்கின்றோம்.

ஓமால் சுமனசிறி
பிரதம முகாமையாளர் - நிதி

சமிந்திர மார்சிலின்
பிரதம நிறைவேற்று அதிகாரி

இந்த நிதிக்கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையானது பொறுப்பாளியாயுள்ளது.
சபைக்காகவும் மற்றும் சபையின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

சுஜீவ ராஜபக்ஷ
தலைவர்

ரொஹான் பத்திரகே
பணிப்பாளர்

பக்கங்கள் 179 முதல் 307 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பாகமாயுள்ளன.

4 ஜுன் 2021
கொழும்பு

# உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று

| கம்பனி | கூறப்பட்ட மூலதனம் | சட்டரீதியான ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் நியாயப் பெறுமதி ஒதுக்கம் | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | மொத்த உரித்துவம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 1 ஏப்ரல் 2021 .ல் உள்ளவாறான மீதி | 13,236,073 | 2,058,219 | (52,742) | 13,361,805 | 28,603,355 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | 2,942,508 | 2,942,508 |
| ஏனைய விரிவான வருமானம் (வரி நிகர்) | - | - | (49,372) | 123 | (49,249) |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | (49,372) | 2,942,631 | 2,893,259 |
| உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடைமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் | | | | | |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | - | 147,125 | - | (147,125) | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - இடைக்கால | - | - | - | (1,139,392) | (1,139,392) |
| - இறுதி | 679,341 | - | - | (789,931) | (110,590) |
| **உரித்துவ உடைமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்** | 679,341 | 147,125 | - | (2,076,448) | (1,249,982) |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | 13,915,414 | 2,205,344 | (102,114) | 14,227,988 | 30,246,632 |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 13,915,414 | 2,205,344 | (102,114) | 14,227,988 | 30,246,632 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | 4,033,020 | 4,033,020 |
| ஏனைய விரிவான வருமானம் (வரி நிகர்) | - | - | (15,263) | 77,042 | 61,779 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | (15,263) | 4,110,062 | 4,094,799 |
| உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடைமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் | | | | | |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | - | 201,651 | - | (201,651) | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - இடைக்கால | 976,622 | - | - | (976,622) | - |
| **உரித்துவ உடைமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்** | **976,622** | **201,651** | **-** | **(1,178,273)** | **-** |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 14,892,036 | 2,406,995 | (117,377) | 17,159,777 | 34,341,431 |

பக்கங்கள் 179 முதல் 307 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பாகமாயுள்ளன.

| குழுமம் | கூறப்பட்ட மூலதனம் | சட்டரீதியான ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புகள் | மொத்தம் | கட்டுப்பாடற்ற அக்கறை | மொத்த உரித்துவம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நியாயப் பெறுமதி ஒதுக்கம் | வெளிநாட்டு நாணய மாற்றல் ஒதுக்கம் | | | | |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 1 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி | 13,236,073 | 2,070,667 | (54,705) | 261,979 | 15,198,424 | 30,712,438 | 2,269,520 | 32,981,958 |
| மூலதன இலாப வரி | - | - | - | - | 14 | 14 | - | 14 |
| மூலதன இலாப வரியின் பின்னரான மீதி | 13,236,073 | 2,070,667 | (54,705) | 261,979 | 15,198,438 | 30,712,452 | 2,269,520 | 32,981,972 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | 3,408,670 | 3,408,670 | 183,079 | 3,591,749 |
| ஏனைய விரிவான வருமானம் (வரி நிகர்) | - | - | (61,300) | 139,129 | 4,449 | 82,278 | (3,315) | 78,963 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | (61,300) | 139,129 | 3,413,119 | 3,490,948 | 179,764 | 3,670,712 |
| உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடைமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் | | | | | | | | |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | - | 164,410 | - | - | (164,410) | - | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - இடைக்கால | - | - | - | - | (1,139,392) | (1,139,392) | (92,500) | (1,231,892) |
| இறுதி | 679,341 | - | - | - | (789,931) | (110,590) | - | (110,590) |
| **உரித்துவ உடைமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்** | 679,341 | 164,410 | - | - | (2,093,733) | (1,249,982) | (92,500) | (1,342,482) |
| 31 மாாச் 2020 இல் உள்ளவாறான மீதி | 13,915,414 | 2,235,077 | (116,005) | 401,108 | 16,517,824 | 32,953,418 | 2,356,784 | 35,310,202 |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 13,915,414 | 2,235,077 | (116,005) | 401,108 | 16,517,824 | 32,953,418 | 2,356,784 | 35,310,202 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | 5,294,015 | 5,294,015 | 302,319 | 5,596,334 |
| ஏனைய விரிவான வருமனாம் (வரி நிகர்) | - | - | (5,512) | 141,728 | 76,763 | 212,979 | 2,438 | 215,417 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | **-** | **-** | **(5,512)** | **141,728** | **5,370,778** | **5,506,994** | **304,757** | **5,811,751** |
| உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடைமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் | | | | | | | | |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | - | 229,875 | - | - | (229,875) | - | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - இடைக்கால | 976,622 | - | - | - | (976,622) | - | - | - |
| **உரித்துவ உடைமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்** | 976,622 | 229,875 | - | - | (1,206,497) | - | - | - |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 14,892,036 | 2,464,952 | (121,517) | 542,836 | 20,682,105 | 38,460,412 | 2,661,541 | 41,121,953 |

**பக்கங்கள் 179 முதல் 307 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பாகமாயுள்ளன.**

# காசுப்பாய்ச்சல் கூற்று

## கணக்கீட்டுக் கொள்கை

இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 7 'காசுப் பாயச்சல் கூற்று' இன் பிரகாரம் 'நேரடி முறையினை' பயன்படுத்தி காசுப் பாயச்சல் கூற்று தயாரிக்கப்பட்டது. இங்கு செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதியளித்தல் நடவடிக்கைகளை வெவ்வேறாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. காசும் காசுக்குச் சமனானவைகளும் குறுங்கால, தெரிந்துகொண்ட காசுத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மையுள்ள முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இவை பெறுமதியில் ஓர் அற்பமான மாற்றங்களிலான இடர்நேர்கைக்கு உட்படுகின்றது.

| மார்ச் 31 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ.'000 | கம்பனி 2020 ரூ.'000 | குழுமம் 2021 ரூ.'000 | குழுமம் 2020 ரூ.'000 |
|---|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமனானவைகளிலிருந்தான வருமானம் | 6.1 | 189 | 73,753 | 40,471 | 103,501 | 70,219 |
| கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான கொடுப்பனவுகள் | | | (47,647,269) | (57,215,121) | (50,862,600) | (60,513,293) |
| கடன்கள் மற்றும் வருமதிகளிலிருந்தான பெறுகைகள் | | | 78,976,592 | 88,503,718 | 81,166,978 | 91,218,876 |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகளில் முதலீடுகள் | | | (24,145,286) | (5,345,867) | (26,225,019) | (7,914,687) |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகளிலிருந்தான பெறுகைகள் | | | 22,294,433 | 5,928,374 | 25,405,664 | 9,558,349 |
| பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கடன் கருவிகளிலான முதலீடு | | | (22,598,347) | (13,139,128) | (23,741,050) | (13,845,604) |
| பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கடன் கருவிகளிலிருந்தான பெறுகைகள் | | | 20,089,756 | 17,787,435 | 20,339,756 | 17,787,435 |
| வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டியவைகளிலான கொடுப்பனவுகள் | | | (99,054,813) | (108,586,490) | (97,571,015) | (106,951,511) |
| வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டியவைகளிலிருந்தான பெறுகைகள் | | | 83,652,942 | 115,741,329 | 83,337,190 | 115,392,706 |
| ஏனைய வருமானத்திலிருந்தான பெறுகைகள் | | | 1,711 | 5,598 | 216,256 | 270,654 |
| நிதிச் சொத்துக்களில் முதலீடுகள் - இ. அல்லது ந. ஊடாக நியாயப் பெறுமதியில் | | | (8,881,716) | (1,752,531) | (10,028,730) | (1,752,531) |
| நிதிச் சொத்துக்களில் வருவாய் - இ..அல்லது ந. ஊடாக நியாயப் பெறுமதியில் | | | 9,966,264 | 755,019 | 10,173,826 | 645,911 |
| நிதிச் சொத்துக்களில் பெறுகைகள் - ஏ.வி.வ.ஊடாக நியாயப் பெறுமதியில் | | | - | - | 979,028 | (67,226) |
| நிதிச் சொத்துக்களில் முதலீடுகள் - எ.வி.வ.ஊடாக நியாயப் பெறுமதியில் | | | - | - | (264,333) | - |
| ஆளணிச் செலவுகளுக்கான கொடுப்பனவு | | | (3,575,458) | (3,589,152) | (4,377,522) | (4,440,214) |
| குத்தகை பொறுப்புக்களுக்கான கொடுப்பனவு | 40 | 257 | (655,969) | (616,740) | (409,587) | (343,968) |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு | | | (872,388) | (3,819,688) | (885,891) | (4,623,040) |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற தவணைப்பணம் | | | - | - | 5,199,021 | 4,892,492 |
| செலுத்தப்பட்ட கோரல்கள் | | | - | - | (2,712,682) | (3,257,590) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 43 | 259 | (10,353) | (10,726) | (13,148) | (12,103) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 41.1 | 258 | (3,349,938) | (3,071,709) | (3,534,648) | (3,339,472) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | 50 | 268 | 4,263,914 | 31,614,791 | 6,294,995 | 32,775,403 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 32 | 241 | (104,690) | (213,928) | (152,324) | (284,215) |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களது விற்பனையிலிருந்து வருவாய் | | | 54,832 | 9,976 | 210,359 | 17,612 |
| அருவச் சொத்தக்களின் கொள்வனவு | 34 | 246 | (360) | (15,120) | (11,661) | (15,120) |
| முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம் | | | 110,673 | 113,091 | 918 | 17,280 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | | | 60,455 | (105,981) | 47,292 | (264,443) |
| **நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளுக்கான கொடுப்பனவு | 35.1 | 248 | (3,886,355) | (34,046,652) | (5,315,691) | (35,209,177) |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளிலிருந்தான கடன் பெறுகைகள் | 35.1 | 248 | 1,000,000 | 12,950,000 | 1,500,000 | 12,950,000 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களுக்கான கொடுப்பனவு | 37.1 | 252 | (6,589,468) | (5,076,951) | (6,570,514) | (5,060,941) |
| பங்குதாரர்களுக்கு செலுத்திய பங்கிலாபம் | | | (1,345) | (1,136,732) | (1,345) | (1,136,732) |
| கட்டுப்பாடற்ற அக்கறைகளுக்கு செலுத்திய பங்கிலாபம் | | | - | - | - | (92,500) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | | | (9,477,168) | (27,310,335) | (10,387,550) | (28,549,350) |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய (குறைவு)/அதிகரிப்பு** | | | (5,152,799) | 4,198,475 | (4,045,263) | 3,961,610 |
| வருடத்தின் ஆரம்பத்திலுள்ள காசு மற்றும் காசுக்கும் சமனானவைகள் | | | 7,139,456 | 2,940,981 | 6,998,078 | 3,036,468 |
| **வருடத்தின் இறுதியிலுள்ள காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்** | | | 1,986,657 | 7,139,456 | 2,952,815 | 6,998,078 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | | | 2,703,031 | 7,164,139 | 3,844,694 | 7,693,032 |
| வங்கி மேலதிகப்பற்று | | | (716,374) | (24,683) | (891,879) | (694,954) |
| **வருடத்தின் இறுதியிலுள்ள காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்** | | | 1,986,657 | 7,139,456 | 2,952,815 | 6,998,078 |

பக்கங்கள் 179 முதல் 307 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. கூட்டாண்மை மற்றும் குழுமத் தகவல்கள்

### 1.1 கூட்டாண்மைத் தகவல்

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (கம்பனி), இலங்கையில் வதிவிடத்தினைக் கொண்ட 22 ஆகஸ்ட் 1995 இல் ஒருங்கிணைப்பட்ட ஓர் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாகும். இது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஓர் நிதிக் கம்பனியாகும். 24 நவம்பர் 2011 இல் கம்பனியானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் முதன்முறையாக பட்டியலிடப்பட்டது. கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவுசெய்யப்பட்டது.

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட காரியாலயம் மற்றும் பிரதான வணிக இடம் இலக்கம் 1161, மருதாளை வீதி கொழும்பு 08 இல் அமைந்துள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள்
31 மார்ச 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள், பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (தாய் நிறுவனம்), அதன் துணைக்கம்பனிகளை (கூட்டாக குழுமம் என்று குறிப்பிடப்படுகின்றது) உள்ளடக்கும்.

தாய் நிறுவனம் மற்றும் இறுதியான தாய் நிறுவனம்
கம்பனியின் தாய் நிறுவனம் மக்கள் வங்கி என்பதுடன் இது அரச உடைமையான ஓர் நிறுவனமாகும்.

பணியாட்களின் எண்ணிக்கை
31 மார்ச் 20210 இல் உள்ளவாறான கம்பனி மற்றும் குழுமத்தின் பணியாட்கள் பலமானது முறையே 2,343 மற்றும் 3,304 ஆகும். (31 மார்ச் 2020 இல் 2,401 மற்றும் 3,059).

### 1.2 குழுமத் தகவல்கள்

பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

கம்பனி
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி
பிரதான வணிக நடவடிக்கைகள் பின்வருமாறு - நிதிக் குத்தகைகள் வழங்கல், வாடகைக் கொள்வனவு சொத்துக்களுக்கான நிதியளிப்பு, தவணைக் கடன்கள், இஸ்லாமிய நிதியளிப்பு, எல்லைக்கடன் வர்த்தகம், பங்கு வர்த்தகம், கடன் கருவிகளது வழங்கல், வருமதிகளின் கொள்வனவு, தங்கக் கடன்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டுதல் என்பனவாகும்.

துணைக்கம்பனிகள்

| துணைக்கம்பனிகளின் பெயர் | பிரதான நடவடிக்கைகள் | ஒருங்கிணைக்கப்பட்ட நாடு | % உரித்துவ அக்கறை 2021 | 2020 |
|---|---|---|---|---|
| பீபள்ஸ் லீசிங் வ்லீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | வாகனத்தொகுதி முகாமைத்துவம், வாகனப் பெறுமதியிடல், வாகன விற்பனை, காப்புறுதி மதிப்பீடு மற்றும் வாகன திருத்தம் | இலங்கை | 100% | 100% |
| பீபள்ஸ் லீசிங் பிரப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் | கலப்பு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் ஆதனத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் | இலங்கை | 100% | 100% |
| பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பொது காப்புறுதி வணிகத்தினை மேற்கொள்ளல் | இலங்கை | 75% | 75% |
| பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் பிரப்பர்ட்டீஸ் லிமிட்டட். | ஓர் அலுவலக வளாகத்தினை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல் | இலங்கை | 100% | 100% |
| பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் | குறைந்த வருமானம் உழைப்பவர்களுக்கு மற்றும் நுண் நிறுவனங்களுக்கு வங்கியியலல்லாத நிதிச் சேவைகளை வழங்குதல் | இலங்கை | 100% | 100% |
| லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் | அசையும் மற்றும் அசையா ஆதனங்களுக்கு குத்தகை வசதி வழங்கல் மற்றும் கடன் வழங்கல் | பங்களாதேஷ் | 51% | 51% |

மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டில் கம்பனி மற்றும் குழுமத்தின் பிரதான நடவடிக்கைகளின் தன்மையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றங்களும் காணப்படவில்லை.

## 2. தயாரிப்பின் அடிப்படை மற்றும் ஏனைய கருதத்தக்க கணக்கீட்டு கொள்கைகள்

### 2.1 இணக்கப்பாட்டு கூற்று

31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனியின் தனியான நிதிக் கூற்றுக்கள் என்பன, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கேற்ப (SLFRS மற்றும் LKAS) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டம், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித்துறை சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள் என்பவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சலிலான தகவல்கள் தவிர, அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டினை பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் கிழ்காணும் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாயுள்ளது. 'www. casrilanka.com / www.slaasc.lk'.

SLFRS மற்றும் LKAS என்பவற்றின் தேவைப்பாடுகள்:, நிதிக் கூற்றுக்களது தயாரிப்பு மற்றும் காட்சிப்படுத்தலை ஆளுகை செய்யும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காணப்படாத ஏதேனும் பொருத்தமற்ற கணக்கீட்டு நடத்துமுறைகளை குழுமமானது கடைப்பிடிக்கவில்லை.

இவ்வருடத்தில் பின்பற்றப்பட்ட குழுமத்தின் பொதுவான கணக்கீட்க் கொள்கைகளது விபரங்கள் பக்கம் 182 இல் காணப்படும் குறிப்பு 03 இல் வழங்கப்பட்டுள்ளன.

### 2.2 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் SLFRS மற்றும் LKAS என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனி மற்றும் குழுமத்தின் இந்த நிதிக் கூற்றுக்களது தயாரிப்பு மற்றும் காட்சிப்படுத்தலுக்கு பணிப்பாளர் சபையானது பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பொறுப்பினை பணிப்பாளர் சபையானது ஏற்றுக்கொள்வதுடன், இது 'நிதியியல் அறிக்கையிடலிலான

பணிப்பாளர்களது பொறுப்பிலான கூற்று', 'கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை' மற்றும் நிதி நிலைமைக் கூற்றிலான சான்றளிப்பு என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை பக்கம் 136 முதல் 137 வரை வழங்கப்பட்டுள்ளன

இந்த நிதிக் கூற்றுக்கள் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்குகின்றன.

- மீளாய்வாண்டில் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிச் செயற்திறனிலான தகவல்களை வழங்கும் ஓர் இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று ;
- வருடத்தின் இறுதியில் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதி நிலைமையிலான தகவல்களை வழங்கும் ஓர் நிதி நிலைமைக் கூற்று;
- மீளாய்வாண்டில் கம்பனி மற்றும் குழுமத்தின் பங்குதாரர்களது உரித்துவத்திலான அனைத்து மாற்றங்களையும் சித்தரிக்கும் ஓர் உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று;
- கம்பனி மற்றும் குழுமத்தினால் காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளை உருவாக்குவதற்கான ஆற்றல் மற்றும் அந்த காசுப்பாய்ச்சல்களை நிறுவனம் பயன்படுத்துவதற்கான தேவைகள் பற்றிய தகவல்களை பயனாளிகளுக்கு வழங்கும் ஓர் காசுப் பாய்ச்சல் கூற்று ;மற்றும்
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விவரணத் தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்.

### 2.3 பணிப்பாளர் சபையினால் நிதிக் கூற்றுக்களது அங்கீகாரம்

31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் (ஒப்பீடுகள் உள்ளடங்கலாக) 4 ஜூன் 2021 இல் பணிப்பாளர் சபையினால் மேற்கொண்ட தீர்மானத்திற்கிணங்க வெளியிடுவதற்காக 4 ஜூன் 2021 இல் அங்கீகரிக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டது.

### 2.4 அளவீட்டின் அடிப்படை

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் பின்வரும் உருப்படிகள் தவிர வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

| உருப்படி | அளவீட்டின் அடிப்படை | குறிப்பு |
|---|---|---|
| நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | நியாயப் பெறுமதி | 24 |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | நியாயப் பெறுமதி | 27 |
| முதலீட்டு ஆதனம் | நியாயப் பெறுமதி | 30 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளுடன் காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்களை சேர்த்து அவற்றின் நிகழ்காலப் பெறுமதியில் பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. | 43 |

### 2.5 நிதிக் கூற்றுக்களின் காட்சியளிப்பு

நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் கம்பனி மற்றும் குழுமத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தன்மையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு அவற்றின் சார்புடைய திரவத்தன்மை மற்றும் முதிர்வு அமைப்பினை பிரதிபலிக்கும் விதமாக நிரல் படுத்தப்பட்டுள்ளன. அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர்(நடைமுறை) 12 மாதங்களுக்குள் தீர்ப்பனவு செய்யவேண்டிய அல்லது மீட்கவேண்டிய மற்றும் அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர் 12 மாதங்களுக்கு அதிகமானவை (நடைமுறையல்லாத) தொடர்பான ஓர் பகுப்பாய்வு பக்கம் 272 இல் காணப்படும் குறிப்பு 55 இல் (நடைமுறை/நடைமுறையல்லாதவை) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களை பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்காக எவ்விதமான செம்மையாக்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.6 ஈடுகட்டல்

பின்வருவன காணப்பட்டால் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் ஈடுகட்டப்பட்டு தேறிய தொகையானது ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கான சட்டரீதியாக அமுல்படுத்தத்தக்க ஈடுகட்டலுக்கான உரிமை மற்றும் ஓர் நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான அல்லது ஒரேசமயத்தில் சொத்துக்களை தீர்வாக்கி பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கான ஓர் நோக்கம் காணப்படின். ஏதேனும் கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்விளக்கம் தேவைப்படின் அல்லது அனுமதிக்கப்பட்டால் மற்றும் குழுமத்தின் கணக்கீட்டு கொள்கைகளில் குறிப்பிட்டு வெளிப்படுத்தப்பட்டால் ஒழிய வருமானம் மற்றும் செலவினம் ஒருங்கிணைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஈடுகட்டலாகாது.

### 2.7 செயற்பாட்டு மற்றும் காட்சிப்படுத்தல் நாணயம்

குழுமம் மற்றும் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (ரூபா) காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது குழுமம் செயற்படும் பொருளாதார சூழலின் முதன்மை நாணயமாகும் (குழும செயற்பாட்டு நாணயம்). .

### 2.8 முழுதாக்கல்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - LKAS 01 – 'நிதிக் கூற்றுக்களின் காட்சிப்படுத்தல்' இல் வேறுவகையாக குறிப்பிட்டது தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் காணப்படும் தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாய்க்கு (ரூபா '000) முழுதாக்கப்பட்டுள்ளன.

### 2.9 கணிசநிலை மற்றும் திரள்வு

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 01 – 'நிதிக் கூற்றுக்களை காட்சிப்படுத்தல்' இற்கு இணங்க ஒவ்வொரு கணிசநிலை ஒத்த உருப்படி வகுப்பும் தனித்தனியாக நிதிக் கூற்றுக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமற்றதாக இருந்தாலொழிய, ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாடுடைய உருப்படிகள் தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.10 முக்கியமான கணக்கீட்டு தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

SLFRSs/LKASs உடன் இணங்கி தயாரிக்கப்பட்ட கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு கொள்கைகளின் பிரயோகம், அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் தொகைகள், மற்றும் ஐயப்பாடான நிகழ்வுகளின் வெளிப்படுத்தல்களை பாதிக்கக்கூடிய தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை முகாமைத்துவம் செய்யவேண்டும் என வேண்டுகின்றது. மேலும் முகாமைத்துவம் எதிர்காலம் தொடர்பான முக்கிய அனுமானங்கள் மற்றும் அடுத்த நிதியாண்டினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கு கணிசமானளவு செம்மையாக்கல்களை உருவாக்கக்கூடிய குறிப்பிடத்தக்க இடர்நேர்கையினைக் கொண்ட அறிக்கையிடும் திகதியில் மதிப்பீட்டு நிச்சயமற்றதன்மையின் முக்கிய மூலங்களை கருத்திலெடுக்கவேண்டும் என வேண்டுகின்றது. மெய்யான விளைவுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

கணக்கீட்டு தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் உள்ளார்ந்த அனுமானங்கள் ஓர் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளிலான திருத்தங்கள் மதிப்பீடுகள் திருத்தப்படும் காலத்தில் மற்றும் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்கால காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிச்சயமற்றதன்மையினை உள்ளடக்கிய முக்கிய குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன. அத்தகைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உரிய கொண்டு செல்லல் தொகைகள் தொடர்புடைய குறிப்புகளில் வழங்கப்பட்டுள்ளன.

நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி குழுமத்தின் முகாமைத்துவமானது ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வரும் எதிர்காலங்களில் குழுமம் அதன் வணிகத்தினை தொடர்வதற்கான வளங்களைக் கொண்டுள்ளது என திருப்திபடுகின்றது. மேலும், நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தை எழுப்பக்கூடிய எவ்விதமான கணிசநிலை நிச்சயமற்றதன்மைகள் குறித்து முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்கள் ஓர்

நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்படுகின்றது.

31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தீர்மானிக்கும் அடிப்படையானது கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலாகும் என்பதுடன் முகாமைத்துவமானது குழுமக் கம்பனிகளில் கோவிட்-19 இன் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் மற்றும் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையின் பயன்பாட்டினது பொருந்துதன்மையினையும் மதிப்பீடு செய்தது.

குழுமமானது பன்முக அழுத்தசோதனை சூழ்நிலைகளின் கீழ் பல்வேறு தரப்பட்ட காரணிகளை கருத்திலெடுத்து அதன் வணிகங்களின் மீளெழுச்சியினை மதிப்பீடு செய்தது. அவை பின்வருவன தொடர்பானவை - எதிர்பார்க்கும் வருமானம், செலவு முகாமைத்துவம், இலாபகரத்தன்மை, அவசியமற்ற மூலதனச் செலவினங்களை ஒத்திப்போடுவதற்கான ஆற்றல், பயன்படுத்தப்படாத கடன் வசதிகள் மற்றும் ஆகக் குறைந்தளவு தாக்கத்துடன் வணிகத் தொடர்ச்சியினை உறுதிசெய்து சேவைகளை வழங்குவதனை தொடர்வதற்கான ஆற்றல் என்பவையாகும். குழுமத்தின் ஒவ்வொரு துறையினதும் எதிர்கால கண்ணோட்டத்தினை உடைமைக் கம்பனியின் சபைக்கு காட்சிப்படுத்தி மற்றும் இவை முகாமைத்துவத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மற்றும் நிகழக்கூடிய பரவலான விளைவுகளுக்கு உரிய கவனம் செலுத்தியதன் பின்னர் முகாமைத்துவமானது கம்பனி ஊகிக்கக்கூடிய எதிர்காலத்தில் செயற்பாட்டு இருப்பினை தொடர்வதற்கும் போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என திருப்திப்படுவதுடன் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் மற்றும் காட்சிப்படுத்துவதில் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை கடைப்பிடிப்பதனை தொடர்ந்தது.

**நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல்**
SLFRS 9 இன் பிரகாரம், குழுமத்தின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்படுவதற்கான நோக்கெல்லையினை வழங்குவதுடன் இவை அதன் பின்னர் பல்வேறு பிரிவுகளுக்கு அளவீடு செய்யப்படுகின்றன. அவை பின்வரும் வரன்முறைகளின் அடிப்படையில், பெறுமதி குறைப்புக் கிரயத்தில், ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் (ஏவிவறிபெ) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் (இநநிபெ) ;

- பக்கம் 184 இலுள்ள குறிப்பு 3.5.2 குறிப்பிட்டுள்ளவாறு நிதிச் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்கான நிறுவனத்தின் வணிக மாதிரி.
- நிதிச் சொத்துக்களது ஒப்பந்த காசுப் பாய்ச்சல் பண்புகள் பக்கம் 184 இலுள்ள குறிப்பு 3.5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிதிச் சொத்துக்களிலான வலுக்குன்றல் நட்டங்கள்
நிதிச சொத்துக்களின் அனைத்து பிரிவுளிடையேயான SLFRS 9 இன் கீழான வலுக்ககுன்றல் நட்டங்களின் அளவீடானது தீர்மானத்தினை வேண்டப்படுவதுடன் முக்கியமாக வலுக்குன்றல் நட்டங்களை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தொகைகளின் மதிப்பீடு நேரம் என்பவற்றை வேண்டுகின்றது.

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் குழுமம் / கம்பனியானது ஓர் நிதிச் சொத்து அல்லது நிதிச்சொத்துக்களின் தொகுப்பொன்று வலுக்குன்றியுள்ளதாக ஏதேனும் ஓர் நடுநிலையான சான்று காணப்படுகின்றதா என மதிப்பீடு செய்கின்றது.

**கடன்கள் மற்றும் வருமதிகளிலான வலுக்குன்றல் நட்டங்கள்**
இதன் பிரகாரம் குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் தனியாக குறிப்பிடத்தக்க கடன்கள் மற்றும் முற்பணங்களில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஓர் வலுக்குன்றல் நட்டம் ஏற்பாடு செய்யப்படவேண்டுமா என மீளாய்வு செய்கின்றது. குறிப்பாக, வலுக்குன்றல் நட்டங்களை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப் பாய்ச்சல்களது தொகையின் மதிப்பீடு மற்றும் நேரம் என்பவற்றில் முகாமைத்துவத்தின் தீர்மானம் தேவைப்படுகின்றது.

இந்த மதிப்பீடுகள் பல்வேறு காரணிகளின் அனுமானங்களின் அடிப்படையில் காணப்படுவதனால் மெய்யான விளைவுகள் மாறுபடலாம் என்பதுடன் மேற்கொள்ளப்பட்ட வலுக்குன்றல் தள்ளுபடிகளுக்கு எதிர்கால் மாற்றங்களை விளைவிக்கலாம்.

“கடன்கள் மற்றும் வருமதிகளிலான வலக்குன்றல் நட்டங்கள்“ பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 228 இல் காணப்படும் குறிப்பு 25.7 இல் வழங்கப்பட்டுள்ளது.

**நிதியியல் முதலீடுகளிளலான வலுக்குன்றல் கட்டணங்கள்**
நிதியியல் முதலீடுகள் பெறுமதி குறைப்புக் கிரயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது SLFRS 9 - நிதியியல் முதலீடுகளுக்கிணங்க வலுக்குன்றலுக்கு ஆட்பட்டதாகும். பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கம்பனி / குழுமமானது கடன் கருவிகளில் வரலாற்று நட்ட அனுபவத்தினைக் கொண்டிருக்கவில்லை. எனவே குழுமமானது வெளிவாரி மூலங்களினால் பிரசுரிக்கப்படும் - உதாரணமாக வெளிவாரி கடன் தரப்படுத்தலுக்கு புளூம்போர்க், த.சா. இனை கவனத்திலெடுக்கின்றது. இலங்கை அரசாங்கத்தினால் இலங்கை ரூபாவில் வழங்கப்பட்ட கடன் பிணையங்களுக்கு கொ.த.ந. 0% ஆக கருதப்படுவதுடன் ஏனைய அனைத்து கருவிகளுக்கும் துறைசார் சராசரியானது கொ.த.ந. ஆக கருதப்படுகின்றது.

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து நிதியியல் முதலீடுகளுக்கான கடன் இடர்நேர்கையானது குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கவில்லை. எனவே, அந்த முதலீடுகளுக்கு குழுமமானது நிதிக் கூற்றுக்களில் கடன் நட்டங்களை பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கவில்லை.

**ஏவிவறிபெ க்கான வலுக்குன்றல்**
'ஏவிவறிபெ இன் வலுக்குன்றலது “ விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 234 இல் காணப்படும் குறிப்பு 27 இல் வழங்கப்பட்டுள்ளது.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம்**
குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு முறைகள், பயன்பாட்டு ஆயுட்காலங்கள் மற்றும் மீதியான பெறுமதிகளை மீளாய்வு செய்கின்றது. இந்த பெறுமதிகள், வீதங்கள், முறைகள் என்பவற்றின் மதிப்பீடுகளில் முகாமைத்துவத்தினால் தீர்மானம் பயன்படுத்தப்படுவதனால் இவை நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டதாகும்.

**அருவச் சொத்துக்களது பயன்பாட்டு ஆயுட்காலம்**
“அருவச் சொத்துக்களது பயன்பாட்டு ஆயுட்காலம்" இன் விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 246 இல் காணப்படும் குறிப்பு 34 இல் வழங்கப்பட்டுள்ள.

GRI 207-1

**பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதி**
கம்பனியானது வருமான வரிகள் மற்றும் பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலான ஏனைய வரிகளுக்கு கட்டுப்பட்டதாகும். உரிய பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதிகளின் பொருள் விளக்கம் தொடர்பாகக் காணப்படும் நிச்சயமற்றதன்மைகள் பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதிகளின் தாக்கத்தினை தீர்மானிப்பதற்காக முகாமைத்துவம் மதிப்பாராய்வினை பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன்பிரகாரம், ஒழுங்குவிதிகளை பிரயோகிப்பதில் நுண்ணாய்வுடைய மதிப்பாராய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இவை இணைக்கப்பட்ட பொறுப்பேற்புகளை இனங்காணுதல், முழங்கையளவு தூர விலைகள் தொடர்பான மதிப்பீடு மற்றும் பொருத்தமான விலையிடல் பொறிமுறையினை தெரிவுசெய்தல் என்பவற்றுக்கு மாத்திரம் வரையறை செய்யப்படவில்லை. நடைமுறை வரிக் கட்டணமானது அத்தகைய மதிப்பாராய்வுகளுக்கு கட்டுப்பட்டதாகும். பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதிகளின் பிரயோகம் மற்றும் முகாமைத்துவத்தின் பொருள் விளக்கம் என்பவற்றின் விளைவாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமான வரிக் கட்டணத்திற்கும் மெய்யாகவே செலுத்தவேண்டியவற்றிகும் இடையே வித்தியாசங்கள் எழலாம்.

GRI 207-1

**ஒத்திவைக்கப்பட்ட வரி**
நிதிக் கூற்றுக்களின் பக்கம் 262 இல் காணப்படும் குறிப்பு 44 இல் “ஒத்திவைக்கப்பட்ட வரி" இன் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**ஓய்வுபெறல் நலன் கடப்பாடு**
“ஓய்வுபெறல் நலன் கடப்பாடு“ பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 259 இல் காணப்படும் குறிப்பு 43 இல் வழங்கப்பட்டுள்ளன.

**துணைக்கம்பனி பீபள்ஸ் லீசிங் இன்சூரன்ஸ் பிஎல்சி இன் பொது காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களின் பெறுமதியிடல்**
பொது காப்புறுதி ஒப்பந்தங்களின் மதிப்பீடுகள் பின்வரும் இரண்டிற்கும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அறிக்கையிடப்படும் திகதியில் அறிக்கையிடப்பட்ட கோரல்களின் எதிர்பார்க்கப்பட்ட இறுதி கிரயம் மற்றும் ஆட்பட்ட கோரல்களின் எதிர்பார்க்கப்பட்ட இறுதி கிரயம் ஆனால் அறிக்கையிடப்படும் திகதியில் இன்னமும் அறிக்கையிடப்படாதவை என்பவையாகும். கோரல்களின் இறுதிக் கிரயத்தினை உறுதிப்பாட்டுடன் நிலைநாட்டுவதற்கு கணிசமானளவு காலம் எடுக்கலாம். நிலுவையிலுள்ள கோரல் தொகைகளின் மதிப்பீட்டினது பிரதான உள்ளார்ந்த அனுமானம் கடந்தகால கோரல் அபிவிருத்தி அனுபவமாகும்.

பாரிய கோரல்கள் வழக்கமாக தனியாக விளித்துரைக்கப்படுவதுடன், நட்டம் செம்மையாக்கப்பட்ட மதிப்பீடுகளின் முகப் பெறுமதிக்கு ஒதுக்கப்படல் அல்லது அவற்றின் எதிர்கால அபிவிருத்தியினை பிரதிபலிப்பதற்காக தனியாக உத்தேசிக்கப்பட்டது. அனேகமான சந்தர்ப்பங்களில், கோரல்களின் எதிர்கால வீதங்கள், பணவீக்கம் மற்றும் நட்ட விகிதங்கள் தொடர்பாக எவ்விதமான வெளிப்படையான அனுமானங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

அளவுசார்ந்த, எடுத்துரைமுறை மற்றும் விளக்கமான தகவல்களை உள்ளடக்கிய ஒப்பிடப்படும் தகவல்கள் முன்னைய காலம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இது நடைமுறை காலத்திற்கான நிதிக் கூற்றுக்களிலான புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்கும் காலங்களுக்கிடையேயான ஒப்பிடுதலை மேம்படுத்துவதற்கும் ஆகும். முன்னைய வருடத்தின் நிதிக் கூற்றுக்களின் காட்சிப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல் நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடுவதற்கும் சிறப்பாக காட்சிப்படுத்துவதற்கும் தேவையாயின் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## 3. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்


| விபரம் | குறிப்பு | பக்கம் இல. |
|---|---|---|
| **கணக்கீட்டுக் கொள்கைகள் - பொதுவானவை** | | |
| ஒருங்கிணைப்பிற்கான அடிப்படை | 3.1 | 182 |
| வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள் | 3.2 | 183 |
| SLFRS 15 –வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருவாய் | 3.3 | 183 |
| கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள் | 3.4 | 183 |
| நிதியியல் கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அதன் பின்னரான அளவீடு | 3.5 | 184 |
| நிதியியலல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல் | 3.6 | 186 |
| ஏற்பாடுகள் | 3.7 | 186 |
| கடன்பெறுகைக் கிரயங்கள் | 3.8 | 186 |
| வருமான வரி | 3.9 | 186 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | 3.10 | 186 |
| **கணக்கீட்டுக் கொள்கைகள் - வருமானம் மற்றும் செலவினம்** | | |
| வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள் | 6 | 188 |
| தேறிய உழைத்த காப்புறுதி தவணைப்பணம் | 7 | 190 |
| கட்டண மற்றும் தரகு வருமானம் | 8 | 191 |
| நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபங்கள் /(நட்டங்கள்) - இநநிபெ | 9 | 192 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 10 | 192 |
| கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் கட்டணம் மற்றும் ஏனைய நட்டங்கள் | 11 | 193 |
| ஆளணிச் செலவினங்கள் | 12 | 196 |
| பெறுமாத் தேய்வு மற்றும் பெறுமதி குறைப்பு | 13 | 196 |
| நலன்கள், கோரல்கள் மற்றும் காப்புறுதிச் செலவினம் | 14 | 197 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 15 | 198 |
| நிதிச் சேவைகளிலான வரி | 16 | 198 |
| வருமான வரிச் செலவினம் | 17 | 199 |
| பங்கொன்றிற்கான அடிப்படை/ நீர்த்த உழைப்பு | 18 | 202 |

| விபரம் | குறிப்பு | பக்கம் இல. |
|---|---|---|
| **கணக்கீட்டுக் கொள்கைகள் - சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | 22 | 212 |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகள் | 23 | 213 |
| நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 24 | 214 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் - பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் | 25 | 216 |
| காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வருமதிகள் | 26 | 233 |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 27 | 234 |
| கடன் கருவி - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | 28 | 236 |
| துணைக்கம்பனிகளிலான முதலீடுகள் | 29 | 236 |
| முதலீட்டு ஆதனம் | 30 | 238 |
| ஏனைய சொத்துக்கள் | 31 | 240 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 32 | 241 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 33 | 245 |
| நன்மதிப்பு மற்றும் அருவச்சொத்துக்கள் | 34 | 246 |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 35 | 248 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 36 | 251 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 37 | 252 |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 38 | 255 |
| காப்புறுதி பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | 39 | 255 |
| குத்தகை பொறுப்புக்கள் | 40 | 257 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 41 | 258 |
| ஏனைய பொறுப்புக்கள் | 42 | 259 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 43 | 259 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப்பொறுப்புக்கள் /(சொத்துக்கள்) | 44 | 262 |


### 3.1 ஒருங்கிணைப்பிற்கான அடிப்படை

31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கம்பனி, அதன் துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனியினை உள்ளடக்குகின்றன. கம்பனியின் துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் அதே ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு விதி விலக்காக, பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் துணைக்கம்பனி, காணப்படுகின்றது. அதன் நிதியாண்டு டிசம்பர் 31 இல் நிறைவடைகின்றது. ஒருங்கிணைக்கும் நோக்கத்திற்காக அதே அறிக்கையிடப்படும் ஆண்டு பயன்படுத்தப்பட்டது.

#### 3.1.1 வணிக பிணைப்பு மற்றும் நன்மதிப்பு

இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 03 (வணிகப் பிணைப்புகள்) இன் தேவைப்பாடுகளுக்கேற்ப கையகப்படுத்தல் முறையினை பயன்படுத்தி வணிகப் பிணைப்புகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

குழுமம் மற்றும் கம்பனியானது பின்வருமாறு நன்மதிப்பினை அளவிடுகின்றது. கைப்பற்றப்பட்ட நிறுவனத்தில் ஏதேனும் கட்டுப்பாடற்ற அக்கறையாக அங்கீகரிக்கப்பட்ட தொகை உள்ளடங்கலாக மாற்றல் செய்யப்பட்ட தொகையின் நியாயப் பெறுமதியிலிருந்து இனங்காணப்படத்தக்க கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏற்றுக்கொண்ட பொறுப்பு ஆகியவற்றின் தேறிய அங்கீகரிக்கப்பட்ட தொகையினை கழித்து, அனைத்தும் கைப்பற்றப்பட்ட திகதியில் அளவீடு செய்யப்படுகின்றன. மிகையானது எதிர்மறையாகக் காணப்படும்போது மிகக் குறைவான கொள்வனவு இலாபமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

ஓர் வணிகப் பிணைப்பிலான கைப்பற்றப்பட்ட நன்மதிப்பானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இது கைப்பற்றப்பட்ட இனங்காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஐயப்பாடான நிகழ்வுப் பொறுப்புக்கள் என்பவற்றின் தேறிய பெறுமதியிலான குழுமத்தின் அக்கறையின் மேலான வணிக பிணைப்பின் கிரயத்திலும் மிகையானதாகும்.

ஆரம்ப அங்கீகாரத்தினைத் தொடர்ந்து நன்மதிப்பானது கிரயத்திலிருந்து ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றது. நன்மதிப்பானது வருடாந்தம் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுவதுடன், கொண்டுசெல்லும் பெறுமதியானது வலுக்குன்றும் என நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலையிலான மாற்றங்கள் குறிப்பிட்டால், அடிக்கடி மீளாய்வு செய்யப்படும். வலுக்குன்றல் பரிசீலனை நோக்கத்திற்காக, ஒரு வணிக பிணைப்பில் கைப்பற்றப்பட்ட நன்மதிப்பானது, கைப்பற்றப்பட்ட திகதியிலிருந்து, குழுமத்தின் ஒவ்வொரு காசு உருவாக்கும் அலகிற்கும் அல்லது காசு உருவாக்கும் அலகுக் குழுவுக்கு ஒதுக்கப்படுவதுடன், கைப்பற்றப்பட்ட நிறுவனத்தின் ஏனைய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அந்த அலகுகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமலே, இவை பிணைப்பின் கூட்டு விளைவிலிருந்து நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நன்மதிப்பானது காசு உருவாக்கும் அலகின் (கா.உ.அ.) ஓர் அங்கமாக காணப்படின், அந்த அலகினுள் காணப்படும் ஒரு பகுதி செயற்பாடு விற்கப்பட்டால், விற்பனை செய்யப்பட்ட செயற்பாட்டுடன் இணைந்துள்ள நன்மதிப்பானது செயற்பாட்டின் விற்பனையிலான இலாபம் மற்றும் நட்டத்தை தீர்மானிக்கும்போது அது செயற்பாட்டின் கொண்டுசெல்லப்படும் தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் விற்கப்பட்ட நன்மதிப்பானது விற்கப்பட்ட செயற்பாட்டின் சார்பு பெறுமதிகள் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட காசு உருவாக்கும் அலகின் ஒரு பகுதியின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது

துணைக்கம்பனிகள் விற்கப்படும்போது விற்பனை விலைக்கும் தேறிய சொத்துக்களுடன் திரண்ட பரிமாற்றல் வித்தியாசங்கள் மற்றும் நன்மதிப்பு ஆகியவற்றைச் சேர்த்து வரும் தொகைக்கும் இடையேயான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### 3.1.2 பொதுவான கட்டுப்பாட்டு வணிகப் பிணைப்புகள்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவத்தினால் வழங்கப்பட்ட பொதுக் கட்டுப்பாட்டு வணிக பிணைப்புக்கான பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக் கூற்று - இணைப்புக்கள் கணக்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டிகளை பயன்படுத்தி பொது கட்டுப்பாட்டு வணிக பிணைப்புகள் கணக்கீடு செய்யப்படுகின்றன.

#### 3.1.3 கட்டுப்பாட்டின் இழப்பு

கட்டுப்பாட்டினை இழந்ததைத் தொடர்ந்து துணைக் கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், ஏதேனும் கட்டுப்பாடற்ற அக்கறைகள் மற்றும் துணைக் கம்பனி தொடர்பான ஏனைய உரித்துவப் பிரிவுகளை குழுமமானது விலக்குகின்றது. கட்டுப்பாட்டு இழப்பிலிருந்து எழும் ஏதேனும் மிகை அல்லது பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. முன்னைய துணைக் கம்பனியில் குழுமம் ஏதேனும் அக்கறையினை தக்கவைத்திருந்தால், அத்தகைய அக்கறையானது கட்டுப்பாடு இழக்கப்பட்ட தினத்தில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது

#### 3.1.4 ஒருங்கிணைப்பில் அகற்றப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

குழுமங்களுக்கிடையேயான மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் குழுமங்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் ஏதேனும் எய்தப்பெற்றிராத வருமானம் மற்றும் செலவினங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது அகற்றப்படுகின்றன. உரித்துவ கணக்கீடு செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து எழும் எய்தப்பெற்றிராத இலாபங்கள் குழுமத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்திலுள்ள அக்கறையின் அளவுக்கு முதலீட்டிற்கு எதிராக நீக்கப்படுகின்றது. எய்தப்பெற்றிராத நட்டங்களும் எய்தப்பெற்றிராத இலாபங்களைப் போன்றே நீக்கப்படுகின்றது, ஆனால் வலுக்குன்றல் ஏதும் காணக்கூடிய சான்றுகள் இல்லாத அளவிட்கு மாத்திரம்.

### 3.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

அனைத்து வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களும் செயற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிற்கு, கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நேரத்தில் காணப்பட்ட பரிமாற்றல் வீதங்களில் மாற்றல் செய்யப்படுகின்றன. இது தொடர்பில் குழுமமமானது கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தில் பிரயோகிக்கப்படும் பரிமாற்றல் வீதத்தின் நடு வீதத்தினை பயன்படுத்தும் வழக்கத்தினைக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட நாணயம் சார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் திகதியில் வழக்கமான ஸ்பொட் பரிமாற்ற வீதத்தில் செயற்பாட்டு நாணயத்திற்கு சமனான தொகைக்கு மீள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன.
நாணயம் சார்ந்த உருப்படிகளின் பரிமாற்றலிலிருந்து எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருடத்தின் ஆரம்பத்தில் செயற்பாட்டு நாணயத்தில் பெறுமதி குறைப்புக் கிரயத்திற்கும், வருடத்திலான விளைவுறு வட்டி மற்றும் கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்பட்டு, அறிக்கையிடப்படும் திகதியில் காணப்படும் பரிமாற்றல் வீதத்தில் வெளிநாட்டு நாணயத்தில் காணப்படும் பெறுமதி குறைப்புக் கிரயத்திற்கும் இடையிலான வித்தியாசமாகும். இது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஓர் வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று கிரய ஏற்பாட்டின் கீழ் அளவிடப்படும் நாணயம் சாரா உருப்படிகள் அங்கீகாரம் செய்யப்படும் தினத்தில் உள்ள ஸ்பொட் பரிமாற்றல் வீதத்தில் மாற்றம் செய்யப்படுகின்றன.
நியாயப் பெறுமதியில் வெளிநாட்டு நாணயத்தில் அளவிடப்படும் நாணயம் சாரா உருப்படிகள் நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்பட்ட தினத்தில் காணப்படும் ஸ்பொட் பரிமாற்றல் வீதத்தினை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன.

### 3.3 SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருவாய்

SLFRS 15 பின்வருவனவற்றை மாற்றியமைத்துள்ளது. LKAS 18 "வருவாய்", LKAS 11 'கட்டுமான ஒப்பந்தங்கள்" மற்றும் IFRIC 13 "வாடிக்கையாளர் விசுவாசத் திட்டங்கள்" உள்ளடங்கலான வருவாய் அங்கீகார வழிகாட்டியானது 1 ஏப்ரல் 2018 முதல் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியாகின்றது. ,

SLFRS 15 வருவாயானது எவ்வளவு மற்றும் எப்போது அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்காக ஓர் விரிவான வரம்புறுகையினை வழங்குகின்றது. வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் வருவாய் மற்றும் காசுப் பாயச்சலின் தன்மை, தொகை, நேரம் மற்றும் நிச்சயமற்றதன்மை என்பவற்றை புரிந்துகொள்வதற்கு நிதிக் கூற்றுக்களின் பயனாளிகளை இயலுமையாக்கும் நோக்கில் SLFRS 15 பண்புசார் மற்றும் அளவுசார் வெளிப்படுத்தல்களை வேண்டுகின்றது. வருவாயினை எப்போது என்ன தொகையில் அங்கீகரிக்கவேண்டும் என்பதை தீர்மானிப்பதற்காக நிறுவனங்கள் ஐந்து-கட்ட மாதிரியினை பிரயோகிக்குமாறு வேண்டப்படுகின்றன.
இம்மாதிரியானது எப்போது வருவாய் அங்கீகரிக்கப்படல் வேண்டும் அல்லது ஓர் நிறுவனம் பொருட்கள் மற்றும் சேவைகளது கட்டுப்பாட்டினை ஒரு வாடிக்கையாளருக்கு நிறுவனம் எதிர்பார்க்கும் உரிமையுள்ள தொகைக்கு மாற்றல் செய்யும்போது என குறிப்பிடுகின்றது.

### 3.4 கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

இந்த நிதிக் கூற்றுக்களில் குழுமமானது பின்வருவனவற்றை பிரயோகிகத்துள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 3 க்கான திருத்தங்கள்: ஓர் வணிசகத்தின் வரைவிலக்கணம், LKAS1 மற்றும் LKAS 8 க்கான திருத்தங்கள் :கணிசநிலைக்கான வரைவிலக்கணம், மற்றும் நிதியியல் அறிக்கையிடலுக்கான கருத்துவடிவ வரம்புறுகைக்கான திருத்தங்கள் என்பன முதற் தடவையாக 1 ஜனவரி 2020 இல் அல்லது அதற்கு பின்னர் வரும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்கள் முதல் செல்லுபடியாகும். வழங்கப்பட்ட ஆனால் அமுலுக்கு வராத ஏதேனும் ஏனைய நியமம், பொருள்விளக்கம் அல்லது திருத்தத்தினை குழுமமானது முன்னதாகவே கடைப்பிடிக்கவில்லை.

#### 3.4.1 SLFRS 3 க்கான திருத்தங்கள்: ஓர் வணிகத்தின் வரைவிலக்கணம்

நவம்பர் 2018 இல் இலங்கை ப.க.நிருவகம் SLFRS 3 இன் வணிக வரைவிலக்கணத்திற்கான திருத்தங்களை வழங்கியது. இது நிறுவனங்கள் கையகப்படுத்திய நடவடிக்கைகள் மற்றும் சொத்துக்கள் ஓர் வணிகமா அல்லது இல்லையா எனத் தீர்மானிப்பதற்கு உதவுவதற்காகும். இந்த திருத்தங்கள் ஓர் வணிகத்திற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகளை விளக்குவதுடன் சந்தை பங்குபற்றுநர்கள் ஏதேனும் காணப்படாத கூறுகளை மாற்றீடு செய்வதற்கான ஆற்றலினை கொண்டுள்ளார்களா என்ற மதிப்பீட்டினை அகற்றுகின்றது, கையகப்படுத்தப்பட்ட ஓர் செயல்முறையானது நிலையானதா என நிறுவனங்கள் மதிப்பிடுவதற்கு துணைபுரியும் வழிகாட்டியினை சேர்த்தல், ஓர் வணிகம் மற்றும் விளைவுகளது வரைவிலக்கணத்தினை குறுகலாக்குதல் மற்றும் ஓர் தெரிவான நியாயப் பெறுமதி செறிவு சோதனையினை அறிமுகப்படுத்தல் என்பனவாகும்.

இந்தத் திருத்தங்கள் குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் எவ்விதமான

தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதுடன் குழுமமானது ஏதேனும் வணிகப் பிணைப்புகளினுள் நுழைந்தால் எதிர்காலத்தில் தாக்கத்தினை உருவாக்கலாம். .

**LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்: கணிசநிலையின் வரைவிலக்கணம்**

நவம்பர் 2018 இல் இலங்கை ப.க. நிருவகம் பின்வருவனவற்றிற்கான திருத்தங்களை வழங்கியது. LKAS 1 மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 8 "கணக்கீட்க் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகளிலான மாற்றங்கள்" என்பன நியமங்களிடையே "கணிசநிலை" வரைவிலக்கணத்துடன் சீரமைப்பதற்கும் "வரைவிலக்கணம்" என்ற பதத்தின் சில அம்சங்களை தெளிவுபடுத்துவதற்குமாகும். புதிய வரைவிலக்கணமானது பின்வருமாறு குறிப்பிடுகின்றது. விடுவித்தல், பிறழ்கூற்று அல்லது மறைத்தல் என்பவற்றை செய்தால் பொது நோக்குடைய நிதிக் கூற்றுக்களது, இந்த நிதிக் கூற்றுக்கள் ஓர் குறிப்பிட்ட அறிக்கையிடும் நிறுவனம் பற்றிய நிதியியல் தகவல்களை வழங்கினால், முதன்மை பயனாளிகள் மேற்கொள்ளும் தீர்மானத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என நியாயமாக எதிர்பார்த்தால்", தகவலானது கணிசநிலையாக கருதப்படும், இந்த திருத்தங்கள் குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை அல்லது எதிர்காலத்தில் ஏதேனும் தாக்கம் காணப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் கிடையாது.

நிதியியல் அறிக்கையிடலுக்கான கருத்துவடிவ வரம்புறுகையிலான திருத்தங்கள்

இலங்கை ப.க. நிருவகம் ஓர் திருத்தப்பட்ட கருத்துவடிவ வரம்புறுகையினை வழங்கியது. இது நியம அமைப்பு தீர்மானங்களில் உடனடியாக அமுலுக்குவரும் வண்ணம் பயன்படுத்தப்படும். முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:

- நிதி அறிக்கையிடல் குறிக்கோளில் பராபத்தியத்தின் முனைப்பினை அதிகரித்தல்
- ஓர் அறிக்கையிடும் நிறுவனத்தினை தெளிவாக்குதல், அது ஓர் சட்டரீதியான நிறுவனமாக அல்லது ஓர் நிறுவனத்தின் ஓர் பகுதியாக இருக்கலாம்
- நடுநிலைமையின் ஓர் அலகாக விவேகத்தினை மீள் நிலைநிறுத்தல்
- ஓர் சொத்து அல்லது பொறுப்பின் வரைவிலக்கணங்களை திருத்தியமைத்தல்
- அங்கீகரிப்பிற்கான வாயில்நிலையின் சாத்தியப்பாட்டினை அகற்றுதல் மற்றும் அங்கீகாரத்திலிருந்து நீக்குவதிலான வழிகாட்டியினை சேர்த்தல்
- வெவ்வேறு அளவீட்டு அடிப்படைகளில் வழிகாட்டியினை சேர்த்தல், மற்றும்
- இலாபம் அல்லது நட்டத்தினை முதன்மை செயற்திறன் குறிகாட்டியாக கூறுதல் மற்றும் கொள்கையளவில், ஏனைய விரிவான வருமானத்தில் வருமானம் மற்றும் செலவினம் நிதிக் கூற்றுக்களின் பொருந்துமை அல்லது விசுவாசமான பிரதிநிதித்துவத்தினை மேம்படுத்தும்போது மீள்சுழற்சி செய்யப்படல் வேண்டும்.

இந்த திருத்தங்கள் குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

### 3.5 நிதியியல் கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அதன்பின்னரான அளவீடு

#### 3.5.1 அங்கீகாரத்தின் திகதி

அனைத்து நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் "வழக்கமான வழியிலான வர்த்தகம்" தவிர வர்த்தகத் தினத்தில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன, அதாவது, கருவிகளின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு குழுவானது ஓர் தரப்பினராக வரும்போது. "வழக்கமான வழியிலான வர்த்தகம் "என்பது சந்தையில் ஒழுங்குவிதி அல்லது மரபுவழியாக நிறுவப்பட்ட கால எல்லையினுள் சொத்துக்களின் விநியோகம் தேவைப்படும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனை ஆகும். அந்த வர்த்தகங்கள் தீர்ப்பனவு திகதியில் ஆரம்பநிலையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

#### 3.5.2 நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அடுத்துவரும் அளவீடு

SLFRS 9 இன் பிரகாரம் அதன் அனைத்து நிதிச் சொத்துக்களை வணிக மாதிரியின் அடிப்படையில் வகைப்படுத்துவதுடன், சொத்துக்களின் முகாமைப்படுத்தல் மற்றும் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் பின்வருவனவற்றில் அளவீடு செய்யப்படுகின்றன;

- பெறுமதி குறைப்புக் கிரயம்
- ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் (ஏவிவறிபெ)
- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் (இ.ந.நி.பெ)

நிதிச் சொத்துக்களின் அடுத்துவரும் அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

**வணிக மாதிரி மதிப்பீடு**

1 ஏப்ரல் 2018 முதல் குழுமமானது ஓர் வணிக மாதிரியின் குறிக்கோளில் ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. இங்கு சொத்தானது ஓர் கருவி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படாது ஓர் தேக்கத்தின் மட்டத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இது வணிகம் எவ்வாறு முகாமைப்படுத்தப்படுகின்றது மற்றும் தகவல் முகாமைத்திற்கு வழங்கப்படுகின்றது என்ற விதத்தினை சிறப்பாக பிரதிபலிப்பதனாலாகும். கருதப்பட்ட தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- தேக்கத்தின் கூறப்பட்ட கொள்கைகள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் நடைமுறையில் அந்த கொள்கைகளின் செயற்பாடு. குறிப்பாக, முகாமைத்துவத்தின் மூலோபாயமானது பின்வருவனவற்றை முன்னிறுத்துகின்றதா என்று பார்க்கின்றது. ஒப்பந்த வட்டி வருவாயினை உழைத்தல், ஓர் குறிப்பிட்ட வட்டி வீத விவரத்தினை பராமரித்தல், நிதிச் சொத்துக்களது காலவெளியானது நிதிப் பொறுப்புக்களது காலவெளியுடன் பொருத்துதல். அந்த சொத்துக்களுக்கு நிதியளித்தல் அல்லது சொத்துக்களின் விற்பனையினூடாக காசுப் பாய்ச்சல்களை பெற்றுக் கொள்ளுதல் ;
- குழுமத்தின் முகாமைத்துவம் எவ்வாறு தேக்கத்தின் செயற்திறனை மதிப்பீடு மற்றும் அறிக்கையிடுகின்றது;
- வணிக மாதிரியின் செயற்திறனை பாதிக்கும் இடர்நேர்வுகைகள் (மற்றும் அந்த வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் எவ்வாறு அந்த இடர்நேர்வுகைகள் முகாமைப்படுத்துகின்றது;
- எவ்வாறு வணிகத்தின் முகாமையாளர்கள் ஈடுசெய்யப்படுகின்றார்கள் - உதாரணமாக முகாமைப்படுத்தப்படும் சொத்துக்களது நியாயப் பெறுமதியின் அடிப்படையில் ஈடு காணப்படுகின்றதா அல்லது திரட்டப்பட்ட ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களிலா; மற்றும்
- முன்னைய காலப்பகுதியிலான விற்பனையின் நிகழ்வெண், பருமன் மற்றும் நேரங்கள், அத்தகைய விற்பனைகளுக்கான காரணிகள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை பற்றிய அதன் எதிர்பார்ப்பு. எவ்வாறாயினும், விற்பனை நடவடிக்கை பற்றிய தகவலானது தனிமையில் கருதப்படாது, ஓர் ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஓர் அங்கமாக குழுமத்தின் கூறப்பட்ட குறிக்கோளானது நிதிச் சொத்தினை எவ்வாறு முகாமைப்படுத்தப்பட்டு அடையப்படுகின்றது மற்றும் எவ்வாறு காசுப் பாய்ச்சலானது பெறப்படுகின்றது.

வணிக மாதிரி மதிப்பீடானது நியாயமாக எதிர்பார்க்கப்படும் காட்சிநிலைகளின் அடிப்படையில் ""மோசமான நிலை" அல்லது "அழுத்தமான நிலை" ஆகியவற்றை கணக்கிலெடுக்காது மேற்கொள்ளப்படுகின்றது. குழுமத்தின் ஆரம்ப எதிர்பார்ப்புகளிலிருந்து மாறுபட்டு ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னரான காசுப் பாய்ச்சல்கள் பெறப்பட்டால் குழுமமானது வணிக மாதிரியினுள் வைத்திருக்கும் எஞ்சிய நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை மாற்றாது. ஆனால், முன்னோக்கி செல்லும்போது புதிதாக உருவாக்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்த நிதிச் சொத்துக்களை மதிப்பீடு செய்யும்போது அத்தகைய தகவல்களை ஒருங்கிணைக்கின்றது.

**ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டி கொடுப்பனவுகள் மாத்திரமா என்ற மதிப்பீடு (முவகொமா பரிசீலனை)**

குழுமமானது அதன் வகைப்படுத்தல் செயல்முறையின் இரண்டாவது கட்டமாக அவை முவகொமா பரிசீலனையினை சந்திக்கின்றதா என இனங்காண்பதற்காக ஒப்பந்த நியதிகளை மதிப்பீடு செய்கின்றது.

இந்த மதிப்பீட்டு நோக்கத்திற்காக "முதல்" என்பது ஆரம்ப அங்கீகாரத்தில் நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதி மற்றும் நிதிச் சொத்தின் வாழ்நாளில் மாற்றமடையலாம் என்ற வரைவிலக்கணத்தினை கொண்டுள்ளது (உதாரணமாக, முதலின் மீள்செலுத்தல் அல்லது வட்டம்/கழிவின் பெறுமதி குறைப்பு).

ஓர் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலுவையிலுள்ள முதல் தொகையுடன் இணைக்கப்பட்டுள்ள கடன் இடர்நேர்வுகைக்காக மற்றும் பணத்திற்கான நேரப் பெறுமதிக்கான மறுபயன் என "வட்டி" வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இவை ஏனைய அடிப்படை கடன் வழங்கல் இடர்நேர்வுகைகள் மற்றும் கிரயங்களுடன் இலாப வரம்பு ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

முரணாக, ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களில் இடர்நேர்வுகைகள் அல்லது தளம்பலுக்கு ஆகக்குறைந்த வெளிப்பாட்டிற்கும் அதிகமானவற்றை அறிமுகப்படுத்தும் ஒப்பந்த நியதிகள் அடிப்படை கடன் வழங்கல் ஏற்பாட்டுடன் தொடர்பற்று மற்றும் நிலுவையிலுள்ள முதல் தொகையில் முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் காணப்படும் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை உருவாக்குதல். அத்தகைய விடயத்தில், நிதிச் சொத்தானது இநநிபெ இல் அளவிடப்படல் வேண்டும்.

ஒப்பந்த காசுப் பாய்ச்சல்கள் நிலுவையிலுள்ள முதல்

தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மாத்திரமா என மதிப்பிடுவதில் குழுமமானது கருவியின் ஒப்பந்த நியதிகளை கருத்திலெடுக்கின்றது. இது நிதிச் சொத்தானது ஓர் ஒப்பந்த நியதியினை உள்ளடக்கியுள்ளதா என்ற மதிப்பீட்டினை அல்லது இந்த நிலையினை சந்திக்காத ஒப்பந்த காசுப் பாய்ச்சலின் நேரம் மற்றும் தொகையினை மாற்றலாம். இந்த மதிப்பீட்டினை மேற்கொள்வதில் குழுமமானது பின்வருவனவற்றை கவனத்திலெடுக்கின்றது. :

- காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் நேரத்தினை மாற்றக்கூடிய ஐயப்பாடான நிகழ்வுகள்;
- கடன் மூலதன பண்புகள்;
- முற்கொடுப்பனவு மற்றும் நீட்டல் நியதிகள்;
- குறிப்பிட்ட சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கு குழுமத்தின் கோரல்களை கட்டுப்படுத்தும் நியதிகள்; மற்றும்
- பணத்தின் நேரப்பெறுமதியின் பெறுகையின் மாற்றியமைக்கும் பண்புகள்

குழுமமானது நீண்டகால நிலையான வட்டிவீத கடன் தேக்கங்களை வைத்திருப்பதுடன், இவற்றில் குழுமமானது வட்டி வீதத்தினை காலாகால மீட்டமைப்பு திகதிகளில் திருத்தியமைப்பதனை முன்மொழிவதற்கான தெரிவினைக் கொண்டுள்ளது. இந்த மீட்டமைப்பு உரிமைகள் திருத்தியமைக்கப்படும்போதுள்ள சந்தை வட்டி வீதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கடன் பெற்றவர்கள் திருத்தியமைக்கப்பட்ட வட்டி வீதத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது ஏதேனும் தண்டமின்றி கடனை முகப்பெறுமதியில் மீட்டெடுப்பதற்கான தெரிவினை கொண்டுள்ளார்கள். இந்த கடன்களின் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டி கொடுப்பனவு மாத்திரம் என குழுமம் தீர்மானித்துள்ளது. ஏனெனில் தெரிவானது நிலுவையிலுள்ள முதல் தொகையுடன் இணைந்துள்ள ஏனைய அடிப்படை கடன் வழங்கல் இடர்நேர்வுகைகள் மற்றும் கிரயங்கள், கடன் இடர்நேர்வுகை, பணத்தின் நேரப்பெறுமதி என்பவற்றுக்கான பெறுகையிலான வட்டி வீதத்தினை மாற்றுவதனாலாகும்.

நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட வெவ்வேறு விதமான நிதிச் சொத்துக்களின் விபரங்கள்.

பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்
பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் சந்திக்கும் ஓர் நிதிச் சொத்தானது பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது மற்றும் இநநிபெ இல் குறிப்பிடப்படவில்லை:

- ஓர் வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் சொத்தானது அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டும் நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுகின்றது ; மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த நியதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலை எழுப்புவதுடன் அவை நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டி கொடுப்பனவினை மாத்திரம் கொண்டிருந்தால்.

பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் பக்கங்கள் 212,213,216,233,236 மற்றும் 248 முதல் 258 வரை காணப்படும் குறிப்புகள் 22,23,25,26,28 மற்றும் 35 முதல் 41 வரை வழங்கப்பட்டுள்ளன.

**ஏவிவறிபெ இல் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்**
ஏவிவறிபெ இல் உள்ள நிதி சொத்துக்கள் கடன் மற்றும் உரித்துவ கருவிகளை உள்ளடக்குவதுடன் இவை நியாயப் பெறுமதியில் ஏனைய விரிவான வருமானத்தினூடாக அளவீடு செய்யப்படுகின்றன. ஏவிவறிபெ இல் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் பக்கம் 234 இலுள்ள குறிப்பு 27 இல் வழங்கப்பட்டுள்ளது.

**இநநிபெ இல் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்**
SLFRS 9 இன் பிரகாரம், பெறுமதி குறைப்புக் கிரயத்தில் வகைப்படுத்தப்பட்ட அல்லது ஏவிவறிபெ இல் வகைப்படுத்தப்பட்டவை தவிர அனைத்து நிதிச் சொத்துக்களும் இநநிபெ இல் அளவிடப்படுவதாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதிச் சொத்துக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படும் அல்லது முகாமைப்படுத்தப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் அவற்றின் செயற்திறனானது நியாயப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது, ஏனெனில் இவை ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்காகவோ அல்லது ஒப்பந்த காசுப் பாயச்சல்களை திரட்டுவதற்கு வைத்திருக்கப்படாத மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கோ வைத்திருக்கப்படாதவை மற்றும் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் பக்கம் 214 இல் காணப்படும் குறிப்பு 24இல் கலந்துரையாடப்பட்டுள்ளன.

**இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்**
SLFRS 9 இன் பிரகாரம், ஆரம்ப அங்கீகாரத்தில் குழுவானது ஓர் நிதிச் சொத்தினை மாற்றவியலாதவாறு இநநிபெ இல் குறிப்பிட்டிருக்கலாம். இல்லையெனில் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அல்லது ஏவிவறிபெ இல் அளவிடுவதற்கான தேவைப்பாடுகளை சந்திந்திருக்கலாம், அத்தகைய குறிப்பிடலானது ஓர் கணக்கீட்டு பொருந்தாமையினை நீக்கலாம் அல்லது கணிசமானளவு குறைக்கலாம். இல்லையெனில் ஓர் வித்தியாசமான அடிப்படையில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை அல்லது இலாபங்கள் அல்லது நட்டங்களை அளவிடுவதிலிருந்து எழலாம்.

குழுமமானது அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் ஏதேனும் நிதிச் சொத்துக்களை ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் பெயரிடவில்லை.

### 3.5.3 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் அங்கீகார அகற்றல்

**நிதிச் சொத்துக்கள்**
ஒரு நிதிச் சொத்தானது (அல்லது பொருத்தமானவாறு ஒரு நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக்கள் குழுவின் பகுதி ) பின்வரும் சமயத்தில் அங்கீகார அகற்றல் செய்யப்படுகின்றது :

- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமையானது முடிவுற்றுள்ளது ;
- கம்பனி மற்றும் குழுமமானது சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான அதன் உரிமையினை மாற்றல் செய்திருந்தால் அல்லது ஓர் கடந்து-செல்லும் உடன்படிக்கையின் கீழ் ஓர் மூன்றாம் தரப்பிற்கு கணிசநிலை தாமதமின்றி பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்களை செலுத்துவதற்கான ஓர் கடப்பாட்டினை பொறுப்பேற்றிருந்தால் "; மற்றும் இவற்றுள் ஒன்று:
-
    - சொத்தின் அனைத்து இடர்நேர்வுகைகள் மற்றும் வெகுமதிகளை கம்பனி மற்றும் குழுமமானது கணிசமானளவு மாற்றல் செய்திருந்தால் ; அல்லது
    - கம்பனி மற்றும் குழுமமானது சொத்தின் அனைத்து இடர்நேர்வுகைகள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு மாற்றல் செய்யாத அல்லது தக்கவைக்காத, ஆனால் சொத்தின் கட்டுப்பாடு மாற்றல் செய்யப்பட்டுள்ளது.

ஒரு நிதிச் சொத்தின் அங்கீகார அகற்றலில், சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கும் (அல்லது மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் ஒரு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கொண்டுசெல்லல் தொகை) பெறப்பட்ட மறுபயனுக்கும் இடையேயான வித்தியாசம் மற்றும் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது

கம்பனி அல்லது குழுமமானது ஒரு சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமையினை மாற்றல் செய்திருப்பின் அல்லது ஒரு கடந்து-செல்லல் உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்தால் மற்றும் சொத்தின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு மாற்றல் செய்யாதிருந்தால் அல்லது தக்கவைத்திராதிருந்தால், அல்லது சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றல் செய்யாதிருந்தால், சொத்தில் கம்பனியின் மற்றும் குழுமத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு காணப்படும் அளவிற்கு சொத்தானது அங்கீகரிக்கப்படுகின்றது. அந்த சமயத்தில், குழுமமானது ஓர் இணைந்த பொறுப்பாக அங்கீகரிக்கின்றது. மாற்றல் செய்யப்பட்ட சொத்து மற்றும் அதனுடனிணைந்த பொறுப்பு என்பன குழுமமானது தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை பிரதிபலிக்கும் ஓர் அடிப்படையில் அளவீடு செய்யப்படுகின்றது.

மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் மீது ஓர் உத்தரவாத வடிவத்தினை எடுக்கும் தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் ஆரம்ப கொண்டுசெல்லும் தொகையில் குறைந்தது எதுவோ மற்றும் குழுமத்தினால் மீள்செலுத்த வேண்டிய ஆகக்கூடிய மறுபயன் தொகையில் அளவிடப்படுகின்றது.

**நிதிப் பொறுப்புக்கள்**
பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் அல்லது முடிவுற்றால் ஓர் நிதிப் பொறுப்பானது அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றது.
நடைமுறையிலுள்ள ஓர் நிதிப் பொறுப்பானது அதே கடன் வழங்குநரினால் கருதத்தக்க வேறு ஏற்பாட்டில் மாற்றீடு செய்யப்பட்டால் அல்லது நடைமுறையிலுள்ள ஓர் பொறுப்பானது கணிசமானளவு திருத்தியமைக்கப்பட்டால், அத்தகைய ஓர் பரிமாற்றல் அல்லது திருத்தமானது ஆரம்ப பொறுப்பு அங்கீகரிப்பிலிருந்து அகற்றப்பட்டு ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்டுகின்றது. ஆரம்ப நிதிப் பொறுப்பின் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட மறுபயனுக்கும் இடையேயான வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது

**3.5.4 நிதிக் கருவிகளின் ஈடுகட்டல்**

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும், இது காணப்பட்டால் மாத்திரம், தற்போது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கான வலியுறுத்தத்தக்க சட்டரீதியான உரிமை காணப்படுவதுடன், ஓர் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான ஓர் நோக்கம் காணப்படுகின்றது அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை காசாக்கி பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்தல். பெரும் ஈடுகட்டல் ஏற்பாடுகளுடன் இது பொதுவாக காணப்படுவதில்லை, எனவே தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் மொத்த அடிப்படையில் காட்சிப்படுத்தப்படுகின்றது.

LKAS / SLFRS இன் கீழ் அனுமதிக்கப்பட்டால் மாத்திரமே வருமானம் மற்றும் செலவினங்கள் ஓர் தேறிய அடிப்படையில் காட்சிப்படுத்துகின்றது அல்லது ஒத்த கொடுக்கல் வாங்கல் குழுவிலிருந்து எழும், குழுமத்தின் வர்த்தக நடவடிக்கைகள் போன்றவை, இலாபங்கள் மற்றும் நட்டத்திற்கு.

**3.5.5 நியாயப் பெறுமதியின் தீர்மானம்**

அறிக்கையிடப்படும் திகதியில் துடிப்பான சந்தைகளில் வர்த்தகம் செய்யப்பட்ட நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியானது ஏதேனும் கொடுக்கல் வாங்கல் கிரயத்தினை கழிக்காது அவற்றின் எடுத்துரைக்கப்பட்ட சந்தை விலை அல்லது வர்த்தகரது விலைக்குறிப்பின் (நீள் நிலைப்பாட்டிற்கு ஏற்பு விலை மற்றும் குறைவணிக நிலைப்பாட்டிற்கு கேட்பு விலை) அடிப்படையிலாகும்.

நிதிக் கருவிகளில் நியாயப் பெறுமதியிலான ஓர் பகுப்பாய்வு மற்றும் எவ்வாறு அவை அளவீடு செய்யப்படுகின்றன போன்ற மேலதிக தகவல்கள் பக்கம் 205 இல் காணப்படும் குறிப்பு 21 இல் வழங்கப்பட்டுள்ளது.

**3.6 நிதியியலல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்**

ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் தவிர்ந்த குழுமத்தின் நிதியியலல்லாத சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் தினத்திலும் ஓர் சொத்தானது வலுக்குன்றலைடைந்துள்ளதாக ஓர் குறிகாட்டி காணப்படுகின்றதா என்று பார்பதற்காக மீளாய்வு செய்யப்படுகின்றது. ஏதேனும் குறிகாட்டி தென்பட்டால், அல்லது ஓர் சொத்தின் வருடாந்த வலுக்குன்றல் சோதனை தேவைப்படின், குழுமமானது சொத்தின் மீட்கத்தக்க தொகையினை மதிப்பீடு செய்கின்றது. ஓர் சொத்தின் மீட்கத்தக்க பெறுமதியானது சொத்திய உயர்ந்த அல்லது காசு உருவாக்கும் அலகின் நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைச் செலவினம் மற்றும் பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதி கழிக்கப்பட்டு வரும் தொகையாகும். ஓர் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி அல்லது காசு உருவாக்கும் அலகானது அதன் மிட்கத்தக்க தொகையினை விஞ்சியிருந்தால் சொத்தானது வலுக்குன்றியுள்ளதாக கருதப்பட்டு அதன் மீட்கத்தக்க பெறுமதிக்கு குறைத்தெழுதப்படுகின்றது.

பயன்பாட்டிலுள்ள பெறுமதியினை மதிப்பீடு செய்யும்போது, எதிர்பார்க்கும் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், பணத்தின் நேரப் பெறுமதியின் நடைமுறை சந்தை மதிப்பீடுகள் மற்றும் சொத்திற்கான குறித்த இடர்நேர்கை என்பவற்றை பிரதபலிக்கும் வரிக்கு முந்திய ஓர் கழிவிறக்க வீதத்தினை பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிறக்கம் செய்யப்படுகின்றன. விற்பனைச் செலவினத்தைக் கழித்து நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில், ஓர் பொருத்தமான பெறுமதியிடல் மாதிரியானது பயன்படுத்தப்படுகின்றது. இந்த கணிப்பீடுகள் பெறுமதியிடல் பெருக்கங்களினால் ஆதரவளிக்கப்படுவதுடன், பொதுவாக வர்த்தகம் செய்யப்படும் துணைக்கம்பனியின் பங்குகளுக்கு சாற்றிய பங்கு விலையிலும்,அல்லது கிடைக்கக்கூடிய ஏனைய நியாயப் பெறுமதி குறிகாட்டிகளிலும் பெறுமதியிடப்படுகின்றது.

நன்மதிப்பு நீங்கலான சொத்துக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வலுக்குன்றல் நட்டங்கள் குறைந்துள்ளதா என்பதனை தீர்மானிப்பதற்காக ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய ஓர் குறிகாட்டி காணப்படுமாயின், குழுமமானது சொத்தின் அல்லது காசு உருவாக்கும் அலகுகளின் மீட்கக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வலுக்குன்றல் நட்டங்கள், இறுதியாக வலுக்குன்றல் நட்டம் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து சொத்தின் மீட்கக்கூடிய தொகையினை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அனுமானங்களில் ஏதேனும் மாற்றம் காணப்பட்டால் மாத்திரம் திருப்பப்படுகின்றது. இத்திருப்பலானது சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி அதன் மீட்கக்கூடிய தொகையினை விஞ்சாதிருத்தல், அல்லது பெறுமானத்தேய்வு / பெறுமதிகுறைப்பு நிகர்செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்ட கொண்டுசெல்லல் தொகையினை விஞ்சியிருத்தலாகாது, முன்னைய ஆண்டுகளில் சொத்திற்கு எவ்விதமான வலுக்குன்றல் நட்டங்களும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதற்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. அத்தகை திருப்பலானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**3.7 ஏற்பாடுகள்**

ஓர் ஏற்பாடானது நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இது குழுமமானது ஓர் கடந்த நிகழ்வின் விளைவாக ஓர் (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கடப்பாட்டினை கொண்டிருக்கும்போது மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களின் ஓர் வெளிப்பாய்ச்சல் தேவைப்படும் என்று நிகழக்கூடும் என்று கருதினால் அங்கீகரிக்கப்படுகின்றது. கடப்பாட்டின் தொகையானது இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 37 – 'ஏற்பாடுகள், ஐயப்பாடான பொறுப்புக்கள் மற்றும் வருநிகழ்வு சொத்துக்கள்' இன் பிரகாரம் நம்பகமாக மதிப்பீடு செய்யலாம். நிதி நிலைமைக் கூறு தினத்தில் தற்போதைய கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்காக தேவைப்படும் தொகையின் சிறந்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்ட தொகையாக காணப்படுகின்றது. இதற்கு அந்த திகதியில் கடப்பாட்டினை சூழ்ந்து காணப்படும் இடர்நேர்கைகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் கணக்கிலெடுக்கப்படுகின்றன. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏதேனும் செலவீடு நிகர் செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்படுகின்றது.

**3.8 கடன் பெறுகைக் கிரயங்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 23 "கடன் பெறுகைக் கிரயம்" இன் பிரகாரம் குழுமமானது கையகப்படுத்தல், கட்டுமானம், அல்லது சொத்தின் கிரயத்தின் ஒரு பகுதியாக தகமையுள்ள சொத்தின் உற்பத்திக்கு நேரடியாக உடையாக்கத்தக்கவையாகும். ஓர் தகமையுடைய சொத்தென்பது அதன் நோக்குடைய பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு கணிசமானளவு காலத்தை எடுக்கும் சொத்தாகும். ஏனைய கடன் பெறுகைக் கிரயங்கள் அவை ஆட்படும் காலங்களில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

GRI 207-1

**3.9 வருமான வரி**

"வருமான வரிச் செலவினத்தின்" விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 199 இல் காணப்படும் குறிப்பு 17 இல் வழங்கப்பட்டுள்ளது.

GRI 207-1

**3.10 ஒத்திவைக்கப்பட்ட வரி**

"ஒத்திவைக்கப்பட்ட வரியின்" விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 262 இல் காணப்படும் குறிப்பு 44 இல் வழங்கப்பட்டுள்ளது.

**3.11 பயிர் காப்புறுதி கட்டணம் (ப.கா.க.)**

2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 இன் ஏற்பாடுகளுக்கமைய, ப.கா.க. ஆனது 1 ஏப்ரல் 2013 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். தற்போது வரிக்கு பிந்திய இலாபத்தில் 1% ப.கா.ப. ஆன செலுத்தப்படல் வேண்டும்.

**3.12 நிதிச் சேவைகளிலான வரி**

நிதிச் சேவைகளிலான பெ.சே.வ., தே.க.வ. மற்றும் கடன் மீள்செலுத்தல் கட்டணம் என்பற்றின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 198 இல் காணப்படும் குறிப்பு 16 இல் வழங்கப்பட்டுள்ளன.

**4. வழங்கப்பட்ட நியமங்கள் ஆனால் இன்னமும் அமுலுக்கு வராதவை**

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொருள்விளக்கங்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டன ஆனால் 31 மார்ச் 2021 இல் இன்னமும் அமுலுக்கு வரவில்லை. இதற்கமைய 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இந்த கணக்கீட்டு நியமங்கள் பயன்படுத்தப்படவில்லை. பின்வரும் திருத்தமானது எதிர்வரும் எதிர்காலங்களில் கம்பனியின் / குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் கணிசமானளவு தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கவில்லை.

**IFRS 17- காப்புறுதி ஒப்பந்தங்கள்**

SLFRS 17 பின்வருவனவற்றை உள்ளடக்கும் காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான ஓர் விரிவான புதிய கணக்கீட்டு நியமமாகும். இது அங்கீகாரம் மற்றும் அளவீடு, காட்சிப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல் என்பனவாகும். அமுலுக்கு வரும்போது, SLFRS 17 IFRS 4 காப்புறுதி ஒப்பந்தங்களை மாற்றீடு செய்யும். SLFRS 17 அனைத்து வகையான காப்புறுதி ஒப்பந்தக்களுக்கும் (ஆயுள், ஆயுளல்லாதவை, நேரடி காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி ) அதனை வழங்கும் நிறுவனங்களை பொருட்படுத்தாது செல்லுபடியாகும். அத்துடன் சில உத்தரவாதங்கள் மற்றும் நிதிக் கருவிகள் விருப்புரிமையான பங்குபற்றல் அம்சங்களைக் கொண்டுள்ளன.

SLFRS 17 01 ஜனவரி 2023 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்களுக்கு நடைமுறைக்கு வரும். நிறுவனமானது இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 "நிதிக் கருவிகள்" மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 15 "வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருவாய்" ஆகிய இரண்டையும் பிரயோகித்திருந்தால் அது முதர் தடவையாக SLFRS 17 இனை பயன்படுத்தும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் முன்பாகவே பிரயோகம் அனுமதிக்கப்படும்.

**SLFRS 9, LKAS 39, SLFRS 7, SLFRS 4 மற்றும் SLFRS 16 – வட்டி வீத அளவை மட்டக்குறியிலான**

**சீர்திருத்தம்( கட்டம் 1 மற்றும் 2) இற்கான திருத்தங்கள்**

SLFRS 9 மற்றும் LKAS 39 ஆகியவற்றிற்கான திருத்தங்கள் பல்வேறு நிவாரணங்களை வழங்குகின்றன. இவை வட்டிவீத அளவை மட்டக்குறியிலான சீர்திருத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்படும் அனைத்து இழப்புக்காப்பு தொடர்புகளுக்கும் பிரயோகிக்கப்படும். ஒரு இழப்புக் காப்புத் தொடர்பானது சீர்திருத்தம் இழப்புக் காப்பு உருப்படியின் அல்லது இழப்புக் காப்புக் கருவியின் மட்டக்குறி அளவை அடிப்படையிலான காசுப் பாய்ச்சலின் நேரம் மற்றும்/அல்லது தொகையில் ஓர் நிச்சயமற்றதன்மை காணப்பட்டால் பாதிக்கப்படும்.

கா.ச.மு. சீர்திருத்தக் கட்டம் 2 பல்வேறு நிவாரணங்கள் மற்றும் மேலதிக வெளிப்படுத்தல்களை உள்ளடக்குகின்றது. திருத்தங்கள் கம்பனிகள் SLFRS இனை பயன்படுத்தும்போது சீர்திருத்தத்தின் காரணமாக ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களுக்கு அல்லது இழப்புக் காப்பு தொடர்பில் மாற்றங்கள் செய்யப்படும்போது துணைபுரிகின்றன.

பல்வேறு நியமங்களுக்கான இந்த திருத்தங்கள் 01 ஜனவரி 2021 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்களுக்கு பயனுக்கு வருகின்றது. இந்த திருத்தங்களின் விளைவாக அதன் நிதிக் கூற்றுக்களிலுள்ள சாத்தியமான தாக்கத்தினை கம்பனி /குழுமமானது தற்போது மதிப்பீடு செய்கின்றன.

**SLFRS 16 இற்கான திருத்தங்கள் - கோவிட் - 19 தொடர்புடைய வாடகை சலுகைகள்**

திருத்தங்கள் குத்தகையாளருக்கு SLFRS 16 இனை பிரயோகிப்பதிலிருந்து நிவராணம் வழங்குகின்றது. இது கோவிட்-19 தொற்றின் நேரடி விளைவினால் எழுகின்ற வாடகை சலுகைகளுக்கான குத்தகை திருத்தக் கணக்கீட்டிலான வழிகாட்டியாகும்.

ஓர் நடைமுறை உபாயமாக, ஓர் குத்தகையாளர் ஓர் குத்தகைக்கு விடுபவரிடமிருந்து கோவிட்-19 தொடர்பான வாடகை சலுகையினை ஓர் குத்தகை திருத்தமா என மதிப்பிடாதிருக்க தெரிவு செய்யலாம். இந்தத் தெரிவினை மேற்கொள்ளும் ஓர் குத்தகையாளர் கோவிட்-19 தொடர்பான வாடகை சலுகையின் விளைவாக குத்தகைக் கொடுப்பனவில் ஏதேனும் மாற்றங்களை SLFRS16 இன் கீழ் மாற்றங்களுக்கு கணக்கீடு செய்யும் அதே விதத்தில், மாற்றமானது ஓர் குத்தகை திருத்தமாக காணப்படாவிட்டால், கணக்கீடு செய்வார்.

இந்த திருத்தமானது 01 ஜனவரி 2020 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடும் காலங்களுக்கு பிரயோகிக்கப்படும். இந்த திருத்தத்தின் முன்னதாகவே பிரயோகித்தல் அனுமதிக்கப்பட்டது. நிறுவனமானது முன்னதாகவே இந்தத் திருத்தத்தினை கடைப்பிடித்திருந்தால் மேற்குறிப்பிட்ட வெளிப்படுத்தலானது வரவிருக்கும் நியமக் குறிப்பின் கீழ் உள்ளடக்கப்படலாகாது. அது "வருடத்தில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள் / புதிய மற்றும் திருத்தப்பட்ட நியமங்கள்" குறிப்பின் கீழ் பிரதிபலிக்கப்படலாம். கம்பனி / குழுமமானது இந்த திருத்தத்தின் விளைவுகளிலிருந்தான நிதிக் கூற்றுக்களில் சாத்தியமான தாக்கத்தினை தற்போது மதிப்பீடு செய்கின்றது.

**SLFRS 3 இற்கான திருத்தங்கள்**

இந்த திருத்தங்கள் SLFRS 3 இனை இற்றைப்படுத்துகின்றது. இதன் காரணமாக அது 1989 வரம்புறுகைக்கு பதிலாக 2018 இன் கருத்துருவடிவ வரம்புறுகையினை குறிப்பிடுகின்றது. அவை SLFRS 3 க்க ஓர் தேவைப்பாட்டினையும் சேர்க்கின்றது. இது LKAS 37 இன் நோக்கெல்லையினுள்ளான கடப்பாடுகளுக்கு, ஓர் கையகப்படுத்துபவர் கையகப்படுத்தும் தினத்தன்று கடந்தகால நிகழ்வின் விளைவாக ஓர் நிகழ் கடப்பாடு காணப்படுகின்றதா என்று தீர்மானிப்பதற்காகும். ஒரு கட்டணம் IFRIC 21 நோக்கெல்லையினுள் காணப்படும் கட்டணங்களாக காணப்படுவதற்கு கையகப்படுத்துபவர் கையகப்படுத்தும் திகதியில் கட்டணத்தினை செலுத்துவதற்கான ஓர் பொறுப்பு நிகழ்ந்துள்ளது என்பதற்கு கடப்பாடுடைய நிகழ்வு ஏற்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக IFRIC 21 இனை பிரயோகிக்கின்றார். இறுதியாக, திருத்தங்கள் பின்வரும் ஓர் வெளிப்படையான கூற்றினை சேர்க்கின்றது. அது கையகப்படுத்துபவர் கையகப்படுத்தப்பட்ட ஓர் வணிக பிணைப்பில் காணப்படும் ஐயப்பாடான சொத்துக்களை அங்கீகரிப்பதில்லை என்தாகும்.

இந்தத் திருத்தங்கள் வணிகப் பிணைப்புகளுக்கு பயன்படுத்தப்படும். இவை கையகப்படுத்தல் திகதி, 01 ஜனவரி 2022 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் முதலாவது வருடாந்த காலப்பகுதியில் அல்லது அதற்கு பின்னர் இடம்பெற்றிருந்தால். நிறுவனம் அனைத்து இற்றைப்படுத்தப்பட்ட குறிப்புகளை அதேசமயத்தில் அல்லது முன்னதாக (இற்றைப்படுததப்பட்ட கருத்துருவடிவ வரம்புறுகையுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தால்) பிரயோகித்திருந்தால் முன்னரான பிரயோகம் அனுமதிக்கப்படும். கம்பனி /குழுமமானது தற்போது அதன் நிதிக் கூற்றுக்களில் இந்த திருத்தத்தின் விளைவிலிருந்து எழும் சாத்தியமான தாக்கத்தினை மதிப்பீடு செய்கின்றது.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்: கருதப்படும் பயன்பாட்டிற்கு முன்னரான வருவாய் - LKAS 16 இற்கான திருத்தங்கள்**

மார்ச் 2021 இல் இலங்கை ப.க. நிருவகம் LKAS 16 இற்கான திருத்தங்களை - ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் - கருதப்படும் பயன்பாட்டிற்கு முன்னரான வருவாய், கடைப்பிடித்தது. இது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஒரு உருப்படியின் கொள்விலையிலிருந்து, அந்தச் சொத்தினை இடத்திற்கு கொண்டுவரும்போது மற்றும் முகாமைத்துவத்தினால் கருதப்பட்ட விதத்தில் செயலாற்றும் ஆற்றலுக்கு அவசியமான நிலை என்பவற்றின்போது உருவாக்கப்பட்ட உருப்படிகளை விற்பனை செய்வதிலிருந்து கிடைக்கும் ஏதேனும் வருவாயினை நிறுவனங்கள் கழிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. பதிலாக, ஓர் நிறுவனம் அத்தகைய உருப்படிகளின் விற்பனையிலிருந்தான வருவாய் மற்றும் அந்த உருப்படிகளை உற்பத்தி செய்வதற்கான செலவினம் ஆகியவற்றை இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரித்தல் வேண்டும்.

இந்த திருத்தமானது 01 ஜனவரி 2020 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடும் காலங்களுக்கு பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் நிறுவனம் முதலாவதாக இத்திருத்தத்தினை பிரயோகிக்கும்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள முன்னரான காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது அதற்கு பின்னர் பயன்பாட்டிற்கு கிடைக்கும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் உருப்படிகளுக்கு பின்னோக்கிய முறையில் பிரயோகித்தல் வேண்டும். கம்பனி / குழுமமானது இந்த திருத்தங்களின் விளைவாக நிதிக் கூற்றில் எழக்கூடிய சாத்தியமான தாக்கத்தினை தற்போது மதிப்பீடு செய்கின்றது.

காப்புறுதி வருமதிகள் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகள் சோதனையினை திருப்திப்படுத்துகின்றன (முவகொமா சோதனை) ஏனெனில் விளைவானது முதல் மற்றும் வட்டியினை மாத்திரமே பிரதிநிதிப்படுத்துவதனாலாகும். காப்புறுதி வருமதிகளுக்கு வட்டி அறவிடல் காணப்படாவிட்டாலும் அவை குறுங்காலமாக கருதப்படுவதனால் முவகொமா சோதனையினை திருப்திப்படுத்துவதுடன் வட்டி அறவிடுவதற்கு கடன் இடர்நேர்கை காணப்படுவதில்லை. முவகொமா சோதனையினை நிறைவுசெய்ததன் பின்னர் முகாமைத்துவமானது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக வைத்திருக்கப்படும் வணிக மாதிரியினை தெரிவுசெய்ததுடன் இவை குறுங்கால தன்மையினைக் கொண்டுள்ளதனால் இக்கருவியினை

பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் அளவிடுகின்றது. இவை நிதியளித்தல் கூறு காணப்படாத குறுங்கால மீதிகள் ஆகையால், பெறுமதிகுறைப்புக் கிரயமானது அதன் கொண்டுசெல்லல் பெறுமதிக்குச் சமனாக காணப்படும். மூன்று கட்டங்களின் அடிப்படையில், செயலாக்கம் (கட்டம் 1), குறைச்செயலாக்கம் (கட்டம் 2), செயலாக்கமற்றவை (கட்டம் 3), கம்பனியானது 12 மாதங்கள் எகந மற்றும் ஆயுட்கால எகந இனை பல்வேறு காட்சிநிலைகளிடையே நிறையிட்டு எகந இனை ஏற்பாடு செய்கின்றது.

**நியதிகள் மற்றும் நிபந்தனைகளிலான கணிசமான திருத்தத்தின் நிமித்தம் அங்கீகாரத்திலிருந்து அகற்றல்**
குழுமமானது வருமதியான காப்புறுதி தவணைக்கட்டனத்தினை பின்வரும் சந்தர்பத்தில் அங்கீகாரத்திலிருந்து அகற்றுகின்றது. அது ஓர் புதிய காப்புறுதி ஒப்பந்தமாகும் வரைக்குமாக கணிசமானளவு அதன் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீள்-பேரம் பேசப்பட்டிருக்ககுமானால், ஏதேனும் வித்தியாசம் ஓர் தனியான சொத்து அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகின்றது. புதிதாக அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி ஒப்பந்தங்கள் எகந அளவீட்டு நோக்கங்களுக்காக கட்டம் 1 ஆக வகைப்படுத்தப்படுகின்றது.

ஏனையவற்றுக்கிடையில், ஓர் வருமதியான காப்புறுதி தவணைக்கட்டணத்தை அங்கீகாரத்திலிருந்து அகற்றுவதா அல்லது இல்லையா என்பதை மதிப்பீடு செய்யும்போது. குழுமமானது பின்வரும் காரணிகளை கருத்திலெடுக்கின்றது:

- காப்புறுதி அக்கறையின் இழப்பு
- எதிர்தரத்தவரிலான மாற்றம்

**காப்புறுதி வருமதிகளின் வலுக்குன்றல் மதிப்பீடு**
குழுமமானது எகந முறையின் அடிப்படையில் வலுக்குன்றல் ஏற்பாட்டினை மதிப்பீடு செய்தது.

**மீள்காப்புறுதி வருமதிகள்**
கம்பனியானது வழக்கமான வணிகச் செயற்பாட்டில் காப்புறுதி இடர்நோ்கையினை மீள்காப்புறுதிக்கு ஒப்புவிக்கின்றது. மீள்காப்புறுதி வருமதிகள் காப்புறுதி கம்பனிகளிலிருந்து வரவேண்டிய மீதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதியாளரிடமிருந்து மீட்கக்கூடிய தொகைகள், நிலுவையிலுள்ள கோரல்கள் ஏற்பாட்டுடன் ஓர் நிலைப்பேருள்ள விதத்தில் அல்லது மீள்காப்புறுதியாளரின் கொள்கைகளுடன் இணைந்த தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரல்கள் மற்றும் தொடர்புடைய மீள்காப்புறுதி ஒப்பந்தத்திற்கு அமைவாக மதிப்பீடு செய்யப்படுகின்றன.

ஒப்புவிக்கப்பட்ட மீள்காப்புறதி ஏற்பாடுகள் குழுமத்தினை காப்புறுதியுறுநர்களுக்கான கடப்பாடுகளிலிருந்து விடுவிக்காது.

மீள்காப்புறுதி வருமதிகள் தொடர்பான பண்புகளுக்கமைய கருவிகள் ஒப்பந்த காசுப் பாய்ச்சல் பண்புச் சோதனைக்கு (முவகொமா சோதனை) தகைகை பெறுகின்றது ஏனெனில் விளைவானது முதல் மற்றும் வட்டியினை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வருமதியான மீள்காப்புறுதிக்கு எவ்விதமான வட்டியும் அறவிடப்படுவதில்லையாயினும், அவை குறுங்காலமாக மற்றும் வட்டி அறவிடுவதற்கு கடன் இடர்நோ்கை காணப்படாததாக கருதப்படுவதனால் அவை முவகொமா சோதனையினை திருப்திப்படுததுகின்றது. முவகொமா சோதனை நிறைவுசெய்ததன் பின்னர், முகாமைத்துவமானது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக வைத்திருக்கும் வணிக மாதிரியினை மற்றும் இவை குறுங்கால தன்மையினை கொண்டுள்ளதனால் கருவியினை பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடுவதற்கும் தெரிவுசெய்தது. இவை ஓர் நிதியளிப்பு கூறு அற்ற குறுங்கால மீதிகள் ஆகையால், பெறுமதி குறைப்புக் கிரயமானது கொண்டுசெல்லல் பெறுமதிக்குச் சமனாகும்.

**மீள்காப்புறுதி வருமதிகளுக்கான வலுக்குன்றல் மதிப்பீடு**
**SLFRS 4 -** காப்புறுதி ஒப்பந்தங்கள், பிரிவு 20 இன் அடிப்படையில் கம்பனியின் காப்புறுதி வருமதிகள் எகந மாதிரிக்கு தகமை பெறவில்லை. பின்வரும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் மீள்காப்புறுதி வருமதிகளில் வலுக்குன்றல் நட்டங்கள் அங்கீகரிக்கப்படும். பாகுபாடற்ற சான்று காணப்படாவிட்டால், விளைவாக மீள்காப்புறுதி சொத்துக்களது ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இடம்பெற்றிருப்பின், கம்பனி ஒப்பந்தத்தின் நியதிகளின் கீழ் அதற்கு வரவேண்டிய அனைத்து தொகைகளையும் பெறாதுவிடின், மற்றும் அந்த நிகழ்வானது மீள்காப்புறுதியாளரிடமிருந்து கம்பனி பெறவேண்டிய தொகைகளில் ஓர் நம்பத்தகுந்த அளவிடக்கூடிய தாக்கத்தினை கொண்டிருப்பின்.

| மாாச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|
| மீள்காப்புறுதி வருமதிகள் | - | - | 277,279 | 518,059 |
| காப்புறுதி வருமதிகள் | - | - | 747,182 | 676,874 |
| மொத்தம் | - | - | 1,024,461 | 1,194,933 |
| நியாயப் பெறுமதி | - | - | 1,024,461 | 1,194,933 |

## 27. நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில்

### கணக்கீட்டுக்கொள்கை

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், கம்பனியானது மூலோபாய நோக்கத்திற்காக வைத்திருக்கும் அதன் நிதியியல் முதலீடுகளில் சிலவற்றை அவ்வப்போது, அவை வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாதபோது ஏவிவறிபெ இல் உரித்துவ கருவிகளாக மாற்றவியலாதவாறு வகைப்படுத்துவதற்கு தெரிவுசெய்கின்றது. அத்தகைய வகைப்படுத்தலானது ஓர் கருவியிலிருந்து கருவி அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

எய்தப்பெற்றிராத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் உரித்துவத்தில் ஏவிவ ஊடாக "நியாயப் பெறுமதி ஒதுக்கத்தில்" அங்கீகரிக்கப்படுகின்றன. இந்த நிதியியல் முதலீடுகள் விற்பனைசெய்யப்படும்போது முன்னர் நியாயப் பெறுமதி ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மாற்றல் செய்யப்படுகின்றன. நிதியியல் சொத்தினை - ஏவிவறிபெ வைத்திருக்கும்போது உழைக்கப்படும் பங்கிலாபமானது, கொடுப்பனவினை பெறுவதற்கான உரிமை நிலைநாட்டப்படும்போது, வருமானக் கூற்றில் "ஏனைய செயற்பாட்டு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஏவிவறிபெ இல் உள்ள உரித்துவ கருவிகள் ஓர் வலுக்குன்றல் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதில்லை.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| உரித்துவப் பிணையங்கள் | 27.1 | 235 | 309,118 | 324,381 | 309,118 | 324,381 |
| திறைசேரி உண்டியல்கள் | | | - | - | 426,376 | 1,131,321 |
| மொத்தம் | | | 309,118 | 324,381 | 735,494 | 1,455,702 |
| நியாயப் பெறுமதி | | | 309,118 | 324,381 | 735,494 | 1,455,702 |

## 27.1 உரித்துவப் பிணையங்கள் - கம்பனி மற்றும் குழுமம்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்கம் இல. | 2021 பங்குகளின் எண்ணிக்கை | 2021 முதலீட்டிற்கான கிரயம் ரூ. '000 | 2021 சந்தைப் பெறுமதி ரூ. '000 | 2020 பங்குகளின் எண்ணிக்கை | 2020 முதலீட்டிற்கான கிரயம் ரூ. '000 | 2020 சந்தைப் பெறுமதி ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| விலைகுறிப்பிடப்பட்ட முதலீடுகள் | | | | | | | | |
| பீபள்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் பிஎல்சி | | | 25,014,002 | 237,633 | 180,100 | 25,014,002 | 237,633 | 217,622 |
| சனச டெவலப்மன்ட் பேங்க் பிஎல்சி | | | 2,271,260 | 213,853 | 129,008 | 2,271,260 | 213,853 | 106,749 |
| | | | | 451,486 | 309,108 | | 451,486 | 324,371 |
| விலைகுறிப்பிடப்படாத முதலீடுகள் | | | | | | | | |
| இலங்கை கடன் தகவல் பணியகம் | 27.2.1 | 235 | 100 | 10 | 10 | 100 | 10 | 10 |
| லங்கா கிரடிட் அன்ட் பிஸ்னஸ் வைனான்ஸ் லிமிட்டட் | 27.2.2 | 235 | 50,000,000 | 50,000 | - | 50,000,000 | 50,000 | - |
| மொத்தம் | | | | 501,496 | 309,118 | | 501,496 | 324,381 |

## 27.2 மட்டம் 3 படிநிலையின் கீழ் விலைகுறிக்கப்படாத உரித்துவப் பிணையங்களுக்கான நியாயப் பெறுமதி அளவீட்டின் கணக்கிணக்கம்

### 27.2.1 இலங்கை கடன் தகவல் பணியகம்

| | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 10 | 10 | 10 | 10 |
| ஏவிவ இல் அங்கீகரிக்கப்பட்ட மீள்அளவீடு | - | - | - | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 10 | 10 | 10 | 10 |

### 27.2.2 லங்கா கிரடிட் அன்ட் பிஸ்னஸ் வைனான்ஸ் லிமிட்டட்

| | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|
| ஏபரல் 01 இல் உள்ளவாறான முதலீடு | 50,000 | 50,000 | 50,000 | 50,000 |
| ஏவிவ இல் அங்கீகரிக்கப்பட்ட மீள்அளவீடு | - | - | - | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான முதலீடு | 50,000 | 50,000 | 50,000 | 50,000 |
| கழி: ஏற்பாடு | 50,000 | 50,000 | 50,000 | 50,000 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | - | - | - | - |

## 28. கடன் கருவி - பெறுமதி குறைப்புக் கிரயத்தில்

### கணக்கீட்டுக்கொள்கை

SLFRS 9 இன் பிரகாரம், "நிதியியல் முதலீடுகள்" பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் சந்தித்திருந்தால் மற்றும் இநநிபெ இல் குறிப்பிட்டிருக்கப்படாவிட்டால் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படும்:

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்காக சொத்தினை வைத்திருப்பதனை நோக்காகக் கொண்டிருந்தால் சொத்தானது வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் ; மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த நியதிகள் குறிப்பிட்ட திகதிகளில், முதல் மற்றும் நிலுவையிலுள்ள முதல் தொகையிலான வட்டி கொடுப்பனவுகள் மாத்திரமான காசுப் பாய்ச்சல்களுக்கு வழிவகுக்குமாயின்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர், இவை பின்னர் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் (மொத்த கொண்டுசெல்லல் தொகை விவவீ இனை பயன்படுத்தி, வலுக்குன்றலுக்கான ஏற்பாட்டினை கழித்து) அளவீடு செய்யப்படுகின்றன. விவவீ ஆனது கையகப்படுத்தலிலான ஏதேனும் கழிவு அல்லது வட்டத்தினை மற்றும் விவவீ இன் ஓர் உள்ளார்ந்த பாகமான கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் என்பவற்றை கணக்கிலெடுத்து கணிப்பிடப்படுகின்றன. பெறுமதி குறைப்பானது "வட்டி வருமானத்தில்" உள்ளடக்கப்படுவதுடன் வலுக்குன்றலிலிருந்து எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் "கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான வலுக்குன்றல் கட்டணங்களில்" அங்கீகரிக்கப்படுகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| திறைசேரி உண்டியல்கள் | 6,319,142 | 4,106,963 | 6,319,142 | 4,106,963 |
| திறைசேரி முறிகள் | 675,064 | - | 1,539,558 | - |
| விலைகுறிப்பிடப்படாத முன்னுரிமைப் பங்குகள் | - | - | 734,686 | 706,476 |
| மொத்தம் | 6,994,206 | 4,106,963 | 8,593,386 | 4,813,439 |
| நியாயப் பெறுமதி | 6,984,078 | 4,114,978 | 8,620,175 | 4,821,454 |

## 29. துணைக்கம்பனிகளிலான முதலீடுகள்

### கணக்கீட்டுக்கொள்கை

துணைக்கம்பனியிலான முதலீடு கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன், கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் சாட்டப்பட்ட ஏதேனும் வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - LKAS 27 – ' தனியான நிதிக் கூற்றுக்கள்' க்கு ஏற்ப குறிப்பிடப்படுகின்றன.

துணைக்கம்பனிகள் என்பன கம்பனியினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும். துணைக்கம்பனிகள் கம்பனிக்கு கட்டுப்பாடானது மாற்றல் செய்யப்பட்ட திகதியில் ஒருங்கிணைக்கப்படுவதுடன் அத்தகைய கட்டுப்பாடு நிறுத்தப்படும்வரை தொடர்ந்தும் ஒருங்கிணைக்கப்படும். கம்பனியானது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஓர் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்தினை கட்டுப்படுத்துவதாக ஊகிக்கின்றது: அது முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்துடனான அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையும் விளைவிற்கு வெளிப்பாடு, அல்லது உரிமையினைக் கொண்டிருந்தால் மற்றும் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்திலான அதன் அதிகாரத்தினூடாக அந்த விளைவுகளை பாதிக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தால் என்பனவாகும்.

குழுமத்தினுள்ளான மீதிகள், கொடுக்கல் வாங்கல்கள், வருமானம், செலவினங்கள் மற்றும் குழுமத்தினுள்ளான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் ஏதேனும் எய்தப்பெறாத இலாபங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது அகற்றப்படுகின்றன.

கட்டுப்பாடற்ற அக்கறைகள், கம்பனியினால் நேரடியாக அல்லது மறைமுகமாக துணைக்கம்பனியின் சொந்தமில்லாத உரித்துவத்தின் பகுதியினை பிரதிநிதித்துவம் செய்கின்றன.

கட்டுப்பாடற்ற அக்கறைகள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் உரித்துவத்துடன் காட்சிப்படுத்தப்படுகின்றன ஆனால் கம்பனியின் உரித்துடைமையாளர்களின் உரித்துவத்திலிருந்து வேறுபடுத்தி காண்பிக்கப்படும். இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானத்தின் ஒவ்வொரு கூறும் கட்டுப்பாடற்ற அக்கறைக்கு உரித்தானது ஒருங்கிணைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியாக காட்சிப்படுத்தப்படுகின்றது. கட்டுப்பாட்டு அக்கறைக்கு பிரயோகிக்கப்படும் ஏதேனும் நட்டங்கள் ஓர் பற்றாக்குறையான மீதியினை விளைவித்தாலும் கட்டுப்பாடற்ற அக்கறைகளின் அக்கறைக்கு எதிராக ஒதுக்கப்படுகின்றது. கட்டுப்பாடற்ற அக்கறைகளின் கையகப்படுத்தலானது தாய் நிறுவனத்தின் நீடிப்பு முறையினை பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படுகின்றது, இதன் மூலம் செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட மறுபயனின் நியாயப் பெறுமதிக்கும் மற்றும் கட்டுப்பாடற்ற அக்கறைகள் செம்மையாக்கப்படும் தொகைக்கும் இடையேயான வித்தியாசமானது உரித்துவமாக அங்கீகரிக்கப்படுகின்றது

கம்பனியின் அனைத்து துணைக்கம்பனிகளும் இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் பங்களாதேஷில் ஒருங்கிணைக்கப்பட்டது. பிரதான நடவடிக்கையின் மூலம் வைத்திருக்கப்படும் விகிதாசாரங்களிலான மாற்றங்களுடன் துணைக்கம்பனிகளின் ஓர் பட்டியலானது பக்கம் 179 இல் காணப்படும் குறிப்பு 1.2 இல் வழங்கப்பட்டுள்ளது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | உரித்துடைமை | கிரயம் | பணிப்பாளர்களது / சந்தைப் பெறுமதி | உரித்துடைமை | கிரயம் | பணிப்பாளர்களது / சந்தைப் பெறுமதி |
| கம்பனி | % | ரூ. '000 | ரூ. '000 | % | ரூ. '000 | ரூ. '000 |
| பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | 100.00 | 175,000 | 332,983 | 100.00 | 175,000 | 304,841 |
| பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் | 100.00 | 550,000 | 1,013,914 | 100.00 | 550,000 | 1,104,209 |
| பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் பிரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் | 100.00 | 600,000 | 626,158 | 100.00 | 600,000 | 616,910 |
| பீபள்ஸ் மைக்ரோ-கொமர்ஸ் லிமிட்டட் | 100.00 | 150,000 | 367,437 | 100.00 | 150,000 | 304,808 |
| பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | 75.00 | 600,000 | 4,590,000 | 75.00 | 600,000 | 2,955,000 |
| லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் | 51.00 | 1,138,788 | 1,482,658 | 51.00 | 1,138,788 | 1,440,838 |
| மொத்தம் | | 3,213,788 | 8,413,150 | | 3,213,788 | 6,726,606 |

பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி இனைத் தவிர துணைக்கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படவில்லை. துணைக்கம்பனிகளிலான முதலீட்டில் பணிப்பாளர்களது பெறுமதியிடலானது தேறிய சொத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி சந்தைப் பெறுமதி அடிப்படையில் பெறுமதியிடப்பட்டுள்ளது.

கணிசநிலை கட்டுப்பாடற்ற அக்கறையினைக் (கஅ) கொண்டுள்ள குழுமத்தின் துணைக்கம்பனிகள் தொடர்பான தகவல்களது சுருக்கம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| மார்ச் 31 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் | மொத்தம் | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் | மொத்தம் |
| கட்டுப்பாடற்ற அக்கறை (கஅ) சதவீதம் | 25% | 49% | | 25% | 49% | |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 5,294,873 | 361,819 | 5,656,692 | 5,252,053 | 381,416 | 5,633,469 |
| கழி: செயற்பாட்டுச் செலவினங்கள் | 3,728,072 | 303,451 | 4,031,523 | 4,437,888 | 182,443 | 4,620,331 |
| வருமான வரிக்கு முந்திய இலாபம் | 1,566,801 | 58,368 | 1,625,169 | 814,165 | 198,973 | 1,013,138 |
| கழி: வருமான வரிச் செலவினம் | 363,208 | 55,468 | 418,676 | 320,626 | 77,147 | 397,773 |
| வரிக்கு பிந்திய இலாபம் | 1,203,593 | 2,900 | 1,206,493 | 493,539 | 121,826 | 615,365 |
| கட்டுப்பாடற்ற அக்கறைக்கு (கஅ)ஒதுக்கப்பட்ட இலாபம் | 300,898 | 1,421 | 302,319 | 123,384 | 59,695 | 183,079 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் | மொத்தம் | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | 1,045,082 | 42,604 | 1,087,686 | 350,478 | 43,773 | 394,251 |
| வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான மீதிகள் | 2,815,391 | 505,607 | 3,320,998 | 3,162,759 | 702,633 | 3,865,392 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் | 2,558,607 | 4,735,863 | 7,294,470 | 2,728,813 | 2,732,523 | 5,461,336 |
| காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வருமதிகள் | 1,643,629 | - | 1,643,629 | 1,840,239 | - | 1,840,239 |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 426,376 | - | 426,376 | 1,131,321 | - | 1,131,321 |
| பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கடன் கருவி | 864,494 | 691,274 | 1,555,768 | - | 666,840 | 666,840 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்கள் | 182,322 | 147,778 | 330,100 | 224,164 | 184,843 | 409,007 |
| ஏனைய சொத்துக்கள் | 1,597,954 | 204,811 | 1,802,765 | 661,596 | 153,468 | 815,064 |
| மொத்தச் சொத்துக்கள் | 11,133,855 | 6,327,937 | 17,461,792 | 10,099,370 | 4,484,080 | 14,583,450 |
| | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 3,020 | 105,449 | 108,469 | 359,447 | - | 359,447 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | - | 2,944,262 | 2,944,262 | - | 1,487,573 | 1,487,573 |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 691,728 | 273,396 | 965,124 | 714,002 | 284,807 | 998,809 |
| ஏனைய பொறுப்புக்கள் | 482,995 | 97,658 | 580,653 | 242,858 | 91,413 | 334,271 |
| காப்புறுதி பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | 5,089,039 | - | 5,089,039 | 5,132,753 | - | 5,132,753 |
| மொத்த பொறுப்புக்கள் | 6,266,782 | 3,420,765 | 9,687,547 | 6,449,060 | 1,863,793 | 8,312,853 |
| தேறிய சொத்துக்களின் பெறுமதி | 4,867,073 | 2,907,172 | 7,774,245 | 3,650,310 | 2,620,287 | 6,270,597 |
| கட்டுப்பாடற்ற அக்கறையின் (கஅ) கொண்டு செல்லல் தொகை | 1,216,768 | 1,424,514 | 2,641,283 | 912,578 | 1,283,941 | 2,196,518 |
| | | | | | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | 360,314 | 2,920 | 363,234 | 249,203 | 55,222 | 304,425 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாயச்சல்கள் | (163,440) | 1,492 | (161,948) | 197,202 | (1,912) | 195,290 |
| நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | (18,428) | (301,060) | (319,488) | 53,078 | 85,248 | 138,326 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு | 178,446 | (296,648) | (118,202) | 499,483 | 138,558 | 638,041 |

## 30. முதலீட்டு ஆதனம்

### கணக்கீட்டுக்கொள்கை

முதலீட்டு ஆதனம் என்பது ஒன்றில் வாடகை வருமானத்தினை உழைப்பதற்காக அல்லது மூலதன மதிப்பேற்றத்திற்கு அல்லது இவ்விரண்டுக்காகவும் வைத்திருக்கப்படுபவை ஆனால் வழக்கமான வணிக நடவடிக்கையின்போது விற்பனைக்காக, பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்திசெய்வதற்கு அல்லது விநியோகிப்பதற்கு அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுபவை அல்ல.

முதலீட்டு ஆதனங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் முதலீட்டு ஆதனங்கள் நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன் அது நிதி நிலைமைக் கூற்று திகதியில் சந்தை நிலவரத்தினை பிரதிபலிக்கின்றது. நியாயப் பெறுமதியின் மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழும் வருடத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

குழுமக் கம்பனிகள் மற்றுமோர் குழுமத்தின் /கம்பனியின் முதலீட்டு ஆதனத்தின் கணிசமானளவு பகுதியினை அமர்வுகொண்டால், அத்தகைய முதலீட்டு ஆதனமானது ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமாக கவனிக்கப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 16 - “ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்" இன் பிரகாரம் கணக்கிலடப்பட்டுள்ளது.

**அங்கீகாரத்திலிருந்து அகற்றுதல்**

முதலீட்டு ஆதனங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றன. அவை விற்பனை செய்யப்பட்டால் அல்லது முதலீட்டு ஆதனமானது பயன்பாட்டிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டிருந்தால் மற்றும் அதன் விற்பனையிலிருந்து எவ்விதமான எதிர்கால பொருளாதார நலனும் எதிர்பார்க்கப்படாவிட்டால் ஆகும் ஓர் முதலீட்டு ஆதனத்தின் விற்பனை அல்லது ஓய்வுகொடுப்பதிலிருந்தான ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அது ஓய்வுகொடுக்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட வருடத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**முதலீட்டு ஆதனத்திற்கு / த்திலிருந்து பின்னரான மாற்றல்கள்**

முதலீட்டு ஆதனத்திற்கு பயன்பாட்டில் மாற்றம் காணப்பட்டால் மாத்திரமே மாற்றல்கள் செய்யப்படுகின்றன. உரிமையாளரது அமர்வு நிறைவடைந்ததற்கான சான்று, மற்றுமோர் தரப்பினருக்கான ஓர் செயற்பாட்டு குத்தகையின் ஆரம்பம், அல்லது கட்டுமானத்தின் அல்லது அபிவிருத்தியின் நிறைவு.

முதலீட்டு ஆதனத்திலிருந்து பின்வருவன இடம்பெற்றால் மாத்திரமே மாற்றல்கள் செய்யப்படுகின்றன. பயன்பாட்டிலான ஓர் மாற்றம், உரிமையாளர் அமர்வுகொள்ளல் ஆரம்பித்தால் அல்லது விற்பனை செய்யும் நோக்கத்துடன் அபிவிருத்தியினை ஆரம்பித்திருந்தால்.

முதலீட்டு ஆதனத்திலிருந்து உரிமையாளர் அமர்வுகொண்ட ஆதனத்திற்கு அல்லது இருப்புகளுக்கு மாற்றல் செய்வதற்காக, பயன்பாட்டிலான மாற்றல் இடம்பெற்ற திகதியில் பின்னர் கணக்கீடு செய்வதற்காக ஆதனத்தின் கருதப்படக்கூடிய கிரயமானது அதன் நியாயப் பெறுமதியாகும்.

ஓர் உரிமையாளர் அமர்வுகொண்ட ஆதனமாக கம்பனியினால் அமர்வுகொள்ளப்படும் ஆதனம் காணப்படுமாயின் அது முதலீட்டு ஆதனமாக வருவதுடன் கம்பனியானது பயன்பாட்டிலான மாற்றம் இடம்பெறும் திகதி வரைக்கும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்ட கொள்கையின் பிரகாரம் அத்தகைய ஆதனம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

உரிமையாளர் அமர்வுகொண்ட ஆதனம் மற்றும் முதலீட்டு ஆதனத்திற்கான இருப்புகளிலிருந்தான ஓர் மாற்றலுக்கு, அந்த திகதியில் உள்ளவாறான சொத்தின் நியாயப் பெறுமதிக்கும் அதன் முன்னைய கொண்டுசெல்லல் தொகைக்குமான ஏதேனும் வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. கம்பனி / குழுமமானது ஓர் சுயமாக நிர்மாணிக்கப்பட்ட முதலீட்டு ஆதனத்தின் கட்டுமானத்தினை அல்லது அபிவிருத்தியினை நிறைவுசெய்திருந்தால் அந்த திகதியிலான ஆதனத்தின் நியாயப் பெறுமதிக்கும் அதன் முன்னைய கொண்டுசெல்லல் தொகைக்கும் இடையேயான ஏதேனும் வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**முதலீட்டு ஆதனத்தின் நியாயப் பெறுமதி**

குழுமத்தின் மற்றும் கம்பனியின் முதலீட்டு ஆதனமானது நியாயப்பெறுமதியில் பிரதிபலிக்கப்படுகின்றது. ஒத்த சொத்துக்களின் நடைமுறை சந்தை விலைகள் கிடைக்கப்பெறும்போது, இந்த சொத்துக்களின் நியாயப் பெறுமதிகளை மதிப்பிடுவதில் அத்தகைய சான்றுகள் கருத்திலெடுக்கப்படுகின்றன. அத்தகைய தகவல்கள் கிடைக்காதவிடத்து, ஓர் நியாயமான நியாயப் பெறுமதி மதிப்பீடுகளில் குழுமம் மற்றும் கம்பனியானது நியாயப் பெறுமதிகளாக உடைமையாயக்கத்தக்க தொகைகளை தீர்மானிக்கின்றது. இது மதிப்பீடுகளின் அடிப்படையில் கழிவிறக்கம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் எதிர்காலக் கணிப்பினை கருத்திலெடுப்பதுடன், ஒத்த ஆதனங்களுக்கான நடைமுறை சந்தை வாடகை போன்ற சான்றுகளிலிருந்து பெறப்பட்டவை மற்றும காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் நேரம் என்பவற்றிலான நிச்சயமற்றதன்மையினை பிரதிபலிக்கும் கழிவிறக்க வீதங்களை பயன்படுத்தி தீர்மானிக்கின்றது.

**நியாயப் பெறுமதியினை தீர்மானித்தல்**

பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் தகமைகளையுடைய மற்றும் மதிப்பிடப்படும் ஆதனத்தின் வகையில் மற்றும் அது அமைந்துள்ள இடத்தில் சமீபத்தைய அனுபவம் கொண்ட வெளிவாரி மற்றும் சுயாதீன மதிப்பீட்டாளர்கள், ஒவ்வொரு வருடமும் முதலீட்டு ஆதனத் தேக்கத்தினை மதிப்பீடு செய்கின்றார்கள். நிதியியல் காலப்பகுதிகளில், அந்தக் காலப்பகுதியினுள் பணிப்பாளர் சபையினால் நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது.

நியாயப் பெறுமதிகள் சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையிலாகும் என்பதுடன், பயன்பாட்டிலுள்ள பெறுமதி அல்லது அளவீட்டு திகதியில் சந்தை பங்குபற்றுநர்களுக்கிடையே ஓர் முறையான கொடுக்கல் வாங்கலில் ஆதனம் விற்பனை செய்யக்கூடிய மதிப்பிடப்பட்ட தொகை என்பவற்றிலாகும். .

**உடைமையாளர் குடியிருக்கும ஆதனங்கள் மற்றும் முதலீட்டு ஆதனம்:**

ஓர் ஆதனம் முதலீட்டு ஆதனமாக தகமை பெறுகின்றதா என்று தீர்மானிப்பதில் குழுமம் / கம்பனியானது ஆதனம் சுயாதீன காசுப்பாய்ச்சல்களை உருவாக்குகின்றதா என்ற ஓர் தீர்மானத்தினை மேற்கொள்கின்றது. இது ஆதனத்திற்கு மாத்திரமன்றி ஏனைய சொத்துக்களுக்கும் உடைமையாக்கத்தக்க காசுப்பாய்ச்சல்களாக இருத்தலாகாது. துணைச்சேவைகள் கணிசமானளவா எனத் தீர்மானிப்பதில் தீர்வானது பிரயோகிக்கப்படுகின்றது ஏனெனில் அவ்வாறாயின் ஆதனம் ஓர் முதலீட்டு ஆதனமாக தகமை பெறாது.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | - | - | 1,131,652 | 1,131,596 |
| இவ்வருடத்திலான சேர்க்கைகள் | - | - | - | 56 |
| இவ்வருடத்திலான மாற்றல்கள் | - | - | (310,988) | - |
| மாச் 31 இல் உள்ளவாறான மீதி | - | - | 820,664 | 1,131,652 |

இலக்கம் 7 மற்றும் 9, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 7 இல் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடமானது பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பட்டீஸ் லிமிட்டட்டினால், மக்கள் வங்கி, பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி மற்றும் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி ஆகிய நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் மக்கள் வங்கிக்கு வாடகைக்கு விடப்பட்ட ஆதனத்தின் வேறுபடுத்தப்பட்ட பகுதி குழுமத்திற்கான முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வேறுபடுத்தலுக்கான அடிப்படையானது வாடகைக்கு விடப்பட்ட சதுர அடி எண்ணிக்கையின் அடிப்படையிலாகும். இவ்வருடத்தில், மக்கள் வங்கி வாடகைக்கு விடப்பட்ட ஒரு பகுதியிலிருந்து அகன்றதுடன் அத்தகைய பகுதியானது இவ்வருடத்தில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட முதலீட்டு ஆதனத்தின் சந்தைப் பெறுமதியிடலானது 31 டிசம்பர் 2020 இல் கம்பனி / குழுமத்துடன் தொடர்புபடாத சுயாதீன மதிப்பீட்டாளரான திரு. கே.டி.டி. திசேரா, FRIS (Eng) அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட முதலீட்டு ஆதனம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட வாடகை வருமானமானது பக்கம் 192 இல் காணப்படும் குறிப்பு 10 இல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட முதலீட்டு ஆதனம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நேரடிச் செயற்பாட்டு செலவினங்கள் பக்கம் 198 இல் காணப்படும் குறிப்பு 15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 31. ஏனைய சொத்துக்கள்

### கணக்கீட்டுக்கொள்கை

கம்பனி மற்றும் குழுமமானது அவற்றின் ஏனைய அனைத்து சொத்துக்களையும் ஏனைய நிதிச் சொத்துக்களாக மற்றும் ஏனைய நிதியியலல்லாதா சொத்துக்களாக வகைப்படுத்துகின்றன. ஏனைய நிதியியலல்லாத சொத்துக்கள் பிரதானமாக முற்பண கொடுப்பனவுகள், மீட்கத்தக்க பெசேவ, கையிருப்பு மற்றும் நானாவித வருமதிகளை உள்ளடக்குகின்றன. முற்பணக் கொடுப்பனவுகள் வரலாற்றுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன.

**ஒத்திவைக்கப்பட்ட செலவினங்கள்**

**ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்கள் (ஒகைகி)**

புதிய வணிகங்களை கையகப்படுத்துவதிலான பின்வருவன உள்ளடங்கலான கிரயங்கள், தரகுக்கூலி, காப்புறுதி ஒப்பந்தம், சந்தைப்படுத்தல் மற்றும் காப்புறுதி ஒப்பந்த வழங்கல் செலவினங்கள், புதிய வணிகங்களது உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புடையவை இந்தச் செலவினங்கள் எதிர்கால காப்புறுதி தவணைக்கட்டணத்திலிருந்து மீட்கப்படக்கூடியளவுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன. ஏனைய அனைத்து கையகப்படுத்தல் கிரயங்களும் அவை ஆட்பட்டபோது ஓர் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்கள் (ஒகைகி) காலப்பகுதியின் மீது பெறுமதிகுறைப்பு செய்யப்படுகின்றது. இது உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணம் பெறுமதி குறைப்பு செய்யப்படுவதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு ஆயுட்காலத்தில் அல்லது சொத்தில் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கும் நுகர்வுப் போக்கிலான மாற்றங்கள் பெறுமதிகுறைப்புக் காலத்தினை மாற்றுவதன் மூலம் மற்றும் அவை ஓர் கணக்கீட்டு மதிப்பீட்டிலான மாற்றமாக கருதப்படுகின்றது.

தொடர்புடைய ஒப்பந்தங்கள் முதிர்வடையும்போது அல்லது ரத்துசெய்யப்படும்போது ஒகைகி அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றது.

ஒகைகி இன் ஓர் வலுக்குன்றல் மீளாய்வானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் செயற்படுத்தப்படுகின்றது அல்லது வலுக்குன்றல் எழுவதற்கான ஓர் குறிகாட்டி காணப்படுமாயின் அடிக்கடி மீளாய்வு செய்யப்படுகின்றது. மீட்கத்தக்க தொகையானது கொண்டு செல்லல் தொகையிலும் பார்க்க குறைவாகக் காணப்படும்போது ஓர் வலுக்குன்றல் நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலத்திற்கும் பொறுப்பு போதுமை சோதனையில் ஒகைகி யும் கருதப்படுகின்றது.

**மீள்காப்புறுதி தரகுக்கூலிகள்**

வெளிவாரி மீள்காப்புறுதி ஒப்பந்தங்களிலான வருமதியான தரகுக்கூலிகள் ஒத்திவைக்கப்பட்டு எதிர்பார்க்கப்படும் காப்புறுதி தவணைக்கட்டணம் செலுத்தவேண்டிய காலத்தின் மீது ஓர் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்புச் செய்யப்படுகின்றது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| ஏனைய நிதிச் சொத்துக்கள் - காப்புறுதி தரகுக்கூலி | | | 126,949 | 232,692 | - | - |
| நிதியியலல்லாத சொத்துக்கள் | 31.1 | 240 | 448,271 | 914,309 | 932,018 | 1,235,329 |
| மொத்தம் | | | 575,220 | 1,147,001 | 932,018 | 1,235,329 |

## 31.1 நிதியியலல்லாத சொத்துக்கள்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| முற்பணக் கொடுப்பனவுகள் | | | 105,693 | 145,383 | 68,320 | 124,859 |
| வருமதியான பங்கிலாபம் | | | - | 310,000 | - | - |
| கையிருப்புக்கள் | | | 58,380 | 49,596 | 65,708 | 57,920 |
| முன்செலுத்தப்பட்ட செலவினம் | | | 72,367 | 67,914 | 81,759 | 76,409 |
| பணியாட்டொகுதி கடன்களில் பெறுமதிகுறைக்கப்படாத கிரயம் (1 நாள் வித்தியாசம்) | 31.1.1 | 241 | 78,624 | 123,264 | 78,924 | 123,264 |
| ஒத்திவைக்கப்பட்ட செலவினங்கள் | | | - | - | 210,104 | 244,874 |
| ஏனைய நிதியியலல்லாத சொத்துக்கள் | | | 133,207 | 218,152 | 427,203 | 608,003 |
| மொத்தம் | | | 448,271 | 914,309 | 932,018 | 1,235,329 |

### 31.1.1 பணியாட்டொகுதி கடன்களிலான பெறுமதிகுறைக்கப்படாத கிரயங்கள் (1 நாள் வித்தியாசம்)

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறானது | 123,264 | 128,906 | 123,264 | 129,509 |
| வருடத்திற்கான கட்டணம் | (44,640) | (5,642) | (44,340) | (6,245) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 78,624 | 123,264 | 78,924 | 123,264 |

## 32. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

### கணக்கீட்டுக்கொள்கை

**அங்கீகாரத்தின் அடிப்படை**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன தொட்டுணரக்கூடிய உருப்படிகள் என்பதுடன் இவை சேவைகள் வழங்கலுக்காக அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக மற்றும் ஒரு வருடத்திற்கும் மேலான காலப்பகுதியில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சொத்துடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் குழுமத்திற்கு பாய்ச்சப்படும் மற்றும் சொத்தின் கிரயமானது நம்பகமாக அளவிடப்படக்கூடிய சாத்தியம் காணப்படுமாயின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**அளவீட்டின் அடிப்படை**

ஓர் சொத்தாக அங்கீகரிக்கப்படும் தகமையினைக் கொண்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படி ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. கிரயமானது சொத்தின் கையகப்படுத்தலுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினத்தை உள்ளடக்குவதுடன் அதன் பின்னர் ஒரு பகுதியினை சேர்ப்பதற்கு அல்லது மாற்றீடு செய்வதற்காக ஆட்பட்ட செலவினத்தையும் உள்ளடக்கும். சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் மூலப் பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு, சொத்தினை அதன் பயன்பாட்டின் நோக்கத்திற்காக அதனை செயற்படும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு நேரடியாக உடைமையாக்கத்தக்க வேறு ஏதேனும் செலவினங்கள் மற்றும் பாகம் பாகமாய் பிரித்தெடுப்பதற்கு மற்றும் உருப்படிகளை கழற்றுவதற்கு மற்றும் தளத்தில் அவற்றை புனருத்தாரணம் செய்வதற்கான செலவினங்கள் மற்றும் மூலதனமாக்கப்பட்ட கடன்பெறல் கிரயங்கள் என்பவற்றை உள்ளடக்கும். தொடர்புடைய உபகரணத்தின் செயற்பாட்டிற்கு ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ள கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் கணினி உபகரணத்தின் ஓர் பாகமாக மூலதனவாக்கப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஓர் உருப்படியின் பாகங்கள் வெவ்வேறு பயன்பாட்டு ஆயுட்காலங்களைக் கொண்டிருப்பின், அவை ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பிரத்தியேக உருப்படிகளாக (பாரிய பிரிவுகள்) கணக்கீடு செய்யப்படுகின்றன.

கம்பனி மற்றும் குழுமமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு கிரய முறையினை பிரயோகிப்பதுடன் கொள்வனவுக் கிரயம் அல்லது கட்டுமாணத்துடன் அவற்றிலான ஏதேனும் தற்செயலான செலவினங்கள் மற்றும் அதிலிருந்த திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு பதிவு செய்கின்றது.

**அடுத்துவரும் கிரயம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் ஒரு பகுதியினை மாற்றீடு செய்வதற்கான கிரயம், அப்பகுதியில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் குழுமத்திற்கு பாயச்சப்படும் மற்றும் அதன் கிரயமானது நம்பகமாக அளவிட இயலும் சாத்தியம் காணப்படுமாயின் கொண்டு செல்லல் தொகையில் அங்கீகரிக்கப்படும். ஆதனம், பொறித்தொகுதி மற்றும் நாளாந்த பழுதுபார்த்தல் செலவானது அது ஆட்டபட்ட சமயத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விதிக்கப்படுகின்றது..

**பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு**

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பானது அவை ஆட்பட்ட நிதியியல் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விதிக்கப்படுகின்றது. பாரிய புதுப்பித்தல் செலவினமானது, நடைமுறையிலுள்ள சொத்துக்களின் மிக சமீபத்தில் மதிப்பிடப்பட்ட செயலாற்றல் தரத்திலும் மேலான எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு மற்றும் குழுமத்திற்கு பாய்ச்சப்படும் சாத்தியம் காணப்பட்டிருந்தால் மற்றும் புதுப்பித்தலானது சொத்தின் இனங்காணக்கூடிய ஓர் பகுதியினை மாற்றீடு செய்திருந்தால் சொத்தின் கொண்டுசெல்லல் தொகையினுள் உள்ளடக்கப்படும். பாரிய புதுப்பித்தல்கள் தொடர்புடைய சொத்தின் எஞ்சிய பயன்பாட்டுக் காலப்பகுதியில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

**அங்கீகாரத்திலிருந்து அகற்றல்**

விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எந்தவித பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படாவிட்டால் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றன. சொத்தின் அங்கீகார அகற்றலிலிருந்தான ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது (தேறிய விற்பனை வருவாய் மற்றும் சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கும் இடையேயான வித்தியாசமாக கணிப்பிடப்பட்டது) சொத்தானது அங்கீகார அகற்றம் செய்யப்பட்ட வருடத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ‘ ஏனைய செயற்பாட்டு வருமானம்’ இல் அங்கீகரிக்கப்படுகின்றது.

**பெறுமானத்தேய்வு**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஓர் உருப்படியின் ஒவ்வொரு பாகமும் அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தில் மீது ஓர் நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனெனில், இந்த முறையானது சொத்தினுள் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கும் நுகர்வுப் போக்கினை மிகவும் நெருக்கமான பிரதிபலிப்பதனாலாகும். காணியானது பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டு ஆயுட்காலங்கள்**

குழுமம் மற்றும் கம்பனியானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தில் அவற்றின் மதிப்பிடப்பட்ட எச்சப்பெறுமதிகளை கணக்கிலெடுத்ததன் பின்னர் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்கின்றது. மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலமானது குழுமத்தின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டிலிருந்து குழுமம் மற்றும் கம்பனியானது எதிர்கால பொருளாதார நலன்களை பெறுவதற்கு எண்ணியுள்ள முகாமைத்துவத்தின் மதிப்பீட்டுக் காலத்தினைப் பிரதிபலிக்கின்றது. எச்சப் பெறுமதியானது குழுமம் / கம்பனி சொத்தின் விற்பனையிலிருந்து தற்போது பெறக்கூடிய தொகையினை முகாமைத்துவத்தின் மதிப்பிடப்பட்ட தொகையானது பிரதிபலிக்கின்றது. இது மதிப்பிடப்பட்ட விற்பனைக் கிரயத்தினை கழித்து, சொத்தானது ஏற்கனவே அதன் பயன்பாட்டு ஆயுட்காலத்தினை அடைந்துள்ளது மற்றும் அப்போது எதிர்பார்க்கும் நிலைமையில் காணப்படுகின்றது என்ற அடிப்படையிலாகும். எதிர்பார்க்கப்படும் மட்டத்திலான பயன்பாடு மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகளிலான மாற்றங்கள் இந்த சொத்துக்களின் பொருளாதாரம், பயன்பாட்டு ஆயுட்காலம் மற்றும் எச்சப் பெறுமதிகளை பாதிக்கலாம். இது அதன் விளைவாக எதிர்கால பெறுமானத்தேய்வு கட்டணத்தில் தாக்கம் ஏற்படுத்தலாம்.

மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு;

| சொத்தின் வகுப்பு | % வருடத்திற்கு | காலம் |
|---|---|---|
| இறையிலி கட்டிடங்கள் | 2 | 50 வருடங்கள் |
| குத்தகை ஆதனங்களிலான மேம்படுத்தல்கள் | 25 | 4 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 12.5 - 20 | 5 - 8 வருடங்கள் |
| கணினி வன்பொருள் | 20 | 5 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 10 - 20 | 5 -10 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 20 | 5 வருடங்கள் |

மேற்குறிப்பிடப்பட்ட வீதங்கள் குழும நிறுவனங்களினால் ஒரே மாதிரியாக பயன்படுத்தப்படுகின்றன. பெறுமானத்தேய்வு வீதங்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஓர் உருப்படியின் ஒவ்வொரு முக்கியமான பகுதிக்கும் தனித்தனியாக தீர்மானிக்கப்படுகின்றன. அத்துடன் சொத்தானது பயன்பாட்டிற்கு கிடைக்கப்பெறும்போது பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்படுகின்றது. அதாவது, முகாமைத்துவம் கருதப்பட்ட முறையில் செயற்படுவதற்கான ஆற்றலுக்கு அவசியமான இடம் மற்றும் நிலைமை காணப்படும்போதாகும். ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வானது, அச்சொத்தானது விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்ட திகதி அல்லது சொத்து அங்கீகாரத்திலிருந்து அகற்றப்பட்ட திகதி இதில் எது முதலில் வருகின்றதோ அத்திகதி தொடக்கம் நிறுத்தப்படுகின்றது. பெறுமானத்தேய்வு முறைகள், பயன்பாட்டு ஆயுட்காலங்கள் மற்றும் எச்சப் பெறுமதிகள் என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு பொருத்தமாயின் சீராக்கப்படுகின்றது.

## 32.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் - கம்பனி

| | இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்கள் ரூ. '000 | குத்தகை ஆதனங்களிலான மேம்படுத்தல்கள் ரூ. '000 | மோட்டார் வாகனங்கள் ரூ. '000 | கணினி வன்பொருள் ரூ. '000 | அலுவலக உபகரணங்கள் ரூ. '000 | தளபாடம் மற்றும் பொருத்திகள் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | **573,840** | **56,872** | **278,163** | **766,212** | **704,670** | **450,446** | **2,830,203** |
| சேர்க்கைகள் | **-** | **-** | **-** | **33,922** | **54,104** | **16,664** | **104,690** |
| விற்பனைகள் | **-** | **-** | **(52,440)** | **(39,869)** | **(74,924)** | **(7,129)** | **(174,362)** |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | **573,840** | **56,872** | **225,723** | **760,265** | **683,850** | **459,981** | **2,760,531** |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | **2,763** | **56,794** | **85,461** | **586,278** | **556,502** | **398,476** | **1,686,274** |
| வருடத்திற்கான கட்டணம் | **471** | **78** | **15,841** | **63,242** | **64,589** | **23,139** | **167,360** |
| விற்பனைகள் | **-** | **-** | **(26,047)** | **(36,647)** | **(73,604)** | **(6,055)** | **(142,353)** |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | **3,234** | **56,872** | **75,255** | **612,873** | **547,487** | **415,560** | **1,711,281** |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | **570,606** | **-** | **150,468** | **147,392** | **136,363** | **44,421** | **1,049,250** |
| கிரயம் | | | | | | | |
| 1 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி | 567,181 | 56,872 | 209,509 | 709,456 | 655,397 | 435,471 | 2,633,886 |
| சேர்க்கைகள் | 6,659 | - | 75,277 | 59,573 | 56,334 | 16,085 | 213,928 |
| விற்பனைகள் | - | - | (6,623) | (2,817) | (7,061) | (1,110) | (17,611) |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | 573,840 | 56,872 | 278,163 | 766,212 | 704,670 | 450,446 | 2,830,203 |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 2,402 | 56,774 | 74,507 | 525,167 | 502,580 | 374,170 | 1,535,600 |
| வருடத்திற்கான கட்டணம் | 361 | 20 | 14,859 | 63,928 | 60,081 | 25,243 | 164,492 |
| விற்பனைகள் | - | - | (3,905) | (2,817) | (6,159) | (937) | (13,818) |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | 2,763 | 56,794 | 85,461 | 586,278 | 556,502 | 398,476 | 1,686,274 |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 571,077 | 78 | 192,702 | 179,934 | 148,168 | 51,970 | 1,143,929 |

## 32.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் - குழுமம்

| | இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்கள் ரூ. '000 | குத்தகை ஆதனங்களிலான மேம்படுத்தல்கள் ரூ. '000 | மோட்டார் வாகனங்கள் ரூ. '000 | கணினி வன்பொருள் ரூ. '000 | அலுவலக உபகரணங்கள் ரூ. '000 | தளபாடம் மற்றும் பொருத்திகள் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 3,226,454 | 58,583 | 693,357 | 881,755 | 999,658 | 530,039 | 6,389,846 |
| சேர்க்கைகள் | - | - | 9,440 | 37,085 | 81,547 | 24,252 | 152,324 |
| விற்பனைகள் | (55) | - | (191,976) | (39,869) | (74,924) | (22,599) | (329,423) |
| மாற்றல்கள் | 310,988 | - | - | - | - | - | 310,988 |
| நாணயமாற்று வீத வேறுபாடு | - | - | - | 899 | 445 | 293 | 1,637 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 3,537,387 | 58,583 | 510,821 | 879,870 | 1,006,726 | 531,985 | 6,525,372 |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 317,912 | 57,271 | 205,642 | 658,593 | 706,349 | 445,709 | 2,391,476 |
| வருடத்திற்கான கட்டணம் | 63,805 | 78 | 44,373 | 74,400 | 75,807 | 33,782 | 292,245 |
| விற்பனைகள் | - | - | (74,643) | (33,611) | (73,604) | (11,980) | (193,838) |
| மாற்றல்கள் | - | - | - | - | - | - | - |
| நாணயமாற்று வீத வேறுபாடு | - | - | - | 627 | 499 | 98 | 1,224 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 381,717 | 57,349 | 175,372 | 700,009 | 709,051 | 467,609 | 2,491,107 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 3,155,670 | 1,234 | 335,449 | 179,861 | 297,675 | 64,376 | 4,034,265 |
| கிரயம் | | | | | | | |
| 1 ஏப்ரல் 20219 இல் உள்ளவாறான மீதி | 3,213,999 | 58,583 | 610,767 | 812,177 | 940,383 | 507,409 | 6,143,318 |
| சேர்க்கைகள் | 12,455 | - | 108,867 | 72,378 | 67,848 | 22,667 | 284,215 |
| விற்பனைகள் | - | - | (26,277) | (3,959) | (9,051) | (1,110) | (40,397) |
| நாணயமாற்று வீத வேறுபாடு | - | - | - | 1,159 | 478 | 1,073 | 2,710 |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | 3,226,454 | 58,583 | 693,357 | 881,755 | 999,658 | 530,039 | 6,389,846 |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| 1 ஏப்ரல் 20219 இல் உள்ளவாறான மீதி | 257,391 | 57,251 | 176,593 | 585,965 | 644,807 | 404,010 | 2,126,017 |
| வருடத்திற்கான கட்டணம் | 60,521 | 20 | 44,843 | 75,584 | 69,209 | 42,227 | 292,404 |
| விற்பனைகள் | - | - | (15,794) | (3,959) | (8,105) | (1,110) | (28,968) |
| நாணயமாற்று வீத வேறுபாடு | - | - | - | 1,003 | 438 | 582 | 2,023 |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | 317,912 | 57,271 | 205,642 | 658,593 | 706,349 | 445,709 | 2,391,476 |
| 31 மாரச் 2020 இல் உள்ளாவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 2,908,542 | 1,312 | 487,715 | 223,162 | 293,309 | 84,330 | 3,998,370 |

## 32.3 முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

அறிக்கையிடப்படும் திகதியில் இன்னமும் பயன்பாட்டிலுள்ள, முற்றாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஆரம்ப கிரயமானது பின்வருமாறு:

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 ரூ. '000 | 2020 ரூ. '000 | 2021 ரூ. '000 | 2020 ரூ. '000 |
| குத்தகை ஆதனங்களுக்கான மேம்படுத்தல்கள் | 53,282 | 53,282 | 53,282 | 53,282 |
| மோட்டார் வாகனங்கள் | 37,971 | 37,971 | 37,971 | 37,971 |
| கணினி வன்பொருள் | 440,942 | 440,942 | 490,175 | 482,058 |
| அலுவலக உபகரணம் | 397,383 | 397,383 | 431,160 | 428,485 |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | 327,178 | 327,178 | 338,727 | 338,371 |
| மொத்தம் | 1,256,756 | 1,256,756 | 1,351,315 | 1,340,167 |

## 32.4 குழுமத்தின் இறையிலி நிலங்கள் மற்றும் கட்டிடங்கள்

| அமைவிடம் | முகவரி | பெறுமதியிடல் திகதி | பெறுமதியிடல் முறை | காணி பரப்பளவு (பேர்ச்ஸ்) | கட்டிடங்களின் எண்ணிக்கை | கட்டிடப் பரப்பளவு (சது.அடி) | 2021 கிரயம் ரூ. '000 | 2021 மீள்மதிப்பீடு ரூ. '000 | 2020 மீள்மதிப்பீடு ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி | | | | | | | | | |
| வாகனத் தோட்டங்கள் | | | | | | | | | |
| மாகொல | இல.496, மாகொல வடக்கு, மாகொல | 31.12.2019 | MCM | 90 | 1 | 11,600 | 7,632 | 49,000 | 49,000 |
| மாபிம | இல. 225/D, நயாகல வீதி, ஹேயந்துடுவ, மாபிம | 31.12.2019 | MCM | 330.75 | 1 | 820 | 22,532 | 75,000 | 75,000 |
| மீகாமுல்ல | கந்தேபல்ல,பெலிகமுவ, கலேவல | 31.12.2019 | MCM | 260 | 1 | 1,836 | 27,558 | 24,000 | 24,000 |
| மொனராகல | இல. 10, பொத்துவில் வீதி,மொனராகல | 31.12.2019 | MCM | 125.9 | 1 | 1,376 | 46,905 | 50,000 | 50,000 |
| நிர்வாக நோக்கம் | | | | | | | | | |
| பண்டாரவளை | இல. 35/2D, வெலிமட வீதி, பண்டாரவளை | 31.12.2019 | MCM | 8.3 | 1 | 5,194 | 31,257 | 45,000 | 45,000 |
| யாழ்ப்பாணம் | இல. 10, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம் | 31.12.2019 | MCM | 44.72 | - | - | 45,764 | 155,063 | 155,063 |
| மாத்தறை | இல. 367, அநாகரிக்க தர்மபால மாவத்த, மாத்தறை | 31.12.2019 | MCM | 40 | - | - | 93,599 | 100,000 | 100,000 |
| கண்டி | இல. 296, சேனாநாயக்க வீதி, கண்டி | 31.12.2019 | MCM | 47.1 | - | - | 142,711 | 183,700 | 183,700 |
| அநுராதபுரம் | இல. 50, மைத்திரிபால சேனாநாயக்க வீதி, அநுராதபுரம் | 31.12.2019 | MCM | 40.51 | - | - | 155,882 | 182,295 | 182,295 |
| துணைமொத்தம் | | | | | 5 | | 573,840 | 864,058 | 864,058 |
| பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் | | | | | | | | | |
| கொழும்பு 08 | இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08. | 31.12.2020 | MCM | 104.9 | 2 | 127,621 | 1,532,414 | 2,500,000 | 2,450,000 |
| துணைமொத்தம் | | | | | 2 | | 1,532,414 | 2,500,000 | 2,450,000 |
| பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் பிரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் | | | | | | | | | |
| கொழும்பு 05* | இல. 07, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05 | 31.12.2020 | MCM | 111.45 | 1 | 84,024 | 2,059,690 | 2,600,000 | 2,600,000 |
| துணைமொத்தம் | | | | | 1 | | 2,059,690 | 2,600,000 | 2,600,000 |
| மொத்தம் | | | | | 8 | | 4,165,944 | 5,964,058 | 5,914,058 |

MCM : சந்தை ஒப்பீட்டு முறை

* ரூபா 628,556,600 கிரயத்தையுடய காணி மற்றும் கட்டிடமானது முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ரூபா 1,431,133,056 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமாக குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட காணி மற்றும் கட்டிடங்களது சந்தை பெறுமதியிடலானது கம்பனியுடன் தொடர்புபடாத சுயாதீன மதிப்பீட்டாளரான திரு.கே.டி.டி திசேரா, FRICS (Eng) அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. முதலீட்டு முறை, ஒப்பந்தக்காரரது சோதனை முறை மற்றும் ஒப்பீட்டளவு முறை என்பன பெறுமதியிடலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. கம்பனியின் இறையிலி காணி மற்றும் கட்டிடங்கள் நியாயப் பெறுமதி படிநிலையில் மட்டம் 3 இன் கீழானதாக கருதப்படுகின்றது.

தற்காலிகமாக பயனற்ற ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்
குழுமம் / கம்பனி ஆகியவற்றின் எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமும் 31 மார்ச் 2021 மற்றும் 31 மார்ச் 2020 இல் பயனற்றதாகக் காணப்படவில்லை.

உயிர்ப்புள்ள பயன்பாட்டிலிருந்து ஓய்வுபெற்ற ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்
31 மார்ச் 2021 மற்றும் 31 மார்ச் 2020 இல் குழுமம் / கம்பனியின் எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமும் உயிர்ப்புள்ள பயன்பாட்டிலிருந்து ஓய்வுபெறவில்லை.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களிலான உரித்துவ கட்டுப்பாடு
31 மார்ச் 2021 மற்றும் 31 மார்ச் 2020 இல் குழுமம் / கம்பனியின் எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திலும் உரித்துவ கட்டுப்பாடும் காணப்படவில்லை.

பொறுப்புகளுக்காக பிணையாக ஈடுவைக்கப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்
நிதிக் கூற்றுக்களில் பக்கம் 275 இல் குறிப்பு 57 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது தவிர குழுமத்தின் /கம்பனியின் எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமும் பொறுப்புக்களுக்கு பிணையாக ஈடுவைக்கப்படவில்லை.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் உருப்படிகளுக்கான மூன்றாம் தரப்பினரிடமிருந்தான இழப்பீடு
இவ்வருடத்தில் வலுக்குன்றலடைந்த, இழந்த அல்லது விட்டுவிட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படிகளுக்கு மூன்றாம் தரப்பினரிடமிருந்து எவ்விதமான இழப்பீடும் பெறப்படவில்லை. (2020: பூச்சியம்).

நியாயப் பெறுமதியினை அளவிடுவதில் பயன்படுத்தப்பட்ட அவதானிக்க இயலாத உள்ளீடுகள்
நியாயப் பெறுமதி படிநிலையில் மட்டம் 3 ஆக வகைப்படுத்தப்பட்ட நிதியியலல்லாத சொத்துக்களை அளவிடுவதில் பயன்படுத்தப்பட்ட கணிசமானளவு அவதானிக்க இயலாத உள்ளீடுகள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 206 இல் காணப்படும் குறிப்பு 21.6 இல் வழங்கப்பட்டுள்ளன.

## 33. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

### கணக்கீட்டுக்கொள்கை

### SLFRS 16 – குத்தகைகள்

**அளவீட்டின் அடிப்படை**

பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் குத்தகையின் ஆரம்பத்தில் குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியுடன் ஏதேனும் முன்செலுத்திய குத்தகை வாடகையினையும் சேர்த்து (பக்கம் 257 இலுள்ள குறிப்பு 40 இனை பார்க்கவும்) அங்கீகரிக்கப்படுகின்றன.

**பெறுமதிகுறைப்பு**

கம்பனி / குழுமமானது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பெறுமதிகுறைப்பு செய்கின்றது.

காணிப் பயன்பாட்டு உரிமைகளை கையகப்படுத்துவதற்காக செலுத்தப்பட்ட முன்செலுத்திய குத்தகை வாடகைகள் குத்தகைக் காலத்தில் வழங்கப்படும் நலன்களின் போக்கிற்கிணங்க பெறுமதிகுறைப்பு செய்யப்படுகின்றன. காணிப் பயன்பாட்டு உரிமைகளை உள்ளடக்கிய குத்தகை ஆதனமானது எஞ்சியுள்ள குத்தகை காலத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதிகுறைப்பு செய்யப்படுகின்றன.

புதுப்பித்தல் மற்றும் முடிவுறச்செய்தல் தெரிவுகளுடனான குத்தகை ஒப்பந்தங்களுக்கான குத்தகை காலத்தினை தீர்மானித்தல் (குழுமம் ஓர் குத்தகையாளராக) குழுமமானது பின்வருவனவற்றுடன் குத்தகைக் காலத்தினை குத்தகையின் ரத்துசெய்ய இயலாத காலமாக தீர்மானிக்கின்றது. குத்தகையினை நீட்டுவதற்கான தெரிவின் மூலம் உள்ளடக்கப்படும் ஏதேனும் காலங்கள், அவை உபயோகிக்கப்படும் என்ற நியாயமான நிச்சயம் காணப்படுமாயின் அல்லது குத்தகையினை முடிவுறச்செய்வதற்கான தெரிவின் மூலம் உள்ளடக்கப்படும் ஏனும் காலங்கள், அவை உபயோகிக்கப்படமாட்டாது என்ற நியாயமான நிச்சயம் காணப்படுமாயின் ஆகும். குழுமமானது நீட்டல் மற்றும் முடிவுறச்செய்தல் தெரிவுகளைக் கொண்ட பல குத்தகை ஒப்பந்தங்களை கிளைகளுக்கு / தலைமைக் காரியாலயத்திற்கு கொண்டுள்ளது. குழுமமானது குத்தகையினை புதுப்பிப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான தெரிவினை உபயோகப்படுத்துவதா அல்லது இல்லையா என்பதில் நியாயமான விதத்தில் நிச்சயமாயுள்ளதா என்று மதிப்பிடுவதில் தீர்மானத்தினை பிரயோகிக்கின்றது. அதாவது, புதுப்பித்தல் அல்லது முடிவுறுத்தல் தெரிவினை உபயோகிப்பதற்கான ஓர் பொருளாதார ஊக்குவிப்பினை உருவாக்கும் அனைத்து பொருத்தமான காரணிகளையும் அது கருத்திலெடுக்கின்றது. ஆரம்ப திகதியின் பின்னர், குழுமமானது பினவரும் சந்தர்ப்பத்தில் குத்தகைக் காலத்தினை மீள்மதிப்பீடு செய்கின்றது. சூழ்நிலைகளில் மாற்றம் அல்லது ஓர் குறிப்பிடத்தக்க நிகழ்வு அதன் கட்டுப்பாட்டினுள் காணப்படுவதுடன், புதுப்பிப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான தெரிவினை உபயோகப்படுத்துவதா அல்லது இல்லையா என்பதில் அதன் ஆற்றலினை பாதிப்பவை என்பனவாகும் (உதாரணமாக, கணிசமானளவு குத்தகை மேம்படுத்தல்களின் கட்டுமானம் அல்லது குத்தகை சொத்தின் கணிசமானளவு தனிப்பயனாக்கல் என்பனவாகும்).

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| கிரயம் | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 2,522,565 | 91,985 | 2,017,197 | 91,985 |
| SLFRS 16 இனை கடைப்பிடிப்பதன் விளைவு | - | 2,080,315 | - | 1,547,546 |
| ஏனைய சொத்திலிருந்தான மாற்றல் (முன்செலுத்தப்பட்ட வாடகைகள்) | 50,600 | 143,322 | 50,600 | 170,723 |
| | 2,573,165 | 2,315,622 | 2,067,797 | 1,810,254 |
| சேர்க்கைகள் | 858,510 | 206,943 | 292,305 | 206,943 |
| விற்பனைகள் | (69,214) | - | (69,214) | - |
| மாற்றல்கள் | (13,347) | - | - | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 3,349,114 | 2,522,565 | 2,290,888 | 2,017,197 |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 583,115 | 7,920 | 377,715 | 7,920 |
| பெறுமானத்தேய்வு | 543,769 | 538,230 | 340,349 | 332,830 |
| மாற்றல் | (1,741) | - | - | - |
| விற்பனை | (18,473) | - | (18,473) | - |
| வலுக்குன்றல் | - | 36,965 | - | 36,965 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 1,106,670 | 583,115 | 699,591 | 377,715 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 2,242,444 | 1,939,450 | 1,591,297 | 1,639,482 |

## 34. நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள்

### கணக்கீட்டுக்கொள்கை

குழுமத்தின் அருவச் சொத்துக்கள் நன்மதிப்பு மற்றும் வணிகப் பிணைப்பில் கையகப்படுத்திய வாடிக்கையாளர் பட்டியல் மற்றும் கணினி மென்பொருள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**அங்கீகாரத்தின் அடிப்படை**

ஓர் அருவச் சொத்தானது அதன் கிரயம் நம்பகமாக அளவிடக்கூடியதாக இருந்தால் மாத்திரம் மற்றும் அதன் உடைமையுள்ள எதிர்பார்க்கும் எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனி மற்றும் குழுமத்திற்கு பாய்ச்சப்படும் சாத்தியம் காணப்பட்டால் இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 38 – 'அருவச் சொத்துக்கள்' இன் பிரகாரம் அங்கீகரிக்கப்படுகின்றது.

தனியாக கையகப்படுத்தப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்தின்போது கிரயத்தில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், அருவச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்திலிருந்து ஏதேனும் திரண்ட பெறுமதி குறைப்புகள் மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் இருப்பின் அவை கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

**பிற்பட்ட செலவினம்**

அருவச் சொத்துக்களிலான பிற்பட்ட செலவினம், அது தொடர்புடைய குறித்த சொத்தில் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களை அதிகரித்தால் மாத்திரம் மூலதனமாக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவினங்களும் ஆட்பட்ட செலவினங்களாக கருதப்படுகின்றன.

**பயனுள்ள பொருளாதார ஆயுட்காலம், பெறுமதிகுறைப்பு மற்றும் வலுக்குன்றல்**

அருவச் சொத்துக்களது பயனுள்ள பொருளாதார ஆயுட்காலமானது ஒன்றில் வரையறையுடையதாக அல்லது வரையறையற்றதாக மதிப்பிடப்படுகின்றது.

வரையறையுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்கள் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தின் மீது பெறுமதிகுறைப்பு செய்யப்படுகின்றன. வரையறையுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட ஓர் அருவச் சொத்திற்கான பெறுமதி குறைப்புக் காலம் மற்றும் பெறுமதிகுறைப்பு முறையானது ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. சொத்தினுள் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களது எதிர்பார்க்கும் நுகர்வுப் போக்கு அல்லது எதிர்பார்க்கும் பயனுள்ள ஆயுட்காலத்திலான மாற்றங்கள், பொருத்தமானவாறு பெறுமதிகுறைப்புக் காலம் அல்லது முறையினை மாற்றுவதன் மூலம் கணக்கீடு செய்யப்படுகின்றது. மற்றும் அவை LKAS 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மாற்றங்களாக கருதப்படுகின்றது. வரையறையுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்களிலான பெறுமதிகுறைப்புச் செலவினமானது அருவச் சொத்தின் செயற்பாட்டுடன் நிலைப்பேருள்ள செலவின வகையினுள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

அருவச் சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தின் மீது அவற்றின் எச்சப் பெறுமதிகளுக்கு குறைத்தெழுதுவதற்காக கீழ் குறிப்பிட்ட வீதங்களில் பெறுமதிகுறைப்பு கணிப்பிடப்படுகின்றது ;

| சொத்தின் வகுப்பு | % வருடாந்தம் | காலம் |
|---|---|---|
| கணினி மென்பொருள் | 20 | 5 வருடங்கள் |

வரையறையுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்களின் பெறுமதி குறைப்பு செய்யப்படாத மீதிகள் வருடாந்தம் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுவதுடன் வலுக்குன்றலுக்கான ஓர் அறிகுறி தென்படும்போது எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நலன்களிலிருந்த மீட்பதற்கான சாத்தியம் காணப்படாத அளவிற்கு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

துணைக்கம்பனியினை கையகப்படுத்தும்போது எழுகின்ற நன்மதிப்பானது அருவச் சொத்துக்களினுள் உள்ளடக்கப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நன்மதிப்பானது கிரயத்திலிருந்து திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அளவீடு செய்யப்படுகின்றது. உரித்துவ கணக்கீடு செய்யப்பட்ட முதலீடுசெய்யப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக, நன்மதிப்பின் கொண்டுசெல்லல் தொகையானது முதலீட்டின் கொண்டு செல்லல் தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது. அத்துடன் அத்தகைய ஓர் முதலீட்டிலான ஓர் வலுக்குன்றல் நட்டமானது ஏதேனும் சொத்திற்கு ஒதுக்கப்படாததுடன், நன்மதிப்பு உள்ளடங்கலாக, அது உரித்துவ கணக்கீடு செய்யப்பட்ட முதலீட்டின் கொண்ட செல்லல் பெறுமதியின் பாகமாக அமைகின்றது.

வரையறையற்ற ஆயுட்காலத்தினைக் கொண்ட நன்மதிப்பானது வலுக்குன்றலுக்காக வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறையற்ற ஆயுட்காலத்தின் மதிப்பீடானது வரையற்ற ஆயுட்காலமானது தொடர்ந்தும் துணைபுரியக்கூடியதாயுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

**அங்கீகாரத்திலிருந்து அகற்றல்**

அருவச் சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நலன்கள் எதிர்பார்க்கப்படாவிட்டால் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றன. சொத்தின் அங்கீகார அகற்றலிலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனை வருவாய்க்கும் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமாக கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகார அகற்றல் செய்யப்பட்ட வருடத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

| | கம்பனி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | கணினி மென்பொருள் ரூ. '000 | நன்மதிப்பு ரூ. '000 | மொத்தம் ரூ. '000 | கணினி மென்பொருள் ரூ. '000 | நன்மதிப்பு ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
| கிரயம் | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 199,914 | 308,545 | 508,459 | 222,221 | 417,099 | 639,320 |
| சேர்க்கைகள் | 360 | - | 360 | 11,661 | - | 11,661 |
| விற்பனைகள் | 421 | - | 421 | 421 | - | 421 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 199,853 | 308,545 | 508,398 | 233,461 | 417,099 | 650,560 |
| (கழி):திரண்ட பெறுமதிக்குறைப்பு | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 163,153 | 87,725 | 250,878 | 183,021 | 87,725 | 270,746 |
| பெறுமதிக்குறைப்பு | 11,865 | - | 11,865 | 15,099 | - | 15,099 |
| வலுக்குன்றல் | - | 99,209 | 99,209 | - | 99,209 | 99,209 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 175,018 | 186,934 | 361,952 | 198,120 | 186,934 | 385,054 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 24,835 | 121,611 | 146,446 | 35,341 | 230,165 | 265,506 |
| கிரயம் | | | | | | |
| 1 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி | 184,794 | 308,545 | 493,339 | 206,765 | 417,099 | 623,864 |
| சேர்க்கைகள் | 15,120 | - | 15,120 | 15,120 | - | 15,120 |
| நாணயமாற்று வீத வேறுபாடு | - | - | - | 336 | - | 336 |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | 199,914 | 308,545 | 508,459 | 222,221 | 417,099 | 639,320 |
| (கழி):திரண்ட பெறுமதிக்குறைப்பு | | | | | | |
| 1 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி | 148,854 | 19,580 | 168,434 | 171,944 | 19,580 | 191,524 |
| பெறுமதிக்குறைப்பு | 14,299 | - | 14,299 | 10,764 | - | 10,764 |
| வலுக்குன்றல் | - | 68,145 | 68,145 | - | 68,145 | 68,145 |
| நாணயமாற்று வீத வேறுபாடு | - | - | - | 313 | - | 313 |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | 163,153 | 87,725 | 250,878 | 183,021 | 87,725 | 270,746 |
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 36,761 | 220,820 | 257,581 | 39,200 | 329,374 | 368,574 |

அறிக்கையிடப்படும் திகதியில் இன்னமும் பயன்பாட்டில் உள்ள முற்றாக பெறுமதிகுறைப்பு செய்யப்பட்ட கம்பனிக்கான மென்பொருள் ரூபா 139,001,271 மற்றும் குழுமத்திற்கான மென்பொருள் ரூபா 139,902,771 அருவச் சொத்துக்களாக 31 மார்ச் 2021 இல் காணப்படுகின்றன (31 மார்ச் 2020 இல் கம்பனிக்கு ரூபா 136,106,914 மற்றும் குழுமத்திற்கு ரூபா 136,401,914 ஆகும்).

**நன்மதிப்பிற்கான வலுக்குன்றல் சோதனை**

குழுமமானது பயன்பாட்டிலுள்ள பெறுமதி கணிப்பீட்டின் அடிப்படையில், வருடாந்தம் ஓர் வலுக்குன்றல் சோதனையினை பொறுப்பேற்கின்றது. இது சிரேஷ்ட முகாமைத்தவத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் பாதீடுகளின் அடிப்படையில் காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறுகளை பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. கழிவிறக்க வீதமான 15.98% (2020 - 17.86%) மற்றும் மொஉஉ அடிப்டையிலான எதிர்வுகூறப்பட்ட வளர்ச்சி வீதம் என்பன இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட முக்கிய அனுமானங்களாகும். கழிவிறக்க வீதமானது கம்பனியின் உரித்துவத்தின் ஓர் சராசரி சதவீத அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது. அலகுகளின் கொண்டுசெல்லல் பெறுமதியானது அவற்றின் மீட்கத்தக்க தொகையினை விஞ்சும் விதத்தில் முக்கிய அனுமானங்களிலான ஏதேனும் நியாயமான சாத்தியமான மாற்றங்கள் காணப்படவில்லை என முகாமைத்துவம் நம்புகின்றது.

அறிக்கையிடப்படும் திகதியில் குழுமம் / கம்பனியின் அருவச் சொத்துக்களின் உரித்துவத்தினில் எவ்விதமான கட்டுப்பாடுகளும் காணப்படவில்லை. மேலும், பொறுப்புக்களுக்காக எந்த உருப்படிகளும் பிணையங்களாக ஈடு வைக்கப்படவில்லை. 2021 ஆம் வருடத்தில் அருவச் சொத்துக்களின் கையகப்படுத்தல் தொடர்பான கடன்பெறல் கிரயங்கள் மூலதனமயமாக்கப்படவில்லை (2020 - பூச்சியம்).

## 35. வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை

### கணக்கீட்டுக்கொள்கை

வங்கிகளுக்குச் செலுத்தவேண்டியவை பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி மேலதிகப்பற்றுக்கள், நீண்டகால மற்றும் குறுங்கால கடன்களை உள்ளடக்கும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், இவை வி.வ.வீ. இனை பயன்படுத்தி பெறுமதிக் குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன. விவவீ ஆனது அதன் ஓர் உள்ளார்ந்த பாகமாயுள்ள வழங்கல் மற்றும் கிரயத்திலான ஏதேனும் கழிவு அல்லது வட்டமானது விவவீ இனை கணிப்பிடும்போது கணக்கிலெடுக்கப்படுகின்றன. விவவீ பெறுமதிகுறைப்பானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் "வட்டிச் செலவினத்தில்" உள்ளடக்கப்பட்டுள்ளது. இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பொறுப்புக்கள் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படும்போதும் விவவீ பெறுமதிகுறைப்பு செயல்முறையினூடாக அங்கீகரிக்கப்படுகின்றன.

2021 அல்லது 2020 இல் வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை தொடர்பாக முதல், வட்டியிலான ஏதேனும் தவறுதல்களோ அல்லது ஏனைய மீறல்களையோ கம்பனி கொண்டிருக்கவில்லை.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| மேலதிகப்பற்றுக்கள் | 716,374 | 24,683 | 891,879 | 694,954 |
| குறுங்காலக் கடன்கள் | - | 500,127 | 105,449 | 500,127 |
| நீண்டகாலக் கடன்கள் | - | 456,546 | 2,283,609 | 2,826,136 |
| சொத்தின் பின்னணியிலான பிணையங்கள் | 5,722,936 | 6,956,829 | 5,722,936 | 6,956,829 |
| மொத்தம் | 6,439,310 | 7,938,185 | 9,003,873 | 10,978,046 |
| நியாயப் பெறுமதி | 6,936,408 | 8,057,554 | 9,739,721 | 11,097,415 |

### 35.1 வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளிலான அசைவுகள்

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 7,938,185 | 27,273,933 | 10,978,046 | 30,475,326 |
| வருடத்தில் கடன் பெற்ற தொகை | 1,000,000 | 12,950,000 | 1,500,000 | 12,950,000 |
| வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள்கொடுப்பனவுகள் | (3,886,355) | (34,046,652) | (5,315,691) | (35,209,177) |
| வருடத்திலான வட்டிச் செலவினம் | 671,106 | 1,736,221 | 949,639 | 2,066,943 |
| துணைமொத்தம் | 5,722,936 | 7,913,502 | 8,111,994 | 10,283,092 |
| மேலதிகப்பற்றுக்கள் | 716,374 | 24,683 | 891,879 | 694,954 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 6,439,310 | 7,938,185 | 9,003,873 | 10,978,046 |

## 35.2 நீண்ட தகவல்கள்

நீண்டகால கடன்கள்

| கடன் பெற்றவரின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | கடன்வசதித் தொகை ரூ. '000 | காலம் | வட்டி வீதம் | பிணை நிலைமை |
|---|---|---|---|---|---|
| மொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 14.07.2015 | 2,000,000 | 04வருடங்கள் | 7.25% - 10.5% | பிணைசார்ந்தது |
| மொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 08.09.2016 | 1,000,000 | 04வருடங்கள் | 14.00% | பிணைசார்ந்தது |
| சம்பத் பேங்க் பிஎல்சி | 31.12.2014 | 2,000,000 | 05வருடங்கள் | 7.00% - 8.5% | பிணைசார்ந்தது |
| எக்சிஸ் பேங்க் | 27.03.2017 | 150,000 | 04வருடங்கள் | AWPLR+1.25% | பிணைசார்ந்தது |
| எக்சிஸ் பேங்க் | 27.03.2017 | 250,000 | 04வருடங்கள் | AWPLR+1.25% | பிணைசார்ந்தது |
| பீபள்ஸ் பேங்க் | 26.05.2015 | 4,250,000 | 04வருடங்கள் | 8.50% | பிணைசார்ந்தது |
| பீபள்ஸ் பேங்க் | 27.11.2015 | 2,000,000 | 04வருடங்கள் | 10.00% | பிணைசார்ந்தது |
| பீபள்ஸ் பேங்க் | 15.03.2016 | 2,000,000 | 04வருடங்கள் | AWPLR+1.75% | பிணைசார்ந்தது |
| பீபள்ஸ் பேங்க் | 02.06.2016 | 2,500,000 | 04வருடங்கள் | 06 month SLIBOR+1.75% | பிணைசார்ந்தது |
| பேங்க் ஒவ் சிலோன் | 07.07.2016 | 3,000,000 | 04வருடங்கள் | 11.50% | பிணைசார்ந்தது |
| ராக் பேங்க் | 27.04.2017 | 5,355,000 | 03வருடங்கள் | 13.50% | பிணைசார்ந்தது |
| எம்சிபி பேங்க் | 26.09.2017 | 500,000 | 04வருடங்கள் | AWPLR+1.5% | பிணைசார்ந்தது |

சொத்தின் பின்னணியிலான பிணையங்கள்

| கடன் பெற்றவரின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | கடன்வசதித் தொகை ரூ. '000 | காலம் | வட்டி வீதம்* | பிணை நிலைமை |
|---|---|---|---|---|---|
| பேங்க் ஒவ் சிலோன் | 30.09.2016 | 2,146,200 | 04வருடங்கள் | 13.81% | பிணைசார்ந்தது |
| டொயிஷ் பேங்க் பிஎல்சி | 03.07.2015 | 3,000,000 | 04வருடங்கள் | 8.82% | பிணைசார்ந்தது |
| டொயிஷ் பேங்க் பிஎல்சி | 28.10.2016 | 1,769,900 | 04வருடங்கள் | 14.47% | பிணைசார்ந்தது |
| டொயிஷ் பேங்க் பிஎல்சி | 25.02.2016 | 4,250,700 | 04வருடங்கள் | 11.75% | பிணைசார்ந்தது |
| ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி | 29.06.2018 | 2,000,000 | 05வருடங்கள் | 12.27% | பிணைசார்ந்தது |
| ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி | 13.03.2019 | 2,000,000 | 05வருடங்கள் | 13.08% | பிணைசார்ந்தது |
| பீபள்ஸ் பேங்க் | 18.08.2016 | 3,000,000 | 04வருடங்கள் | 13.32% | பிணைசார்ந்தது |
| பீபள்ஸ் பேங்க் | 09.02.2018 | 1,000,000 | 02வருடங்கள் | 11.71% | பிணைசார்ந்தது |
| பீபள்ஸ் பேங்க் | 10.09.2018 | 2,000,000 | 02வருடங்கள் | 13.15% | பிணைசார்ந்தது |
| பீபள்ஸ் பேங்க் | 23.05.2019 | 1,000,000 | 03வருடங்கள் | 11.16% | பிணைசார்ந்தது |

* ஒவ்வொரு பிணையங்களாக்குதலுக்குமான வட்டி வீதமானது நிறையிடப்பட்ட சராசரி வட்டி வீதமாக வழங்கப்பட்டுள்ளது.

பிணையங்களது விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 275 இல் குறிப்பு 57 - "பிணையீடுவைக்கப்பட்ட சொத்து" இல் வெளிப்படுத்துப்பட்டுள்ளன.

## 35.3 ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு

### 35.3.1 வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவையின் எஞ்சியுள்ள ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - கம்பனி

| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்றுக்கள் | 716,374 | - | - | 716,374 |
| சொத்துப் பின்னணியிலான பிணையங்கள் | 2,249,108 | 3,473,828 | - | 5,722,936 |
| மொத்தம் | 2,965,482 | 3,473,828 | - | 6,439,310 |

| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறானது | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்றுக்கள் | 24,683 | - | - | 24,683 |
| குறுங்காலக் கடன்கள் | 500,127 | - | - | 500,127 |
| நீண்டகாலக் கடன்கள் | 456,546 | - | - | 456,546 |
| சொத்தின் பின்னணியிலான பிணையங்கள் | 2,588,636 | 4,368,193 | - | 6,956,829 |
| மொத்தம் | 3,569,992 | 4,368,193 | - | 7,938,185 |

### 35.3.2 வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவையின் எஞ்சியுள்ள ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - குழுமம்

| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்றுக்கள் | 891,879 | - | - | 891,879 |
| குறுங்காலக் கடன்கள | 105,449 | - | - | 105,449 |
| நீண்டகாலக் கடன்கள் | 936,819 | 1,346,790 | - | 2,283,609 |
| சொத்தின் பின்னணியிலான பிணையங்கள் | 2,249,108 | 3,473,828 | - | 5,722,936 |
| மொத்தம் | 4,183,255 | 4,820,618 | - | 9,003,873 |

| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறானது | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்றுக்கள் | 694,954 | - | - | 694,954 |
| குறுங்காலக் கடன்கள் | 500,127 | - | - | 500,127 |
| நீண்டகாலக் கடன்கள் | 1,479,347 | 1,346,789 | - | 2,826,136 |
| சொத்தின் பின்னணியிலான பிணையங்கள் | 2,588,636 | 4,368,193 | - | 6,956,829 |
| மொத்தம் | 5,263,064 | 5,714,982 | - | 10,978,046 |

## 36. வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை

### கணக்கீட்டுக்கொள்கை

வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகள் நிலையான வைப்புகளையும் சேமிப்பு வைப்புகளையும் உள்ளடக்குகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், இவை விளைவுறு வட்டி வீத (விவவீ) முறையினைப் பயன்படுத்தி அவற்றின் பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன. விவவீ ஆனது கணிப்பிடப்படும்போது விவவீ இன் ஒருங்கிணைந்த பாகமாயுள்ள வழங்கல் மற்றும் கிரயத்திலான ஏதேனும் கழிவு மற்றும் வட்டம் கணக்கிலெடுக்கப்படுகின்றது. விவவீ பெறுமதிகுறைப்பானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் "வட்டிச் செலவினங்களில்" உள்ளடக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கள் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படும்போது இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

வைப்புக்களுக்கு எதிரான கடன்களுக்கான பிணைச்சொத்தாக வைத்திருக்கப்பட்ட வைப்புக்கள் தொகையான ரூபா 8.1 பில்லியன் (2020 ரூபா 8.2 பில்லியன்) வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவையினுள் உள்ளடக்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளுக்கான பணிப்புரைக்கு (வைப்பு பொறுப்புக்களுக்கான காப்புறுதி) இணங்க உரிமையுள்ள அனைத்து வைப்புப் பொறுப்புக்களும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உறுதுணைத் திட்டம் என்பவற்றுடன் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. இது வாடிக்கையாளர்களது உரிமைகள் மற்றும் நம்பகத்தன்மையினை பாதுகாக்கும் ஓர் பாதுகாப்பு வலை முறையாகும். கம்பனியானது மேற்குறிப்பிட்ட காப்புறுதி திட்டத்திற்கு காப்புறுதி தவணைக்கட்டணமாக ரூபா 151.87 மில்லியனை செலுத்தியுள்ளது (2020 - ரூபா 141.84 மில்லியன்).

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| நிலையான வைப்புகள் | 92,999,765 | 99,930,391 | 95,378,121 | 100,929,548 |
| சேமிப்பு வைப்புகள் | 8,503,166 | 6,770,636 | 8,365,595 | 6,756,044 |
| மொத்தம் | 101,502,931 | 106,701,027 | 103,743,716 | 107,685,592 |
| நியாயப் பெறுமதி | 102,019,672 | 106,798,094 | 104,256,546 | 106,796,726 |

## 36.1 வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவையின் எஞ்சியுள்ள ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - கம்பனி

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ'000 | ரூ. '000 | ரூ.'000 |
| நிலையான வைப்புகள் | 74,108,732 | 18,891,033 | - | 92,999,765 |
| சேமிப்பு வைப்புகள் | 8,288,671 | 50,466 | 164,029 | 8,503,166 |
| மொத்தம் | 82,397,403 | 18,941,499 | 164,029 | 101,502,931 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2020 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ.'000 | ரூ. '000 | ரூ. '000 |
| நிலையான வைப்புகள் | 74,874,182 | 25,056,209 | - | 99,930,391 |
| சேமிப்பு வைப்புகள் | 6,573,515 | 53,391 | 143,730 | 6,770,636 |
| மொத்தம் | 81,447,697 | 25,109,600 | 143,730 | 106,701,027 |

## 36.2 வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவையின் எஞ்சியுள்ள ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - குழுமம்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| நிலையான வைப்புகள் | 76,487,088 | 18,891,033 | - | 95,378,121 |
| சேமிப்பு வைப்புகள் | 8,151,100 | 50,466 | 164,029 | 8,365,595 |
| மொத்தம் | 84,638,188 | 18,941,499 | 164,029 | 103,743,716 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2020 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| நிலையான வைப்புகள் | 75,873,339 | 25,056,209 | - | 100,929,548 |
| சேமிப்பு வைப்புகள் | 6,558,923 | 53,391 | 143,730 | 6,756,044 |
| மொத்தம் | 82,432,262 | 25,109,600 | 143,730 | 107,685,592 |

## 37. வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்

### கணக்கீட்டுக்கொள்கை

வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் கம்பனி மற்றும் குழுமத்தினால் நீண்டகால மற்றும் குறுங்கால திரவத்தன்மை நிதி தேவைப்பாடுகளுக்காக கடனுக்கு பெற்ற நிதியங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், இவை விவஷீ முறையினை பயன்படுத்தி அவற்றின் பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன. விவஷீ ஆனது விவஷீ இன் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ள வழங்கல் மற்றும் செலவுகளிலான ஏதேனும் கழிவு அல்லது வட்டத்தினை கணக்கிலெடுத்து கணிக்கப்படுகின்றது. விவஷீ பெறுமதிக்குறைப்பானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் "வட்டிச் செலவினங்களில்" உள்ளடக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கள் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படும்போது இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| கடனுறுதிப் பத்திரம் | | | - | 17,087 | - | 17,087 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 37.2 | 253 | 13,825,553 | 18,462,173 | 13,684,516 | 18,320,952 |
| மொத்தம் | 37.1 | 252 | 13,825,553 | 18,479,260 | 13,684,516 | 18,338,039 |
| நியாயப் பெறுமதி | | | 14,675,439 | 18,759,201 | 14,522,493 | 18,616,227 |

## 37.1 வழங்கப்பட்ட கடன் பிணையங்களிலான அசைவுகள்

| | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 18,479,260 | 21,275,031 | 18,338,039 | 21,134,040 |
| இவ்வருடத்தில் கடனுக்கு பெற்ற தொகை | - | - | - | - |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் மீட்டெடுப்பு | (4,500,657) | (3,338,413) | (4,500,657) | (3,338,413) |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களிலான வட்டிச் செலவினங்கள் | 1,935,761 | 2,281,180 | 1,916,991 | 2,264,940 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களில் செலுத்தப்பட்ட வட்டி | (2,088,811) | (1,738,538) | (2,069,857) | (1,722,528) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 13,825,553 | 18,479,260 | 13,684,516 | 18,338,039 |

## 37.2 பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள்

| வழங்கிய திகதி | முதிர்வுத் திகதி | முகப் பெறுமதி ரூ. '000 | வட்டி வீதம் | மீள்கொடுப்பனவு காலம் | வகை | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க, 'AA(-) தரமுடையது | | | | | | | | | |
| 13-Nov-2015 | 12-Nov-2020 | 3,824,220 | 9.95% | வருடாந்தம் | வகை B | - | 3,961,709 | - | 3,961,709 |
| 16-Nov-2016 | 16-Nov-2020 | 659,350 | 12.25% | அரை வருடத்திற்கு | வகை B | - | 686,167 | - | 686,167 |
| 16-Nov-2016 | 16-Nov-2021 | 6,798,610 | 12.60% | அரை வருடத்திற்கு | வகை C | 7,108,347 | 7,104,422 | 7,108,347 | 7,104,422 |
| 18-Apr-2018 | 18-Apr-2022 | 704,600 | 12.40% | வருடாந்தம் | வகை A | 784,097 | 783,316 | 784,097 | 783,316 |
| 18-Apr-2018 | 18-Apr-2023 | 5,295,400 | 12.80% | வருடாந்தம் | வகை B | 5,933,109 | 5,926,559 | 5,792,072 | 5,785,338 |
| | | 17,282,180 | | | | 13,825,553 | 18,462,173 | 13,684,516 | 18,320,952 |

### 37.2.1 மூலதனச் சந்தையூடாக திரட்டப்பட்ட நிதிகளின் பயன்பாடு

| முன்விவரணத்தின் பிரகாரமான நோக்கம் | முன்விவரத்தின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.'000 | முன்விவரணத்தின் பிரகாரம் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட திகதி | வருவாயிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகை ரூ.'000 (A) | மொத்த வருவாயின் % | பயன்படுத்தப்பட்ட தொகைகள் ரூ. (B) | ஒதுக்கீட்டிற்கு எதிரான பயன்பாட்டு % (B/A) | முற்றாகப் பயன்படுத்தாவிட்டால் நிதிகள் எங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது உள்ளடங்கலான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 இல் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட, சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க, தரப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள் | | | | | | | |
| இந்த தொகுதிக்கடன் வழங்கலூடாக திரட்டப்பட்ட நிதிகள் பிஎல்சி இன் மத்திய நீண்டகால கடன்வழங்கலுடன் பொருந்தும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கும் வட்டி வீத இடர்நேர்கையினை குறைப்பதற்கும் பயன்படுத்தப்படும். | 6,000,000 | ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து அடுத்த 12 மாதங்களினுள் | 6,000,000 | 100 | 6,000,000 | 100 | பொருத்தமற்றது |
| 2017 இல் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட, சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க, தரப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள் | | | | | | | |
| இந்த தொகுதிக்கடன் வழங்கலூடாக திரட்டப்பட்ட நிதிகள் பாதீடு செய்யப்பட்ட கடன் வழங்கல் தேக்கம் மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கு பயன்படுத்தப்படும். | 8,000,000 | ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து அடுத்த 12 மாதங்களினுள் | 8,000,000 | 100 | 8,000,000 | 100 | பொருத்தமற்றது |
| 2019 இல் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட, சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க, தரப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள் | | | | | | | |
| இந்த தொகுதிக்கடன் வழங்கலூடாக திரட்டப்பட்ட நிதிகள் 26 மார்ச் 2018 இல் முதிர்வடைந்த தொகுதிக்கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கு பெறப்பட்ட குறுங்கால வசதிகளை மீள்செலுத்துவதற்கும் கம்பனியின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை சந்திப்பதற்கும் பயன்படுத்தப்படும். | 6,000,000 | ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து அடுத்த 12 மாதங்களினுள் | 6,000,000 | 100 | 6,000,000 | 100 | பொருத்தமற்றது |

### 37.2.2 வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் முதிர்வுப் பகுப்பாய்வு

வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - கம்பனி

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | **7,835,316** | **5,990,237** | **-** | **13,825,553** |
| மொத்தம் | **7,835,316** | **5,990,237** | **-** | **13,825,553** |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2020 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| கடனுறுதிப் பத்திரங்கள் | 17,087 | - | - | 17,087 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 5,696,827 | 12,765,346 | - | 18,462,173 |
| மொத்தம் | 5,713,914 | 12,765,346 | - | 18,479,260 |

வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - குழுமம்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | **7,820,059** | **5,864,457** | **-** | **13,684,516** |
| மொத்தம் | **7,820,059** | **5,864,457** | **-** | **13,684,516** |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2020 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| கடனுறுதிப் பத்திரங்கள் | 17,087 | - | - | 17,087 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 5,693,924 | 12,627,028 | - | 18,320,952 |
| மொத்தம் | 5,711,011 | 12,627,028 | - | 18,338,039 |

## 38. ஏனைய நிதிப் பொறுப்புக்கள்

### கணக்கீட்டுக்கொள்கை

ஏனைய நிதிப் பொறுப்புக்கள் வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டியவை, செலுத்தவேண்டிய காப்புறுதி, செலுத்தவேண்டிய பங்கிலாபம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளை உள்ளடக்குகின்றன. இந்தப் பொறுப்புக்கள் வட்டியற்றவை என்பதுடன் அறிக்கையிடப்படும் திகதியில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் தொகைகளில் பதிவு செய்யப்படுகின்றன.

ஏனைய அனைத்து நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன.

வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய தொகை
வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய தொகையானது வணிகத்தின் வழக்கமான நடவடிக்கையில் வாகனங்கள் வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய கடப்பாட்டினை உள்ளடக்குகின்றது.

செலுத்தவேண்டிய காப்புறுதி
செலுத்தவேண்டிய காப்புறுதியானது வாகனங்கள் தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளுக்கு செலுத்தவேண்டிய காப்புறுதி தவணைக்கட்டணத்தினை உள்ளடக்குகின்றது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய தொகை | 2,923,795 | 2,079,540 | 2,981,030 | 2,378,782 |
| செலுத்தவேண்டிய காப்புறுதி | 619,168 | 645,306 | - | - |
| ஏனைய செலுத்தவேண்டியவைகள் | 588,708 | 289,271 | 1,129,765 | 450,926 |
| மொத்தம் | 4,131,671 | 3,014,117 | 4,110,795 | 2,829,708 |

## 39. காப்புறுதி பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி

### கணக்கீட்டுக்கொள்கை

காப்புறுதி பொறுப்புக்கள

**தேறிய உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணத்திற்கான ஏற்பாடு**
உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணங்களுக்கான ஏற்பாடானது இன்னமும் முதிர்வடையாத இடர்நேர்கைகளுக்காக பெறப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. பொதுவாக, ஒதுக்கமானது ஒப்பந்தக் காலத்தில் விடுவிக்கப்படுவதுடன் காப்புறுதி தவணைக்கட்டண வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், குழுமமானது முதிர்வடையாத இடர்நேர்கையினை மீளாய்வு செய்து ஒரு பொறுப்பு போதுமை சோதனையினை செயற்படுத்துகின்றது. இது உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணங்கள் மீதான எதிர்பார்க்கும் கோரல்களின் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்களில் ஏதேனும் ஒட்டுமொத்த மிகைகள் காணப்படுகின்றதா என்பதனை தீர்மானிப்பதற்காகும். இந்த கணிப்பீடானது எதிர்கால ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் நடைமுறை மதிப்பீடுகளை பயன்படுத்துகின்றது. இது உரிய ஆயுளல்லாத காப்புறுதி நுட்ப ஏற்பாடுகளுடன் தொடர்புடைய சொத்துக்களில் எழுவதற்கு எதிர்பார்க்கப்படும் முதலீட்டு விளைவினை கணக்கிலெடுத்ததன் பின்னராகும். இந்த மதிப்பீடுகள் உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணத்தின் கொண்டு செல்லல் தொகையானது தேவைக்குக் குறைவாக காணப்பட்டால் பொறுப்பு போதுமைக்கான ஓர் ஏற்பாட்டினை உருவாக்குவதன் மூலம் இந்த பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்களின் தேவைப்பாட்டின் பிரகாரம், குழுமமானது ஓர் காப்புறுதி கணிப்பீட்டாளரின் துணையுடன் ஆயுளல்லாத ஒப்பந்தப் பொறுப்புக்கள் தொடர்பாக ஓர் பொறுப்பு போதுமை சோதனையினை (பொபோசோ) நடாத்துகின்றது.

**மொத்த நிலுவையிலுள்ள கோரல்களுக்கான ஏற்பாடு**
ஆயுளல்லாத காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள் ஒப்பந்தங்களில் ஈடுபட்டு காப்குறுதி தவணைக்கட்டணங்கள் அறவிடப்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றன. இந்த பொறுப்புக்கள் நிலுவையிலுள்ள கோரல் ஏற்பாடு என தெரிந்துகொள்ளப்படுவதுடன், அறிக்கையிடப்படும் திகதியில் ஆட்பட்ட ஆனால் தீர்ப்பனவு செய்யப்படாத அனைத்து கோரல்களின் மதிப்பிடப்பட்ட இறுதியான கிரயத்தின் அடிப்படையிலாகும். இவற்றுடன் தொடர்புடைய கோரல் கையாளுதல் கிரயங்கள் மற்றும் அழிவுமீட்பு மற்றும் ஏனைய மீட்புகளின் எதிர்பார்க்கப்படும் பெறுமதியிலான குறைப்பினையும் கவனத்திலெடுக்கின்றது.

பொறுப்பானது பணத்தின் நேரப் பெறுமதிக்கு கழிவிறக்கம் செய்யப்படுவதில்லை. சமனாக்குதல் அல்லது பேரழிவு ஒதுக்கங்களுக்கு எவ்விதமான ஏற்பாடும் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஒப்பந்தம் முதிர்வடையும்போது, வெளியேற்றப்படும்போது அல்லது ரத்துசெய்யப்பட்டால் பொறுப்புக்கள் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றது.

**மொத்த ஆட்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத (ஆஆஅ) கோரல்களுக்கான ஏற்பாடு**
சில வகையான கோரல்களின் அறிவித்தல் மற்றும் தீர்ப்பனவில் தாமதங்கள் ஏற்படலாம், எனவே அறிக்கையிடப்படும் திகதியில் இவற்றின் இறுதி கிரயத்தினை நிச்சயமாக தெரிந்துகொள்ள இயலாது. அறிக்கையிடப்படும் திகதியில் பொறுப்பானது வழக்கமான காப்பீட்டுக் கணிப்பு கோரல் எதிர்வுகூறல் நுட்பங்களின் ஓர் வரம்பினை பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. இது அனுபவ தரவுகள் மற்றும் பாதகமான விலகல்களுக்கான ஓர் ஓரவரம்பினை உள்ளடக்கக்கூடிய நடைமுறை அனுமானங்கள் என்பவற்றின் அடிப்படையிலானதாகும்.

ஆயுளல்லாத காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு பின்வருவனவற்றிற்கு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அறிக்கையிடப்படும் திகதியில் அறிக்கையிடப்பட்ட கோரல்களின் எதிர்பார்த்த இறுதியான கிரயம் மற்றும் அறிக்கையிடப்படும் திகதியில் ஆட்பட்ட ஆனால் இன்னமும் அறிக்கையிடப்படாத (ஆஆஅ) கோரல்களின் எதிர்பார்த்த இறுதியான கிரயம் என்பவற்றில் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் வேண்டும். இறுதியான கோரல்கள் கிரயத்தினை உறுதிப்பாட்டுடன் நிலைநாட்டுவதற்கு கணிசமானளவு காலம் செல்லலாம் மற்றும்

சில வகையான காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் அதிகளவு பொறுப்பானது ஆஆஅ கோரல்களினாலாகும்.

நிலுவையிலுள்ள கோரல்களின் இறுதியான கிரயமானது வழக்கமான காப்பீட்டுக் கணிப்பு கோரல்கள் எதிர்வுகூறல் நுட்பங்களை பயன்படுத்தி மதிப்பிடு செய்யப்படுகின்றது. இவை சங்கிலி ஏணி முறை, போர்ன்ஈயுட்டர்-வேர்கஸன் முறை மற்றும் நிகழ்வெண் /தீவர முறை என்பனவாகும்.

இந்த நுட்பங்களின் உள்ளாந்த பிரதான அனுமானம் என்னவெனில் கம்பனியின் கடந்தகால கோரல்கள் அபிவிருததி அனுபவமானது எதிர்கால கோரல் அபிவிருத்தியினை எதிர்வுகூறுவதற்கு பயன்படுத்தப்படலாம் என்பதுடன் அதன்மூலம் இறுதி கோரல் கிரயங்கள். இதன் காரணமாக, இந்த முறைகள் செலுத்திய மற்றும் ஆட்பட்ட நட்டங்களின் அபிவிருத்தியினை ஊகித்துணர்வதுடன், கோரல் ஒன்றுக்கான சராசரி கிரயம் முன்னைய வருடங்களின் அவதானிக்கப்பட்ட அபிவிருத்தியின் அடிப்படையில் கோரல் எண்ணிக்கைகள் மற்றம் எதிர்பார்க்கப்படும் நட்ட விகிதாசாரங்கள். வரலாற்று கிரயங்கள் அபிவிருத்தியானது பிரதானமாக விபத்து வருடங்களின் மூலம் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஆனால் பூகோள பிரதேசங்கள், கணிசமான வணிக வகை மற்றும் கோரல் வகைகள் ரீதியாகவும் மேலும் பகுப்பாய்வு செய்யலாம். பாரிய கோரல்கள் தனியாக விளித்துரைக்கப்படுவதுடன், அவை ஒன்றில் நட்டம் செம்மையாக்கப்பட்ட மதிப்பீடுகளின் முகப் பெறுமதியில் ஒதுக்கப்பட்டு அல்லது அவற்றின் எதிர்கால அபிவிருத்தியினை பிரதிபலிப்பதற்காக தனியாக எதிர்வுகூறல் மேற்கொள்வதாகும். அனேகமான விடயங்களில், எதிர்கால கோரல்களின் சதவீதம், பணவீக்கம் அல்லது நட்ட வீதங்கள் தொடர்பாக வெளிப்படையான அனுமானங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை. பதிலாக, பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் வரலாற்று கோரல்கள் அபிவிருத்தி தரவுகளில் உள்ளடக்கமானதுடன் இவற்றின் அடிப்படையில் எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த போக்குகள் எந்தளவுக்கு எதிர்காலத்திற்கு செல்லுபடியாகாது என்பதை மதிப்பிடுவதற்கு மேலதிக பண்புசார் தீர்மானம் பயன்படுத்தப்பட்டது.(உதாரணமாக, ஒரு தடவை நிகழ்வுகளை பிரதிபலிப்பதற்கு, வெளிவாரி அல்லது சந்தை காரணிகளிலான மாற்றங்கள், கோரல்களுக்கான பொதுமக்களது மனோபாவங்கள், பொருளாதார நிலைமைகள், கோரல் பணவீக்கத்தின் மட்டங்கள், நீதிமுறை தீர்மானங்கள் மற்றும் சட்டவாக்கம், தேக்க கலவை, காப்புறுதி ஒப்பந்த சிறப்புக்கூறுகள் மற்றும் கோரல் கையாளுதல் செயல்முறைகள் போன்ற உள்வாரி காரணிகள் என்பனவாகும்) இது சம்பந்தப்பட்டுள்ள அனைத்து உறுதியின்மைகளை கணக்கிலெடுத்து வீச்சான சாத்தியமான விளைவுகளிலிருந்தான நிகழத்தக்க விளைவினை சமர்ப்பிக்கும் கிரயங்களின் மதிப்பிடப்பட்ட இறுதியான கிரயத்திற்கு வருவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

ஒத்த தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டனத்திற்கான ஏற்பாடுகளின் போதுமையினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

**மீள்காப்புறுதி பொறுப்புக்கள்**

மீள்காப்புறுதி பொறுப்புக்கள் காப்புறுதிக் கம்பனிகளுக்கு செலுத்தவேண்டிய மீதிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது. மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் ஒப்பந்த உரிமைகள் அழித்துவிடப்படும்போது அல்லது முதிர்வடையும்போது அல்லது ஒப்பந்தம் மற்றுமோர் தரப்பினருக்கு மாற்றல் செய்யப்படும்போது அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| காப்புறுதிப் பொறுப்புக்கள் | 39.1 | 256 | - | - | 4,717,294 | 5,026,503 |
| செலுத்தவெண்டிய மீள்காப்புறுதி | | | - | - | 298,591 | 38,717 |
| மொத்தம் | | | - | - | 5,015,885 | 5,065,220 |

## 39.1 காப்புறுதி பொறுப்புக்கள்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி 2020 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|
| தேறிய உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணங்களுக்கான ஏற்பாடு | - | - | 3,509,920 | 1,462,009 |
| மொத்த நிலுவையிலுள்ள கோரல்களுக்கான ஏற்பாடு | | | 587,614 | 773,189 |
| மொத்த ஆட்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத கோரல்களுக்கான ஏற்பாடு | - | - | 619,760 | 688,820 |
| மொத்தம்l | - | - | 4,717,294 | 5,026,503 |

பொபோசோ ஆனது என்.எம்.ஜி.வைனான்சியல் சேர்விசஸ் பிரைவேட் லிமிட்டட், சிங்கப்பூரினால் மேற்கொள்ளப்பட்டது.

## 40. குத்தகை பொறுப்புக்கள்

### கணக்கீட்டுக்கொள்கை

கம்பனியானது குத்தகை ஆரம்பிக்கப்படும் திகதியில் குத்தகைக் காலப்பகுதி மீது செலுத்தவேண்டிய குத்தகைக் கொடுப்பனவுகளை நிகழ்காலப் பெறுமதியில் அளவிட்டு குத்தகைப் பொறுப்புக்களாக அங்கீகரிக்கின்றது. குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியினை கணிப்பதில் குழுமமானது குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலுள்ள அதன் நுண்மாற்றல் கடன்பெறுதல் வட்டிவீதத்தினைப் பயன்படுத்துகின்றது ஏனெனில் குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தினை உடனடியாக தீர்மானிக்கப்பட இயலாததினாலாகும். ஆரம்பிக்கப்பட்ட திகதியின் பின்னர், குத்தகை பொறுப்புக்களின் தொகையானது வட்டியின் திரள்வினை பிரதிபலிப்பதற்காக அதிகரிக்கப்படுவதுடன் மேற்கொள்ளப்பட்ட குத்தகை கொடுப்பனவுகளுக்காக குறைக்கப்படுகின்றது. இதற்கும் மேலாக, குத்தகை பொறுப்புக்களின் கொண்டுசெல்லல் தொகையானது ஓர் திருத்தம், குத்தகை காலத்திலான மாற்றம், குத்தகைக் கொடுப்பனவுகளிலான மாற்றம் காணப்பட்டால் மீள்அளவீடு செய்யப்படுகின்றது.

SLFRS 16 இன் பிரகாரம் 1 ஏப்ரல் 2019 இல் மாற்றியமைக்கப்பட்ட பின்னோக்கிய அணுகுமுறையினை பிரயோகித்ததுடன், இந்த நியமத்தை கடைப்பிடிக்கும்போது 12.45% இனை ஓர் நிறையிடப்பட்ட சராசரி நுண்மாற்றல் கடன்பெறுதல் வட்டிவீதமாக பயன்படுத்தியது. இது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை பதிவுசெய்வதற்காகும்.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஏப்ரல் 1 இல் உள்ளவாறான மீதி | 1,909,098 | - | 1,594,245 | - |
| SLFRS 16 இன் கடைப்பிடிப்பிலான விளைவு | - | 2,080,315 | - | 1,547,546 |
| | 1,909,098 | 2,080,315 | 1,594,245 | 1,547,546 |
| வருடத்திலான குத்தகை ஒப்பந்தங்களின் சேர்க்கைகள்/புதுப்பித்தல்கள் | 858,510 | 206,943 | 292,305 | 206,943 |
| வட்டியின் அடர் வளர்ச்சி | 228,985 | 238,581 | 191,935 | 183,724 |
| குத்தகை கடன்வழங்கியோருக்கான கொடுப்பனவுகள் | (655,969) | (616,741) | (409,587) | (343,968) |
| வருடத்திலான குத்தகை ஒப்பந்தங்களின் முந்திய முடிவுறுத்தல் | (54,238) | - | (54,238) | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 2,286,386 | 1,909,098 | 1,614,660 | 1,594,245 |

**குத்தகை பொறுப்புக்களின் உணர்திறன் பகுப்பாய்வு**

பக்கம் 298 இல் குறிப்பு 59.4.1 இல் இடர்நேர்கை முகாமைத்துவ வெளிப்படுத்தலில் வெளிப்படுத்தப்பட்ட குத்தகை பொறுப்பிலான நுண்மாற்றல் கடன்பெறுகை வட்டி வீதங்களிலான சாத்தியப்பாடான மாற்றங்களிலிருந்து எழக்கூடிய தாக்கம்.

குத்தகை பொறுப்புக்களுக்கான எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - கம்பனி

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| குத்தகைப் பொறுப்பு | 404,863 | 1,509,462 | 372,061 | 2,286,386 |
| மொத்தம் | 404,863 | 1,509,462 | 372,061 | 2,286,386 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2020 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| குத்தகைப் பொறப்பு | 415,531 | 1,157,562 | 336,005 | 1,909,098 |
| மொத்தம் | 415,531 | 1,157,562 | 336,005 | 1,909,098 |

குத்தகை பொறுப்புக்களுக்கான எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - குழுமம்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| குத்தகைப் பொறுப்பு | **236,269** | **1,038,946** | **339,446** | **1,614,661** |
| மொத்தம் | **236,269** | **1,038,946** | **339,446** | **1,614,661** |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2020 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் | 1-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| குத்தகைப் பொறுப்பு | 239,223 | 975,782 | 379,240 | 1,594,245 |
| மொத்தம் | 239,223 | 975,782 | 379,240 | 1,594,245 |

GRI 207-1, 207-4

## 41. நடைமுறை வரிப் பொறுப்புக்கள்

### கணக்கீட்டுக்கொள்கை

கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகள் வருமான வரிகள் மற்றும் நிதிச் சேவைகளிலான பெறுமதி சேர்த்தல் வரி, தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி உள்ளடங்கலான ஏனைய வரிகளுக்கு உட்பட்டதாகும். நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டினை தீர்மானிப்பதற்கு கணிசமானளவு தீர்மானம் தேவைப்படுகின்றது. இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வரிச் சட்டங்களின் பொருந்துதன்மையிலான பொருள் விளக்கம் தொடர்பாக உறுதியற்ற நிலைமைகள் காணப்படுகின்றன.

மேலதிக வரிகள் செலுத்தவேண்டி வருமா என்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கு குழுமம் மற்றும் கம்பனியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அங்கீகரிக்கின்றன. இந்த விடயங்களில் இறுதி வரி விளைவுகள் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்ட தொகைகளிலிருந்து வித்தியாசமாகக் காணப்பட்டால், அத்தகைய வித்தியாசங்கள் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் வருமானம், ஒத்திவைக்கப்பட்ட வரித் தொகைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்கம் இல. | கம்பனி 2021 | கம்பனி 2020 | குழுமம் 2021 | குழுமம் 2020 |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| நடைமுறை வரிப் பொறுப்பு | 41.1 | 258 | **362,450** | 1,803,309 | **883,900** | 2,077,418 |
| மொத்தம் | | | **362,450** | 1,803,309 | **883,900** | 2,077,418 |

### 41.1 நடைமுறை வரிப் பொறுப்பு

| | கம்பனி 2021 | கம்பனி 2020 | குழுமம் 2021 | குழுமம் 2020 |
|---|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | **1,803,309** | 2,238,257 | **2,077,418** | 2,323,647 |
| வருடத்திற்கான ஏற்பாடு | **1,999,971** | 2,822,836 | **2,601,127** | 3,259,538 |
| முன்னைய வருடம் தொடர்பான குறை/(மிகை) ஏற்பாடு | **(90,892)** | - | **(95,886)** | (781) |
| வருமான வரிக் கொடுப்பனவு | **(3,349,938)** | (3,071,709) | **(3,534,648)** | (3,339,472) |
| வரி வரவுகள் | | | | |
| பிவைவ/ஏனைய வரவு | **-** | (44,991) | **13** | (18,416) |
| பொருளாதார சேவைக் கட்டணம் | **-** | (141,084) | **(164,124)** | (147,098) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | **362,450** | 1,803,309 | **883,900** | 2,077,418 |

### 41.2 பொருளாதார சேவைக் கட்டணம் (பொசேக)

2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம் மற்றும் அதற்கான அடுத்துவந்த திருத்தங்கள் என்பவற்றின் பிரகாரம் பொசேக ஆனது "விலக்களிப்பட்ட புரள்வில்" 0.5% செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், இது வருமான வரிக் கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்படக்கூடியதாகும். கோரப்படாத பொசேக ஆனது, ஏதேனும் இருப்பின், அடுத்துவரும் மூன்று வருடங்களில் கொண்டு செல்லப்பட்டு செலுத்தவேண்டிய வருமான வரிக்கெதிராக ஈடுசெய்யப்படலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்ட 1 ஜனவரி 2020 திகதியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் 1 ஜனவரி 2020 முதல் பொசேக நீக்கப்பட்டுள்ளது.

### 41.3 நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளிலான பிடித்து வைத்தல் வரி (பிவைவ)

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 137 மற்றும் அதனிலான திருத்தங்களின் பிரகாரம், கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட நிலையான வைப்புகள் மற்றும் சேமிப்பு கணக்குகளிலான வட்டி வருமானம் செலுத்தப்படும்போது அல்லது கணக்கில் வரவு வைக்கும்போது 10% பிடித்து வைத்தல் வரி கழிக்கப்படுகின்றது. இந்த வரி கழித்தலானது வருமான வரிக் கொடுப்பனவுகளுக்கு வரி வரவாகக் கோரப்படலாம். 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் பிரிவு 84 இன் பிரகாரம், 1 ஏப்ரல் 2018 முதல் ஒரு நபருக்கு செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிவில் பிவைவ 5% ஆக குறைக்கப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 18 பெப்ரவரி 2020 திகதியிடப்பட்டு பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பிவைவ இனை கழிப்பதற்கான தேவைப்பாடு 1 ஜனவரி 2020 முதல் நீக்கப்பட்டுள்ளது.

## 42. ஏனைய பொறுப்புக்கள்

கணக்கீட்டுக்கொள்கை

ஏனைய பொறுப்புக்கள் நிதிச் சேவைகளில் செலுத்தவேண்டிய பெசேவ, செலுத்தவேண்டிய பெறுமதி சேர்த்தல் வரி (பெசேவ), செலுத்தவேண்டிய ஏனைய வரி மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளை உள்ளடக்குகின்றது. இந்த நிதியியலல்லாத பொறுப்புக்கள் நடைமுறை கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பகுத்தறிவுடன் செலுத்துவதற்கான தொகைகளில் அளவீடு செய்யப்படும் அல்லது ஐந்தொகைத் திகதியில் ஓர் மூன்றாம் தரப்பினருக்கு மாற்றல் செய்வதற்கான தொகையில் அளவீடு செய்யப்படும்.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| செலுத்தவேண்டிய நிதியியல் சேவைகளிலான பெசேவ | 351,885 | - | 367,928 | - |
| செலுத்தவேண்டிய பெறுமதி சேர்த்தல் வரி (பெசேவ) | 19,590 | 10,502 | 61,394 | 62,173 |
| செலுத்தவேண்டிய பி வை வ | 7,192 | 123,135 | 7,370 | 123,355 |
| செலுத்தவேண்டிய பயிர் காப்புறுதிக் கட்டணம் | 18,372 | - | 16,132 | - |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டிய தொகை | 320,699 | 401,960 | 321,655 | 409,602 |
| செலுத்தவேண்டிய முத்திரை தீர்வை | 61,790 | 53,008 | 64,295 | 55,087 |
| ஏனைய செலுத்தவேண்டியவை | 289,592 | 387,089 | 318,048 | 402,539 |
| மொத்தம் | 1,069,120 | 975,694 | 1,156,822 | 1,052,756 |

## 43. ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

கணக்கீட்டுக்கொள்கை

**ஊழியர் நலன்கள்**

**ஓய்வுபெறல் நலன் கடப்பாடு - பணிக்கொடை**

குழுமம்/கம்பனியானது பணிக்கொடைக்கான உறுதியளிக்கப்பட்ட ஓய்வுபெறல் நலன்களின் நிகழ்காலப் பெறுமதியினை அளவிடுகின்றது, இது இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 19 - "ஊழியர் நலன்களின்" மூலம் தேவைப்படுமாறு "எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறை" (எஅவமு) இனை பயன்படுத்தி ஓர் சுயாதீன தொழில்சார் காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடனான ஓய்வுபெறல் நலன் திட்டமாகும்.

காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது கழிவிறக்க வீதங்கள், சொத்துக்களிலான எதிர்பார்க்கப்படும் விளைவு வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால பணிக்கொடை அதிகரிப்புகள் பற்றிய அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றது. அத்தகைய கடப்பாட்டின் நீண்டகால தன்மையின் காரணமாக, இந்த மதிப்பீடுகள் கணிசமானளவு உறுதியின்மைக்கு உட்படுகின்றது. அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

**காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்களின் அங்கீகரிப்பு**

குழுமம்/ கம்பனியானது திட்டம் தொடர்பாக கம்பனியின் கடப்பாட்டினை கணிப்பிடுவதிலிருந்து எழுகின்ற மொத்த காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்கள் விரிவான வருமானக் கூற்றில் அது இடம்பெற்ற காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**நிதியளித்தல் ஏற்பாடுகள்**

பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை.

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்
ஓர் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமானது தொழில் நிறைவடைந்ததன் பின்னரான ஓர் நலன் திட்டமாகும். இதன் கீழ் ஒரு நிறுவனம் நிலையான பங்களிப்புகளை ஓர் தனியான நிறுவனத்திற்கு (ஓர் நிதியம்) செலுத்துகின்றது மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 (ஊழியர் நலன்கள்) இல் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு, நடைமுறை மற்றும் முன்னைய காலங்களுக்கான ஊழியர்களது சேவைகள் தொடர்பாக நிதியமானது அனைத்து ஊழியர் நலன்களையும் செலுத்துவதற்கு போதுமான சொத்துக்களை வைத்திருக்காவிட்டால் மேலதிக பங்களிப்புகளைச் செலுத்துவதற்கான எவ்விதமான சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு காணப்படமாட்டாது.

ஓர் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கு செலுத்தப்படவேண்டிய பங்களிப்பானது ஊழியர்களினால் கம்பனிக்கு ஆற்றப்பட்ட சேவைகளின் விகிதாசாரத்தில் காணப்படுவதுடன் அவை செலுத்தவேண்டியேற்படும்போது ஓர் செலவினமாக பதிவுசெய்யப்படுகின்றது. செலுத்தப்படாத பங்களிப்புகள் ஓர் பொறுப்பாக பதிவு செய்யப்படுகின்றது.

குழுமம் / கம்பனி மற்றும் ஊழியர்கள் இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முறையே 12% மற்றும் 8% ஒவ்வொரு ஊழியரினதும் மொத்த சம்பளத்தில் பங்களிப்பு செய்யப்படுகின்றது.

ஒவ்வொரு ஊழியரினதும் மொத்த சம்பளத்தில் 3% இனை குழுமம்/கம்பனி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு செய்கின்றது.

| | | | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|---|
| | குறிப்பு | பக்கம் இல. | 2021<br>ரூ. '000 | 2020<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2020<br>ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | | | **592,871** | 492,444 | **647,929** | 536,753 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 43.1 | 260 | **111,742** | 111,325 | **129,888** | 124,504 |
| விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 43.2 | 260 | **(107,003)** | (172) | **(106,891)** | (1,225) |
| வருடத்தில் செலுத்தப்பட்ட நலன்கள் | | | **(10,353)** | (10,726) | **(13,148)** | (12,103) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | | | **587,257** | 592,871 | **657,778** | 647,929 |

## 43.1 இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொகை

| மார்ச் 31 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021<br>ரூ. '000 | 2020<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2020<br>ரூ. '000 |
| நடைமுறை சேவைக் கிரயம் | **52,455** | 57,157 | **69,823** | 70,335 |
| தேறிய நிர்ணயிக்கப்பட்ட நலன் பொறுப்பிலான தேறிய வட்டி | **59,287** | 54,168 | **60,065** | 54,169 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த தொகை | **111,742** | 111,325 | **129,888** | 124,504 |

## 43.2 விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொகை

| மார்ச் 31 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021<br>ரூ. '000 | 2020<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2020<br>ரூ. '000 |
| அனுமானங்களின் மாற்றங்களின் நிமித்தமான நட்டங்கள்/(இலாபங்கள்) | **(38,363)** | (2,410) | **(42,779)** | (1,716) |
| வருடத்தில் எழுந்த அனுபவ நட்டங்கள்/(இலாபங்கள்) | **(68,640)** | 2,238 | **(64,111)** | 491 |
| விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த காப்பீட்டுக் கணிப்பு (நட்டங்கள்)/இலாபம் | **(107,003)** | (172) | **(106,890)** | (1,225) |

31 மார்ச் 2021 இல் ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிலான ஓர் காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது எக்சுயேரியல் அன்ட் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், ஓர் தொழில்சார் காப்பீட்டுக் கணிப்பாளர் நிறுவனம், இனால் மேற்கொள்ளப்பட்டது (31 மார்ச் 2020 இல் ஸ்மைல்ஸ் க்ளோபல் (பிரைவேட்) லிமிட்டட்). பொறுப்பினை மதிப்பிடுவதற்காக காப்பீட்டுக் கணிப்பாளரினால் பயன்படுத்தப்பட்ட பெறுதியிடல் முறையானது "எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு (எஅவ) ஆகும் என்பதுடன், இம்முறையானது இலங்கை கணக்கீட்டு நியமம், LKAS 19 - "ஊழியர் நலன்கள்" இனால் பரிந்துரை செய்யப்படுகின்றது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | 2020 |
|---|---|---|
| கம்பனி ஃ குழுமம் | | |
| காப்பீட்டுக் கணிப்பு அனுமானங்கள் | | |
| கழிவிறக்க வீதம் | 7.87% | 10.00% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 6.00% | 9.00% |
| இறப்பு வீதம் | A1967/70 இறுதியான இறப்புவீதம் | A1967/70 இறுதியான இறப்புவீதம் |
| இயலாமை | வழக்கமான இ.கா. வீதங்கள் | வழக்கமான இ.கா. வீதங்கள் |
| ஓய்வுபெறல் வயது | 55 வருடங்கள் | 55 வருடங்கள் |

31 மார்ச் 2021 இல் நிறைவவடைந்த வருடத்திற்கான துடிப்பான பங்குபற்றுநர்களின் எதிர்பார்க்கப்பட்ட சராசரி தொழில் வாழ்நாள் 10.68 வருடங்களாகும் (8.87 - 2020).

## 43.3 காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்களின் உணர்திறன்

வேலை வாய்ப்பின் நலன் பொறுப்பு அளவீட்டில் ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாகக் காணப்படும்போது பயன்படுத்தப்பட்ட முக்கிய அனுமானங்களிலான ஓர் நியாயமான சாத்தியமான மாற்றத்தின் உணர்திறனை பின்வரும் அட்டவணையானது எடுத்துக்காட்டுகின்றது.

விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று ஆகியவற்றின் உணர்திறனானது வருடத்திற்கான ஊழியர் நலன் கடப்பாட்டில் கழிவிறக்க வீதம் மற்றும் சம்பள அதிகரிப்பு வீதம் என்பவற்றிலான அனுமானிக்கப்பட்ட மாற்றங்களின் விளைவாகும்.

| | | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|---|
| | % | விரிவான வருமானக் கூற்றிலான விளைவு - வருடத்திற்கான விளைவிலான அதிகரிப்பு/(குறைவு) ரூ. '000 | ஊழியர் நலன் கடப்பாட்டிலான விளைவு - பொறுப்பிலான அதிகரிப்பு / (குறைவு) ரூ. '000 | விரிவான வருமானக் கூற்றிலான விளைவு - வருடத்திற்கான விளைவிலான அதிகரிப்பு/(குறைவு) ரூ. '000 | ஊழியர் நலன் கடப்பாட்டிலான விளைவு - பொறுப்பிலான அதிகரிப்பு / (குறைவு) ரூ. '000 |
| கழிவிறக்க வீதத்திலான அதிகரிப்பு / (குறைவு) | | | | | |
| | 1 | 37,667 | (37,667) | 33,376 | (33,376) |
| | -1 | (42,606) | 42,606 | (37,348) | 37,348 |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதத்திலான அதிகரிப்பு / (குறைவு) | | | | | |
| | 1 | (42,735) | 42,735 | (38,666) | 38,666 |
| | -1 | 38,416 | (38,416) | 35,140 | (35,140) |

## 43.4 முதிர்வுத் தோற்றுருவத்தின் மூலமான ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிலான பகுப்பாய்வு

பின்வரும் குறிப்பானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டினை ஒவ்வொரு தனியான ஊழியரினதும் எதிர்பார்க்கும் எதிர்கால தொழில் வாழ்க்கை காலத்தினாலும் பகுப்பாய்வு செய்கின்றது. எதிர்பார்க்கப்படும் எதிர்கால தொழில் வாழ்நாளானது ஓய்வுபெறுவதற்கு முன்னர் அகன்றுசெல்லல், இறப்பு அல்லது ஊனம் ஆகியவற்றின் நிமித்தம் சாத்தியப்பாடான ஓர் வெளியேறுதலை கருத்திலெடுக்கின்றது.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| அடுத்த 12 மாதங்களினுள் | 90,630 | 48,003 | 92,778 | 51,911 |
| 1-5 வருடங்களுக்கு இடையில் | 197,715 | 67,487 | 223,127 | 83,388 |
| 5 வருடங்களுக்கு அப்பால் | 298,912 | 477,381 | 341,873 | 512,630 |
| மொத்தம் | 587,257 | 592,871 | 657,778 | 647,929 |

GRI 207-1, 207-4

## 44. ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்)

### கணக்கீட்டுக்கொள்கை

ஒத்திவைக்கப்பட்ட வரியானது அறிக்கையிடப்படும் திகதியில் காணப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடித்தளங்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்காக கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கும் இடையேயான தற்காலிக வித்தியாசத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. பின்வருவன தவிர்த்த, ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்கும் அங்கீகரிக்கப்படுகின்றன.

| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 509,962 | 565,693 | 521,220 | 570,913 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 69,461 | 97,971 | 68,753 | 97,222 |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 20,758 | 15,980 | 20,653 | 15,002 |
| காப்புறுதிப் பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | - | - | 25,200 | 26,854 |
| குத்தகைப் பொறுப்புக்கள் | 11,487 | 10,121 | 8,112 | 8,452 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 1,821 | 9,561 | 4,441 | 11,014 |
| ஏனைய பொறுப்புக்கள் | 5,373 | 5,172 | 5,812 | 5,580 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 2,950 | 3,143 | 3,305 | 3,435 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | - | - | 1,495 | 2,217 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 654,164 | 749,727 | 704,228 | 798,891 |
| **உரித்துவம்** | | | | |
| பங்கு மூலதனம் | 74,819 | 73,775 | 74,819 | 73,775 |
| சட்டரீதியான ஒதுக்க நிதியம் | 12,093 | 11,692 | 12,384 | 11,850 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் | 86,213 | 75,432 | 103,909 | 87,572 |
| ஏனைய ஒதுக்கங்கள் | (590) | (541) | 2,117 | 1,512 |
| கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க மொத்த உரித்துவம். | 172,535 | 160,358 | 193,229 | 174,709 |
| கட்டுப்பாடற்ற அக்கறை | - | - | 13,372 | 12,495 |
| மொத்த உரித்துவம் | 172,535 | 160,358 | 206,601 | 187,204 |
| மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரித்துவம் | 826,699 | 910,085 | 910,829 | 986,095 |
| எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் | 55,256 | 28,188 | 55,492 | 28,367 |

31 மார்ச் 2021 இல் உள்ளவாறான US$ பரிமாற்றக வீதம் ரூபா 199.04 ஆகும். (31 மார்ச் 2020 - ரூபா 188.62).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிலைமைக் கூற்றானது பங்காளிகளது (பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள், வங்கியாளர்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஏனைய பயனர்கள்) வசதிக்கு மாத்திரம் என்பதுடன் நிதிக் கூற்றுக்களின் ஓர் பாகமாயில்லை.

# நிலைபேறுள்ள அறிக்கையிடலிலான சுயாதீன உறுதிமொழி அறிக்கை

EY
Building a better working world

Ernst & Young
Chartered Accountants
201 De Saram Place
P.O. Box 101
Colombo 10
Sri Lanka

Tel : +94 11 2463500
Fax Gen : +94 11 2697369
Tax : +94 11 5578180
eysl@lk.ey.com
ey.com

ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை 2020/21 இல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறுள்ள அறிக்கையிடல் வரன்முறைகளிலான பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி க்கான சுயாதீன உறுதிமொழி அறிக்கை

ஈடுபாட்டின் அறிமுகம் மற்றும் வரையெல்லை

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (கம்பனி) இன் முகாமைத்துவமானது, ஆண்டறிக்கை 2020/21 (அறிக்கை) இல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறுள்ள அறிக்கையிடல் வரைன்முறைகளின் பின்வரும் கூறுகளில் ஓா சுயாதீன உறுதிமொழியினை வழங்குவதற்காக எம்மை சேவையில் ஈடுபடுத்தியது.

- அறிக்கையின் பக்கங்கள் 97 முதல் 98 வரை குறிப்பிட்டுள்ள நிதியியல் செயற்திறனிலான தகவல்களில் நியாயமான உறுதிமொழி.
- உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு (உஅமு) நியமங்கள்: “ஒத்தவாறு" - முக்கிய வழிகாட்டிகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு அறிக்கையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஏனைய தகவல்களில் வரையறையான உறுதிமொழி.

## எமது பணியின் அடிப்படை மற்றும் உறுதிமொழியின் மட்டம்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் (இபகநி)வழங்கப்பட்ட உறுதிமொழி ஈடுபாடுகளிலான இலங்கை நியமம் (SLSAE 3000): “வரலாற்று நிதியியல் தகவல்களின் கணக்காய்வுகள் மற்றும் மீளாய்வுகள் தவிர்த்த உறுதிமொழி ஈடுபாடுகள்" இன் பிரகாரம் வரையறையான உறுதிமொழியினை வழங்குவதற்காக நாம் எமது செயல்முறைகளை செயலாற்றினோம்.

இந்த வரையறையான உறுதிமொழி ஈடுபாட்டிற்காக பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு வரன்முறையானது நிலைபேறுள்ள அறிக்கையிடல் வழிகாட்டிகளின் அடிப்படையிலாகும் (“உஅமு வழிகாட்டிகள்“) மற்றும் பின்வருவனவற்றில் காணப்படும் தொடர்புடைய தகவல்களின் அடிப்படையிலுமாகும். முக்கியமாக உஅறி நியமங்களான "ஒத்தவாறு“ முக்கிய வழிகாட்டியின் தேவைப்பாடுகளை அடைதல். இதன் பிரசுரிப்பு உஅறி இன் உலகளாவிய இணையத்தளமான "www. globalreporting.org" இல் பொதுவாக கிடைக்கக்கூடியதாயுள்ளது.

எமது ஈடுபாடானது வரையறையான உறுதிமொழியினையும் நியாயமான உறுதிமொழியினையும் வழங்குகின்றது. ஓர் வரையறையான உறுதிமொழி ஈடுபாடு என்பது SLSAE-3000 இற்கமைய நடாத்தப்படும் நியாயமான உறுதிமொழி ஈடுபாட்டிலும் பார்க்க நோக்கெல்லையினுள் கணிசமானளவு குறைவானதாகும். அதன் விளைவாக ஓர் நியாயமான உறுதிமொழி ஈடுபாட்டில் இனங்காணப்படக்கூடிய அனைத்து கணிசமான விடயங்களில் நாம் அறிந்துகொள்ள இயலும் என்ற உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமையாக்காது. இதன்பிரகாரம், நியாயமான உறுதிமொழியினை வழங்குவதில் நாம் ஓர் அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

## அறிக்கைக்கான கம்பனியின் முகாமைத்துவத்தினது பொறுப்பு

கம்பனியின் முகாமைத்துவமானது சுயபிரகடனம், அறிக்கையினுள் காணப்படும் தகவல்கள் மற்றும் கூற்றுக்களது தயாரிப்பிற்கும் மற்றும் போதுமான பதிவுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை பராமரிப்பதற்கும் பொறுப்பாளியாயுள்ளது. இவை உஅமு நிலைபேறுள்ள அறிக்கையிடல் வழிகாட்டிகளுக்கேற்ப நிலைபேறுள்ள அறிக்கையிடல் செயல்முறைக்கு துணையளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

## எர்ன்ஸ்ட் அன்ட் யங்கின் பொறுப்பு

எமது பொறுப்பானது பின்வருவனவற்றில் ஓர் முடிவினை தெரியப்படுத்துவதாகும். அறிக்கையானது உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு, உஅமு நியமங்கள் "ஒத்தவாறு" - முக்கிய வழிகாட்டிகள் இன் தேவைப்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்படவில்லை என நாம் நம்புவதற்கு ஏதேனும் விடயங்கள் குறித்து நாம் தெரிந்துள்ளோமா என்பது குறித்தாகும். இந்த அறிக்கையானது 5 மே 2021 திகதியிடப்பட்ட எமது ஈடுபாட்டிற்கமைய கம்பனிக்காக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கம்பனியினைத் தவிர யாரேனும் ஒரு நபர் அல்லது இது தயாரிக்கப்பட்ட நோக்கத்திலும் பார்க்க ஏதேனும் நோக்கத்திற்காக ஏதேனும் நம்பிக்கைக்குரிய பொறுப்புக்கான ஏதேனும் அனுமானங்களுக்கு நாம் உரிமை துறக்கின்றோம். எமது ஈடுபாட்டினை நடாத்துவதில் நாம் இபகநி இனால் தொழில்சார் கணக்காளர்களுக்கு வழங்கப்பட்ட அறநெறி நியதிகளின் சுயாதீன தேவைப்பாடுகளுடன் நாம் இணங்கியுள்ளோம்.

## முக்கிய உறுதிமொழி செயல்முறைகள்

எமது வரையறையான உறுதிமொழி முடிவுகளுக்கு துணைபுரியும் போதுமான சான்றுகளை வழங்குவதற்கு அவசியமென கருதப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களை பெற்றுக்கொள்வதற்காக நாம எமது செயல்முறைகளை திட்டமிட்டு செயலாற்றினோம். முக்கிய உறுதிமொழி செயல்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- தரவுகளது சேகரித்தல், பகுப்பாய்வு, ஒன்றுதிரட்டல் மற்றும் காட்சிப்படுத்தல் செயல்முறையினை புரிந்துகொள்வதற்காக பொருத்தமான கம்பனியின் ஆளணியுடனான நேர்காணல்.
- இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களது மீளாய்வு மற்றும் ஏற்புடையாக்கல்.
- ஓர் மாதிரி அடிப்படையில் மீள்கணிப்பீட்டினூடாக கம்பனியினால் செயலாற்றப்பட்ட கணிப்பீடுகளை சரிபார்த்தல்.
- நிதியியல் செயற்திறனிலான தரவானது 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களிலிருந்து முறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை கணக்கிணக்கம் செய்து உடன்படுதல்.
- அறிக்கையின் உள்ளடக்கத்தினை ஓர் உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு, உஅமு நியமங்கள் : "ஒத்தவாறு" - முக்கிய வழிகாட்டிளுக்கு எதிராக ஒப்பிடுதல்.

தகவல்களை சேகரித்து ஒன்றுதிரட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட இலத்திரணியல் முறைகளை பரிசீலிப்பதனை எமது செயல்முறைகள் உள்ளடக்கவில்லை.

## வரையறைகள் மற்றும் கருதுதல்கள்

சூழல் மற்றும் சமூக செயற்திறன் தரவுகள் அவற்றை தீர்மானித்தல், கணிப்பீடுசெய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படும் முறைகள் மற்றும் அவற்றின் தன்மை என்பவற்றின் நிமித்தம் இயல்பான வரையறைகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

## முடிவுரை

மேலே விவரிக்கப்பட்டவாறு செயலாற்றப்பட்ட செயல்முறைகளின் அடிப்படையில நாம் இவ்வாறு நிறைவு செய்கின்றோம் ;

- அறிக்கையின் பக்கங்கள் 97 முதல் 98 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் செயற்திறனிலான தகவல்கள் 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களிலிருந்து முறையாக பெறப்பட்டுள்ளன.
- அறிக்கையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் நிலைபேுறுள்ள அறிக்கையிடல் வழிகாட்டி, உஅமு நியமங்கள் -"ஒத்தவாறு" இலிருந்து பெறப்பட்ட கம்பனியின் நிலைபேறுள்ள நடைமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கேற்ப, அனைத்து கணிசநிலை தொடர்பாக, நியாயமாக காட்சிப்படுத்தப்படவில்லை என நாம் நம்புவதற்கான காரணங்கள் ஏதும் எமது கவனத்திற்கு வரவில்லை.

ஏர்ன்ஸ்ட் அன்ட் யங்

07 ஜூலை 2021
கொழும்பு

Partners: W R H Fernando FCA FCMA R N de Saram ACA FCMA Ms. N A De Silva FCA Ms. Y A De Silva FCA W R H De Silva ACA ACMA W K B S P Fernando FCA FCMA Ms. K R M Fernando FCA ACMA Ms. L K H L Fonseka FCA A P A Gunasekera FCA FCMA A Herath FCA D K Hulangamuwa FCA FCMA LLB (Lond) H M A Jayesinghe FCA FCMA Ms. A A Ludowyke FCA FCMA Ms. G G S Manatunga FCA A A J R Perera ACA ACMA Ms. P V K N Sajeewani FCA N M Sulaiman ACA ACMA B E Wijesuriya FCA FCMA
Principals: G B Goudian ACMA T P M Ruberu FCMA FCCA

A member firm of Ernst & Young Global Limited

# உஅமு உள்ளடக்கத்தின் சுட்டி

GRI 102-55

| வெளிப்படுத்தல் | பிரிவு | வெளிப்படுத்தல் | விபரம் | பக்க இல. |
|---|---|---|---|---|
| GRI பொதுவான வெளிப்படுத்தல்கள் | | | | |
| | நிறுவனத்தின் தோற்றுருவம் | 102-1 | நிறுவனத்தின் பெயர் | 329 |
| | | 102-2 | நடவடிக்கைகள், வணிகநாமங்கள்,கருவிகள் மற்றும் சேவைகள் | 64-65 |
| | | 102-3 | தலைமைக் காரியாலயத்தின் அமைவிடம் | 329 |
| | | 102-4 | செயற்பாடுகளின் அமைவிடம் | 11 |
| | | 102-5 | உரித்துடைமை மற்றும் சட்ட வடிவம் | 12, 329 |
| | | 102-6 | சேவையாற்றும் சந்தைகள் | 60-61 |
| | | 102-7 | நிறுவனததின் அளவுகோல் | 16 |
| | | 102-8 | பணியாட்கள் மற்றும் ஏனைய ஊழியர்களிலான தகவல்கள் | 71-72 |
| | | 102-9 | வழங்கல் தொடர் | 85-86 |
| | | 102-10 | நிறுவனம் மற்றும் அதன் வழங்கல் தொடருக்கான கணிசநிலை மாற்றங்கள் | 10 |
| | | 102-11 | முன்னெச்சரிக்கை கொள்கை அல்லது அணுகுமுறை | 93 |
| | | 102-12 | வெளிவாரி முன்னெடுப்புகள் | 09 |
| | | 102-13 | சங்கங்களின் அங்கத்துவம் | 85 |
| | மூலோபாயம் | 102-14 | சிரேஷ்ட தீர்மானம் செய்பவரிடமிருந்தான கூற்று | 17-19 |
| | | 102-15 | முக்கிய தாக்கங்கள், இடர்நேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள் | 153-161 |
| | நெறிமுறை மற்றும் நேர்மை | 102-16 | விழுமியங்கள் , கொள்கைகள், நியமங்கள் மற்றும் நடத்தையின் நெறிமுறைகள் | 11, 73, 122 |
| | | 102-17 | நெறிமுறைகள் பற்றிய ஆலோசனை மற்றும் அக்கறைக்கான பொறிமுறைகள் | 122 |
| | ஆளுகை | 102-18 | ஆளுகை கட்டமைப்பு | 113-114 |
| | பங்காளி ஈடுபாடு | 102-40 | பங்குதாரர் குழுமங்களின் பட்டியல் | 28-29 |
| | | 102-41 | கூட்டு பேரம்பேரல் உடன்படிக்கைகள் | 74 |
| | | 102-42 | பங்காளிகளை இனங்காணுதல் மற்றும் தெரிவுசெய்தல் | 28-29 |
| | | 102-43 | பங்காளி ஈடுபாட்டிற்கான அணுகுமுறை | 28-29 |
| | | 102-44 | முக்கிய தலைப்புகள் மற்றும் எழுப்பப்பட்ட அக்கறைகள் | 28-29 |
| | அறிக்கையிடல் நடைமுறைகள் | 102-45 | ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் | 09 |
| | | 102-46 | அறிக்கையின் உள்ளடக்கம் மற்றும் தலைப்பு வரையறைகளை தெளிவாக்குதல் | 09, 34-37 |
| | | 102-47 | கணிசநிலை தலைப்புகளின் பட்டியல் | 36-37 |
| | | 102-48 | தகவல்களது மீள்கூற்றுக்கள் | 10 |
| | | 102-49 | அறிக்கையிடுவதிலான மாற்றங்கள் | 10, 35 |
| | | 102-50 | அறிக்கையிடப்படும் காலம் | 09 |
| | | 102-51 | மிகவும் சமீபத்தைய அறிக்கையின் திகதி | 09 |
| | | 102-52 | அறிக்கையிடல் சுழற்சி | 09 |
| | | 102-53 | அறிக்கை தொடர்பான வினாக்களுக்கான தொடர்பாடல் புள்ளி | 10 |
| | | 102-54 | உஅமு நியமங்களுக்கமைய அறிக்கையிடப்பட்டுள்ளதான கோரல்கள் | 09 |
| | | 102-55 | உஅமு உள்ளடக்க சுட்டி | 324-325 |
| | | 102-56 | வெளிவாரி உறுதிமொழி | 09, 323 |
| | | 103-1 | கணிசநிலை தலைப்பு மற்றும் அதன் வரையறையிலான விளக்கம் | 36-37 |
| | | 103-2 | முகாமைத்துவ அணுகுமுறை மற்றும் அதன் கூறுகள் | கூட்டாண்மை இணையத்தளம் |
| | | 103-3 | முகாமைத்துவ அணுகுமுறையின் மதிப்பீடு | கூட்டாண்மை இணையத்தளம் |
| GRI விசேட வெளிப்படுத்தல்கள் | | | | |
| பொருளாதார தலைப்புகள் | | | | |
| 201 | பொருளாதார செயற்திறன் | 201-1 | உருவாக்கப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட நேரடி பொருளாதார பெறுமதி | 97-98 |
| 205 | ஊழல் தடுப்பு | 205-1 | ஊழல்கள் தொடர்பான இடர்நேர்கைகளுக்காக செயற்பாடுகளின் மதிப்பீடு | 109 |
| 207 | வரி | 207-1 | வரிக்கான அணுகுமுறை | 56, 140, 181, 186, 199-202, 258-259, 262-264 |
| | | 207-2 | வரி ஆளுகை, கட்டுப்பாடு மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவம் | 36, Corporate Website |
| | | 207-3 | பங்காளிகள் ஈடுபாடு மற்றும் வரி தொடர்பான முகாமைத்துவத்தின் அக்கறைகள் | 122-123 |
| | | 207-4 | தேசங்கள் வாரியான அறிக்கையிடல் | 199-202, 258-259, 262-264 |

| வெளிப்படுத்தல் | பிரிவு | வெளிப்படுத்தல் | விபரம் | பக்க இல. |
|---|---|---|---|---|
| சுற்றுச்சூழல் தலைப்புகள் (300) | | | | |
| 302 | சக்தி | 302-1 | நிறுவனத்தினுள் சக்தியின் நுகர்வு | 95 |
| 305 | உமிழ்வுகள் | 305-1 | நேரடி வெளிப்பாடு (நோக்கெல்லை 1) GHG உமிழ்வுகள் | 93, 95 |
| | | 305-2 | சக்தி நேரல்லாதவை (நோக்கெல்லை 2) GHG உமிழ்வுகள் | 93, 95 |
| | | 305-3 | ஏனைய நேரல்லாதவை (நோக்கெல்லை 3) GHG உமிழ்வுகள் | 93, 95 |
| 306 | கழிவு | 306-1 | கழிவு உருவாக்கம் மற்றும் கனிசநிலை கழிவு தொடர்பான தாக்கங்கள் | 92-94, கூட்டாண்மை இணையத்தளம் |
| | | 306-2 | கனிசநிலை கழிவு தொடர்பான தாக்கங்களின் முகாமைத்துவம் | 92-94, கூட்டாண்மை இணையத்தளம் |
| | | 306-3 | உருவாக்கப்பட்ட கழிவு | 95 |
| 307 | சுற்றுச்சூழல் இணக்கப்பாடு | 307-1 | சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடின்மை | 93 |
| 308 | வழங்குநர் சுற்றுச்சூழல் மதிப்பீடு | 308-1 | சுற்றுச்சூழல் வரன்முறைகளை பயன்படுத்தி புதிய வழங்குநர்கள் ஆய்வு செய்யப்பட்டார்கள். | 86 |
| சமூக தலைப்புகள் (400) | | | | |
| 401 | தொழில்வாய்ப்பு | 401-1 | புதிய ஊழியர் நியமனம் மற்றும் ஊழியர் புரள்வு | 73 |
| | | 401-2 | தற்காலிக மற்றும் பகுதிநேர ஊழியர்களுக்கு வழங்கப்படாத ஆனால் முழுநேர ஊழியர்களுக்கு வழங்குப்படும் நலன்கள் | 74 |
| 403 | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | 403-1 | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை | 32-33, 72 |
| | | 403-2 | பேரழிவு இனங்காணல், இடர்நேர்கை மதிப்பீடு மற்றும் சம்பவ புலன்விசாரணை | 72 |
| | | 403-3 | தொழில்சார் சுகாதாரச் சேவைகள் | 32-33, 72 |
| | | 403-4 | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் ஊழியர் பங்குபற்றல், கலந்தாலோசனை மற்றும் தொடர்பாடல் | 72 |
| | | 403-5 | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் ஊழியர் பயிற்சி | 72 |
| | | 403-6 | ஊழியர் ஆரோக்கியத்தினை ஊக்குவித்தல் | 72 |
| | | 403-7 | வணிகத் தொடர்புகளினால் இணைந்துள்ள நேரடியான தாக்கங்களை தவிர்த்தல் மற்றும் குறைத்தல் | 32-33, 72 |
| | | 403-9 | தொழில் தொடர்பான காயங்கள் | 72 |
| 404 | பயிற்சி மற்றும் கல்வி | 404-1 | பணியாள் ஒருவருக்கான வருடத்திற்கான சராசரி மணித்தியாலங்கள் பயிற்சி | 77 |
| 405 | பன்முகத்தன்மை மற்றும் சமத்துவ வாய்ப்பு | 405-1 | ஆளுகை அங்கங்கள் மற்றும் பணியாட்களின் பன்முகத்தன்மை | 75 |
| 406 | பாகுபாடற்றல் | 406-1 | பாகுபாடான சம்பவங்கள் மற்றும் எடுக்கப்பட்ட திருத்தச் செயல் | 74 |
| 407 | குழுமச் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்பேசல் | 407-1 | செயற்பாடுகள் மற்றும் வழங்குநர்களில் குழுமச் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்பேசுதல் பாதிக்கப்படக்கூடியமை | 74 |
| 410 | பாதுகாப்பு நடைமுறைகள் | 410-1 | பாதுகாவல்கள் மனித உரிமை கொள்கைகள் அல்லது செயல்முறைகளில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளமை | 73 |
| 413 | உள்ளூர் சமூகங்கள் | 413-1 | உள்ளூர் சமூக ஈடுபாடுகள், தாக்க மதிப்பீடுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களிலான செயற்பாடுகள் | 87-89 |
| 414 | வழங்குநர் சமூக மதிப்பீடு | 414-1 | சமூகு வரன்முறைகளை பயன்படுத்தி புதிய வழங்குநர்களது ஆய்வு | 86 |
| 416 | வாடிக்கையாளர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | 416-1 | கருவிகள் மற்றும் சேவை பிரிவுகளின் சுகாதார மற்றும் பாதுகாப்பு தாக்கத்தின் மதிப்பீடு | 38-39, 81-82 |
| 417 | சந்தைப்படுத்தல் மற்றும் குறியிடுதல் | 417-1 | கருவி மற்றும் சேவை தகவல்கள் மற்றும் குறியிடுதலுக்கான தேவைப்பாடுகள் | 84 |
| | | 417-2 | கருவி மற்றும் சேவை தகவல்கள் மற்றும் குறியிடுதல் தொடர்பான இணக்கப்பாடற்ற சம்பவங்கள் | 84 |
| | | 417-3 | சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் தொடர்பான இணக்கப்பாடற்ற சம்பவங்கள் | 84 |
| 418 | வாடிக்கையாளர் அந்தரங்கம் | 418-1 | வாடிக்கையாளர் இரகசியம் மற்றும் வாடிக்கையாளர் தரவுகளின் இழப்பு தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட முறையீடுகள் | 84 |
| 419 | சமூகபொருளாதார இணக்கப்பாடு | 419-1 | சமூக மற்றும் பொருளாதார பிரிவுகளில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடின்மை | 84 |

# சுருக்கக் குறியீடு



*ஆங்கில சுருக்கக்குறியீடுகளை தமிழில் மொழிபெயர்க்கும்போது அது சரியான கருத்தினை பிரதிபலிக்காது. எனவே, நாம் ஆங்கில சுருக்கக்குறியீடுகளை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பதில்லை. உங்களுக்கு மேலதிக விளக்கம் தேவையாயின், தயவு செய்து ஆண்டறிக்கை 2020/21 இன் அசல் பதிப்பினை பார்க்கவும் (ஆங்கில மொழியில்).*

*ஆங்கில சுருக்கக்குறியீடுகளை தமிழில் மொழிபெயர்க்கும்போது அது சரியான கருத்தினை பிரதிபலிக்காது. எனவே, நாம் ஆங்கில சுருக்கக்குறியீடுகளை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பதில்லை. உங்களுக்கு மேலதிக விளக்கம் தேவையாயின், தயவு செய்து ஆண்டறிக்கை 2020/21 இன் அசல் பதிப்பினை பார்க்கவும் (ஆங்கில மொழியில்).*

| | |
|---|---|
| வைப்புகளுக்கான கடன்கள் (மடங்கு) | மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் /வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை |
| வைப்புக்களுக்கான மூலதன நிதியங்கள் | மொத்த உரித்துவம் / வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை |
| கோரல் விகிதம் (%) | **தேறிய கோரல்கள்** * 100/தேறிய உழைத்த தவணைப்பணம் |
| மொத்த கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான கூட்டான வலுக்குன்றல் (%) | கூட்டு வலுக்குன்றல் தள்ளுபடி * 100/மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் |
| வருமானத்திற்கான கிரய வீதம் (%) | மொத்த செயற்பாட்டு செலவினங்கள் * 100/மொத்த செயற்பாட்டு வருமானம் |
| நடைமுறை விகிதம் (மடங்கு) | நடைமுறை சொத்துக்கள் /நடைமுறை பொறுப்புகள் |
| உரித்துவத்திற்கான கடன் (வைப்புக்க நீங்கலாக) (மடங்கு) | (வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை + வழங்கிய கடன் பிணையங்கள்)/கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க மொத்த உரித்துவம் |
| உரித்துவத்துடன் எதிர்பாரா பொறுப்பக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கான கடன் (மடங்கு) | (வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை + வழங்கிய கடன் பிணையங்கள் + எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்)/ கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க மொத்த உரித்துவம் |
| மொத்த சொத்துக்களுக்கான கடன் (மடங்கு) | (வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை + வழங்கிய கடன் பிணையங்கள்)/மொத்த சொத்துக்கள் |
| பங்கிலாபக் காப்பு (மடங்கு) | கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க இலாபம்/சாதாரண பங்குதாரர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த பங்கிலாபம் |
| பங்கிலாப செலுத்தல் (%) | சாதாரண பங்குதாரர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த பங்கிலாபம் * 100 / கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க இலாபம் |
| பங்கிலாப விளைவு (%) | சாதாரண பங்கொன்றிற்கான பங்கிலாபம் *100 / பங்கொன்றிற்கான இறுதி சந்தை விலை |
| சாதாரண பங்கொன்றிற்கான உழைப்பு (ரூ.) | கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க இலாபம்/நிலுவையிலுள்ள சாதாரண பங்குகளின் நிறையிடப்பட்ட சராசரி எண்ணிக்கை |
| உழைப்பின் விளைவு (%) | சாதாரண பங்கொன்றிற்கான உழைப்பு * 100/பங்கொன்றின் இறுதி சந்தை விலை |
| ஊழியர் புரள்வு (%) | வருடத்திலான தேய்வுகளின் எண்ணிக்கை * 100/வருடத்திலான ஊழியர்களின் சராசரி எண்ணிக்கை |
| மொத்த கடன்களுக்கான மொத்த செயற்திறனற்ற கடன்கள் (செக) (%) | மொத்த செயற்திறனற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் * 100 /கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| வலுக்குன்றல் காப்பீட்டு விகிதம் (%) | வலுக்குன்றல் தள்ளுபடி * 100/செயற்திறனற்ற கடன்கள் மற்றும் வருமதிகள் |
| மொத்த கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான தனியான வலுக்குன்றல் (%) | தனியான் வலுக்குன்றல் தள்ளுபடி * 100/மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் |
| வட்டிக் காப்பு (மடங்கு) | வட்டி மற்றும் வரிச் செலவினத்திற்கு முந்திய இலாபம் / வட்டிச் செலவினம் |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.) | பங்கொன்றிற்கான சந்தை விலை * சாதாரண பங்குகளின் எண்ணிக்கை |
| சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் (ரூ.) | கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க மொத்த உரித்துவம் / சாதாரண பங்குகளின் எண்ணிக்கை |
| தேறிய வட்டி விளிம்பு (தேவவி) (%) | தேறிய வட்டி வருமானம் * 100/சராசரி வட்டி உழைக்கும் சொத்துக்கள் |
| மொத்த கடன்களுக்கான தேறிய செயல்திறனற்ற கடன்கள் (%) | (செயற்திறனற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் - தொங்கலிலுள்ள வட்டி - கடன்நட்ட ஏற்பாடுகள்) * 100/கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| செயற்பாட்டு இலாப எச்சம் (%) | நிதிச் சேவைகளிலான வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம் * 100/வட்டி வருமானம் |
| விலை உழைப்பு விகிதம் (விஉ)(மடங்கு) | பங்கொன்றின் சந்தை விலை / பங்கொன்றிற்கான உழைப்பு |
| புத்தகப் பெறுமதிக்கு விலை (புபெவி)(மடங்கு) | பங்கொன்றிற்கான சந்தை விலை / சாதாரண பங்கொன்றின் தேறிய சொத்துக்கள் |
| ஏற்பாடு காப்பு விகிதம் (%) | கடன் நட்ட ஏற்பாடுகள் * 100/செயற்திறனற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| தக்கவைத்தல் விகிதம் (%) | வருட இறுதியில் 1 வருடத்திற்கும் மேலான சேவையிலுள்ள பணியாட்களின் எண்ணிக்கை * 100/ வருடத்தின் ஆரம்பத்திலுள்ள பணியாட்களின் எண்ணிக்கை |
| சொத்துக்களிலான விளைவு (சொவி) (%) | வருமான வரிச் செலவினத்திற்கு முந்திய இலாபம் * 100/சராசரி மொத்த சொத்துக்கள் |
| பயன்படுத்தப்பட்ட மூலதனத்திலான விளைவு (பமூவி) (%) | வட்டி மற்றும் வரிச் செலவினத்திற்கு முந்திய இலாபம் * 100 / (வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை + வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை + வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் + மொத்த உரித்துவம்) |
| உரித்துவத்திலான விளைவு (உவி) (%) | கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க இலாபம் *100 / கம்பனியின் உரித்துடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க சராசரி உரித்துவம் |
| அடுக்கு 1 மூலதன விகிதம் (%) | அடுக்கு 1 மூலதனம் * 100/மொத்த இடர்நேர்கை நிறையிடப்பட்ட சொத்துக்களின் தொகை |
| மொத்த மூலதன விகிதம் (%) | மொத்த மூலதனம் * 100/ மொத்த இடர்நேர்கை நிறையிடப்பட்ட சொத்துக்களின் தொகை |
| மொத்த தேக்கத்திற்கான மொத்த வலுக்குன்றல் ஏற்பாடு (%) | மொத்த வலுக்குன்றல் ஏற்பாடுகள் * 100/மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் |
| மொத்த சொத்துக்களுக்கான மொத்த தேறிய கடன்கள் (%) | (கடன்கள் மற்றும் முற்பணங்கள் - தொங்கலிலுள்ள வட்டி - கடன் நட்ட ஏற்பாடுகள்) * 100/ மொத்த சொத்துக்கள் |

# கூட்டாண்மை தகவல்கள்

GRI 102-1, 102-3, 102-5

### கம்பனியின் பெயர்
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (மக்கள் வங்கியின் துணைக்கம்பனி)

### சட்ட வடிவம்
கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பொது வரையறுத்த பொறுப்புடைய கம்பனி (இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் குடியிருப்புடையது)

### ஒருங்கிணைக்கப்பட்ட திகதி
22 ஆகஸ்ட் 1995

### கம்பனி பதிவீட்டு இலக்கம்
PB 647 PQ

### கணக்கீட்டு வருட இறுதி
31 மார்ச்

### பங்குப் பரிமாற்றக பட்டியலிடல்
கம்பனியின் சாதாரண பங்குகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (கொபப) பிரதான பலகையில் 24 நவம்பர் 2011 இல் பட்டியலிடப்பட்டது.

கம்பனியின் 47,840,906 சாதாரண பங்குகள் ஓர் பத்திரப் பங்கிலாபத்தினைத் தொடர்ந்து 9 ஆகஸ்ட் 2019 முதல் பட்டியலிடப்பட்டன.

கம்பனியின் 76,899,372 சாதாரண பங்குகள் ஓர் பத்திரப் பங்கிலாபத்தினைத் தொடர்ந்து 24 டிசம்பர் 2020 முதல் பட்டியலிடப்பட்டன.

சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க, ஐந்து வருட (2016/21) தொகுதிக்கடன்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் கடன் பிணையங்கள் பிரதான பலகையில் 23 நவம்பர் 2016 இல் பட்டியலிடப்பட்டன.

சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க நான்கு வருட (2018/22) மற்றும ஐந்து வருட (2018/23) தொகுதிக்கடன்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் கடன் பிணையங்கள் பிரதான பலகையில் 27 ஏப்ரல் 2018 இல் பட்டியலிடப்பட்டன.

### பதிவிடப்பட்ட காரியாலயம் மற்றும் பிரதான வணிக இடம்
1161, மருதானை வீதி, பொரள்ளை
கொழும்பு 08, இலங்கை.
அஞ்சல் குறியீடு: 00800
தொலைபேசி +94 11 2631631
தொலைநகல்: +94 11 2631980/81
மின்னஞ்சல்: info@plc.lk
இணைய முகவரி: www.plc.lk

### இணக்கப்பாட்டு அதிகாரி
செல்வி ஷய்ரா கலீல்

### கம்பனிச் செயலாளர்
செல்வி லக்மினி கோட்டேகொட

### பதிவாளர்
SSP கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட்
இல.101, இனர் வ்ளவர் வீதி,
கொழும்பு 03, இலங்கை
தொலைபேசி: +94 11 2573894
+94 11 2576871
தொலைநகல்: +94 11 2573609
மின்னஞ்சல்: sspsec@sltnet.lk

### கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்,
இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல.

### வங்கியாளர்கள்
மக்கள் வங்கி
சம்பத் பேங்க் பிஎல்சி
இலங்கை வங்கி
கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
டிஎவ்சிசி பேங்க் பிஎல்சி
ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி
நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பிஎல்சி
நேஷன்ஸ் ட்ரஸட் பேங்க் பிஎல்சி
செலான் பேங்க் பிஎல்சி
ஸ்டான்டர்ட் சாட்டர்ட் பேங்க்
ஹபீப் பேங்க் லிமிட்டட்
சிட்டி பேங்க் என்.ஏ.
இந்தியன் பேங்க்
இந்தியன் ஓவர்சீஸ் பேங்க்
பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பிஎல்சி

### கிளை அலுவலகங்கள்
அகுரெஸ்ஸ, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை, அவிசாவளை, அம்பாறை, ஆனைமடு, அநுராதபுரம், பதுள்ளை, பலங்கொடை, பண்டாரவளை, பத்தரமுல்ல, மட்டக்களப்பு, பெந்தோட்டை, சிலாபம், சுன்னாகம், கொள்ளுபிட்டி, தம்புள்ளை, தெஹிவளை, தெனியாய, திகன, எல்பிட்டிய, எம்பிலிபிட்டிய, காலி, கம்பஹா, கம்பளை, கிரிஉல்ல, கொடகாவலை, கிரான்ட்பாஸ், அம்பாந்தோட்டை, அங்வெல்ல, ஹட்டன், ஹெவ்லொக், ஓமாகம, ஹொரண, ஜாஎல, யாழ்ப்பாணம், கடவத்தை, கடுவெல, களுவாஞ்சிக்குடி, கலவான, கல்முனை, களுத்தறை, கம்புருபிட்டிய, கண்டி, கண்டி-அல்சாவா, கண்டி (வில்லியம் கோபல்லாவ மாவத்தை), கந்தளாய், காத்தான்குடி, கேகாலை, கெக்கிராவ, களணி, கிளிநொச்சி, கிரிந்திவெல, குலியாபிட்டிய, குருணாகலை, மஹியாவ, மஹரகம, மஹியங்கனை, மன்னார், மாத்தளை, மாத்தறை, மதவாச்சி, மத்துகம, மாவநெல்லை, மெல்சிறிபுர, மீரிகம, மெட்ரோபொலிட்டன், மினுவங்கொடை, மொனராகல, மொரட்டுவ, மூதூர், நாரம்மல, நாத்தாண்டி, நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நெல்லியடி, நெலுவ, நிட்டம்புவ, நுகேகொட, நுவரஎலிய, பாணந்துறை, பெல்மதுல்ல, புறக்கோட்டை, பிலிமத்தலாவ, பிலியந்தல, பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி, தங்காலை, தம்புத்தேகம, திஸ்ஸமஹாரம, திருகோணமலை, யூனியன் பிளேஸ், ஊருபொக்க, வவுனியா, வலஸ்முல்ல, வாரியபொல, வத்தளை, வெலிமட, வெல்லவாய, வெள்ளவத்தை, வென்னப்புவ.

### பணிப்பாளர்கள் சபை - 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது
திரு.சுஜீவ ராஜபக்ஷ - தலைவர்
திரு. ரொஹான் பத்திரகே
திரு. அசாம் ஏ ஹாமத்
திரு. எஸ். ஹாங்கம
திரு. கே சி ஜே சி பொன்சேகா
திரு. சனுர விஜேதிலக்க
திரு. யு எல் ஏ டபிள்யு பண்டார
செல்வி கொரலி பியட்டர்ஸ்
திரு. ஆர். கொடித்துவக்கு

### சபை கணக்காய்வுக் குழு
செல்வி. கொரலி பியட்டர்ஸ் - தலைமை
திரு. யு எல் ஏ டபிள்யு பண்டார-அங்கத்தவர்
திரு. அசாம் ஏ ஹாமத் - அங்கத்தவர்

### சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்கை முகாமைத்துவக் குழு
திரு. சனுர விஜேதிலக்க - தலைவர்
திரு. அசாம் ஏ ஹாமத் - அங்கத்தவர்
திரு. கே சி ஜே சி பொன்சேகா - அங்கத்தவர்

### மனித வளங்கள் வேதனம் மற்றும் பெயரிடல் குழு
திரு. யு எல் ஏ டபிள்யு பண்டார- தலைவர்
செல்வி. கொரலி பியட்டர்ஸ் - அங்கத்தவர்
திரு. ரொஹான் பத்திரகே - அங்கத்தவர்

### தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு
திரு. சனுர விஜேதிலக்க - தலைவர்
திரு. யு எல் ஏ டபிள்யு பண்டார-அங்கத்தவர்
திரு. எஸ். ஹாங்கம- அங்கத்தவர்

### துணைக் கம்பனிகள்
பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்

பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட்

பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட்

பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி

பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட்

லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட்

### கூட்டாண்மை அங்கத்துவம்
இலங்கை குத்தகைச் சங்கம்

இலங்கை நிதி இல்லங்கள் சங்கம்

இலங்கை நிதியியல் குறைதீர்ப்பாளர்

இலங்கை கடன் தகவல் மையம்

எல்லைக் கடன் வழங்குநர்கள் சங்கம்

உயிரியல்தன்மை இலங்கை (புரவலர் அங்கத்தவர்)

### வாகனத் தோட்டங்கள்
இல.429, 2ஆவது டிவிசன், மார்லி வீதி, கொழும்பு 10, இலங்கை

இல. 496, மாகொல வடக்கு, மாகொல, இலங்கை

இல, 225/D, நயாகல வீதி, ஈயந்துடுவ, மாபிம, இலங்கை

இல. 8, பொத்துவில் வீதி, மொனராகல, இலங்கை

கெட்டலாகொல்ல, பெலிகமுவ, கலேவல, இலங்கை

### வரி செலுத்துபவர் அடையாள இலக்கம்(TIN)
114 156396

### வருமான வரி அடையாள இலக்கம்
114 156396 0000

### பெசேவ பதிவீட்டு இலக்கம்
114 156396 7000

### இலங்கை மத்திய வங்கி பதிவீட்டு இலக்கம்
046 (2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் கீழ்)

### கடன் முகவர் நிலைமை
வர்த்தகத் திணைக்களத்தின் 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அடமானச் சட்டம் மற்றும் 1947 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பு பற்றுச்சீட்டு கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஓர் கடன் முகவராகும்.

### கடன் தரப்படுத்தல்
"A+" (lka) விச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டட்டினால்

# கூட்டத்திற்கான அறிவித்தல்



பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் இருபத்து ஐந்தாம் (25) ஆண்டுப் பொதுக் கூட்டம் 05 ஆகஸ்ட் 2021 இல் பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு 08, இலக்கம் 1161, மருதானை வீதியில் அமைந்துள்ள பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் சபை அறையில் இடம்பெறுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கோவிட்-19 தொற்றின் காரணமாக நாட்டில் நிலவும் தற்போதைய சூழல் மற்றும் அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிகளை கருத்திலெடுத்து வைரஸ் பரவலுக்கு எதிராக பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்கில், குறித்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தினை (ஆபொகூ) 05 ஆகஸ்ட் 2021 இல் கீழே குறிப்பிட்டுள்ள விதத்தில் ஒலி மற்றும் ஒனி தொழில்நுட்பத்தினூடாக நடாத்துவதற்கு பணிப்பாளர் சபையானது முன்மொழிகின்றது;

1. ஆபொகூ ஆனது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், கம்பனியின் அமைப்பு அகவிதிகள், ஆண்டுப் பொதுக் கூட்டங்களை கூட்டுவதற்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வழிகாட்டிக் குறிப்பு மற்றும் சுகாதார அமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டிகளுக்கு இணங்க இடம்பெறும்.
2. கூட்டத்தின் வழக்கமுறைகளை நிர்வகிப்பதற்கு அவசியமான சபையின் பணிப்பாளர்கள், கம்பனி செயலாளர், முக்கிய முகாமைத்துவ அதிகாரிகள், கணக்காய்வாளர்களது பிரதிநிதிகள் மற்றும் சட்டவுரைஞர்கள் (பொருத்தமானவிடத்து நுண்ணாய்வுநர்கள்) ஆகியோர் மாத்திரமே இலங்கை, கொழும்பு 08, இலக்கம் 1161, மருதானை வீதியில் அமைந்துள்ள பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் சபை அறையில் உடல்சார் வழியாகவும் இணைய வழியாகவும் சமூகமளித்திருப்பார்கள். ஏனைய அனைவரும், பங்குதாரர்கள் உள்ளடங்கலாக, ஓர் இயங்கலை கூட்ட மேடையினூடாக (அதாவது Zoom மேடையினூடாக) பங்குபற்றுவார்கள். இந்த வழிமுறைகள் "சமூக இடைவெளி" தேவைப்பாடுகளை அவதானிப்பதற்காகவும் வைரசின் பரவலின் அபாயத்தைக் குறைப்பதற்காகவும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

குறித்த ஆண்டுப் பொதுக் கூட்டமானது பின்வரும் நோக்கங்களுக்காக இடம்பெறும்:

1. பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கையுடன் 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான கணக்காய்வாளர்களது அறிக்கை ஆகியவற்றை பெறுவதற்காகவும் ஆலோசிப்பதற்காகவும்.

2. பணிப்பாளர்கள் சபையினால் பரிந்துரைக்கப்பட்டவாறு சாதாரண பங்கொன்றிற்கு இறுதிப் பங்கிலாபமாக எழுபத்து ஐந்து சதத்தினை(ரூ.0.75) பிரகடனம் செய்வதற்கும் ஓர் பத்திரப் பங்கிலாபமாக செலுத்துவதற்கும் மற்றும் எனவே பொருத்தமானதென கருதும் விதத்தில் சாதாரண தீர்மானம் மூலமாக பின்வரும் தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு:

   i. பத்திரப் பங்கிலாபத்தின் கீழ் வழங்கப்படும் சாதாரண பங்குகளின் எண்ணிக்கை தொன்னூற்று எட்டு மில்லியன் முன்னூற்று நாற்பத்து இரண்டாயிரத்து நானூற்று அறுபத்து ஆறு (98,342,466) ஆகும் என்பதுடன் இது பங்கொன்று ரூபா 13.00 அடிப்படையில் ஆண்டுப் பொதுக் கூட்டத் திகதியில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வர்த்தகம் நிறைவுறும்போது நடைமுறையிலுள்ள ஒவ்வொரு பதினேழு தசம் மூன்று மூன்று மூன்று மூன்று மூன்று மூன்று நான்கு ஒன்பது ஆறு பூச்சியம் (17.3333334960) பங்குகளை வைத்திருக்கும் பங்துதாரருக்கும் ஒரு பங்கு வழங்கப்படுவதனை விளைவிக்கின்றது. விநியோகம் எதிர் கொடுப்பனவு இயலுமையாக்கப்படும்போது, கம்பனியின் பங்குதாரர்கள் ஆண்டுப் பொதுக் கூட்டத் திகதி (பதிவுத் திகதீ நீங்கலாக அதிலிருந்து மூன்றாவது (03ஆவது) சந்தை தினத்தில் வர்த்தகம் நிறைவடையும்போது அவர்களது மவைதி கணக்குகளில் / பங்கு இடாப்பில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் இந்த பங்கு வழங்கலுக்கு உரித்துடையவர்களாவார்கள்.
   ii. பத்திரப் பங்கிலாபத்தின் கீழ் வழங்கப்படும் பங்குகளின் மொத்த எண்ணிக்கை தொன்னூற்று எட்டு மில்லியன் முன்னூற்று நாற்பத்து இரண்டாயிரத்து நானூற்று அறுபத்து ஆறு (98,342,466) சாதாரண பங்குகளாகும்.

பத்திரப் பங்கிலாபத்தின் கீழ் வழங்கப்படும் பங்குகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படல் வேண்டும் என்று மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் கொள்கையளவில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிடமிருந்து பத்திரப் பங்கிலாபத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

பத்திரப் பங்கிலாபத்தின் விளைவாக எச்ச சிற்றெண்களது (சிற்றெண் பங்குகள்) கூட்டுச் சேர்க்கையிலிருந்து எழுகின்ற எஞ்சிய மீதியானது சந்தையில் விற்பனை செய்யப்பட்டு அதிலிருந்து எழுகின்ற வருவாயானது கம்பனியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு கொள்கைக்கு அமைவாக தொண்டுநிறுவனங்களுக்கு மற்றும் ஏனைய நன்கொடைகளுக்கு செலவு செய்வதற்கு மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிடப்படும் எச்ச சிற்றெண் உரிமையானது பின்வரும் சூத்திரம் பிரயோகிக்கப்பட்டதன் பின்னர் எழுகின்ற சிற்றெண் என்று பொருள்படும்:

ஆபொகூ திகதியில் வாத்தகம் நிறைவடைந்ததன் பின்னர் பங்குதாரர்களினால் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கை அல்லது விஎகொ இயலுமையாக்கப்பட்டிருப்பின் ஆண்டுப் பொதுக் கூட்டத் திகதியிலிருந்து (பதிவுத் திகதி), அத்திகதி நீங்கலாக, மூன்றாவது (03ஆவது) சந்தை தினத்தில்

―――――――――――――――― X 1

17.3333334960

3. கம்பனியின் அகவிதியின் உறுப்புரை 27 (2) இன் ஏற்பாடுகளுக்கமைய சபைக்கு நியமிக்கப்பட்டு இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இளைப்பாறும் பணிப்பாளர், திரு. ரஞ்சித் கொடித்துவக்கு அவர்களை பணிப்பாளராக மீள்-தெரிவு செய்வதற்கு.
4. 31 மார்ச் 2022 இல் நிறைவடையும் நிதியாண்டிற்காக தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நன்கொடைகளுக்கான பங்களிப்புகளை தீர்மானிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரமளிப்பதற்கு.

### கம்பனியின் கணக்காய்வாளர்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 55 இன் பிரகாரம் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி "கண்காய்வு செய்யப்படும் நிறுவனம்" எனும் வரைவிலக்கணத்தின் கீழ் வருவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் ஒரு நபரினால் கம்பனியின் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

லக்மினி கோட்டேகொட
கம்பனி செயலாளர்
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி

07ஜூலை 2021

குறிப்புக்கள்

இந்தக் கூட்டத்தில் சமூகமளித்து வாக்களிப்பதற்கு உரிமையுள்ள யாரேனும் அங்கத்தவர் அவருக்குப் பதிலாக சமூகமளித்து வாக்களிப்பதற்கு ஓர் பதிலாளை நியமிப்பதற்கு உரிமையுடையவர் ஆவார். இந்த நோக்கத்திற்காக ஓர் பதிலாள் படிவம் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. ஓர் பதிலாள் கம்பனியின் அங்கத்தவராய் இருத்தல் அவசியமில்லை.

பூரணப்படுத்தப்பட்ட பதிலாள் படிவமானது கம்பனியின் பதிவு செய்யப்பட்ட காரியாலயமான, பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி, இலக்கம் 1161, மருதானை வீதி, கொழும்பு 08 இல் கூட்டம் நடைபெறுவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்கு ஆகக் குறைந்தது நாற்பத்து எட்டு (48) மணித்தியாலயத்திற்கு முன்னர் வைப்பிலப்படல் வேண்டும் அல்லது இந்த மின்னஞ்சல் முகவரிக்கு arrequests@plc.lk மின்னஞ்சலை அனுப்புதல் வேண்டும்.

கொழும்பு, 07 ஜூலை 2021

# குறிப்புக்கள்

# குறிப்புக்கள்

# பதிலாள் படிவம்

நான்/நாங்கள்..................................................................................................................................இன் ......................................................................................................

.................................. பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் அங்கத்தவராக / அங்கத்தவர்களாக இருப்பதால்

திரு./திருமதி/செல்வி........................................................................................... அடையாள அட்டை இலக்கம் .................................................உடைய

.................................................................................................இன் அத்தால் நியமிக்கின்றேன் அல்லது அவர் இல்லாவிடின் பின்வரும் பணிப்பாளர்களில் ஒருவரை நியமிக்கின்றேன்:

1. திரு. சுஜீவ ராஜபக்ஷ அவர் இல்லாவிடின்
2. திரு. ரொஹான் பத்திரகே அவர் இல்லாவிடின்
3. திரு. மொஹமட் அசாம் அலி ஹாமட் அவர் இல்லாவிடின்
4. திரு. சுதர்ஷன் ஹாங்கம அவர் இல்லாவிடின்
5. திரு. குருகுலசூரிய கெனிசியஸ் ஜோக்கீம் க்ளைவ் பொன்சேகா அவர் இல்லாவிடின்
6. திரு. சனுர ஜயந்த விஜேதிலக்க அவர் இல்லாவிடின்
7. திரு. உபுல் லக்ஷமன் அசோகா விக்கிரமசிங்க பண்டார அவர் இல்லாவிடின்
8. செல்வி, மீரியம் கொரலி பியட்டர்ஸ் அவர் இல்லாவிடின்
9. திரு. ரஞ்சித் கொடித்துவக்கு

எனது/எமது பதிலாளாக என்னை/எம்மை பிரதிநிதித்துவப்படுத்தி எனது/எமது சார்பில் கொழும்பு 08, இலக்கம் 1161, மருதானை வீதியில் அமைந்துள்ள பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் சபையின் அறையில் 05 ஆகஸ்ட் 2021 பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ள கம்பனியின் இருபத்து ஐந்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க அனுமதிப்பதுடன் மற்றும் அதிலிருந்தான ஏதெனும் ஒத்திவைப்புக்கான மற்றும் அதன் விளைவாக எடுக்கப்படும் ஒவ்வொரு வாக்களிப்பிலும் வாக்களிப்பதற்கு அனுமதியளிக்கின்றேன்/ அனுமதியளிக்கின்றோம்.

Zoom ஊடாக பங்குபற்றுவதற்கு:
மின்னஞ்சல் முகவரி / கைப்பேசி இலக்கம்:...................................................................................................

தயவுசெய்து உங்களது தெரிவினை தீர்மான இலக்கங்களுக்கு எதிராக 'X' இனை இடுவதன் மூலம் குறிப்பிடவும் –

| | | ஆதரவு | எதிர் |
|---|---|---|---|
| 1. | பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கையினை 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான கணக்காய்வாளர்களது அறிக்கை என்பவற்றை பெற்று ஆலோசிப்பதற்காக. | | |
| 2. | பணிப்பாளர்கள் சபையினால் பரிந்துரைக்கப்பட்டவாறு சாதாரண பங்கொன்றிற்கு இறுதி பங்கிலாபமாக எழுபத்து ஐந்து சதத்தினை (ரூ.0.75) இறுதி பங்கிலாபமாக பிரகடனம் செய்வதற்கும் அதனை பத்திரப் பங்கிலாபமாக செலுத்துவதற்கும் மற்றும் பொருத்தமானது எனது கருதும் பட்சத்தில், கூட்ட அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு. | | |
| 3. | கம்பனியின் அகவிதியின் உறுப்புரை 27 (2) இன் ஏற்பாடுகளுக்கமைய சபைக்கு நியமிக்கப்பட்டு இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இளைப்பாறும் பணிப்பாளர், திரு. ரஞ்சித் கொடித்துவக்கு அவர்களை பணிப்பாளராக மீள்-தெரிவு செய்வதற்கு. | | |
| 4. | 31 மார்ச் 2022 இல் நிறைவடையும் நிதியாண்டிற்காக தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நன்கொடைகளுக்கான பங்களிப்புகளை தீர்மானிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரமளிப்பதற்கு. | | |

## கம்பனியின் கணக்காய்வாளர்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 55 இன் பிரகாரம் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி "கண்காய்வு செய்யப்படும் நிறுவனம்" எனும் வரைவிலக்கணத்தின் கீழ் வருவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் ஒரு நபரினால் கம்பனியின் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

2021 ஆம் ஆண்டு ........ ................ மாதம் ........................திகதியில் கையொப்பமிடப்பட்டது.

....................................................
கையொப்பம்

....................................................
பங்குதாரரத தே.அ.அ./க.சீ./கம்பனி பதி. இலக்கம்

**குறிப்புகள்:**
1. பதிலாள் கம்பனியின் அங்கத்தவராக இருக்கவேண்டிய அவசியமில்லை.
2. இந்த பதிலாள் படிவத்தினை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் மறுபக்கத்தில் வழங்கப்பட்டுள்ளன.

## பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

1. கம்பனியின் அகவிதியின் உறுப்பு 19 (5) இல் வழங்கப்பட்டுள்ளவாறு பதிலாளை நியமிக்கும் சாதனமானது எழுத்தில் இருத்தல் வேண்டும்.
2. பதிலாளை நியமிக்கும் பங்குதாரரின் முழுப்பெயர் மற்றும் முகவரி பதிலாள் படிவத்தில் தெளிவாக எழுதப்பட்டு ஏற்றவாறு திகதியடப்பட்டு கையொப்பமிடப்படல் வேண்டும்.
3. பதிலாள் –
   அ) ஓர் தனிநபராக காணப்படுமிடத்து பங்குதாரரினால் அல்லது அவரது பகராளரினால் கையொப்பமிடப்படல் வேண்டும், மற்றும் பகராளரினால் கையொப்பமிடப்பட்டிருப்பின் அது கம்பனியுடன் ஏற்கனவே பதிவு செய்யப்படாது இருப்பின், ஓர் நொத்தாரிசுவினால் சான்றளிக்கப்பட்ட பகராள் செயலுரிமை ஆவணத்தின் பிரதியொன்று பூர்த்தி செய்யப்பட்ட பதிலாள் படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
   பி) ஒரு கம்பனியாக அல்லது கூட்டாண்மையாக இருப்பின், அது அந்த கம்பனியின் இலச்சினையின் கீழ் அல்லது கம்பனி அல்லது கூட்டாண்மை அங்கத்தின் சார்பில் அதன் வழக்கறிஞரினால் அல்லது ஓர் அதிகாரியினால் அந்தக் கம்பனி அல்லது கூட்டாண்மை அங்கத்தின் அமைப்பு அகவிதி அல்லது யாப்பின் பிரகாரம் கையொப்பமிடல் வேண்டும்.
   இ) கூட்டு உடைமையாளர்களாய் இருப்பின், அங்கத்தவர்களது இடாப்பில் கூட்டு உடைமையாளர்களில் முதலாவதாகக் காணப்படும் பெயரை உடையவர்.
4. பூர்த்தி செய்யப்பட்ட பதிலாள் படிவம், இணையவழி கூட்ட இயங்கலை பதிவீட்டுப் படிவம் மற்றும் பகராள் செயலுரிமை ஆவணம் அல்லது ஏனைய அதிகாரம், ஏதும் இருப்பின், அதன் கீழ் கையொப்பமிடப்பட்ட அல்லது நொத்தாரிசினால் சான்றளிக்கப்பட்ட பகராள் செயலுரிமை ஆவணத்தின் பிரதி அல்லது ஏனைய அதிகாரமானது இலக்கம் 1161, மருதானை வீதி, கொழும்ப 08 இல் உள்ள கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட காரியாலயத்தில் கூட்டம் இடம்பெறுவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்கு ஆகக் குறைந்தது நாற்பத்து எட்டு (48) மணித்தியாலங்கள் முன்னதாக வைப்பிலிடப்படல் வேண்டும் அல்லது lakminik@plc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்தல் வேண்டும்.
5. பதிலாளுக்கான ஒவ்வொரு திருத்தம் அல்லது சேர்க்கையானது ஏற்றவாறு பதிலாள் படிவத்தினை கையொப்பமிட்ட பங்குதாரரினது முழு கையொப்பத்துடன் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
6. கம்பனியின் அக விதிகளின் உறுப்புரை 15, 18, மற்றும் 22 இன் சுருக்கமானது, இது பங்குதாரர்களது கூட்டங்கள் மற்றும் பங்குதாரர்களது வாக்களிப்பு பற்றி கையாள்கின்றது, பங்குதாரர்களின் தகவலுக்காக இத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

## கூட்டங்களை நடாத்தும் முறை

பங்குதாரர்களது ஒரு கூட்டமானது (ஓர் தீர்மானத்தினை ஓர் விசேட தீர்மானமாக முன்மொழிவதற்கான நோக்கத்தினைக் கொண்ட ஓர் கூட்டம் உள்ளடங்கலாக) ஓர் கோரெண்ணை அமைப்பதற்கு தேவையான பங்குதாரர்களின் எண்ணிக்கையினால், கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட இடம், திகதி மற்றும் நேரத்தில் ஒன்றுகூடுவதாகும்.

## வாக்களித்தல்

1. மேற்குறிப்பிட்ட உறுப்புரை 15 இன் கீழ் இடம்பெறும் பங்குதாரர்களது ஒரு கூட்டத்தில் வாக்களிப்பானது, ஓர் வாக்கெடுப்பு வேண்டப்பட்டாலொழிய, கைகளை உயர்த்திக் காண்பிப்பதன் மூலமாகும்.
2. இந்த உறுப்புரையின் பந்தி (3) இன் பிரகாரம் ஓர் வாக்கெடுப்பு வேண்டப்பட்டால் ஒழிய, ஓர் தீர்மானமானது தேவையான பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டுள்ளது என கூட்டத்தின் தலைவரினால் மேற்கொள்ளப்படும் ஒரு பிரகடனம் அது பற்றிய ஓர் நிறைவான சான்றாகும்.
3. பங்குதாரர்களது ஒரு கூட்டத்தில், ஓர் வாக்கெடுப்பானது பின்வருபவர்களினால் வேண்டப்படலாம் —
   அ) தலைவர்; அல்லது
   ஆ) கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரிமையுள்ள ஐந்துக்கும் (5) குறையாத பங்குதாரர்களினால்; அல்லது
   இ) கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரிமையுள்ள அனைத்து பங்குதாரர்களது மொத்த வாக்களிக்கும் உரிமையில் 10% க்கும் குறையாததனை பிரதிநிதித்துவம் படுத்தும் ஒரு பங்குதாரர் அல்லது பங்குதாரர்கள்.
4. ஓர் தீர்மானத்தில் வாக்களிப்பு எடுப்பதற்கு முன்னர் அல்லது பின்னர் ஓர் வாக்கெடுப்பு வேண்டப்படலாம். எவ்வாறாயினும், வாக்கெடுப்பிற்கான வேண்டலானது, வாக்கெடுப்பு வேண்டப்படுவதிலான வினாவைத் தவிர்த்த ஏதேனும் விடயத்திற்கான கொடுக்கல் வாங்கலிலான கூட்டம் தொடர்வதனை தடைசெய்யாது.
5. ஓர் வாக்கெடுப்பு எடுக்கப்பட்டால், வாக்குகள் சமூகமளித்துள்ள மற்றும் வாக்களிக்கும் ஒவ்வொரு பங்குதாரரது பங்குகளுடன் இனைந்துள்ள வாக்குகளின் பிரகாரம் கணக்கிடப்படும்.
6. ஓர் பங்குதாரர்களது கூட்டத்தின் தலைவர் ஓர் வாக்கினை அளிப்பதற்கு உரிமையற்றவராவார்.

## கூட்டு உடைமையாளர்களின் வாக்குகள்

"இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு பங்கின் உடைமையாளர்களாக பதிவு செய்யப்பட்டிருப்பின், பங்கு இடாப்பில் முதலாவதாக பெயர் குறிப்பிடப்பட்ட நபருடைய வாக்கு ஓர் விடயத்திலான வாக்களிப்பில் ஏற்றுக்கொள்ளப்படும். இது ஏனைய கூட்டு உடைமையாளர்களது வாக்குகள் தவிர்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும். ஓர் இறந்த பங்குதாரரது பெயர் மாத்திரம் ஏதேனும் பங்குகளில் இருக்கும்போது, அவருக்கு பல நிறைவேற்றுநர்கள் அல்லது நிருவாகிகள் காணப்பட்டால், அத்தகைய நிறைவேற்றுநர்கள் அல்லது நிருவாகிகளில் எவரேனும் ஒருவர் அத்தகைய பங்குகள் தொடர்பாக வாக்களிக்கலாம். இது அத்தகைய நிறைவேற்றுநர்கள் அல்லது நிருவாகிகளுள் வேறு யாரேனும் ஒருவர் அத்தகைய வாக்கு அளிக்கப்படும் கூட்டத்தில் சமூகமளித்து வாக்கிற்கான எதிர்ப்பினை தெரிவித்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படும்."

# பின்னூட்டப் படிவம்

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை 2020/21 இல் உங்களது பெறுமதிமிக்க பின்னூட்டத்தினை நாம் வரவேற்கின்றோம்.

**1.** பீபள்ஸ் லீசிங் இன் செயற்திறனில் உங்களது அக்கறை ஓர்,

- பணியாளர்
- வாடிக்கையாளர்
- வழங்குநர்
- பங்குதாரர்
- முதலீட்டாளர்
- நிதியியல் ஆய்வாளர்
- செய்தியாளர்
- உள்ளூர் குடியிருப்பாளர்
- கற்பிப்பவர்/மாணவர்
- விசேட அக்கறையுடைய குழு
- முறைமைப்படுத்தல் அங்கம்
- ஏனையவை

**2.** 2.1 முதல் 2.5 வரையான வினாக்களுக்கு உங்களது விடையினை மிகச்சிறப்பிலிருந்து அற்பமானது வரை அளவுகோலில் தரப்படுத்தவும்

**2.1** உங்களது தகவல் தேவைப்பாட்டினை சந்தித்தல்

- மிகச்சிறப்பு
- மிகநல்லது
- நல்லது
- சுமாரானது
- அற்பமானது

**2.2** வெளிப்படைத்தன்மை மற்றும் தெளிவு

- மிகச்சிறப்பு
- மிகநல்லது
- நல்லது
- சுமாரானது
- அற்பமானது

**2.3** புரிந்துகொள்வதிலான தெளிவு மற்றும் எளிமை

- மிகச்சிறப்பு
- மிகநல்லது
- நல்லது
- சுமாரானது
- அற்பமானது

**2.4** தோற்றம் மற்றும் அமைப்பு

- மிகச்சிறப்பு
- மிகநல்ல
- நல்லது
- சுமாரானது
- அற்பமானது

**2.5** அறிக்கையின் ஒட்டுமொத்த அபிப்பிராயம்

- மிகச்சிறப்பு
- மிகநல்லது
- நல்லது
- சுமாரானது
- அற்பமானது

**3.** எந்தப் பிரிவுகளை நீங்கள் மிகவும்குறைந்த பயன்பாடுடையதாக கண்டீர்கள்?

- எம்மைப் பற்றி
- ஓர் கால் நூற்றாண்டிலான பயணம்
- முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
- பராபத்தியம்
- நிதி அறிக்கைகள்
- ஏனையவை

**4.** எந்தப் பிரிவுகளை நீங்கள் மிகவும் பயனுள்ளதாகக் கண்டீர்கள்?

- எம்மைப் பற்றி
- ஓர் கால் நூற்றாண்டிலான பயணம்
- முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
- பராபத்தியம்
- நிதி அறிக்கைகள்
- ஏனையவை

**5.** உங்களது அபிப்பிராயத்தின்படி எந்த நிலைபேறுள்ள தலைப்புகள் / பிரிவுகளில் பீபள்ஸ் லீசிங் சிறந்த கவனம் செலுத்தவேண்டிய அவசியம் காணப்படுகின்றது?

**6.** நாங்கள் எவ்வாறு மேம்படலாம் என நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

**7.** ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை 2020/21 இனைப் பற்றிய உங்களது அபிப்பிராயம் மற்றும் கருத்துக்களை தயவுசெய்து வழங்கவும்.

உங்களது பெயர்:

..........................................................................

உங்களது மின்னஞ்சல்:

..........................................................................

பிரதான முகாமையாளர் நிதி
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ்
பிஎல்சி
இல.1161, மருதானை வீதி,
கொழும்பு 08
இலங்கை
அஞ்சல் குறியீடு :00800
தொலைபேசி: +94 11 2631 631
தொலைநகல் : +94 11 2631 980
தொலைநகல்: +94 11 2481 105

optima
Designing Your Year!
Designed & Produced by
**Optima Designs (Pvt) Ltd.**
A full service design and print company.
**www.optimadesigns.lk**

நாம் நன்றியுணர்வுடன்
முன்னால் பயணிக்கும்
வேளை உங்களது
தாராளமான உறுதுணைக்கு

**நன்றி..**

PLC
PEOPLE'S LEASING
THE TRUSTED LEADER